எண்டமூரி வீரேந்திரநாத்

மின்னல் உலகம்

தமிழில்: சுசீலா கனகதுர்கா

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in

Price Rs: 35
Minnal Ulagam
by
Endamuri Veerandranath
Tamil version
Suseela Kangadurga ©
First Edition 1989
Published by
Kalaignaan Pathipagam
10, Kannadhasan Salai,
T. Nagar, Madras-600 017
Printed by
Ramon's Printing Press,
Madras 600 017

முகவுரை

பிறமொழி நாவலாசிரியர்களில் சமீபகாலத்தில் தமிழில் பிரபலமாகி வருபவர் எண்டமூரி விரேந்திரநாத்.

இவரது நாவல்கள் அனைத்தும் புதுமையான உள்ளடக்கத்தையும் நவீன உத்திகளையும் கொண்டுள்ளதால், வாசகர்களை லகுவில் கவர்ந்துவிடும் தன்மை கொண்டவை.

தனது கதைக்கான கருவைத் தேர்ந்தெடுக்கும் போதே அதன் சாரத்தையும், கதை மாந்தரின் நடை உடை பாவனை மற்றும் குணபாவத்தையும் ஆசிரியர் செவ்வனே படிப்பவர் மனத்தில் பதியும் வண்ணம் செய்து விடுகிறார்.

மின்னல் உலகம் என்ற இந்த நாவல் விளம்பரப் படம் தயாரிக்கும் தொழிலில் ஏற்படும் போட்டி—பொறாமை, அந்த நடிக நடிகையரின் வாழ்க்கை மற்றும் அந்தரங்கங்களைப் பற்றிய தாகும்.

எண்டமூரியின் கற்பனைகளுக்குத் தமிழ் வடிவம் தந்து வரும் சுசிலா கனகாதுர்க்கா இந்த நாவலையும் சிறப்புறச் செய்துள்ளார்.

மின்னல் உலகம்

"—இதழ் விரிந்த ரோஜா மலரைப் போன்ற அழகான பெண் தேவை. ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு!! பெண்ணின் உயரம் ஐந்தடி நான்கு அங்குலத்திற்குக் குறையக் கூடாது நிறம் சிவப்பாயிருக்க வேண்டும். கவர்ச்சியாய் இருந்தால் மாநிறமானாலும் பரவாயில்லை.. பார்ப்போரைக் கவரும்படியான உடற்கட்டு இருக்க வேண்டும். கேசங்கள் மென்மையாய், பட்டுப்போல வழு வழுப்பாய், அருவியைப் போல இருக்கவேண்டும். தமிழைத் தவிர வேறு ஏதாவது மொழியும் தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலத்தில் சரளமாய் பேசத் தெரிந்திருக்க வேண்டும். அழகுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விசேஷ சலுகை தரப்படும். விண்ணப்பிக்கும் பெண்கள் நாங்கள் வைக்கும் பரீட்சையில் பாசானால்.....மாடலிங் ஆகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவோம். விண்ணப்பதாரர்களை ஒரு தனிப்பட்ட கமிட்டி தேர்ந்தெடுக்கும். விண்ணப்பதாரர்கள் நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி—

ராஜசேகரன்
அட்வர்டைஸ்மெண்ட் போட்டோகிராபர்
ராஜ் அட். & ஃபிலிம்ஸ்
ஸ்ரீ நிலையம், 36, கிராஸ் ரோடு,
அடையாறு சென்னை.—"

அன்றைக்கு எல்லா தமிழ், ஆங்கில தினசரிகளிலும் முதல் பக்கத்திலேயே வெளிவந்திருந்தது இந்த கவர்ச்சி கரமான அறிக்கை!

ஸ்ரீ நிலையம் மூன்றுமாடிக் கட்டடம். இரண்டாவது மாடியில் ராஜ் அட்வர்டைஸ்மெண்ட் ஃபிலிம் ஆபீஸ் இருந்தது. மூன்றாவது மாடியில் அட்வர்டைஸ்மெண்ட் போட்டோகிராபர் ராஜசேகரனின் அறையும் அதை யொட்டி இருந்த விசாலமான வராந்தாவில் இடது பக்க மாய் வரிசையாய் நான்கு பிரம்பு நாற்காலிகளும் போடப் பட்டிருந்தன. அதற்கு முன்னால் பிரம்பு டீபாய் இருந்தது.

டீபாயின் மேல் பலவித செய்தித்தாள்களும், சினிமா பத்திரிகைகளும் இருந்தன, இடது பக்கத்துக் கோடியில் சுவற்றில் ஆளுயரத்திற்கு ஒரு ஆயில் பெயிண்டிங் தென் பட்டது.

அந்த பெயிண்டிங்கில் ஓவியன் ஒரு பெண்ணின் முகத்தைப் பாதி மட்டுமே வரைந்திருந்தான். அந்த பெயிண்டிங்கைப் பார்ப்பவர்கள் அதற்கு முன்னால் இரண்டு நிமிஷமாவது நின்றுபார்க்கத் தவறமாட்டார்கள். அதற்குக் காரணம்—அப்பெண்ணின் கண் விழிகளுக் கருகில் வெளிர் நீலநிறத்தில் மின்னிக் கொண்டிருந்த பளபளப்பும், மூக்கில் பளபளத்த மூக்குத்தியின் அழகும், அந்த ஓவியத்திற்கே அதிக அழகைக் கொடுத்தன. அழகான பெண் ஒருத்தியின் கண்கள், மூக்கு, உதடுகளைக் கொண்டு வந்து அங்கே வைத்திருந்தாற் போலிருந்தது—அந்த ஓவியத்தைப் பார்த்தால்.

அந்த பக்கமாய் கதவு. விசாலமான அறை. அறைக்குள் ஒரு பக்கமாய் சாம்பல் நிறத்தில் இரண்டு சோபாக்கள் அருகருகே போடப்பட்டிருந்தன. நடுவில் பிளாஸ்டர் ஆஃப் பாரிசால் ஆன கிரேக்க சிற்பம். அது வெள்ளை வெளேரென்று அழகாயிருந்தது. அந்த அறையில் ஒரு பக்க மாய் உள்ளே போக சிறு வழி இருந்தது.

உள் அறையில் சாம்பல் நிறத்தில் ஒரு ரிவால்விங் நாற்காலியும் அதற்கு முன்னால் ஒரு பெரிய மேஜையும் இருந்தன.

அந்த வராந்தாவிற்குப் பின்னால் ஒரு பக்கத்தில் விசாலமான ஸ்டுடியோவும். அதையொட்டி டார்க் ரூமும் அதற்குப் பக்கத்தில் வரிசையாய் பாத்ரூமும் டாய்லெட் அறைகளும் இருந்தன. ரிவால்விங் நாற்காலிக்கு முன்னாலிருந்த மேஜை மேல் அன்றைய செய்தித்தாள்கள் அனைத்தும் இருந்தன. அவற்றின் முதல் பக்கத்திலேயே மேற்கண்ட அறிக்கை வெளிவந்திருந்தது. ஒன்றில் அந்த அறிக்கைக்கு நான்கு மூலைகளிலும் சிவப்புப் பேனாவால் குறியிடப்பட்டிருந்தது. அதற்கு அர்த்தம் அவற்றைக் கத்திரித்து ஃபைல் பண்ணு என்று.மேஜையின் மேல் சிவப்பு போன் இருந்தது.

ட்ரிங்...ட்ரிங்...ட்ரிங்...என்று அப்போன் தற்சமயம் ஒலித்தது.

அவ்வறையின் இரு பக்கத்து சுவர்களிலும் இரு ஷெல்ஃபுகள் இருந்தன. ஒன்றில் ஆல்பங்களும் ஃபிலிம் பாக்ஸுகளும் இருந்தன. இன்னொன்றில் புத்தகங்கள் நீட்டாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஒரு பக்கத்தில் ஏர் கண்டிஷனர் இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே ஒரு நீக்ரோ பெண்ணின் ஆளுயர போட்டோ மாட்டப்பட்டிருந்தது. நீக்ரோ பெண்ணின் கண்கள் சிவப்பாயிருந்தன. அந்த போட்டோ 'கருப்புப் புலி'யைப் போல பயங்கரமாய், அழகாயிருந்தது.

போன் மணியடித்துக் கொண்டேயிருந்தது.

காலை ஒன்பது மணி. அந்த அபார்ட்மென்ட் நிசப்தமாயிருந்தது.

உள்ளே பாத்ரூம் கதவு திறந்து கொண்ட ஓசை.— அதைத் தொடர்ந்து மளமளவென்று நடந்து வந்த காலடியோசை.

பாத்ரூமிலிருந்து வந்த ராஜ் அட்வ. போட்டோ கிராப்பர் ராஜசேகரனின் கையில் துவாலை இருந்தது.

அவன் முகத்தைத் துடைத்துக் கொண்டே ஆபீசு அறைக்குள் அடியெடுத்து வைத்தான்,

ரிசீவரை எடுப்பதற்காக கை நீட்டினான். ஆனால் அது வரையிலும் ஒலித்த போன் அப்பொழுது டக்கென்று நின்று விட்டது. ஒரு நிமிஷம் அங்கேயே நின்றான், திரும்பவும் போன் ஒலிக்கிறதா என்று. ஆனால் போன் மணியடிக்க வில்லை. திரும்பவும் உள்ளே போனான். அரைமணிக்குப் பிறகு வெளியே வந்தான்.

ராஜசேகரன் ராஜ்அட்வர்டைஸ் ஃபிலிம்ஸின் முதலாளி. உயரமாய் சிவப்பாய் இருப்பான். கூரிய மூக்கு. பரந்த கண்கள். அழகான கன்னங்கள். நெற்றியில் வந்து வந்து புரளும் கேசங்கள்! உதடுகள் பெண்களின் உதடுகளைப் போல சிவப்பாய் அழகாயிருக்கும்.

தற்போது அவன் சிமெண்ட் கலரில் சூட் அணிந்திருந் தான்.

அவன் அறைக்குள் கண்ணாடிக்கு முன்னால் நின்று கொண்டு ஐந்து நிமிஷம் யோசித்தான். கண்ணாடியில் தன்னைப் பலமுறை பார்த்துக் கொண்டான். தான் நன்றாய் டிரஸ் பண்ணிக் கொண்டிருந்த போதிலும் ஏதோ குறை தென்பட்டது.

அதென்னவென்று அவனுக்கே புரியவில்லை. உடைகளை மாறி மாறிப் பார்த்துக் கொண்டான். ஒன்றும் புரியவில்லை.

அலுப்போடு அவ்வறையை விட்டு ஆபீசு அறைக்கு வந்து ரிவால்விங் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

தான் எதையோ மறந்து போய்விட்டது புரிந்தது. ஆனால் அது என்னவென்றுதான் புரியவில்லை.

பத்து நிமிஷங்கள் கழிந்திருக்கும்.

அவன் திடீரென்று தன் வலக்கையைப் பார்த்துக் கொண்டான். கால்மணி நேரமாய் தான் எதை மறந்து போய் விட்டோம் என்று குழம்பிக்கொண்டிருந்தது அந்தக் கையில் இருந்தது. நெக் டை! கழுத்தில் கட்டிக்கொள்ள வேண்டிய டையைக் கையிலேயே வைத்துக் கொண்டு அதைத்தான் தேடிக் கொண்டிருந்திருக்கிறான்!

ராஜசேகர் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

எழுந்து கண்ணாடிக்கு முன்னால் நின்று டையைக் கட்டிக் கொண்டு ஆபீசு அறைக்கு வந்தான்.

அதற்குள் சரியாய் ஒன்பதே முக்கால் ஆகியிருந்தது. பத்தரை மணிக்கெல்லாம் ஆபீசு ஸ்டாஃப் எல்லோரும் வந்து விடுவார்கள். அவர்கள் வேலை பண்ணுவதெல்லாம் முதல் மாடியில்தான். அதனால் எல்லோரும் வந்தது வராதது விஷயங்களை இண்டர்காமில் ரிஸப்ஷனிஸ்ட் மூலமாய் கேட்டுத் தெரிந்து கொள்வான் ராஜசேகர்.

முதல் மாடியில் அட்மினிஸ்ட்ரேடிவ் ஸ்டாஃப், அசோசியேடெட் போட்டோகிராபரின் அறை, அசிஸ்டென்ட் போட்டோகிராபரின் அறை, ரிஸப்ஷன் ரூம், லைப்ரரி இருந்தன.

"குட்மார்னிங் சார்!" மறு முனையிலிருந்து ரிஸப்ஷனிஸ்ட் மாலா விஷ் பண்ணினாள்.

"மிஸ் மாலா! மதுசூதனன் வந்துட்டாரா?"

"இல்லை சார்....."

ஒரு வினாடி நிறுத்திவிட்டு, "எனக்குப் பத்து மணிக்கு ஒரு அபாயிண்ட்மென்ட் இருக்கு. போயிட்டிருக்கேன். மதுசூதனன் வந்ததுமே என் மேஜையின் மேல் புரோகிராம் ஷீட் இருக்கு, ப்ரோசீட் பண்ணுன்னு சொல்லுங்க..... பை தி பை பன்னெண்டு மணிக்கு நான் ஹோட்டல்

ரிஸ்ட்டில் 101ம் நெம்பர் ரூமில் இருப்பேன். சந்திக்கச் சொல்லுங்க—நோட் பண்ணிக்கிட்டீங்களா?'' கேட்டான் ராஜசேகரன்.

''எஸ், ஸார்''

''ஓ.கே நௌ..... காதம்பரிக்கு ஒரு முறை போன் பண்றீங்களா?''

''எஸ், சார்''

ராஜசேகர் இண்டர்காம் ரிசீவரை மாட்டிவிட்டு. மேஜை மேலிருந்த 'ரெட்ஸ்டார்' மேகஸினைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. போன் மணியடித்தது.

''காதம்பரி லைனில் இருக்காங்க சார்...'' மாலாவின் குரல்.

போன் ரிசீவரை எடுத்தான் ராஜசேகர்.

''குட்மார்னிங், ராஜசேகர்...'' மறுமுனையிலிருந்து வீணையின் நாதத்தைப்போல வெளிவந்தது காதம்பரியின் குரல்.

''பிஸியாய் இருக்கீங்களா ?'' கேட்டான்.

''நோ... ஐ யாம் வெயிட்டிங் ஃபார் யூ ஒன்லி...''

''தாங்க்யூ''

''ஐந்து நிமிஷத்தில் அங்கே வரேன்'' என்றான் ராஜசேகர்.

''முன் ஜாக்கிரதையாய் நீங்க ஐந்து நிமிஷங்கிறீங்க... ஆனால்...நீங்க ரெண்டே நிமிஷத்தில் இங்கே இருப்பீங்க... இல்லையா?'' காதம்பரியின் சிரிப்பு அலையலையாய் கேட்டது.

ராஜசேகரனும் சிரித்தான். அது சப்தமில்லாத சிரிப்பு.

ரிசீவரை வைத்தான்.

அறையை விட்டு வெளியே வந்தான், மளமளவென்று நடந்து படிகளை நோக்கிப் போனான்.

அடுத்த நிமிஷம் அவன் போர்ட்டிகோவில் நின்றிருந்த தன் சிவப்பு நிறக் காரை அடைந்தான்.

காதம்பரி!

மாநிலத்தில் மாடலிங் பண்ணுபவர்களுக்குள் அவளுக்கு நல்ல பெயர் இருந்தது. அவளுக்கு நாற்பது வயதிருக்கும். ஆனால் பார்ப்பதற்கு இருபத்தைந்து வயது பெண்ணைப் போலிருப்பாள். அவள் கடந்த பதினைந்து ஆண்டுகளாய் மாடலிங் தொழிலில் இருந்து வருகிறாள்.

அவளோடு பேசவே நிறைய பேருக்கு பயம். ஏனெனில் அவள் எந்த விஷயமாயிருந்தாலும் சரி அக்குவேறு ஆணி வேராய் தெரிந்து வைத்திருப்பாள்.

அவள் சமீபத்தில் இரண்டு டீ.வி. விளம்பரப் படங்களில் கூட நடித்திருக்கிறாள்.

ஒன்று புதிதாய் வெளியான 'சுகந்தி சோப்' இன்னொன்று 'ஷா-டால்கம் பௌடர்.' அவ்விரண்டும் குறுகிய காலத்திற்குள் நல்ல விற்பனையை எட்டியிருந்தன. அதற்குக் காதம்பரி விளம்பரப் படங்கள்தான் முக்கியக் காரணமென்று எல்லோருக்குமே தெரியும்.

காதம்பரி மைலாப்பூரில் ஒரு பெரிய பங்களாவில் இருந்து வந்தாள். சொந்த வீடு. தனியாய் இருப்பது ஆபத்து என்று தெரியும். அதிலும் எந்த துணையுமில்லாத அழகான பெண்கள் தன்னந்தனியாய் வசிப்பது மேலும் ஆபத்து என்றும் தெரியும். ஆனாலும்..... அவள் அவ்வாறு இருந்து தீர வேண்டியிருந்தது.

ஹோட்டல் 'ஓபேரா' பணக்காரர்களின் சுவர்க்கம். ஓட்டலுக்குப் பின்னால் கொஞ்சம் தூரத்தில் நீச்சல் குளம். நீச்சல் குளத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்தார்கள் மூன்று பெண்களும் இரு ஆடவர்களும்.

ராஜசேகரன், அசோசியேடெட் போட்டோகிராபர் கிரீஷ், அசிஸ்டென்ட் போட்டோகிராபர் மதுசூதனன் முதலியவர்களுடன் அன்றைக்கு எடுக்க வேண்டிய அட்வர்டைஸ்மெண்ட் ஃபிலிம்ஸ் சம்பந்தப்பட்ட காட்சிகளுக்காக ஏற்பாடுகளைப் பண்ணிக் கொண்டே மாடலிங் ஆர்டிஸ்டுகளுக்கு ஒத்திகையளித்துக் கொண்டிருந்தான்.

நேரம் காலை ஒன்பது மணி. பிகினி டிரஸ்ஸில் இருந்த மாடலிங் பெண்களைப் பார்ப்பதற்காக ஹோட்டல் கஸ்டமர்களோடு சேர்ந்து ஸ்டாஃப் மொத்தமும் அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

கிரீஷ் பூனா ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்டில் போட்டோ கிராபியில் டிப்ளமா வாங்கியிருப்பவன். பிறகு பிரபல இந்தியன் விளம்பர போட்டோகிராபர்களிடம் சில நாட்கள் வேலை பார்த்துவிட்டு சமீபத்தில்தான் சென்னைக்கு வந்து ராஜசேகரனிடம் அசோசியேட்டாய் சேர்ந்தான். சேர்ந்து சில நாட்களுக்குப் பிறகுதான் தெரிய வந்தது. ராஜசேகரனிடம் வேலை பார்ப்பது கத்தியின் மேல் நிற்பது போல என்று, ஒவ்வொன்றும் கச்சிதமாய் நடக்கவேண்டும். எந்தத் தப்பு நேர்ந்து விட்டாலும் சகித்துக் கொள்ள முடியாது அவனால். சொந்த விஷயத்தில் எவ்வளவுக் கெவ்வளவு கவனக் குறைவாய் இருப்பானோ, அவ்வளவுக்கவ்வளவு விழிப்போடு இருப்பான் தொழிலில் ராஜசேகரன்.

அன்றைக்கு விளம்பர ஃபிலிம் ஷூட்டிங்கிற்காக மெயின் மாடலோடு கூட புதிதாய் மாடலிங்கில் இறங்கியிருக்கும் மேலும் மூன்று பெண்களையும் இரண்டு ஆண்களையும் அழைத்து வந்திருந்தார்கள்.

ஷூட்டிங் எல்லாம் மெயின் மாடலை வைத்துதான். எஞ்சிய ஜூனியர் மாடல்கள் பின்னணியில் நிற்பதற்காகத்தான். இவர்களைத்தான் சினிமாக்களில் 'எக்ஸ்ட்ரா ஆர்டிஸ்ட்' என்பார்கள்.

மெயின் மாடலாய் நின்று கொண்டிருந்த பெண் சுமார் ஐந்தடி மூன்றங்குலம் உயரமிருந்தாள். அவள் உடல் சம்பங்கிப்பூவின் நிறத்தில் தளதளவென்றிருந்தது. அந்த சமயத்தில் அப்பெண்ணின் மேனியில் மேலே நைலான் ப்ராவும் கீழே சன்னமான பிகினி மட்டுமே இருந்தன.

அந்த சமயத்தில் அப்பெண் பச்சைப் பசேலென்ற புல்வெளியில், மரத்தடியில் ஒரு விலையுயர்ந்த நாற்காலியில் ஒயிலாய் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கெதிரே —

பரந்த நீச்சல் குளம்.

அவளுக்குக் கொஞ்சம் தூரத்தில் வெள்ளை வெளேரென்றிருந்த ஒரு ஆங்கிலோ இந்தியன் ஜோடி. அவ்விருவரும் உலகத்தையே மறந்தவர்களாய் சுதந்திரமாய் நடந்து கொண்டிருந்தார்கள்.

அதுவரையிலும் ஏரிப்ளக்ஸ்- 35 எம். எம். கேமிராவிற்கு முன்னால் டிசால்விங் லென்ஸைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகரன் நீச்சல் குளத்தை நோக்கிப் பார்வையிட்டான்.

மதுசூதனன் அப்பெண்ணிடம் வந்தான்.

அவள் சுவர்ணலதா.

"ஷாட் ரெடி மிஸ், சுவர்ணலதா" என்று மதுசூதனன் சொன்னதுமே சுவர்ணலதா எழுந்து நின்றாள்.

"சார், ஷாட் ரெடி சார்" என்றான் ராஜசேகரனிடம் மதுசூதனன்.

சுவர்ணலதா நீச்சல் குளத்தின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். பையன் ஒரு புது சோப்பை எடுத்துக் கொண்டு போய் அவளிடம் தந்தான். அசோசியேடெட் போட்டோகிராபர் கிரீஷ் அவளிடம் போய்

முகத்தில் தண்ணீரைத் தெளித்தான். முகத்தில் ஈரப்பசை யைத் தோற்றுவிப்பதற்காக.

நிசப்தமாயிருந்த அந்தச் சூழ்நிலையில் "ஆக்ஷன்" என்றதுமே ராஜசேகரனின் கையில் கேமிரா ஓடத் தொடங் கிற்று சுவர்ணலதா நடிக்கத் தொடங்கினாள். அந்தச் சமயத்தில் குண்டு விழுந்தாலும் ராஜசேகரன் அங்கிருந்து அசையமாட்டான். தொழிலில் அத்தனை கவனம். கேமி ராவை அவன் தொட்டுவிட்டால் போதும் அபாரமான விளம்பரப் படம் தயாராகிவிட வேண்டியதுதான். கேமிரா விற்கேற்ப அவன் மூளையும், கண்களும், கைகளும் அபார மான காட்சியைத் தயாரிப்பதற்காக அசைந்து, நெளிந்து ஓடிக் கொண்டேயிருக்கும்.

விதம் விதமான கோணங்களில் நான்கு க்ளோசப் ஷாட்டுகள் -- முதலில் அப்பெண் இரு கைகளாலும் சோப்பை எடுத்துத் தன்னை மறந்தபடி வாசனை பார்த்தல்.

இரண்டாவது- முகத்தில் குழைத்துத் தடவுவது.

மூன்றாவது-கழுத்திற்குக் கீழே சோப்பைத் தேய்த்துக் கொள்வது.

நான்காவது-வலது உள்ளங்கையில் சோப்புக் கட்டியை வைத்துக் கொண்டு ஒரு முறை தண்ணீரில் முக்கி எடுப்பது. அந்த நான்கு ஷாட்டுகளும் எடுப்பதற்கு ஒரு மணி நேரத் திற்கு மேல் பிடித்தது.

இதற்கு முன்பே குற்றாலம் அருவிக்கரையில் அந்தப் புதிதாய் வந்த சோப்பு விளம்பரத்திற்காக சம்பந்தப்பட்ட பல காட்சிகளை ஷூட் பண்ணியிருந்தான் ராஜசேகரன்.

அதைத் தொடர்ந்து சில குளோஸ் ஷாட்டுகளைக் காட்டினால் நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று அவனுக்கு -

எவ்வளவு சீக்கிரத்தில் முடிப்போமோ அவ்வளவு நல்லது என்றெண்ணினான் அவன்.

இப்பொழுதே அவன் நாட்டிலேயே சிறந்த விளம்பர போட்டோகிராபர் என்ற பெயரை சம்பாதித்துக் கொண்டு விட்டான் ஆனாலும் அது போதாது அவனுக்கு. அகில உலக ரீதியில் அவனுக்குப் பெயர் வரவேண்டும் என்றிருந்தது. விளம்பர ஃபிலிம்களை எடுப்பதில் தனக்கு நிகர் யாருமில்லை என்ற அளவிற்குப் பெயரெடுக்க வேண்டும் என்ற ஆவல்.

அத்துடன்—

அவன் செய்து கொண்டிருந்த சபதம் கூட அடிக்கடி நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

இந்த வியாபாரத்தில் இருக்கும் நெளிவு சுளிவுகளை யும், போட்டா போட்டிகளையும் அவன் நன்கு அறிவான். அதில் அவன் பெயரெடுக்க வேண்டுமானால் எவ்வளவோ கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதற்கும் அவன் சித்தமாயிருந்தான்.

இந்தப் பிரயாணத்தில் விரோதிகள்தான் அதிகம். யாரையுமே சிநேகிதர்களாய் நம்பக்கூடாது. நம்புவது போல நடிக்க வேண்டும். நடிக்கப் பண்ணவேண்டும். அதற்கும் சித்தமாயிருந்தான்.

தான் மேற்கொண்ட வியாபாரத் தொழில் விஷயத்தை யோசித்துப் பார்த்தபொழுது ராஜசேகருக்கு சிந்துபாத் சாகசக் கதைதான் நினைவுக்கு வந்தது. மலைப் பள்ளத் தாக்கில் வைரமும், தங்கமும, மணிகளும் இருக்கும். அவற்றைச் சுற்றி பயங்கரமான விஷப்பாம்புகள் வசித்துக் கொண்டிருக்கும். இறங்கி எடுத்துக் கொண்டு வரமுடியாத நிலைமை. அவற்றை வரவழைத்துக் கொள்வதற்காக வியாபாரிகள் மாமிசத் துண்டுகளை வீசியெறிவார்கள். அந்த மாமிசத் துண்டுகளில் விலை மதிப்பு வாய்ந்த அந்த

ரத்தினங்கள் ஒட்டிக் கொள்ளும். மாமிசத்திற்காகக் கழுகுகள் அந்த பள்ளத்தாக்கில் இறங்கும். மூக்கில் மாமிசத் துண்டுகளைப் பற்றிக் கொண்டு மேலே பறந்து வரும். அப்பொழுது...

அவற்றை அடித்தோ அல்லது பயமுறுத்தியோ செய்தால் அந்த மாமிசக் கட்டிகளை மலை மேல் விட்டுவிட்டு உயிருக்கு அஞ்சி பறந்து போய் விடும். ரத்தினங்களை வியாபாரிகள் கைப்பற்றிக் கொள்வார்கள். இப்பொழுது வேறு விதத்தில் மாமிசத் துண்டுகளை வீசியெறிய சித்தமாயிருக்கிறார்கள்- அதுதான் ஆசை. அறிவிலிருந்து பிறக்கும் ஆசை. அதிலும் பலசாலிகளுடையது தான் ராஜ்யம்!

அங்கும் இம்சைதான். பணத்திற்காக இம்சை.

ஒருத்தரைக் காட்டிலும் இன்னொருத்தர் அதிகமாய் பணம் சம்பாதிக்க வேண்டுமானால் இம்சை இருந்துதான் தீரும். காலூன்றிக் கொள்ள வேண்டுமானாலும் இம்சையை அனுபவித்துத் தீர வேண்டியதுதான். ஒருத்தரையொருத்தர் அழித்துக் கொள்ளும் காட்டுமிராண்டித் தனமே நவீன நாகரிகமாகவும் மாறிவிட்டது.

இந்த வியாபாரத்தில்—

அங்கே பிராணிகளைக் கொன்று அவற்றின் மாமிசத் துண்டுகளைக் கழுகுகளுக்கு இரை-

இங்கேயோ மனித மாமிசத்துண்டுகள் இத்தொழிலுக்கு இரை-

அதிலும் அழகான பெண்களில் உடல் மாமிசங்களின் இரை—

வேறு வழியில்லை.

அதற்குத் தயாராக வேண்டியதுதான்.

அவன் சபதம் எடுத்துக் கொண்டு விட்டான்.

அந்த சபதத்தை நிறைவேற்றி வெற்றியை சாதித்துக் கொள்ள வேண்டுமானால் வியாபார தருமங்களைப் பின் பற்றித் தீரவேண்டியதுதான்.

ஷூட்டிங் முடிந்ததும் மரத்தடியில் இரண்டு நிமிஷம் ஓய்வாக உட்கார்ந்திருந்த ராஜசேகரனின் மனதில் சுழன்று வந்த யோசனைகள் இவைதாம்.

அசிஸ்டென்ட் போய் விட்டான். சுவர்ணலதா டிரஸ் ஸிங் ரூமில் உடை மாற்றிக் கொள்ளப் போய் விட்டாள். அவளை வீட்டில் கொண்டு போய் விடுவதாய் சொல்லி யிருந்தான். அதனால்தான் சுவர்ணலதாவுக்காகக் காத் திருந்தான் அவன்.

அவன் விளம்பர ஃபிலிம் தொழிலில் நுழைந்த திலிருந்து அவன் வியாபாரப் படங்களில் அதிகமாய் நடித் திருப்பவள் காதம்பரி. அதற்கடுத்ததாய் சுவர்ணலதா தான். சுவர்ணலதாவின் மேல் அவனுக்குப் பரிவு உண்டு.

அவளுக்கு ராஜசேகரனின் பால் அளவற்ற நம்பிக்கை, மதிப்பு, பக்தி இருந்தது.

"ஐ யாம் ரெடி ராஜசேகர்."

சுவர்ணலதா டிரஸ்ஸிங் ரூமிலிருந்து வெளியே வந்து சொன்னாள். ஃபிலிம் ஷூட்டிங்கில் சிருங்கார தேவ தையைப் போலிருந்த சுவர்ணலதா இப்பொழுது அடக்க மாய் பார்க்க பாந்தமாய் பட்டுப்புடவையில் இருந்தாள்.

ராஜசேகரன் எழுந்து நின்றான். ஹோட்டலுக்கு வெளியே வந்து கொண்டிருந்தபோது சுவர்ணலதா சொன்னாள்.

"இன்று காலையில் பேப்பரில் உங்க விளம்பரத்தைப் பார்த்தேன்... நன்றாயிருந்தது. ஒரு வார்த்தை கூட என்னிடம் சொல்லாமல் போட்டுட்டீங்களே... ஏன்?"

ராஜசேகரன் பதில் பேசவில்லை.

"அதென்ன அவ்வளவு ரகசியமா?" திரும்பவும் கேட்டாள் அவளே. காரில் உட்கார்ந்தார்கள் இருவரும். அவள் பக்கமாய் திரும்பியும் பார்க்கவில்லை அவன். ராஜசேகரன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். "அந்த அட்வர்டைஸ்மெண்ட்டில் நீங்க கொடுத்திருக்கும் தகுதிகள் எல்லாம் என்னிடம் இல்லையா?" திரும்பவும் கேட்டாள் சுவர்ணலதா. ராஜசேகரன் பதில் பேசவில்லை. அவள் பக்கமாய் திரும்பியும் பார்க்கவில்லை.

"பதில் சொல்லணும்னு இல்லையா அல்லது காதில் போட்டுக்கலையா?" சுவர்ணலதாவின் குரலில் பொறுமை தளர்ந்தது.

ராஜசேகரன் வாயைத் திறந்தான். காரோட்டுவதிலேயே கவனமாய் இருந்தபடி,"சுவர்ணலதா! இவ்வளவு நாளாய் நான் எதையுமே உறுதியாய் எடுத்துக்கலை...ஏன் எடுத்துக்கலைன்னால் அப்பொழுது என் யோசனையெல்லாம் வேறாய் இருந்தது...இப்பொழுது அது மாறிப் போயிடுத்து...அந்த மாறுதலுக்கு அடையாளந்தான் இன்றைய விளம்பரம்....."

"நீங்க என்ன சொல்றீங்க, எனக்குப் புரியலையே?" என்றாள் சுவர்ணலதா.

"புரியற நேரம் வரும்" கம்பீரமாய் பதிலளித்தான் ராஜசேகரன்.

"அதுவரையிலும் நான் இருப்பேனா?" வேடிக்கையாய் சொன்னாள் அவள்.

"டோன்ட் பீ சில்லீ" என்றான் உரிமையோடு அதட்டியபடி. சுவர்ணலதாவின் வீட்டிற்கு முன்னால் கார் நின்றது. அவள் இறங்கினாள்.

"ராஜசேகர்! நாளைக்கு சாயந்திரம் நீங்க வருவீங்களா?" கேட்டாள்.

"எதுக்கு?...வரமாட்டேன்னுதான் தோணுது" என்றான் அவன்?

"எதுக்கா? நாளைக்கு என் பர்த்டே இல்லையா? முந்தா நாள் வரேன்னு சொல்லிட்டு இன்னிக்கு வரமாட்டேங் கிறீங்களே, இதென்ன மரியாதை?..."

"ஓ! சாரீ! முந்தாநாள் என்னவோ சொல்லிட்டேனே தவிர, இன்றைக்கு நிலைமை மாறிடுத்து...நாளைக்கு இன்னும் எப்படி இருக்குமோ?...அதனால் வரேன்னு வாக்களிக்க முடியாது."

"அதெல்லாம் நடக்காது. பத்து நிமிஷம் போதும்... ஆறு மணிக்கு வாங்க, ஆறு பத்துக்கெல்லாம் விட்டுட றேன்...ஓ.கே?"

"ட்ரை பண்றேன்"

கார் போய் விட்டது.

2

அவ்வறையில் நான்கு பேர் உட்கார்ந்திருந்தார்கள். விசாலமான அந்த அறையின் சுவர்களுக்கு நீலநிறத்தில் டிஸ்டெம்பர் பூசப்பட்டிருந்தது.தரையில் நீலநிற கார்பெட்.

எதிரெதிராய் இரண்டு சோபாக்கள். அவற்றிற்கு மேல் கண்ணாடி டீபாய்கள். அதன் மேல் ஓல்ட்மாங்க் பாட்டில் இருந்தது. அது அதற்குள் பாதி காலியாயிருந்தது. இரு சோபாவிலுமாய் நான்கு பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

அதில் ஒருவன் ராஜசேகரன். அவன் என்றுமே குடிக்க மாட்டான். சிகரெட் புகைக்க மாட்டான்—பாக்குப் பொடி கூட போடமாட்டான்.

இரண்டாவது ஆள் ராஜசேகரனின் அசிஸ்டென்ட் மதுசூதனன். பெயருக்குதான் அவன் அசிஸ்டென்ட். ராஜ

சேகரன் விரும்பும் ஒரே ஆள். மூன்றாவது ஆள் ராம்பூபால் அவன் சென்னையில் பெயர்பெற்ற விளம்பர போட்டோ கிராபர். அவன் சம்பாதிப்பதில் பாதியைப் பெண்களுக் காகவே செலவழிப்பவன் என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம். அவன் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு கூட பெண்களின் போட்டோக்களை அனுப்பி வருபவன். அவனுக்கு ராஜசேகரனை மிகவும் பிடிக்கும். பத்தாண்டு களாய் அதே தொழிலில் இருந்து வந்தும் தன்னால் சம்பாதிக்கமுடியாத பெயரையும் புகழையும் குறுகிய காலத் திற்குள்ளேயே சம்பாதித்து விட்ட ராஜசேகரனின் திறமையை அடிக்கடி புகழ்ந்து கொண்டேயிருப்பான்.

ராஜசேகரன் அவ்வப்பொழுது தனக்கு வரும் வாய்ப் புக்களை ராம்பூபாலுக்குத் தருவது வழக்கம். அதனால் ராஜசேகரன் மீது அன்பும் மதிப்பும் கொண்டிருந்தான் அவன்.

நாலாவது ஆள் கிரண். முதலில் சிலநாள் ராஜ சேகரனுடன் சேர்ந்து வேலை பண்ணியவன். பிறகு ராஜ சேகரனின் ஒத்துழைப்புடனேயே சுயமாய் விளம்பர ஏஜென்சி வைத்து நடத்துபவன். அதனால்தான் ராஜ சேகரன் மீது நல்ல மதிப்பு அவனுக்கு. தன் தொழில் சம்பந்தப்பட்ட விஷயங்களை அம்மூவரிடமும் நம்பிக்கை யோடு சொல்லுவது ராஜசேகரனின் வழக்கம். அம்மூவரைத் தவிர ராஜசேகர் நம்பும் இன்னொரு ஆள் காதம்பரி. அதனால்தான் புதிதாய் தான் அடியெடுத்து வைத்திருக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசித் தீர்ப்பதற்காக அந்த பார்ட்டியை ஏற்பாடு பண்ணியிருந்தான் ராஜசேகரன்.

அவன் சொன்ன விஷயங்களை எல்லோரும் கவனமாய் கேட்டார்கள்.

"நமக்கு இருக்கிற டைம் ஒரு மாதத்தில் முப்பது நாட்கள். வரும் ஆதாயம் இருபத்தைந்து லட்சங்கள். இந்த முப்பது நாட்களை ரெண்டாய் பிரித்தால் ரெண்டு

பதினைந்து நாட்கள். முதல் பதினைந்து நாட்களில் நாம் மாடல்களைத் தேர்ந்தெடுத்து வெச்சுக்கணும். அடுத்த பதினைந்து நாட்களில் நாம் ஷூட்டிங் வேலையைத் தொடங்கணும். அதுக்கு நமக்கு வேண்டியது ஒரு பெண்!

ஒரே ஒரு பெண்!.....மிக அழகான பெண். லிரில் விளம்பரத்தையெல்லாம் தோற்கடிக்கும்படியான ஒரு பெண். அந்த ஒரே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுப்பதற்காக நாம் சில நூற்றுக்கணக்கானப் பெண்களைப் பார்க்க வேண்டியிருக்கும். இதற்கு முன்னால்....." என்று ஏதோ சொல்ல வந்த ராஜசேகரனை இடைமறித்து ராம்பூபால் சொன்னான்.

"ராஜசேகர், இதப்பாரு, சஸ்பென்சாய் சினிமா கதையைப் போல சொன்னால் எனக்குப் புரியாது. ஒரு பெண் மூலம் ஒரு மாதத்தில் அவ்வளவு லட்சங்கள் எப்படி வரும்? அதென்ன பிளான், அதைச் சொல்லு முதலில்..... அதற்குப் பிறகு மீதியையெல்லாம் சொல்லிக்கலாம்."

ராஜசேகரன் கோபமாய் ராம்பூபாலைப் பார்த்தான்.

"நான் எடுக்கப்போற விளம்பர ஃபிலிம் மூலமாய்தான் இருபத்தைந்து லட்சம் வரப்போறது. ஆனால் இதில் விசேஷம் என்னவென்றால்.....பந்தயம்!..."

"பந்தயமா?" ராம்பூபால் வியப்புடன் பார்த்தான்

"யாரோடு?" கேட்டான் கிரண்.

சொன்னான் ராஜசேகரன்.

மூவரும் ஆச்சரியமடைந்தார்கள்.

"நீ மலையை முட்ட நினைக்கிறாய் பிரதர்...அது நடக்காத காரியம்."

"உனக்குப் பணமும் பேரும் வரலாம்...ஆனால் நீ கொலைகளைத் தூண்டிவிடுகிறாய்..."

"இதில் நிர்மூலமாகப் போறவங்க யார் தெரியுமா?"

தலைக்குத் தலை கேள்விகள் பிறந்தன.

"எனக்குத் தெரியும். நன்றாய் தெரியும். வாழ்க்கையில் 'ரிஸ்க்' இல்லாமல் 'த்ரில்' இல்லை, இது என் கெட்டிக்காரத் தனத்துக்கு சவால்.உங்கள் ஒத்துழைப்புக்குப் பரிசோதனை. கடைசிவரை என்னோடேயே இருப்பதாய் சத்தியம் பண்ணுங்க. மீதியை நான் பாத்துக்கறேன்"

மூவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு ராஜசேகர் பக்கம் திரும்பினார்கள்.

ராஜசேகரனின் கைமேல் கையை வைத்தார்கள்.

"உன் முயற்சி வெற்றியடைய கடைசி வரைக்கும் ஒத்துழைக்கிறோம். நாங்க துரோகம் பண்ண முனைந்தால் எங்களைச் சுட்டுத் தள்ளினாலும் பரவாயில்லை, அதுக்கும் சித்தமாயிருக்கிறோம்."

ராஜசேகரனின் முகத்தில் குறுநகை படர்ந்தது.

அங்கு கொஞ்ச நேரம் மௌனம் ஏற்பட்டது.

அவரவர்கள் தம் யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள்.

கொஞ்ச நேரங்கழித்து, ராம்பூபால் குரல் கனைத்துக் கொண்டான்.

"ராஜசேகர், உன் மனதில் இருக்கிற யோசனையை சொல்லு, என்னதான் நடந்தது அதைச் சொல்லு...இதில் எங்களுடைய கமிஷன் எவ்வளவுன்னும் சொல்லு..."

ராஜசேகரன் சொல்லி முடித்தான்.

மதுசூதனன் ஆச்சரியமடைந்து விட்டான் தன் பாஸ் சொன்னதைக் கேட்டு.

"எப்போது நடந்தது இது?" கிரண் கேட்டான்.

"ஒரு வாரத்திற்கு முன்னால்" ராஜசேகரன் பதிலளித்தான்.

"சான்சு நன்றாய்தானிருக்கு. ஆனால் உன் சபதம் ரொம்ப ஆபத்தானது. நீ ஜெயிப்பாய்னு நம்பிக்கை இருக்கா உனக்கு?" கேட்டான் கிரண்.

"இருக்கு"

"சரி, அப்படீன்னால் இப்ப நாங்க என்ன பண்ணணும் என்கிறாய்?" ராம்பூபால் கேட்டான்.

"தற்சமயம் இருக்கிற உங்க ரெண்டு பேர் வேலைங்களையும் மூட்டை கட்டிவையுங்க முதலில். ஒரு மாதத்துக்கு நீங்க என் ஆதீனத்தில் இருக்கணும். உங்களுக்கு ஆற செலவெல்லாம் என்னைச் சேர்ந்தது. வேலையெல்லாம் முடிந்ததுமே உங்க கமிஷனை உங்களுக்குத் தந்துடறேன்- ஓ.கே?"

"ஓ.கே. டன்!"

"அப்படியானால் தற்சமயம் நீங்க பண்ண வேண்டிய வேலை... ரொம்ப சுலபமானது. பெண்களைத் தேடுவது... எப்படித் தேடணும்னால்... இந்த விஷயம் நம்ப விரோதிங்களுக்குத் தெரியவே கூடாது. இந்த ப்ராஜக்டில் நாம்ப இருக்கிற விஷயமே ரெண்டாம் பேருக்குத் தெரியக் கூடாது. உங்களிருவருக்கும் துணை மதுசூதனன் இருப்பான்... ஆனால் கொஞ்சம் தாமதமாய் உங்களோடு சேர்ந்துப்பான். எனக்குத் துணை என் அசோசியேட் சிரீஷ் இருப்பான். இப்ப நாம்ப தேர்ந்தெடுக்கப்போற பெண்கள் சினிமா ஸ்டாருங்களாய் இருக்கக் கூடாது. அதுபோலவே இதற்கு முன்னால் மாடலிங் தொழிலில் இருந்தவங்களாயும் இருக்கக் கூடாது. மாடலிங் தொழிலுக்குப் புதிதான பெண்ணைத் தேர்ந்தெடுப்பது கஷ்டமான காரியந்தான். கிடைக்காமல் போய் வேறு வழியில்லாவிட்டால் அப்போது அழகு, உடற்கட்டு ரெண்டுமுடைய பெயர் பெறாத ஏதாவது சின்ன மாடலிங் பெண்ணைத் தேர்ந்தெடுத்துக்கலாம். உங்கள் தேடும் வேலையை ரகசியமாய் வைத்திருக்கணும். அதுக்கு

வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணியிருக்கிறேன். நீங்க முதலில் தேட வேண்டியது காலேஜுகளிலும்... யூனிவர்சிடிகளிலும்... சில கிராமங்களிலும்... நான் நினைக்கிறாப் போல பெண் கிடைப்பதற்கு இம்மூன்று இடங்கள்தான் தோதானவை. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு... அது போலவே நாம்ப எந்த வேலையை எப்படிச் செய்யணும்னு சொல்லிடறேன்... முதல் வாரத்தில் ராம்பூபால், கிரண், நீங்களிருவரும் காலேஜிற்கருகில் பழி கிடக்கணும... கிராமங்களில் சுற்றியலையணும். உங்களுக்கு அழகானவங்களாய் தோணுகிற பெண்களின் விவரங்களை சேகரித்துக்குங்க. முடிந்தால் அவங்களோடு பேசுங்க. அந்த விஷயத்தை எனக்குத் தெரியப்படுத்துங்க... நான் இங்கே சென்னையில் மீதி ஏற்பாடுகளில் முனைந்திருப்பேன். இன்னொரு விஷயம்— வாரத்தில் இருபத்தைந்து பெண்களை நாம்ப தேர்ந்தெடுத்துக்கிட்டால் அதில் மிஞ்சி நிற்கப் போவது ஒரே ஒரு பெண்தான். முன்யோசனையுடன் மேலும் ஐந்து பெண்களையும் கூட செலக்ட் பண்ணிக்கிறேன். அதில் யாருடைய தனிப்பட்ட இஷ்டத்திற்கும் சம்பந்தமில்லை. என் தீர்ப்புதான் முடிவு... என்ன சொல்றீங்க?'' சீரியசாய் கேட்டான் ராஜசேகரன்.

''சரி'' இருவரும் தலையாட்டினார்கள்.

''இந்தத் திட்டத்தில் எங்கே என்ன தப்பு நேர்ந்தாலும் பாதிக்கப் போறதும், நஷ்டமாகப் போறதும் நான்தான்... இதை மட்டும் நன்றாய் நினைவில் வெச்சுக்குங்க. நான் என் சபதத்தை நிறைவேற்றிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதானால்— என்னை நீங்க ஒரு மனுஷனாய் பார்க்க முடியாது'' அந்த வார்த்தைகளை மிக சீரியஸாய் சொன்ன ராஜசேகரனின் முகத்தைப் பார்த்தார்கள் அம்மூவரும். அதில் பந்தயத்தில் ஜெயிக்க வேண்டுமென்ற உறுதியும், திடமும் நன்றாய் தெரிந்தன அம்மூவருக்கும். ராஜசேகரன் பால் அன்பு கொண்டிருந்த அம்மூவருக்குமே

பயம் ஏற்பட்டது. அவர்கள் பயந்தது நிஜமாகி விடுமோ என்ற கலக்கமும் ஏற்பட்டது.

அதற்காக ராஜசேகரனைத் தடுத்து நிறுத்திவிடும் துணிச்சலோ தைரியமோ அவர்களுள் யாருக்குமே கிடையாது.

தெரிந்தே, ராஜசேகரனுக்காக ஆபத்தான பந்தயத்தில் இறங்கத் துணிந்து விட்டார்கள் அவர்கள்.

உரலில் தலையிட்டு விட்டு பிறகு உலக்கைக்காக அஞ்சும் ரகமில்லை அவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் நிபுணர்கள்.

மூவரையும் ஒருமுறை பார்த்துவிட்டு எழுந்திருந்தான் ராஜசேகரன். அந்த நிமிஷத்திலிருந்தே அவன் கண்கள் கேமிரா லென்சுகளாய் மாறிப் போய்விட்டன என்று அம்மூவருக்கும் தெரியாது.

விசாலமான அந்த அறைச் சுவற்றில் அலங்கார சித்திரங்கள் ஓவியமாய் தீட்டப்பட்டிருந்தன. அறையின் நடுவில் ஒரு ஊஞ்சல் இருந்தது. அதன்மேல் யூஃபோம் மெத்தையும் தலையணையும் இருந்தன.

மெத்தையின்மேல் சாய்ந்தாற்போல ஓயிலாய் உட்கார்ந்திருந்தாள் சுவர்ணலதா.

நீலநிறத்தில் சுடிதாரும் குர்த்தாவும் அணிந்திருந்தாள்.

ஊஞ்சலுக்கு முன்னால் இரண்டு பிரம்பு டீபாய்கள் போடப்பட்டிருந்தன. அதன்மேல் இரண்டு குளிர் பானங்கள் வைக்கப்பட்டிருந்தன.

அந்த டீபாய்க்கு இந்த பக்கமாய் ஊஞ்சலுக்கெதிரே போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலியில் ராஜசேகரன் உட்கார்ந்திருந்தான்.

அவன் அங்கே வந்து பதினைந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும்.

"நான் வரணும்னு பர்த் டேய்னு பொய் சொன்னாயா...?" கேட்டான் ராஜசேகரன்.

"இல்லை"

"பின்னே?"

"உங்களோடு கொஞ்ச நேரம் தனிமையில் கழிக்கலாம்னுதான்..." அழகாய் சிரித்தாள் சுவர்ணலதா.

"என்னால் நம்ப முடியலை... காலையில் நாமிருவரும் தனியாய் தானே இருந்தோம்.. அப்பக்கூட என்னோடு தனிமையில் கழித்தாற் போலத்தானே?" என்றான் ராஜசேகர்.

"ஆமாம்... ஆனால் என் தனிமை வேறு..."

"அப்படீன்னால்?"

"உங்களுக்கே புரியும்... ஏன் பரபரப்பு அடைகிறீங்க?" சுவர்ணா திரும்பவும் சிரித்தாள்.

"என்னை பத்து நிமிஷத்தில் அனுப்பிடறேன்னாய்... பத்து நிமிஷம் தாண்டிவிட்டது" ஞாபகமூட்டினான் ராஜசேகரன்.

கொஞ்ச நேரம் இருவருமே பேசிக் கொள்ளவில்லை.

"நீங்க ரொம்ப உயர்ந்துட்டீங்க மிஸ்டர் ராஜசேகர்" என்றாள் சுவர்ணா.

"ஆமாம்... நாம்ப முதல் முதலில் சந்தித்தது 1981ல் என்று நினைக்கிறேன்" ராஜசேகர் சிரித்தான்.

"நான் அந்த உயரத்தைப் பற்றிச் சொல்லலை," என்று எழுந்துப் போய் ஒரு பீர் பாட்டிலிலிருந்த திரவத்தை இரண்டு கிளாஸ் தம்ளர்களில் விட்டாள் சுவர்ணா.

"எடுத்துக்குங்க..." என்றாள் தான் ஒரு கிளாசை எடுத்துக் கொண்டு.

"நோ... தாங்க்ஸ்" மறுத்தான் ராஜசேகரன்.

"பீர் பெண்கள் கூட குடிக்கிறாங்க... நீங்க..."

"உனக்குத் தெரியும் நான் குடிக்கமாட்டேன்னு"

"நீங்க நிஜமாகவே உயர்ந்துட்டீங்க. தொழில் ரீதியாய் மிக அன்பாயும், கெட்டிக்காரத்தனமாயும் மாடல்களை உங்க விளம்பரப் படங்களில் பயன்படுத்திக்கிறீங்க. நிஜ வாழ்க்கைக்கு வந்துட்டால் அவங்களை விட்டு தொலைவில் இருந்துக்கிறீங்க. ரொம்ப காம்ப்ளெக்ஸ் மென்ட் டாலிடி..." சுவர்ணா நிறுத்தினாள், அவன் முகத்தையே பார்த்தபடி.

அவன் எதுவும் பேசாததால் தானே கேட்டாள்.

"நீங்க இன்னும் ஏன் கல்யாணமே பண்ணிக்கலை மிஸ்டர் ராஜசேகர்?"

ராஜசேகர் ஏதோ சொல்ல நினைத்தான். உடனேயே சொல்லக் கூடாது என்று பேசாமலிருந்து விட்டான். அவனுக்கு அங்கே போரடித்தது. அர்ஜென்ட் அபாயிண்ட் மென்ட்டை கேன்சல் பண்ணிவிட்டு இங்கே வந்திருந்தான். ஆனால் இங்கே சுவர்ணா சாவதானமாய் வம்பு பேசிக் கொண்டிருக்கிறாள். பர்த் டே பார்ட்டிக்கு வராவிட்டால் என்ன நினைத்துக் கொள்வாளோ என்று தான் வந்திருந் தான். ஆனால் இங்கே வந்த பிறகுதான் தெரிந்தது சுவர்ணா பொய்கூட பேசுவாள் என்று. அவனைப் பொய் சொல்லி இங்கே அழைக்க வேண்டிய காரணம் என்ன? பெண்களையே அவனுக்குப் புரிந்தும் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கிறது. தொழிலைப் பற்றி எவ்வளவு தீவிரமாய் யோசிப்பானோ, அதற்கு எதிர்ப்பதமாய் தினந்தோறும் தன்னை எதிர்ப்படும் பெண்களைப்பற்றி அவ்வளவு குறைவாய் சிந்திப்பவன்.

அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தான் அவன்.

"ஏதோ தீவிரமாய் யோசிச்சிட்டிருக்கீங்க... அதாவது என்னைப் பற்றித்தான் யோசிக்கிறீங்கன்னு அர்த்தம்.

ஏன் என்றால் தம்மைப் பற்றித் தவிர மற்றவங்களைப் பற்றித்தான் ரொம்ப சீரியசாய் யோசிப்பாங்களாம் எல்லோருமே, ஆம் ஐ கரெக்ட்?''

''மே பீ... பட்... பட்'' மென்று விழுங்கினான்.

அறையில் ஏர் கண்டிஷனரின் காற்றோடு கலந்து வந்து மோதிய இண்ட்டிமேட் செண்ட்டின் மணம் மயக்கத்தை ஊட்டிற்று.

இடையிடையே ஊஞ்சல் மெதுவாய் அசைந்த ஓசை— அழகான பெண்ணின் கால் கொலுசு சப்தத்தைப்போல காதிற்கு இனிமையாயிருந்தது.

''தொழில் ரீதியாய் நாமிருவரும் சிநேகிதர்கள் இல்லையா? அதோடுகூட என்னை மாடலிங்கில் என்கரேஜ் பண்ணினவரும் நீங்கதான்... இந்த மெட்ராஸ் சிடியிலேயே பார்க்கப் போனால் நிறைய பணம் வாங்கிற மாடல் ஆர்டிஸ்ட்கூட நான்தான்... இல்லையா?''

''ஆமாம்'' என்றான் ராஜசேகர். அவள் வேறு ஏதோ கேட்கப் போகிறாள் என்று நினைத்தான். ஆனால் அவள் சட்டென்று பேச்சை மாற்றி விட்டாள்.

''நான் அடிக்கடி தனிமையில் தவிச்சுட்டிருக்கேன் ராஜசேகர்... அந்தத் தனிமையைத் தாங்கிக்கக்கூட முடிய மாட்டேங்குது எனக்கு. கஷ்டம், வேதனை, அருவருப்பு எல்லாம் அலைக்கழிக்கிறது... ஆமாம் எனக்குத் துணை... ஆண் துணை வேணும்னு இருக்கும். அந்த ஆண் துணை நல்ல நண்பனாய் இருக்கணும்னு நினைப்பேன். ஆனால் எனக்கு இந்த மெட்ராசில் நல்ல நண்பர்கள் வேறு யார்? உங்களைத் தவிர... அதனால்தான் பொய் சொல்லி உங்களை வரவழைத்தேன்'' என்றாள் நிறுத்தி நிதானமாய்.

அதைக் கேட்ட அவனுக்கு என்ன பதில் சொல்வ தென்று புரியவில்லை. திரும்பவும் சுவர்ணாவே தொடர்ந் தாள்.

"மிஸ்டர் ராஜசேகர்! எனக்கென்னவோ 'விக்கீலா மொட்டா' என்றால் இஷ்டம். விக்கீலா மொட்டாவின் பெயரைக் கேட்டிருக்கீங்களா நீங்க?" கேட்டாள்.

"கேட்டிருக்கேன்" என்றான் அவன்.

சுவர்ணாவின் வார்த்தைகள் ஒன்றுக்கொன்று சம்பந்த மில்லாமலிருந்ததை உணர்ந்தான் ராஜசேகர். அவள் சுபாவமே இதுதானா? என்னவோ அவனுக்குத் தெரியாது. அவளைப் பல நாட்களாய் அறிந்தவன்தான். ஆனாலும் தனியாய் இருக்கும்போது அவளைச் சந்திப்பது இதுதான் முதல் தடவை.

அவள் என்ன சொல்கிறாள் என்று புரியாமல் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

"விக்கீலாமொட்டாவின் அழகைப் பார்த்தால் இருபது வயது பெண்கள்கூட வெறி பிடித்துப் போயிடுவாங் களாம். விக்கீலாமொட்டா அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல மாடல் பெண்மணி. தற்சமயம் அவளுக்கு 55 வயதிருக்கும். இதெல்லாம் எதுக்குச் சொல்றேன்னால் அவள் வாழ்க்கையின் வேதனையும் என் வாழ்க்கையின் வேதனையும் ஒன்றேதான்... விக்கீ 23 வயதில் முதல் கணவனை விட்டுட்டு மூன்று குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு ப்ளோரிடாவுக்கு வந்து அங்கே நாட்டிய நிகழ்ச்சி பண்ணிக் கொண்டு வாழ்ந்து வந்தாள். அவள் தன் முதல் கணவனை ஏன் விட்டுட்டு வந்துட்டாள் தெரியுமா?... அவன் காதல் என்ற பெயரில் படுத்திய உடல் இம்சைகளைப் பொறுத்துக்க முடியாமல் போய்... சாடிஸ்ட்... அதேபோல தான் என் வாழ்க்கையிலும்கூட வேதனை... எனக்குக் குழந்தைகள் இல்லாதது மகிழ்ச்சி கரமான விஷயம்... விக்கீ ரெண்டாம் கல்யாணம் பண்ணிண்ட பிறகு சுகப்பட்டாள்னு வையுங்க... அப்பத் தான் அவள் போட்டோக்களைப் போட பத்திரிக்கைகள் ஆயிரக்கணக்கான டாலர்களைத் தரத் தொடங்கின...

நான் ஆண்களைப் பற்றி யோசிக்கும்போதெல்லாம் என் கணவன் நினைவுக்கு வருவான். எனக்கு... அவனிடம் நான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் நினைவுக்கு வரும்... சின்ன வயதிலேருந்து இதுவரை வறுமையால் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்துட்டேன்... அவ்வளவு வருத்தத் திலும் அபாரமான என் அழகுதான் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்கும். என் அழகைப் பார்த்து எந்த ராஜகுமாரனாவது வராமல் போயிடுவானா, வரதட்சனை பைசா இல்லாமல் பண்ணிக் கொண்டு விடமாட்டானா என்று இனிய கனவுகள் காண்பேன்.

நான் நினைத்தாற் போலவே பணக்காரன் வந்தான். மிக அழகாய் நாகரீகமாய் தோன்றினான் என்னை மெச்சினான். என்னை நேசிப்பதாய் எண்ணிவிட்டேன். என்னைக் கண்ணில் மணியாய் வைத்துக் காப்பாற்று வதாய் சொன்னான். நல்லவன் என்றெண்ணினேன். திருமணம் ஆயிற்று. அதே போலவே சில் மாதங்கள் என்னை அருமையாய் வைத்துக் கொண்டிருந்தான். அதற்கு மெய்மறந்து போய் விட்டேன். அது முப்பது நாள் மோகமாகி விட்டது.

ஒருநாள் பணக்கார நண்பன் ஒருவனை வீட்டிற்குக் கூட்டி வந்தான். அவனை சந்தோஷப்படுத்தினால் நம் எதிர்காலம் நன்றாயிருக்கும் என்றான். நான் மூர்ச்சை யடைந்து விழாத குறைதான் அவன் தோரணைக்கு— ஆனால் இப்படிப்பட்ட கணவன் கூட உண்டா? இவர் களுக்கு வெட்கம், மானம் எதுவுமே கிடையாதா என்று தான் தோன்றிற்று.

அவன்மீது வெறுப்பு ஏற்பட்டது. அவனைத் திட்டித் தீர்த்து விட்டு வந்து விட்டேன். அப்படி வந்தவள்தான் உங்கள் கண்ணில் பட்டுவிட்டேன். என் அதிர்ஷ்டம் நன்றாயிருந்தது... ஒரு காலத்தில் வறுமையில் உழன்று வந்தேன். இப்பொழுது பணம் இருக்கிறது... புகழ் இருக்கிறது... நிஜ வாழ்க்கை என்றால் என்னன்னு

தெரிந்து கொண்டு விட்டேன்... கற்பனையில் இல்லை. ஆனால் தனிமை... மிகக் கொடுமையான தனிமை... இதயத்தைக் கசக்கிப் பிழியும் தனிமை...''

''கல்யாணம் பண்ணிக்கோயேன் சுவர்ணா?''

''பண்ணிக்கலாம். ஆனால்...''

''ஆனால் என்ன தடை?''

''ஒரு முறை மனைவியாய் உதைபட்டு விட்டேன். இன்னொரு முறையும் ஏமாந்து விடுவேனோன்னு பயம். இப்போது நான் உங்கள் மூலமாய் மாடலாய் சம்பாதித்திருக்கும் பணத்தைப் பார்த்து ஆசைப்பட்டுப் பண்ணிக்கலாம். ஆனால் எனக்கு இருக்கிற புகழைப் பார்த்து சகிக்க முடியாமல் போகலாம்... அப்பொழுது அவனுக்குள் தாழ்வு மனப்பான்மை தோன்றிவிடும். ஆணின் சாடிஸத்துக்கு இதுகூட ஒரு காரணந்தான். இத்தனையையும் மீறினாலும், அரைகுறை ஆடையோடு நான் பண்ணும் விளம்பர ஃபிலிம்களைப் பரந்த மனத்தோடு அவனால் பார்த்து சகித்துக்க முடியுமா? இல்லை, தொழிலை விட்டுடு என்பான்... வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாதபோது கணவனுக்கு அடங்கி மனைவியாய் வாழ முடியுமோ என்னவோ, ஆனால் இப்பொழுது என் தன்மானத்தையும், குணங்களையும், கொன்று கொண்டு மனைவியாய் மாற முடியாது என்னால்'' சூழ்நிலை கம்பீரமாயிருந்தது. எவ்வளவு ஆழ்ந்து யோசிக்கிறாள் சுவர்ணலதா! ராஜசேகரன் யோசித்தான்.

ஆனால் சுவர்ணா சட்டென்று சொல்லத் தொடங்கினாள்.

''நான் இப்போது... ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத நிறைய விஷயங்களைச் சொல்லிட்டேன் இல்லையா? இதுதான் என் குணமே! வருத்தங்களிலேயே பிறந்து உழன்று, சுகங்களின் திரைக்குப் பின்னால் வருத்தங்களையே அனுபவிப்பவங்க எல்லோருமே

என்னைப் போலத்தான் பேசுவாங்க...'' அதற்குள் பீர் பாட்டில் காலியாயிருந்தது.

''உங்களை ஒரு விஷயம் கேட்கட்டுமா?'' என்றாள் சுவர்ணா.

''கேள்...'' என்றான் ராஜசேகர்.

''இன்றோடு ஷூட்டிங் முடிந்துவிட்ட 'க்ளியர் டோன் சோப்' பாலென்ஸ் வேலையோடு நான் பண்ணவேண்டிய வேலை முடிந்துடுத்து இல்லையா...''

''ஆமாம்...''

''அப்படீன்னால் உங்க அடுத்த ப்ராஜெக்டில் நான் இல்லையா? ஐ மீன்... எனக்கு வாய்ப்புத் தரப்போவ தில்லையா? இதை ஏன் கேட்கிறேன்னால்... நம்மிருவருக்கு மிடையே உள்ள நட்பின் ஆதாரத்தால் தான் கேட் கிறேன்...''

''யாரை எடுத்துக்கணும்னு நான் இன்னும் தீர்மா னிக்கலை... இன்னும் இந்த ப்ராஜெக்ட் ஃபைனல் ஆகலை கூட...'' என்றான் ராஜசேகரன்.

''மிஸ்டர் ராஜசேகர், நீங்க உண்மையை மறைத்துட முடியாது. எனக்கு நிறைய விளம்பர ஏஜென்சிங்களோட சம்பந்தமிருக்கு... அதேபோல நிறைய பேர் விளம்பர போட்டோகிராபருங்க தினமும் என்னை சந்தித்துட்டே இருப்பாங்க... தெரியுமா?... இந்த ஃபிலிம்ஸுக்கு சம்பந்தப்பட்ட எந்த விஷயம் நடந்தாலும் எனக்குத் தெரிந்து போயிடும். இல்லையா?''

''ஆமாம்...''

''அழகானப் பெண் வேணும்னு நீங்க எந்த உத்தேசத்தோடு அறிக்கை தந்திருக்கீங்கன்னும், அதுக்குப் பின்னால் இருக்கிற கதையும் எனக்குத் தெரியாதுன்னா நினைச்சீங்க?''

''தெரிந்திருக்கலாம்...''

''ஒரு விளம்பர ஃபிலிம் மூலமாய் சில லட்சங்களை சம்பாதித்துக் கொள்ள உங்க ப்ராஜெக்ட் ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் ஆரம்பமாயிற்று.... இல்லையா? அதில் ஒரு பாகந்தான் இந்த பேப்பர் அறிக்கை...''

''ஆமாம்... ஆனால் .. இந்த விஷயம் உனக்கெப்படித் தெரியும்?''

''தெரியும்... ஆனால் இன்னொரு கேள்வி... ஒரு கேள்விக்கு உங்களிடமிருந்து பதிலை வரவழைக்கத்தான் உங்களை இன்று அழைத்தேன். அந்தக் கேள்வி என்னென்னால்... உங்க விளம்பரப் படத்தில் நான் பயன்பட மாட்டேனா?'' நேராய் கேட்டு விட்டாள் சுவர்ணா.

ராஜசேகரன் பதில் பேசவில்லை.

''பதில் கிடையாதா?'' திரும்பிக் கேட்டாள்.

''நான் இதுவரை உனக்கு ஏன் அந்த விஷயத்தைச் சொல்லலைன்னு சீக்கிரமே தெரியவரும்.''

''சீக்கிரம்!... எல்லாம் சாக்கு... எனக்குத் தேவையில்லை.'' ரோஷமாய் வந்தது அவள் பதில்.

ராஜசேகருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

அந்த விளம்பரப் படத்தில் நடித்தால் எந்த மாடலாயிருந்தாலும் சரி உலகப் புகழ் பெற்றுவிடுவாள். இந்த விஷயம் எப்படித் தெரிந்தது சுவர்ணாவுக்கு?

ஒரு வாரத்திற்கு முன்னால் நான்கு சுவர்களுக்கு இடையே ரகசியமாய் நடந்த கூட்டத்தின் விஷயமெல்லாம் இவ்வளவு வெளிப்படையாய் இவளுக்கு எப்படித்தெரிந்தது? அப்படியானால் தன் கட்சியைச் சேர்ந்த சுவர்ணலதாவிற்கு தன் எதிரிகளுடன் கூட சிநேகம் இருக்கிறதென்று தெரிகிறது...ராஜசேகருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. சுவர்ணாவின் மேல் சந்தேகம் ஏற்பட்டது.

"நான் வரேன்" சரேலென்று எழுந்திருந்தான். ராஜ சேகரன்.

"உட்காருங்கள்" சுவர்ணா கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

"எனக்கு வேலை இருக்கு. நீ கேட்டதற்கெல்லாம் அப்புறமாய் எப்பவாவது சாவதானமாய் பதில் சொல் றேன்." எழுந்து போகத் தொடங்கியவன் சட்டென்று சுவர்ணாவின் வார்த்தையைக் கேட்டு விட்டு அப்படியே நின்று விட்டான்.

"ஆம்...நான் சொன்னது நிஜந்தான் ராஜசேகர்... சித்தரஞ்சன் தான் எடுக்கப்போகிற விளம்பரப் படத்தில் என்னை நடிக்கச் சொல்லிக் கேட்டார். ஒரு லட்சம் தரேன் என்றார்."

"அவன் என் விரோதி...நம் விரோதி..." என்றான் ராஜசேகர் ரோஷத்தோடு.

"சித்தரஞ்சன் இன்று காலை வரையிலும் நம்மிரு வருக்கும் விரோதி...அதனால்தான் அவர் கேட்டுண்டதுமே ஒப்புக்கலை. ஆனால் இன்றைய தினத்திலிருந்து உங் களுக்கும் எனக்குமிடையே இனிஎந்த வியாபார தொடர்பும் இருக்கப்போவதில்லை. அதனால்தான் அவருக்கு என் சம்மதத்தைத் தெரிவிக்கப்போகிறேன்—"

"என் குரூப்பில் இருக்கிறவள் நீ. உன்னை எதுக்குக் கேட்டிருப்பான்னு யோசித்துப் பார்த்தாயா?" ராஜசேகர் சாந்தமாகவே கேட்டான்.

"இல்லை...ஆனால் எனக்கு நல்ல வாய்ப்புக்கள் வேணும். நீங்க மறுத்துட்டீங்க"

"இன்றே உனக்குச் சொல்லிட்டேன் மிஸ். சுவர்ணா. சித்தரஞ்சனுடன் நான் பண்ணிய சபதத்தில் கடைசி வெற்றி எனக்குதான்! இது இரண்டு பேருக்குமிடையே போட்டி இல்லை, இருவரின் புகழ், புத்தி சாதுரியத்திற்கு

மிடையே போட்டி...இந்தப் போட்டியில் உன்னைப் போன்றவங்க நலிந்து போயிடுவீங்க. சித்தரஞ்சன் பக்கம் நீ போவதை நான் நம்பலை...உனக்கு அவன் அந்த சான்சு தரமாட்டான்''

''ஜோஸ்யம் சொல்றீங்களோ?'' சுவர்ணா கேலியாய் கேட்டாள்.

''இன்றைக்கு உன் வீட்டிற்கு முதல் முதலாய் வந்தது நல்லதாய் போயிற்று. ஏன்னால் இதுதான் கடைசி தடவையாய் வருவதுகூட...! குட்நைட்...'' ராஜசேகர் எழுந்தான்.

சுவர்ணா ஏதோ சொல்ல வந்தாள்.

ராஜசேகர் மளமளவென்று வராந்தாவில் நடந்து போய்விட்டான். ஊஞ்சலை விட்டு எழுந்திருந்து அறை வாசலுக்கு வந்து நின்று, திரைச்சீலையை விலக்கிக்கொண்டு பார்த்தாள் சுவர்ணா. அதற்குள் கார் கிளம்பி விட்ட சப்தம் கேட்டது. காரில் உட்கார்ந்திருந்த ராஜசேகரனின் முகத்தில் தீப்பொறி பறந்து கொண்டிருந்தது. இந்த சம்பாஷணைகளையெல்லாம் இன்னொரு ஆள் கேட்டுக் கொண்டிருந்தது சுவர்ணாவுக்குத் தெரியும்.

ராஜசேகரனின் யோசனையில் சித்தரஞ்சன் வந்தான். அவன் தனனோடு செய்த சபதம் நினைவுக்கு வந்தது. அதற்குள் அவன் ஆட்டத்தைத் தொடங்கிவிட்டான் போலும்! அவன் குரூப்பிலிருந்த சுவர்ணாவைத் தன் பக்கமாய் இழுத்துக் கொண்டு விட்டானே.

பாவம் சுவர்ணா! சுவர்ணாவின் மேல் இரக்கம் ஏற்பட்டது அவனுக்கு.

ஆனாலும் அவள் மேல் இரக்கப்படுவது அனாவசியம் என்று பட்டது அவனுக்கு. அந்த சமயம் தாண்டிப்போய் விட்டது. பிறந்த நாள் என்ற பெயரில் அவனை இங்கே வரவழைத்தது இதற்குத்தானா? அந்த சித்தரஞ்சனின் வலையில் விழுந்திருக்கிறாள் சுவர்ணா. மூன்றாண்டுகளாய் அவனிடம் மட்டுமே மாடலாய் வேலை பண்ணிக்கொண்டு

வந்திருக்கும் சுவர்ணாவை எவ்வளவு சாமர்த்தியமாய் தன் பக்கமாய் திருப்பிக் கொண்டு விட்டிருக்கிறான்!

இவ்வளவு நாட்களாய அவன்பால் சுவர்ணாவுக்கு இருந்து வந்த அன்பையும், நன்றியையும் விரோதமாய் மாற்றி விட்டானே!

ஒரு காலத்தில் திக்கு திசை தெரியாமல்—ஒரு வேளை உணவுக்கு வழியில்லாமல் திண்டாடி தத்தளித்தபடி அவனை அண்டி ஏதாவது வழிகாட்டச் சொல்லி மன்றாடிய சுவர்ணாவா இவள்! சந்தர்ப்பமும் வாய்ப்பும் உச்சாணியில் தூக்கி வைத்து விட்டன... அந்த அவகாசத்தையும் அதிர்ஷ்டத்தையும் ஏற்படுத்தித் தந்த ஆளை நினைவில் வைத்துக் கொள்வது மனித இயல்புக்கே மாறு பட்டதோ?...

அழகு, வாய்ப்பு, அதிர்ஷ்டம், பணம், பெயர், கிளாமர் இந்த ஆறும்தான் ஒரு மாடல் பெண்ணிற்கு உயிர்.

அழகு அவளுக்கு இருந்தது.

வாய்ப்பை அவன் ஏற்படுத்தித் தந்தான்.

அதிர்ஷ்டத்தை அவள் பெற்றுக் கொண்டாள்.

பணம், புகழ், கிளாமர் அவைகளே வந்து சேர்ந்தன.

இதையெல்லாம் மறந்து போய் விட்ட அவள் அவன் விரோதிக்கு சிநேகிதியாகி விட்டாள். அவள் சுயநலத்தைக் கூட மன்னித்து விடலாம். ஆனால்...சித்தரஞ்சனின் விரோதத்தை மட்டும் அவன் தாங்கிக் கொள்ள முடியாது.

அவ்வளவு கோபத்திலும் மறுநாள் முடிக்க வேண்டிய டப்பிங் வேலை நினைவுக்கு வந்தது ராஜசேகரனுக்கு.

ஏன்றோ எடுத்த விளம்பர ஃபிலிமில் சில ஷாட்டுகளை மாற்ற வேண்டியிருந்தது. அதனால் 'ஸ்ரீனிவாசா டப்பிங் தியேட்ட'ருக்குப் போனான் ராஜசேகரன்.

அந்த வேலையை முடித்துக் கொண்டு வெளியே வந்த போது பிற்பகல் மணி இரண்டாகியிருந்தது.

ராஜசேகருக்குப் பசி எடுத்ததால் அருகிலிருந்த ஓட்டலை நோக்கிக் காரைத் திருப்பினான்.

தென்னிந்திய ரெஸ்ட்டாரென்ட் பகுதிக்குப் போய் உட்கார்ந்துகொண்டு சாப்பாட்டிற்கு ஆர்டர் தந்துவிட்டு யோசனையில் மூழ்கிவிட்டான்.

காலையிலிருந்து அவன் எதையோ மறந்துவிட்டாற் போலத் தோன்றிற்று. ஆனால், எதை மறந்து விட்டோம் என்றுதான் புரியவில்லை!

சாப்பாடு வந்தது. சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வெயிட்டர் வந்து, "சார், ஆர் யூ மிஸ்டர் ராஜசேகரன்?" என்று கேட்டான் வினயமாய்.

ராஜசேகரன் நிமிர்ந்து, "ஆமாம்" என்றதுமே, "உங்களுக்குப் போன்" என்று ரெஸ்ட்டாரென்டின் ஒரு மூலையிலிருந்த போனைக் காட்டினான்.

அவன் இந்த நேரத்தில் இங்கே இருந்தது யாருக்குத் தெரியும்?...எப்படித் தெரியும்? அப்படியானால் சித்த ரஞ்சன் அவனை முற்றிலும் கண்காணிக்கத் தொடங்கி விட்டான் என்று புரிந்தது.

பற்களை நறநறத்தபடி சாப்பாட்டை விட்டுக் கோபமாய் எழுந்திருந்து போனிடம் வந்தான். போனை எடுத்து, "எஸ்?..." என்றான் வெறுப்போடு.

"நான்தான்...அனுராதா அண்ணா!"

அக்குரல் காதில் பட்டதுமே அதுவரை இருந்து வந்த அலுப்பெல்லாம் சட்டென்று மாயமாகி விட்டது.

தங்கையைப் பார்த்து ஒரு மாதமாகி விட்டது.

ராஜசேகரனுக்கு இருந்த ஒரே ஒரு ரத்த சம்பந்தமுள்ள உறவு தங்கை அனுராதா ஒருத்திதான். தாய் தந்தையர் சிறு வயதிலேயே ஆக்சிடென்டில் இறந்து விடவே, இருந்த நிலத்தை விற்றுத் தான் படித்துக் கொண்டே தங்கையை அருமையாய் வளர்த்து ஆளாக்கினான்.

டிகிரியை முடித்ததுமே அவன் கவனம் போட்டோ கிராபியின் மேல் படிந்தது. தங்கையை மதுரையில் காலேஜில் சேர்த்து விட்டு, ஹாஸ்டலில் தங்கும் ஏற்பாடு களைப் பண்ணிவிட்டு அவன் பம்பாய்க்குப் போய் விட்டான்.

பிரபல விளம்பர ஃபிலிம் போட்டோகிராபர் ஒருவரிடம் அசிஸ்டென்டாக சேர்ந்தான்.

நான்கு ஆண்டுகளில் பம்பாயிலிருந்து திரும்பி வந்து சென்னையில் விளம்பர போட்டோகிராபராய் தொழிலைத் தொடங்கினான்.

அதற்குள் தங்கையின் டிகிரி முடிவடைந்து விட்டது, அவள் அங்கேயே எம்.ஏ. படிப்பதாய் சொன்னதால், அவளை அங்கேயே இருக்கச் செய்து அவ்வப்பொழுது போய் பார்த்துவிட்டு வருவான்.

தங்கையின் மேல் அவனுக்கு அளவற்ற பிரியம்.

"அனு, எப்படி இருக்கேம்மா?" என்றான்.

"அப்பப்பா, உன் ஞாபகமறதியால் என்னைக் கொல்றாய் அண்ணா!..."

"ஏன்? என்னவாச்சு?"

"உனக்கு நேற்றிரவு போன் பண்ணினேன். திரும்பவும் காலையில் போன் பண்ணினேன். அதாவது ஞாபக மிருக்கா?"

"ஆங்... ஆங்..."

"மஞ்சுளா இன்று காலை மெட்ராசுக்கு வரான்னு சொன்னேனே, அதாவது ஞாபகமிருக்கா?" கோபமாய் கேட்டாள்.

சட்டென்று நினைவிற்கு வந்தது அந்த விஷயம் அவனுக்கு. தான் காலையிலிருந்து எதையோ மறந்து போய் விட்டாற்போல யோசித்துக் குழம்பிக் கொண்டே யிருந்தது இதுதான் என்றும் புரிந்தது.

"சாரீம்மா... மஞ்சுளா வந்துட்டாளா?" வருத்தமாய் கேட்டான்.

"வந்திருப்பாள். எனக்கு உன்மேல ரொம்ப நம்பிக்கை ஸ்டேஷனுக்குப் போக மறந்துடுவாய்னு! அதான் நீ போற ஒவ்வொரு ஓட்டலுக்காய் போன் பண்ணிட் டிருந்தேன் உன்னைப் பிடிக்க."

"இப்போ எப்படிப் போறது? எங்கே தங்கியிருப்பாள்?"

"எங்கேயுமே தங்க மாட்டாள். உன்னை எதிர் பார்த்துண்டு ஸ்டேஷனிலேயேதான் இருப்பாள். போ உடனே. ஆங், பை தி பை, இது நாலாவது கால். உன் ஞாபக மறதிக்காக நூறு ரூபாயை செலவழித்துட்டேன் என் பாக்கெட் மணியிலேருந்து. உடனே போ... சரி வெச்சுடறேன்" கோபமாய் லைனைக் கட் பண்ணினாற் போலிருந்தது ராஜசேகரனுக்கு.

தங்கையின் கோபத்திற்குச் சிரித்துக் கொண்டே மணியைப் பார்த்தான். மூன்றடிக்கவிருந்தது. கலக் கத்தோடு புறப்பட்டான். வழியிலேயே எதிர்ப்பட்ட சர்வரிடம் ஐம்பது ரூபாய் நோட்டொன்றைத் தந்துவிட்டு அவன் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வெளியே இருந்த காரை நோக்கி ஓடினான்.

கார் சென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கிப் பறந்தது.

காரைப் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு ஓட்டமும் நடையுமாய் ஸ்டேஷனுக்குள் போனான்— பிளாட்பாரம் டிக்கெட் வாங்கிக் கொள்ளாமலேயே.

பிளாட்பாரத்தின் இரு பக்கங்களையும் பார்த்துக் கொண்டே போனான். ராஜசேகரனின் கண்கள்

சந்தோஷத்தால் மின்னின— தொலைவில் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த மஞ்சுளாவைப் பார்த்து.

அவளை நெருங்கினான். அவள் நிமிரவில்லை.

தான் வந்திருப்பதைத் தெரியப்படுத்தக் குரலை கனைத்துக் கொண்டான்.

நிமிரவில்லை.

பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான்.

பயந்தவாறே கூப்பிட்டான் "மஞ்சுளா"

நிமிர்ந்தாள் மஞ்சுளா.

ராஜசேகரனைப் பார்த்தாள். ராஜசேகரும் மஞ்சுளாவைப் பார்த்தான். இரவெல்லாம் தூங்காததால் மஞ்சுளாவின் கண்கள் சிவந்து முகம் வாடியிருந்தது.

ராஜசேகரனையே நினைத்துக் கொண்டு ஓர் இரவெல்லாம் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டாற் போலில்லை அவள் முகம். அசதியோடு, களைப்பாய், கன்னத்தின்மேல் படிந்த மைக்கீற்றுக்களோடும், கலைந்த சாந்தோடும் மிக அழகாய் தோன்றினாள் ராஜசேகரின் கண்களுக்கு மஞ்சுளா.

அவள் பார்வை கோபமாயிருந்ததைப் பார்த்துவிட்டுச் சட்டென்று தலைகுனிந்தவன்- "சாரீ மஞ்சுளா" என்றான் தவறிழைத்து விட்டவனைப்போல.

அவளுக்குக் கோபமாய் வந்தது. ஆனால் தீனமாய் இருந்த அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, கோபத்தை அடக்கிக் கொண்டாள். ஒன்றும் சாப்பிடாமல், முகத்தைக் கூடக் கழுவிக் கொள்ளாமல் இருந்ததால் பசி, அசதி, பிரயாண களைப்பு எல்லாம் சேர்ந்து கோபத்தை அதிகப் படுத்தின.

"இப்ப நேரம் என்னவாச்சு?" சீரியசாய் கேட்டாள்.

"மூன்றே கால்" என்றான் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டு.

"ரயில் எத்தனை மணிக்கு வந்தது?"

"காலையில் 6.40க்கு"

"அனு போன் பண்ணினாளா நான் வரதாய்?"

"பண்ணினாள்!"

"போன் பண்ணியும், நான் எதிர்பார்த்துட்டிருப் பேன்னு தெரிந்தும் இப்படியா வரது?"

".....''

"உங்களை நம்பிக் கல்யாணம் பண்ணிக் கொண்டு விட்டால் இன்றில்லாவிட்டாலும் நாளைக்கு என் கதி இதானே?"

"சாரீ- சாரீ"

"நான் எப்போது மெட்ராஸுக்கு வந்தாலும் நீங்க ஸ்டேஷனுக்கு வந்து ரிஸீவ் பண்ணிக்கிற வரைக்கும் காத்துட்டிருப்பேன்னு தெரியுமில்லையா?..."

".....''

"சொல்லுங்கள்... ஏன் பேசமாட்டேங்கிறீங்க?"

"தெரியும்"

"காலையிலேயே எங்கே போயிட்டீங்க?"

"டப்பிங் தியேட்டருக்கு"

"இப்போ எங்கேயிருந்து வரீங்க?"

"ஹோட்டலிலிருந்து"

"நான் இன்னும் முகம்கூட கழுவிக்கலை— காப்பிகூட குடிக்கலை. 6.40லிருந்து இதுவரைக்கும் இந்த பெஞ்சி யிலேயே உட்கார்ந்துட்டிருக்கேன்... தெரியுமா?"

"அடடா... காப்பி கூடவா குடிக்கலை? ஏன்? எனக்குப் போனாவது பண்ணலாமில்லே? ஏன் பண்ணலை?"

"காப்பிகூட குடிக்காமல்... உங்களுக்குச் சொன்னாலும் புரியாது... ஊம்... உங்களோடு சேர்ந்து குடிக்கணும்னுதான். என் முட்டாள் தனமான லவ் சென்ட்டிமென்ட்டால் தான் போன் பண்ணலை... பார்க்கலாம் எப்பொழுது நான் நினைவுக்கு வரேன்னு என்றுதான்... ஆமாம் இப்ப மாத்திரம் எப்படி நினைவுக்கு வந்தேன்..." கேட்டாள், குறைந்த பட்சம் எட்டுமணி நேரங்கழித்தாவது ராஜசேகரனுக்குத் தன்னைப் பற்றி நினைவு வந்ததற்கு சந்தோஷப்பட்டவளாய்.

"இப்போ... இப்போ..."

"உம்... சொல்லுங்க..."

"மதுரையிலிருந்து அனு போன் பண்ணினாள்"

கண் மூடித்தனமாய் கோபம் வந்துவிட்டது மஞ்சுளாவுக்கு.

"அப்படீன்னால்... அப்படி யாராவது சொல்லித்தான் நினைவுக்கு வந்ததே தவிர, உங்களுக்கு மட்டும் என் நினைவே வரலை, இல்லையா?"

"எக்ஸ்ட்ரீம்லி சாரீ மஞ்சுளா," என்றான் தீனமாய் மஞ்சுளாவைப் பார்த்து.

மஞ்சுளாவுக்கு இரக்கம் பிறந்தது. அவ்வாறு தலை குனிந்தபடி நின்றுக் கொண்டிருந்த ராஜசேகரனைப் பார்த்ததும் அவளுக்குள் அடக்கி வைத்துக் கொண்டிருந்த காதல் உணர்ச்சி பொங்கி எழும்பத் தொடங்கிற்று.

"ராஜ்..." என்றாள் இதயத்தில் ராஜசேகரன் பால் பொங்கி வழிந்த காதலோடு.

சந்தோஷமாய் நிமிர்ந்தான் அவன்.

மஞ்சுளா கோபம் இல்லாத பொழுதுதான் அவனை 'ராஜ்' என்று அழைப்பாள்... அப்படியானால்...

மஞ்சுளாவை மகிழ்ச்சியோடு நிமிர்ந்து பார்த்தவன் நிம்மதியாய் பெருமூச்சு விட்டான். சிரிப்பை அடக்கிக் கொண்டு, "இப்படி வாங்க," என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள் அங்கிருந்த வாஷ் பேசினை நோக்கி.

"எதுக்கு?..." கேட்டான் புரியாமல்.

"இதுக்குத்தான்..." என்று ராஜசேகரனின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு அதை வாஷ் பேசினில் தானே கழுவினாள்.

அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் நடுவிலேயே கை கழுவாமல் எழுந்து வந்திருந்தது.

ராஜசேகரனின் கையைக் கழுவிவிட்டு, ஈரமாயிருந்த அதே கையால் அவன் வாயையும் துடைத்தாள்.

"உன்னைப்பற்றி ஞாபகம் வந்ததுமே அவசரத்தில்..."

"நான் ஞாபகம் வந்தால் தலைகால் புரியாமல் நடந்துப்பீங்க... அதான் எனக்கும் சந்தோஷம்... ஆனால் ஞாபகந்தான் வரமாட்டேன் எப்படியும்... அதுக்குதான் கோபம்..." கோபம் வந்தவளைப்போல நடித்தாள் அவன் கையைத் தன் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே.

மஞ்சுளாவின் சூட்கேசையும் பையையும் கையிலெடுத்துக் கொண்டான் ராஜசேகர்.

"ராஜ்..." கூப்பிட்டாள். என்னவென்று திரும்பினான் அவன்.

"நான் இப்போது 'ஹெல்ப்... ஹெல்ப்' என்று கத்தப் போறேன்" என்றாள் வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டே.

புரியவில்லை ராஜசேகருக்கு "ஏன், எதுக்கு?"

"ஏன்னால் நான் மெட்ராசில் இருக்கிற பத்து நாளும் நீங்க என்னை விட்டுட்டு எங்கேயுமே போயிடக்கூடாது. அந்த மாதிரி வாக்குத் தரணும் இப்போதே... இல்லா விட்டால் கத்திடுவேன்... நாலுபேர் ஓடிவந்து நாலு உதை கொடுப்பாங்க உங்களுக்கு"

ராஜசேகரனும் குறும்பாய் சிரித்துவிட்டு, "ஓ.கே மேடம்... அப்படியே... கௌரவமான போட்டோகிராபர் நான்... ரகளை பண்ணிட்டாயானால் நாலு பேருக்குத் தெரிஞ்சுட்டால் நான் கெட்டவன்னு எண்ணி எந்த மாடலுமே என்னிடம் வரமாட்டாங்க-" என்றான் வினயமாய்.

"அப்படிச் சொல்லுங்க... எனக்காகத்தான் சரின்னு ஒப்புக்கிட்டீங்கன்னு நினைத்தேன். அப்படியானால் உங்க மானம் போயிடப் போகுதேன்னுதான் ஒப்புக்கிட்டீங்க, இல்லையா?"

"சரிசரி, முதல்ல காபி குடிக்கவா" என்று லக்கேஜுடன் நகர்ந்தான்- கேன்டீனை நோக்கி. அவனைப் பின் தொடர்ந்தாள் திருப்தியோடு அவள்.

ராஜசேகரன் கொடுத்திருந்த அறிக்கையைப் பற்றி நினைவுக்கு வரவே, அதைப்பற்றி விவரமாய் கேட்க நினைத்தாள். ஆனால் அப்புறமாய் சாவதானமாய் கேட்டுக் கொள்ளலாம் என்று பேசாமலிருந்து விட்டாள்.

ராஜசேகரன் காண்டீனுக்குள் அடியெடுத்து வைத் தான். ஏனோ அவனுக்கு திடீரென்று சித்தரஞ்சனைப் பற்றிய ஞாபகம் வந்துவிடவே உடம்பு சிலிர்த்தது. இப்பொழுதெல்லாம் அவனை ரகசியமாய் கண்காணித்துக் கொண்டே வருகிறான் சித்தரஞ்சன். அவன் தீய கண்களில் மஞ்சுளா பட்டுவிட்டால் என்னவாகுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. சமாளித்துக் கொண்டவன் தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு மஞ்சுளாவிற்கு

எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டி விட்டு, சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான் யதேச்சையாய்.

அதே கேன்டீனில் ஒரு மூலையில் பேப்பரைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் சித்தரஞ்சன்!

3

உலகம் வியாபார ரீதியில் சரவேகத்தில் முன்னேறிக் கொண்டேயிருக்கிறது. உற்பத்தியான பொருட்களுக்கு மார்கெட்டில் தீவிரமான போட்டி எதிர்ப்படும். ஆனாலும் அதற்கும் துணிந்துதான் மேலும் பல கம்பெனிகள் உற்பத்தித் துறையில் இறங்கிக் கொண்டிருக்கின்றன.

எந்த வியாபாரப் புள்ளியாயிருந்தாலும் ஒரு பொருளை உற்பத்தி பண்ண வேண்டுமென்று முயற்சி பண்ணுவதற்கு முன்னால் அதன் உற்பத்தியில் இருக்கும் கஷ்ட நஷ்டங்களைவிட அவற்றை எப்படி சாமர்த்தியமாய் மார்கெட் பண்ணிக் கொள்வது என்பதைப் பற்றிதான் யோசிப்பான்.

முதலில் மார்கெட்டை சர்வே பண்ணிக் கொள்வான். தான் உற்பத்தி பண்ணப் போகும் பொருட்கள் இதுவரை எந்தெந்த கம்பெனிகளில் தயாரிக்கப்படுகின்றன, எந்த ஊர்களில் அதிகமாய் விற்பனையாகிறது, எல்லாவற்றையும்விட அதிகமாய் எந்த கம்பெனியின் ப்ராடக்ட் விற்பனையாகிறது, அதற்குக் காரணங்கள் என்ன, அந்த ப்ராடக்டின் விலை என்ன, தற்சமயம் அந்த கம்பெனிகளுக்கிடையே உள்ள போட்டிகள் எப்படி இருந்து வருகிறது, அவர்களுக்குக் கிடைக்கும் லாபங்கள் எத்தனை சதவீதம்- என்பவைகளை நன்றாய் தெரிந்து கொள்வான்.

அப்படிப்பட்ட நிலைமையில் தன் ப்ராடக்டை மார்கெட்டில் எப்படி முன் கொணருவான்?

தரத்தை உயர்த்தியா?

விலையைக் குறைத்தா?

விளம்பரம் நன்றாய் பண்ணியா?

இவைகளைப் பற்றி நன்றாய் யோசிப்பான்.

மூன்றாவது கேள்விக்கு பதில்தான் 'பப்ளிசிடி'

ரேடியோவில் ஸ்பாட்ஸ், தின வார பத்திரிக்கைகளில் டிஸைன்ஸ், டீ.வியில் ஸ்பான்ஸர்ட் ப்ரோகிராம்ஸ், தெருக்களில் பரபரப்பான இடங்களில் வால்போஸ்டர்கள், வியாபார சினிமாக்கள் மூலம்,.....இப்படி பலவிதமாய் விளம்பரம் பண்ணிக் கொண்டிருக்கும் கம்பெனிகள்.

எல்லாவற்றையும் விட விலை மதிப்பானதும் அதிக விற்பனையை வரவழைக்கக்கூடியதுமான வழி விளம்பர பிலிம்பப்ளிசிடிதான்! இதற்கு பொருளை உற்பத்தி பண்ணும் கம்பெனி முதலில் ஒரு அட்வர்டைசிங் ஏஜென்சியைத் தொடர்பு கொள்ளும்...நாங்கள் குறிப்பிட்ட பொருளை உற்பத்தி பண்ணுகிறோம். அதற்கு நல்ல விளம்பர ஃபிலிம் ஒன்றை எடுத்துத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளும்.

என்ன ப்ராடக்ட் உற்பத்தி பண்ணுகிறீர்கள்?

எவ்வளவு மூலதனத்தோடு செய்கிறீர்கள்?

எந்தெந்த ஊர்களில் விற்க நினைக்கிறீர்கள்?

ஒரு விளம்பர ஃபிலிமுக்கு, எவ்வளவு வரையிலும் செலவு பண்ண உங்களால் முடியும்.....? என்று கேட்பார்கள் சாதாரணமாய். மேலும் சிலர் இன்னும் ஆழமாகக் கூட கேட்கலாம்!

அவர்கள் தந்த பதில்களை மனதில் வைத்துக் கொண்டு விளம்பர ஃபிலிமிற்கு பட்ஜெட் போடுவார்கள். அதில் ஏஜென்சி கமிஷன் கூட இருக்கும்.

அந்தப் பொருளுக்குள்ள குணங்களையும், வாங்குபவர்களுக்கு அது பண்ணும் நன்மைகளையும் மனதில் வைத்துக்

கொண்டு காப்பிரைட்டர் மூலமாய் ஸ்கிரிப்ட்டை எழுதச் செய்வார்கள். அந்த ஸ்கிரிப்ட்டில் பாத்திரங்களையும், அவர்கள் பேசவேண்டிய பேச்சுக்களையும், பின்னணி காட்சி காட்ட வேண்டிய சாதனங்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். ஸ்கிரிப்ட் முடிவடைந்ததும் ஆர்டிஸ்டைக் கூப்பிடுவார்கள். அவர் அந்த ஸ்கிரிப்டை எப்படி காட்சியாய் காட்டவேண்டும் என்ற விஷயத்தை படம் போட்டு ஒரு ஆல்பம் தயாரிப்பார். இவையெல்லாம் முடிவடைந்த பிறகு ஸ்கிரிப்டையும், மேலே குறிப்பிட்ட ஆர்டிஸ்ட் தயாரித்த விஷுவலைஸ்ட் ஸ்கிரிப்டையும் எடுத்துக் கொண்டு அட்வர்டைசிங் ஏஜென்சியைச் சேர்ந்த நிர்வாகி அந்தப் பொருளை உற்பத்தி பண்ணுகிற கம்பெனிக்குப் போய் காட்டுவார். அவர்களுக்குப் பிடித்தால் அட்வான்ஸ் கொடுத்து விட்டு ஷூட் பண்ணச்சொல்லு வார்கள்.

குறிப்பிட்டப் பொருளை, குறிப்பிட்ட விளம்பர போட்டோகிராப்பர் தான் நன்றாய் பண்ணுவார் என்று ஏஜென்சி தீர்மானித்தால், அவர்களை வரவழைத்து ஸ்கிரிப்டைத் தந்து, அட்வான்ஸ் தந்துவிட்டு, குறிப்பிட்ட கால கெடுவை வைப்பார்கள்—இரண்டு மாதங்களிலோ ஒரு மாதத்திற்குள்ளோ முடித்துவிட வேண்டும் என்று.

அதே சமயத்தில் விளம்பர போட்டோகிராப்பருக்கு ஆலோசனைகளைக் கூட வழங்குவார்கள். இந்த ஃபிலிமில் நடிக்கும் மாடல்கள் மிக அழகாய் இருக்க வேண்டும என்றும், விநியோகிப்பவர்களைக் கவரக்கூடியவர்களாய் இருக்கவேண்டும் என்றும், முடிந்தால் அதற்காகக் கொஞ்சம் செக்ஸிற்குக் கூட ஒப்புக் கொள்ளச் சொல்லியும் வற்புறுத்துவார்கள்.

காலத்திற்கேற்ப விளம்பர ஃபிலிமில் கூட மாறுதல்கள் வந்து சேர்ந்துவிட்டன. ஆண்கள் குடிக்கும் சிகரெட்டு களின் விளம்பர பிலிம்களில்கூட பருவப் பெண்களை மாடல்களாய் பயன்படுத்த தொடங்கிவிட்டார்கள்,

விளம்பர பிலிம் போட்டோகிராப்பர்கள் பொருள்களுக்குத் தகுந்தாற்போல மாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். பிறகு ப்ரொடக்ஷனுக்குத் தகுந்தாற் போல லொகேஷனைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அதற்குத் தகுந்தாற் போல ஷூட்டிங் சமயத்தில் தேவைப் படும் சாமான்களை (செட் ப்ராபர்டீஸ்) தேர்ந்தெடுத்துக் கொண்டு, மாடல்களை அழகாகவும், அல்லது அரைகுறை ஆடைகளுடன் செக்ஸியாகவும் உடைகளைத் தைத்துக் கொண்டு வரும்படி காஸ்ட்யூமர்களை வேண்டிக் கொள் வார்கள்.

காஸ்ட்யூமர் எனப்படும் உடையலங்கார நிபுணர் அந்தந்த மாடல்களை அணுகி, அவர்கள் அளவை எடுத்துக் கொண்டு, அவர்களின் உடற்கட்டுக்கும், மேனி நிறத்திற்கும் தகுந்தாற் போல விதம் விதமான நிறங்களில் துணிகளை வாங்கித் தைத்து ஷூட்டிங்கிற்கு முன்பே கொண்டு வந்து தந்துவிடுவார்கள். அப்பொழுது வெவ்வேறு லொகேஷன் களைச் சேர்ந்த அதிகாரிகளிடமிருந்தும் ஷூட்டிங்கிற்குப் பர்மிஷனை வாங்கிக் கொண்டு ஷூட்டிங்கைத் தொடங்கு வார்கள். விளம்பர பிலிம் ஷூட்டிங் சினிமா ஷூட்டிங்கைப் போலவே இருக்கும். மாடல்களுக்குக் கொடுக்க வேண்டிய கூலி, கேமிராக்களுக்குக் கூலி (சொந்த கேமிரா இல்லா விட்டால்), உடையலங்காரச்செலவு, போக்குவரத்துச் செலவு, தங்கும் செலவுகள், ரீரிகார்டிங், எடிட்டிங், ஸ்பெஷல் சௌண்ட் எஃபெக்ட், மிக்ஸிங், இது போன்ற காரியங்களுக்கு ஆகும் செலவுகள், இவற்றோடு தன் செலவையும் சேர்த்து பில் போடுவார் விளம்பர போட்டோ கிராபர்.

எவ்வளவு தியேட்டர்களில் ரிலீஸ் பண்ணவேண்டும் என்பதைப் பொருட்களின் திருப்தியைப் பொறுத்து கம்பெனி தீர்மானித்ததுமே, போட்டோகிராபர் தந்த நெகடிவ்விலிருந்து வேண்டிய அளவிற்கு பாஸிடிவ் ஃபிலிம் காபிகளை எடுத்துக் கொள்வார்கள் ஏஜென்சிக்காரர்கள்.

அதற்குப் பிறகு அவற்றை சினிமா தியேட்டர்களுக்கு அனுப்பிவைப்பார்கள். தியேட்டர்காரர்கள் சினிமா தொடங்குவதற்கு முன்னால் அவற்றைப் போடுவார்கள்.

அந்த ஃபிலிம் நன்றாயிருந்தால் வாங்குபவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அந்தப் பொருளை வாங்கத் தொடங்கிவிடுவார்கள். அதாவது அந்த விளம்பர ஃபிலிம் வாங்குபவர்களை ஏமாற்றிவிட வேண்டும். தம் பொருள் தரமானது என்றும், அதற்கு இணை வேறொன்று இல்லை என்றும் நம்ப வைக்க முயற்சிக்கும்.

இந்த நவீன உலகத்தில் எந்தப் பொருள் விற்பனையாக வேண்டுமானாலும் முதலில் விளம்பரம் வேண்டும். இக் காலத்தில் எவ்வளவு தரமான உயர்ந்த சாமானாயிருந் தாலும் சரி, விளம்பரம் இல்லாவிடில் கொஞ்சமும் பயனில்லை. குறிப்பிட்ட கம்பெனி குறிப்பிட்ட பொருளை தயாரிக்கிறது என்பதைச் சொல்ல வேண்டுமானாலும்... அந்தப் பொருளால் ஏற்படும் நன்மை இது என்று எடுத்துச் சொல்ல வேண்டுமானாலும், அந்தப் பொருள் நல்ல பொருள் என்று எடுத்துச் சொல்ல வேண்டுமானாலும், குறைந்த விலை, நாணயம் மிக்கது என்பதைச் சொல்லவும் இந்த பப்ளிசிடிதான் முக்கியமாய் வேண்டியது. அதனால் இந்த பப்ளிசிடி என்பது அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது. இந்த பப்ளிசிடி கம்பெனி பொருள்களின் விற்பனைக்கு முதுகெலும்பைப் போன்றது! சில சமயம் பொருட்களை உற்பத்தி பண்ணும் கம்பெனியோடு விளம்பர போட்டோகிராபர்கள் நேரிடையாய் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, விளம்பர பிலிம்களைத் தயாரிப் பார்கள். இப்படிப்பட்டவர்கள் மிக அரிது. இதனால் இருவருக்குமிடையே உள்ள விளம்பர ஏஜென்சியை எடுத்துக் கொள்கிற நடுத்தர ஆளின் கமிஷன் மிஞ்சும்.

ராஜசேகர் அப்படிப்பட்ட தொடர்பை கோரமண்டல் இண்டஸ்ட்ரீஸோடு வைத்துக் கொண்டிருந்தான். அது தான் அவனை ஆபத்தில் கொண்டு வந்து வைத்து விட்டது.

4

ராஜசேகர் சொந்த ஃபிளாட்டில் குடியிருந்தான். மிகப் பெரிய ஃபிளாட். மூன்று பெட் ரூம்களும் இரண்டு பெரிய ஹாலும் இருந்தன. ஒரு ஹாலை டிராயிங் ரூமாகவும், இன்னொன்றை ப்ரொஜெக்டிங் கம் எடிட்டிங் ரூமாகவும் மாற்றிக் கொண்டிருந்தான்.

மூன்று பெட் ரூம்களில் ஒன்றைத் தனக்கும், இன்னொன்றைத் தங்கைக்கும் வைத்துக் கொண்டு மூன்றாவதை 'கெஸ்ட்' ரூமாய் வைத்துக் கொண்டிருந்தான்.

மஞ்சுளா எப்பொழுது சென்னைக்கு வந்தாலும் கெஸ்ட் ரூமில் தான் தங்குவாள். ராஜசேகர் தனியாய் இருக்கும் போது ஏதாவது ஓட்டலில் சாப்பிடுவான். வேலைத் தொந்தரவு அதிகமாய் இருந்து விட்டால் அதைக் கூட சரியாய் சாப்பிடமாட்டான்.

தங்கையோ, மஞ்சுளாவோ வந்துவிட்டால் ருசியாய் சமைத்து, கிட்டேயிருந்து பரிமாறுவார்கள்.

வீட்டைச் சுற்றிலும் பச்சைப் பசேலென்ற புல்வெளி.

நடு நடுவே விதம் விதமான ரோஜாச் செடிகள் கலகலவென்று தலையசைத்துக் கொண்டிருந்தன.

ஏதாவது புதிய பிரச்னை ஏற்பட்டு விட்டால் அன்றிரவெல்லாம் புல் தரையில் உட்கார்ந்துக் கொண்டே யோசித்துக் குழம்பிக் கொண்டிருப்பான் ராஜசேகர்.

உண்மையில் எந்த போட்டோகிராபரும் அவ்வளவு தூரம் சிரமப்பட மாட்டார்கள். கடமைப் பிரகாரம் வேலையைப் பண்ணிக் கொண்டு போய் விடுவார்கள். ஆனால் ராஜசேகர் அளவுக்கு மீறி சிரமத்தை எடுத்துக் கொள்வான். புதுமைக்காக சிந்தனையைக் குழப்பிக் கொள்வான். பாடுபடாமல் எதேச்சையாய் வரும் வெற்றி

அவனுக்குப் பிடிக்காது. 'There are no short cuts to success' — என்ற கொள்கையை நம்பினான் அவன்.

காலை மணி ஒன்பது.

ராஜசேகர் குளித்து முடித்துவிட்டு, உடை மாற்றிக் கொண்டு வருவதற்குள் டைனிங் டேபிளில் காலைச் சிற்றுண்டியைத் தயாராய் வைத்திருந்தாள் மஞ்சுளா.

முதல் நாள் ஸ்டேஷனிலிருந்து வந்ததுமே படுக்கப் போய் விட்டாள். காலை வரையிலும் எழுந்திருக்கவே யில்லை.

விழிப்பு வந்ததுமே நேற்றிரவு தன்னோடு சேர்ந்து ராஜசேகரும் கூட சாப்பிடவில்லை ஏன்றும், ஸ்கிரிப்டைப் பார்த்துக் கொண்டேயிருந்தவன் அப்படியே தூங்கி விட்டான் என்றும் தெரிந்து வருந்தப்பட்டாள்.

அப்பொழுதே எழுந்து குளித்துவிட்டு வந்து சிற்றுண்டி பண்ணினாள். ஷூட்டிங் இருப்பதாய் சொல்லி பறந்து கொண்டிருந்தான் ராஜசேகர்.

டைனிங் ஹாலிலிருந்து மஞ்சுளா வெளியே வந்த போது ராஜசேகர் தன் பெட்ரூமில் ப்ரீப்கேசில் ஏதோ அடுக்கிக் கொண்டிருந்தான்.

''ராஜ்'' கூப்பிட்ட மஞ்சுளா கிட்டே வந்து நின்று விட்டாள்.

''நன்றாய் தூங்கினாயா? நேற்றெல்லாம் ரெஸ்ட் இல்லையென்று தான் எழுப்பவில்லை'' என்றான் மஞ்சுளா வைப் பார்த்து. தலைக்குக் குளித்திருந்ததால் கேசங்கள் காற்றில் பறந்து கொண்டிருந்தன. கழுவிய முத்தாய் இருந்தாள் அவள்.

ஒரு வினாடி கண்கொட்டாமல் மஞ்சுளாவையே பார்த்தான். அகலமான கண்கள், உருண்டையான மூக்கு, அந்த மூக்கில் ஒரு மூக்குத்தி. லேசான உதடுகள், சிரித்தால்

குழி விழும் கன்னங்கள், அகன்ற முகம்— ஏதோ புரியாத கவர்ச்சி அவளிடம் தென்பட்டது.

அவ்வப்பொழுது 'கருப்புப் பொண்ணு' என்று அவளை அழவைப்பான் ராஜசேகர்.

அந்த கேலிக்கு மஞ்சுளா கோபப்படமாட்டாள் அழகாய் சிரித்துவிட்டுப் பேசாமலிருந்து விடுவாள்.

ராஜசேகர் நிறத்திற்கு முக்கியத்துவம் தரமாட்டான் என்பதை தம் காதல் தொடங்கிய புதிதிலேயே உணர்ந்து விட்டாள் அவள்.

சிவப்பாய் உயரமாய் மிக அழகாய் இருந்த ராஜ சேகருடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு ராஜசேகருக்குத் தான் பொருத்தமில்லையோ என்றெல்லாம் ஊகித்துக் குழம்பும் மனத்தத்துவம் இல்லை அவளுடையது. புற அழகைக் காட்டிலும் அக அழகையே மதிக்கும் மஞ்சுளா— அந்த அக அழகை மதிப்பவர்களைத்தான் கௌரவிப்பாள்.

ராஜசேகர் தன்னையே தீர்க்கமாய் பார்த்ததை உணர்ந்து வெட்கமடைந்தாள்.

''எதை அப்படிப் புதுசாய் பார்க்கிறீங்க?'' கேட்டாள்- நிமிர்ந்து அவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி.

''ஒன்றுமில்லை. கருப்பில் கூட இவ்வளவு அழகு உண்டான்னு!'' அதே விதத்தில் வேறு யாராவது நடந்து கொண்டிருந்தால் மஞ்சுளா நடந்துக் கொள்வதே வேறு விதமாய் இருந்திருக்கும். ஆனால் அது ராஜசேகராய் இருந்ததால் அவள் மனம் முழுவதும் ஒரு வித விவரிக்க முடியாத ஆனந்தத்தில் திளைத்தது. பெண்ணின் அழகை உண்மையாய் புகழும் ஆண் அரிது என்பது மஞ்சுளாவின் எண்ணம்.

விளம்பர உலகத்தில் மிக அழகிகள் பலர் இருப் பார்கள். ஆனாலும் அவள் மீது மட்டுமே மனதைச்

செலுத்திய ராஜசேகரனை மஞ்சுளா மிகவும் நேசித்தாள். அந்த மாடலிங் அழகிகளின் பால் ராஜசேகரனின் மனம் தடுமாறுமோ என்றெல்லாம் பெண்களுக்கே உரிய பொறாமையுணர்ச்சி மஞ்சுளாவுக்கு அவ்வப்பொழுது ஏற்படும். ஆனால் அதற்குள் அந்த மாதிரி யோசனை வந்ததற்கு நாணமடைவாள். ஆனாலும் என்றாவது ராஜசேகரை இந்த மின்னும் உலகத்தை விட்டு தொலை தூரத்திற்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணம் அவள் மனத்தின் அடித்தளத்தில் மகா விருட்ச மாய் கிளை விட்டுப் பரவிக் கொண்டேயிருந்தது.

"டிபன் சாப்பிடுங்க சீக்கிரமாய். ராத்திரி கூட சாப் பிடலை அசமந்தமாய் தூங்கிட்டேன் நான். சீ...சீ...புத்தியே யில்லை எனக்கு. நான் இருந்தும் உங்களைப் பட்டினி போட வைச்சுட்டேன். சாரீ ராஜ்" என்றாள் வருத்தத் தோடு டைனிங் டேபிளை நோக்கி நடந்துக் கொண்டே.

ராஜசேகர் அவசரமாய் சிற்றுண்டியை முடித்துக் கொண்டான்.

"இன்றைக்கு ஷுட்டிங் இருக்கா ராஜ்?"

"ஆமாம். சர்வோதயா ஓட்டலுக்கு முன்னால் இருக்கிற ஏரியில். நீயுந்தான் வாயேன், பொழுது போக் காய் இருக்கும்."

மஞ்சுளாவின் மனதில் வெகு நாட்களாய் ஆசை— ராஜசேகர் ஷுட்டிங் பண்ணிக் கொண்டிருக்கும்போது பார்க்கவேண்டும் என்று. இவ்வளவு நாளாய் அவகாசம் கிட்டவில்லை. இன்றைக்குக் கண்டிப்பாய் பார்க்கவேண்டும் என்று தோன்றி விட்டது மனதில்.

ராஜசேகர் கைகளைக் கழுவிக் கொண்டு, துடைத்துக் கொள்வதற்கு துவாலைக்காகச் சுற்றுமுற்றும் பார்த்தான். அது தென்படாததால் மஞ்சுளாவின் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டான்.

"இதென்ன வேலை? இது புடவையா அல்லது டவலா?" என்றாள் பொய்க் கோபத்துடன்.

ராஜசேகர் மஞ்சுளாவைப் பார்த்து அழகாய் சிரித்து விட்டு, எழுந்து போய் ப்ரீப்கேசைக் கையிலெடுத்துக் கொண்டான். அவ்வப்போது ராஜசேகரின் காரியங்கள் சிறு பிள்ளைத் தனமான சேஷ்டையுடன் இருந்தாலும் அது மஞ்சுளாவின் இதயத்தில் இன்ப உணர்ச்சிகளை நிரப்பிக் கொண்டிருந்தன.

வீட்டைப் பூட்டிவிட்டு இருவரும் காரில் ஏறிக் கொண் டார்கள்.

கார் சர்வோதயா ஓட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. காரைப் பார்த்துவிட்டு அசோசியேட் கிரீஷும், அசிஸ்டென்ட் மதுசூதனனும் ஓடி வந்தார்கள்.

அதுவரை வம்பில் ஆழ்ந்திருந்த யூனிட்டில் இருந்த வர்கள் எல்லோரும் ராஜசேகர் வந்துவிட்டது தெரிந்ததுமே உஷார் ஆகிவிட்டார்கள்.

காரை விட்டிறங்கி, ஓட்டலுக்கு முன்னாலிருந்த ஏரியைத் திரும்பிப் பார்த்தான் ராஜசேகரன்.

ஷூட்டிங்கிற்காகப் பட்ட தடபுடலைப் பார்த்துவிட்டு, அதற்குள் ஜனங்கள் நிறைய பேர் ஏரிக்கருகில் வந்து கூடி விட்டார்கள். ராஜசேகரனின் கையிலிருந்து ப்ரீப்கேசை மதுசூதனன் வாங்கிக் கொண்டான். மஞ்சுளா காரை விட்டு இறங்கியதுமே, லொகேஷனை நோக்கி நடந்தான் ராஜசேகர்.

அதுவரை குடைக்குக் கீழே நாற்காலியில் உட்கார்ந் திருந்த பெண் மாடல்கள் கீதாவும், ரூபவதியும் எழுந்து நின்று உடம்பைச் சுற்றிலும் சால்வையைப் போர்த்திக் கொண்டு ராஜசேகருக்கு முன்னால் வந்து வணங்கினார்கள்.

அவ்விருவரும் அப்பொழுது பிகினி டிரஸ்ஸில் இருந்தார்கள்.

சோப்புக்கள், பௌடர்கள், சாஃப்ட் டிரிங்க்ஸ் இவற்றிற்கு விளம்பர பிலிம் எடுக்கும்போது மாடல்கள் அரை நிர்வாணமாகவோ அல்லது முக்கால் நிர்வாண மாகவோ இருப்பார்கள்.

ஷூட்டிங்கிற்கு முன்போ, இரு ஷாட்டிற்கு இடையே கிடைக்கும் ஓய்வு நேரத்திலோ, லொகேஷனில் உடம்பைக் காட்டிக்கொண்டிருக்கும் ஷூட்டிங் காஸ்ட்யூமோடு இருப்பது ராஜசேகருக்குப் பிடிக்காது. ஷாட் தொடங்கும் வரையிலும் உடம்பைச் சுற்றிலும் சால்வையைப் போர்த்தி கொள்ளவேண்டும் என்பது ராஜசேகரின் நிபந்தனை. யூனிட்டைச் சேர்ந்தவர்கள் கூட அவரவர்கள் வேலையில் அவரவர்கள் ஆழ்ந்திருக்க வேண்டும். அனாவசியமாக வம்பளந்து கொண்டு கழிப்பது ராஜசேகருக்குப் பிடிக் காது. இத்தனை கடினமான நிபந்தனைகள் ராஜசேகரின் யூனிட்டில் இருந்த போதிலும், யாருக்குமே அது கஷ்டமாய் தோன்றாது. காரணம் வேறு போட்டோகிராபர்களைக் காட்டிலும் அதிகமாய் ஊதியம் தருவான். தன் யூனிட்டில் இருக்கும் மெம்பர்களுக்கு ஏதாவது கஷ்டம் வந்தாலும் ஆதரிப்பான். அத்துடன் நல்ல போட்டோகிராபர் என்று பெயரெடுத்த ராஜசேகரிடம் வேலை பண்ணுவதை மதிப்பாய் எண்ணினார்கள்.

மதுசூதனன் ப்ரீப்கேசைத் திறந்து, ஸ்கிரிப்ட்டை ராஜ சேகரிடம் தந்து விட்டு, ஏரியை நோக்கிப் போகத் திரும்பியவன் ஒரு வினாடி நின்றான். அவன் ஏதோ சொல்லத் தயங்கியதைப் புரிந்து கொண்டான் ராஜசேகர்.

"ஏதாவது சொல்லணுமா.....?"

"ஆமாம் சார், முந்தா நாள் ஓட்டல் ஓபேராவின் நீச்சல் குளத்தில் எடுத்த க்ளியர்டோன் சோப் ஃபிலிமில் சுவர்ணாவின் ஷாட்ஸ் சிலது நன்றாய் வரலை. இன்று காலையில்தான் அந்த ஃபிலிமின் ரஷ்ஷைப் போட்டுப் பார்த்தேன்."

ராஜசேகர் ஆச்சரியமடைந்தான். அவன் எடுக்கும் ஃபிலிம்களில் ஒன்றாவது நன்றாய் வராமல் போகுமா என்ற பேச்சிற்கே இடமில்லை.

"சரி, சரி, சுவர்ணாவோடு பேசி, அவளிடமிருந்து டைம் வாங்கிக்குங்க. நாளைக்கு எடுத்துடலாம். திரும்பவும் அந்த ஓட்டலில் முடியாது. இங்கேயே இதே லொகேஷனில் எடுத்துடலாம்."

"டைம் வாங்கிக்கிட்டேன் சார். நாளைக்கு ரெண்டு மணிக்கெல்லாம் லொகேஷனுக்கு வரேன்னாள்."

"வெரிகுட்!" என்று மதுவைப் புகழ்ச்சியோடு பார்த்தான் ராஜசேகர்.

மதுசூதனன் சுவர்ணாவுடன் போனில் பேசி டைம் வாங்கிக் கொண்டதை சித்திரஞ்சன் தெரிந்து கொண்டான் என்றோ, உடனே அவள் சாவுக்குத் திட்டம் தீட்டியிருந்தான் என்றோ யாருக்குமே தெரியாது. மதுசூதனன் போய்விட்டான். ராஜசேகருக்கும் மஞ்சுளாவுக்கும் நாற்காலிகளைக் கொண்டு வந்து போட்டான் அசிஸ்டென்ட் கிரீஷ். கிரீஷ் மாடல்களுக்கு அன்றைக்குப் பண்ண வேண்டிய சீனைக் குறித்துச் சொல்லி அதற்குள் ஒத்திகை பண்ணி வைத்திருந்தான். சிறிய தடாகத்தில் மூன்று படகுகள் கரையில் நின்று கொண்டிருந்தன. அதில் ஒரு படகு மிக அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது படகில் கேமிரா பொறுத்தப்பட்டிருந்தது, மூன்றாவது படகில் பெரிய பெரிய ஸ்டாண்டுகளுடன் சேர்த்து ரிஃப்ளெக்டர்கள் பொறுத்தப்பட்டிருந்தன.

மூன்று படகுகளுக்கும் முன்னால் அவற்றைத் தண்ணீரில் இழுப்பதற்காக மோட்டார் படகுகள் சித்தமாய் நின்று கொண்டிருந்தன. தண்ணீரில் படகுகளை ஷூட்டிங் பண்ணவேண்டுமானால் ஷூட்டிங் படகுகளில் இருக்கும் இஞ்ஜின்களைப் போட மாட்டார்கள். அதனால் ஷூட்டிங் படகுகள் அதிர்வுக்கு ஆளாவதால் கேமிராவில்

ஷேக்கிங் ஆகிவிடும் என்று,வேறு மோட்டார் படகுகளோடு ஷூட்டிங் படகுகளைக் கட்டி மெதுவாய் இழுக்கச் செய்வார்கள். கேமிராவில் மோட்டார் படகுகள் வராமல் பார்த்துக் கொள்வார்கள். ஸ்கிரிப்ட்டை ஒருமுறை பார்த்துவிட்டு, பக்கத்தில் நின்று கொண்டிருந்த கிரீஷைக் கேட்டான் ராஜசேகர் "ஏற்பாடெல்லாம் ஓ.கே.யா?"

"ஓ.கே சார்"

கிரீஷிடமிருந்து வ்யூ ஃபைண்டரை வாங்கிக் கொண்டு படகுகளை நோக்கி நடந்தான் ராஜசேகர்.

பெண் மாடல்கள் கீதாவும் ரூபவதியும், ஆண் மாடல்கள் அனில், ஜாக்கி, யூனிட் மெம்பர்கள் அத்தனைப் பேரும் படகுகளிடம் வந்தார்கள்.

கிரீஷ் பெரிதாய் கத்தினான். "ரெடி ஃபர் ஃபைனல் ரிஹர்சல்" என்று.

ராஜசேகரும் கிரீஷும் கேமிரா போட்டிற்குள் ஏறிக் கொண்டார்கள். நான்கு மாடல்களும், மதுசூதனனும் ஷூட்டிங் படகில் ஏறிக் கொண்டார்கள். எல்லா வேலைகளும் மளமளவென்று நடந்தேறின.

ராஜசேகர் ஜாடை காட்டியதைப் புரிந்துக் கொண்ட கிரீஷ் 'போட் பொஸிஷன்' என்று ஷூட்டிங் போட்டிற்கு முன்னாலிருந்த மோட்டார் படகு டிரைவரைப் பார்த்துக் கத்தினான்.

மோட்டார் படகு நகர்ந்தது. அத்துடன் மாடல்கள் உட்கார்ந்திருந்த படகும் நகர்ந்தது. நூறடி தூரம் தண்ணீரில் பயணம் பண்ணி ஓரிடத்தில் நின்றுவிட்டது. ராஜசேகர் வ்யூ ஃபைண்டர் வழியாய் அந்தப் படகைப் பார்த்தான். ஒவ்வொரு தடவையும் எடுக்கப்போகும் ஷாட்டிற்கு சம்பந்தப்பட்ட ஃப்ரேம் கேமிரா வழியாய் பார்ப்பது சிரமம்-ஆதலால் சிங்கிள்லென்ஸ் பைனாகுலரைப் போல இருக்கும் வ்யூஃபைண்டர் வழியாய் பார்ப்பார் கேமிராமேன். அதே போல ஃபிலிம் ஷூட்டிங்காய் இருந்

தால் டைரக்டர் பயன்படுத்துவார் அதை, ஃபிரேம் திருப்தியாய் தென்பட்டதால் கேமிராவுக்கு முன்னால் வந்தான் ராஜசேகர்.

''ஓ. கே...ரிஹர்சல் ஸ்டார்ட்'' என்றான்.

கிரீஷ் கையை உயர்த்திக் காற்றில் அசைத்தான். அதைப் புரிந்துக் கொண்ட மாடல்கள் ஷூட் பண்ணப் போகும் காட்சியை நடித்துக் காட்டினார்கள்.

''மாண்டேஜ் சொல்லு கிரீஷ்'' என்றான் ராஜசேகர் கேமிராவில் பார்த்துக் கொண்டே.

''சைலென்ஸ் ப்ளீஸ்... மாண்டேஜ் ஷாட்'' கத்திச் சொன்னான் கிரீஷ்,

மஞ்சுளா நாற்காலியை விட்டு எழுந்திருந்து ஏரிக் கரைக்கு வந்து நின்றாள். ராஜசேகரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் இந்த உலகத்திலேயே இல்லை. அப்படிப்பட்ட நிலைமையில் ஏதாவது அவசர காரியமாய் ராஜசேகரின் கவனத்தைத் திருப்பவேண்டியிருத்தாலும் கூட பயப்படுவார்கள் யூனிட்டில் இருந்தவர்கள். அந்தச் சமயத்தில் கூட ராஜசேகரோடு பேசக்கூடிய ஒரே ஆள் கிரிஷ் மட்டுமே. அவ்வளவு நேரமாய் உடம்பில் போர்த்திக் கொண்டிருந்த சால்வைகளை எடுத்து விட்டார்கள் மாடல் கள். மஞ்சுளா தன்னையறியாமலேயே ஏரிக்கு இடது பக்கமாயிருந்த அடர்ந்த புதரைப் பார்த்தவள் திடுக் கிட்டாள்.

அங்கே ஒரு ஆள் ஒரு புதருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு ஜூம்லென்ஸ் கேமிரா மூலமாய் மாடல்களையும் ராஜசேகரையும் போட்டோக்கள் எடுத்துக் கொண்டிருந் தாற் போலிருந்தது. மஞ்சுளாவின் சந்தேகம் வலுத்தது. யார் அந்த ஆள்?

திருட்டுத்தனமாய் ஒளிந்துகொண்டு ஏன் போட்டோ எடுக்கிறான்? அவள் ஆறாவது அறிவு அவன் ஆபத்தான ஒரு ஆள் என்று எச்சரித்தது.

அந்த விஷயத்தை ராஜசேகரிடம் சொல்லிவிட நினைத்தாள். ஆனால் அந்த சமயத்தில் ராஜசேகர் முற்றிலும் கடமையில் மூழ்கிப் போயிருந்தான்

மஞ்சுளா அந்தப் புதரைப் பார்த்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் ராஜசேகர் தன்னைப் பார்த்தது மஞ்சுளா வுக்குத் தெரியவில்லை.

ரூபாவதி அனிலையும், கீதா ஜாக்கியையும் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். அவ்விருவரும் இரண்டு ஜோடிகளாய் பிரிந்தார்கள். நால்வர் கைகளிலும் 'ஜாய் ஜாய்' கூல்டிரிங்க் பாட்டில்கள் இருந்தன.

அப்பொழுது ரூபாவதி கீதா இருவர் மேனியிலும் பிகினி டிரஸ் மட்டுமே இருந்தது. அனி, ஜாக்கி இருவருக்கும் அண்டர்வேர்ஸ் இருந்தன. அதற்கு முன்னால் மேக்கப் மேன் அவர்கள் உடம்பில் பூசிவிட்டிருந்த ஆலிவ் ஆயிலால் சூரிய வெளிச்சத்தில் பளபளத்துக் கொண்டிருந்தன அவ்வுடம்புகள். உடம்பில் நூலிழை தவிர வேறெந்த ஆடையுமே இல்லாமல் நிர்வாணமாய் தென்பட்ட அவர் களைப் பார்க்க சங்கடப்பட்டாள் மஞ்சுளா.

மாடல்கள் நடித்துக் கொண்டிருந்தார்கள். ரூபாவதி கீதா இருவரும் தரித்திருந்த சாட்டீன் நீலநிற ப்ராவுக்குள் ளிருந்து மார்பகங்கள் வெளியே எட்டிப்பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தன. அனில் ஜாக்கி இருவரும் லேசான இடை, உள்ளடங்கிய அடிவயிறு, முக்கோணமான அண்டர்வேர் களுடன் இருந்தார்கள். மாண்டேஜ் ஷாட் முடிந்து விட்டது. ஷூட்டிங் போட்டில் அதுவரை தரையோடு படுத்துக் கொண்டிருந்த மதுசூதனன் எழுந்திருந்தான்.

தன் கையிலிருந்த லைட் இண்டிகேட்டரை மாடல் களின் முகத்திற்கு முன்னால் வைத்து விட்டு ஒளி அடர்த்தியைப் பரிசோதித்தான்.

"மது...லைட்டிங் ஓ.கே?" ராஜசேகர் பெரிதாய் கத்திக் கேட்டான்.

"ஓ.கே, சார்" என்று படகிற்குள் குனிந்து கிளாப் போர்டை எடுத்து மாடல்களின் முகங்களுக்குக் குறுக்கே வைத்துவிட்டு, ரெடியாய் இருந்தான் கிரீஷ் தரப்போகும் உத்தரவுக்காக.

ராஜசேகர் கேமிராவை இன்னொரு முறை சரி பார்த்து விட்டு, கிரீஷுக்கு ஜாடை பண்ணினான்.

கிரீஷ் சுற்றுமுற்றும் பார்த்தான்.

இரு கைகளையும் மேலே தூக்கி, "ஸைலென்ஸ் ப்ளீஸ், மது கிளாப்," என்றான். மோட்டார் போட்ஸ் பேரிரைச்சல் போட்டுக் கொண்டு ஸ்டார்ட் ஆயின.

அதற்கு முன்பே எந்த போட், எப்பொழுது, எந்த பக்கமாய் எவ்வளவு வேகத்தில் வரவேண்டும் என்று போட் டிரைவர்களுக்கு அறிவிப்பு தரப்பட்டிருந்தது.

எங்கும் நிசப்தம். கிர்...ர்...என்ற மோட்டார் போட்டின் சப்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது.

ஏரியைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்கள் கண் கொட்டவும் மறந்துபோய் ரூபவதி, கீதாவை விழுங்கி விடுவதுபோல பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சீன் நம்பர் ஒன்"

"ஷாட் ஒன்"

"டேக் ஒன்"

என்று பெரிதாய் கத்திக் கொண்டே கிளாப் அடித்தான் மது. அந்த கிளாப் போர்டின் மேல் ராஜசேகர் கேமிராவைத் திறந்தான்.

கேமிரா கொஞ்சமாய் ஓடத்தொடங்கியதுமே போட்டில் குப்புறப்படுத்துக் கொண்டு விட்டான் மது— தான் கேமிராவுக்குள் விழாமலிருக்க.

ராஜசேகரின் கையில் கேமிரா சுழன்று கொண்டிருந்தது மாடல்கள் லேசாய் டிஸ்கோ டான்ஸ் ஆடிக்கொண்டே

கூல்டிரிங்க்ஸ் பாட்டில்களைக் கையிலெடுத்துக் கொண்டு வாய்க்கருகில் வைத்துக் கொண்டார்கள் ஒய்யாரமாய்.

ஒரு 'சிப்' பண்ணிவிட்டு பாட்டில்களை மாற்றிக் கொண்டார்கள்.

"கட்" என்றான் கிரீஷ்.

ராஜசேகர் கேமிராவை நிறுத்தினான். "ஷாட் ஓ.கே. நெக்ஸ்ட்" என்றான்.

பிற்பகல் இரண்டு மணிக்கு அந்த விளம்பர பிலிமுக்கு வேண்டிய லாங் ஷாட்டுகளையும், மிட் ஷாட்டுகளையும் எடுத்துக் கொண்டார்கள். பிறகு எஞ்சியிருந்தது க்ளோஸ் ஷாட் மட்டுமே

யூனிட் முழுவதற்கும் லொகேஷனிலேயே லஞ்ச்சிற்கு ஏற்பாடு பண்ணினார்கள். எல்லோரும் பசியோடிருந்த தால் பரபரக்க சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ராஜசேகர் கிரீஷுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். மஞ்சுளாவுக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை. தன் பசி விஷயத்தையே மறந்து போய் ராஜசேகரின் பசியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அதற்குள் ரூபவதி மஞ்சுளாவிடம் வந்தாள.

"மேடம், நீங்க லஞ்ச் எடுத்துக்கலையா?"

மஞ்சுளா ரூபவதியைப் பார்த்தாள். இருபது வயதிற்கு மேல் இராது. பூஞ்சையாயிருந்தது அவள் உடல்.

புருவங்களை பிறைச் சந்திரனைப் போல நான்காய் கத்திரித்துக் கொண்டிருந்தாள். கண் இமைகளின் மேல் ஆஷ் கலர். மேக்கப் ஷேட். உதடுகளுக்கு பிங்க் கலர் லிப்ஸ்டிக். முகம் முழுவதும் லேசாய் மேக்கப்.

தம் அழகையும், உடற்கட்டையும் காப்பாற்றிக் கொள் வதற்காக நாள்தோறும் எத்தனை மணி நேரங்களை செலவழிக்கிறார்களோ? எவ்வளவு பணம் செலவழிக் கிறார்களோ? எவ்வளவு பாடுபட வேண்டியிருக்குமோ?

சிரித்துக் கொண்டே பார்த்த ரூபவதியைப் பற்றி பல விதமான யோசனைகள் எழும்பின அவள் உள்ளத்தில். முதல் முதலாய் ராஜசேகரின் தொழில் மீது கொஞ்சமாய் வெறுப்பு ஏற்பட்டது மஞ்சுளாவுக்கு.

★ ★ ★

ராஜசேகரின் கார் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

காரில் டிரைவிங் சீட்டில் ராஜசேகர். பக்கத்தில் மஞ்சுளா, பின்னால் கிரீஷ், மது உட்கார்ந்திருந்தார்கள்.

"கிரீஷ், நாளைக்காலையில் எட்டு மணிக்கெல்லாம் ஷூட்டிங்குக்கு ஏற்பாடு பண்ணு. க்ளோஸ் ஷாட்டில் ரியாக்ஷன் எடுப்போம்- பை தி பை. நாளைக்கு எல்லோருக்கும் முழுச்சம்பளம் தரதுக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லி நம்ப காஷியரிடம் சொல்லிடு. இன்றைக்கு எடுத்த ஃபிலிம் ரோலை லேபிற்கு அனுப்பி வைச்சுட்டு, சீக்கிரமாய் டெவலப் பண்ணி ரஷ் ஃபிலிம் கிடைக்கும்படி பார்த்துக்கோ" காரை ஓட்டிக்கொண்டே சொன்னான் ராஜசேகர்.

அந்தச் சமயத்தில் ராஜசேகரின் மனதில் ஒரு ரகசியத்தை சோதித்துவிட வேண்டும் என்ற யோசனை இருந்ததையோ, அன்றிரவே ரூபவதியைச் சந்தித்து தன் ப்ராஜக்ட்டை ஃபைனல் க்ளியரன்ஸ் பண்ணிக் கொள்ளப் போவதாய் இருந்த உத்தேசத்தையோ, அந்த காரில் இருந்த எஞ்சிய மூவருக்குமே தெரியாது.

அன்றிரவு எட்டு மணி எப்பொழுது அடிக்கும் என்று பரபரப்போடு காத்திருந்தார்கள் மூன்றுபேர். ஒருவன் ராஜசேகரன், மற்றொருவன் கிரீஷ், மூன்றாவது ரூபவதி, இம்மூவரைத் தவிர அதே எட்டு மணிக்காகக் காத்திருந்த இன்னொரு ஆள் கைலாசன்.

5

மதுவும், கிரீஷும் காரிலிருந்து இறங்கிப் போன பிறகு மஞ்சுளா, "ராஜ்...நியூஸ் பேப்பரில் அழகானப் பெண் வேணும்னு விளம்பரம் தந்திருக்கீங்களே, எதுக்கு?" கேட்டாள்.

"அழகானப் பெண் இல்லை. வெறும் அழகான பெண்ணுக்காக விளம்பரம் தேவையில்லை. விளம்பரம் தர இருபத்தைந்தாயிரம் ரூபாயைச் செலவழிக்க வேண்டிய தேவையும் இல்லை. எனக்கு வேண்டியது படமெடுத்தாடக் கூடிய காலசர்ப்பத்தைப் போன்ற அழகானப் பெண்" என்றான் மஞ்சுளாவைப் பார்த்து முறுவலுடன்

"அதான், எதுக்கு?"

"சொல்றேன்." என்றான் சுருக்கமாய். விளம்பரம் சம்பந்தப்பட்ட ரகசியத்தை மஞ்சுளாவிடம் சொல்லாமல் மறைத்து விட்டான். விளம்பரத்தைப் பற்றிச் சொன்னால் பந்தயத்தைப் பற்றிச் சொல்லித் தீரவேண்டும். பந்தயத்தைப் பற்றிச் சொன்னால் மஞ்சுளா பயந்து விடுவாள்.

அவன் இந்தப் பந்தயத்தில் ஜெயிப்பானா? சித்தரஞ்சன் எப்படிப்பட்ட உபாயங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறான்? அவனைக் குறைவாய் எடை போட்டு விடக்கூடாது. ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து எடுத்து வைக்க வேண்டும்.

சித்தரஞ்சன் என்றால் இந்தியன் விளம்பர ஃபிலிம் உலகத்திலிருக்கும் எல்லோருக்குமே நடுக்கம்.

ராஜசேகர் இதுவரை அழகான பெண்களைத் தேடிப் பிடித்து, அவர்களைக் கொண்டு விளம்பர பிலிம்ஸ் எடுப்பதைப் பற்றி யோசித்தான். ஆனால் இனிமேல் மீதி விஷயங்களைக்கூட ஜாக்கிரதையாய் கவனித்துக்

கொண்டே வரவேண்டும். யாரை நம்புவது? யாரை நம்பக்கூடாது என்ற விஷயத்தில் இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை.

"ராஜ்" கூப்பிட்டாள் மஞ்சுளா.

"உம்... சொல்லு" என்றான்.

"ஷூட்டிங் நடந்துட்டிருந்தபோது நான் ஒரு விஷயத்தை கவனித்தேன்"

"நான் அந்தப் புதரைக் கேமிராவிற்குள் பிடிச்சுக் கிட்டேன்" என்றான் உறுதியோடு. மயிரிழையில் தன் காரில் வந்து மோதிக்கொள்ளவிருந்த லாரியிடமிருந்து தப்பிக்கொண்டு. அந்த லாரியின் நிறம் நம்பர்களைத் தன் மனதிற்குள் பதிப்பித்துக் கொண்டான். லாரி மூலம் ஒரு பயமுறுத்தல்!... தனக்குள் சிரித்துக் கொண்டான், சித்தரஞ்சன் நன்றாய்தான் விளையாடுகிறான்.

மஞ்சுளா வியப்படைந்தாள். தன்னைத் தவிர யாருமே அந்தப் புதரைப் பார்த்திருக்க மாட்டார்கள் என்றெண்ணினாள். ஆனால்... ஆனால் ராஜசேகர்...

"என்ன மஞ்சுளா... நான் அதை எப்படி கவனித்தேன்னு தானே யோசிக்கிறாய்?... நான் ஷூட்டிங்கில் இருக்கும்போது பார்க்கணும்னு வந்தாய். அப்படிப்பட்ட நீ ஒரு புதர் பக்கமாய் நாலைந்து தடவை பார்த்தாய் என்றால் அதென்னவோ முக்கியமான விஷயமாய் இருக்கணும்னு தோன்றிற்று. கேமிராவை அந்த பக்கமாய் திருப்பி ஜூம் பண்ணினேன்... கேமிராவை நிறுத்தலை..."

மஞ்சுளா அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை. ஏதோ யோசனையுடன், ஞாபகமறதி ஆளைப் போல தோன்றும் இந்த ராஜசேகரிடம் இவ்வளவு பரிசீலிக்கும் சக்தி உண்டா? சந்தோஷமாயிருந்தது அவளுக்கு. அத்துடன் பயமும் ஏற்பட்டது. ராஜசேகரன் சொல்லவில்லை. ஆனால் ஏதோ நடந்துக் கொண்டிருக்கிறது.

ஆபத்தை நோக்கி ஒவ்வோர் அடியாய் வைத்துக் கொண்டிருந்தாற் போலிருந்தது மஞ்சுளாவுக்கு.

சற்று முன்னால் ஏற்படவிருந்த லாரி விபத்து அவளை மேலும் நிலை குலைய வைத்தது.

கார் வீட்டிற்கு முன்னால் நின்றது. மஞ்சுளா இறங்கி உள்ளே போய் விட்டாள்.

காரை ஷெட்டில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, அவன் ஆபீசுக்குப் போன் பண்ணினான்.

''ஹலோ... யாரு?... மாலாவா? நீங்க இன்னும் போகலையா?''

''இல்லை சார், நீங்க ஷுட்டிங்கிலிருந்து நேராய் ஆபீசுக்கு வருவீங்கன்னு ஸ்டாஃப் எல்லோரும் காத்துட்டிருக்கோம். நீங்க வரப்போறதில்லையா சார்?''

''வரலை. கோரமண்டலிலிருந்து ஃபைல் வந்ததா?''

''வரலை சார். இப்பத்தான் மது போன் பண்ணினார், பைலை எடுத்துட்டு வர கோரமண்டலுக்குப் போவதாய்''

''மது இப்போது கோரமண்டல் ஆபீசில் இருக்கலாம். போன் பண்ணி ஃபைலோடு வீட்டுக்கு வந்துட்டுப் போகச் சொல்லுங்க''

''ஓ. கே. சார்... எனி மோர்?''

''நம்ப யூனிட் வரும். கேமிரா, செட் ப்ராபர்டீஸ் எல்லாவற்றையும் ஜாக்கிரதையாய் எடுத்து வைக்கச் சொல்லி சந்திரனிடம் சொல்லுங்க. திரும்பவும் நாளைக்கு எட்டு மணிக்கெல்லாம் அதெல்லாம் லொகேஷனுக்குப் போகணும். எனக்கு ஏதாவது போனாவது போஸ்ட் ஆவது...''

''மாடல்ஸ் சர்மா, பவானி, சஞ்சயிடமிருந்து போன் வந்தன சார். எல்லோரும் விளம்பரத்தைப் பற்றித்தான் கேட்டாங்க. தெரியாதுன்னு சொன்னேன் சார். நீங்க

என்னிடம் சொல்லலை சார், அதனால்தான். நானும் அப்ளை பண்றேன் சார், பண்ணலாமா சார்?''

''குட்லக். எனி மோர்?''

''ஒரு ஆள், அவர் யாருன்னு தெரியாது. ஐ மீன் அவர் குரலை இதுக்கு முன்னாடி என்றுமே போனில் கேட்டதுமில்லை. ஆறு தடவை போன் பண்ணினார். நீங்க யாருன்னு கேட்டேன். வில்லனைப்போல சிரிச்சுட்டுப் பேசாமலிருந்து விட்டார் சார். நானும் வில்லியைப்போல சிரிச்சுட்டு எங்க பாஸ் எங்கே இருப்பாருன்னு எங்களுக்கே தெரியாது, உனக்கெப்படிச் சொல்றதுன்னு சொன்னேன் சார்''

''வெரிகுட்... மாலா... போஸ்ட் வந்ததா?''

''வந்தது சார்... அனுப்பச் சொல்றீங்களா?''

''நாளைக்கு நான் வந்து பார்க்கிறேன். ஆபீசை மூடிட்டு நீங்க போயிடுங்க'' என்று போனை வைத்து விட்டான் ராஜசேர். குளித்துவிட்டு மஞ்சுளா தந்த டிபனைச் சாப்பிட்டு முடிக்கும்போது மணி இரவு ஏழாகி விட்டிருந்தது.

மதுவுக்காகக் காத்திருப்பதை விட்டுவிட்டு எழுந் திருந்தான்.

''மஞ்சுளா'' கூப்பிட்டான்.

சமையலறையில் இருந்த மஞ்சுளா வெளியே வந்தாள்.

''நான் வெளியே போறேன். வரத்துக்கு ரெண்டு மணி நேரம் ஆகலாம். மது ஒரு ஃபைலைக் கொண்டு வருவான். ஜாக்கிரதையாய் உள்ளே எடுத்துவை. யாராவது என்னைத் தேடிண்டு வந்தாலோ, போன் பண்ணினாலோ தூங்கறதாய் சொல்லு.'' என்றான்.

ஒரு பழைய பேன்ட் ஷர்ட்டை எடுத்து போட்டுக் கொண்டான். கழுத்தில் பழைய மஃப்ளரைக் கட்டிக் கொண்டான். வேஷத்தைப் பார்த்து வியப்பாயிருந்தது

மஞ்சுளாவுக்கு. மஞ்சுளா ஏதோ சொல்ல வருவதற்குள் அவள் கன்னத்தில் தட்டிவிட்டு, "நோ மோர் க்வஸ்சன்ஸ் டியர். அனு போன் பண்ணினால் வெளியே போயிருப்பதாய் சொல்லு" என்று வெளியே வந்தான்.

அவனைத் தொடர்ந்து மஞ்சுளா போர்டிகோவிற்கு வந்தாள். ராஜசேகர் கார் இல்லாமல் நடந்து போகத் தொடங்கினான்.

அப்பொழுதுதான் மஞ்சுளாவுக்குப் புரிந்தது, தான் வீட்டில் தான் இருக்கிறேன் என்று நம்ப வைப்பதற்காகக் காரை விட்டு விட்டுப் போகிறான் என்று.

எங்கே போகிறான்? வீட்டில் தான் இருப்பதாய் யாரை நம்ப வைக்க வேண்டும் என்று நினைக்கிறான்?

6

ராஜசேகர் சர்வோதயா ஓட்டலுக்குக் கொஞ்சம் முன்னால் ஆட்டோவிலிருந்து இறங்கினான்.

அவன் சமீபகாலத்தில் கார் இல்லாமல் எங்குமே போனதில்லை. ஆனால் இந்தச் சூழ்நிலையில் காரைப் பயன்படுத்தக்கூடாது. சிலர் மாறுபாட்டைச் சட்டென்று பிடித்துக் கொள்ள கஷ்டப்படுவார்கள். அதுவும் தற்போது இருக்கும் நிலையை விட கீழ் நிலைக்கு இறங்கி வர வேண்டுமானால் இன்னும் கஷ்டப்படுவார்கள்.

பம்பாயில் விளம்பர பிலிம் இண்டஸ்ட்ரியில் ராஜசேகர் எவ்வளவோ கற்றுக் கொண்டிருந்தான்.

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், எப்படிப்பட்ட மாறுதலையும் ஏற்று நடப்பவன் தான் முன்னுக்கு வருவான் என்றும், தானும் அதுபோலவே முன்னுக்கு வந்ததாயும்

அடிக்கடி எடுத்துச் சொல்லுவார் சிவகாந்த் தன் பிரியமான சீடனான ராஜசேகரிடம்

ராஜசேகர் இருளில் நான்கு பக்கங்களையும் கூர்ந்து பார்த்துக் கொண்டே, தான் காலையில் ஷுட்டிங் பண்ணிய இடத்திற்கு வந்து சேர்ந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான் இருட்டாய் இருந்தது. மனித சஞ்சாரமே இல்லாமல் இருந்தது.

ஏரிக்கரையிலிருந்த புதரைப் பார்த்தான். ஓட்டல் அறையில் எரிந்துக் கொண்டிருந்த விளக்கு வெளிச்சம் அரைகுறையாய் அந்தப் புதர் பக்கம் வந்து விழுந்துக் கொண்டிருந்தது.

அங்கே நிறையப் புதர்கள் அடர்த்தியாய் இருந்ததால் அவனுக்கு வேண்டிய புதர் எது என்று சட்டென்று அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை.

கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு சுறுசுறுப்பாய் யோசிக்கத் தொடங்கினான்.

ஷுட்டிங் நடந்த சமயத்தில் மஞ்சுளா எங்கே நின்றுக் கொண்டு அந்தப் புதரைப் பார்த்தாள் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்து தானும் அந்தப் பக்கமாய் பார்த்தான். புதரில் அந்த இடத்தை அடையாளம் கண்டு கொண்டான்.

காரிருளாய் இருந்தது. புதர் இருந்த அந்த இடத்திற்குப் போவதற்கு வழி கூட இருந்ததாய் தெரியவில்லை. எங்கும் கற்களும் முள்ளுமாய் இருந்தன.

ஜேபியிலிருந்து பேனா டார்ச்சை வெளியே எடுத்தான். டார்ச் விளக்கின் வெளிச்சத்தில் மெல்ல அந்தப் புதரை நோக்கி நடந்தான். தன்னை யாராவது கவனிக்கிறார் களோ என்று திரும்பவும் நான்கு பக்கங்களையும் பார்த் தான். யாரும் இல்லை என்று உறுதியாய் தெரிந்துக் கொண்ட பிறகு டார்ச்சைப் புதரை நோக்கிப் போட்டான்.

ஜாக்கிரதையாய் பரிசோதித்துக் கொண்டே புதருக்குள் நுழைந்தான். டார்ச்சு வெளிச்சத்தில் புதர் தொடக்கத்தில் சில பூட்ஸ் காலடிகள் தென்பட்டன கசமுசவென்று ஒன்றின் மீது இன்னொன்றாய் படிந்திருந்தன.

புதரை நன்றாய் கலக்கியிருந்தாற் போலிருந்தது. எதிரி சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு பொருள் கிடைக்காமல் போகுமா என்றுதான் வந்தான். ஆனால் எதுவும் தென் படாததால் உற்சாகம் இழக்கத்தொடங்கினான் ராஜசேகர்.

அப்பொழுது தன் குருவான சிவகாந்தின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன அவனுக்கு. 'எதற்குமே உற்சாகமிழந்து விடாதே. நீ விரும்பியது, கிடைக்காவிட்டால் கொஞ்சம் பொறுதியும், பொறுமையையும் கூட்டிக்கொள். அப்பொழுது திரும்பவும் சோதித்துப் பார். கிடைக்கும்'—என்பார் அவர். திரும்பவும் டார்ச்சைப் போட்டான். தன் கண்களையே கேமிரா லென்சுகளாய் பண்ணிக் கொண்டு, அங்குலம் அங்குலமாய் பார்க்கத் தொடங்கினான். சில நேரம் கழிந்தன.

திடீரென்று அவன் கண்கள் மின்னின. குனிந்து அந்தப் பொருட்களில் ஒன்றை எடுத்து கர்ஃசீப்பில் கட்டிக் கொண்டான்.

யார் அந்த ஆள்?

எதற்காக வந்தான்?

வந்தாலும் போட்டோ எடுக்க வேண்டிய அவசிய மென்ன?

ராஜசேகர் யோசித்தவாறே நடக்கத் தொடங்கினான்.

இந்த கேள்விகளுக்கு பதிலை ஒரு கொலை முயற்சி நடந்தேறிய பிறகுதான் அவனால் தெரிந்துக் கொள்ள முடிந்தது.

7

ஷூட்டிங் நடந்துக் கொண்டிருந்தபோது கிரீஷின் கவனமெல்லாம் ரூபவதியின் மீதே நிலைத்திருந்தது. அதை அவள் கவனித்தாள். அந்தப் பார்வையில் அவன் வெளிப் படுத்திய தேவையை அவள் புரிந்து கொண்டாள்.

அவளுக்கும் அதே தேவை ஏற்பட்டது.

அது ராஜசேகருக்குத் தெரிந்தால் ஆபத்தென்றும், அதுவே தொழிலைப் புறக்கணிக்கும்படியாய் செய்துவிடும் என்றும் கூட அறிவாள்.

தெரிந்தும் கூட கிரீஷ் பார்வையோடு தன் பார்வையை கலந்தாள் யாரும் பார்க்காதவாறு.

அவள் பார்வையிலிருந்த சேலென்ஜும், உதடுகளின் அசைவிலும் இணக்கம் தெரிந்தது கிரீஷுக்கு.

கிரீஷ் ரூபவதி தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்தபோது மணி 7. 55 ஆகியிருந்தது.

லிஃப்டில் ஏறி ஐந்தாவது தளத்தில் இறங்கி, காரிடாரைப் பார்த்துத் தெரிந்தவர்கள் யாருமில்லை என்று திட்டமாய் தெரிந்துக் கொண்டு ரூபவதி இருந்த அறையை நோக்கி நடந்தவன், இன்னொரு முறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, கதவைத் தட்டினான். கதவைத் திறந்து கிரீஷைப் பார்த்த ரூபவதி சந்தோஷமாய் உள்ளே வரவேற்றாள்.

கிரீஷ் சந்தேகப்பட்டான்.

கிரீஷைக் கையைப் பிடித்து உள்ளே இழுத்துவிட்டு, "கமான்" என்றாள் அலட்சியமாய்— மயக்கத்தோடு பார்த்து.

தன் பாஸுக்குத் தெரிந்துவிட்டால் தொல்லையாகி விடுமே என்ற நடுக்கமும், பயமும் ஒரு பக்கம். ரூபவதியின் அழகை அனுபவிக்கத் துடித்த ஆசை ஒரு பக்கம்.

இலேசான நைட்டியில் ரூபவதியின் நெளிவு சுளிவுகள் தெளிவாய், சவாலிடுவது போல தென்பட்டன கிரீஷுக்கு.

அந்த நெளிவு சுளுவுகளில் கிரீஷின் பசித்த கண்கள் சிக்கிக் கொண்டுவிட்டன. மயக்கத்தோடு அவளையே பார்த்துக் கொண்டிருந்த போதிலும் துணிந்து முன்னேற முடியவில்லை கிரீஷால்.

அந்தக் காரியத்தை ரூபவதியே பண்ணினாள். அடுத்த வினாடி அவள் அணைப்பில் நலிந்துக் கொண்டிருந்தான் கிரீஷ். சாமர்த்தியசாலியான பெண்ணொருத்தி, சுகங்களின் மூலை முடுக்குகளை நன்றாய் உணர்ந்த பெண், அதிலும் குடித்திருந்த பெண், தன் அழகைத் தங்குதடை இல்லாமல் எடுத்துக் காட்டும் தொழிலில் உள்ள பெண் ஆவேசப்பட்டால் அது எவ்வளவு முரட்டுத்தனமாய் இருக்கும் என்று அப்பொழுதுதான் தெரிந்துக் கொண்டான் கிரீஷ்.

அதற்குள் கதவு தட்டிய சப்தம் கேட்டது. திடுக்கிட்டு விட்டான் கிரீஷ்.

ரூபவதிக்கு கதவு தட்டிய ஓசை பயத்தை உண்டாக்கவில்லை. அவளுக்கு அது பழக்கப்பட்டதுதான்.

சினிமாத் துறையிலும், மாடல் உலகத்திலும் இப்படிப்பட்டவை சர்வ சாதாரணந்தான் என்று தெரிந்தாலும், அவன் ராஜசேகரிடம் வேலை பண்ணி வந்ததால் இப்படிப்பட்டதெல்லாம் பண்ணக் கூடாது என்ற விஷயம் பயத்தைத் தந்தது.

பயந்த கிரீஷைப் பார்த்து பயப்பட வேண்டாம் என்று கண்கள் மூலமே அபயமளித்து விட்டு, விருப்பமின்றியே கிரீஷை விட்டு விலகிக் கொண்டு "யார்?" என்று கேட்டாள் அலட்சியமாய்.

"ராஜசேகர்"

இருவருக்குமே ஒரு முறை உடம்பெல்லாம் சில்லிட்டு விட்டது. கலவரமும் திகிலும் அதிகரித்தது. வேளை கெட்ட வேளையில் பாஸ் வருவதா?

என்ன பண்ணுவதென்றோ- இந்த ஆபத்திலிருந்து மீளுவது எப்படி என்றோ தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்து விட்டார்கள் இருவரும். இந்த விஷயம் தெரிந்தால் ராஜசேகர் அவனை வேலையிலிருந்து தள்ளி விடலாம். எவ்வளவோ சிரமப்பட்டு ராஜசேகரிடம் வேலையில் சேர்ந்திருந்தான் அவன்.

ராஜசேகரைப்போல தானும் விரைவில் ஒரு விளம்பர போட்டோ கிராபராக வேண்டும் என்ற எண்ணம் நாசமாகிவிடும். கிரீஷின் யோசனைகள் இவ்வாறு இருந்த போது- முதலில் தேறிக் கொண்ட ரூபவதி டக்கென்று கிரீஷை பாத்ரூமுக்குள் பிடித்துத் தள்ளினாள்.

ஷாலை எடுத்து உடம்பு முழுவதும் போர்த்திக் கொண்டு கதவைத் திறந்தாள். எதிரே ராஜசேகர்.

ஒரு நிமிஷம் கலவரமடைந்து விட்டாலும் உடனே சுதாரித்துக் கொண்டு உள்ளே வரவேற்றாள்.

''சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே! நீங்க எதுக்கு சார் சிரமப்பட்டு வந்தீங்க?''

இவ்வளவு கௌரவமாய் எந்த மாடலுமே எந்த போட்டோ கிராபரிடமும், விளம்பர ஏஜென்சி முதலாளி களிடமும் நடந்துக் கொள்ள மாட்டார்கள். தம்மை எசகு பிசகாய் ராட்சசத் தனமாய் உபயோகப் படுத்திக் கொள்பவர்களிடம் எங்களுக்கு எதற்கு கௌரவம் என்பார்கள். நாங்கள் தயார் செய்யப்பட்ட விலையுயர்ந்த வேசிகள்- அதற்குக் காரணமானவர்களை எதற்காக கௌரவிக்க வேண்டும்? கௌரவிப்பது போலவும், பயப்படுவது போலவும் நடிப்போம். அவ்வளவுதான்! —இது சில மாடல்களின் அந்தரங்க புலம்பல்!

"உன்னோடு பேசணும். தேவை எனக்குத் தானே? நான் வருவது தானே நியாயம்?"

"எந்த விஷயத்தைப் பற்றிப் பேசணும்?"

ஏதோ சொல்ல வாயைத் திறந்த ராஜசேகர் நிறுத்திக் கொண்டு, புருவங்கள் உயர, "அப்படி லாபியில் போய் உட்கார்ந்து பேசுவோம்" என்றான்.

அதுவும் ஒரு விதத்தில் நல்லது என்றெண்ணிய ரூபவதி ராஜசேகரைத் தொடர்ந்து வெளியே வந்தாள்.

திறந்திருந்த பாத்ரூம் கதவிற்குப் பின்னால் இருந்த கிரீஷ் மூச்சை இழுத்து விட்டுக் கொண்டான்.

"உன்னோடு நான் ஒரு முக்கியமான விஷயம் பேசப் போறேன். அதை நீ எந்தச் சூழ்நிலையிலும் யாரிடமும் சொல்ல மாட்டேன்னு பிராமிஸ் பண்ணு!"

"ஷ்யூர்... ஷ்யூர்... ராஜசேகர் சார்"

"தொழில் ரீதியாய் உன்னிடம் எவ்வளவோ பேர் வருவாங்க. நீயும் எவ்வளவோ பேரிடம் போவாய். அவங்களிடம் வாய் தவறிச் சொல்லிவிட்டால் நீ என் தொழிலை நிர்மூலம் பண்ணினவளாய் ஆவாய்"

"இல்லை. என் தொழில் ரீதியான பலவீனங்களுக்கு அடிமையாகிப் போய் உங்களுக்குக் கொடுத்த வாக்கை மீறிட மாட்டேன். உங்க மேல் எனக்குத் தனிப்பட்ட மதிப்பு உண்டு. நீங்க க்ஷேமமாய் இருந்தால்தான் என்னைப் போன்ற மாடல்கள் வாழ முடியும். நீங்க என்னை முற்றிலும் நம்பலாம். சொல்லுங்க."

ரூபவதியின் பேச்சில் நம்பிக்கைப் பிறந்தது ராஜ சேகருக்கு.

"நீ டில்லியிலிருந்து இங்கே வருவதற்கு முன்னால் உனக்குப் போன் பண்ணினேன், ஞாபகமிருக்கா?" ரூபவதியோடு பேசிக் கொண்டே நான்கு பக்கங்களிலும் வனமாய் பார்த்தான்.

"ஆமாமாம். என் தங்கை சுமீதாவைப் பற்றி கேட்டீங்க. ஆனால் அவளை என்னைப் போலவே மாடலிங்கில் புகுத்த விரும்பலை. குடியும் குடித்தனமுமாய் கல்யாணம் பண்ணி அனுப்பி வைச்சுட எண்ணியிருக்கேன். அதனால்தான் இப்பல்லாம் வந்த வாய்ப்புக்களை யெல்லாம் ஒப்புக் கொண்டு சீக்கிரத்தில் முடிச்சுட் டிருக்கேன்"

அவள் தோரணைக்கு வியப்படைந்து விட்டான். போனில் பேசியபோது ஒப்புக் கொண்டாள். இப்பொழுது இல்லை என்கிறாள். இது வியாபார உலகமில்லையே!

பிசினஸையே டெவலப் பண்ணுகிற பிசினஸ் மாடலிங் ஆனதால் சாமர்த்தியம் அதுவே வந்துவிடும்.

இப்பொழுது ரூபவதி பிடிவாதம் பண்ணினால் அவன் ப்ராஜெக்ட் கதி என்னவாகும்? சுமீதாவின் ஸ்டில் போட்டோக்களின் ஃபைல் கோரமண்டல் கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. முழுச் சம்மதத்தோடு ஒப்பந் தத்தில் கையொப்பம் வாங்கிக்காமல் சுமீதாவை மாடலாய் வைத்துக் கொண்டது அவன் தப்பு. எப்படியாவது ரூபவதி இணங்கச் செய்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அவன் போட்டிருந்த திட்டம் தலைகீழாகி விடும்.

"உன் கையில் இப்போது எவ்வளவு ஆம்பர்ஸ் இருக்கு?"

"சுமார் ஆறு"

"ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு வாங்கிக்கிறாய்?"

"பத்தாயிரம் வரை"

"அதாவது அறுபதாயிரம் வரும். உன் தங்கையின் கல்யாணம் பண்றதுக்கு எவ்வளவு பணம் வேணும்?"

"சுமார் ஒரு லட்சம்"

"பின்னே மீதி நாற்பதாயிரம்?"

"அதைத்தான் யோசிச்சிட்டிருக்கேன்!"

ஆச்சரியமடைந்து விட்டான் ராஜசேகர்.

"வர பணத்தையெல்லாம் என்ன பண்றாய்?"

சங்கடப்பட்டாள் அவள்.

புரிந்து விட்டது ராஜசேகருக்கு. சந்தர்ப்பமும் கூடி விட்டது. பணக்கார வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு விட்ட மாடல்கள் வந்ததையெல்லாம் செலவழித்து விடுவார்கள். உடம்பிலிருக்கும் அழகும் கவர்ச்சியும் குறைந்த பிறகு திரும்பிப் பார்த்துக் கொண்டால் எதுவுமே மிஞ்சியிராது. ஆனால் தாம் மட்டும் தம் அழகால் கோடிக்கணக்கில் வாரிக் கொடுப்பார்கள் கம்பெனிகளுக்கு.

"எஞ்சிய நாற்பதாயிரத்தைப் பற்றி நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். ஒரே தடவையில் ஐம்பதாயிரம் தரேன்- ஒரே ஒரு ஃபிலிமில் உன் தங்கையை நடிக்க வைத்துட்டால்"

அடியுண்டாற்போல் பார்த்தாள் ரூபவதி.

"ஐ யாம் சாரீ ராஜசேகர் சார். நான் பணத்தாசைப் பிடித்தவள் இல்லை. முக்கியமாய் உங்களிடம். நான் என் தாய் தந்தையருக்குக் கூட தராத கௌரவத்தை உங்களுக்குத் தரேன்..." அதற்கு மேல் பேச முடியாமல் வார்த்தைகளை விழுங்கி விட்டாள் ரூபவதி.

"ஐ யாம் சாரீ ரூபவதி. ஆனால் நீ ஒப்புக்காவிட்டால் என் நிலைமை ரொம்ப சங்கடத்தில் ஆழ்ந்துடும். க்ளயிண்ட்ஸ் என் மேல் கேசுகூட போடலாம். உன் தங்கையைக் கொண்டு அட். பிலிம் எடுக்கிறேன்னு ஒப்பந்தத்தில் கையெழுத்துக்கூட போட்டுட்டேன்... உன்னைத் தொந்தரவு படுத்த நேர்ந்ததற்கு ஐ யாம் சாரீ... ஆனால்..."

"நோ... நோ... நீங்க சாரீ சொல்ல வேண்டாம். ஏன்னால் எங்க மாடல்ஸ் உலகத்தைச் சேர்ந்தவங்க

பணத்தை தான் பிரதானமாய் மதிப்பாங்க. என்னையும் அதேபோல ஊகிச்சிருப்பீங்க... போகங்களுக்குப் பழக்கப் பட்ட மாடல்களும் சினிமா ஸ்டாருங்களும் பணத்தை அதிகமாய் நேசிப்பாங்க- மனுஷங்களைவிட. பணம் தர சுகத்துக்காக... ஆனால் நான் மட்டும் சின்ஸியராய் என் தங்கையின் கல்யாணத்தைப் பண்ணனும்னு இருக்கேன். அதன் மூலமாவது என் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் பண்ணிக்கலாமேன்னுதான்! என் வயதான தாய் தந்தை யருக்கும் என் தங்கைக்கும் நான்தான் ஆதாரம்... ஏதோ ஒரு சிலரைத் தவிர மீதி எல்லா மாடல்களும் மொதல்ல தெரியாமலும், அப்புறமாய் தெரிஞ்சாலும் வேறு வழி இல்லாமலும், தெரிஞ்சாலும் தெரியா விட்டாலும் பழக்கப் பட்டுப்போய் பிறகு சில தப்புக்களைச் செய்யத் தொடங் கிடுவாங்க. அதற்கப்புறமாய் அதிலிருந்து அவங்களால் மீள முடியாது. கவர்ச்சி, மினுமினுப்பு என்ற மாடல் உலகத்தை நோக்கி விளக்கைச் சுற்றி விட்டில் பூச்சியைப் போல வரத் தொடங்கிடுவாங்க... அதைச் சுற்றிச்சுற்றி வந்து, கடைசியில் அதிலேயே விழுந்து மடிந்துப் போவாங்க... ஒரே பிலிமில் பண்ணிட்டு நின்றுட முடியுமா என் தங்கையால்? பழக்கத்துக்கு அடிமையாகி பிரமையில் ஆழ்ந்து போய் என்னைப் போலவே ஆயிடு வாளோ? இதுதான் என் பயம்...''

ஒளிவு மறைவு இல்லாமல் எவ்வளவு துணிச்சலாய் தன் குறைகளையும் பலவீனங்களையும் எடுத்துச் சொல் கிறாள்!

ராஜசேகர் மௌனமாய் தன்னையே பார்த்ததை உணர்ந்து, ''ஓ கே... உங்களுக்காக ஒரே ஒரு பிலிமுக்கு என் தங்கையை உங்களுக்கு மாடலாய் ஒப்புக்குறேன். அது உங்கள்மேல் எனக்குள்ள மதிப்புக்காக!''

''தாங்க்ஸ் நான்கு ஃபிலிம்ஸ் எடுக்கிறேன். உன் தங்கைக்கு எல்லா விதத்திலும் ப்ரொடக்ஷன் தரேன்''

"உங்க மேல் எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு"

"அப்படீன்னால் அதற்கப்புறம் அவள் வேறெந்த விதமாயும் மாடவிங் பண்ணக்கூடாது....."

ஆச்சரியமடைந்து விட்டாள் ரூபவதி.

"லிரில் மாடல் காரென் லூனெலைப் போலன்னு சொல்லுங்க!"

"ஆமாம்"

"உங்களுக்காகத் தான் ஒப்புக்கிறேனே தவிர, மாடலாய் தொடரச் செய்வதற்கு இல்லை."

"அப்படீன்னால் கவனமாய் கேளு. நான் எந்த நிமிஷத்தில் செய்தி சொல்லியனுப்புகிறேனோ அந்தச் சமயத்தில் வந்துடணும். பத்து நாள் போதும். இந்த விஷயத்தை நீயோ அவளோ ரெண்டாம் பேருக்குத் தெரிவிக்கக்கூடாது. இது ரொம்ப முக்கியம். அதோடு கூட இது தெரிஞ்சால் உங்களுக்கும் ஆபத்து எனக்கும் ஆபத்துதான். ரகசியமாய் நான் வரச்சொன்ன லொகேஷன்களுக்கு வந்து, ரகசியமாகவே போயிடணும். உன் வேலை நாளைக்கு முடிவடைஞ்சுடும். நாளைக்கு இங்கிருந்து பம்பாய்க்குப் போகப் போவதாய் சொன்னாய், அதனால் ப்ளைட்டில் டிக்கெட் புக் பண்ணிட்டேன். பம்பாயில் உன் புதிய அஸைன்மெண்ட்டை முடிச்சுக்கிட்டு டில்லிக்குப் போவதற்கு ஒரு வாரம் பிடிக்கலாம். இப்ப ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு விலை மதிப்பானது. அதனால் உன் தங்கையை ஒப்புக்கச் செய்ய இன்றிரவே டில்லிக்குப் போன் பண்ணு. நீ டில்லிக்கு வந்து சேருவதற்குள் முடிந்தவரை எல்லா விளம்பர பிலிம்களையும் விளம்பர மேகஸின்களையும் பார்க்கச் சொல்லு. அவற்றை நன்றாய் ஸ்டடி பண்ணச் சொல்லு. நீ டில்லிக்குப் போய்ச் சேருவதற்குள் அவளுக்குக் கொஞ்சம் இதில் ஞானம் வரும். நீ டெல்லிக்குப் போன அடுத்த நிமிஷத்திலேருந்தே அவளுக்கு இதில் நன்றாய் ட்ரெயினிங் கொடு, முக்கியமாய் ஸ்விம்மிங், பேத்திங்,

ஸ்விம்மிங் குளத்தில் டைவ் பண்றது எல்லாம். பிகினி டிரஸ் போட்டுக்கறதற்குக் கற்றுக் கொடு. அந்த டிரஸ்ஸில் ஃப்ரீயாய் மூவ் ஆகிறாப்போல பார்த்துக்கோ. முக்கியமாய் எக்ஸ்ப்ரெஷன்களைக் காட்டுவதற்கு வரணும்'' என்று நிறுத்தினான். ஒரு வினாடி—ரூபவதி கேட்டுக் கொண்டிருக்கிறாளா இல்லையா என்று கூர்ந்து பார்த்தான்.

''ஹேட்ஸ் ஆப் டு யுவர் ப்ரிகாஷன்ஸ் ராஜசேகர் சார்.....நான் எவ்வளவோ பேர் போட்டோகிராபருங்களோடு கலந்து வேலை பண்ணியிருக்கேன். ஆனால் உங்களிடம் தென்படுகிற சிரத்தை அவங்களிடமெல்லாம் கொஞ்சமும் இருந்ததில்லை, அதனால்தான் உங்க ஒவ்வொரு கேம்பைனும் சக்ஸஸ்.....''

அவள் புகழுரைக்குக் கொஞ்சம் சங்கடமடைந்தான் ராஜசேகர்.

''என்ன எடுக்கப் போறீங்க? சோப்பா? ஷாம்ப்பூவா?'' கேட்டாள் ரூபவதி.

பேசவேண்டாம் என்று அவளுக்கு சைகை காட்டினான். பக்கத்து அறைக் கதவு லேசாய் அசைந்தாற் போலிருந்தது அவனுக்கு.

ஸ்பிரிங் கதவு தானே அசைய வழியில்லை. அசையவும் அசையாது கூட.

கதவு முற்றிலும் மூடிக் கொண்டு விட்டால் லாபியில் பேசுவது காதில் விழாது. அந்தக் கதவை நோக்கி நடந்துக் கொண்டே ரூபவதியைப் பார்த்து சைகை காட்டினான்.

அவன் சைகையைப் புரிந்துக் கொண்ட ரூபவதி ராஜசேகர் எதிரே இருப்பதுபோலவே பாவித்துக்கொண்டு பேசத் தொடங்கினாள்.

இத்தனையும் சில நொடிப்பொழுதில் நடந்து முடிந்து விட்டன.

ராஜசேகர் அந்தக் கதவை நெருங்கினான். மூச்சை அடக்கிக்கொண்டு கதவின் கைப்பிடியின் மீது கையை வைத்து பலமாய் தள்ளினான்.

யாருமே தென்படவில்லை. ஒருக்கால் கதவு மறைவில் ஒளிந்துக் கொண்டிருக்க வேண்டும். கீழே பார்த்தான். மோர் பிராண்டு சிகரெட் துண்டுகள் நான்கு தென்பட்டன ஒவ்வொன்றையும் குடித்து முடிக்க இரண்டு நிமிஷங்கள் பிடித்தாலும், எட்டு நிமிஷங்களாய் அந்தக் கதவு திறந்தே இருந்திருக்கிறது என்று அர்த்தம்.

அதற்கு முன்னால் புதரில் தென்பட்ட மோர் சிகரெட் துண்டுகளே இங்கேயும்.....!

ராஜசேகர் விருட்டென்று திரும்பி வந்து ரூபவதியிடம் நின்றான்.

"சொன்ன விஷயங்களை ஞாபகத்தில் வெச்சுக்கோ. கதவுகளை நன்றாய் சாத்திவிட்டுப் படுத்துக்கொள். முடிந்தால் பாத்ரூமில் இருக்கிற உன் பாய் ஃபிரெண்டை இன்றிரவு வைத்துக்கொள். உன் ஜாக்கிரதைக்காக போன் மட்டும் அவனுக்கு முன்னால் பண்ணாதே." என்று சொல்லி விட்டு விடுவிடென்று போய் விட்டான் ராஜசேகர்.

ரூபவதி அதிர்ந்து விட்டாள்.

அப்படியானால் கிரீஷை ராஜசேகர் பார்த்து விட்டானா? எப்படிப் பார்த்திருக்க முடியும்? ராஜசேகர் அறையில் இருந்தது சில வினாடிகள் மட்டுமே.

தம் விவகாரம் ராஜசேகருக்குத் தெரிந்துவிட்டதே என்ற பயத்தைவிட, அவ்வளவு நுட்பமாய் எப்படிக் கண்டுபிடித்திருப்பான் என்ற யோசனை தான் அதிக பயத்தைத் தந்தது ரூபவதிக்கு.

அதற்குள் அறையிலிருந்த கிரீஷைப் பற்றி நினைவுக்கு வந்தது. திரும்பவும் அவளிடம் ஆசைகள் கிளைவிட்டது,

ஆனால் தங்கைக்குப் போன் பண்ண வேண்டும் என்ற விஷயம் நினைவுக்கு வந்தது.

பக்கத்து அறையில் இருந்தது யார்? எதற்காக அங்கே காத்திருந்தான்? அதே சமயத்தில் அதே ஓட்டலில் இரண்டாவது மாடியில் இருந்த கீதாவின் அறையிலும் ஒரு ஆள் ஒளிந்து காத்திருந்தது ராம்பூபாலுடன் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்த கீதாவுக்கும் தெரியாது.

8

ராஜசேகர் வீடு திரும்பும்போது மணி பத்தடித்து விட்டது.

டிராயிங் ரூமில் காதம்பரியும் மஞ்சுளாவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

காதம்பரி அந்த வேளையில் தன் வீட்டிற்கு வந்தது ஆச்சரியத்தையளித்தது ராஜசேகருக்கு.

''ஹலோ...எப்ப வந்தீங்க?''

''ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆயிடுத்து. ஏதடா இந்த வேளையில் வந்திருக்கேனேன்னு ஆச்சரியப்படறீங்க இல்லையா?'' கேட்டாள் காதம்பரி.

ராஜசேகர் பதில் பேசவில்லை. அவர்களுக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டான்.

''வீட்டுக்குப் போன் பண்ணினேன். மஞ்சுளா போனை எடுத்து நீங்க இல்லைன்னாள். மஞ்சுளாவைப் பற்றி நீங்க வாயால் சொல்லித்தான் கேள்விப்பட்டிருக்கேனே தவிர பார்த்ததில்லை. எங்க ராஜசேகருக்கு மனைவியாகப்போற அதிர்ஷ்டசாலி எப்படி இருக்கிறாள் பார்ப்போம்னுதான் வந்தேன்'' என்றாள்.

"நன்றாயிருக்காளா?" கேட்டான் புன்சிரிப்புடன் மஞ்சுளாவை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே.

"ஃபைன்"

'சங்கோஜத்தால் சொல்றீங்க...கருப்புப் பொண்ணாச்சே..." மஞ்சுளாவின் உதடுகளில் குறுநகை படர்ந்தது. ராஜசேகர், தன்னை கருப்புப் பொண்ணு என்று அழைவைத்தது அவளுக்குத் தமாஷாகவும் வேடிக்கையாகவும் இருக்கும்.

"வெள்ளையாய், நாலிக்காய், செயற்கையாய், மாவு பொம்மையைப் போல இருக்கும் மாடல்களைவிட ரொம்ப அழகாயிருக்கிறாள் கருப்பாயிருந்தாலும்" என்றாள் காதம்பரி மஞ்சுளாவை அன்போடு பார்த்து.

"பசி வயிற்றைக் குடைகிறது மஞ்சுளா! நீங்களும் சாப்பிட வர்ங்க" என்றான் ராஜசேகர் காதம்பரியைப் பார்த்து.

"மாடல்களுக்கு அந்த அதிர்ஷ்டம் ஏது? நாங்க ராத்திரி சாப்பிட மாட்டோம். வேணும்னால் சும்மா வந்து உட்கார்ந்துட்டிருக்கேன் உங்களோடு"

மஞ்சுளா எழுந்திருந்து டைனிங் டேபிளில் சாப்பாட்டை எடுத்து வைக்கப் போனாள்.

ராஜசேகரும் மஞ்சுளாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். காதம்பரி அங்கேயே உட்கார்ந்துக் கொண்டு, "உங்களோடு ஒரு முக்கியமான விஷயம் பேசணும்" என்றாள்.

"சொல்லுங்க"

"நீங்க தந்த பேப்பர் விளம்பரத்தைப் பார்த்தேன். புரியவில்லை. ஏன் தந்தீங்க?"

"ஏன்னால் அழகான புது மாடல்களுக்காக"

"இதுக்கு முன்னால் விளம்பரம் தந்துதான்மாடல்களை தேர்ந்தெடுத்தீங்களா?"

"ஆனால்....." நிறுத்தினான் ராஜசேகர்.

மஞ்சுளா சிரத்தையாய் கேட்டுக் கொண்டிருந்தாள் அவர்கள் சம்பாஷணையை.

"சுவர்ணா அழகியில்லையா? ரூபவதி அழகியில்லையா?"

"சந்தேகம் ஏன்?"

"அவங்களை எப்படிப் பொறுக்கிக்கிட்டீங்க"

"ஜஸ்ட் அன்கன்வென்ஷனல் பிக்கப்"

"அப்படியிருக்கும்போது இப்பவும் அப்படியே பிக்கப் பண்ண முடியாதா? பண்ண முடியும். உங்களிடம் அந்த டேலெண்ட் இருக்கு. ஆனாலும் விளம்பரம் தந்திருக்கீங்க. அதுக்கு நிறைய பணம் செலவாயிருக்கும். ஏன் தந்தீங்க?"

ராஜசேகர் என்ன சொல்லப்போகிறான் கேட்போம் என்று மஞ்சுளாவும் ஆர்வமாய் இருந்தாள். உண்மையில் அவளே அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள எண்ணியிருந்தாள்.

ராஜசேகர் பேசாமலிருந்ததை கவனித்துவிட்டு, "ரகசியமா? என்னிடம் கூட சொல்லமாட்டீங்களா? என்னை நம்பலையா?" கேட்டாள் காதம்பரி. அதைக் கேட்டு ராஜசேகர் கொஞ்சம் வருத்தப்பட்டான்.

"நான் நம்ப தொழிலில் நம்பறவங்க நாலே பேர்தான். நீங்க, மது, ராம்பூலால், கிரண்."

"பின்னே சொல்றதுக்கென்ன? நாலு நாளாய் ராம்பூலால், கிரண் கூட கண்ணில் படவேயில்லை. சுவர்ணா சித்தரஞ்சனின் யூனிட்டில் போய் சேர்ந்துட்டதாய் தெரியுது. உங்களுக்கும் சித்தரஞ்சனுக்கும் ஏதோ

தகறாறுன்னு எல்லோரும் பேசிக்கிறாங்க. நீங்க கோர மண்டல் இண்டஸ்ட்ரீசோடு டைரக்ட் தொடர்பு வெச்சுக் கிட்டு சித்தரஞ்சன் ஏஜென்சியை ஓவர் லுக் பண்ணி, விளம்பர பிலிம் எடுக்கப் போறதாய் தெரிஞ்சுது. இதெல்லாம் தெரிஞ்ச பிறகு எனக்கென்னவோ கலக்கமாய் இருக்கு. என்னதான் நடந்தது? என்ன நடக்கப்போறது?''

புதுப்புது விஷயங்களை காதம்பரி மூலமாய் கேட்ட மஞ்சுளாவுக்குக் கூட கலவரம் ஏற்பட்டது. ராஜசேகரன் ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருப்பதாய் தோன்றிற்று அவளுக்கு. எல்லாற்றையும் விட ராஜசேகரனிடம் காதம் பரிக்கு அத்தனை நட்பு-நெருக்கம் இருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள் மஞ்சுளா.

''ரொம்ப விஷயங்களைத் தெரிஞ்சுக்கிட்டிருக்கீங்க'' என்றான் ராஜசேகர்.

''சிலது தெரிஞ்சுது. சிலதை தெரிஞ்சுக்கிட்டேன். அதுசரி, என்னதான் நடந்தது?''

ராஜசேகர் ஏதோ சொல்லவந்தபோது காலிங் பெல் மணியடித்தது. ராஜசேகர் எழுந்திருக்கப் போனான் வந்தது யார் என்று பார்க்க.

''நீங்க உட்காருங்க, நான் பார்த்துட்டு வரேன்'' என்று காதம்பரி முன் அறைக்கு வந்து கதவைத் திறந்தாள்.

எதிரே கிரீஷ் கையில் ப்ரீப்கேசுடன் நின்று கொண் டிருந்தான். காதம்பரிக்குத் தன் பாஸ் தரும் முக்கியத் துவத்தை அறிந்திருந்த கிரீஷ், ''குட்மார்னிங் மேடம், இன்றைக்கு ஷூட் பண்ணிய பிலிமின் ரஷ் காப்பியைக் கொண்டு வந்திருக்கேன். ராஜசேகர் சாரைக் கூப்பிட்டால் கொடுத்துட்டுப் போயிடறேன்'' என்றான்.

''உட்காருங்கள், கூப்பிடறேன்'' என்று உள்ளே போய் கிரீஷ் வந்த விஷயத்தைச் சொன்னாள் ராஜசேகரிடம்.

ராஜசேகர் வியப்படைந்தான்.

பிறகு தனக்குள் மெதுவாய் சிரித்துக் கொண்டான்.

டிராயிங் ரூமில் உட்கார்ந்திருந்த கிரீஷுக்கு அந்த நேரத்தில் காதம்பரி அங்கே வந்திருந்தது ஆச்சரியத்தைத் தந்தது.

ராஜசேகர் டிராயிங் ரூமுக்குள் வந்தான். அவனைத் தொடர்ந்தே மஞ்சுளாவும் காதம்பரியும் கூட வந்தார்கள்.

மஞ்சுளாவை அடையாளம் கண்டு கொண்டான் கிரீஷ்.

''குட் ஈவினிங் மேடம்'' என்றான்.

மஞ்சுளா கிரீஷை வணங்கினாள்.

''ரஷ் வந்துடுத்தா?'' கேட்டான் ராஜசேகர்.

''கொண்டு வந்திருக்கேன் சார்.''

''வெரி குட். அங்கே வைச்சுட்டு நீங்க என்னோடு வாங்க'' என்று வெளியே நடந்தான் ராஜசேகர்.

அவனைத் தொடர்ந்து கிரீஷ் வெளியே வந்தான். வீட்டிற்கு முன்னால் புல் வெளியில் போடப்பட்டிருந்த நாற்காலியில் தான் உட்கார்ந்துக் கொண்டு, கிரீஷையும் உட்காரச்சொல்லி சைகை காட்டினான்.

''ஹோட்டலிலிருந்து ரூமுக்குப் போய் ஷூக்களை மாற்றிண்டு லேபிற்கு வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க.'' மெதுவாய் கேட்டான் ராஜசேகர்.

கிரீஷ் அதிர்ந்து விட்டான்.

எந்த பொருளாய் இருந்தாலும், எந்த ஆளாய் இருந்தாலும் ராஜசேகர் ஒரு முறை பார்த்து விட்டால் போதும் தன் போட்டோகிராப் மூளையில் பதியவைத்துக் கொண்டு விடுவான். 'பாத்ரூம் கதவுக்குக் கீழேயிருந்து தன் ஷூக்களைப் பார்த்திருப்பான். தான் உபயோகிக்கும் ஷூவை நன்றாய் அடையாளம் தெரிந்துக் கொண்டிருந்

தால் இந்த ஆபத்து வந்துச் சேர்ந்து விட்டது—' என்று யோசிக்கத் தொடங்கினான் கிரீஷ்.

"ஒவ்வொரு தொழிலிலும் சில மாரல்கள் இருக்கும். அது போலவே இந்தத் தொழிலிலும் உண்டு, இல்லையா?"

கிரீஷ் முள்ளின் மேல் அமர்ந்திருப்பது போல உட்கார்ந்திருந்தான்.

"அவற்றை மீறக்கூடாதுன்னு வேலையில் சேர்ந்த புதிதிலேயே சொன்னேன். முதலாளியாய் இப்போது பயமுறுத்தலை புதிதாய்... நமக்கு அவ்வப்போது அபாரமான அழகிகள் எதிர்ப்படுவார்கள். பலவீனத்துக்கு அடிமையாயிட்டோமானால் நம்மை யாருமே காப்பாற்ற முடியாது. நம்மிடம் கடுகளவு வீக்னெஸ் இருந்துவிட்டால் போதும். எப்படியாவது அதை வெளிக் கொணர முயற்சிப் பண்ணிடுவாங்க இந்த மாடல் பெண்கள். தம் அழகாலும், உடற்கவர்ச்சியாலும், நம்மை அவர்கள் உள்ளங்கையில் பிடித்துக் கொண்டு விடுவார்கள். அதற்கப்புறம் நம்மை டாமினேட் பண்ணத் தொடங்கிவிடுவார்கள்... தம்மை வைத்தே நிறைய ஷாட்கள் எடுக்கச் சொல்லுவாங்க. அதிகமாய் பணம் தரச்சொல்லுவாங்க. தம் ரேட்டைத் தாமே தீர்மானித்துக் கொண்டு விடுவாங்க. ஒவ்வொரு பிலிமிலும் தம்மையே மெயின் மாடலாய் போடச் சொல்லுவாங்க... கஷ்டப்பட்டு வேலை பண்ணமாட்டாங்க... எந்த ஷாட்டை ஓ. கே. பண்ணணும்னு அவங்களே சொல்லுவாங்க. அவற்றை மறுக்க முடியாமல் போயிடும் நம்மால்... ஏன்னால் ராத்திரி வேளைகளில் சுவர்கத்துக்குக் கூட்டிட்டுப் போவதால். ராத்திரி சுகங்களுக்கு பகலில் அடிமைகள் ஆயிடுவோம். அந்த சுகத்தைத் தர அவங்களுக்கும் அவங்க நினைவுக்கும் அடிமையாய் போயிடுவோம். அதை நம்மால் தடுக்க முடியாது... அதனால் நம்ப தொழில் முடங்கத் தொடங்கிவிடும். நம்ப க்ளைண்ட்டுகள் விரும்பற விதத்தில் தரமானதாய் நாம்

எடுக்க முடியாது. இதையெல்லாம் விட நம் மேல் மாடல்களுக்கு பய பக்தியும் இல்லாமல் போயிடும். அதனால் நமக்குப் பின்னால் நம்மைப் பற்றித் தவறாய் பிரசாரம் பண்ணுவாங்க. நாம்ப சொன்னாற்போல பண்ண வேண்டிய மாடல்கள் நம்மை டிமாண்ட் பண்ணி பண்ண வைத்துக்கொண்டு விடுவார்கள்.''

ராஜசேகர் பரிவோடு எச்சரித்தாலும் கூட அவன் வார்த்தைகளில் கடுமை தோய்ந்திருந்தது.

தன் தொழிலின் மீதும், அத்தொழில் பாதிக்கப்பட்டால் வரும் விளைவுகளையும் அவ்வளவு நுட்பமாய் யோசித்து வைத்திருந்த ராஜசேகரின் உறுதியான எண்ணத்தையும் அன்றுதான் தெரிந்து கொண்ட கிரீஷ், தலைகுனிந்தபடி கேட்டுக் கொண்டிருந்தான்.

''குற்றம் பண்ணிட்டதாய் வருந்தாதே, இனிமேல் இந்த மாதிரி நேராமல் பார்த்துக்கொள். எதிர்காலத்தில் நீ நல்ல போட்டோகிராபர் ஆவாய்னு நம்பறேன் நான். இப்படிப்பட்ட காரியங்களைப் பண்ணி உன் எதிர்காலத்தைப் பாழடித்துக்காதே. உன் முதலாளியாய் எனக்குக் கெட்டப் பேரைக் கொண்டு வந்துடாதே. இப்படிப்பட்ட காரியங்களை ஓரிரண்டு பேர் பண்ணினாலும் சரி விளம்பர போட்டோகிராப்பித் தொழிலுக்கே கெட்டப் பேர் வந்துடும். இம்முறை கண்டித்து விட்டுடறேன். இன்னொரு விஷயம். இனிமேல் என் பிலிமில் ரூபவதியை எடுத்துக்கப் போறதில்லை. உனக்குத் தெரியும், நான் ஒரு தீர்மானம் பண்ணிட்டேனானால் அதற்கு மாற்றுக் கிடையாதுன்னு. புவர் கேர்ள்... உன்னால் அவள் நஷ்டமாகப் போகிறாள். சரி, நீ, போகலாம்!''

கிரீஷ் எழுந்திருந்தான்.

''சாரீ சார்'' என்றான் வருத்தமாய்.

''இட்ஸ் ஆல் ரைட். நாளைய அரேஞ்மெண்ட்ஸை கவனியுங்க. நாளையோடு நம் பாலன்ஸ் வேலை எல்லாம்

முடிஞ்சுடணும். நாளன்னையிலிருந்து புது ப்ராஜெக்ட் வேலை தொடங்கிடணும்.'' என்று எழுந்திருந்தான் ராஜசேகர்.

கிரீஷ் ராஜசேகருக்கு குட்நைட் சொல்லி விட்டுக் கிளம்பினான். தப்புப் பண்ணி விட்டு, பிடிபட்டு விடக் கூடாத ஆளுக்கு முன்னால் பிடிப்பட்டுப் போவது போன்ற அவமான விஷயம் வேறென்று இல்லை. குற்ற உணர்ச்சி கிரீஷின் இதயத்தைப் பிளந்து கொண்டிருந்தது.

தப்புப் பண்ணவிருந்தது இருவருமே. தண்டனை கிடைத்தது அவளுக்கு மட்டுந்தான் என்று ஒரு விநாடி நினைத்துப் பார்த்து அவள் மீது இரக்கப்பட்டவன்— தான் வருந்துகிற அவமானம் அதைக் காட்டிலும் பெரிய தண்டனை என்று சட்டென்று உணர்ந்துக் கொண்டான்.

ஆனாலும் ராஜசேகரின் பண்பையும், கொள்கையையும் மெச்சாமலிருக்க முடியவில்லை அவனால்.

அதற்குள் கிரீஷின் யோசனைகள் வேறு பக்கமாய் தாவத் தொடங்கின.

அந்த நேரத்தில் ராஜசேகர் ரூபவதியிடம் ஏன் வந்தான்? ரூபவதியோடு என்ன பேசினான்?

எவ்வளவு யோசித்துப் பார்த்த போதும் கிரீஷுக்கு விளங்கவில்லை. ரூபவதியைக் கேட்டபோது பதில் சொல்லாமல் தட்டிக் கழித்து விட்டாள். இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது... அவ்வாறு யோசித்தவாறே தன் அறைக்குப் போய்ச் சேர்ந்தான்— திரும்பவும் ரூபவதியிடம் போக வேண்டும் என்று மனம் துடித்தபோதும்.

ராஜசேகர் உள்ளே வந்ததுமே கேட்டாள் காதம்பரி:

''கிரீஷ் போயிட்டானா?''

''ஆங்... போயிட்டான். ரஷ் போட்டுப் பார்க்கலாம் வாங்க'' என்று கிரீஷ் லாபிலிருந்து கொண்டு வந்த ரஷ்

பிலிம் இருந்த பிரீப் கேசைக் கையிலெடுத்துக் கொண்டான்.

அதற்குள் நின்று, "மணி பதினொன்றடிக்கப் போறது, உங்களுக்கு லேட் ஆயிடுமோ என்னவோ?" என்றான் காதம்பரியைப் பார்த்து.

"நோ ப்ராப்ளம். கார் தான் இருக்கே, போயிடுவேன். ரஷ் பார்க்கிறேன், எப்படி வந்திருக்குன்னு". என்று எழுந்திருந்தாள் காதம்பரி.

மூவரும் ப்ரொஜெக்டிங் ரூமை நோக்கி நடந்தார்கள்.

ராஜசேகர் ப்ரீப் கேசிலிருந்து பிலிமை எடுத்து ப்ரோஜெக்டர் வீலில் பொறுத்தினான்.

காதம்பரியும், மஞ்சுளாவும் சோபாவில் உட்கார்ந்துக் கொண்டார்கள். "பார்க்கலாமா?" என்றான் ராஜசேகர் இருவரையும் பார்த்து.

"அதுசரி, விஷயத்தைச் சொல்லவேயில்லையே?" -திரும்பவும் கேட்டாள் காதம்பரி.

"உங்க கவனம் அந்த விஷயத்தின் மீதே இருக்கிறதாய் தோணுது சொல்றேன். மொதல்ல ரஷ்ஷைப் பாருங்க. இதில் ஒரு வேடிக்கை காட்டறேன் உங்களுக்கு" என்று அறையில் விளக்கை அணைத்து விட்டு ப்ரொஜெக்டரைப் போட்டான்.

ராஜசேகர் காலையில் சர்வோதயா ஓட்டலுக்கருகில் ஷூட் பண்ணிய காட்சி தென்பட்டன திரையில்.

ரூபவதியும் கீதாவும் தேவ கன்னிகைகளைப் போல— சிருங்கார தேவதைகளாய் தென்பட்டார்கள்.

ஆனால் அவர்களை முக்கால் நிர்வாணமாய் காட்டியது மஞ்சுளாவுக்கு வெறுப்பாயும், அருவருப்பாயும் தோன்றிற்று. தன் உணர்ச்சிகளைத் தனக்குள் அடக்கிக் கொண்டாள். காதம்பரிக்கு ராஜசேகரின் கெட்டிக்காரத் தனத்தைப் பற்றித் தெரியும். ஆனாலும் ஒவ்வொரு

பிலிமிலும் ஏதோ ஒரு புதுமை, வித்தியாசத்தைக் கொண்டு வருவான். அது எப்படி என்றுதான் புரியாது, பதினைந் தாண்டுகளாய் மாடலிங் தொழிலிலேயே இருந்து வரும் காதம்பரிக்கே.

மூவரும் திரையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று திரையின் மீது சில புதர்கள் தென்பட்டன. அந்தப் புதர்களை ஏன் ஷூட் பண்ணினான் என்று காதம் பரிக்குப் புரியவில்லை.

அந்தப் புதர்களைப் பார்த்ததுமே மஞ்சுளாவுக்குத் தெரிந்து விட்டது— தான் சந்தேகப்பட்டுப் பார்த்த புதரை ராஜசேகர் ஷூட் பண்ணி விட்டான் என்று அந்தப் புதரில் ஒளிந்து கொண்டிருந்த ஆளைக் கண்டுப் பிடிப்பதற் காகத்தான் ரஷ் பிலிமை அவ்வளவு சீக்கிரமாய் கொண்டு வரச் சொல்லியிருந்தான்.

முதல் ஷாட் முடிந்துவிட்டது.

ராஜசேகர் உடனே ரிவைண்ட் பண்ணினான் பிலிமை. திரும்பவும் திரையின் மீது போட்டான்.

லாங் ஷாட்டில் புதர்கள் தென்பட்டன.

அந்த ஷாட்டை ஜூம் பண்ணியதால் புதர்கள் அருகே இன்னும் அருகே நெருங்கி வந்தன.

அப்போது திரையின்மேல் ஒரே ஒரு புதர் தென் பட்டது. ராஜசேகர் டக்கென்று ப்ரொஜக்டரை அணைக் காமலேயே பிலிமை ரன்னிங் ஸ்டாப் பண்ணினான்.

மூன்று பேரும் உன்னிப்பாய் அப்புதர்ப் பக்கம் பார்த் தார்கள். புதரில் ஒரு ஆளின் கையில் ஜூம்லென்ஸ் பொறுத்தப்பட்ட கேமிரா இருந்தது. அதன் மூலமாய் போட்டோக்கள் எடுத்துக் கொண்டிருந்தார் போலத் தென்பட்டது.

"அது யார் ராஜசேகர்? அவன் அங்கே என்ன பண்றான்?"-காதம்பரி சந்தேகத்தோடு கேட்டாள்.

"அவன் சித்தரஞ்சனின் ஆள். என் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனிக்கச் சொல்லி நியமிக்கப்பட்டிருக்கிறான்" என்று திரையில் தென்பட்ட புதரை இன்னும் கவனமாய் பார்த்தான்.

அந்தச் சமயத்தில் தன்னுள் தோன்றிய உணர்ச்சிகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

ப்ரொஜெக்டரை அணைத்துவிட்டு, பிலிமை வெளியே எடுத்து எடிட்டிங் மேஜைக்கு முன்னால் உட்கார்ந்துக் கொண்டான், புதர்களின் ஷாட்டை பிலிமிலிருந்துகட் பண்ணுவதற்கு.

காதம்பரிக்கும் மஞ்சுளாவுக்கும் டென்ஷனாய் இருந்தது.

என்ன நடந்துக் கொண்டிருக்கிறது?

ராஜசேகர் பிலிமை கட் பண்ணிய பிறகு மூவரும் டிராயிங் ரூமுக்கு வந்தார்கள்.

"ராஜ்... என்னால் இனியும் தாங்கிக்க முடியாது. என்னவாச்சுன்னு சீக்கிரமாய் சொல்லமாட்டீங்களா?" -மஞ்சுளா கெஞ்சுவதுபோல கேட்டாள்.

"மது ஃபைலைக்கொண்டு வந்து தந்தானா?"

விஷயம் என்னவென்று சொல்லுவான் என எதிர் பார்த்துக் கொண்டிருந்த மஞ்சுளாவுக்கு ராஜசேகர் பேச்சை மாற்றியதைக் கண்டு ஆத்திரம் வந்தது.

மஞ்சுளா சரேலென்று உள்ளே போய் மது கொணர்ந்து தந்த ஃபைலை எடுத்து வந்து ராஜசேகரனுக்கு முன்னால் போட்டாள்.

ராஜசேகர் ஃபைலைக் கையிலெடுத்துக் கொண்டு இருவரையும் பார்த்தான். இருவர் முகமும் சீரியஸாய் இருந்தன. விஷயம் என்னவென்று தெரிந்துக் கொள்ளும் வரை காதம்பரி விடமாட்டாள் போலிருந்து.

அவர்களுக்குச் சொல்லக் கூடாது என்றில்லை ராஜசேகருக்கு. ஆனால் பந்தயத்தைப் பற்றிச் சொன்னால்

பயந்து விடுவார்கள். அவனை இப் பந்தயத்திலிருந்து பின்னுக்கு இழுக்கக்கூட முயற்சிப்பார்கள். அது அவனுக்குப் பிடிக்காது. இந்தப் பந்தயத்தில் வெற்றி பெற எதற்கும் துணிந்து விட்டிருந்தான் அவன்.

யோசித்தவாறே மது கொடுத்துவிட்டுப் போயிருந்த கோரமண்டல் இண்டஸ்ட்ரீஸ் ஃபைலைத் திறந்தான்.

ஃபைலில் முதல் பக்கத்தில், அவன் கோரமண்டல் இண்டஸ்ட்ரிக்காக எடுக்கவிருந்த நான்கு விளம்பர பிலிம் சம்பந்தப்பட்ட ப்ராஜெக்ட் ரிபோர்ட்டின் மீது அப்ரூவ் பண்ணி கம்பெனி முத்திரையும் மார்கெட்டிங் டைரக்டரின் கையொப்பமும் இருந்தன.

பந்தயத்தில் முதல் வெற்றிபெற்று விட்டாற் போல ஆனந்தம் ராஜசேகர் முகத்தில் தவழ்ந்தது.

"என்ன ராஜசேகர்! நாங்க பாட்டுக்கு ஏதோ கேட்டிட்டிருக்கோம். நீங்கபாட்டுக்கு ஏதோ ஃபைலைப் பார்த்துட்டிருக்கீங்களே!"—கோபமாய் கேட்டாள் காதம்பரி – அந்தக் கோபத்தில் உரிமை, அன்பு இரண்டும் கலந்திருந்தன.

"லெட் அஸ் ஃபீல் ஹஸ்பி... ஐ.ஸே... என் சக்தி சாமர்த்தியத்தைக் காட்டிக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கும். இதனால் என் வெகுநாள் எண்ணம் நிறைவேறும். விளம்பர போட்டோ கிராப்பராய் இண்டர் நேஷனல் புகழைச் சம்பாதித்துக்கணும்" என்றான் சந்தோஷமாய் அந்த ஃபைலைப் புரட்டிக் கொண்டே.

காதம்பரி எழுந்து ராஜசேகரின் கையிலிருந்த ஃபைலைப் பிடுங்கிக் கொண்டாள் வேகமாய்.

ஃபைலைத் திறந்தாள் காதம்பரி.

பக்கத்திலிருந்த மஞ்சுளா காதம்பரியிடம் வந்து ஃபைலை எட்டிப் பார்த்தாள் ஆர்வத்தோடு. காதம்பரி ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தவள் ஓரிடத்தில் நின்று

விட்டாள், அங்கே தென்பட்ட போட்டோவிலிருந்த பெண்ணைப் பார்த்து.

''கங்கிராஜுலேஷன்ஸ் ஃபர் யுவர் டிஸ்கவரி-மாடல் ரொம்ப அழகாயிருக்கிறாள். ஃபீச்சர்ஸ் சிம்ப்ளி சூப்பர்ப்'' என்றாள் காதம்பரி அப் போட்டோவையே உற்றுப் பார்த்து.

''தாங்க்யூ''

''இந்தப் பொண்ணு மாடலாய் வந்துட்டால், தாம் தான் உயர்ந்தவங்கன்னு பெரிசாய் கர்வப்பட்டிருக்கிற பாண்ட்ஸ் மாடல் சங்கீதா, கால்கெட் சப்பீ தரீவால், வி. ஐ. பி. அனீதா ரெட்டி, இவங்கள்ளாம் முக்காடு போட்டுக்க வேண்டியதுதான். அது சரி, யார் இந்த பொண்ணு?''

''ரூபவதியின் தங்கை சுமீதா. ஒரு முறை டில்லிக்குப் போயிருந்த போது பார்த்தேன் அவளை. ரொம்ப அழகா யிருந்தாள். எதிர் காலத்தில் நல்ல ஸ்கோப், பணம் இருக்கிற க்ளைண்ட் வந்தால் அவளை மாடலாய் எடுத்துக் கலாம்னு காத்துட்டிருந்தேன். இத்தனை நாள் கழித்து அவள் தேவை வந்தது. இதைப் பற்றித்தான் ரூபவதியோடு பேசப் போயிருந்தேன் நீங்க போன் பண்ணிய சமயத்தில்'' என்றான் சந்தோஷமாய்.

சீனியர் மாடல் காதம்பரி தன் கண்டுப்பிடிப்பை மெச்சியது மிகப் பெருமையாயிருந்தது ராஜசேகருக்கு.

ஆனால் அது அதிக நேரம் நிலைக்கவில்லை.

''நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியவே யில்லை. நீங்க என்னவோ சுமீதாங்கிறீங்க. இங்கே என்னவோ 'தரங்கிணி'ன்னு இருக்கே!''- காதம்பரி வியப்போடு கேட்டாள்.

ராஜசேகர் திடுக்கிட்டான்— தரங்கிணி என்ற பெயரைக் கேட்டு. என்ன நடந்ததென்று எதுவுமே புரிய வில்லை அவனுக்கு.

சடடென்று காதம்பரியின் கையிலிருந்த ஃபைலைப் பிடுங்கிக் கொண்டான். ஃபைலில் இருந்த போட்டோவைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான். அந்த போட்டோவிலிருந்த பெண் யாரென்றே தெரியாது. இதுவரை பார்த்ததே யில்லை.

சுமீதாவின் போட்டோவுக்கு பதில் இந்த போட்டோ எப்படி வந்துச் சேர்ந்தது ஃபைலில்?

அந்த போட்டோவிற்கு மேலே அவளை மாடலாய் ஏற்றுக் கொண்டு கம்பெனி சீலும் கையொப்பமும் இருந்தன.

ராஜசேகரின் யோசனைகள் ஸ்தம்பித்து விட்டன.

மூளை மரத்துவிட்டது.

எப்படி நடந்தது இந்த தவறு?

மிகப் பாடுபட்டு இரவும் பகலும் கஷ்டப்பட்டு ப்ராஜெக்ட் ரிபோர்ட்டைத் தயாரித்திருந்தான்.

இந்த ப்ராஜெக்டைத் தன் தொழிலுக்கே பெரிய பிரேக்காய் நினைத்துக் கொண்டிருந்தான்

ஆபத்துகளை கூடப் பொருட்படுத்தாமல் இதில் இறங்கியிருந்தான். சபதமாய் கூட எடுத்துக் கொண் டிருந்தான். அதற்குள் இடியாய் இந்தத் தவறு எப்படி ஏற்பட்டது? யாராவது மோசம் பண்ணியிருப்பார்கள் என்றுச் சொல்லவும் இடமில்லை. ஃபைல் விஷயமும், அதிலுள்ள விவரங்களும் மிக ரகசியமாய் வைக்கப் பட்டிருந்தன.

மதுசூதனனுக்கும் அவனுக்கும் மட்டுமே தெரிந்த ஃபைல் விஷயம். மதுவின் நேர்மையைப் பற்றிச் சந்தேகப் படவே வழியில்லை. ஃபைலை கோரமண்டல் இண்டஸ்ட் ரீக்குப் போய் கொண்டு வந்தது மது. தப்பு நடந்து விட்ட தாய் தெரிந்திருந்தால் சொல்லியிருப்பானே!

அப்படியானால்... மதுவுக்குத் தெரியாமலேயே இத்தவறு நிகழ்ந்திருக்க வேண்டும்.

கொண்டு கொடுத்தபோதோ, திருப்பி வாங்கிக் கொண்டு வந்தபோதோ மது ஃபைலைப் பார்த்திருக்க மாட்டான். அந்த யோசனையால் ராஜசேகரின் முகம் சிவந்துவிட்டது. உடம்பிலிருந்து ரத்தமெல்லாம் முகத்தில் வந்துச் சேர்ந்து விட்டது அவனுக்கு. அளவுக்கு மீறி கோபம் வந்தால் அவன் முகம் அவ்வாறு மாறிவிடும். ஆனால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அவன் வாழ்க்கையில் மிகக் குறைவு.

ஃபைலைப் பார்த்து விட்டுக் கீழே வைத்து விட்டான் ராஜசேகர்.

ராஜசேகரின் முகத்தில் நிழலாடிய உணர்ச்சிகளைப் பார்த்து காதம்பரிக்கும் மஞ்சுளாவுக்கும் பயம் ஏற்பட்டது.

என்ன நடந்தது என்றும் சொல்லவில்லை.

ரஷ் பிலிமில் தென்பட்ட ஆள் யார் என்றும் தெரியவில்லை.

ஃபைலிலுள்ள போட்டோ ஏன் மாறிற்று என்றும், எப்படி மாறிற்று என்றும் எதுவுமே தெரியாத மஞ்சுளா காதம்பரி இருவரும் ராஜசேகர் ஏதோ ரிஸ்க்கில் சிக்கிக் கொண்டு விட்டதாய் ஊகித்துக் கொண்டார்கள்.

அவனைப் பற்றி முற்றிலும் அறிந்திருந்த அவ்விருவருக்குமே, எப்படிப்பட்ட ஆபத்தாயிருந்தாலும் ராஜசேகர் சாமர்த்தியமாய் அதிலிருந்து மீண்டு விடுவான் என்ற நம்பிக்கையும் இருந்தது. நடந்த தப்பை ஜீரணித்துக் கொண்டு அதை திருத்திக் கொள்வதற்கு மனத்தளவில் த்யாராகிக் கொண்டிருந்தான் ராஜசேகர். விளம்பர போட்டோகிராப்பர் தொழிலில் புகுந்ததிலிருந்து, எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும், ஆபத்து எதிர்ப்பட்டாலும், அதைப்பற்றி கலங்கித் தவிக்கமாட்டான் ராஜசேகர்.

சட்டென்று அந்தச் சூழ்நிலையிலிருந்து தேறிக் கொண்டு பண்ணவேண்டிய காரியத்தைப் பற்றி யோசிப்பான் வேகமாய்.

இப்பொழுது என்றுமில்லாதவாறு அவன் இந்த நிலைமையில் இருந்ததால் என்ன நடந்ததென்று கேட்கும் துணிச்சல் இல்லாமல் போய்விட்டது அவர்களுக்கு.

9

மறுநாள் பண்ண வேண்டிய காரியங்களைப் பற்றி யோசித்தவாறே கட்டிலில் புரண்டுக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

பக்கத்து அறையில் மஞ்சுளாவும் காதம்பரியும் இருந்தார்கள்.

மஞ்சுளாவும், ராஜசேகரும் பலவந்தப்படுத்தியதால் நேற்றிரவு அங்கேயே படுத்துக் கொண்டாள் காதம்பரி.

மாடலாய் அவள் வாழ்க்கையைத் தொடங்கிய பிறகு உடல் இச்சையால் அவள் படுக்கையைப் பகிர்ந்துக் கொண்டவர்கள் அநேகம் பேர்.

இச்சைக்கு அப்பாற்பட்டு, அன்பால் அவள் உடல் இளைப்பாறியது நேற்றிரவுத்தான்.

பயங்கரமான எத்தனையோ ராத்திரிகளில் நேற்றிரவு மட்டுந்தான் அவளுக்கு அமிர்தம் பொழிந்த இரவு. நேற்றுப் பகலிலும் இரவிலும் நிகழ்ந்த சம்பவங்களால் ஏற்பட்ட பயத்தால், தாய்க்கோழியின் சிறகுக்குள் மறைந்து கொள்ளும் கோழிக்குஞ்சைப் போல, காதம் பரியைக் கட்டிக்கொண்டே படுத்துக் கொண்டிருந்த மஞ்சுளாவைப் பார்த்துக் காதம்பரியின் கண்கள் கசிந்தன.

மஞ்சுளாவை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு, உடம்பையெல்லாம் அன்போடு வருடிக் கொண்டே, தன்

இதயத்தின் அடித்தளத்தில் எங்கோ ஒரு மூலையில் இன்னும் பசுமையாய் நீடித்திருந்த தாயாக வேண்டும் என்ற ஆசையை அதன் மூலம் தீர்த்துக் கொண்டு அப்படியே உறங்கிவிட்டாள், புற அழகு என்ற மாமிச பத்தை உலகத்தைச் சேர்ந்த காதம்பரி.

ராஜசேகர் படுத்த ஒரு மணி நேரத்திலேயே மின் அதிர்ச்சி அடைந்தாற் போல படுக்கையை விட்டு எழுந்து விட்டான். தன் ஒவ்வொரு காரியத்தையும் கச்சிதமாய், ரகசியமாய் நடக்கும்படி பார்த்துக் கொள்ளுபவன், ராஜசேகர்.

விளம்பர போட்டோகிராபராய் தொழிலைத் தொடங் கியிருந்த இந்த நான்கு ஆண்டுகளில் என்றுமே நேர்ந்திராத பிழை இன்று எப்படி நேர்ந்திருக்கும்?

இது சித்தரஞ்சனுக்குத் தெரிந்தால்.....?

இந்த யோசனையே அவனை நடுங்கச் செய்தது.

அந்த பயம் தனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று கூட இல்லை. தன் ப்ராஜெக்ட்டிற்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டு விடுமோ என்ற பயந்தான்.

நடந்த தப்பை மறுநாளே திருத்திக்கொண்டு விட வேண்டும் என்றெண்ணி ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் கோரமண்டல் இண்டஸ்ட்ரீஸ் மார்க்கெட்டிங் டைரக்டர் வாசுவுக்குப் போன் பண்ணினான். ஆனால் அவரோ பம்பாய்க்குப் போயிருப்பதாயும் வர இரண்டு நாள் ஆகு மென்றும் சொல்லிவிட்டார்கள்.

படுக்கையறையை விட்டு டிராயிங் ரூமுக்கு வந்து ஏர் ஹோஸ்டஸ் மாலினிக்குப் போன் பண்ணினான்.

வெகு நேரமாய் போன் மணியடித்துக் கொண்டே இருந்தாலும் மாலினி போனை எடுக்கவேயில்லை. பொறுமையாய் ரிசீவரைக் காதில் வைத்துக்கொண்டு காத்திருந்தான்.

ஒருமுறை ப்ளைட்டில் பயணம் பண்ணிக்கொண்டிருந்தபோது ஏர் ஹோஸ்டஸாய் வேலை பண்ணிக் கொண்டிருந்த மாலினி தென்பட்டாள். அவள் தோற்றம் நன்றாயிருந்ததாய் எண்ணி ஒரு விளம்பர பிலிமில் நடிக்க சான்ஸ் கொடுத்தான். அதற்குப் பிறகு இந்தியன் ஏர்லைன்ஸ் ஒப்புக்கொள்ளாததால் அந்தஒரே பிலிமுடன் நிறுத்திக் கொண்டு விட்டாள் மாலினி. அதிலிருந்து ராஜசேகர் என்றால் மாலினிக்கு அபாரமான கௌரவம் ஏற்பட்டது.

இரண்டு நிமிஷத்திற்குப் பிறகு போனில் மாலினியின் குரல் கேட்டது ராஜசேகருக்கு.

"ஹலோ....." - எரிச்சலாயிருந்தது அவள் குரல், பாதி ராத்திரியில் தூக்கத்திலிருந்து எழுப்பியதற்கு.

அக்குரலில் மயக்கம்- அது தூக்க மயக்கமா அல்லது குடி மயக்கமா என்று விளங்கவில்லை.

நவநாகரிக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுப் போய் விட்ட மாலினிக்குக் குடிப்பது நன்றாய் பழக்கப்பட்டுப் போய்விட்டது.

"நான்...ராஜசேகர் பேசறேன்!"

ராஜசேகரின் குரலைக் கேட்டதுமே மாலினியின் மயக்கம் விடுப்பட்டு விட்டது.

"ஹலோ சார்... எப்படியிருக்கீங்க? திடீர்னு பாதி ராத்திரியில் என்னைப்பற்றி ஞாபகம் வந்ததா? ராத்திரியில் உங்களுக்குப் பெண்களின் தேவையெல்லாம் வேண்டியிருக்காதே? வேண்டியிருந்தால் அது என் அதிர்ஷ்டந்தான்..." என்றாள் மயக்கத்தோடு.

"ஷட்அப்... அண்ட் ஸ்டாப் யுவர் நான்ஸென்சிகல் டாக்கிங்..."

ராஜசேகரின் குரலிலிருந்த தீவிரத்திற்குப் பயந்து விட்டாள் மாலினி.

"சாரீ சார்... என்ன விஷயம்?"

"சாரீ ஃபர் தி டிஸ்டர்பன்ஸ்... நாளைக் காலையில் டில்லி ப்ளைட்டில் ஒரு டிக்கெட் வேணும். அதே நாள் ரிட்டன் டிக்கெட்டும் கூட..."

"ரொம்ப கஷ்டம் சார்"

"கஷ்டம்னுதான் உனக்குப் போன் பண்ணினேன். உன் இன்ப்ளுயென்ஸைப் பயன்படுத்தணும். ரொம்ப அர்ஜென்ட்"

"ஓ.கே.சார். முயற்சிப் பண்றேன். எந்தப் பேரில்?"

"அருண்குமார்... கே. அருண்குமார்..." — வாய்க்கு வந்த பேரைச் சொன்னான் ராஜசேகர்.

"அவர் யாரு?"

"நாளைக் காலையில் மது உன்னிடம் வந்து டிக் கெட்டை வாங்கிப்பான். நீ ஏர் போர்ட்டில் புக் ஸ்டாலுக்குப் பக்கத்தில் டிக்கட்டோடு தயாராயிரு"

"மாறு பேருடனா?"

"விவரம் அப்புறமாய். ப்ளீஸ் மேக் இட் கான்ஃபி டென்டியல். டில்லியில் யார் மூலமாய் ரிட்டன் டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்றாய்?"

"ஏர் ஹோஸ்டஸ் ரஞ்சனி"

போனை வைத்து விட்டான் ராஜசேகர்.

தொடர்ந்து மேலும் நாலைந்து இடங்களுக்குப் போன் பண்ணி முடித்தான். அதே சமயத்தில் ராஜசேகருக்குப் போன் பண்ணிய சித்தரஞ்சனுக்குப் போன் எங்கேஜில் இருந்தது, ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் ஏற் படுத்திற்று.

10

"ஏர் போர்ட்டில் புக் ஸ்டாலுக்குப் பக்கத்தில் டிக்கெட்டோடு உனக்காகக் காத்திருப்பாள் மாலினி. ரிடர்ன் டிக்கெட்டைக் கூட இன்றைக்கே டில்லிக்குப் போன் பண்ணி அரேஞ்சு பண்ணி வைத்துடுவாள். டில்லி ஏர் போர்ட்டில் இறங்கியதுமே ஏர் ஹோஸ்டஸ் ரஞ்சினி உன்னிடம் ரிடர்ன் டிக்கெட்டைக் கொடுப்பாள் வேலையை முடிச்சுண்டு வந்துடு"

"ஆனால்... சார் சுமீதா, அவங்க அக்கா ரூபவதி சொல்லாமல் எந்த வேலையையும் பண்ணமாட்டாள்னு நீங்களேதான் சொல்லியிருக்கீங்க. அப்படியிருக்கும்போது என் வேலை எப்படி முடியும்?"—கேட்டான் மது.

விடிந்ததுமே பாஸ் தன் அறைக்கு வந்ததும், அந்த நிமிஷமே டில்லிக்குப் புறப்படு என்றதும், டில்லியில் பண்ண வேண்டிய வேலையைச் சொன்னதும் குழப்ப மடைந்தான் மது.

பாஸ் முகத்தில் தென்பட்ட டென்ஷனைப் பார்த்த போது இதெல்லாம் என்ன என்று கேட்கும் துணிச்சல் இல்லாமல் போய் விட்டது.

"ரெண்டாம் பேருக்குத் தெரியாமல் பண்ணவேண்டிய வேலை இது. அதான் இப்படி. உன் சாமர்த்தியத்தைப் பயன்படுத்தி வேலையை முடிச்சுட்டு வா. டில்லி ஏர் போர்ட்டில் இறங்குவதற்குள் உனக்கு ஐடியா உதித்தால் நீ இந்தத் தொழிலில் முன்னுக்கு வந்து விடுவாய். இல்லாவிட்டால் எனக்குப் போன் பண்ணு. ஐடியா சொல்றேன். ஆனால் அதற்கப்புறம் என்னிடம் வேலை பண்ண நீ லாயக்கில்லை." என்று காரை ரிவர்சில் கொண்டு வந்து மதுவைத் திரும்பிப் பார்த்தான்.

மது காரிடம் வந்தான்.

"இந்தப் பிரயாணத்தில் உன் பேர் கே. அருண்குமார். ஞாபகம் வெச்சுக்கோ. ஜாக்கிரதையாய் இரு. நீ திடீரென்று டில்லிக்குப் போனதாய் சித்தரஞ்சனுக்குத் தெரியக்கூடாது. அவ்வளவு ஏன்? ரூபவதிக்குக்கூட தெரியக் கூடாது. ரகசியம் பரவிவிடும். அதனால்தான் உன்னை ஜாக்கிரதையாய் இருக்கச் சொல்றேன்" என்று காரை ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.

மது துரிதமாய் யோசிக்கத் தொடங்கினான்— ப்ரீப் கேசைக் கையில் பிடித்துக் கொண்டே.

அவ்வப்போது ராஜசேகரன் இந்த மாதிரி சின்னச் சின்ன டென்ஷன்களைத் தந்துக் கொண்டிருப்பான் மதுவுக்கு. அந்த டென்ஷனில் வெற்றி பெற்று தன் பாஸிடமிருந்து 'வெரிகுட்' என்று பெயர் வாங்கிக் கொள்வது அவனுக்குப் பொழுதுப் போக்கு.

ராஜசேகர் மதுவை சொந்தத் தம்பியாய் பார்த்துக் கொள்வான். தொழில் ரகசியங்களையும், விழிப்புணர்ச்சி களையும் அவ்வப்போது சிரத்தையாய் எடுத்துச் சொல்லு வான். மதுவோடு பழகுவதுபோல் கிரீஷோடன் பழக மாட்டான் அவன்.

மதுவுக்கு அது புரிந்தது. அதனால்தான் ராஜ சேகருக்காக உயிரையும் தரத் தீர்மானித்துக் கொண்டான் மது.

மது அடிக்கடி க்ரைம் நாவல்களைப் படிப்பது வழக்கம். அதில் வரும் துப்பறியும் நிபுணர்களையும் டிடெக்டிவ்களையும் தானாய் பாவித்துக் கொண்டு, ரகசியங்களை சோதித்தறிவது போல கனவு உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுவான். தான் படித்த அந்த துப்பறியும் நாவல்கள் தன் நிஜ வாழ்க்கையில் பயன்படக் கூடும் என்று என்றுமே ஊகித்துப் பார்த்ததில்லை அவன்.

சமீபத்தில்தான் சிட்னி ஷெல்டன் எழுதிய "எ ஸ்ட்ரேஞ்சர் இன் தி மிர்ரர்' நாவலை நாலாவது

தடவையாய் படித்தான். அது மிகவும் பிடித்திருந்தது மதுவுக்கு. அதில் கதாநாயகியை வில்லன் எப்படி கொலை பண்ணுகிறான் என்றுகூட நன்றாய் நினைவிருந்தது மதுவுக்கு.

11

விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்துவிடுவது மஞ்சுளாவின் பழக்கம்.

மதுரை கல்லூரியில் லெக்சரராய் சேர்ந்ததிலிருந்து, ஐந்து மணிக்கே எழுந்து விடுவதும் அன்றைக்குக் கல்லூரியில் நடத்த வேண்டிய பாடத்தின் சிலபஸ்ஸை ஒரு முறை பார்த்துக் கொள்வதும் பழக்கப்பட்டு விட்டிருந்தது.

மஞ்சுளா எழுந்தபோது, பக்கத்தில் காதம்பரியைக் காணவில்லை- படுக்கையை விட்டு இறங்கி, அறையை ஒட்டி இருந்த லாபிற்கு வந்தாள் மஞ்சுளா.

அங்கே காதம்பரி பத்மாசனமிட்டு அமர்ந்துக் கொண்டு மூச்சு விட்டபடி தேகப்பயிற்சி பண்ணிக் கொண்டிருந்தாள்- கண்களை மூடிக் கொண்டு.

அவளைத் தொந்தரவு பண்ணாமல் ராஜசேகரின் அறைக்கருகில் வந்து நின்றாள். ராஜசேகரை எழுப்புவதற்காகக் கதவை லேசாய் தட்டினாள். அதற்குள் பின்னாலிருந்து "ஆவ்..." என்ற பெரிய சப்தம்.

திடுக்கிட்டுத் திரும்பினாள்.

ராஜசேகர் முறுவலுடன் வேடிக்கையாய் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

"பயந்துட்டாயா?"-குறும்பாய் கேட்டான் ராஜசேகர்.

சுதாரித்துக் கொண்ட மஞ்சுளா கோபமாய், "நீங்களா?..." என்று கையைத் தூக்கினாள்.

அந்தக் கையை அப்படியே பிடித்துக் கொண்டு, அவளைக் கிட்டே இழுத்து, நெற்றியில் பட்டும் படாமலும் ஒரு 'இச்' கொடுத்தான்.

அந்த ஸ்பரிசம் மிக இன்பமாயிருந்தது மஞ்சுளாவுக்கு. அவளுடைய ஒவ்வொரு அணுவும் இன்பப் பரவச மடைந்தது. அவன்மீது வரவழைத்துக் கொண்டிருந்த கோபமெல்லாம் பறந்தோடி விட்டது.

வெட்கத்தால் லேசாய் தலை குனிந்த மஞ்சுளாவைப் பார்த்து, "எவ்வளவு அழகாயிருக்காய் மஞ்சுளா நீ!" என்றான் அவளை அன்போடு பார்த்து.

கலைந்த கேசங்கள், பொட்டு, மை, இவைதான் முகத்திற்கு எவ்வளவு சோபையைக் கொடுத்தன! முக்கிய மாய் பட்டுப் போன்ற நீண்ட அவள் கேசங்களை அவனுக்கு மிகவும் பிடிக்கும். நல்ல மூடில் இருக்கும் போதெல்லாம் தலைக்குக் குளித்துவிட்டு கேசத்தைப் பறக்கப் போட்டுக் கொண்டிருக்கும் மஞ்சுளாவுக்குப் பின்னால் போய், அவள் கேசத்தை அன்போடு கையி லெடுத்து அடக்கிக் கொண்டு ஆசைத் தீரமுகர்ந்துப் பார்ப்பான் ராஜசேகர்- தன்னை மறந்து.

அதில் அன்பு- திருப்தி மட்டுமே இருக்கும்.

"நான்தான் கருப்புப் பெண்ணாச்சே, அழகாய் எப்படி இருப்பேன்?"- ராஜசேகரை ஓரக்கண்ணால் பார்த்தபடி கேட்டாள் அவள்.

"கருப்பில் இருக்கும் கவர்ச்சி வெள்ளையில் இருக்காது. நீ பெண்கள் கல்லூரியில் சேர்ந்தது என் அதிர்ஷ்டம். அதுவே கோ எஜுகேஷன் சுாலேஜில் சேர்ந்திருந்தால் 'என்னைக் கல்யாணம் பண்ணிக்குங்க மேடம்'னு, படிப்பை விட்டுட்டு க்யூவில் நிற்கத் தொடங்கிடுவாங்க ஸ்டூடெண்டு கள். அப்ப எனக்கு அநியாயம் நேர்ந்துடாதா?"

"அப்போ மெட்டி அணிஞ்சுண்டிருப்பேன் கால் களுக்கு" என்றாள் மஞ்சுளா தன் இமைகள் படபடக்க.

"ஏன்?"

"இப்பல்லாம் காலேஜ் பெண்கள் புது டெக்னிக் கண்டுபிடிச்சிருக்காங்க. தாம் யாரையாவது காதலித்தால், வேறு யாராவது தம்மைக் காதலிப்பதாய் தம்மைச் சுற்றிண்டு அலையாம லிருக்க முன் ஜாக்கிரதையாய் கால்களுக்கு மெட்டி அணிஞ்சுக்கிறாங்க. அதாவது 'சாரீ மிஸ்டர் யூ ஆர் லேட்' என்று எடுத்துக் காட்டறத்துக்கு.'

"அட, அப்படியா? எவ்வளவு முன்னேறிட்டாங்க இந்தப் பெண்கள்தாம்...!"

"பின்னே என்னன்னு நினைச்சீங்க? அது சரி, இவ்வளவு காலங்கார்த்தால எங்கே போயிட்டு வரீங்க?"

"மதுவை டெல்லிக்கு அனுப்பறதுக்குப் போனேன்"

"டில்லிக்கு எதுக்கு?"

"நேற்று நடந்த பிழையைத் திருத்திப்பதற்கு. சுமீதாவின் போட்டோக்கள் ரெண்டே ரெண்டுதான் என்னிடம் இருக்கு. அந்த ரெண்டுமே தொலைந்து போயிடுத்து விநோதமாய். இன்னும் ரெண்டு போட்டோக்களைக் கொண்டு வரத்துக்கு டெல்லிக்கு அனுப்பினேன். ரூபவதியையே அனுப்பியிருப்பேன். ஆனால் அவளுக்கு இன்னிக்கு வேலை இருக்கு. அதனால்தான் மதுவை அனுப்பினேன். அதோடுகூட அவளுக்குக்கூட இந்த போட்டோ மாறாட்ட விஷயம் தெரிய வேண்டாமேன்னு தான்"

"சின்ன தப்பு நேர்ந்துடுத்து. போட்டோ தாறுமாறாகி விட்டது என்றுச் சொன்னால் ஒப்புக்க மாட்டாங்களா?"

"ஒப்புக்கலாம். ஒப்புக் கொண்டாலும் நான் எண்ணியிருக்கிற மாடலின் போட்டோக்களைப் பார்த்து அப்ரூவ் பண்ணணும். அதுக்குப் போட்டோ கண்டிப்பாய் வேணும். ஒப்புக்காமல் போவதற்குக்கூட சான்ஸ் இருக்கு.

இந்த விஷயம் சித்தரஞ்சனுக்குத் தெரிஞ்சால் ஒப்புக்க வேண்டாம்னு டைரக்டர்களை பலவந்தப் படுத்தலாம். சித்தரஞ்சனும் டைரக்டரும் நல்ல நண்பர்கள். அல்லது என்னைச் சிக்கலில் ஆழ்த்துவதற்கும், பந்தயத்தில் ஜெயிக்காமல் பண்ணி விடுவதற்கும் சித்தரஞ்சன் மூலம் அந்தப் பொண்ணே வேணுமென்றே அடம் பிடிக்கலாம். இருக்கிற டைமோ கொஞ்சந்தான். ரெண்டு வழிக்கும் போகவிடாமல் தடுக்கப் பார்ப்பான் சித்தரஞ்சன். அதோடு அந்தப் பொண்ணு யார் எங்கே இருக்கிறாள்னு தெரிஞ் சால்தானே படம் பிடிக்க முடியும்?''

''நீங்க பலே ஆள்தான் ராஜ்... பந்தயத்தைப் பற்றி எவ்வளவு கேட்டாலும் சொல்லாமலே தட்டிக் கழிச்சுட றீங்களே...''

''காபி இல்லையா?''

''கொடுக்க மாட்டேன்... நீங்க சொல்ற வரைக்கும்.'' என்று பாத்ரூமை நோக்கி விடுவிடென்று கோபமாய் போய் விட்டாள் மஞ்சுளா.

ராஜசேகர் தனக்குள் சிரித்துக் கொண்டே சமைய லறைக்குள் போனான்.

மஞ்சுளா முகம் கழுவிக் கொண்டு, அவிழ்ந்த கூந்தலை முடிந்து கொண்டு வருவதற்குள் காதம்பரி தேகப் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பி வந்தாள்.

ட்ரேயில் மூன்று கப் காபிகளுடன் அவர்களிடம் வந்தான் ராஜசேகர்.

காதம்பரி விநோதமாய் பார்த்தாள் ராஜசேகரை — 'காபி போட உங்களுக்கும் வருமா?' என்பதுபோல.

மஞ்சுளா அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

ராஜசேகரின் சிவந்த உடம்பில் கருப்பாய் ஒட்டிக் கொண்டிருந்த காபிப் பொடியின் கறை அவன் அழகை

விநோதமாய் காட்டிற்று. இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் மஞ்சுளா.

"காபி எடுத்துக்குங்க" என்றான் ட்ரேயை அவர்களுக்கு முன்னால் வைத்துவிட்டு.

இருவரும் காபியை எடுத்துக் கொண்டார்கள்.

அதற்குள், "மேடம், காபியைக் குடிக்காதீங்க சஸ்பென்சை சொல்ற வரைக்கும் நாம்ப காபியைக்கூட தொடக்கூடாது" என்றாள் மஞ்சுளா.

அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது காதம்பரிக்கு— நேற்றிரவு ராஜசேகர் தட்டிக் கழித்து விட்டதற்கு.

மஞ்சுளாவோடு கூட காதம்பரியும் காபி கப்பை ட்ரேயில் வைத்து விட்டாள்.

ராஜசேகர் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தான்.

சொல்லிதான் ஆகவேண்டும் என்று விடாப்பிடியாய் அடம் பிடித்துப் பார்த்தார்கள் இருவரும்.

"டிபன் பண்ணித் தந்தால் சொல்றேன்..." என்று மஞ்சுளாவிடம் சொல்லிவிட்டு பாத்ரூமுக்குப் போய் விட்டான் ராஜசேகர்.

"அப்பப்பா... என்ன பிடிவாதக்காரரோ... விடாப் பிடிவாதக்காரர்... இப்படிப்பட்டவருடன் எப்படி மேடம் மோதிக்கிறீங்க இவ்வளவு நாளாய்?"

"அதான் வேடிக்கை. சாதாரணமாய் இருக்கும்போது எத்தனைக் கெத்தனை உல்லாசமாய் இருப்பாரோ அத்தனைக்கத்தனை கேமிராவுக்கு முன்னால் நின்று விட்டால் சீரியஸாகி விடுவார். ரொம்ப ஆழ்ந்த சிந்தனை. க்ரியேடிவ். எங்க தொழிலுக்கே மாரலைக் கற்றுத் தரக் கூடிய அளவுக்கு உன்னதமான நிலையில் இருக்கிறார். ஹீ ஈஸ் எ நைஸ் சாப்" என்றாள் காதம்பரி, ராஜசேகர் பால் தனக்குள் மதிப்பைக் குறிப்பிட்டு.

தன் காதலனைப் பற்றி அத்தனை உயர்வாய் இன்னொரு பெண் சொன்னதைக் கேட்டால் எந்தப் பெண்ணிற்கு தான் சந்தோஷமாயிராது? மஞ்சுளா மகிழ்ந்துப் போனாள். அவள் மனமெல்லாம் கிச்சுக் கிச்சு மூட்டினாற் போல பரவசமடைந்தது. டிபன் தயாரிக்க சமையலறைக்குள் நுழைந்தாள்.

ராஜசேகர் குளித்துவிட்டு வருவதற்குள் மஞ்சுளா டிபனைத் தயாராய் வைத்திருந்தாள்.

காதம்பரி வீட்டிற்குப் புறப்பட இரண்டு மூன்று முறை முயற்சிப் பண்ணிய போதும் மஞ்சுளா தடுத்துவிட்டாள், டிபன் சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்று.

உப்புமாவை மூன்று தட்டுக்களில் நிரப்பினாள் மஞ்சுளா.

காதம்பரியும் ராஜசேகரும் சாப்பிட்டாலும் மஞ்சுளா மட்டும் டிபனைச் சாப்பிடாமல் ராஜசேகரையே பார்த்த படி உட்கார்ந்திருந்தாள்.

''எப்படியிருக்கு?''-கேட்டாள் மஞ்சுளா.

''எது?''-கேட்டான் எங்கோ பார்த்தபடி.

''என்ன கோபம் வரது தெரியுமா எனக்கு? டைனிங் டேபிளுக்கு முன்னால் உட்கார்ந்துட்டிருக்கும்போது எப்படி இருக்குன்னு எதைப்பற்றிக் கேட்பாங்க? சமை யலைப் பற்றிதானே?''

''என்னவோ?'' என்றான் சாப்பிட்டுக் கொண்டே.

தன் சமையல் நன்றாய் இருக்கிறதென்று மெச்சுவான் என எதிர்ப்பார்த்த மஞ்சுளாவுக்குத் தாங்க முடியாத கோபம் வந்துவிட்டது.

''எனக்கு மட்டும் ரொம்ப நன்றாயிருக்கு'' என்றாள் காதம்பரி.

"தாங்க்யூ மேடம்... எப்படி இருக்குன்னு சொல்ல மாட்டீங்களா ராஜ்?"- கெஞ்சினாற்போல் கேட்டாள் ராஜசேகரைப் பார்த்து.

"என்னவோ, நான் என்றுமே சமையல் ருசியைப்பற்றி யோசிக்கமாட்டேன். காரம் போதுமா உப்புப் போது மான்னு எல்லாம் கண்டுப் பிடிப்பது நம்மால் ஆகாத காரியம்!"

"ஆமாமாம். கண்ட கண்ட ஹோட்டல்களில் தின்றால் ருசி எப்படித் தெரியும்?"- கோபத்தால் மஞ்சுளா வின் மூக்கு அதிர்ந்தது.

"உங்களோடு வேகறது கஷ்டந்தான். உங்களுக்கு வக்கணையாய் சமைத்துப் போட்டு, நீங்க சாப்பிட்டு விட்டு நன்றாயிருக்குன்னு சொல்றதைக் கேட்டு சந்தோஷப் படணும்னு எண்ணி நன்றாய் சமைக்கிறவங்க கிட்டே யெல்லாம் போய் விழுந்து விழுந்து கத்துக்கிட்டேன். சே... சே... சுத்த முட்டாள் நான்" என்று பெருமூச்சு விட்டு விட்டு, "வெறுமே வாயால் நன்றாயிருக்குன்னு சொல்லிட்டுப் போயிட்டால் என்ன குறைஞ்சுடும் உங்களுக்கு? பெரிதாய் போஸ் காட்டறீங்க." என்றாள்.

இருவரையும் மாறிமாறிப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் காதம்பரி.

"சும்மா வெறுமே கூட சொல்றவனில்லை நான். நன்றாயிருக்குன்னு சொல்லிவிட்டால் இன்னும் நிறைய போட்டுவிடுவாயோன்னு பயம்!" என்றான் ராஜசேகர் பயந்தாற்போல நடித்து.

மஞ்சுளாவுக்கு கோபமும் ஆத்திரமும் மண்டிக் கொண்டு எழும்பின.

சரேலென்று எழுந்து வந்து ராஜசேகரின் கன்னத்தை அழுத்தமாய் நிமிண்டி விட்டாள்.

சட்டென்று தன் செயலுக்கு திடுக்கிட்டுப் போய் வெட்கமடைந்தவளாய் எதிரேயிருந்த காதம்பரியைப் பார்த்து ஓடிவந்து உட்கார்ந்துக் கொண்டாள்.

ராஜசேகரின் கன்னம் சிவப்பாய் கன்றிப்போய் ரத்தம் வருவது போலிருந்தது.

மஞ்சுளாவுக்கு அதைப் பார்த்து வருத்தம் ஏற்பட்டது. "சாரீ ராஜ்" என்றாள் வருத்தமாய்.

ராஜசேகர் கைக்கழுவிக்கொண்டு, எழுந்து மஞ்சுளா விற்குப் பக்கத்தில் வந்து, "நோ சாரீ... எனக் கொண்ணும் வலிக்கலை," என்று அவள் கூந்தலைத் தடவிக் கொண்டே —"நீ கன்னத்தை நிமிண்டினாலும் எனக்கு வலிக்கவே யில்லை, ஏன் தெரியுமா?" என்றான்.

தெரியாது என்று தலையாட்டினாள் மஞ்சுளா, அப்பாவியாய் சிரிப்பை அடக்கிக் கொண்டே.

"உன் உப்புமாவைத் தின்று முடிப்பதற்குள் என் உடம்பு மரத்துப் போயிடுத்து. அதான் வலி..."

ராஜசேகர் வார்த்தையை முடிக்கவில்லை, மஞ்சுளா சரேலென்று எழுந்திருந்து, "நீங்க..."என்று அவன் மார்பில் தன் மெத்தென்ற கையால் ஒரு குத்துக் குத்தினாள்.

அவள் குறும்புத்தமும், கோபமும் ராஜசேகருக்குச் சிரிப்பை வரவழைத்தன.

ராஜசேகர் மஞ்சுளாவைத் தன் மார்போடு அழுத்திக் கொண்டு, அவள் கேசத்தை எடுத்து முகர்ந்து விட்டு "உன்னை இப்படி அழவைப்பதும், உனக்குக் கோபம் வந்து சின்னக் குழந்தையைப் போல நீ குதித்துக் கூத்தாடுவதும், கத்துவதும் எனக்கு ரொம்ப சந்தோஷத்தைத் தரது மஞ்சுளா," என்றான் அவள் கண்களையே பார்த்து.

மஞ்சுளாவின் மனம் ஒரு விநாடி லயம் தப்பிற்று.

காதம்பரி புறப்பட எழுந்திருந்திருந்தாள்.

'ராஜசேகர் வேண்டுமென்றே பந்தய விஷயத்தை ஒளித்து வைக்கிறானா? அல்லது சொல்ல முடியாமல் மறைக்கிறானா?'- அவளால் ஒரு முடிவுக்கும் வரமுடிய லில்லை.

ராஜசேகர் ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தவித்தாள் காதம்பரி.

காதம்பரியின் மனதில் என்ன எண்ணம் இருந்ததென்று யாருக்குமே தெரியாது. அவள் சொல்லமாட்டாள். அழுத்தாய், கம்பிரமாய் இருப்பது அவள் வழக்கம். மாடல் உலகத்திலுள்ள எல்லோருக்கும் அவள் ஒரு மர்மம்!

மாடல் உலகத்திலுள்ள எல்லோரையுமே பணப் புழுக்களாயும், துச்சமாகவும் மதிக்கும் காதம்பரிக்கு ராஜ சேகரிடம் மட்டும் ஏன் அவ்வளவு மதிப்பு? அவன் பால் மட்டும் ஏன் அவ்வளவு சிரத்தை காட்டுகிறாள்? இது யாருக்குமே புரிபடாதது.

காதம்பரிக்கு மட்டுமே அது புரியும். ஏனெனில் அவளைப் புரிந்து கொண்டவர்களோ, புரிந்துகொள்ள முயற்சி பண்ணியவர்களோ ஒருவருமே இல்லை.

''உட்காருங்க காதம்பரி. பந்தயத்தைப் பற்றிச் சொல் றேன். இவ்வளவு நேராய் ஏன் சொல்லலைன்னால் இந்த விஷயத்தில் உங்களுக்கு எவ்வளவு சிரத்தை இருக்கு பார்ப போம்னு கவனிக்கத்தான்'' என்றான் சிரித்துக் கொண்டே.

''உங்க கேமிரா புத்தி வேறெங்கு போகும்?'' என்று காதம்பரியும் சிரித்தாள்.

அவ்வளவு நேரமாய் சிரித்துக்கொண்டே சிறு குழந்தை யைப் போல நடந்து கொண்ட ராஜசேகர், சட்டென்று கம்பீரமாய் மாறிவிட்டான். முகத்தில் மாறுதல் வந்துச் சேர்ந்துவிட்டது. கண்கள் கூர்மையாகிவிட்டன.

அப்பொழுது அவன் முகத்தில் வெறுப்பு, உறுதி தீவிரம் எல்லாம் தெளிவாய் தென்பட்டன.

12

''நான் பம்பாயில் பயிற்சியை முடித்துக் கொண்டு திரும்பி வந்தபோது நிறையப் பேர் என்னைத் தம் ஏஜென்சிகளில் சேர்ந்து வேலை பண்ணச் சொல்லிக் கூப்பிட்டார்கள். எனக்கென்னவோ யாரிடமும் வேலையில் சேரப் பிடிக்கவில்லை. தனியாய் பண்ணினால் என்விருப்பு வெறுப்புக்குத் தகுந்தபடி பண்ணிக்கலாம் என்றெண்ணி பல நாட்கள் எந்த ஏஜென்சியிலும் சேராமலேயே இருந்து வந்தேன். இந்தியன் விளம்பர உலகத்தில் இருந்து வந்த அருவருப்பையும், நிர்வாணங்களையும் நான் வெறுத்தேன். பெண்களிடமுள்ள அபாரமான அழகை கெட்ட வழியில் பயன்படுத்துகிறார்கள் இன்று. அது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர்கள் அழகை கம்பீரமாய், பெருந்தன்மையாய் அழகான வழியில், அந்தந்த தொழிலுக்குத் தகுந்தாற்போல தேவைக்கேற்றாற்போல மாடல்களைப் பயன்படுத்திக்க வேண்டும் என்ற கனவு இருந்து வந்தது எனக்கு..... அப்பொழுது டாஷிங் விளம்பர ஏஜென்சிக்கு நிறையப் பெயரும் புகழும் இருந்து வந்தது. அதன் முதலாளி சித்தரஞ்சன் திறமைசாலி என்றும், பெரிய பெரிய கம்பெனிகளின் விளம்பரங்கள் அவன் கையில் இருந்தனவென்றும் தெரிந்தது. எவ்வளவு நாள்தான் தொழில் பண்ணாமலிருப்பது? அதனால் முடிவில் அவனிடம் போனேன். அந்தச் சமயத்தில் அவனிடம் ஐந்தாறு போட்டோகிராபர்கள் இருந்து வந்தார்கள். முதலில் பேப்பர் விளம்பரம் (ஸ்டில் போட்டோகிராபி), சின்னச்சின்ன வேலைகள் தந்தார்கள்... ஒரு கம்பெனியின் வேலையைப் பண்ணினேன். ஹாட் ஷாட் மாடல் மேனகா தந்த ஒத்துழைப்பால் காப்பிரைட்டரின் உணர்ச்சிக்கு நூற்றுக்கு நூறு சதவிதம் நியாயத்தை வழங்கினேன். அந்த விளம்பரம் நிறையப் பத்திரிகைகளில் வெளி வந்து எனக்கு நல்ல பெயரை வர

வழைத்தன. முதல் வேலை வெற்றிகரமாய் முடிந்து விட்டது. மெதுவாய் நிறைய கம்பெனிகளின் வேலைகள் எனக்கு வழங்கப்பட்டன. ஒரு முறை ஒரு விளம்பர பிலிமின் கண்ட்ராக்டைத் தந்தான். அதன் நேரம் 90 விநாடிகள். பிரபலமான மாடல்களைக் கொண்டு எடுக்க வேண்டும் என்றுச் சொன்னான்... நான் பம்பாயில் என் குரு சிவகாந்த்துடன் வேலை பண்ணிக் கொண்டிருந்த போது புகழ்பெற்ற பல இந்தியன் மாடல்கள் அவரிடம் அடிக்கடி வருவார்கள்.

அப்பொழுது அவர்களோடு எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பரிச்சயத்தால் கால்கேட், பாண்ட்ஸ், முதலியவற்றிற்கு விளம்பரம் தந்துக் கொண்டிருந்த புகழ்ப் பெற்ற சில மாடல்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை வரவழைத்தேன்... ஷூட்டிங்குக்கு எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிண்டு, லொகேஷனுக்குப் போகவிருந்த சமயம் பார்த்து, ஸ்கிரிப்ட் மாறி விட்டதென்று சொல்லியனுப்பினான் சித்தரஞ்சன். புது ஸ்கிரிப்ட் எப்பொழுது முடியுமோ தெரியாது. நான் கூப்பிட்டு வரவழைத்திருந்த மாடல்கள் மிகப் புகழ்பெற்றவர்கள். நிறைய கூலி வாங்குபவர்கள். ஷூட்டிங் தள்ளிப் போடப் பட்டதால் அவர்களைத் திருப்பி அனுப்பி வைக்கும்படி நேர்ந்தது, ப்ளைட் சார்ஜும், ஸ்டார் ஓட்டல் செலவுகளும் நிறைய ஆகிவிட்டன எனக்கு... அடுத்த பத்து நாளில் அதை முடித்து விட்டேன்.

ஆனால் அதில் நிறைய நஷ்டம் ஏற்பட்டது. அதைப் பற்றிச் சித்தரஞ்சனிடம் கேட்டபோது சிரித்து விட்டுப் பேசாமலிருந்து விட்டான்... இன்னொரு பிலிம் தந்தான். அதில் புது மாடல்கள் வேண்டும் என்றான். மிகப்பாடுபட்டு, நிறைய செலவழித்து, நல்ல உடற்கட்டும் அழகு முடைய பெண்ணைத் தேர்ந்தெடுத்து நன்றாய் பயிற்சித் தந்தேன். மொத்தத்தில் பத்தாயிரம் செலவாகி விட்டது. முதலில் மாடலை நீயே தேர்ந்தெடுத்துக் கொள் என்றுச்

சொல்லி விட்டு, பிறகு தனக்குப் பிடித்தமான வேறொரு பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, அவளை மாடலாய் வைத்துக் கொள் என்றான்.

மாடல்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவன் ஏஜென்சிக்கு நான்கு பெண் கோ ஆர்டினேட்டர்கள் இருந்தார்கள். சாதாரணமாய் அவர்கள்தான் மாடல்களைக் கண்டுப் பிடித்து முதலாளிக்கும், போட்டோ கிராபர்களுக்கும் பிடித்து விட்டால் மாடலாய் பரிச்சயம் பண்ணுவார்கள். அதை யாரும் தப்பாய் சொல்லமாட்டார்கள். ஆனால் முதலில் என்னையே தேர்ந்தெடுக்கச் சொல்லி விட்டு, பிறகு ஒரு கோ ஆர்டினேட்டரின் பால் உள்ள விருப்பத்தால், கேமிரா என்றால் கூட என்னவென்று தெரியாத ஒரு புதுப் பெண்ணை மாடலாய் எடுத்துக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தினான். ஆனாலும் பேசாமலிருந்தேன். அந்தப் பெண்ணிற்குப் பதினைந்து நாட்கள் பயிற்சி தந்தும் அவளிடம் எதிர்பார்த்த எந்த முன்னேற்றமும் தென்படவில்லை. அதனால் பிலிம் ஃப்ளாப் ஆகி விட்டது. அது என் தவறுதான் என்று பிரசாரம் பண்ணினான். நானும் நடந்த விஷயத்தை நாலு பேருக்கு முன்னால் எடுத்துச் சொன்னேன். அதிலிருந்து என் மேல் விரோதம் கொண்டு விட்டான்... இன்னொரு முறை வேறொரு பிலிம் தந்தான். அது ஆண்களின் உள்ளாடைகளைத் தயாரிக்கும் கம்பெனியின் விளம்பரம். அதிலிருந்த ஸ்கிரிப்ட் எல்லாம் உள் அர்த்தத்தோடு இருந்தன. அதற்கே என் மனம் உடன்படவில்லை. அந்தக் கம்பெனியின் அண்டர்வேர்களை ஆண்கள் உடுத்திக் கொண்டால் அழகான பெண்கள் அவனைத் தொடர்ந்து சுற்றத் தொடங்கி விடுவார்களாம். அந்த ஸ்கிரிப்ட் பிரகாரம் என்னால் பண்ண முடியாது என்றேன். பண்ணித் தீர வேண்டும் என்றான். அப்படிப் பண்ணினால் பெண்களை இகழ்வது போலாகும் என்றேன். 'பெண்களாவது கழுதையாவது' அவங்க நம்பக்கையில் ஆடுகிற ரப்பர் பொம்மை

தானே என்றான். அப்பொழுதுதான் முதல் முதலாய் தெரிந்துக் கொண்டேன் பெண்கள் என்றால் அவனுக்குக் கொஞ்சமும் மதிப்புக் கிடையாது என்று... மொத்தத்தில் அந்த பிலிமை எடுத்தேன். அதைப் பார்த்து விட்டு பல்லை நறநறத்தான். நான் பொருட்படுத்தவில்லை. அது விடுதலை யான ஐந்து நாட்களுக்குப் பிறகு பம்பாயிலிருந்து என் குரு போன் பண்ணி என்னைத் திட்டினார், அந்த மாதிரி எடுத் ததற்கு. எனக்கு சந்தேகம் வந்து அது போடப்பட்டிருந்த தியேட்டருக்குப் போய் பார்த்தேன்— அயோக்கியன்! சில மோசமான செக்ஸ் படங்களை வேறு போட்டோகிராப்பர் களைக் கொண்டு எடுத்து நான் எடுத்தவற்றோடு கலந்து விட்டிருந்தான். என் பிலிம் கெட்டு விட்டதே என்ற வருத்தம் ஒரு பக்கம். என்னை மிகவும் மதித்து வந்த என் குருவிடமிருந்து திட்டு வாங்கியது இன்னொரு புறம் என்னை வேதனைக்குள்ளாகின... விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் சும்மாயிருந்து விட வேண்டி யிருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவனை எதிர்க்க வேண்டும் என்று நினைப்பேன். ஆனால் அப்பொழுது தான் பெயர் எடுத்துக் கொண்டிருந்தேன். அவனை எதிர்த்தால் திரும்பி காலை எதிலுமே ஊன்ற முடியாது என்று தெரிந்ததால் கம்மாயிருந்து விட நேர்ந்தது." -சொல்லிக் கொண்டே வந்த ராஜசேகர் ஒரு நிமிஷம் நிறுத்தினான்.

ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்த பெண்களிரு வருக்கும் அவன் ஏன் நிறுத்தினான் என்று புரியவில்லை.

கடந்த காலத்தைப் பற்றி சொல்லிக் கொண்டே வந்த ராஜசேகரின் முகத்தில் கோபமும் வெறுப்பும் குடிகொண் டிருந்தன.

திரும்பவும் தொடர்ந்தான்—

"ஸ்கிரிப்ட், லொகேஷன், ட்யூரேஷன், ஜங்கிள்ஸ், மாடல்கள். இவற்றைக் கொண்டு போட்டோகிராபரின்

கூலியைத் தீர்மானிப்பார்கள். இதையெல்லாம் பார்க்காமல் ஏதோ கொஞ்சம் கூலியைத் தந்து கொண்டிருந்தான் சித்தரஞ்சன். அதைப் பற்றிக் கேட்டால் இல்லாவிட்டால் வேலை கூட தரமாட்டேன் தெரியுமா என்பது போல பார்ப்பான்.

பணமும் கைக்குச் சரியாய் வருவதில்லையே என்ற வருத்தம் ஒரு பக்கமும், என் திறமையை எடுத்துக் காட்டிக் கொள்ள ஒரு சான்சு கூட வரவில்லையே என்ற வருத்தம் இன்னொரு புறமுமாய் அலைக்கழித்துக் கொண்டிருந்தன என்னை... அவன் ஒவ்வொரு முறையும் என் மேல் திணிக்கும் மாடல்கள் எதற்குமே உபயோகமற்றவர்கள்.

அவர்களிடம் செக்ஸ் அப்பீல் இருந்தால் போதும் என்றெண்ணுவான் சித்தரஞ்சன். அவர்களுக்கு மேக்கப் தெரியாது. நடிப்புத் தெரியாது. தொழிலில் இருக்க வேண்டிய பற்றோ, வேலை மும்முரமோ எதுவுமே இருக்காது அவர்களிடம். சிலசமயம் சில எக்ஸ்பிரஷனுக்காக ஐந்தாறு மணிநேரம் உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கும் மாடல்கள். லிரில் சோப்பின் விளம்பர பிலிமில் மாடலிங் பண்ணிய காரென்லூநெல் 90 விநாடிகள் விளம்பர பிலிமுக்காக வெடவெடவென்று நடுங்கும் குளிரில் கொடைக்கானல் அருவிக்குக் கீழே நனைந்து கொண்டே மணிக்கணக்கில் ஒத்திகை பண்ணினாள். அப்பொழுது அவள் உடம்பில் பச்சை பிகினி டிரஸ் மட்டுமே இருந்தது. ரத்தம் உறைந்துப் போகக்கூடிய குளிரில் அவள் விரல்கள் மரத்துப்போனாலும் பொருட்படுத்தாமல் போட்டோ கிராபர்களுக்கு ஒத்துழைத்தாள்! அந்த விளம்பர பிலிம் சூப்பர் ஹிட் ஆயிற்று. காரென்லூநெலுக்கு தொழிலின் மீதிருந்த அந்த அளவு பற்றுகூட சித்தரஞ்சன் ரிகமண்ட் பண்ணிய மாடல்களுக்கு இருந்ததில்லை. ஒரு மணி நேரம் உட்கார்ந்து அலுத்துப்போய் எழுந்து போய் விடுவார்கள். ஸ்டூடியோவிலும், லொகேஷனிலும் ஒழுக்கமில்லாமல் நடந்துக் கொள்வார்கள். அதனால் என் மூட் பாழாகி

விடும். அவர்களுக்கு வேண்டியது தானே வந்துச் சேரும். புகழ், பணம், மனம் போனபடி குடித்துவிட்டு சித்தரஞ்சன் போன்றவர்களின் வேட்கைகளைத் தீர்ப்பது. டூத் பேஸ்ட்டுக்காக பிலிம் எடுக்க வேண்டுமானால் பல்வரிசை நன்றாயிருக்க வேண்டும். ஷாம்பூவுக்காக பிலிம் எடுக்க வேண்டுமானால் கேசம் நன்றாயிருக்க வேண்டும். இவை குறைந்த பட்ச தேவைகள். இவை எதுவுமே அவர்களிடம் இராது. போரடிக்கிறதா காதம்பரி?''- நிறுத்தி விட்டுக் கேட்டான் ராஜசேகர்.

அவன் பேச்சில் முற்றிலும் ஆழ்ந்து போயிருந்த காதம்பரி, அந்தக் கேள்விக்கு திடுக்கிட்டு, ''இல்லை... இல்லை... முன்னுக்கு வரத்துக்கு நீங்க எப்படிப் பாடுபட்டிருக்கீங்கன்னு இன்றைக்குத் தான் விவரமாய் தெரிஞ்சுக்கிட்டேன்'' என்றாள்.

''உங்களுக்கு இவ்வளவு விவரமாய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஆனால் மஞ்சுளாவுக்கு நம்ப துறையைப் பற்றி அவ்வளவாய் தெரியாது. அதனால்தான்'' என்று நிறுத்தினான் ராஜசேகர்.

''நோ ப்ளாப்ளம், ப்ராசீட்'' என்றாள் காதம்பரி.

''ஒருமுறை...அயோக்கியன்...'' என்று நிறுத்தினான் ராஜசேகர். அவன் கண்கள் செக்கச் செவேர் என்றிருந்தன: சித்தரஞ்சனின் தீய குணங்களை அறிந்திருந்த காதம்பரி கூட ஆச்சரியமடைந்து விட்டாள் ராஜசேகர் சொன்னதைக் கேட்டு. கோபத்தால் வார்த்தைகள் வெளிவரவில்லை ராஜசேகருக்கு— ஒரு விநாடி சட்டென்று தன்னைத்தான் கட்டுப்படுத்திக் கொண்டு சொல்லத் தொடங்கினான்.

''ஒரு தடவை பதினைந்து வயதுப் பெண் ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்தான். அந்தப் பெண்ணிடமும் அவள் தாய்தந்தையரிடம் என்ன பசப்பு வார்த்தைகளைச் சொல்லியிருந்தானோ தெரியாது. என்னோடுகூட வேலை

பண்ணிய இன்னொரு போட்டோகிராபருக்கு அவளை நிர்வாணமாய் பிலிம் எடுக்கும்படி உத்தரவிட்டிருந்தான் சித்தரஞ்சன். சித்தரஞ்சனின் பார்வையில் மாடல்கள் என்றால் செக்ஸ் பொம்மைகள். எந்த உணர்ச்சியுமில்லாத பண்பற்ற மாமிச மொத்தைகள். நிர்வாணமாய் பண்ண முடியாது என்று அப்பெண் எதிர்த்து நின்றாள். உண்மையில் பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களை நிர்வாணமாய் போட்டோ எடுப்பது சட்டவிரோதமானது. முக்கால்வாசி நிர்வாணமாய் கூட காட்டக்கூடாது. பிகினி என்றால் பரவாயில்லை. டாப்லெஸ்ஸாய் எடுத்தாலும் போட்டோகிராபர் ஜெயிலுக்குப் போக வேண்டியது தான். சட்டத்தை அவன் பொருட்படுத்தவில்லை. எதிர்த்த அந்தப் பெண்ணை ராட்சசத் தனமாய் ரேப் பண்ணினார்கள் சித்தரஞ்சனும் அவனுக்கு வலது கையைப் போலிருந்த கைலாசனும். எங்கள் பிலிமில் காட்ட முடியாத உன் அழகை வேறு யாரும் பார்த்துவிடக் கூடாது என்று அவள் முகத்திலும், உடம்பிலும், ஆஸிடை ஊற்றி விட்டார்கள். அவள் அபூர்வ அழகு கருகிப் போய்விட்டது. அழுதாள். மொத்திக் கொண்டாள். ஆனால் சித்தரஞ்சனை எதிர்த்து அவளைக் காப்பாற்றும் துணிச்சல் யாருக்கும் இல்லாமல் போய்விட்டது.

பச்சிளம் சிறுமியான அப்பெண்ணின் அழகு விகாரமாய் மாறி விட்டது. அப்பெண்ணின் பெற்றோர் தம் கையாலேயே தம் பெண்ணின் வாழ்வை நாசமாக்கி விட்டோம் என்று மனம் குமுறினார்கள்- அவர்கள் பார்வையில் நான் பட்டேன். என்னைக் கெஞ்சினார்கள் நஷ்ட ஈடு தரச்சொல்லி. அவர்களுக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி அட்வர்டைஸிங் அதாரிடி ஆஃப் இண்டியாவுக்கு எழுதினேன். அவர்களிடமிருந்து பதில் வாவில்லை. ஆனால் சித்தரஞ்சன் என் மேல் பழி தீர்த்துக் கொள்ள எண்ணிவிட்டான். ஆனாலும் பொருட்படுத்தாமல் அப்பெண்ணிற்கு என் ஆபீசில் டைபிஸ்டாய் வேலை

தந்தேன். அந்தப் பகையால் ஒரு நாள்...அதற்கு மேல்...' சொல்ல முடியாமல் நின்றுவிட்டான் ராஜசேகர்.

அவன் முகம் சிவந்து விட்டது. உள்ளங்கை முறுக்கேறிக் கொண்டது. ''ப்ளீஸ் கன்ட்ரோல் யுவர் செல்ஃப்'' என்றாள் காதம்பரி.

இருவரையும் ஒருமுறை பார்த்து விட்டுத் தன்னையே தான் கட்டுப்படுத்திக்கொண்டு திரும்பவும் சொல்லத் தொடங்கினான்.

''எனக்கு என் தங்கையின் மேல் உயிர். சிறுவயதிலேயே அம்மாவும் அப்பாவும் செத்துட்டதால் அவளை என் கண்ணின் இமையாய் பார்த்துட்டு வரேன்...'' என்று நிறுத்தினான்.

திடீரென்று தங்கையைப் பற்றி ஏன் சொல்லுகிறான் என்று புரியவில்லை அவ்விருவருக்கும்.

''என் மேல் பகையால் ஒருமுறை மதுரையிலிருந்து வந்து ஸ்டேஷனில் எனக்காக எதிர்பார்த்துட்டிருந்த என் தங்கையை நான் கூட்டிட்டு வரச் சொன்னதாய் நம்ப வைத்து கைலாசன் கிட்நாப் பண்ணினான். கைலாசத்தின் காரில் உன் தங்கை போகிறாள் என்று மது வந்துச் சொன்ன போது என் நவ நாடிகளும் தளர்ந்துப் போய்விட்டன. அவன் மிகக் கயவன். அரக்கன். என் தங்கையை ஏதோ பண்ணத்தான் கடத்திக்கொண்டு போகிறான் என்றுணர்ந் ததுமே அவர்களின் உல்லாச கேளிக்கை இடமான கெஸ்ட் ஹவுசுக்கு நேராய் ஓடினேன். என்னை ஒன்றும் பண்ண முடியாத அக்கயவர்கள் என் தங்கையை மானபங்கப் படுத்தத் தயாராகியிருந்தார்கள்— சித்தரஞ்சன், கைலாசன் மேலும் இருவருமாய்ச் சேர்ந்து குடித்துவிட்டு மனம் போன படி நடந்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் அனுவின்

உடம்பிலிருந்த புடவையையும் ஜாக்கெட்டையும் உறுவி யிருந்தார்கள். அந்தக் காட்சியைப் பார்த்த நான் அரக்கனாய் மாறிவிட்டேன். என்றுமே யாரையுமே கை ஓங்கியிராத நான் அந்நால்வரையும் நையப் புடைத்து விட்டேன்.

என் தங்கையை நாசம் பண்ணி என்னைப் பழிவாங்க எண்ணியிருந்த அவர்களை வேட்டை நாயாய் துரத்தித் துரத்திச் சென்று உதைத்தேன். 'நீ இப்படிப்பட்டவன்னு தெரியாது எனக்கு. உன் வேலைகளை எவ்வளவோ நேர்மை யாய்ப் பண்ணித் தருகிற எனக்கே துரோகம் பண்ணு கிறாயா?' என்று கேட்டேன். அவனிடம் கொஞ்சமும் பச்சா தாபம் தென்படவில்லை. அலட்சியமாய் பார்த்தான். விளம்பர உலகில் எனக்கு இடமே இல்லாமல் பண்ணி விடுவதாய் கருவினான். என்னை விரோதித்துக் கொண்டு தொழிலில் எப்படி முன்னேறுவாய் என்று சவாலிட்டான்.

பல ஆண்டுகளாய் என்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருந்த கோபமும், வெறுப்பும், பகையும், புஸ்யென்று படமெடுத்தாடத் தொடங்கிற்று. நீ இல்லாமல் என்னால் நிற்க முடியும் என்றேன். என் கையில் கேமிரா இருக்கும்வரை என்னை யாராலுமே ஒன்றும் பண்ணிவிட முடியாது என்றேன். கேலியாய் சிரித்தான். 'உனக்கு வரப் போவதாய் எண்ணிக் கொண்டிருக்கிற கோரமண்டல் இண்டஸ்ட்ரீயைச் சேர்ந்த புது கேம்பைன் உனக்கு வராமல் செய்து விடுகிறேன் பார்' என்றான். அப் பொழுதே நான் கோரமண்டல் எம்.டிக்கு என் ப்ராஜெக்ட் ரிபோர்ட்டுடன் ஸ்கிரிப்ட்டையும் தந்திருந்தேன். என் ஐடியா அவர்களுக்குப் பிடித்திருந்தது. அவர்கள் புதிதாய் இண்டர்நேஷனல் மார்கெட்டில் கொண்டு வரவிருந்த் நான்கு விதமான சோப்புகளைப் பற்றி சில பேப்பர் டிஸைன்களையும், நான்கு விளம்பர பிலிம்களையும், இண்டர்நேஷனல் ஸ்டாண்டர்டில் எடுத்துத்தரச் சொல்லி யிருந்தார்கள். ஒவ்வொன்றிற்கும் மூன்று லட்சங்கள்.

பேப்பர் டிஸைன்களுக்கு மேலும் மூன்று லட்சங்கள் செலவழிக்கத் தீர்மானித்திருந்தார்கள்.

முன்பு நான் பண்ணிய வேலைகளைப் பார்த்திருந்ததாலும், சித்தரஞ்சனோடு அவர்களுக்கு அடிக்கடி சிறு தகராறுகள் வந்துக் கொண்டிருந்ததாலும் எனக்கே அந்த கேம்பைனைத் தருவதாய் வாக்களித்திருந்தார் எம்.டி.... அந்த தைரியத்தில்தான் இந்த விளம்பரப் படத்தை முடித்தே தீருவேன் என்ற சவாலை எடுத்துக் கொண்டு விட்டேன். 'பார்த்துடறேன் எப்படி எடுக்கப் போகிறாய் என்று?' – என்றான். 'சவால்' என்றேன்...' என் பிலிம் முடிவடையாமல் போக ஒவ்வொரு அடியிலும் குறுக்கிட்டுக் கெடுக்கிறேன் பார் என்றான். கிழித்தாய் என்றேன். இதுதான் நடந்த விஷயம்'' என்றான் ராஜசேகர், தன் சவால் விஷயத்தைச் சொல்லி முடித்துவிட்டு.

அவன் கோபம் இன்னும் தணியவில்லை.

எப்படியாவது பந்தயத்திலிருந்து அவனை விடுவித்து விடவேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்த அவ்விருவருக்குமே என்ன சொல்லுவதென்றே புரியவில்லை.

''ஆனால் சித்தரஞ்சன் ரொம்ப ஆபத்தான ஆள் ராஜசேகர். தனக்குக் கிடைக்காத இந்த இண்டர்நேஷனல் சான்ஸை உங்களுக்கும் கிடைக்கவிடாமல் ஆபத்துகளை வரவழைப்பான்'' என்றாள் காதம்பரி. ராஜசேகர் பதில் பேசவில்லை.

''போட்டோகிராபராய் நீங்க கெட்டிக்காரராய் இருக்கலாம். ஆனாலும் அவனை எதிர்த்து நின்று இந்த உடன்படிக்கையை முடிக்க முடியுமா உங்களால்?'' —கலவரத்தோடு கேட்டாள் காதம்பரி.

''நான் அதை முடிச்சுத் தீரணும், அவ்வளவுதான்!'' என்றான் தன்னை பந்தயத்தை விடச்சொல்லி வற்புறுத்த வேண்டாம் என்று மறைமுகமாய் எச்சரிப்பதுபோல். காதம்பரி.

அதற்குள் கிரீஷிடமிருந்து போன் வந்தது. லொகேஷனில் அரேஞ்மெண்ட்ஸ் ரெடியாகி விட்டதாயும், ஷூட்டிங்கிற்குக் கிளம்பும்படியும்.

சட்டென்று எழுந்திருந்தான் ராஜசேகர்.

"நான் ஷூட்டிங்குக்குப் போறேன்" என்று ப்ரீப் கேசில் வேண்டியதை அடுக்கிக் கொள்ளத் தொடங்கினான், இவ்வளவு நேரமாய் அவனிடம் தென்பட்ட கோபம், வெறுப்பு, பகை; எதுவுமே இப்பொழுது அவனிடம் தென்படவில்லை. அமைதியாய் இருந்தான்.

அவன் ஷூட்டிங் மூடிற்கு வந்துவிட்டதாய் தோன்றிற்று காதம்பரிக்கு. ராஜசேகருக்கு கை நிறைய வேலை இருந்தது இப்பொழுதெல்லாம். பெரிய பெரிய விளம்பர ஏஜென்சிகள் ராஜசேகரைக் கூப்பிட்டு வேலை தந்து கொண்டிருந்தன. ராஜசேகரின் கைப் பட்டுவிட்டால் பெரிய மாடலாய் மாறி விடலாம் என்று ஒவ்வொரு மாடல் பெண்களும் உற்சாகமாய் இருந்தார்கள். ராஜசேகரோடு வேலை பண்ணுவதை மதிப்பாகவும் கருதினார்கள் ஒரு விதமாய் சொல்லப் போனால் ராஜசேகர் அகில இந்திய ரீதியில் புகழ் பெற்று விட்டாற்போலதான். நவம்பர் 5-ம் தேதி நடக்கவிருந்த உலக ஃபேஷன் எயிடில் உலகப் புகழ்பெற்ற ஃபேஷன் மாடல்கள் பங்கெடுத்துக் கொள்வார்கள். ஆப்பிரிக்காவின் பஞ்ச நிவாரணத்திற்காக நன்கொடை வசூலிக்க ஏற்பாடு செய்திருந்த அந்த ஃபேஷன் காட்சியில் பங்கெடுத்துக் கொள்வது உலகத்திலுள்ள ஒவ்வொரு மாடல் பெண்ணிற்கும் மிகப் பெருமை. ராஜசேகர் மூலம் அந்த சான்சைப் பெற்றுக் கொண்டுவிட வேண்டும் என்று இந்தியாவிலுள்ள பெரிய மாடல்கள் எல்லோருமே உற்சாகப்படுவார்கள்.

அவ்வளவு முன்னேறியிருந்த ராஜசேகர் ஒரு கயவனின் கையில் பலியாகி விடுவானோ என்று காதம்பரிக்குக் கலக்கமாயிருந்தது.

. அனுவுக்கு அப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்ததாய் தன்னிடம் இதுவரை சொல்லவேயில்லையே? இவ்வளவு நாளாய் அந்த அவமானத்தைத் தம் இதயங்களுக் குள்ளேயே புதைத்துக் கொண்டிருக்கிறார்கள் அண்ணனும் தங்கையும். வயதுவந்த பெண்ணான தன் தங்கைக்கு நேர்ந்த அவமானம் வெளிப்பட்டு விட்டால் அவள் எதிர்காலம் நாசமாகி விடுமே என்று ராஜசேகர் அந்த விஷயத்தை சமாதியாக்கி விட்டான் என்று மஞ்சுளாவுக்குத் தெரியாது.

13

மது டெல்லி ஏர்போர்ட்டில் இறங்கும் வரை தன் காரியத்தை எப்படிச் சாதித்துக் கொள்வது என்று புரியாமல் குழம்பிக் கொண்டேயிருந்தான். யோசித்த வாறே எர்போர்ட் புக் ஸ்டாலுக்கருகில் வந்து சுற்று முற்றும் பார்த்தான், ரஞ்சனி ரிடர்ன் டிக்கெட்டுடன் காத்துக் கொண்டிருக்கிறாளோ என்று. அங்கே நாலைந்து இளம் பெண்கள் வம்பளந்துக் கொண்டிருந்தார்கள். 'உங்களில் யார் ரஞ்சனி?' என்று கேட்கும் தைரியமில்லை 'அவனுக்கு. அப்படியே காத்துக் கொண்டிருந்தான்.

மாடல் போட்டோகிராபராக விரும்புவோர்க்கு பயம், கோழைத்தனம் இருக்கக் கூடாது. எங்கே அழகானப் பெண்கள் தென்பட்டாலும் அவர்களுக்குக் கச்சிதமான உடல் கட்டு, முகவெட்டு இருக்கிறதா என்று கூர்ந்து கவனிக்க வேண்டும். அவை நன்றாயிருந்தால், தொலைவிலிருந்தபடியே அவர்கள் பேசும் விதம், உதடு அசைவு, உடல் அசைவு, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விதம் இவைகளை நன்றாய் கவனிக்க வேண்டும். பரவாயில்லை, மாடலாக முடியும் என்றெண்ணினால் அடுத்த நிமிஷமே சிரித்த முகத்துடன் தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டு அவர்களிடம் போகவேண்டும்.

ஆணாயிருந்தால், 'ஹலோ ஹேண்ட்ஸம்' என்றும், பெண்ணாயிருந்தால், 'ஹலோ ஸ்மார்ட்' என்றும் தொடங்கி விட்டால் அவர்கள் கவனம் திரும்பும். இது பொதுவான மனித பலவீனம். அப்பொழுது தம் விசிடிங் கார்டை எடுத்து நீட்டவேண்டும். அதைப் பார்த்த பிறகு முன்பின் அறியாத அந்த ஆள் எதற்காக தம்மை அவ்வாறு சொன்னார் என்று புரிந்து விடும் அவர்களுக்கு.

அப்பொழுது தம் தேவையை வெளிப்படுத்த வேண்டும் போட்டோகிராபர்கள். இது மாடல்களைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளும் வழி. படித்தவர்களாய், நாகரிக மானவர்களாய் தென்படுபவர்களிடம் இவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும்.

அதுவே சாதாரணமாய், நகர வாழ்க்கையைப் பற்றியே தெரிந்திராத பெண்கள் தென்பட்டால், அவர் களிடம் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தவறாய் புரிந்துக் கொள்ள வழியுண்டு

மாடல்களுக்காக ஒரு பக்கமும், மாறுகின்ற ஜனங் களின் பழக்க வழக்கங்களை இன்னொரு பக்கமுமாய் கவனித்துக் கொண்டே வர வேண்டும். அது ஏன் என்றால் மாறுகின்ற ஜனங்களை கவனமாய் கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்தால் அவர்களைக் கவரும் விதத்தில் நம் விளம்பரப்பட உற்பத்தியை மாற்றிக் கொண்டே போகலாம். அவ்வப்போது இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் மிகச் சிரத்தையாய் தன் சீடனைப் போன்ற மதுவுக்கு எடுத்துச் சொல்லுவான் ராஜசேகர். ஆனாலும் திடீரென்று ஒரு புதுப் பெண்ணோடு போய் பேசுவதென்றால் நடுக்கம், பயம் மதுவுக்கு.

அதற்குள் ஒரு பெண் மதுவையே கூர்ந்து பார்த்தபடி கிட்டே வந்தாள். ''நீங்கதானா அருண்குமார்?''கேட்டாள்.

''ஆமாம். நீங்க ரஞ்சனிதானே?''

"எஸ். இந்தாங்க டிக்கெட்" என்று கைப்பையிலிருந்து ப்ளைட் டிக்கெட்டை எடுத்துத் தந்தாள். அதைப் பெற்றுக் கொண்டு நன்றி சொல்லிவிட்டு இரண்டடி நகர்ந்ததுமே மின்னலாய் ஒரு ஐடியா தட்டுப்பட்டது.

லேசாய் விசிலடித்துக் கொண்டே ஏர் போர்ட்டிற்கு வெளியே வந்து டாக்சியில் ஏறி 'கரோல் பாக்' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து கொண்டான்.

டாக்சியை விட்டு இறங்கியதுமே ரூபவதியின் வீட்டைச் சட்டென்று அடையாளம் புரிந்து கொண்டான். சமயத்தில் ரூபவதியின் தாய் தந்தையர் இல்லாமலிருந்தால் தான் அவன் பிளான் வெற்றியடையும். அவனால் டில்லியில் தங்க முடியாது. இன்று சாயந்திரமே புறப்பட்டு விடவேண்டும். தான் சுமீதாவின் போட்டோக்களை எடுத்துக் கொண்டு போனால்தான் ராஜசேகர் கோர மண்டல் டைரக்டர் வாசுவை ஒப்புக் கொள்ளச் செய்ய முடியும். சட்டென்று பப்ளிக் டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தான்.

ரூபவதியின் வீட்டிற்குப் போன் பண்ணினான்— அவள் தாய் தந்தையர் வீட்டிலிருந்தால் வெளியே அனுப்பி வைத்துவிட எண்ணி.

"ஹலோ, யார் பேசறது?"—மது போனில் கேட்டான்.

"நான்தான் பூபேந்தர் பேசறேன்"

"ஹலோ அங்கிள்..."—சட்டென்று சொல்லிவிட்டான்- அவ்வளவு பெரிய நகரத்தில் யாரோ ஒருத்தன் அவரை 'அங்கிள்' என்று கூப்பிட மாட்டான் என்ற உத்தேசத்தில்.

மதுவின் தந்திரம் பலித்தது.

"யாரு? தனஞ்சயனா?"

"எஸ்... அங்கிள்... தனஞ்சயன்தான் பேசறேன். மம்மீ உங்களையும் ஆன்ட்டியும் அர்ஜென்ட்டாய் வரச்சொன்

னாங்க. வெரி அர்ஜென்ட். பிளீஸ்... க்விக்...''— கூடுமான வரையிலும் பரபரப்பையும் கலவரத்தையும் கூட்டிக் கொண்டான் தன் குரலில். தன் குரல் தனஞ்சயன் குரல் போலில்லையே என்று கண்டுப்பிடித்து விடுவார்களோ என்ற பயம் மதுவுக்கு.

''வீட்டில்தான் போன் இருக்கே, மம்மியே பேசியிருக் கலாமே?''

கிழவன் பலே ஆள்தான் என்றெண்ணிக் கொண்டான் மது.

''போன் கெட்டுப்போயிடுத்து அங்கிள், அர்ஜென் டாய் வரணும் நீங்க''

''எதுக்கு?''

''என்னவோ... அர்ஜென்ட்''— போனை வைத்து விட்டான். அதிகமாய் பேசினால் விவரம் கேட்கத் தொடங்கி விடுவார், பிடிபட்டு விடலாம் என்றெண்ணி வேகமாய் நடந்து ரூபவதி வீட்டிற்கெதிரே இருந்த பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றான்— தன் உபாயம் பலிக்கிறதா இல்லையா என்று கவனிக்க.

நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டேயிருந்தான். மதுவின் கண்கள் மின்னின. ரூபவதியின் தாய் தந்தையர் வெளியேவந்தார்கள். அவர்கள் போய் போன்பண்ணியது பொய் என்று தெரிந்துக் கொண்டு திரும்பி வருவதற்குள் காரியத்தை முடித்துக் கொண்டு வெளியேறிவிட வேண்டும்.

இருவரும் ஆட்டோவில் ஏறினார்கள். உடனே அந்த வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள். வேகமாய் நடந்து வந்து கதவிற்கு முன்னால் நின்று காலிங் பெல்லை அழுத் தினான் மது. ஒரு நிமிஷங் கழித்து கதவு திறந்து கொண்டது. எதிரே சுமீதா. அவளை மது பார்த்தது இதுதான் முதல் தடவை. பிரம்மிக்க வைக்கும் அழகு. அற்புதமான உடற்கட்டு. அதனால்தான் பாஸ் மாடலாய்

தேர்ந்தெடுத்தார் போலிக்கிறது என்றெண்ணிக் கொண்டான் தனக்குள்.

"நான் ராஜசேகரின் அஸிஸ்டென்ட். வேலையாய் டில்லிக்கு வந்தேன்.வரும்போது உங்களைப் பார்த்துவிட்டு வரச் சொல்லியிருந்தாள் உங்க அக்கா ரூபவதி"

"வாங்க... வாங்க.." என்றாள் சுமீதா— உபச்சாரத்திற்காக. ஆனாலும் அவளுக்குச் சந்தேகமாயிருந்தது. தன் அக்கா ராஜசேகரைப் பற்றிச் சொல்லியிருந்தாளே யொழிய மது என்ற ஆளைப்பற்றிச் சொன்னதே இல்லை, டில்லியில் பட்டப்பகலிலேயே நிறைய திருட்டுக்கள் நடக்கின்றன, அதுதான் அவள் பயம்.

இருவரும் பேசிக்கொண்டே உட்கார்ந்திருந்தார்கள். மது அவளோடு பேசிக் கொண்டே சுற்றிலும் கூர்ந்து பார்த்தான். எதிரேயிருந்த ஷோ கேஸில் தனக்குத் தேவையான ஆல்பங்கள் தென்பட்டன. தான் உட்கார்ந்திருந்த இடத்திற்கும் ஆல்பம் இருந்த ஷோகேஸுக்கும் இடையிலிருந்த தூரத்தை மனதிற்குள்ளேயே கணக்கிட்டுக் கொண்டான். ஆனால் சுமீதா உள்ளே போக முயற்சி எதுவும் பண்ணவில்லை. நேரமாகிக் கொண்டேயிருந்தது. வெளியே போன பெற்றோர்கள் எந்தச் சமயத்திலும் திரும்பி விடலாம்.

மதுவின் இதயம் வேகமாய் துடித்தது.

"கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தரமுடியுமா? அதே கையோடு கொஞ்சம் காபியும் தந்தால்... ஒன்றுமில்லை, தலை வலி... அவசரம் ஒண்ணுமில்லை" என்றான்.

சுமீதா சந்தேகத்தோடு தான் உள்ளே போனாள்.

மின்னல் வேகத்தில் நகர்ந்தான் மது ஷோகேசை நோக்கி, இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. சுமீதா காபியைக் கொண்டு வருவதற்கும் தாய் தந்தையர் ஆட்டோவிலிருந்து இறங்குவதற்கும் சரியாயிருந்தது.

14

"போட்டோ எப்படி விழுந்திருக்கு?"—சித்தரஞ்சன் பைப்பைப் புகைத்துக் கொண்டே கேட்டான்.

"நல்லாத்தான் விழுந்திருக்கு சார். எக்ஸாட் ஷுட்டிங் ப்ளேசைக் கூட தெரிஞ்சுக்கிட்டோம் அவற்றால்," என்றான் கைலாசன்.

"அப்படீன்னால் அந்த ஸ்விம்மரைக் கூப்பிடு" என்றான் சித்தரஞ்சன் கையிலிருந்த பைப்பின் புகையை ஆஷ்ட்ரேயில் தட்டி விட்டு— போட்டோக்களையே உற்றுப் பார்த்துக் கொண்டே ஆள் ஐந்தடி இரண்டங் குலம் இருந்தான். பலமான உடற்கட்டு. வயது நாற்பத் தைந்து இருக்கலாம். கூலிங் கிளாஸ் கண்களிலிருந்து அவன் பார்வை எப்படி இருக்கும் என்று யாராலும் தெரிந்துக் கொண்டு விட முடியாது. கண்ணாடியில் லாமல் அவனை யாராலும் அதிகமாய் பார்த்துவிட முடியாது.

அதிகமாய் பேசமாட்டான். சுற்றமாட்டான். தன் ஏர் கன்டிஷன் அறையில் உட்கார்ந்துக் கொண்டு போன் மூலமாகவே எல்லா காரியங்களையும் பண்ணிக் கொண்டு விடக் கூடிய சாமர்த்தியசாலி. 'டாஷிங் அட்வர்டைஸிங் ஏஜென்சி' என்றால் இந்தியன் விளம்பர உலகில் தெரியாத வர்கள் இருக்க முடியாது.

இந்தியாவில் கோடிக்கணக்கில் வியாபாரம் பண்ணும் பெரிய கம்பெனிகள் இருபத்தைந்து சதவீதம் டாஷிங் ஏஜென்சிக்கே தம் விளம்பரங்களை ஒப்படைத்தன என்றால் அவன் சாமர்த்தியத்தைத் தெரிந்துக் கொண்டு விடலாம்.

யாருடைய பலவீனம் எது என்பதைப் பார்த்த மாத்தி ரத்திலேயே தெரிந்துக் கொண்டு விடுவான் சித்தரஞ்சன்.

சாமர்த்தியமாய் அந்த பலவீனத்தின் மீது உதை கொடுத்து தனக்குத் தேவையான வியாபாரத்தைப் பெற்றுக் கொண்டு விடுவான். தன்னை யாராவது எதிர்த்து நின்றாலோ, போட்டிக்கு வந்தாலோ, அவர்களை நிர்மூல மாக்கி விடுவது அவனுக்கே கை வந்த கலை.

உயரமான, பலசாலியான ஒரு ஆள் உள்ளே வந்தான்.

"உனக்கு நீச்சல் வருமா?"

"வரும் சார்!"— கூழாங்கல்லை தகர டப்பாவில் போட்டுக் குலுக்கினாற் போலிருந்தது அவன் பேசியது.

"தண்ணீரில் மூழ்கி எவ்வளவு நேரம் இருக்க முடியும் உன்னால்?"

"இருபது நிமிஷம் இருப்பேன்."

"விஷயத்தையெல்லாம் கைலாசன் சொல்லிட்டானா?"

"சொல்லிட்டாரு சார். அவரு என்னிடம் தந்த போட் டோவிலுள்ள பொண்ணை முடிச்சுடணும்"

"தட்ஸ் குட். கெட்டிக்காரத்தனமாய் காரியத்தை முடிச்சுடு. நீ பண்ணியதாகவோ, நான் பண்ணச் சொன்ன தாகவோ, இது திட்டமிட்டுச் செய்த கொலைன்னோ சந்தேகம் வந்தால் நீ உயிரோடு இருக்கமுடியாது. போ"— மூக்குக்கண்ணாடியைக் கழற்றி, அவனைக் கூர்ந்து பார்த் தான் சித்தரஞ்சன்.

சித்தரஞ்சனின் பார்வையிலிருந்த கூர்மைக்கு கொலைத் தொழிலிலேயே ஊறியிருந்த ஸ்விம்மரே கூட நடுங்கிவிட்டான்.

ஸ்விம்பர் வெளியே வந்ததுமே கைலாசன் அவனை வேறொரு அறைக்குக் கூட்டிச் சென்றான். "நீ ரெடியா?"

"எஸ் சார்" என்று தன் ஸ்விம்மிங் டிரஸ்ஸிற்குள் ஒளித்து வைத்திருந்த லேசான பிளாஸ்டிக் ட்யூபை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொண்டான்.

o o o

காலை மணி பத்து.

ஜாய்... ஜாய் கூல் டிரிங்க்கின் விளம்பரப் படம் சம்பந்தப்பட்ட இரண்டாவது நாள் ஷூட்டிங் வேலை தொடங்கி விட்டது— ஏரிக்கரையில்.

மாடல்கள் ஷூட்டிங் போட்டிற்குள் ஏறிக்கொண்டார்கள். மது காலையில் டில்லிக்குப் போய்விட்டதால் கிளாப் வர்க் ராஜசேகரின் ஆபீஸ் அஸிஸ்டென்ட் சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது. சந்திரன் கிளாப் போர்டுடன் மாடல்களின் போட்டிற்குள் ஏறுவதற்கு முன்னால் சாக்பீசால் கருப்பு கிளாப் போர்டின் மீது ப்ரொடக்ஷன் நம்பர் 42, ஜாய்...ஜாய் கூல் டிரிங்க், சீன் நம்பர் 1, ஷாட் நம்பர் 18, டேக் நம்பர் 1 என்று எழுதிக் கொண்டான்—கிரீஷ் தந்த ஆலோசனை பிரகாரம்.

ராஜசேகரும் கிரீஷும் கேமிரா போட்டிற்குள் ஏறிக் கொண்டார்கள், ராஜசேகர் கேமிராவை ஸ்டாண்டிலிருந்து எடுத்துத் தோளில் சார்த்திக்கொண்டான். ராஜசேகர் எப்பொழுது எந்த ஷாட்டை எடுப்பான் என்று யாருக்கும் சொல்லவே மாட்டான், அசோசியேட்டான தன்னிடமே சொல்லாததற்கு கிரீஷுக்கு வருத்தமாயிருக்கும்.

"மாண்டேஜ் ஷாட் ரெடி..." என்றான் கிரீஷ். கீதாவும் ரூபவதியும் செய்து காட்டிய உணர்ச்சிகள் ராஜசேகருக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாய் ரூபவதி இரண்டு மூன்று முறை செய்து காட்டியபோதும் ராஜ சேகருக்குத் திருப்திகரமாயில்லை.

தான் இருந்த படகை மாடல்களின் படகுக்கருகில் கொண்டு போகச் சொன்னான். படகு கிட்டே வந்ததுமே அதுவரையிலும் ஹோல்டிங் நிலையிலிருந்த கேமிராவை கிரீஷிடம் எடுத்துத் தந்தான் ராஜசேகர்.

"பார் ரூபவதி..... ஒவ்வொரு உணர்ச்சிகளையும் எடுத்துக்காட்டுவதற்கும் ஒவ்வொரு முகபாவம் வேண்டும்:

உனக்குத் தெரியும் ரொமான் எக்ஸ்பிரஷன் எனக்குப் பிடிக்காதுன்னு. தனி ரகமாயிருக்கணும்னு நான் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கிறேனோ அவ்வளவு பிரயாசையை நீங்களும் எடுத்துக்க வேண்டியது.

இது கம்பைன்ட் உழைப்பு. இது உற்பத்தித் துறை. டோன்ட் மேக் இட் ரொமான். கவர்ச்சியாய் உடுத்திட்டு வந்து உங்க உடலழகை ஒய்யாரமாய் காட்டிட்டுப் போக இதொன்றும் சினிமா இல்லை. கோடிக்கணக்கில் புழங்கும் வியாபாரம். அதன் விற்பனை நாம் பண்ற விளம்பரத்தின் மீதே ஆதாரப்பட்டுட்டிருக்கு. இப்போதெல்லாம் உன்னிடம் தொழிலின் மீது அக்கறையோ, உன் அழகின் மீது ஜாக்கிரதையோ குறைஞ்சுடுத்து. தொழிலை விட்டுட்டு வேறு விஷயத்தின் மேல் கவனத்தைச் செலுத்தினால் பாதிக்கப்படுவாய்''—ராஜசேகரின் வார்த்தைகள் நேரிடையாய் வெளிவந்தன.

திடுக்கிட்டு விட்டார்கள் ரூபவதியும் கிரீஷும். நேற்றிரவு தாம் பண்ணப் போய் பிடிபட்ட சம்பவத்தின் கோபத்தால்தான் ராஜசேகர் இவ்வாறு பேசினான் என்று ஊகித்துக் கொண்டார்கள்.

எங்கோ கவனமாயிருந்த ரூபவதி அதற்குள் ரிஹர்சலுக்காக ஒரு மணி நேரத்தை வீணாக்கியிருந்தாள். தான் எதிர்பார்த்த பலன் மாடல்களிடம் வராதவரை கேமிராவைத் திறக்கமாட்டான் ராஜசேகர்.

''சோப்பைப் பற்றி பிலிம் எடுக்கும்போது அந்த சோப் தன் உடம்பிற்கு மிருதுத்தன்மையையும், புத்துணர்ச்சியையும், வாசனையையும் கொடுப்பது போன்ற உணர்ச்சி மாடல் முகத்தில் தென்படவேண்டும். அதுவே புடவையைப் பற்றியதாக இருந்தால் அந்தப் புடவை தனக்கு மிக அழகைக் கொடுப்பதாய் பெருமையும், மகிழ்ச்சியும் அடைய வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் அதனதன் தன்மையைப் பொறுத்து ஒவ்வொரு விதமான உணர்ச்சியை வெளிக் காட்ட வேண்டியிருக்கும்''

ராஜசேகரின் பேச்சைக் கேட்ட கிரீஷுக்கு அதுதான் ரூபவதிக்கு ராஜசேகர் தரும் கடைசி சான்ஸ் என்று புரிந்து விட்டது. நேற்றிரவு அதே விஷயத்தை ராஜசேகர் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

ரூபவதியின் மேல் இரக்கம் ஏற்பட்டது கிரீஷுக்கு.

"மாடல்கள் ஆரோக்கியமாய், பலமாய் இருக்க வேண்டும். மணிக்கணக்கில் ஒரேயடியாய் வேலை பண்ண வேண்டியிருக்குமாதலால் அத்துடன் டயட் கன்ட்ரோல் பண்ணிக் கொள்ள வேண்டும் உடல் பெருக்காமலிருக்க, நல்ல தூக்கம் வேண்டும், தூக்கமில்லாமையால் கண்களைச் சுற்றிக் கருவளையம் ஏற்படாமலிருக்க. உடற்பயிற்சி பண்ண வேண்டும். மேக்கப்பைப் பற்றி நன்றாய் தெரிந் திருக்க வேண்டும்— தான் எப்படிப்பட்ட மேகப்பில் கேமிராவுக்கு முன்னால் அழகாய் தென்படமுடியும் என்றுத் தெரிந்துக் கொள்வதற்கு. உடற்கட்டை சதா காப்பாற்றிக் கொண்டு வரவேண்டும். மேக்கப்பை விதம் விதமாய் போட்டுக்கத் தெரிந்திருக்கவேண்டும்— டு சேஞ்ஜ் தி கவுண்டர்ஸ் ஆஃப் யுவர் ஃபேஸ். ஜுரம், ஜலதோஷம் வராமல் பார்த்துக்க வேண்டும். விதம்விதமான காஸ்ட்யூம்களை எந்தெந்த சந்தர்ப்பங்களில் எந்தெந்தச் சூழ்நிலையில் பயன்படுத்த வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். தலை, கைகள், கால்கள், விரல்கள், உதடுகள், பற்கள் எப்பொழுதும் அழகாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். ஓய்வு கிடைத்த பொழுதெல்லாம் விதம் விதமான முக உணர்ச்சிகளைக் கண்ணாடியில் பண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.....தொழிலின் மேல் கொஞ்சங்கூட பற்றில்லாத உன்னைப் போன்றவங்க தொழிலுக்கே ஆபத்து. யுவர் இமேஜ் ஈஸ் யுவர் ப்ரெட் அண்ட் பட்டர். மைன்ட் இட் அலட்சியமாய் வேலை பண்ணி உன் இமேஜைக் கெடுத்துக்காதே."— அவ்வப் போது மாடல்களை இவ்வாறு எச்சரிப்பான் ராஜசேகர்— அவன் மூடைக்கெடுக்க நேர்ந்தால்.

மாடல்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகளைக் கூட ராஜசேகர் அவ்வளவு ஆழ்ந்து சிந்தித்திருப்பது எல்லோருக்கும் வியப்பளிக்கும்.

இன்றைக்கு ராஜசேகரின் மூட் ஏன் கெட்டுவிட்டது என்று ரூபவதிக்கும் கிரீஷுக்கும் மட்டுமே தெரியும்.

"நாம் எடுத்துட்டிருப்பது கூல்டிரிங்க்கைப் பற்றி. அதன் பேர் ஜாய்...ஜாய். அதன் பேரிலேயே உற்சாகம் தென்படுகிறது. நீ அந்த கூல்டிரிங்க்கை குடித்துட்டு விளக்கெண்ணெய் குடிச்சாப்போல முகத்தை வைத்துக் கிட்டால் ஒரு பாட்டில் கூட விற்பனையாகாது.....அந்த டிரிங்கில் இருக்கிற ருசி உன்னை மெய்மறக்கச் செய்துடுத் துன்னும், நீ ஒரு வாய் குடிச்சதுமே உன் நாக்கில் தங்கி யிருக்கும். அந்த ருசி உன் நாக்கைச் சப்புக் கொட்டுவது போல செய்து விட்டதென்றும், அந்த மெய் மறப்பால் உன் கண்கள் மூடிக்கொண்டு விட்டனவென்றும் உன் முகத்தில் நீ காட்டவேண்டும். மூடுக்கு வா. என் டைமைப் பாழடிக் காதே. டு வாட் ஐ ஸே."- தீவிரமாய் சொன்னான், ராஜ சேகர் ரூபவதியையே உற்றுப் பார்த்தபடி.

ராஜசேகர் சொன்னதைக் கேட்டு ரூபவதிக்குக் கோபம் வரவில்லை. தன் தொழிலைத் தான் எவ்வளவு தூரம் அலட்சியப்படுத்துகிறோம் என்பதை ராஜசேகர் வாயிலாய் தெரிந்து கொள்ள நேர்ந்ததற்கு வெட்கமடைந்தாள்.

"சாரீ சார்...ஓ.கே. சார்...நான் ரெடி" என்றாள் உறுதியாய் ரூபவதி.

ராஜசேகரின் படகு திரும்பவும் பழைய இடத்திற்கு வந்து நின்றது.

ரிஹர்ஸல் ஷாட்டைத் திரும்பவும் பண்ணிக் காட்டினாள் ரூபவதி. திருப்தியடைந்தான் ராஜசேகர்.

"சைலென்ஸ் ப்ளீஸ்...ஷாட்ரெடி...க்ளாப்" – கத்தி னான்கிரீஷ். சந்திரன் படகிலிருந்து எழுந்திருந்து கிளாப்

போர்டை ரூபவதிக்கு முன்னால் காட்டினான். தோளில் கேமிராவுடன் படகின் விளிம்பின் மீது ஏறினான் ராஜசேகர்.

தொழிலில் ஆர்வமுடைய போட்டோகிராப்பர்கள். மலை உச்சியில் நின்று கூட கேமிராவை இயக்குவார்கள், அது மிக ஆபத்து என்று தெரிந்தும் கூட. அச்சமயங்களில் சில போட்டோகிராப்பர்கள் தம் உயிரையும் இழப்பது உண்டு.

யாருமே இதுவரை காட்டியிராத அழகுகளை சரியான கோணத்திலிருந்து காட்டவேண்டும் என்று ராஜசேகர் விரும்புவான். கேமிரா படகு மெதுவாய் நகர்ந்துக் கொண்டே மாடல்கள் இருந்த படகை நோக்கிச் செல்லத் தொடங்கிற்று.

ரூபவதியின் முகம் மெல்ல மெல்ல அருகே வந்து கொண்டிருந்தது. கேமிராவில் உள்ள ரீல் அவள் அழகை யும் எடுத்துக் காட்டிய உணர்ச்சிகளையும் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டிருந்தது. ராஜசேகரின் தோளில் தொங்கிக் கொண்டிருந்த கேமிரா அவனுக்குப் பாரமாய் தோன்றிற்று. ஆனாலும் இன்னும் அப்படியே மாட்டிக் கொண்டிருந்தான்.

லேசான படகு விளிம்பின் மேல் நின்றுக் கொண்டு மெல்ல மெல்ல நடந்துக் கொண்டே கேமிராவை இயக்கிக் கொண்டிருந்த ராஜசேகர் தண்ணீரில் விழுந்துவிடாமல் அவன் இடுப்பை அழுத்தமாய் கட்டிப் பிடித்துக் கொண்டே நிமிர்ந்து ராஜசேகரையே பார்த்துக் கொண்டிருந்தான் கிரீஷ்.

சிருஷ்டிக்கு மறு சிருஷ்டியைப் படைக்கக்கூடிய கேமிரா வில் கைத்தேர்ந்த ராஜசேகரையே எல்லோரும் மந்திரத்திற் குக் கட்டுப்பட்டவர்களைப் போல பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

ரூபவதி இருந்த படகிற்கு அந்தப் பக்கத்திலிருந்து தண்ணீரில் ஒரு பிளாஸ்டிக் ட்யூப் மெல்ல மெல்ல படகுக்கு அருகில் வந்து கொண்டிருந்தது.

ரூபவதி நடித்துக் கொண்டே படகிற்குக் கோடியில் போய் அதன் விளிம்பில் நின்றுக் கொண்டு பாட்டிலைக் கையிலெடுத்துக் கொண்டு குனிந்தாள். அதனடியில் மிஞ்சியிருந்த பானம் திறந்திருந்த அவள் உதடுகளின் மேலும் நீட்டியிருந்த நாக்கிலும் வந்து விழுந்து கொண்டிருந்தன.

கேமிரா பீலிம் சுற்றிக் கொண்டிருந்த சப்தத்தைத் தவிர வேறெந்த சப்தமும் இல்லை.

ரூபவதியின் நடிப்பு முடிய இன்னும் ஓரிரு விநாடிகள் இருந்தபோது— படகுப் பக்கமாய் தண்ணீருக்குள்ளிருந்து ஒரு தலை வெளியே வந்தது மெதுவாய்.

படகுக்கு மறு பக்கத்திலிருந்த யூனிட்டைச் சேர்ந்தவர் களின் கண்களில் அது பட வாய்ப்பில்லை.

ரூபவதியின் இடுப்பிலிருந்த காஸ்ட்யூம்சில் ஒரு பாகமாய் கீழே தொங்கிக் கொண்டிருந்த பூமாலை அந்த ஆளின் கைக்குள் போயிற்று. அடுத்த விநாடி வீலென்ற ரூபவதியின் அலறல் நிசப்தமாயிருந்த அவ்வெல்லையில் மரண ஓலமாய் எதிரொலித்தது. ரூபவதி தொப்பென்று தண்ணீரில் விழுந்து விட்டாள். ராஜசேசர் திடுக்கிட்டு, கேமிராவை அணைத்து விட்டான்—ரூபவதி கேமிராவின் ஃபிரேமிலிருந்து மறைந்ததுமே.

பார்த்துக் கொண்டிருந்தபோதே நிகழ்ந்துவிட்ட இக் கொடிய விபத்து எல்லோரையும் திக் பிரம்மையடையச் செய்தது.

எல்லோரும் பரபரப்போடு படகு விளிம்பிற்கு ஓடிவரத் தொடங்கினார்கள். அது மிக ஆழமான குளம். குதித்து

அவளைக் காப்பாற்ற முனைவதற்குள் இருபது விநாடிகள் கழிந்து விட்டன.

''க்விக்... ஸேவ் ஹெர்...''- ராஜசேகர் கத்தியது அவ்வெல்லை யெல்லாம் எதிரொலித்தது,

அதுவரை அமைதியாயிருந்த அவ் வெல்லையில் கூச்சலும் குழப்பமும் சூழ்ந்து கொண்டன.

படகை இழுத்துக் கொண்டிருந்த ஒரு மோட்டார் போட்டின் டிரைவர் சட்டென்று நீரில் குதித்தான். அதைத் தொடர்ந்து இன்னொரு டிரைவரும் குதித்தான். அவனுக் குப் பின்னால் சந்திரனும் குதித்து விட்டான்.

எங்கும் அவள் ஜாடையைக் காணோம். விபத்து மூலம் விழுந்திருந்தால் விழுந்த உடனேயே ஒரு முறை யாவது மேலுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அவள் ஜாடையே இல்லை. மூவரும் வியந்து போனார்கள். ஆனாலும் விடாப்பிடியாய் மீனைப்போல நான்கு பக்கங் களிலும் நீந்தி அவளைத் தேடத் தொடங்கினார்கள். மிக வேகமாய் தொடர்ந்து முப்பது நிமிஷங் கழிந்திருக்கும்.

எதிர்ப்பாராத அந்த அதிர்ச்சியான சம்பவம் கூட ராஜசேகரின் யோசனைகளைத் தடுக்க முடியவில்லை. மூழ்கியவள் என்னவாகியிருப்பாள்? முதலையோ, ஷார்க் மீனோ இழுத்துக் கொண்டு போயிருக்கும் என்று நினைத்துக் கொள்வதற்கும் அந்த தடாகத்தில் அப்படிப் பட்ட ராட்சச ஜலராசிகள் இருக்க வாய்ப்பில்லையே... பின்னே... ராஜசேகரின் யோசனைகள் ஸ்தம்பித்துப் போய் விட்டன, சித்தரஞ்சனைப் பற்றி நினைவுக்கு வந்ததுமே.

55 வது செகண்டில் சந்திரனுக்கு ரூபவதியின் கால் தட்டுப்பட்டது. அல்வளவுதான். பலமாய் இழுத்து வளைத்துக் கொண்டான் அவள் கால்களை. வெளியே இழுப்பதற்குத் தன் பலத்தையெல்லாம் பயன்படுத்தியும் லாபமில்லாமல் போய்விட்டது. அதனால் சந்திரனுக்கு சந்தேகம் வந்தது. அதற்குள் அறுபது விநாடிகள் கழிந்து

விட்டன. முச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு மனிதன் பிழைத்திருக்கக் கூடிய நேரம் ஏறக்குறைய கழிந்துவிட்டது. சந்திரன் கடைசி முறையாய் தன் உடம்பிலிருந்த சக்தியை யெல்லாம் தன் தோளில் இழுத்துப் பிடித்துக் கொண்டு ராஜசேகர் பால் தனக்கிருந்த நன்றியால் ஏற்பட்ட மன பலத்தைத் துணையாக்கிக் கொண்டு முதலையின் பிடியைப் போல பலமாய் இழுத்தான் அவ்வளவுதான்! அவள் யார் கையிலிருந்தோ—ஜந்துவின் வாயிலிருந்தோ நழுவிப் போய் வந்துச் சேர்ந்தாற்போல சந்திரனின் கைக்குள் வந்தாள்.

உடனே அவளை இருகைகளாலும் அணைத்துப் பிடித்துக் கொண்டு 'உப்' என்று தண்ணீரின் மேல் மட்டத் திற்கு வந்தான்.

எல்லோரும் ஒரு முறை அம்மாடா என்று மூச்சு விட்டுக் கொண்டார்கள். ஆனால் பிழைத்திருக்கிறாளா செத்துவிட்டாளா என்று புரியவில்லை அவள் தோற்றத் தைப் பார்த்தால்.

சந்திரன் அவளைத் தரதரவென்று படகை நோக்கி இழுத்து வந்தான். கலக்கத்தோடு பார்த்துக் கொண் டிருந்த எஞ்சிய மாடல்கள் அவளைப் படகிற்குள் இழுத் தார்கள். சந்திரன் சட்டென்று படகிற்குள் குதித்து ரூபவதியைக் குப்புறப் படுக்க வைத்து அவள் முதுகை பலமாய் அழுத்தத் தொடங்கினான். குடித்த நீரெல்லாம் அவள் வாயிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் வெளியே வரத் தொடங்கிற்று.

சந்திரன் முறுவலுடன் ராஜசேகரைப் பார்த்தான், நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டான் ராஜசேகர் ரூவதி பிழைத்து விட்டதற்கு.

சந்திரன் ரூபவதியை மல்லாக்கத் திருப்பி, குனிந்து அவள் வாயை பலவந்தமாய் திறந்து, தன் வாயால் மூடி

அழுத்தமாய் காற்றை உள்ளுக்குச் செலுத்தத் தொடங்கினான்.

ஹோதாவைப் பொறுத்துத் தன் உடலைத் தொடச் சம்மதிப்பாள் ரூபவதி. தான் ஏளனமாய் கருதக்கூடிய ஒரு ஆபீஸ் பையன் தன் அபார அழகிற்காக இல்லாமல் மனிதாபிமானத்துடன் மட்டுமே உயிர் தானம் பண்ணிக் கொண்டிருக்கிறான் என்றுத் தெரிந்தால் போலி கௌரவத்திற்கும் மனிதத் தன்மைக்குமிடையே எவ்வளவு மேடு பள்ளங்கள் உள்ளனவென்றோ, மனிதத் தன்மைக்கு முன்னால் அபார அழகுகள் எத்தனைப் .பள்ளத்தில் இருந்தனவென்றோ புரிந்திருக்கும். ஷுட்டிங்கை கேன்ஸல் பண்ணிவிட்டு ரூபவதியை மருத்துவமனையில் சேர்க்க உடனே ஏற்பாடு பண்ணினான், ராஜசேகர்.

அன்றைக்கு சுவர்ணாவைக் கொண்டு எடுக்க வேண்டிருந்த மீதி வேலையைக் கூட தள்ளிப் போட்டுவிட்டான்.

உயிரற்ற சடலம் போல் விழுந்துக் கிடந்த ரூபதியைப் பார்த்த ராஜசேகரின் இதயத்தைப் பிசைந்தெடுத்தது. அது அவன் ஆவேசத்தையும் சபதத்தையும் இன்னும் தூண்டிவிட்டது.

15

ஏரியில்,கரையிலிருந்து எவ்வளவு தூரத்தில் ஷுட்டிங் நடந்து கொண்டிருந்தது என்றும், அவ்விடத்தில் நீரின் ஆழம் எவ்வளவு என்றெல்லாம் மிக ரகசியமாய்த் தெரிந்து கொண்டு போட்ட பிளான் பாழாகி விட்டது..

சித்தரஞ்சனின் அகம் அடியுண்டது. அவனுள்ளிருந்த கோபம் படமெடுத்தாடத் தொடங்கிற்று, அவ்வளவு தான்... அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் ஆறடி உயரமுள்ள ஸ்விம்மரின் உடல் சவமாய் மிதந்தது சமுத்திரக்

கரையில். நீந்தப் போய், முடியாமல் செத்து விட்டான் என்று போலீசார் ரிபோர்ட் எழுதிக் கொண்டு ஃபைலை மூடிவிட்டார்கள்— ஒரு கைத்தேர்ந்த நீச்சல்காரனைப் பற்றி!

o o o

ரூபவதிக்கு நேர்ந்த கொலை முயற்சியைப் பற்றி வெளியே பரவிவிடாமல் பார்த்துக் கொண்டான் ராஜ சேகர். ஆசுபத்திரியில் நலமாகிக் கொண்டிருந்த ரூபவதி யிடம் சந்திரனைக் காவல் போட்டு விட்டு, உள்ளூரில் இருந்த ரூபவதியின் உறவினர்களுக்குப் போன் பண்ணி னான் — அவளை ஜாக்கிரதையாய் டில்லிக்குக் கொண்டு போய் சேர்த்து விடும்படி.

o o o

டில்லி ஏர்போர்ட்டில் டிக்கெட்டைப் பரிசோதித்துக் கொண்டிருந்த ஆபீசர் கேட்டார்— "யூ ஆர் மிஸ்டர் அருண்குமார்?" "எஸ்" என்று நிமிர்ந்துப் பார்த்த மது திடுக்கிட்டான். பக்கத்திலேயே இந்தியன் சொசைட்டி ஆப் அட்வர்டைஸ்மெண்ட்ஸின் சேர்மேன் சுதர்ஸன் நின்றுக் கொண்டிருந்ததைப் பார்த்து. ஒரு விநாடி அதிர்ந்து விட்டான். அவரை அவனுக்கு நன்றாய்த் தெரியும் அவன் பெயர் கூட தெரியும் அவருக்கு.

"ஹலோ மது... ஹௌ ஆர் யூ?"

"ஃபைன் சார்!"

"உன் பேரென்ன, மதுதானே? அருண்குமார் என் கிறாரே ஆபீசர்?" -வேலை மும்முரத்தில் பரபரக்க இருந்த ஆபீசர் அதைக் கேட்கவில்லை. மது நிம்மதியாய்ப் மூச்சு விட்டுக் கொண்டான்,

"தவறுதலாய் பேர் மாறிடுத்து சார்."

"அதுசரி, ராஜசேகர் ஏதோ பெரிய சவால் விட்டிருக் கானாமில்லெ? அதுவும் சித்தரஞ்சனின் மேலாமே? இண்டர் நேஷனல் புகழ் கிடைக்கணும்னா?"

அவரை எவ்வளவு சீக்கிரத்தில் கத்திரித்துக் கொள்வோமோ அவ்வளவு நல்லது என்று பட்டது மதுவுக்கு.

"அந்த விஷயமெல்லாம் எங்களிடம் சொல்லமாட்டார் சார் எங்க பாஸ். சரி, நான் வரேன் சார்" என்று யாரோ துரத்திக் கொண்டு வந்தாற்போல செக்யூரட்டரி செக்கை நோக்கி நடந்தான்.

ராஜசேகர் யாருக்கும் தெரியாமல் வைத்துக் கொள்ளச் சொல்லியிருந்தான் இந்தப் பிரயாணத்தைப் பற்றி. இந்தச் சமயத்தில் பார்த்தா வர வேண்டும் சுதர்ஸன்? மது யோசித்துக் கொண்டிருந்த போதே சுதர்ஸன் தன் நெடு நாளைய நண்பனான சித்தரஞ்சனுக்குப் போன் பண்ண டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தான்.

o o o

ராஜசேகர் வீடு திரும்பியபோது அங்கே காதம்பரி வந்திருந்தாள்.

காலையில் ராஜசேகர் ஷூட்டிங்கிற்குப் போனதுமே காதம்பரியின் பலவந்தத்தின் பேரில் அவள் வீட்டிற்குப் போனாள் மஞ்சுளா. டிரைவிங் ஓட்டக் கற்றுக் கொள்ள விரும்பிய மஞ்சுளாவுக்காக காரை எடுத்துக் கொண்டு மைதானத்திற்குப் போய் பிற்பகல் வரைக்கும் கற்றுக் கொடுத்து விட்டு அவளோடு தானும் வந்திருந்தாள் காதம்பரி.

"நானும் மஞ்சுளாவும் பொழுது போக்குக்காக ஷாப்பிங்கிற்குப் போயிட்டு வரலாம்னு இருக்கோம். போகலாமா?" என்று கேட்டாள் காதம்பரி.

மஞ்சுளாவைப் பார்த்தான் ராஜசேகர். அவளிடம் உற்சாகம் தென்பட்டது. "ஓ. கே" என்றான்.

ராஜசேகரின் முகம் ஏன் அவ்வாறு வாடியிருந்தது என்று தெரிந்துக் கொள்ளத் துடித்தார்கள் இருவருமே. ஆனால் துணிந்து கேட்க தைரியமில்லாமல் இருந்து

விட்டார்கள். ரூபவதிக்கு நேர்ந்த ஆபத்தை அவ்விருவரிடமும் சொல்லாமல் மறைத்தான் ராஜசேகர்.

காதம்பரியின் காரில் இருவரும் ஷாப்பிங்கிற்குப் போய் விட்டார்கள்.

மாலை ஆறுமணி யளவில் ஏர்போர்ட்டிலிருந்து நேராய் ராஜசேகரின் வீட்டிற்கு வந்தான் மது. ஷாப்பிங் கிற்குப் போயிருந்த மஞ்சுளாவும் காதம்பரியும் இன்னும் வீடு திரும்பவில்லை.

மது டில்லியிலிருந்து எப்பொழுது திரும்புவான், எப்பொழுது வாசுவிடம் போவோம் என்று குட்டிப் போட்ட பூனையாய் திரிந்துக் கொண்டிருந்த ராஜசேகர் மதுவைப் பார்த்ததுமே பரபரப்போடு எதிரே போய்— "கொண்டு வந்தாயா?" என்று கேட்டான்.

"கொண்டு வந்தேன் சார்."

"வெரி குட்! எவ்வளவு போட்டோ கொண்டு வந்திருக்காய்?"

"மூன்று சார்" என்று தான் ரூபவதியின் வீட்டில் திருடிய போட்டோக்களை எடுத்துக் காட்டினான். அதைப் பார்த்து விட்டுத் திருப்தியடைந்தவனாய் கோரமண்டல் ஃபைலை எடுத்துக் கொண்டு அவசரமாய் கிளம்பிக் கொண்டிருந்தபோது வெளியேயிருந்து மஞ்சுளாவும் காதம்பரியும் திரும்பி வந்தார்கள்.

"நான் வெளியே போறேன். திரும்பி வர ஒரு மணி நேரமாகும். உங்களால் முடிந்தால் நான் வரும் வரைக்கும் மஞ்சுளாவுக்குத் துணையாய் இருக்க முடியுமா?"- காதம் பரியைக் கேட்டான்.

காதம்பரி தலையாட்டினாள்.

ராஜசேகரும் மதுவும் பரபரப்பாய் வெளியே போய் விட்டார்கள். தான் வாங்கி வந்த சாமான்களையும் ராஜசேகருக்காக வாங்கிவந்த உல்லன் கோட்டையும் அவனிடம் காட்டத் துடித்தாள் மஞ்சுளா. ஆனால்

சந்தர்ப்பமே கிட்டவில்லை. ராஜசேகர் இதே தொழிலில் நீடித்திருந்தால் தன்னால் அவனோடு பகிர்ந்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பும் விருப்பங்களைத் தீர்த்துக் கொள்ள முடியாமல் போகும். எப்படியாவது ராஜசேகரை இந்தத் தொழிலிலிருந்து திசை திருப்பி வேறு பக்கமாய் இட்டுச் சென்றுவிட வேண்டும். அதற்குத் தேவையானால் காதம்பரியின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டுவிட வேண்டும் என்றெண்ணிக் கொண்டாள் மஞ்சுளா.

ராஜசேகரின் கார் விர்ரென்று அம்பாய் பறந்தது கோரமண்டல் ஆபீசை நோக்கி. எப்படியாவது சுமீதாவை மாடலாய் வாசுவைக் கொண்டு ஒப்புக்கச் செய்துவிட வேண்டும். சுமுகமாய் நடந்தேறிவிடும் என்றெண்ணிக் கொண்டிருந்த தன் ப்ராஜெக்ட் எதிர்ப்பாராதா இந்த போட்டோ மாறுபாட்டால் சிக்கலை வரவழைத்து விட்டது.

'க்றீச்'சென்ற ஓசையோடு கார் கோரமண்டல் ஆபீசுக்கு மெயின் கேட்டிற்கு முன்னால் வந்து நின்றது. இரண்டு இரண்டு படிகளாய் தாவி ஏறினான் ராஜசேகர். கலக்கமாயிருந்தது அவனுக்கு. எப்படி இதை இணங்கச் செய்வது என்று தீவிரமாய் யோசித்தவாறே வாசுவின் அறைக்குள் வேகமாய் நுழைந்தான்.

மது காரின் கதவுகளையெல்லாம் இழுத்து சாத்திவிட்டு, பூட்டிவிட்டு வந்து வாசுவின் அறைக்கு எதிரேயிருந்த சோபாவில் உட்கார்ந்துக் கொண்டான்.

நிமிஷங்களைக் கணக்கிட்டுக் கொண்டே உட்கார்ந் திருந்த மதுவுக்கு உள்ளே என்ன நடக்கிறதோ என்று பரபரப்பாய் இருந்தது. வாசு சுமீதாவையே ஒப்புக் கொள்வானோ அல்லது தரங்கிணிதான் வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பானோ? அந்த மனப் போராட்டம் அவனைத் திணற அடித்தால் உட்கார முடியாமால் எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடைப்பயிலத் தொடங் கினான்.

16

"ஹலோ!... யாரு...? சித்தரஞ்சனா?"

"ஹலோ!... குட் ஈவினிங் சுதர்ஸன். ஹௌ ஆர்யு?"- சித்தரஞ்சனின் குரல் கட்டையாய், முரட்டுக் குரலாய் வந்தது.

"அட, எப்படி கண்டுப் பிடிச்சீங்க?"

"அதுகூட கண்டுப் பிடிக்காவிட்டால் இந்தத் தொழிலில் இருக்கிறதே வீண்தான்! ஐம் ஐ கரெட்?" -தெளிவாய் மிடுக்காய் பதிலளித்தான் சித்தரஞ்சன்.

"ஆஃப் கோர்ஸ். இத்துடன் இரண்டு முறை போன் பண்ணிட்டேன் உங்களுக்கு. இப்பவாவது கிடைச்சீங்களே!"

"எனி அர்ஜென்ட்?" - போனில் பேசிக்கொண்டே 'இந்தியன் மாடல் வோல்ட்' என்ற ஆல்பத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த சிவப்புப் பேனாவால் சிலர் போட்டோக்களின் மேல் குறியிட்டுக் கொண்டிருந்தான்.

"அர்ஜென்ட் இல்லாவிட்டாலும் சில விஷயங்களைத் தெரிஞ்சுக்கலாம்னுதான்... ஒரு விஷயத்தைச் சொல்லலாம்னு தான்..."

"மொதல்ல நீங்க சொல்ல நினைச்சதைச் சொல்லிடுகங்க."

பிறர் பேசும் எந்தப் பேச்சிலுமே தனக்கு லாபம் இருக்கிறதா என்றுதான் கவனிப்பான் சித்தரஞ்சன்.

"இன்னிக்கு மதுசூதனன் - அதான் ராஜசேகரின் அசிஸ்டென்ட் டில்லிக்கு வந்திருந்தான்..."

"வரலாம். இதில் என்ன ஆச்சரியம்?"

"ஆனால் அவன் அருண்குமார் என்ற பெயரில் பிரயாணம் பண்ணினான்."

சித்தரஞ்சனின் கர்ண கடூரமானச் சிரிப்பு போனில் கேட்டது சுதர்சனுக்கு.

திடீரென்று சித்தரஞ்சனின் சிரிப்பு நின்று விட்டது.

"பிரயாணத்தை ரகசியமாய் வெச்சுக்கணுங்கிற முயற்சி போலிருக்கு. தாங்க்யூ ஃபர் யுவர் லிட்டில் பிட் யூஸ்ஃபுல் இன்ஃபர்மேஷன். இனி நீங்க வேண்டியதைக் கேளுங்க"

எப்படிப்பட்ட ஷாக் நியூசைக்கூட சர்வதாரணமாய் காதில் போட்டுக்கொள்வது சித்தரஞ்சனுக்குத் தொழில் கற்றுத் தந்திருந்த பாடம்.

"உங்களுக்கும் ராஜசேகருக்கும் தகறாறு வந்துட்ட தாய் தெரிஞ்சுது. சபதம்கூட பண்ணிட்டிருக்கானாம். நம்ப விளம்பர உலகில் எல்லோருமே இதைப்பற்றித்தான் பேசிக்கிறாங்க. என்னதான் நடந்தது?"

"இந்த சபதத்தில் யார் ஜெயிப்பாங்கன்னு நீங்க நினைக்கிறீங்க?"

"சபதம் என்ன, எதைப்பற்றின்னு முற்றிலும் தெரியா மல், எப்படிச் சொல்றது? ஆனாலும் நீங்கதான் ஜெயிப் பீங்கங்கற நம்பிக்கை எனக்கு உண்டு."

"எனக்குத் தெரியும். என்னைப்பற்றித் தெரிஞ்சவங்க எல்லோருமே நான்தான் ஜெயிப்பேன்னு எண்ணிப்பாங்க. தட் ஈஸ் சித்தரஞ்சன். உங்களுக்கு சபதத்தைப் பற்றிய விவரம் வேணும், அவ்வளவுதானே? யாருக்குமே சொல்லப் பிடிக்கலை. ஆனால் நீங்க என் பெஸ்ட் ஃபிரெண்ட். ஆனாலும் பந்தய விவரங்களில் எந்த த்ரிலிங்கும் இல்லை. ராஜசேகரை இந்த சபதத்தில் நிறைவேறாமல் எப்படி அழவைக்கிறேன்று தெரிஞ்சுப்பதில் தான் த்ரில்லிங் இருக்கு. ஸ்டூடியோவில் ஷூட்டிங்கில் இருக்க வேண்டிய ராஜசேகர்

தன் காலத்தை விரயமாக்கிண்டு, தெருவில் அலையணும் ஒரே அடியில் மூன்று பறவைகளை வீழ்த்தும் கதையைப் பற்றிச் சொல்றேன். ஆனால் இப்படிப் போனில் இல்லை. அது அவ்வளவு நல்லதில்லை கூட. பார்த்துட்டிருங்க சுதர்சன் சார்! இந்த விளம்பர உலகில் அல்லோகல் லோகத்தை உண்டாக்கி ஒவ்வொருத்தரின் இதயத்திலும் ரயில் இஞ்சின் ஓடச் செய்யறேன். சித்தரஞ்சன் என்றால் காமாலைக்காரன் கண்ணுக்குக கூட உலகம் சிவப்பாய் தென்படணும். உங்களைப் போன்றவங்க ஒத்துழைப்பால் இந்தியன் விளம்பர உலகத்துக்கு ராஜாவாகணும். இப்போது இருக்கிற என் நாலு பிராஞ்சுகளோடு மேலும் பத்து பிராஞ்சுகளைத் திறக்கப்போறேன். ரொம்ப விஷயங்களைப் போனிலேயே சொல்லிண்டிருக்கேன். உங்களுக்கு ஓய்வு கிடைத்தால் ஒருமுறை மெட்றாசுக்கு வாங்க. ரெண்டு நாள் எஞ்ஜாய் பண்ணினாற் போலி ருக்கும். எல்லா விஷயத்தையும் பேசினாற்போலவும் இருக்கும். என்ன சொல்றீங்க?''

சித்தரஞ்சன் வழங்கப்போகும் எஞ்ஜாய்மெண்ட் என்றால் சுதர்சனுக்கு சுகங்களை வாரி வழங்கினாற்போல தனக்கு வேண்டியது அழகிய மாடல்களுடன் சுகம், சித்தரஞ்சனுக்கு வேண்டியது தன் செல்வாக்கால் அசோஸியேஷன் ஆப் நேஷனல் அட்வர்டைசர்ஸில் வேலைகள் நன்றாய் நடக்கும்படி பார்த்துக் கொள்வது. (இந்த ஏஜென்சி அட்வர்டைஸர்களின் விளம்பர ஏஜென்சி களுக்கு வரும் விவாதங்களுக்குப் பரிகாரம் பண்ணித் தருவது) பெரியபெரிய கம்பெனிகளின் விளம்பரங்கள் சித்தரஞ்சனுக்கு வரும்படியாய் பார்த்துக் கொள்வது. அதனால் தான் பிடிவாதமாய் சுதர்ஸனை இந்தியன் சொஸைட்டி ஆஃப் அட்வர்டைஸர்ஸுக்கு சேர்மேனாய் சிபாரிசு பண்ணியிருந்தான்.

"நாளைக் காலை பிளைட்டிலேயே வரேன்" என்றான். போனமுறை சித்தரஞ்சன் மூலமாய் பெற்ற அமர

சுகங்களை அசைப் போட்டுக் கொண்டே சித்தரஞ்சன் போனை வைத்தபோது ஐந்தடி எட்டலங்குலம் உயரமுள்ள பலசாலியான ஒரு இளைஞன் உள்ளே வந்தான். அவன் தான் விக்ரம். சித்தரஞ்சனோடு சரிசமமாய் வியாபாரம் வைத்துக் கொண்டிருந்தான், அதற்காக இருபத்தைந்து லட்சம் தரவும் சித்தமாயிருந்தான். அவனுக்குத் தெரியாது சித்தரஞ்சன் தன்னோடு இரட்டை வேஷம் போட்டுக் கொண்டிருந்தான் என்று.

17

வாசுவின் அறைக்குள் போன அரைமணிக்கெல்லாம் வெளியே வந்தான் ராஜசேகர். அவன் முகம் சாதாரணமாய் தான் இருந்தது. ராஜசேகரின் கையிலிருந்த ஃபைலை வாங்கிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தான் மது. கார் வீதியில் சர்ரென்று வேகமாய் பறந்தது. அதற்கு முன்பே மழை பெய்திருந்ததால் தெருவெல்லாம் ஈரமாயிருந்தது. குளிர்ந்த காற்று வந்து வீசிற்று. ராஜசேகர் எதுவும் பேசாமல் கார் ஓட்டுவதில் முனைந்திருந்தான்.

சில சமயம் ராஜசேகர் திடீரென்று மௌனம் வகிக்கத் தொடங்கிவிடுவான். மௌனம் என்றால் மதுவுக்கு பயம்.

''சார், என்னவாச்சு?'' -கேட்டான் மது.

''ஒப்புக்க மாட்டேன்னுட்டான். அந்த தப்பு தன் மேலில்லையாம்''-அருகில் குண்டு விழுந்தாற்போல் அதிர்ந்தான் மது.

''நமக்குத் தெரியாமல் இந்தத் தப்பு நேர்ந்துடுத்துன்னு ஒப்புக்கலையா சார்?''

''அந்த ஃபைல் தன்னிடம் வந்தபோது அதில் தரங்கிணியின் போட்டோ தான் இருந்ததாம். அதோடு அதற்குள் ரெண்டு நாள் ஆயிட்டதாம். இன்னும் இருபத்

தெட்டு நாள்தான் இருக்குன்னு சொன்னான். இந்தச் சமயத்தில் ஒப்புக்கிட்ட வேலையைப் பண்ணித்தந் துடணுமாம். அது முடியாவிட்டால் கோர்ட்டுக்குப் போவானாம். ப்ரீச் ஆஃப் கன்ட்ராக்ட்டை மீறினதற்கு.''

மதுவுக்கு எல்லாம் குழப்பமாயிருந்தது.

''எப்படி சார் நடந்தது இது? உங்க கையிலிருந்து ஃபைலை நான்தான் வாங்கினேன். நேராய் கொண்டு போய் அவங்க பி.ஏ.விடம் தந்தேன். அவர் கையெழுத் திட்டுத் திருப்பித் தந்ததுமே அதை எடுத்துட்டு வந்திருக் கேன்''

''நடுவில் எங்கேயாவது நின்றாயா?''

''இல்லை சார்!''

''நன்றாய் ஞாபகப்படுத்திக்கோ!''

''இல்லை சார். எனக்கு நன்றாய் நினைவிருக்கு. நேற்று காலையில் தந்தேன். திரும்பி நேற்று சாயந்திரமே போய் வாங்கிக்கிட்டு வந்துட்டேன்.''

''நாம்ப எதிரியின் சாமர்த்தியத்தைக் குறைவாய் எடை போட்டுட்டோம். பைலை எடுத்துட்டு நேராய் வாசுவிடம் போய் பேசியிருந்தால் அவங்களுக்கு சான்ஸ் கிடைத்திருக்காது.''

''இது எப்படி நடந்திருக்கும் சார்?''

''வாசு மாற்றியிருப்பான்.''

''வாசுவுக்கு என்ன லாபம்?''

''லாபம வாசுவுக்கு இல்லை சித்தரஞ்சனுக்கு. சித்தரஞ்சன் மிரட்டலுக்குக் கட்டுப்பட்டோ அல்லது பயந்தோ இதைச் செய்திருக்கணும்.''

''வாசுதான் இதைச் செய்திருப்பான்னு எப்படிச் சொல்றீங்க?''

''வாசுவின் முகத்தில் தென்பட்ட பரபரப்பும், கலவரமும், அதைத் தெரியபடுத்திற்று. சிலருக்குத் தம்

மனதில் தோன்றும் உணர்ச்சிகளை முகத்தில் காட்டாமல் மறைக்கத் தெரியாது. வாசுவும் அப்படிப்பட்ட ஆள்தான். காப்பிரைட்டிங்கில் எழுதிய பாவங்களை உணர்ச்சி ததும்ப மாடல்களின் முகத்தில் அப்படியே நூற்றுக்கு நூறு சதவீதம் வடித்துக் காட்டக்கூடிய ஒரு ஆளுடன் பேசுகிறோம் என்பதையே மறந்துட்டான். அவன் எதுக்கோ பயப்படுகிறான்.''

''மல்ட்டி நேஷனல் கம்பெனிக்கு மார்கெட்டிங் டைரக்டரான வாசு, தான் வேலை கொடுத்தால்தான் பிழைப்பை நடத்த முடியும் என்ற நிலையிலுள்ள சித்தரஞ்சனுக்கு பயப்படுவதா? தன் உத்யோக தர்மத்தைக் கூட மறந்துட்டானா?''

''அதைவிட பெரியவங்களைக் கூட பயமுறுத்தக் கூடியவன் அந்த சித்தரஞ்சன். வாசுவின் பலவீனம் என்னன்னு தெரிஞ்சு, அதையே அழுத்தியிருக்கிறான்''

''சார், நாம்ப இந்த விஷயத்தை கோரமண்டல் மேனேஜிங் டைரக்டரின் பார்வைக்குக் கொண்டு வந்தால் என்ன?''

''லாபமில்லை. சாதாரணமாய் அவங்க தம் எக்ஸிக்யூடிவ்களின் பேச்சைத்தான் கேட்பாங்க. அதோடு அந்தக் கம்பெனி உற்பத்தி பண்ணும் எல்லா சரக்குமே வாசுவின் செல்வாக்கால் தான் மார்கெட் ஆவது. அதனால் அவன் பேச்சைத்தான் கேட்பாங்க.''

கார் வீட்டிற்கு முன்னால் நின்றது. சரேலென்று காரலிருந்து கீழே குதித்து விடு விடென்று வீட்டிற்குள் போனான் ராஜசேகர்.

ராஜசேகருக்குப் பைத்தியம் பிடித்தாற் போலிருந்தது.

இப்பொழுது வேறு வழியில்லை. அந்த தரங்கிணியைத் தான் போட்டுப் படம் எடுத்துத் தீரவேண்டிய நிர்பந்தம். ஆனால் அந்த போட்டோவில் இருக்கும் தரங்கிணி என்பவள் யார்?

எப்படி தேடிப் பிடிப்பது? பெயரைத் தவிர வேறெந்த விவரமும் தெரியாது. ஊரும் தெரியாது. பேப்பரில் போட்டால்... லாபம் இருக்கலாம். அல்லது இல்லாமலும் போகலாம். அந்த பேப்பரை அவள் பார்க்க வேண்டுமே! பார்த்தாலும் அவள் வரவேண்டிய தேவை இல்லை.

யோசனையில் ஆழ்ந்து போயிருந்த ராஜசேகரைப் பார்த்த மஞ்சுளாவின் புருவங்கள் ஏறின. "ராஜ்..." -கூப்பிட்டாள் மஞ்சுளா.

ராஜசேகருக்கு அந்த அழைப்பு காதில் விழவில்லை.

பக்கத்திலிருந்த மதுவைக் கேட்டாள் என்ன விஷயம் என்று. அதற்குள் ராஜசேகர் யோசனையிலிருந்து மீண்டான்.

"வாட் டியர்?" என்று கேட்டான் மஞ்சுளாவைப் பார்த்து.

"டியராம் டியர்! காலையிலேருந்து ஒன்றுமே சாப்பிடாமல் இருக்கீங்க. டியர் சொன்னதுபோல கேட்கிற வங்கதான் டியர்னு கூப்பிடணும்" என்றாள் கோபமாய்.

"நீயுந்தான் ஒண்ணும் சாப்பிடவேயில்லை. எழுந்திரு மஞ்சுளா! ராஜசேகர் சார், நீங்களும், மதுவும் டிபன் சாப்பிடுங்க" என்றாள் காதம்பரி பரிவோடு.

டைனிங் டேபிளுக்கு முன்னால் உட்கார்ந்ததும், நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு, தரங்கிணியை எப்படித் தேடிப் பிடிப்பது என்று அங்கிருந்த எல்லோரையும் கேட்டான் ராஜசேகர்.

பெயரும் போட்டோவும் தவிர வேறெந்த விவரமும் தெரியாமல் எப்படி அவளைத் தேடிப் பிடிப்பது என்று அங்கிருந்த மூவருக்கும் கூட எதுவும் புரிபடவில்லை.

"இது நடக்கிற காரியமில்லை போலிருக்கே சார்?" என்றாள் காதம்பரி.

''நடந்து தீரணும். வேறு வழியில்லை. இந்தக் காரியம் முடிவடையாவிட்டால் சபதத்தில் தோற்றுவிட நேரும். என் மதிப்பும் போயிடும். அதோடு கோரமண்டல் கம்பெனிக்கு நஷ்ட ஈடாய் என் சொத்தையெல்லாம் அள்ளிக் கொடுக்க வேண்டியிருக்கும். அது சாவதற்குச் சமானம். லாபமில்லை. இந்தப் பெண்ணைத் தேடிப் பிடிச்சுத் தீரணும்...'' -ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினான் ராஜசேகர். நால்வரும் மௌனமாய் அவரவர்களுக்குத் தோன்றிய விதத்தில் யோசிக்கத் தொடங்கினார்கள்.

அதுவரை நடை பயின்று கொண்டிருந்த ராஜசேகர் டக்கென்று நின்று விட்டான். ''மது, தரங்கிணி போட் டோவை இப்படிக் கொடு'' என்றான் திடீரென்று.

மது ஃபைலிலிருந்து தரங்கிணியின் இரண்டு போட் டோக்களையும் எடுத்துத் தந்தான்.

அவ்விரண்டு போட்டோக்களையும் கூர்ந்து கவனித் தான் ராஜசேகர். போட்டோக்களை எங்கே எடுத் தார்கள் என்றும் எந்த ஸ்டுடியோவில் பிரிண்ட் பண்ணி னார்கள் என்றும் தெரிந்துக் கொள்ள முடிந்தால் கொஞ்சம் லாபம் ஏற்பட வழியுண்டு என்று தோன்றிற்று.

போட்டோக்களைப் பின்பக்கமாய் திருப்பிப் பார்த் தான். ஸ்டுடியோ முத்திரை எதுவும் இல்லை. திரும்பவும் போட்டோக்களைக் கூர்ந்து பார்த்தான். ஒரு போட் டோவில் அவள் அலட்சியமாய் நின்றுக் கொண்டு இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு... தலையைக் கொஞ்சமாய் சாய்த்தாற்போல பார்த்துக் கொண்டிருந் தாள். அவளுக்குப் பின்னால் ஈஃபில் டவர் தென்பட்டது. ராஜசேகரின் முகத்தில் மின்னல் பளிச்சிட்டது. போதும் இந்தச் சின்ன ஆதாரம் என்றெண்ணிக் கொண்டான்.

பக்கவாட்டில் எடுத்த அவள் போட்டோவைப் பார்த்தான். போட்டோவில் அவளுக்குக் கேமிரா உணர்வே தென்படவில்லை. பின்னணிகூட சரியாய்

தென்படவில்லை. அதாவது இது அவளுக்குத் தெரியாமல் யாரோ எடுத்த போட்டோவாய் இருக்க வேண்டும்.

முதல் போட்டோவுக்கு ஸ்டைலாய் போஸ் கொடுத்திருப்பதைப் பார்த்தால் அது அவள் விரும்பி போஸ் கொடுத்த போட்டோவாய் இருக்கும் என்று தோன்றிற்று. சாதாரணமாய் உலகப் புகழ்ப் பெற்ற கட்டடங்களுக்கு முன்னால் டூரிஸ்ட்டாய் நின்றுக் கொண்டு போட்டோ பிடித்துக் கொள்வார்கள். அதைக் கொண்டு பார்த்தால் ஈஃபில் டவருக்கு முன்னால் இருந்ததால் அவள் பாரீசில் இருந்ததாய் எண்ணிக் கொள்ள வேண்டுமா? அங்கேயே இருப்பவளா? டூரிஸ்ட்டாய் போய்விட்டுத் தன் ஊருக்குத் திரும்பியிருப்பாளா?

போட்டோவுக்குப் பயன் படுத்தியிருந்த கோடக் ப்ரோமைட் பேப்பரைக் கொண்டு அது சமீபத்தில் பிரிண்ட் பண்ணப்பட்ட போட்டோவாய் தோன்றிற்று. ஒரு ஆதாரம் கிடைத்து விட்டது. இன்னொரு ஆதாரம் கிடைக்கும் வரையிலும் அவள் பாரீசில் இருப்பதாய்தான் எண்ணிக் கொள்ள வேண்டும். அவள் பாரீசில் செட்டில் ஆனவளாய் இருந்தால் அங்குள்ள இந்தியத் தூதரகத்தில் விசாரித்து விஷயத்தைத் தெரிந்துக் கொள்ள வழியுண்டு.

இரண்டாவது போட்டோவை அவளுக்குத் தெரியாமல் யார் எடுத்திருப்பார்கள். அவளுக்குத் தெரியாமல் எடுத்து விட்டு, அதை ஃபைலில் கொண்டு வந்து வைத்திருப்பதைப் பார்த்தால் யாரோ அவளைப் பிடிக்க முயற்சிப் பண்ணி வருகிறார்கள் என்று புரிந்தது. யாராயிருக்கும்? சித்த ரஞ்சனுக்கு அவளோடு என்ன உறவு? இந்த யோசனை உண்மையாயிருந்தால் படாத பாடுபட்டு அவளைத் தேடிப் பிடித்த அடுத்த நிமிஷமே அவளைத் தன்னிட மிருந்து கழுகாய்க் கொத்திக் கொண்டு போய் விடுவான் சித்தரஞ்சன்.

ஒரே அடியில் இரண்டு பறவைகளை வீழ்த்திவிடக் கூடிய சித்தரஞ்சனின் தத்துவத்திற்கு இந்த யோசனைகள் பொறுத்தமானவையே. அதாவது, இதைக் கொண்டு பார்த்தால் அவள் பிடிப்படக்கூடிய அவகாசம் ராஜ சேகருக்கு உண்டு என்று சித்தரஞ்சன் ஊகித்திருப்பான். இத்தனைக்கும் அவள் யார்? அவளுக்கும் சித்தரஞ்சனுக்கும் என்ன சம்பந்தம்?

எப்படியாவது அவளைப் பிடித்துவிட வேண்டும். அதே சமயத்தில் அவள் சித்தரஞ்சனின் கையில் பிடிபடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது போட் டோவை அவள் எங்கே நடந்து போய்க் கொண்டிருந்த போது பிடித்திருப்பார்கள் என்று தெரியவேண்டுமானால் போட்டோவைப் பெரிதாக்கி, பின்னணிகளை ஆராய வேண்டும். ராஜசேகரின் யோசனைகள் மின்னல் வேகத்தில் ஒரு முடிவிற்கு வந்தன.

போட்டோக்களையே பார்த்தபடி தீர்க்காலோசனை யில் மூழ்கிவிட்ட ராஜசேகரைத் தொந்தரவு படுத்த அம் மூவருக்குமே பிடிக்கவில்லை.

தன் யோசனை ஒரு முடிவிற்கு வந்ததுமே, தலையைச் சிலிர்த்துக்கொண்டு, "பார் மது... இனிமேல் ஒவ்வொரு விநாடியும் நமக்கு மிக முக்கியமானது. அந்தப் பெண்ணை எவ்வளவு சீக்கிரமாய் தேடிப் பிடிக்க முடியுமோ அவ்வளவு நல்லது. ஒரு போட்டோவைப் பார்த்தால் அவள் பிரான் சில் இருப்பதாய் தோன்றுகிறது. பிரான்சில் இருந்தால் நவநாகரிக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் கேமிரா பயம் இருந்திருக்காது. ஒரு வேளை பிரான்சில் இல்லாமலிருந்து, டூரிஸ்ட்டாய் அங்கே போய் இருந்தாளானால் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாயிருக்க வேண்டும். அதனால் வெட்கம், கோழைத் தனம் எல்லாம் இருந்திருக்க வாய்ப்பில்லை. போட் டோவில் அவள் கொடுத்திருக்கிற போஸ் சீனியர் மாடல் பெண் ஒருத்தியின் போஸாய் இருக்கிறது. அதனால்

இவளுக்குப் பெரிதாய் ட்ரைனிங் தேவையில்லை'' என் நிறுத்திவிட்டு மூவரையும் ஒருவிநாடி பார்த்தான். அவர்கள் வியப்படைந்தவர்களாய் அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''நாம் எடுக்க வேண்டிய நான்கு பிலிமுக்கு ஐந்து நாட்கள் போதும். ஸ்டில்ஸுக்கு மேலும் ஒரு நாள். அதற் கப்புறம் லாப், ஸ்டூடியோ, டார்க்ரூம் வேலைகளுக்கு மேலும் இரண்டு நாள் போதும். அதாவது மொத்தம் எட்டு நாட்கள் வேலை பண்ணவேண்டும். அவளோடு ஆறுநாட்கள்— நாமே பண்ணக்க வேண்டிய வேலை இரண்டு நாட்கள்''— ஒரு விநாடி நிறுத்தினான் ராஜசேகர்.

''போட்டோவைப் பார்த்துட்டு அவள் பாரீசில் இருக்கிறதாய் நினைச்சுட்டு வேட்டையைத் தொடங்குவது சரியாய் படலை ராஜ்'' என்றாள் மஞ்சுளா.

அதைக் கேட்டு ராஜசேகருக்குக் கோபம் வந்தது. அவளைக் கூர்ந்து பார்த்து விட்டு, ''மஞ்சுளா! சில சமயங்களில் சில்லியாய் தொடங்குகிற வேலைகளே சீரியஸாய் மாறிவிடக்கூடும். முதன் முதலில் அது சில்லி யாய்த் தான் தோன்றும். அதற்காக அதை அலட்சியமாய் விட்டுவிடக்கூடாது. இது என் தொழில் எனக்குக் கற்றுத் தந்திருக்கிற பாடம். ப்ளீஸ் கீப் சைலன்ஸ்!'' என்று மதுவை நோக்கித் திரும்பினான். அவன் கோபத்திற்குச் சிரித்துக் கொண்டாள் மஞ்சுளா.

''நமக்கு ஒரு போட்டோவில் இருக்கிற சூழ்நிலை தெரியவில்லை. அதனால் உடனே நீ அதை ட்ரான்ஸ் பரன்ட் பிலிமில் மறுகாப்பி எடுத்து ஸ்லைடைத் தயார் பண்ணு. அதே கையோடு அந்த இரண்டாவது போட் டோவையும் பண்ணிடு. கமான், க்விக்.....'' என்று போட் டோக்களையும் ஆபீஸ் சாவிக் கொத்தையும் எடுத்துக்

கொண்டு வெளியே ஓடினான் ராஜசேகர். மது அவனைப் பின் தொடர்ந்து ஓடினான்.

"வேலையில் எவ்வளவு விழிப்போடு இருப்பாரோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாரிடமும் அன்பாயும் இருப்பார்" என்றாள் காதம்பரி அவனைப் பார்த்து.

இந்த வேட்டை எதில் முடியுமோ? ராஜசேகர் எந்த ஆபத்தை விலைக்கு வாங்கிப்பானோ என்று திகிலடைந்தாள் மஞ்சுளா.

கார் அறுபது கிலோ மீட்டர் வேகத்தில் ஆபீஸை நோக்கிப் பறந்தது.

18

"அதற்குள் ரெண்டு நாளாயிடுத்து. அப்படீன்னால் இன்னும் 28 நாள் இருக்கு நமக்கு டைம். அதில் எட்டு நாளைக்கழிச்சுடணும். மீதி இருப்பவை இருபதே நாட்கள். இந்த இருபது நாளைக்குள் நாம் அவளைக் கண்டு பிடிச்சுடணும். பணம் எவ்வளவானாலும் செலவழிப்போம். எவ்வளவு ரிஸ்க் வேணும்னாலும் எடுத்துப்போம். ஜெட் வேகத்தில் நம் வேட்டையைத் தொடருவோம். அவளை எப்படியாவது பிடிச்சுத்தீரணும். பசி எடுத்தால் ஓட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடுவதை விட்டுட்டு, ரெடியாய் சாப்பிடக்கூடிய பிரட் போன்றவைகளை வாங்கி வைத்துக்கிட்டு, நம்ப வேலையில் தொடர்ந்துண்டே பசியைத் தீர்த்துக்கணும். புரிஞ்சுதா?"

அந்த ராத்திரி வேளையில் ரேஸ் காரைப்போல சர்ரென்று வேகமாய் பறந்துக் கொண்டிருந்த ராஜசேகரின் காரைப் பார்த்து திடுக்கிட்ட பாதசாரிகள் பயந்து நடைபாதையின் மேல் குதித்தார்கள்.

கார், ராஜ் அட். பிலிம் ஆபீசுக்கு முன்னால் ஒரு குலுங்கலுடன் வந்து நின்றதும் நிற்காததுமாய் தடா லென்று கதவைத் திறந்துக் கொண்டு மூன்றாவது மாடியி லிருந்த தன் ஆபீஸ் அறையை நோக்கி ஓடினான் ராஜசேகர்.

"மது, அந்த ரெண்டு போட்டோக்களின் ஸ்லைடு களைத் தயார் பண்ணு, க்விக்!"

மது இரண்டு போட்டோக்களையும் எடுத்துக்கொண்டு டார்க்ரூமை நோக்கி விடுவிடென்று போய் விட்டான்.

ராஜசேகர் தன் சீட்டில் வந்து உட்கார்ந்து கொண் டான். போனை எடுத்து எக்சேஞ்சுக்கு டயல் பண்ணி-

"ஹலோ... இண்டர்நேஷனல் புக்கிங்!"

"எஸ்."

"புக் எ கால் டு மிஸ்டர் செயின்ட் லாரென்ட், பாரீஸ். போன் நம்பர் 03 30 22."

"உங்க நம்பர் சார்?"

வீட்டு நம்பரைச் சொல்லி விட்டு, "அர்ஜென்ட் கால் வேணும்" என்றான்.

"ரெண்டு மணி நேரம் பிடிக்கும் சார்" என்றாள் ஆபரேட்டர்.

"நோ...நோ... இன்னும் சீக்கிரமாய் வேணும். லைட் னிங் கால் புக் பண்ணுங்க, எவ்வளவு சார்ஜ் ஆனாலும் பரவாயில்லை."- போனை வைத்துவிட்டு நிமிர்ந்தான். மது டார்க்ரூமிலிருந்து ஸ்லைடுகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

"கமான், லெட்ஸ் கோ, மேஜை மேலிருக்கும் போட் டோக்களைக் கூட கையிலெடுத்துக்கோ" என்று இண்டர் நேஷனல் ஏர்வேஸ் டைரக்டரியுடன் கீழே ஓடினான் ராஜசேகர்.

மது ஆபீசைப் பூட்டி விட்டு ஓடிவந்து காரில் ஏறிக் கொண்டான் கார் திரும்பவும் அம்பாய் பறந்தது வீட்டை

நோக்கி. டார்க்ரூம் ஸ்டுடியோ ஆபீசில் இருந்ததாலும், ப்ரொஜக்டிங் ரூம் வீட்டில் இருந்ததாலும் அங்குமிங்கு மாய் அலைய வேண்டியிருந்தது அவ்விருவரும்.

"மது, இன்னிக்கு ஷூட்டிங் நடந்துட்டிருந்தபோது துரதிர்ஷ்டமான ஒரு சம்பவம் நடந்தது" என்றான் ராஜசேகர் வருத்தத்தோடு. மதுவுக்குப் புரியவில்லை. என்ன நடந்திருக்கும் என்று யோசித்தான் அவன்.

"ரூபவதியைக் கொலை பண்ண முயற்சித்தாங்க."

திடுக்கிட்டு சீட்டில் விறைப்பாய் உட்கார்ந்தான் மது.

ராஜசேகர் நடந்ததை விவரித்தான்.

"சார்!... சித்தரஞ்சன் மேல் கம்ளைண்ட் தந்தால்...?"

"லாபமில்லை. ஆதாரமில்லை. ரூபவதியைத் தண்ணீரில் மூழ்கடித்துக் கொலைபண்ண எண்ணிய ஆளை சந்திரனால் அடையாளம் கண்டுப்பிடிக்கமுடியலை. அதோடு, இந்த விஷயத்தை சந்திரன் மட்டுமே உணர்ந்திருக்கிறான். மற்ற எல்லோருக்கும் விபத்து எப்படி நேர்ந்ததுன்னு தெரியலை. சாட்சி எதுவுமில்லாமல் நாம்ப கேசைப் போட்டுட்டு நேரத்தைப் பாழடிச்சுப்பது நல்லதல்ல."

மதுவுக்கு சித்தரஞ்சனின் கழுத்தை நொறுக்கிக் கொன்று போட்டுவிட வேண்டும் போல ஆத்திரம் வந்தது.

"நேற்று ஷூட்டிங் நடந்துட்டிருந்தபோது ஒரு ஆள் புதர் மறைவில் நின்னுட்டு எல்லாவற்றையும் கவனிச்சான். போட்டோக்கள் கூட எடுத்தான். அதாவது ரூபவதியின் தங்கையை நாம் மாடலாய் எடுத்துக்கிட்டது தெரிஞ்சு இந்தக் காரியத்தைப் பண்ணினானா? அல்லது ரூபவதி நம்ப ஆள்னு நினைச்சு இப்படிப் பண்ணினானா?"

"நாம் ஃபைலில் சுமீதா போட்டோவுக்குப் பக்கத்தில் அவள் யார், அவள் அட்ரஸ் என்னங்கற விவரத்தையெல்

லாம் தரலை. அதனால் சுமீதா ரூபவதியின் தங்கைன்னு தெரிய சந்தர்ப்பம் இல்லை சார்.''

''யூ ஆர் ரைட். நாம்ப அந்த ஒரு நல்ல காரியத்தைப் பண்ணியிருக்கோம். இல்லாவிட்டால் இதற்குள் சித்த ரஞ்சனின் ஆட்கள் டில்லிக்குப் போயிருப்பார்கள்.''

''போட்டோ எதுக்கு எடுத்தாங்க?''

''கரையிலிருந்து ரூபவதி இருந்த படகு எவ்வளவு தூரத்தில் இருக்குன்னு தெரிஞ்சுக்க இருக்கலாம். கேமிரா இருந்த இடத்திலேருந்து பொருள் இருந்த இடத்தை ஊகித்துக் கொள்ள முடிந்துவிட்டால், போட்டோவைப் பொறுத்து படகு எவ்வளவு தூரத்தில் இருந்ததுன்னு கொஞ்சம் முன்னும் பின்னுமாய் தெரிஞ்சுக்க முடியும். நேற்றே அந்த விஷயத்தை ஊகித்துட்டேன். ஆனாலும் இந்த போட்டோ மாறாட்ட ரகளையில் ஆழ்ந்து அலட்சிய மாய் இருந்துட்டேன். என் உதாசீனத்தால் ஒரு உயிர் பலியாகவிருந்தது,'' என்றான் வருத்தத்தோடு ராஜசேகர்.

''சார், நாம்ப இப்படியே பார்த்துட்டுச் சும்மா உட்கார்ந்திருந்தால் சித்தரஞ்சன் அதை நம் கையாலாகாதத் தனம்னு நினைச்சு இன்னும் துளிர்த்துப் போயிடுவான். நீங்க 'உம்' என்றால் போதும், பதிலுக்கு பதிலடி கொடுத் துடறேன்,'' என்றான் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு மது ஆவேசமாய்.

''இப்போ நமக்கு வேண்டியது ஆலோசனை. ஆவேசம் இல்லை. மது, நாம்ப இந்த சவாலில் வெற்றியடைந்து அதைக் காட்டுத் தீயாய் பரவ விட்டுட்டால் அதுவே போதும். அதுவே அவனுக்கு சமாதி! அகம் அடியுண்ட சித்தரஞ்சன் இந்தத் துறையிலிருந்தே ஓடிடுவான். அவன் போய் விட்டால் நம் துறைக்கு நல்ல காலம் வந்துச் சேர்ந் துட்டாற்போலதான். அதனால்... நாம் அப்படி ஒரு உதை கொடுப்போம். அவன் கொடுக்கிற உதைகளையெல்லாம் தாங்கிண்டு, அதையே அவன் பேரில் மாற்றிட்டு மார்ச்

31ம் தேதி சரியான - பெரிய உதையாய் கொடுத்துடுவோம்'' என்றான் ஸ்டீரிங்கின் மேலிருந்து இடது கையை எடுத்து மதுவின் தோள்மேல் வைத்து.

மது மௌனமாயிருந்தான்.

''மது, எனக்குப் புரியாதது ஒன்றுதான்'' என்றான் ராஜசேகர் சட்டென்று.

''என்ன சார்?''

''ரூபவதி இன்றைய ஷாட்டில் படகு விளிம்பில் நிற்கப் போகிறாள் என்றும், அவள் காஸ்ட்யூம்ஸின் ஒரு பாகமாய் பூமாலை தண்ணீரில் தொங்கிக் கொண்டிருக்கும் என்றும், கூல்டிரிங்கின் துளிகளை நாக்கின் நுனியில் சொட்ட வைத்துக் கொண்டிருப்பாள் என்றும் ஸ்கிரிப்டில் மட்டுந் தான் இருக்கு. அது உனக்கும் எனக்கும் ரூபவதிக்கும் தவிர வேறு யாருக்குமே தெரியாது. அப்படியிருக்கும்போது இந்த விஷயம் அவங்களுக்கு எப்படித் தெரிந்தது? அது தெரிஞ்சதால்தான் அவன் யாரும் காண முடியாமல் தண்ணீருக்குள் ஒளிஞ்சுக்கிட்டு இருக்க முடிஞ்சுது. இல்லா விட்டால் அவன் படகு விளிம்பு வரையிலும் தன் கையை நீட்டி ரூபவதியின் காலைப் பிடிச்சிருக்க வேண்டியிருந் திருக்கும். அதை ரூபவதி கவனிக்காவிட்டாலும் எஞ்சிய மாடல்களாவது கவனிச்சிருப்பாங்க. இந்த விஷயம் எப்படி வெளியே போயிருக்கும் அவங்களுக்கு...?''

யோசித்தவாறு காரை வீட்டிற்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினான்.

மதுவுக்கு நடந்த சம்பவங்களை நினைத்தபோது த்ரில்லாய் இருந்தது. சபதத்தில் வெற்றிப் பெற்றே தீர வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது.

கராத்தே, ஸ்விம்மிங், குதிரை ஏற்றம், மோட்டார் சைக்கிளில் இடைவிடாமல் பயணம் செய்வது போன்ற வற்றில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த மதுவுக்கு, அவற்றைத் தன் சொந்த வாழ்க்கையில் பயன்படுத்தக் கூடிய சான்ஸ்

எப்பொழுது கிடைக்குமோ என்று பல காலமாய் காத்துக் கொண்டிருந்தான் ராஜசேகர் ஒரு சான்ஸ் கொடுத்தால் போதும், சித்தரஞ்சன், கைலாசன் இருவரின் கால்களையும் முறித்துப் போட்டுவிட வேண்டும் போல ஆத்திரமா யிருந்தது.

ராஜசேகர் ப்ரொஜெக்டிங் ரூமுக்குள் மதுவோடு நுழைந்தான். அவன் என்னதான் பண்ணப் போகிறான் பார்க்கலாம் என்ற ஆர்வத்தில் காதம்பரியும் மஞ்சுளாவும் கூட உள்ளே வந்தார்கள்.

ஸ்லைடை ப்ரொஜக்டரில் வைத்துவிட்டு, "திரையில் போடு மது" என்றான் ராஜசேகர் உட்கார்ந்து கொண்டு.

மஞ்சுளா வந்து ராஜசேகருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்குப் பக்கத்தில் காதம்பரி உட்கார்ந்தாள்.

மது ஒரு ஸ்லைடை வைத்து ப்ரொஜக்ட் பண்ணினான். அதற்கு முன்னால் அறையிலிருந்த விளக்கையெல்லாம் அணைத்துவிட்டான் ராஜசேகர். அறை எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. திரையில் மட்டுமே வெளிச்சம்தென்பட்டது திரையில் நிறைந்த முகத்தோடு தென்பட்டாள் தரங்கிணி. வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாய் வேகமாய் போய்க் கொண்டிருந்தாற் போலிருந்தது. அசையும் பொருளைப் போட்டோ எடுத்தாற் போலிருந்தது. அவளுக்குப் பக்கத்திலேயே மேலும் ஐந்தாறு பேர் பேசிக்கொண்டே நடந்து போவது போலிருந்தது. உயரமாய் இருந்தாள். நீண்ட கூந்தலை அப்படியே தழைய விட்டிருந்தாள். ஜீன் பேன்ட்டிற்குள் காட்டன் ஷர்ட்டை டக் பண்ணிக் கொண் டிருந்தாள். தலையில் பிரெஞ்சு தொப்பியை ஒரு பக்க மாய் சாய்த்து ஸ்டைலாய் போட்டுக் கொண்டிருந்தாள். ஏதோ வேலையாய் இந்தப் பக்கமாய் திரும்பிய சமயம் பார்த்து எடுத்தாற்போல் அவள் முகம் முக்கால்வாசி பாகம் தென்பட்டது.

"உங்களுக்கு என்ன தோணுது இவளைப் பார்த்தால்?" -காதம்பரியைக் கேட்டான் ராஜசேகர்.

"நல்ல உயரம்... நல்ல உடற்கட்டு..." என்றாள் காதம்பரி திரையையே பார்த்து.

"அவளைப் பார்த்தால் உங்களுக்கு ஒரு விளம்பர டிஸைன் நினைவுக்கு வந்திருக்கணும்!"

காதம்பரிக்குப் புரியவில்லை.

"பிரெஞ்சு பெர்ஃப்யூம் 'சார்லி'க்குத் தந்த விளம்பர டிஸைன் ஞாபகத்துக்கு வரலையா?"

"யூ...யூ ஆர் பர்ஃபெக்ட்லி ரைட். மிஸ்டரீ ஹீரோயின் புக்கரோலினைப் போல இருக்கிறாள். யு ஆர் இன்டெலி ஜென்ட் ராஜசேகர். எங்கே எந்த விளம்பரத்தைப் பார்த் தாலும் அதே போலுள்ள இன்னொரு விளம்பரத்தைச் சொல்லிடுவீங்க. அதனால்தான் நாங்கள் மாடல்களாகவே நின்று விட்டோம், நீங்க மாடல் மேக்கர் ஆயிட்டீங்க."

திரையையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த ராஜ சேகர், "மது, அவள் இடைப் பகுதியில் தொலைவிலிருந்து ஒரு போர்டு லேசாய் தென்படுகிறது. கவனித்தாயா?"

"ஆமாம் சார்..."

"ஸ்லைட் சென்டரைப் பெரிசு பண்ணு."

மது ஸ்லைடின் மேலும் கீழும் கருப்புப் பேப்பரால் மூடிவிட்டு, நடுபாகத்தைப் பெரிய சைசில் ப்ரொஜெக்ட் பண்ணினான்.

ராஜசேகரின் கண்கள் மின்னின.

திரையிலிருந்த போர்டு தெளிவாய் தென்பட்டது.

"மது, எழுதிக்கொள். நான் சில இங்கிலீஷ் லெட்டர்ஸ் சொல்றேன்" என்றான்.

மது பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண் டான்.

"R...I...L...W...A...T...U...N...N...E"

ராஜசேகர் சொல்லச் சொல்ல மது பேப்பரில் எழுதிக் கொண்டான்.

"அந்த பேப்பரை இப்படிக் கொடு" என்றான் ராஜசேகர். மது பேப்பரைத் தந்தான்.

"ப்ரொஜெக்டை அணைச்சுடு, லைட்டைப் போடு!"

மது அவன் சொன்னபடி செய்துவிட்டு ராஜசேகருக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டான்.

பேப்பரில் R... I... L... W... A... T... U . N... N... E... எழுத்துக்கள் தென்பட்டன.

"இதில் சில எழுத்துக்கள் இல்லை. அவை அங்கே போர்டின் மீது சிதைந்து போயிருக்கலாம். அல்லது அந்த கேமிரா மைன்யூட் பர்டிகுலர்ஸைப் பிடிக்க முடியாத தாய் இருக்கலாம். 'ரில்வாடன்னே' என்று வருகிறது இதைக் கூட்டிப் படித்தால். இதற்கு அர்த்தம் இல்லை. போட்டோ சர்ஜெக்டை ஸ்டடி பண்ணணும். தரங்கிணி யோடு கூட மேலும் ஐந்தாறு பேர் நடந்துட்டிருக்காங்க. அவங்க நடையில் வேகம் தென்படுது. கையில் லக்கேஜ் இருக்கிறது. அதை வைச்சுண்டு பார்த்தால் அது பஸ் ஸ்டாண்டோ அல்லது ரயில்வே ஸ்டேஷனோவாய் இருக் கணும். அந்த மிஸ் ஆன எழுத்துக்கள் என்னவாக யிருக்கும்?"

"பஸ் ஸ்டாண்டுக்கு உரிய ஒரு இங்கிலீஷ் அட்சரம் இந்த எழுத்துக்களில் இல்லை. அதனால்... அதனால்..." -நிறுத்திக் கொண்டாள் மஞ்சுளா,

"நமக்கு எழுத்துக்கள் இல்லாதது முதல் Rக்கும் Iக்கும் இடையே. ஐந்தாம் லெட்டர் Aக்கும் Tக்கும் இடையே. பத்தாம் லெட்டர் Eக்குப் பிறகு போர்டு கட் ஆகி விட்டது போட்டோ ஃபிரேமிலிருந்து. முதல் Rக்கும் Iக்கும் இடையே Aஐ வைத்துப் பார்ப்போம்."- நடுவில் 'A' எழுத்தை எழுதி

னான் ராஜசேகர். பிறகு மொத்தத்தையும் இன்னொரு தடவை படித்தான். அவன் கண்கள் மின்னின. "RAILWA... TUNNE." இதற்கு முதல் வாக்கியத்திற்கு Yம் இரண்டாவது வாக்கியத்திற்கு Lம் சேர்த்து விட்டால் போதும், RAILWAY TUNNEL வந்துவிடும். அதாவது இது சுரங்க ரயில் பாதை'' லேசாய் விசிலடித்தான் ராஜசேகர் ஆனந்தத்தால்.

"நீங்க ஒண்ணும் சந்தோஷப்பட்டுட வேணாம். உலகத்தில் எவ்வளவோ சுரங்க ரயில் பாதைகள் இருக்கே? எதைன்னு ஊகிச்சுப்பீங்க?'' என்றாள் மஞ்சுளா. அவளுக்கு இந்த ரகளையெல்லாம் எரிச்சலாயிருந்தது. அழகாய் கல்யாணம் பண்ணிக் கொண்டு, தான் லெக்சரராகவும், ராஜசேகர் ஏதாவது ஸ்டுடியோ வைத்துக் கொண்டும் நிம்மதியாய் மதுரையில் செட்டில் ஆகிவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று. ஒரு சாதாரண மனிதனாய் அவனை ஊகித்துப் பார்த்துக் கொண்டாள் மஞ்சுளா.

"நீ ஒண்ணும் ஏளனம் பண்ணத் தேவையில்லை. அது கண்டிப்பாய் இந்திய எல்லைக்குள் இருக்கும் ரயில்வே லைன்தான்!''

"எப்படி அவ்வளவு கச்சிதமாய் எப்படிச் சொல்றீங்க?''- கேட்டாள் காதம்பரி.

"அவளோடு கூட இருக்கும் ஐந்தாறு பேரையும் பார்த்தீங்களா? அவங்க வேஷமெல்லாம் இந்தியர்களைப் போலத்தானே இருக்கு? மது, அந்த ஸ்லைடைத் திரும்பவும் போடு.''

மது திரும்பவும் ஸ்லைடைப் போட்டான்.

"இபபப் பாருங்க... மேலும் பேக் க்ரவுண்டில் பெங்காலி எக்ஸ்பிரஸ் டைலி பப்ளிசிடியைச் சேர்ந்த வால் பெயிண்ட் தென்படுகிறது. அதற்குப் பக்கத்திலேயே ஹஜிமோலா ஆயுர்வேத டானிக்கின் பெயிண்ட் தென்

படுது. பெங்காலி டைலி ஃபாரினுக்குப் போகாது. கண்டிப்பாய் பெங்காலில்தான் விற்பாங்க. மாநில மொழியில் வெளிவரும் தினசரி இதர மாநிலங்களுக்குக் கூட போக வாய்ப்பில்லை. சக்தி வாய்ந்த எல்லைகளில் மட்டுந்தான் விளம்பரம் தருவது மார்கெட்டிங் வித்தை. அதனால் அது கல்கத்தாவாய் தான் இருக்கணும்.''

''இந்தியாவில் சாதாரண ரயில் பாதைங்களுக்கே கதி இல்லை. சுரங்க ரயில் பாதை ஒரு கேடா?''

''நீ வாயை மூடிட்டிரு. மொதல்ல உங்க லெக்சரருங்களுக்குப் பாட புத்தங்களில் இருப்பதே நினைவில் இராது. டயமெல்லாம் ட்யூஷன் சொல்லித்தரத்துக்கே சரியாயிடும். மோஸ்ட் ரொடீன் ஜாம், நீ ரொம்ப அசமந்து. அதான் உன் தலையில் மண்தான் இருக்குங்கறேன்'' என்றான் மஞ்சுளாவைக் குறும்பாய் பார்த்து.

அதைக் கேட்டு மஞ்சுளாவுக்கு கோபம் வந்தது.

''கல்கத்தாவில் சுரங்க ரயில்பாதை 1984 நவம்பரில் திறந்தாங்க... அதில் பயணம் பண்ணும் ரயில் எக்ஸ்பிளனேட் ஸ்டேஷனிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பவானிபூர் போகிறது. ஒருக்கால் இவளுக்கு எக்ஸ்பிளனேட் எல்லைப் பகுதியிலோ, பவானிபூர் ஏரியாவிலோ வேலை இருந்திருக்க வேண்டும். அல்லது அங்கே ஃபிரண்டோ உறவினர்களோ இருக்க வேண்டும். மது, அடுத்த ஸ்லைடைப் போடு'' என்று அக் காகிதத்தை மடித்து ஜேபியில் வைத்துக் கொண்டான்.

ராஜசேகரின் கூரிய புத்திக்கு அம்மூவரும் வியந்து விட்டார்கள்.

மது அடுத்த ஸ்லைடைப் போட்டான்.

ராஜசேகர் திரையைக் கூர்ந்து பார்த்தான்.

''இவள் பார்வை மிக கம்பீரமாயிருக்கு. கண்ணைக் கவரும் அழகு லட்சணங்கள் வேறு இருக்கு. இவளைப்

பிடிக்க முடிந்தால் நல்லது. இவளை வைத்து பிலிம் எடுத்தால் தொழிலில் அபாரமாய் ஒரு திருப்பம் ஏற்படக் கூடும். சுமீதாவைக் கூட தோற்கடிச்சுரும் போலிருக்கு இவள் போஸ்'' - என்றான் ராஜசேகர்.

''அவள் கிடைப்பது கிடக்கட்டும். கிடைச்சாலும் ஒப்புக்கிட்டால் யூ ஆர் லக்கி'' என்றாள் ராஜசேகரின் இடுப்பில் முழங்கையால் இடித்துக் கொண்டே.

''மது, திரையைப் பார், அவள் கையில் வாட்ச் இருக்கோன்னோ?''

''ஆமாம் சார்.''

''பூதக்கண்ணாடியை எடுத்துட்டு கிட்டே போய் பார். அந்த வாட்ச் எந்தக் கம்பெனியின் வாட்சுன்னு பாரு.''

''உங்களுக்கு புத்தி பிசகிடுத்தா ராஜ்?'' என்றாள் மஞ்சுளா.

''வில் யூ ப்ளீஸ் ஷட்அப்... பார்க்கணும்னால் சைலென்ட்டாய் பாரு. இல்லாவிட்டால் ஹாலுக்குப் போ. டோன்ட் டிஸ்டர்ப் மை கான்ஸன்ட்ரேஷன்'' என்றான் கோபமாய் மஞ்சுளாவைப் பார்த்து.

சாதாரணமாய் என்றுமே கோபப்படாத ராஜசேகர் கோபமாய் பார்த்தது மஞ்சுளாவுக்கு வருத்தமாயிருந்தது. விருட்டென்று எழுந்து போய் விட்டாள்.

''சிடிஸன் வாட்ச் சார்... லேடீஸ் வாட்ச்'' என்றான் மது.

''வெரிகுட்... டாப் ஸைட் கிளாஸின் ஃபிரேம் சைசு எவ்வளவு?''

''தெரியலை சார்''

ராஜசேகர் சரேலென்று எழுந்து ஹாலுக்கு வந்தான் பரபரப்போடு. மஞ்சுளா சோபாவில் முறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ராஜசேகருக்கு இரக்கமாயிருந்தது.

அவளை நெருங்கி, தலையில் ஒரு முத்தம் கொடுத்தான். மஞ்சுளா நிமிர்ந்து பார்த்தாள். சிரித்துக் கொண்டே நின்றிருந்தான் ராஜசேகர்.

"சாரீ மஞ்சு... உன் வாட்சை இப்படித் தா" என்று சொல்லிக்கொண்டே அவள் கையிலிருந்த சிடிஸன் வாட்சைக் கழற்றிக் கொண்டு ப்ரொஜெக்டிங் ரூமுக்குப் போனான்.

"மது, இதோ பார் வாட்ச்! இதன் கிளாஸின் சைசு எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டான் வாட்சை அவனிடம் தந்து.

"ரெண்டு சென்டி மீட்டர் இருக்கும் சார்" என்றான் அதைத் திருப்பித் தந்துக் கொண்டே.

"ராஜசேகர் சார், அதன் அளவு எதுக்காக?" -காதம்பரி கேட்டாள்.

"கேட்காதீங்க மேடம். ஐயாவுக்குத் திரும்பவும் கோபம் வந்துடும்" என்று திரும்பவும் வந்து ராஜசேகரின் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டாள் மஞ்சுளா. ராஜசேகர் சிரித்துக் கொண்டான்.

"அந்த வாட்ச்சின் டாப் ரெண்டு சென்டி மீட்டர் ஆகிற வரைக்கும் திரையின் மீது போட்டோவை என்லார்ட் பண்ணிக்கிட்டே போனால் அதற்கேற்றாற் போல அவள் உடம்பு கூட பெரிதாக சான்ஸ் உண்டு. அதைக் கொண்டு அவள் நிஜ உயரம், அளவு எல்லாவற்றை யும் தெரிஞ்சுக்கலாம்னு!"

அதுவரை ஏதோ வேடிக்கையாய் இதையெல்லாம் பண்ணிக் கொண்டு வருகிறான் என்றெண்ணிக் கொண் டிருந்த மஞ்சுளா அந்தக் காரணத்தைக் கேட்டு வியப் படைந்து விட்டாள். மிகச் சரியான வழியாய்த்தான் யோசித்துக் கொண்டே வருகிறான்.

"மது நான் ப்ரொஜெக்டரைப் போடறேன். நீ திரையிடம் போ. நான் போட்டோவை என்லார்ஜ்

பண்ணிண்டே போறேன். வாட்சின் கிளாஸ் ரெண்டு சென்டி மீட்டர் ஆனதுமே 'ஸ்டாப்' என்றுச் சொல்லிவிடு'' என்று சோபாவை விட்டு எழுந்திருந்து ப்ரொஜெக்டரிடம் போனான் ராஜசேகர்.

அப்படியே செய்தார்கள்.

மெல்ல மெல்ல திரையின் மீது உருவம் வளரத் தொடங்கிற்று.

மது திரையின் மேல் வாட்ச் தென்பட்ட இடத்தில் டேப்பைப் பிடித்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தான்.

சில விநாடிகள் கழிந்தன.

''ஸ்டாப்'' என்றான்.

ராஜசேகர் ப்ரொஜெக்டரை விட்டுவிட்டு திரையைப் பார்த்தான். போட்டோ ஆளுயரத்திற்கு வந்திருந்தாற் போலிருந்தது,

''அவள் அளவுகளை எடுத்துக்கோ மது'' என்று வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுதுதான் புரிந்தது மதுவுக்கு—பாஸ் அந்த ஸ்லைடுகளை எடுக்கச் சொல்லியிருந்ததற்குக் காரணத்தை. எந்த வேலை செய்தாலும் சரி, சந்தேகம் வந்துவிட்டால் அதைத் தீர்த்துக் கொண்டுவிட வேண்டும் ராஜசேகருக்கு.

''அளவெல்லாம் எதுக்கு சார்?''-சீரியஸாய் திரையையே பார்த்துக் கேட்டான் மது.

''அவள் அளவுகள் தெரிஞ்சால் காஸ்ட்யூம்ஸுக்கு ஆர்டர் தரலாம்.''

''ஆனால்... சார், அவள் பேரைத் தவிர வேறெதுவும் தெரியலை நமக்கு. கிடைப்பாள் என்ற நம்பிக்கையும் இல்லை. அப்படியிருக்கும்போது...''- தயக்கத்தோடு நிறுத்திக் கொண்டான் மது.

"கிடைப்பாள் என்ற நம்பிக்கையோடு செய்வோம். நம்ப முயற்சியில் சாமர்த்தியமும் நேர்மையும் இருந்தால் கண்டிப் பாய் கிடைப்பாள். கிடைக்க பல நாள் ஆகலாம். கிடைத் தும் மெதுவாய் அப்போது காஸ்ட்யூம்களுக்கு ஆர்டர் தந்து எதிர்பார்த்துட்டு காத்துட்டு உட்கார்ந்திருப்பது முட்டாள்தனம்," என்றான் ராஜசேகர்.

மது சட்டென்று திரையில் அவள் அளவுகளை எடுத்துக் கொண்டான். அளவுகளைப் பரிசீலித்து திருப்தி யடைந்தான் ராஜசேகர்.

இப்பொழுது ராஜசேகரின் முகத்தில் திருப்தியும் மகிழ்ச்சியும் குடி கொண்டிருந்தன.

"ராஜ! சாப்பிடலாமா?" என்றாள் மஞ்சுளா.

"சாப்பிடலாம், ரொம்ப பசிக்குது."

நால்வரும் டைனிங் டேபிளுக்கு வந்து உட்கார்ந்து கொண்டார்கள். சாப்பிட்டுக் கொண்டிருந்த ராஜசேகர் திடீரென்று எழுந்து கை கழுவிக் கொண்டு வேகமாய் முன் அறைக்கு வந்து போனை எடுத்து, இண்டர்நேஷனல் புக்குங்கிற்கு டயல் பண்ணி, "வாட் அபௌட் பாரீஸ் போன் கால்?" என்று கேட்டான்.

'இன்னும் ஒரு மணி நேரமாகும்' என்று பதில் வந்தது ஆப்ரேட்டரிடமிருந்து. அசதியோடு போனை வைத்து விட்டுத் திரும்பி வந்தான்.

சாப்பிட்டு முடித்ததுமே ராஜசேகரும் மதுவும் ஹாலிலிருந்த போனிடம் வந்து உட்கார்ந்து கொண் டார்கள். காதம்பரியும் மஞ்சுளாவும் படுக்கையறைக்குப் போய் விட்டார்கள்.

19

''மாடல்களை, அதிலும் முக்கியமாய் பெண் மாடல்களை ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்கும் இந்த விளம்பர உலகம்; அதைத் தாங்கி நின்று கொண்டு, ஏதாவது கொடுத்தால் தான் கொஞ்சமாவது புகழைப் பங்கிட்டுத் தரும் சமூகம்; அவள் வேலை உபயோகப்படும் வரை- அது பணமாய் மாறும்போது- அதில் கொஞ்சம் தான் பட்டப் பாட்டின் பலன் மாடலுக்கு எஞ்சி நிற்கும். இந்த வெற்றிக்குப் பின்னால் பாடு, வருத்தம், அவமானம், கொள்ளை, ராட்சசத்தனம், அரசியல், பொறாமை, வேதனை, வேதாந்தம் இவை கடைசியாய் மிஞ்சி நிற்கும் மாடலுக்கு—'' சொல்லிக் கொண்டே பெருமூச்சு விட்டாள் காதம்பரி. தன் வருத்தங்களை மற்றொருவரிடம் எடுத்துச் சொல்லி மனதின் பாரத்தை இறக்கிக் கொள்ள நேர்ந்ததற்குத் திருப்தியடைந்தவளாய் மறுபடியும் தொடர்ந்தாள் காதம்பரி.

மஞ்சுளாவுக்கு விளம்பர உலகத்தைப் பற்றி புதுப் புதுச் செய்திகளைக் கேட்கக் கேட்க விந்தையாயிருந்தது.

''பச்சைக் குழந்தையாகவோ, முட்டாளாகவோ, ஜந்துவாகவோ இல்லாமல் ஒரு மனிதனாய் இருப்பது எவ்வளவு மேன்மையோ அவ்வளவுக்கவ்வளவு வருத்தமானதும் கஷ்டமானதும்கூட. அதேபோலதான் இந்த மின்னல் உலகத்தில், நிழலுக்கும் ஒளிக்குமிடையே நிகழும் கண்ணாமூச்சி ஆட்டத்தில், சுக துக்கங்களின் சந்தியில், தம் இடத்தை நிலை நாட்டிப்பதற்கு கற்பைக் காப்பாற்றிக் கொள்வது கூட அவ்வளவு கஷ்டமானதுதான், அவ்வளவு வேதனையானதும்கூட...''

''ஆனால் உங்களுக்கு உள்ள இமேஜ் ரொம்ப கிரேட் இல்லையா?'' என்றாள் மஞ்சுளா அவளை இன்னும் பேசவைக்க விரும்பி.

"உம்... இமேஜ்... எங்க இமேஜ்! எல்லாம் பிச்சைக் காரங்களுக்கு நடுவில் இருக்கும் கண்ணாடி மாளிகையைப் போன்றது. பிச்சைக்காரங்களுக்குப் பைத்தியம் முதிர்ந்து போய் கற்களை விட்டெறியும் வரையிலுந்தான் எங்க கண்ணாடி மாளிகை பிழைத்திருக்கும்."

நிறைய பேரைப் போலவேதான் அது ஒரு மின்னும் உலகம் என்றும், அவர்களுக்கு என்றுமே சுகமும் சந்தோ ஷமுந்தான் இருக்கும் என்றும் மஞ்சுளாவும் எண்ணி யிருந்தாளே தவிர, அவர்கள் வாழ்க்கைக்குப் பின்னால் இவ்வளவு வேதனை இருக்கும் என்று ஊகித்துப்பார்த்த தில்லை.

"ஒரு முறை என்னவாச்சு தெரியுமா? நானும் இன் னெரு மாடல் விஜயா என்றவளும் ஒரு விளம்பர பிலிமில் ஆக்ட் பண்ணினோம். அது ஒரு பிளேடு கம்பெனியைச் சேர்ந்த பிலிம். அந்த பிளேடால் சவரம் பண்ணிக் கொண்டால் அழகான பெண்கள் அவர்களைச் சுற்றத் தொடங்குவார்கள் என்று முட்டாள்தனமாய் காட்டப் பட்ட பிலிம். அதனால் அருவருப்பும, அளவுக்கு மீறிய சிருங்காரமும் தோன்றும்படி காட்டினார்கள் பெண் மாடல்களை. அதாவது எங்களைத்தான். உண்மையில் எவ்வளவு அவமானம் பெண்களுக்கு! பண்பைப் பார்த்துக் காதலிக்கும் பெண்கள்— கேவலம் அந்தக் கம்பெனியின் பிளேடு மூலம் சவரம் பண்ணிக் கொண்ட அந்த ராஸ் கலைப் பின் தொடர்ந்து சுற்றத் தொடங்கிடுவாங்களா? எவ்வளவு சீப்பாய் ப்ரொஜெக்ட் பண்றாங்க பார்த்தாயா? இந்த பிலிம்களைப் போடற தியேட்டர் திரையையே கிழிச்சுப் போட்டுடணும். அந்த பிலிமையே கொளுத் திடணும். அது நடக்காது. ஏன்னால் பெண்கள் என்றால் ஆணின் பார்வையில் அழகான மாமிசமொத்தை! ஆணின் பார்லையில் பெண் ஒரு செக்ஸ் சிம்பல் என்ற பாழும் யோசனை இருக்கிற வரைக்கும் இதைத் தவிர்க்க முடியாது போலிருக்கு. எதையோ சொல்லப்போய்

வேறெதையோ சொல்லிட்டிருக்கேன் போலிருக்கு... இல்லே?... அந்த பிலிமில் எங்களிருவரின் அழகையும் நூலிழைத்துணியோடு நிர்வாணமாய் காட்டினாங்க. அது ரிலீஸ் ஆச்சு.''

''ரிலீசாச்சா?''— ஆச்சரியமடைந்தவளாய் அருவருப் போடு கேட்டாள் மஞ்சுளா.

''ஆஹா... கோலாகலமாய் நகரமெல்லாம் ஹிட் ஆயிற்று. அந்த பிளேடுகள் எக்கச்சக்கமாய் விற்பனை ஆயிற்று-அந்த பிளேடின் நாணயத்தால் இல்லை. எங்கள் அழகை இரையாய் காட்டி நாங்கள் வாங்கச் சொன்னோ மில்லையா, அதுக்காக. விற்பனையாளர்களுக்கு இந்த பலவீனம் இருக்கும் வரையிலும் நாங்கள் அவங்க சரக்கு களை விற்றுத்தர இயந்திரமாய் இருப்போம். எங்களுக்கு வெட்கம், பண்பு, பயம் எதுவும் இருக்காது. இருக்கக் கூடாது. ஏதாவது மேரேஜ் ப்யூரோ விளம்பரம் தந்து எங்களைத் தொடர்பு கொண்டால் இத்தனை அழகான பெண்களை உங்கள் மனைவியாகும்படி பண்ணுகிறோம் என்று எங்களைக் காட்டினால் நியாயமாய்த் தோன்றும். ஆனால் பிளேடுக்கும் பெண்களுக்கும் என்ன சம்பந்தம்? சவரம் பண்ணிப்பவர்களுக்குக் கூர்மையாய், சுலபமாய் பண்ணிப்பது போல மிருதுவாய் மழிக்கக்கூடிய பிளேடு என்றோ, பல முறை சவரம் பண்ணக்கூடிய கூர்மை வாய்ந்த பிளேடு என்று சொன்னாலோ போதாதா? அதற்கு நாங்கள் எங்கள் உடலையெல்லாம் காட்டணுமா? விற்பனையாளர்கள் தம்மையே தாம் சரி பார்த்துக் கொண்டால் எவ்வளவு தப்பான பிரம்மைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம்னு புரியும். ஆனால் யாருக்கு அதற்கு டயம் இருக்கு? விற்பனையாளர்கள் வாங்கும் பொருட்களின் நல்லது கெட்டதுகூட அவர்கள் வரை எட்டாமல் பண்ணிவிடுவதுதானே பப்ளிசிடி! அந்த பிலிம் எப்படி ரிலீசாச்சுன்னு தானே ஆச்சரியப்படு கிறாய்? பெண் மாடல்களை அசிங்கமாய் காட்டக்கூடாது

என்றும், அவர்களை ஹீனமாய் எடுத்துக்காட்டக் கூடாது என்றும் எடுத்துக் கூறுகிற ஒரு சங்கம் இருக்கு. 'அட்வர் டைசிங் அதாரிடி ஆப் இண்டியா' என்ற பெயர் அதற்கு. ஆனால் அது காகிதப்புலி மட்டுமே. யூ. என். ஓ. இராணை யும் இராக்கையும் சண்டை போட்டுக் கொள்ள வேண் வேண்டாம் என்று சொன்னால் கேட்டார்களா, அது போலதான் இதுவும்.''

''சென்ஸார் போர்டு அப்படிப் பட்டதையெல்லாம் எப்படி அனுமதிக்கிறது?'' என்று கேட்டாள் மஞ்சுளா, காதம்பரியை ஆச்சரியமாய் பார்த்து.

''அவங்க பாவம், தம் சக்திகளைத் தாம் விழுங்கிண்டு அவற்றை விட்டு விடுகிறார்கள். இதென்ன அநியாயம் என்று பெண்கள் உரிமைச் சங்கம் கேட்டால், 'பாவம் அவங்க கோடிக்கணக்கில் முதல் போட்டு உற்பத்திப் பண்றாங்க, அவைகளை விற்பதற்காக. இதையெல்லாம் கண்டும் கண்டுக்காமல் போயிட வேண்டியதுதான்' என்று மென்று விழுங்குவாங்க. அது சரி, பார்த்தாயா, எங்கெங்கோ போயிடுத்து டாபிக்... பதினைந்தாண்டு கசப்பு அனுவங்கள் என்னைத் திணறடிச்சு விட்டன. இவ்வளவு நாளாய் என்னைப் புரிஞ்சுக்கிற இதமான மனுஷங்க கிடைக்காமல் இதையெல்லாம் சொல்லிக்க முடியாமல் இருந்தது. அதனால் மனசுப் பாரத்தைக் குறைச் சுக்கவே முடியலை. இப்போது ராஜசேகரையும் உன்னை யும் ரொம்ப வேண்டியவங்களாய்ப் பாவிக்கிறேன். அதனால் தான் இப்படி வெளியே கக்கிட்டேன். என்னவோ இந்த மாதிரி துர்லபமான நினைவுகளோடு அதிக நாள் தாட்ட முடியாது போலிருக்கு. இப்பல்லாம் எனக்கு...''

காதம்பரியின் கண்கள் கசிந்து ஈரமாகிவிட்டன. அவளை அந்த நிலையில் பார்த்த மஞ்சுளாவின் இதயத் தைப் பிசைந்தது.

"சரி, விஷயத்துக்கு வரேன். அந்த பிலிமில் என்னேடு கூட வேலை பண்ணிய மாடல் சின்னப்பொண்ணு. பிலிம் ரெஸ்பான்ஸ் தியேட்டரில் போய் பார்க்கலாம் வாங்க என்று தொந்தரவு பண்ணினாள். வேண்டாம் என்றாலும் கேட்கவில்லை, அனுபவம் குறைவானதால்.

இருவரும் தியேட்டருக்குப் போனோம். அதில் இங்கி லீஷ் பிச்சர் ஓடிக்கொண்டிருந்தது. இண்டரவெல்லில் விளம்பரப்படத்தைப் போட்டார்கள். கடைசி பிலிம் எங்களுடையது. அது 90 விநாடி பிலிம். அதையே டபுள் டைம் திரையிடும்படியாய் இரண்டு பிரிண்ட் ஜாயிண்ட் பண்ணி அனுப்பிற்று ஏஜென்சி. 180 விநாடிகள் நாங்கள் திரையில் தென்பட்டோம். அந்த டைம் போதுமானது, நாங்கள் ரசிகர்களின் மூளையில் முத்திரை படிந்து போவதற்கு. அதோடுகூட சினிமா ஹீரோயின்களைப் போல திரையில் அற்புதமாகவும் வெளியே கண்றாவியா கவும் இருக்கமாட்டோம் நாங்கள். வெளியேகூட அழகா கவேதான் இருப்பார்கள் மாடல்கள். அதனால் பிலிமில் நடித்தப் பெண் இவள்தான் என்று நிஜவாழ்க்கையில் எங்க ளைப் பார்த்தவர்கள் சட்டென்று கண்டு பிடித்து விடுவது வெகு எளிது. இண்டர்வெல்லில் ப்ளிச்சென்று எரிந்த விளக்கு வெளிச்சத்தில் எங்களைப் பார்த்தவர்கள் நன்றாய் அடையாளம் கண்டுகொண்டார்கள். அவ்வளவு தான்! தெரு நாய்களைப் போல எங்கள் மேல் வந்து விழத் தொடங்கினார்கள். கிள்ளினார்கள், நிமிண்டினர்கள், கடித்தார்கள், முத்தமிட்டார்கள். அவர்கள் கைகளும், நாக்குகளும், பற்களும் எங்கள் மீது நாட்டியமாடின. துணையில்லாத இரு பெண்களை தம் கணவர்கள் இம்சிப் பதை அவர்கள் மனைவிமார்கள் பார்த்தாலும், சனா தன சம்பிரதாயங்களை இழுத்துப்பிடித்துக் கொண்டு தம் வாழக்கையில் அப்படியே கடைப்பிடிக்கும் இந்துப் பெண்கள் ராஜியாகி அவர்களுடனேயே குடித்தனம் பண்ணுவார்கள். அதுவே அந்த மனைவிகள் அப்படிப் பண்ணியிருந்தால் அவர்களால் ராஜியாக முடியாது.

சதி சுமதி, சதி சக்குபாய் சீதா, சாவித்திரி போன்ற புராணங்களை எழுதி, அவற்றைப் புனித இதிகாசங்களாய் முத்திரையிட்டு, நம் முகத்தில் வீசியெறிந்து சென்ட்டிமென்ட் என்ற எல்லைக்குள் நம்மை சமாதியாக்கி விட்டார்கள்... இந்தப் பயங்கரத்திலிருந்து நானாவது கொஞ்சம் தப்பித்துக்க முடிஞ்சுது. பாவம், அந்த விஜயாவால் அதுபோல முடியவில்லை. அது அவளுக்கு ஷாக் ஆகிவிட்டது. இரண்டு நாளில் ரயிலடியில் தலை வைத்துத் தற்கொலை புரிந்துக் கொண்டாள்— நடந்த அவமானத்திற்கு அதுதான் பரிகாரம் என்பது போல. அவள் பட்டினத்து வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட பெண்ணாயிருந்தாலோ, அல்லது வட இந்தியப் பெண்ணாயிருந்தாலோ கொஞ்சமாவது தாங்கிக் கொண்டிருந்திருப்பாளோ என்னமோ! ஆனால் விஜயாவோ மென்மையான மனம் கொண்ட தமிழ்ப் பெண். மின்னும் இந்த உலகத்தைப் பார்த்துட்டு ஆசைப்பட்டு, நாலுபேர் தன் அழகைப் புகழ்ந்தால் அதை நாலு லட்சம் பேருக்குக் காட்டிப்போம் என்ற பலவீனமும், அதன் மூலம் சினிமாவில் சேர்ந்து ஹீரோயின் ஆயிடலாம் என்ற பேராசையும் அவளை விழுங்கி விட்டது. இப்போ சொல்லு, எது எங்கள் இமேஜ்? எங்கே? நாங்க மட்டுமேயில்லை, சினிமா நடிகைங்களைக் கூட இப்படித்தான் பண்றாங்க. வெறி நாய்களுக்குத் தொலைவில், ராட்சசக் கழுகுகளுக்கு அதீதமாய் ஸ்டூடியோவில், ஏர் கண்டிஷன் அறைகளில், விளம்பர ஏஜென்சி முதலாளிகள் போட்டோகிராப்பர்களின் பெட்ரூம்களில், திரையில், டி. வி. யில், ரோடியோவில், பத்திரிகைகளில், ரோடு பக்கங்களிலுள்ள போர்டுகளில், அல்லது பெரிய செக்யூரிட்டரிக்கு நடுவில் மேடையிலோ இருக்கிறவரைக்குந்தான் எங்கள் இமேஜ். அதுவும் செக்யூரிட்டரிக்காரங்க சமர்த்தாய் இருக்கிறவரைக்குந்தான். வேலியே பயிரை மேய்ந்த சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. கொஞ்சமும் சேஃப்டி இல்லாத வாழ்க்கை எங்கள் மாடல்களின் வாழ்க்கை

இதுக்கு வேறுவிதமாய் எந்த மாடாலாவது கதை அளந்தால் கக்க முடியாத கடுமையான உண்மையை சமாதியாக்கிட்டதாய் தான் எண்ணிக்கணும். அது மட்டும் உண்மையாயிருக்காது. எங்கள் ஃபீல்ட் நல்லதுன்னு சொல்லிட்டால் அது ஹிப்போக்ரஸியாய் தான் இருக்கும்'' என்று நிறுத்தினாள் காதம்பரி.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல வென்று உதிர்ந்தன.

''பார்த்தாயா! குறைந்த பட்சம் எங்களுக்குக் கண்ணீராவது இருக்கு— இதய பாரத்தை இறக்கிப்பதற்கு. சினிமா நடிகைகங்களுக்கு அது கூட இருக்காது. ஏன்னால் நாங்க எந்த விளம்பர பிலிமில் வேலை பண்ணினாலும், எந்த ஸ்டில்லுக்கு வேலை பண்ணினாலும், அழத் தேவையில்லை. சந்தோஷமாய் அந்த ப்ரொடக்ட் 'நல்லது' என்று தான் சொல்லுவோம். அதனால் கண்ணீர் எஞ்சி நிற்கிறது— நிஜ வாழ்க்கையில் பயன்படுத்திப்பதற்கு. பாவம், அவங்களுக்கோ விதம்விதமான வேதனைமயமான பாத்திரங்களைத் தரித்து தரித்து, கண்ணீர்களைக் கூட சினிமாக்களுக்கே செலவழிச்சுடறாங்க — தமக்குச் சொந்தமாய் மீத்து வைத்துக்காத துரதிர்ஷ்டசாலிங்க—''

தன் வருத்தங்களைச் சொல்லி காதம்பரி இதய பாரத்தை இறக்கிக் கொண்டாலும், அவள் கசப்பான அனுபவங்களைக் கேட்ட மஞ்சுளாவின் இதயத்தில் அந்த பாரம் வந்து சேர்ந்து கொண்டது.

''விஜயாவைப் பற்றி நினைச்ச போதெல்லாம் என் மனசு படாத பாடுபடுகிறது. எத்தனை பேர் அப்பாவிப் பெண்களின் உயிருக்கு உலையாய் இருக்கிறதோ இந்த மாய உலகம்!''

''ஒன்றும் நினைச்சுக்காமலிருந்தால் ஒரு கேள்வி கேட்கிறேன்'' என்றாள் மஞ்சுளா, காதம்பரியைத் தயக்கத்தோடு பார்த்து.

"கேளும்மா, தயக்கம் எதுக்கு?" என்றாள் காதம்பரி மஞ்சுளாவைப் பரிவோடு பார்த்து.

"உங்கள் தொழிலை நீங்க இவ்வளவு தூரம் அருவருத்துக்கிட்டே, அதிலேயே ஏன் தொடர்ந்து இருக்கீங்க? இப்படிக் கேட்கிறதுக்கு ஒண்ணும் நினைச்சுக்காதீங்க!"

அதைக்கேட்ட காதம்பரி விரக்தியாய் சிரித்தாள். அலை அலையாய் சிரிப்பது காதம்பரியின் தனித்தன்மை. அதையே கேஷ் பண்ணிக் கொள்வார்கள் போட்டோ கிராப்பர்கள்.

"சொல்றேன். இப்போது இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல முடியும் என்னால். அருவருத்துகிட்டே தொடர்ந்து இருப்பதில் ஒரு முக்கிய அர்த்தம் இருக்கு. ஒரு சின்ன ரகசியம் கூட அதில் ஒளிஞ்சுட்டிருக்கு. தற்சமயம் சொல்ல முடியாத நிலையில் இருக்கேன். மன்னிச்சுக்கோ. விரைவிலேயே சொல்றேன்—உங்க ரெண்டு பேருக்கும்"

காதம்பரியின் மேல் இரக்கமும் விளம்பர உலகத்தின் மேல் வெறுப்பும் ஏற்பட்டது மஞ்சுளாவுக்கு.

இதே உலகத்தில் இருந்தால் ராஜ்கூட இதேபோல மாறினாலும் மாறலாமோ? எது என்னவானாலும் சரி, ராஜசேகரை இந்த ஃபீல்டிலிருந்து தொலைவிற்குக் கூட்டிச் சென்றுவிட வேண்டும். அதைத்தான் உறுதியான முடிவாய் எடுத்துக் கொண்டாள் மஞ்சுளா.

நள்ளிரவு நேரம் அது. வெளியே பனி லேசாய் விழுந்து கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று விர்ரென்று வீசிக் கொண்டிருந்தது. மின்சாரம் போய்விட்டதால் அறையெங்கும் இருட்டாயிருந்தது.

மது எழுந்துப் போய் ஜன்னல் கதவுளைகளைச் சாத்தி விட்டு, மெழுகு வர்த்தியை ஏற்றிக்கொண்டு வந்து வைத்தான்.

அந்த சன்னமான வெளிச்சத்தில் போனையே பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகர் கம்ப்யூட்டரைவிட வேகமாய் யோசித்துக் கொண்டிருந்தான் தன் பராஜெக்டைப் பற்றி.

தம் அறையில் படுத்திருந்த காதம்பரிக்கும் மஞ்சுளாவுக்கும் கூட உறக்கம் வரவேயில்லை.

நிசப்தமாயிருந்த அந்த வீட்டுச் சூழ்நிலை பயதைத் தோற்றுவித்தது.

ராஜசேகர் என்ன சொல்கிறானோ அப்படியே செய்வோம் என்று மதுவும், எப்படி ஜெயிக்கப் போகிறானோ என்று காதம்பரியும், பந்தயத்திலிருந்து ராஜசேகர் மீண்டு, தன்னோடு மதுரைக்கு வந்துட்டால் நன்றாயிருக்குமே என்று மஞ்சுளாவும் குழம்பித் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

சித்தரஞ்சன் இனிமேல் எந்த மாதிரி உபாயம் தீட்டுவானோ என்று ராஜசேகர் குழம்பிக் கொண்டிருந்தான்.

''மது! கிரணையும், ராம்பூபாலையும் நம்பலாமா?''- அவ்வறையில் சூழ்ந்திருந்த மயான நிசப்தத்தைச் சிதறடித்தபடி வெளிவந்தன ராஜசேகரின் வார்த்தைகள்.

அவ்விருவரையும் நம்பித்தான் தனக்கு முன்னாடியே அவர்களுக்கு வேலைகளைக் கூட ஒப்படைத்திருந்தான் ராஜசேகர் என்று மது அறிவான். அதற்குள் இவ்வாறு கேள்வி கேட்டான் என்றால் இந்தப் பந்தயத்தில் யாரையுமே நம்பக்கூடாது என்ற முடிவிற்கு வந்து விட்டிருந்தான் போலிருந்தது. இவ்வாறு யோசித்த மது—

''கிரணை நம்பலாம். ராம்பூபாலைக்கூட நம்பலாம். ஆனால் அவனுக்குப் பெண் பித்து அதிகம். அந்த பித்தில் அவனுக்கே கூட தெரியாமல் சில தவறுகளைப் பண்ணிட்டிருப்பான் சார். போட்டோக்களின் மாறாட்டத்துக்கு முன்பே அவங்களை மாடலிங்குக்கு உபயோகப்படும்

பெண்களைப் பார்த்துத் தேடிப் பிடிக்கச் சொல்லி அனுப்பிடுங்க சார். இப்போது வேறு வழியில்லாமல் நாம்ப தரங்கிணியைக் கொண்டுதான் படம் பிடிச்சுத் தீரணும். அப்படியிருக்கும்போது அவங்களைத் திரும்பி வரச் சொல்லிக் கூப்பிட்டுட வேண்டியதுதானே சார்?''

ராஜசேகர் நிமிர்ந்து மதுவைப் பார்த்தான். அந்தப் பார்வையில் கொஞ்சம் மூளையைப் பயன்படுத்து என்ற பாவனை தெரிந்தது மதுவுக்கு.

அதனால் வெட்கமடைந்தான் மது.

தீவிரமாய் யோசித்துப் பார்த்தான்.

அப்பொழுதுதான் புரியத் தொடங்கிற்று—

போட்டோ மாறாட்டத்திற்கு முன்னால்கூட கிரணும் ராம்பூபாலும் தேடிப் பிடிக்கப் போகும் மாடல்களைத் தம்மோடு வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உத்தேசம் இல்லை ராஜசேகருக்கு. அப்போதே ரகசியமாய் சுமீதாவைத் தன் மாடலாய் முடிவெடுத்துக் கொண்டு விட்டான். ஆனாலும் அவர்களுக்கு வேலையை ஒப்படைத்திருக்கிறான். இதற்குப் பின்னால் ஏதோ மாஸ்டர் பிளான் இருப்பதாய் தோன்றிற்று மதுவுக்கு. ஆனால் கேட்கவில்லை. யோசித்தபடியே உட்கார்ந்திருந்தான்.

அதற்குள் போன் மணி கணகணவென்று ஒலித்தது.

ரிசீவரைக் கையிலெடுத்தான் ராஜசேகர்.

''ஹலோ சார்... செயின்ட் லாரென்ட் லைனில் இருக்கார் சார்'' என்றாள் ஆபரேட்டர்.

20

நள்ளிரவு பன்னிரண்டரை மணி. இன்னும் மின்சாரம் வராததால் வீதியெல்லாம் காரிருளில் தோய்ந்திருந்தது. எங்கும் மனித சஞ்சாரமே இல்லை.

ராஜசேகரின் கார் ஹெட் லைட் வெளிச்சம் அந்தக் காரிருளைப் பிளந்து கொண்டு போய்க் கொண்டிருந்தது வேகமாய்.

மழைநீர் நிரம்பியிருந்த குட்டைகள் எதிர்ப்படும் போதெல்லாம் கார் பந்தைப்போல துள்ளிக் குதித்துக் கொண்டே போயிற்று.

ராஜசேகர் மறுபடியும் ஆபீசுக்கு ஏன் புறப்பட்டான் என்று புரியவில்லை மதுவுக்கு. குளிருக்கு ஒடுங்கிக் கொண்டே முன் சீட்டில் ராஜசேகருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான் மது.

''மது, நம்ப லைப்ரரியில் வோர்ல்ட் டாப் பேஷன் மேகசின்கள் எல்லாம் இருக்கோனோ?''

''இருக்கு சார்... நீங்க அவ்வப்போது ரிஃபர் பண்ணிப் பீங்கன்னு அதையெல்லாம் பைண்டு பண்ணி வெச்சிருக்கேன் சார்!''

''செயிண்ட் லாரென்ட் போனில் தரங்கிணியைப் பற்றி ஒரு சின்ன செய்தி சொல்லியிருக்கார். அதைக் கொண்டு அவளைப் பற்றி பரிசோதிக்கணும். அதற்காக...''

கார் பந்தாய் துள்ளிக் குதித்தது. இருவர் தலையும் மோதிக் கொண்டதால் வலி ஏற்பட்டது ஆனால் அதையொன்றும் பொருட்படுத்தாமல் அதே வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

''நான் நாளைக்கு பாரீசுக்குப் போறேன். வர ரெண்டு மூணு நாள் ஆகலாம். அதற்குள் நீ பம்பாய்க்குப் போயிட்டு வரணும். இந்த மாதக் கடைசி வரைக்கும்

நாமிருவரும் ஊரில் இல்லாமல் போகலாம். ஆனாலும் இங்கே வேலைகள் தடைப்படக் கூடாது. நாம்ப இங்கே நம்பக் கூடியது சந்திரன் ஒருத்தனைத்தான். அதனால் சந்திரனுக்குத் தேவையான பணம், ஆலோசனைகள் எல்லாம் தந்து ஆபீஸ் எப்போதும் போலவே நடந்து வரும்படி பார்த்துக் கொள்ளச் சொல்லு.''

''ஆனால்... சாரீ... ஆபீஸ் பாய்...''

''டோன்ட் டாக் ரப்பிஷ். நாளையிலிருந்து அவன் ஆபீஸ் பாய் இல்லை. என் ப்ரைவேட் செக்ரட்டரி. அவன் திறமையைப் பார்த்துகூட அவனை முன்னுக்குக் கொண்டு வராவிட்டால் அது நம் முட்டாள்தனந்தான் ஆகும். இரண்டு கைத்தேர்ந்த நீச்சல்காரங்களால்கூட காப்பாற்ற முடியாத ரூபவதியை அவன் புத்திசாலித்தனமாய் காப்பாற்றியிருக்கான். ரூபவதிக்கு மட்டும் ஏதாவது நேர்ந்திருந்தால் நம்மால் தலை தூக்கியிருக்கவும் முடியாது. அதையெல்லாம் யோசித்தாயா?''

மது பதில் பேசவில்லை.

''நீ முட்டாள். ஆப்ஸர்வேஷன் இருக்கணும்னு நிறைய தடவை சொல்லியிருக்கேன் உனக்கு. உன்னைச் சுற்றி யிருப்பவங்களையே நீ கவனிக்க மாட்டேங்கிறாய். சந்திரன் மட்டும் நம்மை நன்றாய் கவனித்து வரான். எல்லாவற்றையும்விட என்மேல் அதிகமான பக்தி இருக்கு அவனுக்கு. நானே என்றாவது ஒருநாள் அவனுக்குப் ப்ரமோஷன் தரலாம்னு இருந்தேன். அது இன்னிக்கு ஒரு முடிவுக்கு வந்துடுத்து. அவனுக்கு அந்த போஸ்டில் இருப்பது கஷ்டமாய் இருந்த போதிலும் நேரிடையாய் கேட்கத் தயங்கியபடி இவ்வளவு நாளும் இருந்திருக்கான்னு நினைக்கிறேன். இப்போ ஆபீஸுக்குப் போனதுமே அவனை பெர்சனல் செக்ரட்டரியாய் ப்ரமோட் பண்ணி னாற்போல நோட் டைப் பண்ணு. நாளைக்கு அதை ஆபீசில் சர்குலேட் பண்ணு'' என்றான் ராஜசேகர்.

கார் மெயின் ரோடைத் தாண்டிற்று.

"மது..."

"சார்!"

"உனக்கு சித்தரஞ்சனைப் பழி வாங்கணும்னு இருக்கு, இல்லையா?"

"ஆமாம் சார்!" என்றான் ஆர்வமாய்— ஏதாவது சான்ஸ் கொடுக்கப் போகிறானோ என்ற ஆசையில்.

"நாளைக்கு பம்பாயில் இறங்கியதுமே பெண்கள் உரிமைச் சங்கத்தின் சேர்மேன் சாந்தியைச் சந்தித்துக் கொள். சித்தரஞ்சன் இந்திராவுடன் எடுத்த டயர்ஸ் விளம்பரப் படத்தைப் பற்றிச் சொல்லு, போதும். புரிஞ்சுதா?"- புன்முறுவலோடு சொன்னான் ராஜசேகர்.

மதுவுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. சாமர்த்தியசாலிகள் என்றுமே தம் கையில் மண் ஒட்டிக் கொள்ளாமல், எதிராளிக்கு ஆதாரங்கள் கிடைத்து விடாமல் வீழ்த்து வார்கள் அப்படிப்பட்ட அவகாசத்தைத் தான் மதுவுக்குத் தந்தான் ராஜசேகர்.

கார் ஆபீசுக்கு முன்னால் வந்து நின்றது. காரைப் பார்த்துவிட்டு ஓட்டமாய் ஓடிவந்த கூர்க்காவுக்குத் தன் முதலாளி அந்த அர்த்தராத்திரி வேளையில்- அதுவும் மழை பெய்துக் கொண்டிருந்தபோது - அவ்வளவு தடவை ஆபீசுக்கு ஏன் வருகிறார் என்று புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

ராஜசேகர் நேராய் இரண்டாவது மாடியிலிருந்த தன் ஆபீசிற்கு முன்னால் வந்து நின்றான். மது பூட்டைத் திறந்ததுமே வலது பக்கத்திலிருந்து மூன்றாவது அறைக்கு முன்னால் வந்து நின்றான். அதுதான் ராஜசேகரின் ஆபீஸ் லைப்ரரி.

தரங்கிணியைப் பற்றி மேலும் சில தகவல்கள் கிடைக் கக்கூடும் என்ற பரபரப்பு அவனுக்குள் பெருகிக் கொண்

டேயிருந்தது. அந்தச் சமயத்தில் தரங்கிணியைப் பற்றி ஏதாவது ஒரு துரும்புச் செய்தி கிடைத்தாலும் போதும். அதைப் பிடித்துக் கொண்டு முன்னேறிவிட வேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டது அவனுக்கு.

ராஜசேகர் சாவியைத் தந்ததுமே மது லைப்ரரி அறையைத் திறந்தான். லைப்ரரியின் சாவியை மட்டும் எப்போதும் தன்னோடேயே வைத்துக் கொண்டிருப்பான் ராஜசேகர்.

அறையில் வரிசையாய் இருந்த இரும்பு பிரோவில் பல வித ஃபேஷன் மாகஸின்களும், வோர்ல்ட்லைஃப் ஸ்டைல் மேகஸின்களும், விளம்பரத்திற்கு சம்பந்தப்பட்ட புத்தகங்களும் வரிசையாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

ராஜசேகர் கண்கள் ஃபேஷன் மாகஸின்கள் இருந்த ஷெல்ஃபின் மீது படிந்தன. சட்டென்று அங்கே போனான். இருவரும் பரபரப்பாய் சமீபத்தில் வெளிவந்த ஒக் மேகஸினைத் தேடத்தொடங்கினார்கள். 1984 ஜூன் இதழிலிருந்து ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் இதழ்கள் வரையிலும் பார்த்துக் கொண்டே இன்னும் முன்நோக்கிச் சென்று கொண்டிருந்தன ராஜசேகரின் கண்களும் கைகளும்.

21

நள்ளிரவு ஒரு மணி ஆயிற்று. படுக்கை அறையிலிருந்த காதம்பரியும் மஞ்சுளாவும் இன்னும் தூக்கம் வராததால் முன் அறையில் வந்து உட்கார்ந்துக் கொண்டு ராஜசேகரை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கத் தொடங்கினார்கள்.

அதற்குள் போன் மணியடிக்கவே திடுக்கிட்டார்கள் இருவரும். அந்தச் சமயத்தில் யார் போன் பண்ணியிருப்பார்கள்? எல்லாம் குழப்பமாய் தோன்றிற்று.

கடைசியில் மஞ்சுளா போனை எடுத்தாள். ஆனால் எதுவுமே பேசவில்லை போனில் ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

"எனக்குத் தெரியும் உனக்குத் தூக்கம் வராதுன்னு. இனிமேல் ஒவ்வொரு நாளும் உறங்கா இரவுகள் தாம் உனக்கு! உன் இதயத்தில் ஓடிக்கொண்டிருப்பது ரயில் இல்லை. நான்... நான்தான் எப்போதும் ஓடிண்டிருக் கேன்... அதுவும் இரும்பு பூட்சு போட்டுக் கொண்டு... கடைசியில் எப்படியோ ரூபவதியைப் பிழைக்க வெச்சுட் டாய். அதிர்ஷ்டசாலி... உன் பக்கத்திலும் அதிர்ஷ்டம் இருக்கு போலிருக்கு—" பயங்கரமான சிரிப்பு அலை அலை யாய் சமுத்திரத்தின் சீற்றம் மிகுந்த அலைகளைப்போல போனில் கேட்டது மஞ்சுளாவுக்கு. பயந்து போய் போனை கட் பண்ணி விட்டாள். உடம்பெல்லாம் வியர்த் தெடுத்தது அவளுக்கு. நாக்குப் புரள மறுத்தது.

மஞ்சுளாவின் நிலைமையை கவனித்த காதம்பரி எழுந்து வந்து மஞ்சுளாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவள் தோளைக் குலுக்கினாள் பரிவோடு.

கொஞ்சம் தேறிக் கொண்ட மஞ்சுளா தான் போனில் கேட்டவார்த்தைகளைச் சொன்னாள். காதம்பரிக்கு முதலில் மூளையே மரத்து விட்டாற் போலிருந்தது. போன் பண் ணியது சித்தரஞ்சன் என்று ஊகித்துக் கொண்டாள்.

ரூபவதி பிழைத்தாளா, ராஜசேகர் பிழைக்கவைத் தானா, இதென்ன புது விஷயமாயிருக்கிறதே! அந்த மர்மத் தைத் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்றெண் ணினாள் காதம்பரி.

சட்டென்று ராஜசேகரின் யூனிட்டில் வேலை பண்ணும் மேக்கப் உமன் சிந்தியாவுக்குப் போன் பண்ணினாள்.

ராஜசேகர் எச்சரித்திருந்ததால் முதலில் சொல்லத் தயங்கிய சிந்தியா, காதம்பரி பலவந்தப்படுத்தியதால், சீனியர் மாடலாய் அவளுக்கிருந்த இமேஜ், செல்வாக்கு,

நல்ல குணம் போன்றவைகளை நன்கு அறிந்திருந்ததால், தான் அந்த விஷயத்தைச் சொன்னதாய் ராஜசேகரிடம் சொல்ல வேண்டும் என்று வாக்கு பெற்றுக்கொண்டு நடந்த விஷயத்தைச் சொன்னான்.

சிந்தியா அது எதிர்பாராமல் நிகழ்ந்த விபத்து என்று தாஸ் சொன்னான்— அவனுக்கு உண்மையான விஷயம் தெரியாததால்.

ஆனால் போனில் மஞ்சுளா கேட்ட வார்த்தைகளைக் கொண்டு பார்த்தபோது ரூபவதியின் பேரில் கொலை முயற்சி நடந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. 'எதிர் பாராத விபத்து நடந்தாற்போல ரகசியமாய் நாடகமாடி யிருக்கலாம். அதனால்தான் சிந்தியா அதனை முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்த செயலாய் உணர்ந்து கொள்ளவில்லை. சித்தரஞ்சனின் சாமர்த்தியமும், அயோக்கியத்தனமும் புரிந்திருந்த காதம்பரிக்கு நடந்ததை ஊகித்துக் கொள்ள அதிக நேரமாகவில்லை.

தான் ஊகித்ததையே மஞ்சுளாவிடம் சொன்னாள் காதம்பரி. மஞ்சுளாவுக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று. ராஜசேகரைச் சுற்றிலும் பதுங்கியிருந்த ஆபத்துகளை உணர்ந்து கொண்டு, காய்ந்த சருகைப் போல நடுநடுங்கிற்று அவள் உள்ளம்.

அவ்வளவு ஆபத்து நிகழ்ந்தபோதிலும் ராஜசேகர் தன்னிடம் அதைப்பற்றி மூச்சும் விடாதது ஆச்சரியமா யிருந்தது. கோபத்தையும் வரவழைத்தது.

ராஜசேகர் வந்ததுமே உலுக்கி எடுத்துவிட வேண்டும் என்றெண்ணிக் கொண்டே அவனுக்காகக் காத்திருக்கத் தொடங்கினார்கள் அவ்விருவரும்.

o o o

"சார், எந்த மாத இதழ் வேணும் உங்களுக்கு?"- மது மேகஸின்களைப் புரட்டிக்கொண்டே கேட்டான்.

"நவம்பரிலிருந்து பிப்ரவரி வரைக்கும். நான் பார்த்துக் கறேன் அதை. நீ போய் சந்திரனின் நோட்டை டைப் பண்ணி எடுத்துட்டுவா. கையெழுத்துப் போட்டுடறேன்" என்று நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி இதழ்களை வெளியே இழுத்தான் ராஜசேகர்.

மது ஹாலிலிருந்த டைப் மிஷினிடம் போய் உட்காரப் போனவன் ஒரு விநாடி நின்றுவிட்டான்.

அபாரமாய் விளம்பர உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்க வேண்டிய பெண், சித்தரஞ்சனின் கையில் சிக்கி அழகெல்லாம் இழந்து, பிழைப்புக்காக டைபிஸ்டாய் மாறி விட்டாள், பாவம்!

டைப் மிஷினைத் தொட்டதுமே அவளுக்கு நேர்ந்த அநியாயம் நினைவில்வந்து கொஞ்சநேரம் அவன் மனதைப் பிழிந்தது.

நள்ளிரவைத் தாண்டிவிட்டது. வெளியே காரிருள். சோவென்ற மழை விட்டுவிட்டு மின்னலும் இடியும்— பிரளயம் வந்துச் சேர்ந்துவிட்டாற் போலிருந்தது சூழ்நிலை.

மதுவின் விரல்கள் டைப் மிஷினின் மேலும் ராஜ சேகரின் விரல்கள் 'ஒக் மேகசினின் பக்கங்களைப் புரட்டு வதிலும் வேகமாய் ஆழ்ந்திருந்தன. செயின்ட் லாரென்ட் போனில் சொன்ன வார்த்தைகளே திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தன ராஜசேகரின் செவிகளில்.

"தரங்கிணி என்ற பெயர் ரொம்பப் பரிச்சயமானது எனக்கு. அவள் சமீபத்தில் பாரீசில் நடந்த மூன்று பேஷன் ஷோக்களில் பங்கெடுத்துக் கொண்டாள். பாரீஸ் நகரத்தில் அவள் சம்பந்தப்பட்ட விவரங்களைக் கண்டுப்பிடிப்பது ரொம்ப சிரமம். அவள் பிரான்ஸ் குடிமகளா என்று கூடத் தெரியாது. நீ வந்து எல்லாவற்றையும் தெரிஞ்சுப்பது நல்லது. எனக்கு ஒரு நிமிஷம் கூட ஓய்வே கிடைக்காது. உனக்குத்தான் தெரியுமே, எனக்கு ஒரு நிமிஷத்துக்கே ஆதாயம் ஆயிரக்கணக்கில் இருக்கும்னு. முடிந்தால் மேலும்

கொஞ்சம் விஷயங்களை சேகரிக்க முயற்சிக்கிறேன். அதை நாளைக்குப் போன் பண்ணிச் சொல்றேன்.''

செயின் லாரென்ட் சொன்னபடி அவள் பேஷன் ஷோவில் பங்கெடுத்துக் கொண்டிந்தால்—உலகப் புகழ்ப் பெற்ற பேஷன் மேகசின் 'ஓக்' பத்திரிக்கையில் வெளி வந்திருக்கும். அதைப் பரிசோதித்தால் மேலும் சில தகவல்கள் கிடைக்கலாம் என்று தோன்றிற்று ராஜ சேகருக்கு.

ஒவ்வொரு இதழும் முன்னூறு பக்கங்கள் வரையிலும் இருந்தன. நாலைந்து இதழ்களைப் புரட்டி முடிப்பதற்குள் அரைமணி நேரமாகி விட்டது. பலன் இல்லை. நவம்பர் 5-ம் தேதி நடந்த பேஷன் ஷோவை டிசம்பர் இதழிலும், டிசம்பர் 6-ம் தேதி நடந்த ஷோவை ஜனவரி இதழிலும், ஜனவரி 7-ம் தேதி நடந்த ஷோவை பிப்ரவரி இதழிலும் போட்டிருந்தார்கள். பெரிதாய் விவரங்கள் இல்லா விட்டாலும் பங்கெடுத்துக் கொண்ட சிலரின் போட் டோக்களைப் போட்டிருந்தார்கள். எங்குமே தரங்கிணியின் பெயர் இல்லை.

நிராசையோடு மேகசினை ஷெல்பில் வைத்து விட்டு எழுந்திருந்தான் ராஜசேகர்.

லாரென்ட் தவறாய் சொல்லியிருப்பாரா? இல்லா விட்டால் பங்கெடுத்துக் கொண்டவர்களின் குரூப் போட்டோவில் தரங்கிணி கட்டாயம் இருக்கவேண்டுமே

புகழிலும் சர்க்குலேஷனிலும் பெயர்ப்பெற்ற மற்றொரு பேஷன் மேகசினான, 'ரெவ்லன்' ராஜசேகரின் நினைவுக்கு வந்திருந்தால், அவன் ஆசை நிறைவேறியிருக் குமோ என்னவோ? ஆனால் கலவரமும் பதற்றமும் அவனை இன்னொரு பத்திரிக்கையைப் பற்றியே யோசிக்க விடவில்லை.

சரியாய் அதே சமயத்தில் சித்தரஞ்சன் இருந்த கெஸ்ட் ஹவுசின் ஒரு அறையில் விளக்கு எரிந்துக்கொண்டிருந்தது.

சித்தரஞ்சன்—அவனுக்கெதிரே கைலாசன் உட்கார்ந்திருந்தார்கள். நடுவில் ஸ்டூலின் மீது ராயல் சல்யூட் பாட்டில் அதற்குள் பாதி காலியாகியிருந்தது.

அந்த குன்றுப் பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்த வீடுகளில் சித்தரஞ்சனின் கெஸ்ட் ஹவுஸ் மேலும் தனியாய் ஒதுக்குப்புறத்தில் இருந்தது.

மணி இரவு மூன்று.

கும்ப வர்ஷமாய் மழை பெய்து கொண்டேயிருந்தது.

அங்கே மூலையிலிருந்த சோபாவில் பயந்தவாறு உட்கார்ந்திருந்தாள் ஜெயந்தி— சமீபத்தில் மாடலிங்கில் இறங்கியிருந்தவள்.

அவள் விட்ட பெருமூச்சால் மார்பகம் ஏறியிறங்கிக் கொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்த கைலாசத்தின் சிருங்காரம் கட்டுமீறிக் கொண்டு எழும்பிற்று.

மாடலிங்கைப் பிடித்துக் கொண்டு மெதுவாய் அதிலிருந்து சினிமா ஸ்டாராகிவிடவேண்டும் என்ற ஆசையும், அந்த ஆசைக்கு இடையூறாய் இருப்பவைகளுக்குத் தான் பங்கிட்டுத் தர வேண்டியிருக்கும் தன் அழகும், நாணத்தால் கூனி கூகிக் கொண்டிருந்தன.

சற்று முன்னால்தான் பலவந்தமாய் குடிக்க வைத்திருந்த திரவம் அவள் மூளையில் தன் பிரபாவத்தை மெல்ல மெல்ல எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

அவள் கண்கள் செருகிக் கொண்டே போயின. ஆனாலும் பலவந்தமாய் திறந்து கொண்டிருந்தாள்.

அந்த மூடி மூடித் திறந்துக் கொண்டிருந்த கண்ணிமைகளுக்கிடையே உல்லாசமான சினிமா ஸ்டாரின் வாழ்க்கையும், அதன் கிளாமரும், புகழும், மின்னலாய் மின்னிக் கொண்டும், மேகங்களாய் குமுறிக் கொண்டும், இடியாய் அவளைத் தன் பக்கமாய் இழுத்துக் கொண்டுமிருந்தன.

அவளுள் ஆசைத் கொழுந்து விட்டெரிந்தது.

அவளுக்குள் புதைந்து கிடந்த ஆசைகளை அவள் பலவீனமானது ஆழமாய் குழித்தோண்டிக் கொண்டேயிருந்தது.

அவள் எழுந்திருந்தாள்.

பசியோடு— ஆசையாய் சித்தரஞ்சனை நோக்கி அடியெடுத்து வைத்தாள் தட்டுத்தடுமாறிக் கொண்டே கைலாசத்தின் பசிக்கண்களைப் பார்த்தான் சித்தரஞ்சன். எழுந்து அறையை விட்டு வெளியேறினான்.

அதேசமயத்தில், அருமையாய், செல்லமாய் வளர்த்த தம் மகள் ஜெயந்தி சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டதற்காக அவள் தாய் தந்தையர் திடீரென்று படுக்கையை விட்டு எழுந்திருந்து, துக்கம் தாங்காமல் ஒருத்தரை யொருத்தர் தேற்றிக் கொண்டிருந்தார்கள்.

அரக்கனைப் போலிருந்த கைலாசத்தைக் கட்டிக் கொண்டாள் — ஜெயந்தி தாபம் தாங்காமல். அடுத்த நிமிஷம் அவள் பட்டுப் போன்ற மேனியின் அழகுப் பற்களின் கடியால் ரத்தவிளாறு ஆயிற்று.

தன் அழகுக்கு நேர்ந்த இழப்பை அவள் தடுக்கும் நிலையில் இல்லை. மேலும் அவனுக்கு ஒத்துழைத்தாள். இப்பொழுது அவளிடம் பயமில்லை. ஒழுக்கத்தைப் பற்றிய தடுமாற்றமோ அதைவிட இல்லை. அந்தக் கோட்டையெல்லாம் தாண்டி விட்டாள்.

அறைக்கு வெளியே ஹாலில் உட்கார்ந்திருந்த சித்தரஞ்சனின் கையிலிருந்த பைப் புகைந்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து வெளிவந்த புகை வளையம் வளையமாய் எழும்பிக் கொண்டிருந்தது. பசியோடிருக்கும் நாய்க்கு மாமிச மொத்தையைப் போட்டால் வாலை ஆட்டிக் கொண்டே பின்னாடியே சுற்றி வந்துக் கொண்டிருக்கும் என்பதை நன்கு அறிவான் அவன்.

ராட்சச நாயைப் போன்ற கைலாசத்திற்கு அழகான மாமிச மொத்தை இரை!

சித்தரஞ்சனுக்குத் தெரியும், நூறு நாய்களின் நன்றி கைலாசத்திடம் உண்டாகும் என்று.

அவன் மூளை ஜெட் வேகத்தில் இயங்கிற்று. வெற்றிப் புன்னகை உதடுகளில் நெளிந்தது.

கைலாசத்தின் முரட்டுத் தனத்திற்கு அத்தனை மயக்கத்திலும் அவள் மேனி காய்ந்த சருகைப் போல படபடத்தது.

வீலென்று அவள் அலறிய அலறலை ஏர்கண்டிஷனர் விழுங்கி விட்டது.

சித்தரஞ்சனின் மூளை யோசித்துக் கொதிப் படைந்தது. அவன் கை போனை நோக்கிப் போயிற்று.

கைலாசம் வெப்பம் தணிந்துப்போய் மல்லாந்து படுத்துக் கொண்டான். அதற்கப்புறம் இரு மடங்கு உற்சாகத்துடன் அவன் கூட்டிக் கொள்ளப் போகும் சக்தியால் சித்தரஞ்சனுக்குதான் லாபம்.

மாமிச மொத்தையாய் எஞ்சியிருந்த ஜெயந்தியின் உடல் அந்த இரட்டைக் கட்டிலோடு முடங்கிக் கிடந்தது.

இதொன்றையும் லட்சியம் பண்ணாமல் மழை சோவென்று பெய்து கொண்டேயிருந்தது.

சித்தரஞ்சன் எழுந்தான். அவன் உதடுகள் லேசாய் அதிர்ந்தன. "சு..." என்று. அதே சமயத்தில் வெளியே வந்து கொண்டிருந்த கைலாசத்தின் செவிகளில் விழுந்தது அது.

அடுத்த நிமிஷம் ரெயின் கோட்டுகளுடனும் கையில் பெரிய டார்ச் விளக்கோடும் மிக ஆபத்தான மலைச்சரிவில் நடக்கத் தொடங்கினார்கள் அவ்விருவரும்.

கைலாசத்தின் கையிலிருந்த நீண்ட கடப்பாரை மின்னல் வெளிச்சத்தில் யமபாசத்தைப் போல மினு மினுத்துக் கொண்டிருந்தது.

ஜெயந்தி இன்னும் அதேபோல சோர்ந்து போய் விழுந்துக் கிடந்தாள். அவளுக்கு எதுவுமே தெரியாம லிருக்கும்படியாய் குடிக்க வைத்திருந்தார்கள்.

அவர்கள் விடுவிடென்று நடந்துக் கொண்டிருந் தார்கள்.

யமதூதர்களைப் போல போய்க் கொண்டிருந்த அவர்களைப் பார்த்து இயற்கையே பயந்து விட்டாற் போலிருந்தது.

கெஸ்ட் ஹவுசிற்கு வெளியே வேறு இரண்டு யம தூதர்கள் கையில் பியாரல் கன்களுடன் சுற்றிக் கொண் டிருந்தார்கள்.

22

மார்ச்சு மூன்றாம் தேதி.

பிற்பகல் நேரம். இரண்டு மணிக்கு மாலினி அரும்பாடு பட்டு ரிசர்வ் பண்ணியிருந்த டிக்கெட்டுடன் டில்லிக்குப் பயணமாகத் தயாராயிருந்தான் ராஜசேகர்.

மது பக்கத்திலிருந்து கொண்டே ஒத்துழைத்துக் கொண்டிருந்தான். மஞ்சுளா விருப்பமின்றியே துணிமணி களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ராஜசேகர் பாரீஸுக்குப் போவது கொஞ்சமும் பிடிக்க வில்லை. காதம்பரி பார்வையாளராய் எஞ்சி நின்று விட்டாள்.

அதற்குள் போன் மணியடித்தது.

மது போனை எடுத்தான்.

"இண்டர்நேஷனல் கால் ஃப்ரம் பாரீஸ் டு ராஜசேகர்" என்றுச் சொன்னாள் ஆபரேட்டர்.

மது அந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்த போதே ஒரே பாய்ச்சலாய் ஓடிவந்து தாவி போனை எடுத்துக் கொண்டான் ராஜசேகர்.

"ஹலோ... மிஸ்டர் லாரென்ட்..."

"எஸ்... நான்தான்... நீ கேட்ட தகவல்களை சேகரித் திருக்கிறேன். தரங்கிணி பாரீசில்தான் இருக்கிறாள். நீ எவ்வளவு சீக்கிரமாய் வருகிறாயோ அவ்வளவு நல்லது."

ராஜசேகரின் ஆனந்தம் கட்டுமீறிக் கொண்டு பொங்கிற்று.

"நான் இன்றிரவே ஏர் இந்தியாவில் பாரீசுக்குப் போறேன். அது பாரீஸ் போய்ச் சேருவதற்கு 13 மணி நேரங்கள் ஆகலாம். அதாவது நாளைக் காலையில் அங்கே இருப்பேன். தயவு செய்து நாளை மாலை ப்ளைட்டில் டில்லிக்கு ரெண்டு ரிட்டர்ன் டிக்கெட்டுகளை புக் பண்ண முடியுமா?"

ராஜசேகர் அவளை அழைத்துக் கொண்டு வந்து விடுவோம் என்ற தைரியத்தோடு சொன்னதைக் கேட்டு ஆச்சரியமடைந்து விட்டார்கள் மஞ்சுளாவும் காதம்பரியும்.

இவர்கள் யாரையுமே கவனிக்கும் நிலையில் இல்லை ராஜசேகர்.

"ஏன் அவ்வளவு அவசரம்? உலக விளம்பரங்களிலும, பேஷன்களிலும், மாடலிங்கிலும் பெஸ்ட் சென்டர் பாரீஸ். நாலு நாள் தங்கி சமீபத்து நிலைமைகளை ஆராய்ந்து பார்த்துட்டுத் திரும்பிப் போகலாமில்லே? போக வர டிக்கெட்டுக்கே ஏகப்பட்ட செலவு ஆயிடுமே? அவ்வளவு செலவழித்துண்டு இவ்வளவு தூரம் வந்துட்டு இப்படித் திரும்பிப் போய்விடுவதா?"- ஆச்சரியமடைந்தார் லாரென்ட்.

"ஒரு பெரிய சிக்கலில் சிக்கிட்டிருக்கேன் லாரென்ட் சார்! என் கௌரவத்துக்கே ஒரு பெரிய சேலெஞ்ஞ் இப்போது நான் கைப்பிடித்திருக்கும் ப்ராஜெக்ட் அது முடிஞ்சுட்டால் நிரந்தரமாய் பாரீசிலேயே செட்டில் ஆகச் சொன்னாலும் ஆயிடறேன் உங்க ஒத்துழைப்போடு"

"மோஸ்ட் வெல்கம்"

"இன்னும் ஒரு உதவி வேணும் உங்களிடமிருந்து..."

"சொல்லுங்க!"

"36:24:36 அளவுள்ள ஐந்தடி ஒன்பதங்குல உயர முடைய ஒரு பெண்ணிற்கு லேட்டஸ்ட் பேஷனில் நான்கு விதமான காஸ்ட்யூம்ஸ் தயாரித்துத் தர முடியுமா? ப்ரொடக்ட் சோப்பு."

"குட் மெஷர்மென்ட்ஸ். குட் டிஸ்கவரி. உங்க நாட்டில் பெண்கள் 5.9 உயரம்கூட இருக்காங்களா? ஸ்ட்ரேஞ்ஞ்!"

"அவள் என் டிஸ்கவரி இல்லை. எதேச்சையாய் தென்பட்டாள். அதோடு நீங்கள் பார்த்ததாய் சொல்ற தரங்கிணிகூட எங்க தேசந்தான். அதோடு நான் கேட்கிற காஸ்ட்யூம்ஸ்கூட அவளுக்குத்தான்!"

"என்னவோ, எல்லாம் ஒரே குழப்பமாயிருக்கு. அந்தப் பெண்ணை நீ இன்னும் பார்க்கக்கூடவில்லை. அதற்குள் காஸ்ட்யூம்ஸ் என்கிறாய். என்னவோ கேட்கிறது நீயாய் இருக்கக் கொண்டு தரேன். ஆனால் என் சார்ஜை உன்னால் தாங்க முடியுமா? தாங்கினாலும் பாரீசில் நாளுக்கு நாள் பேஷன்ஸ் மாறிட்டிருக்கே, அத்துடன் எல்லாமே யூரோப்பியன் கல்சர். லேட்டஸ்ட்டாய் காஸ்ட்யூம்ஸ் தயாரித்தால் அதை உங்க நாட்டில் ரிசீவ் பண்ணிக்க முடியுமா?"

"இந்தியாவுடையது டைவர்ஸீ கல்சர். நன்றாய் இருந்தால் எப்படிப்பட்ட பேஷனாயிருந்தாலும் இங்கே

ஆதரிக்கப்படும்... உலகப் புகழ்ப் பெற்ற பேஷன் டிஸைனரான செயின்ட் லாரென்ட்டின் காஸ்ட்யூம்ஸ் பிடிக்காமல் போகுங்கிற பேச்சுக்கே இடமில்லை.''

நடுவில் ஆபரேட்டர் லைனுக்கு வந்தாள்—''டைம் ஈஸ் ஓவர்'' என்று போனை வைத்துவிட்ட ஓசை கேட்டது ராஜசேகருக்கு.

ராஜசேகர் போனை வைத்தபோது சந்திரன் வந்தான்.

''என்ன சந்திரா, ரூபவதி எப்படியிருக்கிறாள்?''

''குணமாயிட்டு வராள் சார். ஆனால் அந்த ஷாக்கி லிருந்து இன்னும் தேறலை. அவங்க உறவினர்கள் வந்து அவளைக் கூட்டிட்டுப் போயிட்டாங்க.''

''அப்படீன்னால் சரி, மது, ரூபவதியின் தந்தைக்குப் போன் பண்ணி, பணம் ஏதாவது தேவையானால் அனுப்ப ஏற்பாடு பண்ணு...'' என்று சந்திரனைப் பார்த்து— ''சந்திரா, இன்றையலிருந்து உன் பொஸிஷனை மாற்றிட் டேன். அந்த விவரங்களையெல்லாம் மது சொல்லுவான். சித்தரஞ்சனின் பகை ரொம்ப பயங்கரமானது. அதோடு ரூபவதியைக் காப்பாற்றியிருக்காய் நீ. ஜாக்கிரதையாய் இரு. கோரமண்டல் கம்பெனிக்குப் போய் அவங்க தயாரிக்கிற நான்கு சோப்புகள், ஒவ்வொன்றிலும் ரெண்டு டஜன் வீதம் வாங்கிக்கோ. அந்த கம்பெனியில் லோகோ, எம்ப்ளம், பிராண்டு பெயர், அதன் டிஸைன் எல்லாவற்றையும் கூட கலெக்ட் பண்ணி வெச்சுக்கோ...

மது, ஹேர் ஸ்டைல் ரோஜாவையும், ஆர்ட் டைரக்டர் நிஷாவையும், மேக்கப் ஆர்டிஸ்ட்டையும் தொடர்பு கொண்டு அவங்களை சித்தமாயிருக்கச் சொல்லு. அவங் களுக்கு அட்வான்ஸ் தந்து நமக்கு வேலை பண்ணப்போற விஷயத்தை ரகசியமாய் வைத்திருக்கச் சொல்லு. பாலென்ஸ் வேலைகளை நன்றாய் பண்ண போட்டோகிராப்பர் என்றால் ஜஸ்ட் க்ளிக்கர் மட்டுமே இல்லை மைண்ட் இட்''

என்று முக்கியமான அயிட்டங்களை ஒரு முறை பரிசோதித்துக் கொண்டான்.

ராஜசேகர் ஒரு முறை தன்னிடம் வந்தால் நன்றா யிருக்கும் என்று தோன்றிற்று மஞ்சுளாவுக்கு.

அந்த விஷயத்தை காதம்பரி கவனித்து விட்டாள்.

"ராஜசேகர், ஒரு முறை அந்த பக்கமாய் போங்க, மஞ்சுளா உங்களிடம் ஏதோ சொல்லணும்னு தவிக்கிறாள்" என்றாள் ராஜசேகரைப் பார்த்து.

ராஜசேகர் நிமிர்ந்து மஞ்சுளாவைப் பார்த்தான். அவள் பார்வை தீனமாயும் கெஞ்சினாற் போலவும் இருந்தது.

புரிந்துக் கொண்ட ராஜசேகர் தன் பெட் ரூமை நோக்கி நடந்தான். அவனைத் தொடர்ந்தாள் மஞ்சுளா.

ஏகாந்தம் என்னவோ கிடைத்து விட்டது, ஆனால் எதுவுமே பேச முடியவில்லை அவளால்.

ராஜசேகர் மஞ்சுளாவைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு காதலோடு கேசங்களை முத்தமிட்டு விட்டு, "வரேன் மஞ்சு...உனக்குத் துணையாய் காதம்பரி இருப்பாங்க" என்று விடுவிடென்று போய்விட்டான்.

அழுகை பொத்துக்கொண்டு வந்தது மஞ்சுளாவுக்கு. என்னென்னவோ பேசவேண்டும் என்றெண்ணியிருந்தாள். உணர்ச்சி வசத்தில் வார்த்தைகள் வெளிவரவேயில்லை. அதற்குள் ராஜசேகர் போய் விட்டான்.

23

அடுத்த ஒரு மணி நேரத்தில் ராஜசேகர் டெல்லிக்குப் போகும் ப்ளைட்டில் இருந்தான்.

நான்கு பிலிம்களில் ஒரு டைலாக் கூட இல்லாமல் நான்கு வெர்பலாய் பிலிம் எடுக்கும் யோசனையில் கற்பனையில் ஆழ்ந்து விட்டிருந்தான் ராஜசேகர். இன்னொரு பக்கத்தில் பிரான்சுக்குப் போவதற்கு விசா தயாராகியிருக்குமோ இல்லையோ என்ற யோசனை வேறு அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

டில்லி ஏர் போர்ட்டில் ப்ளைட் இறங்கியதுமே, பரபரப்போடு இண்டர்நேஷனல் ஏர் புக்கிங்கை நோக்கிப் போனான். வழியிலேயே எதிர்ப்பட்டாள் ரஞ்சனி டிக்கெட்டைக் கையிலெடுத்துக் கொண்டு.

"யூ ஆர் லக்கி சார்... மொதல்ல இல்லைன்னுட்டு கடைசியில் தந்துட்டாங்க. விசா ரெடியா சார்?" என்று டிக்கெட்டை அவனிடம் தந்தாள்.

"ரெடியாகியிருக்கும். பிரான்ஸ் எம்பஸிக்குப் போன் பண்ணிச் சொன்னேன். இதற்குள் தயாராயிருக்கும்..."

"ஆனால் இந்த நேரத்தில் ஆபீஸ் எப்படி சார் இருக்கும்?" என்றாள் ராஜசேகரைக் கூர்ந்து பார்த்து.

"அந்த ஆபீசில் தெரிஞ்சவர் ஒருத்தர் இருக்கார். எனக்காக ஆபீசிலேயே வெயிட் பண்ணிட்டிருப்பார்... வரேன்... தாங்க்யூ" என்று டாக்சி ஸ்டாண்டை நோக்கி விடுவிடுவென்று நடந்தான்... ரஞ்சனியின் பேச்சை மேற் கொண்டு கேட்க விரும்பாமல். "ப்ளைட் ராத்திரி எட்டு மணிக்கு சார்"- ரஞ்சனியின் வார்த்தைகள் காற்றில் கலந்து விட்டன. ராஜசேகரின் பரபரப்பைப் பார்த்து வியப்படைந்தாள் அவள்.

ஏறக்குறைய ஓடினாற்போல போய்க்கொண்டிருந்த ராஜசேகரைப் பார்த்துச் சுற்றிலுமிருந்தவர்கள் விநோதமாய் பார்த்தார்கள்.

டாக்சி, ராஜசேகர் உத்தரவிட்டபடி விர்ரென்று பறந்தது.

பிரான்ஸ் எம்பேஸிக்கு முன்னால் வந்து நின்றது.

நூறுரூபாய் நோட்டை டிரைவரிடம் தந்துவிட்டு சில்லறைக்காகக் காத்திருக்காமல் இரண்டாவது தளத்திலிருந்த ஆபீசை நோக்கி வேகமாய் நகர்ந்தான்.

படிகளில் வேகமாய் ஏறிக்கொண்டே நேரத்தைப் பார்த்துக் கொண்டான், ஏழு பத்து ஆயிற்று. இன்னும் ஐம்பது நிமிஷத்தில் ஏர்போர்ட்டில் இருக்கவேண்டும். விமான ஹைஜாக்குகள் அடிக்கடி நேருவதால் ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பே ஏர்போர்ட்டில் இருக்கவேண்டும் என்று நிபந்தனை போட்டு விட்டார்கள், ஒன்றரை மணி நேரமில்லாவிட்டாலும் குறைந்த பட்சம் சீக்கிரமாவது போய் இருக்கவேண்டும்.

ஜோன்ஸ் ஏதோ ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"ஹலோ ஜோன்ஸ்..." என்றான் ராஜசேகர்.

ஜோன்ஸ் நிமிர்ந்து பார்த்து விட்டு, "ஹலோ ராஜசேகர், கமான்... நான் உங்களுக்காகத்தான் காத்துட்டிருக்கேன் உங்க விஸா அப்ளிகேஷனில் செயின்ட் லாரென்ட்டைச் சந்திக்கப் போவதாய் எழுதியிருக்கீங்க. ஒருசின்ன வேண்டுகோள். என் மிஸஸ் லாரென்ட் தைத்துத் தரும் டிரஸ்ஸுக்காக ஆறு ஏழு வருஷங்களாய் காத்துட்டிருக்காள். இன்னும் பத்து ஆண்டுகள் ஆனாலும் அந்த அவகாசம் கிடைக்கப் போறதில்லை. உங்க செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரே ஒரு டிரஸ்ஸாவது கிடைக்கிறாப்போல பண்ணறீங்களா?"

யோசிக்க நேரமிலலை.

"ஓ.கே...சரி" என்றான்.

"அப்படீன்னால் இதோ அளவு" என்று ஒரு ஸ்லிப்பை எடுத்துத் தந்தான்.

சாதாரண சமயமாயிருந்தால் அலட்சியமாய் தட்டி விட்டிருப்பான். ஆனால் அவன் தேவை அவனுக்கு.

"என் விசா என்னவாச்சு ஜோன்? டிக்கெட் கூட ரிசர்வு ஆயிடுத்து."- கலவரமடைந்தான் ராஜசேகர்.

"சாரீ ராஜசேகர்...நாளைக்கு மதியானந்தான் முடியும் உங்கள் விசா!"- அதைக் கேட்டு தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு.

பிளானே தலைகீழாகி விட்டது. எவ்வளவோ நம்பிக்கை யுடன் வந்தான்—தன் பயணம் எந்தத் தடையுமில்லாமல் நடைபெறும் என்று.

"ஏன் ஜோன்ஸ்?"

"இப்பல்லாம் போதைப் பொருட்களின் வியாபாரம் நிறைய நடக்குதுன்னு கவர்மெண்ட் கவலைப்படுது. முழுதும் பரிசோதனைபண்ணிட்டு தான் விசா தரணும்னு கண்டிஷன் போட்டிருக்கு. அதனால்..."

"நான் பாரீசுக்குப் போவது இதுதான் முதல் தடவை இல்லை. என் தொழிலைப்பற்றிக் கூட உங்களுக்கு நன்றாய் தெரியும். நீங்க எடுத்துச் சொல்லலையா?"

"நான் சொன்னதால் தான் நாளைக்காவது தயா ராகும்."

"யார் கையொப்பம் போடணும் இன்னும்?"

"தாமஸ்..."

"கமான்... நான் அவரிடம் வேண்டிக்கிறேன்..." என்று எழுந்திருந்தான் சீட்டை விட்டு.

ஜோன்ஸின் கார் ராஜசேகரின் கையிலிருந்தது. கார் எப்பொழுதோ எண்பது கிலோ மீட்டர் வேகத்தைத் தாண்டிப் போயிருந்தது.

அந்த படு வேகமான டிரைவிங்கைப் பார்த்து ஜோன்ஸின் தலை சுழன்றது.

24

கையில் பணமிருந்தால் போதும், பாரீஸில் கிடைக்காத அனுபவமும் சுகபோகங்களும் கிடையாது.

உலகத்திலுள்ள அழகான நகரங்களில் பாரீஸ் முதன்மையானது. விசாலமான வீதிகள், அவற்றுக்கு இரு பக்கங்களிலும் பச்சைப் பசேலென்ற புல்வெளிகள், ஒவ்வொரு கிலோ மீட்டர்களுக்கும் ஒவ்வொரு பார்க்—வீதிகளில் நடந்து செல்பவர்கள் குறைவு. இளைப்பாறுவதற்குப் பெரிய பெரிய விருட்சங்கள்—ஒரு முறை பாரீஸில் அடியெடுத்து வைத்து விட்டால் திரும்பவும் அங்கிருந்து திரும்பப் பிடிக்காது. அவ்வளவு அழகான நகரம். நகரத்திற்கு நடுவில் ஓடிக்கொண்டிருக்கும் செயின் நதிக் கருகில் 1823-ம் வருஷத்து மிகப் பழைய கட்டிடம் — 'அண்டாலூசியன் கோட்டை' - பிரான்ஸ் நாட்டுக் கலாச்சாரத்தையும் சம்பிரதாயங்களையும் எடுத்துக் காட்டிக் கொண்டு தலை நிமிர்ந்து நின்றது.

கோட்டைக்குப் பின் பக்கமாய் மேலும் கட்டடங்கள். அவற்றைச் சுற்றி மனித சஞ்சாரம் இல்லாமல், செடிகொடிகள், புற்பூண்டுகள் பெருகி பகலிலேயே பயத்தைத் தோற்றுவிக்கும்படியாய் இருந்தன.

அந்த கட்டடங்களின் ஒரு மூலையிலிருந்த தர்பார் போன்ற ஹாலில் நூறு பேர் இளைஞர்களும் இளம் பெண்களும் கையில் சிகரெட், பைப்புகளுடன் ஒருவர் மீது இன்னொருவர் விழுந்து மோதிக் கொண்டும், தரையில் புரண்டு கொண்டும் இருந்தார்கள்.

அந்த பிரான்ஸ் தேசத்து இளம் குடிமக்கள் அத்தனை பேரும் போதைப் பொருட்களின் மயக்கத்திலும், மார்ஃபின், மான்ட்ரெக்ஸ் போன்ற போதைப் பொருட்களின் பிடியிலும் தம்மைப் பறிக்கொடுத்து விட்டுப் புது உலகத்தில் தவழ்ந்து கொண்டிருந்தார்கள்.

சிலர் இதயங்களில் சூரியன் பிளந்தாற் போலவும், அவர்கள் உடல்களில் ஒளி பரவினாற்போலவும் பிரம்மையில் ஆழ்ந்து ஒரு விதமான ட்ரான்ஸில் ஆழ்ந்திருந்தார்கள். மிதமிஞ்சிய பணமும், சௌகரியங்களும் கைக்கெட்டும் தூரத்திற்கு வந்து சேர்ந்துவிட்டால் இளம் தலை முறையினர் எப்படிச் சீரழிந்து விடுவர் என்பதற்கு அவர்கள் ஒரு எடுத்துக்காட்டு.

பாழடைந்த அந்த கோட்டைச் சுவர்களுக்கிடையே வளர்ந்த அல்லி மலர்களைப் போலிருந்தார்கள் கெட்ட வழியில் சென்றுவிட்ட அந்த இளம்பெண்களும், இளைஞர்களும்.

விடிய இன்னும் ஒரு மணி நேரந்தான் இருந்தது. ஒவ்வொருவராய் மெல்ல மெல்ல மயக்கத்திலிருந்து விடுபட்டுக் கொண்டே வீட்டை நோக்கிப் புறப்பட முயன்றுக் கொண்டிருந்தார்கள்.

அதில் முதல் முதலாய் மயக்கத்திலிருந்து விடுபட்டவள் ஒரு பெண். கையிலிருந்த இஞ்ஜக்ஷன் சிரஞ்ஜை வீசியெறிந்தாள் தொலைவில். அவள் தான் தரங்கிணி. தட்டுத் தடுமாறிக்கொண்டே எழுந்து நின்று நேரத்தைப் பார்த்துக் கொண்டாள். ஒரு முறை கண்களைக் கசக்கிக் கொண்டாள்.

குறுக்கே விழுந்துக்கிடந்தவர்களின் மேலேயே காலை வைத்து நடக்கத் தொடங்கினாள். உடம்பிலிருந்த ஷர்ட் பட்டன்கள் கழன்று அவள் மார்பு நன்றாய் வெளியே தெரிந்து கொண்டிருந்தது.

தரங்கிணி அவ்வளவு மயக்கத்தில் ஆழ்ந்திருந்த போதிலும் அஜந்தா சிற்பத்தைப் போலவும், அபரஞ்சி பொம்மையைப் போலவும் கண்களைப் பறிக்கும் அழகோ டிருந்தாள்.

பாழடைந்த கோட்டைச் சுவர்களைத் தாண்டி வந்து பார்க் பண்ணி வைத்திருந்த காரில் ஏறிக்கொண்டாள்.

அடுத்த நிமிஷம் கார் விர்ரென்று நேஷனல் பார்க்கை நோக்கிப் புறப்பட்டது.

நகரம் அப்பொழுதுதான் விழித்துக் கொண்டிருந்தது. அவளிடம் மெல்ல மெல்ல மயக்கம் விடுபட்டுப் போய், அவ்விடத்தில் யோசனைகள் வந்துக் குடிக்கொண்டன.

அவள் இன்று பதினொறு மணி ப்ளைட்டில் இந்தியா வுக்குப் புறப்பட வேண்டும். அங்கு நடக்கவிருந்த இண்டர் நேஷனல் பேஷன் ஷோவில் அவள் கலந்து கொள்ள வேண்டும். டிக்கெட், விசா எல்லாம் நான்கு நாள் முன்பாகவே தயாராகி விட்டிருந்தன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியா விலிருந்து வந்து பிரான்ஸில் செட்டிலாகி விட்டிருந்த பூகோள விஞ்ஞானி ப்ரொபசர் ஜகந்நாதனின் ஒரே மகள் தரங்கிணி.

படிப்பு, அழகு, பண்பு எல்லாவற்றிலும் தேர்ந்திருந்த தரங்கிணி எதிர்பாராதா சூழ்நிலையில் போதைப் பொருட் களின் பிடியில் சிக்கிக் கொண்டு விட்டாள்.

தந்தை எவ்வளவு முயன்றும் அவள் கொஞ்சமும் மாறவேயில்லை. ப்ரொபசர் ஜகந்நாதன் அந்த வருத்தத்

துடனேயே நோயில் விழுந்தார். அதிலிருந்து மேலும் தீய வழியே போகத் தொடங்கி விட்டாள் தரங்கிணி.

உலக பேஷன்களில் டிப்ளமா வாங்கியிருந்த தரங்கிணி அவ்வப்பொழுது பேஷன் ஷோக்களில் பங்கெடுத்துக் கொண்டு பாராட்டுகளைப் பெற்றிருக்கிறாள்.

ஜகந்நாதன் மனைவியோடு பிரான்ஸ் வந்த புதிதில் தரங்கிணியை நினைத்து மிகவும் கவலைப்படுவது வழக்கம். மெல்ல மெல்ல அவர் அதிலிருந்து மீண்டு கொண்டிருந்த சமயத்தில் தரங்கிணி கெட்ட வழியில் விழுந்து விட்டாள்.

தரங்கிணிக்கு இருபது வயது வரும் வரையில் மிகப் பயிற்சியுடன் வளர்ந்து வந்தாள்.

எதிர்ப்பாராமல் ஒரு சிநேகியின் வலையில் விழுந்து விடவே, அவள் வாழ்க்கையே மாறிவிட்டது.

எப்பொழுதும் சிரித்துப் பேசிக்கொண்டு எல்லாருடனும் சுமுகமாய் பழகிவந்த தரங்கிணியின் புத்திசாதுதிரியத்தின் மேல் எல்லாருக்குமே ஒரு மதிப்பு.

கார் வீட்டிற்கு முன்னால் நின்றது. அதற்குள் தரங்கிணியிடம் மயக்கம் முழுவதுமாய் விடுபட்டு விட்டது. பரபரப்புடன் வீட்டிற்குள் நுழைந்தாள்.

குளித்து முடித்து விட்டு, உடையணிந்து கொண்டு, விசா, ப்ளைன் டிக்கெட், பாஸ் போர்ட் எல்லாவற்றையும் எடுத்து ஹேண்ட் பேகில் வைத்துக் கொண்டாள்.

அவளிடம் பரபரப்பு அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

எவ்வளவு சீக்கிரத்தில் ப்ளைட்டில் ஏறுவோமோ அவ்வளவு நல்லது என்ற யோசனை அவளை அவசரப் படுத்திக் கொண்டேயிருந்தது.

கப்பல் போன்ற அவ்வளவு பெரிய வீட்டில் ஒரு மூலையில் திருதிருவென்று கழித்துக் கொண்டிருந்த

தந்தையைப் பார்த்து பேசவேண்டும் என்று தோன்றிற்று ஒரு விநாடி.

தான் செய்துக் கொண்டிருப்பதும், செய்யப்போவதும் தவறு என்று தெரிந்தாலும் தன்னைத்தான் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத மனப் போராட்டத்தில் இருந்தாள் அவள்.

அடுக்கி வைத்துக் கொண்டிருந்த லக்கேஜையெல்லாம் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, தந்தையின் அறையை நோக்கி நடந்தாள். அறைக்கு முன்னால் நின்றாள், ஒரு விநாடி. தந்தைக்கு முன்னால் நிற்கவேண்டுமென்றாலே தன் அந்தரங்க மனதில் சுழித்துக் கொண்டிருந்த விநோதமான உணர்ச்சிகளை அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. மனதை மாற்றிக் கொண்டு விருட்டென்று திரும்பிவிட்டாள்.

போனிடம் வந்தாள்.

o o o

ராஜசேகர் அரும்பாடுபட்டு பெற்றுக் கொண்டிருந்த விசா மூலம் ஏர் இந்தியா ப்ளைட்டில் ஏறி அரைமணியாகியிருந்தது.

அந்த ப்ளைட் டில்லியிலிருந்து நேராய் பாரீஸுக்குப் போகிறது. ராஜசேகரின் யோசனைகள் ஜெட் வேகத்தில் பறந்து கொண்டிருந்தன.

தரங்கிணி எங்கே இருப்பாள் என்று தெரியாது. பாரீஸ் போன்ற பெரிய நகரத்தில் அவள் விலாசத்தைத் தெரிந்து கொள்வது அத்தனை சுலபமல்ல.

கண்டுப்பிடித்தாலும் அவள் தன்னோடு இந்தியாவுக்கு வருவாளா? மாடலிங்கிற்கு ஒப்புக் கொள்வாளா? குழப்பமாயிருந்தது.

முன்பின் அறியாத ஒரு பெண்ணை மாடலிங் பண்ண வேண்டிய நிலைமை எந்த போட்டோ கிராப்பருக்குமே எதிர்ப்பட்டிருக்காது.

அந்தக் குழப்பமான நிலையிலும் சித்தரஞ்சனின் நினைவு வந்தது ராஜசேகருக்கு. மிகக் கயவனாயிருந்தாலும், தன பரமசத்ருவாயிருந்தாலும் சித்தரஞ்சனின் மாஸ்டர் பிரெயினை மெச்சிக்கொள்ளாமலிருக்க முடியவில்லை ராஜசேகரால்.

இந்த நிலையில் காலூன்ற வேண்டுமானால் புத்திசாதுரியம் மட்டும் இருந்தால் போதாது. ஒவ்வொரு படிகளையும் கடந்து முன்னேறக்கூடிய திறமை வேண்டும்.

25

"கைலாசன்! ராஜசேகரின் வேட்டை தொடங்கிடுத்து. அவன் காரியமெல்லாம் ராக்கெட் வேகத்தில் இருக்கும். அவன் வெற்றிப்பெற்றுவிட்டாலோ, என் பெருமையெல்லாம் புழுதியோடு கலந்து விடும். ஒரு காலத்தில் வேலைக்காக என் பின்னாடி சுற்றிய ராஜசேகர் இன்று என்னையே சவாலிட்டுவிட்டு இதில் குதித்திருக்கிறான். அவன் வெற்றி பெற்றுவிட்டால் நாம்ப இந்த ஃபீல்டை விட்டுட்டுப் போயிடவேண்டியதுதான். இந்த விஷயம் இப்போதே காட்டுத்தீயாய் விளம்பர உலகம் முழுவதும் பரவிவிட்டது. இன்னிக்கு இவனும், நாளைக்கு இன்னொருத்தனும் நம்மைக் காலைவாரி விட்டுடுவானுங்க. கடைசியில் நம்ப இருப்பிடமே தரைமட்டமாகிவிடும். அதனால் நாம்ப எல்லாவற்றுக்கும் துணியணும். உலகத்துக்குத் தெரியாமல் ராஜசேகரை அணுவணுவாய் குதறியெடுக்கணும். ஆனால் அப்படிக் குதறியெடுப்பது போலீசார் உதைத்துக் குதறியெடுப்பது போல வெளியாருக்குத் தென்படக்கூடாது. அவற்றுக்கு ஆதாரங்கள் கிடைக்கக்கூடாது. அந்த உதைகளால் ராஜசேகரிடமுள்ள தன்னம்பிக்கை தளர்ந்து

போயிடணும். அவனைச் சேர்ந்தவங்க இதயங்களில் ரயில் இஞ்சின் ஓடணும். எவ்வளவு பணச்செலவானாலும் பரவாயில்லை... நாம்ப பண்ற காரியங்கள் கொஞ்சம் வெளியில் பரவிட்டாலும் போதும், விளம்பர உலகத்தில் நம்ப மேல் வெறுப்பும் ராஜசேகர் மேல் இரக்கமும் ஏற்பட்டுவிடும் அபாயம் உண்டு.''

''ஓகே. சார்! நீங்க சொல்ல நினைக்கிறது புரிஞ்சுடுத்து...''—தோளைக் குலுக்கிக் கொண்டே சொன்னான் கைலாசன்.

''ராஜசேகரின் வேட்டை வீணாயிடும். அவன் நேரமெல்லாம் தரங்கிணியைத் தேடியலைவதிலேயே வீண் ஆகிப்போறது. ஏப்ரல் 2-ம் வாரம் கோரமண்டல் கம்பெனியின் சோப்புகள், உலக மார்கெட்டில் லாஞ்ச்சிங் ஏற்பாடு பண்ணப்போற ப்ரோகிராம் ஏற்பாடாயிடுத்துன்னு வாசு சொல்லிட்டான். அதற்குள்— அதாவது மார்ச்சு முடிவுக்குள் ராஜசேகரால் விளம்பர பிலிமைத் தந்துட முடியாது. அதனால் இண்டர்நேஷனல் லெவலில் லாஞ்ச்சிங்குக்கு ஏற்பாடு பண்ணியிருக்கும் கோரமண்டல் கம்பெனி நம்பிக்கை தளர்ந்துவிடும். விளம்பர சமாச்சாரம் தயாராகலைன்னு லாஞ்ச்சிங்கை நிறுத்திட்டால், அது அவங்க கம்பெனிக்கே இழுக்கு. அதனால் அவங்க தொல்லையில் ஆழ்ந்துடுவாங்க. ப்ரொடக்ட்டின் லாஞ்ச்சிங்கை நிறுத்துவதால் ஒரு நஷ்டம். நிறுத்தாமல் போனால் விளம்பரம் இல்லாததால் ப்ரொடக்ட் போய்விடும் வாய்ப்பு. அதனால் இன்னொரு விதத்தில் நஷ்டம் அந்த கம்பெனிக்கு. அப்படிப்பட்ட கஷ்டமான நிலைமையில் நாம்ப ஷூட் பண்ணிய பிலிமையும், தயாரித்த விளம்பரப் பொருளையும் காட்டுவோம். வேறுவழியில்லாத நிலைமையில் நம்ப வேலையை ஒத்துக்குவாங்க. ஃபார்மாலிடீஸ் இல்லாமல், நம்ப ஏஜென்சிக்கு அபாயிண்ட்மெண்ட் இல்லாமலேயே கோரமண்டல் கம்பெனி க்ளைண்ட் ஆகிவிடும். அதனால்

இந்தப் பக்கம் ராஜசேகருக்கும் சமாதி. அந்த பக்கம் மல்டி நேஷனல் கம்பெனியும் நம்ப கைக்குள் வரும். புரிஞ்சுதா?''

கைலாசன் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்ததை கவனித்து விட்டு திரும்பவும் தொடர்ந்தான் சித்தரஞ்சன்:

''உடனே நாலு விளம்பர பிலிம்களுக்கு ஏற்பாடு பண்ணு. நம்ப மாடல் கோவாபரேட்டடுகளை கூப்பிடு. வேட்டைநாயாய் நாடெல்லாம் சுற்றிவரச் சொல்லு. அழகான பெண்களைப் பிடிக்கச்சொல்லு. அவங்களோடு கூட நாலுபேர் பழைய மாடல்களைக் கூட தயாராய் வைத்திருக்கச் சொல்லு. கேமிரா மேனுடன் தொடர்பு கொள். காப்பிரைட்டரையும், மேக்கப்மேன், விஸுவலைஸர் எல்லோரையும் தயார் பண்ணிவை. லொகேஷன் செலக்ஷனுக்காக ரெண்டு பேரை அனுப்பு. லொகேஷன் செலக்ஷனில் ராம்பூபால் கைத்தேர்ந்தவன். அவனை வரவழை...''

''சார்...எல்லாவற்றையும் பண்ணிட முடியும். ஆனால் ராம்பூபாலைப் பிடிக்கறது தான் கஷ்டம். ஒரு வாரமாய் அவனைக் கண்ணிலேயே காணவேயில்லை...'' என்றான் கைலாசன். அதைக்கேட்டு சித்தரஞ்சனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. மூக்குக்கண்ணாடியைக் கழற்றி கைலாசனைக் கூர்ந்து பார்த்தான். அந்தப் பார்வைக்கு நடுநடுங்கிவிட்டான் கைலாசன்.

''நீ இடியட்... பத்து வருஷமாய் என்னிடம் வேலை பண்ணிண்டுவராய். உன் மூளை அவ்வளவு கூடவா வேலைபண்ணாது...? நகரத்தில் எவ்வளவு மாடலுங்க இருக்காங்கன்னு செக் பண்ணு. அவங்க யாரண்டையாவது கண்டிப்பாய் இருப்பான் ராம்பூபால். தாமதிக்க வேண்டாம்'' என்று எழுந்திருந்தான் சித்தரஞ்சன்.

புரிந்து கொண்டாற்போல கைலாசனும் தொடர்ந்து அவன் பின்னால் போனான். சித்தரஞ்சனின் அயோக்கியத்

தனம் எல்லாம் வெற்றியடைந்து கொண்டிருப்பதற்குக் காரணமே கைலாசன்தான்.

கைலாசன் மிகக் கொடுமையான ஆள்.

எந்த மாடலை எப்படி கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும், அவர்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது, அவர்களை வலையில் போட்டுக் கொண்டு வியாபாரத்தை எப்படி வளைத்துப் போடுவது என்றெல்லாம் நன்கு அறிந்தவன்.

கைலாசத்தின் பகைமை பாம்புப் பகைமை!

மனதைக் கொன்று கொண்டு தன் மானத்தை சமாதியாக்கிக் கொண்டு அவன் சொன்னபடியெல்லாம் ஆடிக் கொண்டிருப்பார்கள், அவன் தீய குணத்தை நன்றாய் உணர்ந்திருந்த மாடல்கள் சிலர். சட்டத்தின் கையில் சிக்காமல் மாடல்களைச் சீத்திரவதை புரிவதில் சித்தரஞ்சனிடமிருந்து நல்ல அனுபவத்தைப் பெற்றிருந்தான் கைலாசன்.

விளம்பர பிலிம்களில் தம் அழகை நிர்வாணமாய் கேமிராவுக்கு முன்னால் காட்ட மனதைக் குழித்தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் சில மாடல்கள், சித்தரஞ்சனின் ஏஜென்சிக்கு பிஸினசை வரவழைத்துத் தருவதற்காக பெரிய பெரிய கம்பெனி டைரக்டர்களின் படுக்கைகளில் கொடுமையாய் நலிந்து போக வேண்டியிருக்கும்.

அதற்காக இந்த ஃபீல்டிலிருந்தே விலகி விடுவோம் என்றாலும் சித்தரஞ்சன் விடமாட்டான். துரத்தித் துரத்திச் சென்று இம்சிப்பான். மாடல்களின் குடும்பங்களின் மீது அவனுடைய விஷம் தோய்ந்த கத்தி வந்து விழத் தொடங்கிவிடும். அத்துடன் கூட மின்னல் போல பளிச்சிடும் விளம்பர உலகத்தை விட்டு விடமுடியாத பலவீனம் இன்னொரு பக்கம்.

சிலந்தி வலை போன்ற விளம்பர உலகில், சரக்குகளை விற்றுத்தரும் சரக்குகள் மாடல்கள்!

நிமிஷத்திற்கு நிமிஷம் செத்துக்கொண்டே வாழ்ந்தும்-வாழ்ந்து கொண்டே செத்தும், அந்த சாவுக்கும் வாழ்வுக்கும் இடைவெளியில் சுகத்தையும்,போகங்களையும், பெயரையும், புகழையும்,பணத்தையும் பார்த்து ஆசையாய் ஓடிவரும் மாடல்கள்.

அழகான மாடல்கள் மேலும் மேலும் அழகாய் சூறையாடப்படுகிறார்கள்.

படியிறங்கி ஒரு விநாடி நின்று, கைலாசனைத் திரும்பிப் பார்த்தான் சித்தரஞ்சன்.

"மதுரைக் கம்பெனியின் விளம்பர பிலிம் வேலை இன்றோடு முடிஞ்சுடணும். மாடல் மாயா இதற்குள் வந்திருப்பாள். அவளிடம் ஜாக்கிரதையாய் நடந்துக்குங்க... வேலையோடு வேலையாய் சாயந்திரம் நாலுமணிக்கு சுவர்ணாவின் வேலையையும் முடிச்சுடணும். புரிஞ்சுதா?" என்று காரில் ஏறிக் கொண்டான் சித்தரஞ்சன்.

கார் கதவை சாத்திவிட்டு முறுவல் பூத்தான் கைலாசன்.

அந்தச் சிரிப்பில் சிந்திய விஷம் யாரோ ஒருவரைக் கொட்டத் தவறாது.

26

மார்ச் ஐந்தாம் தேதி காலை ஏழு மணிக்கு பாரீஸ் ஏர் போர்ட்டில் இறங்கினான் ராஜசேகர்.

கஸ்டம்ஸ் ஃபார்மாலிடிகளை முடித்துக் கொண்டு வெளியே வருவதற்குள் மணி எட்டாகி விட்டது.

உடனே ஏர் போர்ட்டிற்கு வெளியே வந்து டாக்சியில் ஏறிக் கொண்டு லாரென்ட் அட்ரசைச் சொன்னான்.

டாக்சி லாரென்ட்டின் வீட்டை நோக்கி விர்ரென்று பறந்தது.

கார் லாரென்டின் காம்ப்ளெக்ஸிற்கு முன்னால் நின்றதுமே வேகமாய் இறங்கி உள்ளே ஓடினான்.

லாரென்ட் ஆபீசில்தான் இருந்தார்.

"என்ன அவசரம் ராஜசேகர்?"- பைப்பைப் புகைத்துக் கொண்டே கேட்டார் லாரென்ட்.

நடந்ததையெல்லாம் சுருக்கமாய் சொன்னான் ராஜ சேகர்.

"ரொம்ப த்ரில்லிங்காய் இருக்கு உன் ப்ராஜெக்ட். இதில் நீ வெற்றிப் பெறணும்னு விரும்பறேன். காஸ்ட் யூம்ஸ் என்னைத் தயார் பண்ணச் சொன்னாய்! சார்ஜ்... எவ்வளவு ஆகும்னு நினைக்கிறாய்?..."—வேடிக்கையாய் கேட்டுக் கொண்டே பக்கத்திலிருந்த பையனுக்கு சைகை காட்டினார்.

"நான் பண்ற கேம்பைன் ஒரு மல்டிநேஷனல் கம்பெனி தயாரிக்கும் சோப்பைப் பற்றி. உங்க சார்ஜை என்னால் தாங்கிக்க முடியும். ஏன்னால் என் க்ளைண்ட் எனக்குத்தர தொகை ரொம்ப அட்ராக்டிவ் தொகை தான்..."- லாரென்டுடன் பேசிக் கொண்டே அந்த மகா நகரத்தில் தரங்கிணியைக் கண்டுப் பிடிக்கக்கூடிய வழி என்ன என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

"ஓகே. நீ போறதுக்குள்ளேயே தயாரிச்சுத் தந்து டறேன். பை தி பை உன் பெயருக்கும் தரங்கிணியின் பெயருக்கும் இன்று மாலையே ஸ்விங் ஏர் விமானத்தில் டிக்கெட்ஸ் ரிசர்வ் பண்ணிட்டேன்..."

"தாங்க்யூ சார்... என்னோடு யாராவது ஒருத்தரைத் துணையாய் அனுப்பினால் அவள் விலாசத்தைக் கண்டுப் பிடிக்க முயற்சிப் பண்ணுவேன்" என்றான் பரபரப்புடன்.

"அதுக்காகத்தான் செய்தி அனுப்பினேன் உனக்கு. சாதாரணமாய் பாரீசில் வேலைகள் ஆவது சாத்திய மில்லை. ஒரு டேஷன் மாடலை உனக்கு உதவியாய்

அனுப்பறேன். அவள் உன்னோடு இருந்தால் எப்படிப் பட்டவங்களாக யிருந்தாலும் டக்கென்று சிநேகமாயிடு வாங்க...'' என்று திரும்பவும் பைப்பை எடுத்துப் புகைத்துக் கொண்டே, ''உன் ஒத்துழைப்பு எனக்கும் வேணும்'' என்றார் அனுபவத்தால் சுருக்கங்கள் விழுந்த நெற்றியைத் தடவிக் கொண்டே.

ராஜசேகருக்கு ஒரு விநாடி அவர் சொன்னது புரிய வில்லை. உலகப் புகழ்ப்பெற்ற பேஷன் டிஸைனர் லாரென்டிற்குத் தான் பண்ணக்கூடிய உதவி என்ன?

''உலகத்தில் அதிக ஜனத்தொகை உள்ள நாடு சீனா. ஆனால் அது கம்யூனிஸ்ட் நாடாதலால் என் பிசினஸிற்கு சான்ஸ் இல்லை. ஜனத்தொகை இருந்தாலும் பொஷன்ஷியாலிடி இல்லாத மார்கெட். அதற்கடுத்தது இந்தியாவில்தான் ஜனத்தொகை அதிகம். 750 மில்லியன் ஜனத்தொகை உள்ள இந்தியா குடியரசு நாடு. சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் குறைவு. காப்பிரைட் நஷ்டம் கடுமையாய் இராது. எந்தப் பொருளாயிருந்தாலும் உங்க நாட்டிலிருந்து மார்கெட்டும், அத்துடன் அதை அப்படியே தழுவிப்பதில் மோகமும் அதிகம். அதனால் ஐ வான்ட் டு டேப் இட்...''

அவ்வளவு நேரமாய் தன்னோடு பேசிக் கொண் டிருந்ததைப் பார்த்தே சந்தேகம் வந்தது ராஜசேகருக்கு- ஏதோ லாபம் இல்லாமல் அவ்வளவு நேரம் பேசமாட்டார் என்று.

''அந்த சந்தர்ப்பத்தில் உங்க நாட்டிலுள்ள பெரிய பெரிய மில்லுகள்- ரிலயன்ஸ் (விமல்), ரேமாண்ட்ஸ், தினேஷ், பின்னி, மபத்லால், பாம்பேடையிங் போன்ற கம்பெனிகளின் ஒத்துழைப்புடன், உன் பேக்ரவுண்டுடன், இந்தியன் பேஷன் அண்ட் டெக்ஸ்டைல்ஸ் ஷோ ஒன்றை அரேஞ்சு பண்ணலாம்னு இருக்கேன் பம்பாயில்...''

லாரென்டின் சாமர்த்தியத்திற்கு அதிர்ந்து விட்டான் ராஜசேகர்.

"1983-ல் ஃபெமினா எடிட்டர் விஷ்ணு பாட்டீலின் உதவியோடு எங்க பிரெஞ்சு டிஸைனர் கார்டின் ஷோவை நடத்தினார் பம்பாயில். அதில் பிரபல இந்தியன் மில்லுகளிலிருந்து 90 விதமான துணிகளைக் காட்சியில் வைத்தார். சுமார் 60 பேர் இந்தியன் மாடல்கள் ஆணும் பெண்ணுமாய் சேர்ந்து அந்த 90 விதமான துணிகளை உடுத்திக் கொண்டார்களாம். இட்ஸ் எ சக்ஸஸ் ஃபுல் ஷோ... அப்படிப்பட்ட ஒன்றைத்தான்..."

விநாடிகளை ஆயிரக்கணக்கான பணத்தோடு முடிப் போடக் கூடிய சூப்பர் காஸ்ட்யூம்ஸ் டிஸைனர் லாரென்ட் டுடன் பேசுவதே ஒரு பாடந்தான்!

குரூபிகளைக்கூடத் தன் காஸ்ட்யூம்களினால் அழகாய் காட்டிவிடக்கூடிய சாமர்த்தியசாலி லாரென்ட்.

இன்றைக்கு உலக அழகிகளும், ஹாலிவுட் நடிகைகளும் லாரென்ட்டின் காஸ்ட்யூம்ஸிற்காக வருடக்கணக்காய் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் வியப்பொன்று மில்லை.

ராஜசேகருக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. லாரென்டின் காஸ்ட்யூம்ஸும், தன் கேமிராவின் நுணுக்கமும், தரங்கிணியின் அபார அழகும் சேர்ந்துவிட்டால் தன் ப்ராஜெக்ட் சென்சேஷன் ஆகிவிடும்.

"ஓகே. மிஸ்டர் லாரென்ட்... அப்ப நான் கிளம்பறேன்" என்று தன் அவசரத்தை வெளிப் படுத்தினான் ராஜசேகர்.

அதற்குள் ஒரு பிரெஞ்சுப் பெண் வந்து லாரென்ட்டை வணங்கினாள். அவளையே பார்த்தான் ராஜசேகர். சூப்பர்ஹிட்- அருமையான கவர்ச்சி அவளிடம் அணு வணுவாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அவள் பக்கத்தில் இருந்தால் வேலைகள் ஆவது ஒன்றும் பெரிய பிரச்னையாகவே இராது.

அடுத்த ஐந்தாவது நிமிஷம் ராஜசேகரும் அவளும் ஏறிய கார் உலக பேஷன் ஷோ சென்டரை நோக்கி வேக மாய் புறப்பட்டது. அதற்குள் தன் தேவையைச் சொல்லி விட்டான் ராஜசேகர் அவளிடம்.

ராஜசேகரின் பரபரப்பை ஊகித்துக் கொண்டாள் அவள். அத்துடன் முதல் பார்வையிலேயே ராஜசேகர் அவளை வெகுவாய் கவர்ந்து விட்டான்.

கார் ஒரு குலுங்கலுடன் பேஷன் சென்டர் ஆபீசுக்கு முன்னால் நின்றது.

ஆபீஸ் மேனேஜரை சந்தித்துத் தான் வந்த விஷயத் தைச் சொன்னாள்.

"சொல்றது ரொம்ப கஷ்டம். ஒவ்வொரு மாதமும் ரெண்டு, மூணு ஷோக்கள் நடந்துட்டிருக்கு. ஆயிரக்கணக் கான பெண்கள் வருவது வழக்கம். யாருன்னு என்னன்னு எப்படிச் சொல்ல முடியும்?"

மேனேஜர் தன் இயலாமையை வெளிக் காட்டிக் கொண்டார்.

அவள் ராஜசேகரைத் திரும்பிப் பார்த்தாள். அவன் பார்வை கெஞ்சுவது போலிருந்தது.

இவனுக்கு எப்படியாவது உதவி பண்ண வேண்டும் என்று தோன்றிற்று அவருக்கு.

"உங்க போட்டோ லைப்ரரியைக் காட்டுங்க. நாங் களே தேடிச்சிறோம்." என்று குறும்பாய்— மயக்கும் புன்னகையோடு பார்த்தாள் மேனேஜரை.

மேனேஜரின் நரம்புகள் அவள் பார்வையில் ஜிவ்வென்றன. உடனே எழுந்திருந்து இருவரையும் கூட்டிக் கொண்டு லைப்ரரிக்குப் போனார்.

நவம்பரிலிருந்து போட்டோ ஆல்பங்களை எடுத்துத் தந்தார் மேனேஜர் அவளும் ராஜசேகரும் ஆல்பங்களைப் புரட்டத் தொடங்கினார்கள், ராஜசேகரின் கைகள் இயற்

திரத்தை விட வேகமாய் அசைந்ததைப் பார்த்து வியப் படைந்தாள் அவள்.

அரைமணி கழிந்தது. ஒரு ஆல்பத்தில் ஓரிடத்தில் ராஜசேகரின் பார்வை நின்று விட்டது, ராஜசேகர் நிமிர்ந் தான். முகம் மகிழ்ச்சியால் மின்னிற்று. அவன் கண்களில் தெறித்த மின்னலைப் பார்த்தே அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

ராஜசேகர் ஆல்பத்தை அவர்களுக்கு முன்னால் நீட்டி- "இதோ, இவள் தான் தரங்கிணி" என்று குரூப் போட் டோவில் சுமார் இருபத்தைந்து பேர்களுக்கு நடுவில் இருந்த தரங்கிணியைக் காட்டினான்.

மேனேஜர் அந்த போட்டோவைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்.

"ரொம்ப கஷ்டம். ஒரு காரியம் பண்ணுங்க. உங்களுக்கு பேஷன் மாடல்களின் டைரக்டரியைத் தரேன். அதில் அவள் பேர் இருந்தால் போன் நம்பர் கூட இருக்கும். ட்ரை பண்ணுங்க" என்று திரும்பினார்.

மின்னலைக் காட்டிலும் வேகத்தில் அந்த ஆல்பத்தி லிருந்த இரண்டு போட்டோக்களை உருவி வைத்துக் கொண்டு— ஆல்பத்தை அதன் இருப்பிடத்தில் வைத்தான் ராஜசேகர்- மேனேஜர் கவனிக்காதவாறு.

ஆனால் அவள் கவனித்து விட்டாள். ராஜசேகரைப் பார்த்து முறுவல் பூத்தாள்.

ராஜசேகருக்கு வெட்கமாகி விட்டது.

அரை மணிக்கெல்லாம் டைரக்டரியில் தரங்கிணியின் பெயர் கிடைத்துவிட்டது. போன் நம்பருடன் கூட தரங் கிணியின் வீட்டு விலாசமும் எளிதாய் கிடைத்து விட்டன. அடுத்த நிமிஷமே கார் நேஷனல் பார்க்கை நோக்கி வேக மாய் பறந்தது.

அவளை எப்படி சம்மதிக்க வைப்பது? தன்னோடு கூட்டிச் செல்வது சாத்தியமா? யோசித்துக் கொண்டிருந்த போதே கார் ஒரு பெரிய பில்டிங்கிற்கு முன்னால் வந்து நின்றது.

ஏழு மாடி அபார்ட்மென்ட் கட்டிடம் அது. இருவரும் ஜெட் வேகத்தில் நாலாவது மாடியிலிருந்த தாங்கிணியின் பிளாட்டிற்கு முன்னால் வந்து நின்றார்கள்.

காலில் பெல்லை அழுத்தினாள் அவள்.

இரண்டு நிமிஷங்களில் கதவு திறந்து கொண்டது, தரங்கிணி தென்படுவாள் என்று ஆசையாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகருக்கு ஏமாற்றமே எதிர்ப்பட்டது. எதிரே வேலைக்காரி...

"தரங்கிணி இருப்பது இங்கேதானே?"—அவள் வேலைக்காரியை கேட்டாள். வேலைக்காரி இருவரையும் விநோதமாய் பார்த்துக் கொண்டே ஆமாம் என்று தலை யாட்டினாள்.

ராஜசேகர் அம்மாடா என்று மூச்சு விட்டுக் கொண் டான்.

"அவளைக் கூப்பிடமுடியுமா?"

"அவள் இல்லை" என்றாள் வேலைக்காரி சட்டென்று. ஒரு விநாடி கலவரமடைந்து விட்டார்கள் இருவரும்.

"எங்கே போயிருக்கிறாள்?"

"இந்தியாவுக்குப் போய் விட்டாள்."

ஒரு விநாடி ஒன்றுமே புரியவில்லை ராஜசேகருக்கு. தேறிக் கொண்டதும் ஸ்தம்பித்து விட்டான். அதுவரை தரங்கிணி கிடைப்பாள் என்றெண்ணியிருந்த ஆசை நிராசையாகி விட்டது.

அவள் இந்தியாவுக்குப் போய் விட்டாள் என்று சொல்லி விட்டதால் இனி அங்கேயே இருந்து காலத்தைக் கழிப்பது வீண் என்று பட்டது.

அடுத்த நிமிஷம் அவர்கள் கார் இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டை நோக்கி வேகமாய் பறந்தது.

அவள் எப்பொழுது போனாள், எந்த ப்ளைட்டில் போனாள் என்றுத் தெரிந்து கொள்ளப் பரபரத்தான் ராஜசேகர்.

அரைமணியில் கார் விமான நிலையத்திற்கு முன்னால் வந்து நின்றது. என்கொயரி ஆபீசர் ரிகார்டுகளைப் புரட்டி விட்டுச் சொன்னார்:

"அவள் நேற்றே, அதாவது மார்ச் நாலாம் தேதி சாயந்திரம் நாலு மணிக்கு ஜெர்மன் ஏர் லைன்ஸ் லுப்தான்சாவில் இந்தியாவுக்குப் போயிட்டாள்" என்று.

சட்டென்று திரும்பினார்கள்.

அவசரமாய் டில்லிக்குப் புறப்பட வேண்டும். முடிந்தால் மதுவுக்குப் போன் பண்ணி அந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும். நான்கு மணிக்கு அவள் பாரீசிலிருந்து புறப்பட்டிருந்தால் அது டில்லிக்குப் போய்ச் சேருதவற்குக் குறைந்த பட்சம் 14 மணிநேரம் ஆகும். அப்படியானால் இன்று காலையில் 10 மணிக்கு டில்லி விமான நிலையத்தில் இறங்குவாள்.

நேரத்தைப் பார்த்துக் கொண்டான் ராஜசேகர். இந்தியன் டைம் பிரகாரம் அடுத்த ஒரு மணி நேரத்தில் டில்லியில் இறங்குவாள் அவள்.

உடனே லாரென்ட் ஆபீசுக்குப் போய் டில்லியிலுள்ள தன் நண்பன் ஜார்ஜுக்குப் போன் பண்ணி அவளை அடையாளங்களைச் சொல்லிவிட்டு அவளை எப்படியாவது டில்லியிலேயே நிறுத்தி வைக்கச் சொல்ல வேண்டும் என்றெண்ணினான் ராஜசேகர்.

அடுத்த நிமிஷமே அந்த யோசனைகளை செயல்படுத்த முனைந்தான்.

பத்தடி வேகமாய் நடந்ததுமே பின்னாலிருந்து குரல்கள் கேட்டன. அதைக் கேட்கும் நிலையிலில்லை ராஜசேகர். அவைகளைக் கேட்டிருந்தால் ஜார்ஜ் மூலமாய் தரங்கிணியை பிடித்திருக்க முடியும் அவன்.

27

மது பம்பாயில் ப்ளைட்டிலிருந்து இறங்கி ஹோட்டலுக்குப் போய் ஹேர் ஸ்டைலிஸ்ட் ரோஜாவுக்கும், ஆர்ட் டைரக்டர் நிஷாந்துக்கும், மேக்கப் ஆர்டிஸ்ட்டுக்கும் உடனே வந்து தன்னைச் சந்திக்கச் சொல்லிப் போன் பண்ணினான்.

அவர்களோடு பேசி முடித்து அட்வான்ஸ் தந்துவிட்டு, 25 மேகஸைன் (400 அடிகளுடைய ஈஸ்ட்மென் கலர் பிலிம்) பிலிம்களையும் வாங்கி விட்டால் ராஜசேகர் ஒப்படைத்திருந்த வேலைகள் முடிந்துவிடும்.

ஓட்டலை விட்டு வெளியே வந்து டாக்சியில் ஏறிக் கொண்டு பிலிம் இந்தியா ஆபீஸ் அட்ரஸைச் சொன்னான்.

மதுவின் உதடுகளில் குறுநகை படர்ந்தது. சித்த ரஞ்சனை வீழ்த்தும் அவகாசம் தனக்கும் கிட்டியதற்கு அதிர்ஷ்டமாய் பாவித்துக் கொண்டான்.

பிலிம் இந்தியாவில் 25 பிலிம் மேகசின்களை வாங்கி விட்டு உடனே சென்னை ஆபீஸ் அட்ரஸுக்கு புக் பண்ணி விட்டு வெளியே வந்து மீண்டும் டாக்சியில் ஏறி, 'பகத்சிங் ரோடு-கொலாபா-பம்பாய்-39' என்று சொன்னான்.

அரைமணியில் கார் பெண்கள் உரிமைச் சங்கம் ஆபீசுக்கு முன்னால் வந்து நின்றது.

பத்து நிமிஷம் காத்திருந்த பிறகு சங்கத்தின் சேர்மேன் சாந்தியின் அபாயின்மெண்ட் கிடைத்தது மதுவுக்கு.

''குட்மார்னிங் மேடம்...''

''வெரிகுட் மார்னிங் யங் மேன்... என்ன விஷயம்?'' —நேராய் கேட்டாள் சாந்தி.

அவள் கண்களில் உறுதியும். பெண்களை சூறையாடு கிற ஆண்கள்பால் வெறுப்பும், பகையும் தெளிவாய் தென் பட்டன.

ஒரே நிமிஷத்தில் அவளைத் தூண்டும் முயற்சியை ரகசியமாய் பண்ணி முடித்தான்.

அவளிடம் இப்பொழுது ஆண்கள் பாலிருந்த பகைமை மிகக் கொடுமையாய் பொங்கி எழுந்தது. கோபத்தால் மூக்கு அதிர்ந்தது.

மது வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

''பெண்களைக் கொடுமையாய் அவமானப்படுத்தற பிலிம் ஒன்று தயாராயிருக்கு...''—சொல்லிக் கொண்டே அவளுள் நிமிடத்திற்கு நிமிடம் பெருகிக் கொண்டேயிருந்த ஆவேசத்தைக் கவனித்துக் கொண்டான் மது.

''எங்கே தயாரிச்சிருக்காங்க? யார் பண்ணினாங்க அந்தக் காரியத்தை?''

''மெட்றாசில் தயாரிச்சாங்க. டாஷிங் அட்வர்ட்டைஸிங் ஏஜென்சியின் முதலாளி சித்தரஞ்சன், ட்ராகன் டைர்ஸ் கம்பெனிக்காகத் தயாரிச்சிருக்கார்...''

''அதில் எப்படி காட்டியிருக்கார் பெண்ணை?''

மது அவளை மேலும் தூண்டினாற்போல கொஞ்சங் கொஞ்சமாய் விவரங்களை எடுத்துச் சொன்னான்.

''லொகேஷன் காவேரிநதி சமுத்திரத்தோடு கலக்கிற கொள்ளிடத்தில் ஷூட் பண்ணினார். ஒரு பெண் மாடலை நிர்வாணமாய் படுக்க வைச்சாரு. அந்த கம்பெனி

யின் டைர் அவள் கால்களுக்கு இடையிலிருந்து உருண்டுக் கொண்டே வயிறு வரை வந்துட்டிருக்கு. அப்போது சப் டைட்டில் 'It is a hard Riding' என்று வரும். பிறகு நிர்வாணமாய் ஓடிக்கொண்டிருக்கும் அவளுக்குப் பின்னால் அந்த டைர் மிக வேகமாய் உருண்டு கொண்டே வந்துட்டிருக்கும்...''- அவளைத் தூண்டி விடும் தோரணையில் சொன்னான் மது.

முழுவதையும் கேட்டு முடித்த சாந்தி புஸ்ஸென்று சீறினாள். அவள் கண்கள் கோபத்தால் சிவந்தன.

உதடுகளும் கைகளும் ஆவேசத்தால் நடுங்கிக் கொண்டிருந்தன.

அவளை அந்த நிலையில் பார்த்து திருப்தியோடு எழுந்திருந்தான் மது. ''மேடம், இப்போது அது சென்சார் போர்டின் பரிசோதனைக் கீழே இருக்கு. தன் செல்வாக்கால் அதை சர்டிஃபை பண்ணிக்கும் சாமர்த்தியமுடையவன் சித்தரஞ்சன்...''—இன்னும் கொஞ்சம் துண்டி விட்டான்.

''பார்த்துடறேன் அதையும், எப்படி ரிலீசாயிடும்னு?' என்றுச் சொல்லிக் கொண்டே அவள் போனை எடுத்தாள் கோபமாய்.

தன்வேலை முடிந்து விட்டது. மது வெளியே வந்தான். இனி ஆகவேண்டிய வேலையை அவள் பண்ணிடுவாள்.

ஓட்டலுக்கு வந்ததுமே சென்னையிலிருந்த சித்தரஞ்சனுக்குப் போன் பண்ணினான். சித்தரஞ்சனை நன்றாய் வீழ்த்தி விட்டோம் என்ற ஆனந்தத்துடன். அவன் பண்ணிய போனே ஒருத்தர் உயிருக்கு எமனாய் வந்து முடியும் என்று தெரிந்திருந்தால் மது அந்தக் காரியத்தைப் பண்ணியிருக்க மாட்டான்.

சித்தரஞ்சனோடு என்றுமே நேருக்கு நேராய் பேசத் துணிசலில்லாத மது அலட்சியமாய் நடந்து கொண்டு விட்டான்.

"யார் பேசறது?"—மது கேட்டான் போனில்.

"சித்தரஞ்சன்"—அதே முரட்டுத்தனம் குரலில்.

"நான் மது பேசறேன். இப்ப நீங்க பேச எதுவுமில்லை. நான் சொல்றதைக் கேட்டால் போதும்... என்றுமே காற்று உன் பக்கமே வீசிக்கிட்டிருக்காது... நான் உதைக்கப்போற மரண அடியைத் தாங்கிக்கத் தயாராயிரு. இன்னும் நாலு நாளில் உனக்கு ஒரேயடியாய் மூன்று லட்சம் ரூபாய்கள் நஷ்டம் வரப் போகிறது."—ஏளமாய் சிரித்துக் கொண்டே சொன்னான் மது.

மறுமுனையில் சித்தரஞ்சனின் விரல்கள் போனின் மீது முறுக்கேறிக் கொண்டன. ஆவேசத்தால் தடுமாறினான் சித்தரஞ்சன்.

தனக்கு முன்னால் வந்து நிற்கவே பயப்படும் ஒரு போட்டோகிராப்பர் தன்னை மிரட்டுவதா? அதுவும் தனக்கு மூன்று லட்சம் நஷ்டம் ஏற்படுத்தப் போவதாய்!

சித்தரஞ்சனின் கோபம் ராஜசேகர் மேல் திரும்பிற்று.

நஷ்டம் உண்டாகப் போவது எதில்?—சித்தரஞ்சனின் மூளை மிஷினைவிடப் படுவேகமாய் யோசிக்கத் தொடங்கிற்று.

28

காதம்பரியின் வீட்டில் - மஞ்சுளாவும் காதம்பரியும் பேசிக் கொண்டிருந்தபோது மாயா வந்தாள்.

இந்தியன் விளம்பர உலகில் மிக புகழ்பெற்றவள் மாயா. அதிக ரேட் வாங்குபவளும் அவள்தான். ஒரு மணி நேரத்திற்கு 5000 ரூபாய் சார்ஜ் பண்ணுவாள். ஒரு மணி தாண்டிப் போய் ஒரே ஒரு நிமிஷமாகி விட்டாலும் சரி மேலும் 5000 சார்ஜ் வசூலித்துவிடுவாள். கொஞ்சமும் சங்கோஜமில்லாமல் பழகுவாள். ஸ்டூடியோவில் எல்லோரும்

அவளைத் தலைகனம் படைத்தவள் என்றும், திமிர் பிடித்தவள் என்றும், கர்வக்காரி என்றும் சொல்லுவார்கள். ஆனாலும் அதொன்றையுமே பொருட்படுத்த மாட்டாள் மாயா.

விளம்பர போட்டோகிராபர்கள் எல்லோரிடமும் வேலை பண்ணமாட்டாள். தனக்குப் பிடித்த போட்டோ கிராபருடன் தான் பண்ணுவாள். அழகான கண்கள், கன்னங்கள், அணுவணுவாய் கவர்ச்சியை வெளிப்படுத்தும் பாங்கு அவளுக்கே கை வந்த கலைகள்.

மாயாவும் காதம்பரியும் வெகு நாளைய சிநேகிதிகள்.

மாயாவைப் பார்த்துவிட்டு முறுவலுடன் வரவேற்றாள் காதம்பரி.

"ரொம்ப நாளைக்கப்புறம் சந்திக்கிறோம். எப்போ வந்தாய்?"

"மார்னிங் ப்ளைட்டில் வந்தேன். இன்றைக்கு இங்கே ஒரு மாடலிங் வேலையை முடிக்க வேண்டியிருந்தது..." என்று மஞ்சுளாவைப் பார்த்தாள் யார் இவள் என்றாற் போல.

"ராஜசேகரின் வுட் பீ... மஞ்சுளா" என்றாள் பரிச்சயம் பண்ணி வைத்து.

மஞ்சுளாவின் பார்வை மாயாவின் மீது நிலைத்து நின்று விட்டது. தேவலோகத்திலிருந்து இறங்கி வந்த தேவ கன்னிகையைப் போலிருந்தாள் அவள். பெண்களைக்கூட தன் பக்கம் கவர்ந்து விடக்கூடிய அழகுடன் இருந்தாள்.

"யூ ஆர் லக்கீ... ராஜசேகரை எங்க ஃபீல்டிலுள்ள எந்த அழகியாலுமே கவர்ந்துட முடியலை... நீங்க கவர்ந்துட்டீங்க. கங்கிராஜுலேஷன்ஸ்" என்றாள் மஞ்சுளாவைப் புகழ்ச்சியோடு பார்த்து மாயா.

"யார் கம்பெனிக்கு வேலை பண்றே?" - காதம்பரி கேட்டாள்.

"முகேஷ் கம்பெனிக்குதான்!"

"முகேஷ் கம்பெனிக்கா வேலை பண்றே?" - ஆச்சரியமடைந்து விட்டாள் காதம்பரி, மாயாவைப் பார்த்து.

"ஆமாம். வேறு வழியில்லாமல் பண்ணவேண்டி வந்துடுத்து. ஆனாலும் என்னிடம் அவங்க பைத்தியக்கார வேஷங்கள் எல்லாம் பலிக்காது..." என்றாள் மிடுக்கோடு மாயா.

"ஐநோ... ஐநோ... என்ன மாயா, மூன் மூன் சென் மாஜாவுக்காக பண்ணிய பிலிமில் பெரிய ரகளை வந்துடுத்தாமே?"

ஒரே தொழிலிலுள்ள இருவர் சந்தித்துக் கொண்டு விட்டால் ஒருத்தர் அனுபவங்களை இன்னொருத்தரோடு பங்கிட்டுக் கொள்வதும்— ஒருவர் சந்தேகத்தை இன்னொருவர் தீர்த்து வைப்பதும் சகஜந்தான்.

"பைத்தியம் முற்றிப்போய் பண்ணின வேலை அது. மாஜா கூல்டிரிங்க்குக்காக எடுத்த பிலிம் அது. மூன் மூன் சேனை நிர்வாணமாக்கி ரெண்டு கைகளிலும் ரெண்டு பாட்டில்களைத் தந்து சந்தியா வேளையில் ஒரு பீச்சில் அவளை ஓடவைத்தாங்க. அதான் பிலிம்!"

"மாஜாவை விற்பதற்கா? அல்லது மூன் மூன் சேனின் அழகை விற்பதற்கா?" - ஏளனமாய் கேட்டாள் காதம்பரி.

அவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மஞ்சுளாவுக்கு அருவருப்பாயிருந்தது.

"அந்த புத்தி சென்சாருக்கு இருந்திருக்கணும்...அந்த மாஜா பிலிம் எல்லாமே அப்படித்தான். இதுக்கு முன்னாடி கூட ஒன்று இதே போல எடுத்தாங்க. உமர்காயம் டிரஸ்ஸில் ஒரு ஆண் மாடலைத் தயார் பண்ணி அவன் தாகத்துக்காகத் தவித்துட்டிருக்கும்போது ஒவ்வொரு பெண் மாடல்களாய் வந்து ஒவ்வொரு விதமான பானத்தைக் கொடுக்கிறாங்க. அது ஒன்றுமே அவனுக்குப்

பிடிக்காது. கூட வந்தவன் சைகைக் காட்ட, நாலாவது முறை முக்கால்வாசி நிர்வாணத்தோடு மாஜா பாட்டிலைத் தூக்கிண்டு ஒரு மாடல் வருவாள். அப்பத்தான் அவன் திருப்தியடைந்து கை நீட்டுவான்.

பிலிமைப் பார்க்கிறவங்கள்ளாம் அவன் மாஜா பாட்டிலுக்காகத்தான் கையை நீட்டியதாய் எண்ணிப் பாங்க. ஆனால் அவன் அவள் மார்பை நோக்கி கையை நீட்டுவான். அப்போது அவள் கோபித்துக் கொண்டுவிட்டு, பிறகு மாஜாவை அவனிடம் தருவாள். இது இந்தியா பூராவும் ரிலீசாயிற்று. யாரால் என்ன பண்ண முடிஞ்சுது?'' என்றாள் இகழ்ச்சியாய் மாயா.

''மூன் மூன் எப்படி சம்மதித்தாள்?''

''சம்மதிக்காமல் என்ன பண்ணுவாள்? ஒரு பிக்சருக்குப் பத்து லட்சங்கள் வாங்கற நம்பர் ஒன் பிலிம் ஸ்டாருங்களில் சென்சார் ஒப்புக்கிட்டால் முழு நிர்வாணமாய் பண்றத்துக்குக்கூட தயாராய் இருப்பவங்க இருக்காங்க. அவ்வளவு பெரிய ஸ்டாருங்களே ஒப்புக்கிட்டப்புறம், ஆஃப்டர் ஆல் உங்க மாடலுங்க ஏன் ஒப்புக்க மாட்டாங்கன்னு டைரக்டாகவே கேட்கிறாங்க போட்டோகிராபருங்க.....''

''ஆமாமாம். சினிமாங்கள்ளாம் கூட ரொம்பவும் மட்டமாய் போயிடுத்து.....'' என்றாள் காதம்பரி வருத்தமாய்.

பெண் என்றால் எத்தனை இளப்பமாகிவிட்டாள்? அது பெண் ஒருத்தியே பண்ணிக்கொள்வதா? அல்லது ஆண்களின் கொள்ளையா? இவ்வாறு போயிற்று மஞ்சுளாவின் யோசனை.

''சினிமாங்கள்ளாம் இப்படி கீழ்த்தரமாய் போயிட்டதற்கு உதாரணமாய் ஒன்று சொல்றேன். 'பலிதான்' என்ற இந்தி சினிமாவில் ஹீரோயின் நிர்வாணமாய் குளிச்சிட்டிருக்கும்போது, ஒருத்தன் சுவரை இடிச்சுட்டுப் பார்க்கிற

காட்சியை சினிமாவில் காட்டினாங்க. ஒருவிதத்தில் பார்க்கப்போனால் கொழுப்புப் பிடிச்ச இந்த சினிமா ஹீரோயின்களைவிட நம்ப மாடலுங்களே மேல். மூன்மூன் சேன் மாஜா விளம்பர பிலிமுக்குப் பண்ணாமலிருந்தால் வேறொரு பெண்ணைக் கூட்டிட்டு வந்திருப்பாங்க. லட்சங்களும் கோடிகளும் வாங்கிக்கிட்டே,ஒளிவுமறைவாய் ப்ளுபிலிம் போன்ற இந்த சினிமாங்களில் நடிக்கிற சினிமா நடிகைங்களைவிட, வெறுமே அப்படி நடிக்கிற இந்த மாடலுங்களே மேல் இல்லையா? ஆனாலும் நம்ப மாடலுங்களில் கூட கொழுப்புப் பிடிச்சு அலையறவங்க இல்லாமலில்லை. மாடலிங் மூலமாய் வர ஆயிரமும் லட்சமும் போதாமல், போதும் என்ற மனதோடு திருப்தியடையாமல், இதையே பிடிச்சுண்டு சினிமாவில் சேர்ந்துடணும்னு துடிக்கிறவங்களை நாம்ப பார்க்கலையா?'' என்றாள் கைப்பையிலிருந்து சிறிய கண்ணாடியை வெளியே எடுத்துத் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டே.

''மேக்கப் போயிடுத்தோன்னு நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம் மாயா. மேக்கப் நன்றாய்தானிருக்கு'' என்று காதம்பரி எழுந்திருந்து ப்ரிட்ஜிலிருந்து பழரசத்தைக் கொண்டு வந்து தந்தாள் மாயாவுக்கும் மஞ்சுளாவுக்கும்.

''பதினோறு மணிக்கு முகேஷ் ஸ்டூடியோவில் வேலையிருக்கு. சும்மா வாயேன்...'' என்றாள் மாயா.

''சரி. ஷூட்டிங் பார்த்தாளே யொழிய ஸ்டூடியோ ஸ்டில் வேலைகளைப் பார்க்கலை மஞ்சுளா... வரோம்'' என்றாள் காதம்பரி மஞ்சுளாவைப் பார்த்து.

மாயா எழுந்து காதம்பரியின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

தன்மீது மாயாவுக்கு இருந்த கௌரவத்திற்கும் பக்திக்கும் காதம்பரியின் கண்கள் கசிந்தன.

மாயா போய்விட்டாள்.

காதம்பரி யோசனையில் ஆழ்ந்தாள். வெகு நாளாய் தான் எண்ணியிருக்கும் வேலையை சீக்கிரத்தில் முடித்து விடவேண்டும் என்ற உறுதியான தீர்மானத்திற்கு வந்தாள்.

உடனே லாயர் சீதாராமனுக்குப் போன் பண்ணினாள். "நீ ரெடியாகி விட்டால் ஸ்டுடியோவுக்குப் போகலாம் மஞ்சுளா," என்றாள்.

மஞ்சுளா எழுந்திருந்தாள். சட்டென்று நின்று— "லிரில் மாடலைக் கொன்று விட்டதாய் சிலரும், தற்கொலை பண்ணிக் கொண்டு விட்டதாய் வேறு சிலரும் சொல்றாங்களே நிஜந்தானா?"—மஞ்சுளாகேட்டாள்.

நிசப்தமாய் சிரித்தாள் காதம்பரி. "சித்தரஞ்சனைப் போன்றவங்க கிளப்பிவிட்ட வதந்தி இது. அவள் உயிரோடுதான் இருக்கிறாள். லிரில் சோப்புக்கு வேலை பண்ணிட்டிருந்த போதே அவளுக்கு ஏர்ஹோஸ்டஸ் வேலை கிடைத்துடுத்து. மாடலிங்கை விட அதே மேல் என்றெண்ணிக் கொண்டு அதுக்குப் போயிட்டாள். அதற்கப்புறம் மாடலிங் பண்றதுக்கு ஏர்லைன்ஸ்காரங்க ஒப்புக்காததால் இதை விட்டுட்டாள். விநோதமாய் காரென் லூனெஸ் பண்ணிய லிரில் பிலிம் சூப்பர்ஹிட் ஆயிற்று. லிரில் சோப்பு விற்பனை எக்கச்சக்கமாய் உயர்ந்துடுத்து. சிலருக்குப் பொறாமை ஏற்பட்டது. அதனால் லிரில் சோப்பைத் தயாரிக்கும் இந்துஸ்தான் லிவர் லிமிடெட் கொன்றுடுத்துன்னும், வேறு சிலர் வேறு விதமாயும் வதந்திகளைப் பரப்பினார்கள்.

முதல் பிலிம் சூப்பர் ஹிட் ஆகியும் அவள் மாடலிங்கைத் தொடரவில்லைன்னு தெரிஞ்சதுமேசெத்துத்தான் போயிருப்பாள் என்று நம்பிட்டாங்க. சாதாரண ஜனங்களுக்குப் புரிபடாத கோல்ட் வார் இது. தவறான பிரச்சாரங்களின் மூலம் ஒரு கம்பெனியை வேறொரு கம்பெனி இப்படி வீழ்த்த முயற்சி பண்ணிட்டிருக்கும். ஃபில்டில் இருக்கிற எங்களுக்கே இண்டஸ்ட்ரியல் வார் புரிபடாது. காரெல் லூனெல் லட்சணமாய் கல்யாணம்

பண்ணிண்டு கணவரோடு வாழ்ந்துட்டிருப்பாள் குஜ ராத்தில். உயிரோடிருப்பவங்களைக் கொன்று விடுவதும், செத்தவங்க உயிரோடேயே இருப்பதுபோல பிரம்மையைத் தோற்றுவிப்பதும் இண்டஸ்ட்ரியல் முதலைங்களுக்கு தமாஷ் ஆட்டம். சிந்தால் சோப்பு நன்றாய் க்ளிக் ஆயிற்று. அதைப் பார்த்துச் சகிக்க முடியாமல் போன வேறு சில கம்பெனிங்க அந்த சோப்பைப் பயன்படுத்தி னால் பைத்தியம் பிடிச்சுடும்னு வதந்தியைக் கிளப்பி னாங்க. நல்லதைவிட கெட்டதுதான் சீக்கிரமாய் பிரசார மாயிடும். அதுவே சாதாரண கம்பெனியாயிருந்தால் மண்ணோடு தரைமட்டமாயிருக்கும். சிந்தால் தயாரிக்கும் காத்ரெஜ் கம்பெனி மிகப் பெரிசு. அதனால் அந்த வதந்தியை சாமர்த்தியமாய் திருப்பியடிக்க முடிஞ்சுது. எவ்வளவு முட்டாள்தனம்- சோப்பைப் பயன்படுத்தினால் பைத்தியம் பிடிக்குமாம்!''

மஞ்சுளாவுக்கு எல்லாம் விநோதமாயிருந்தது.

o o o

மது பம்பாயிலிருந்து திரும்பியதுமே நேராய் தன்னுடைய ராஜ் விளம்பர பிலிம் ஆபீசுக்குப் போனான்.

சீட்டில் போய் உட்கார்ந்ததுமே போன் வந்தது.

''ஹலோ... யார் பேசறது?''—மது கேட்டான்.

''நான்தான் ராம்பூபால்''

''எங்கேயிருந்து?''

''மெட்றாசிலிருந்து தான்!''

''என்னது? நீ மாடல்களைத் தேடப் புறப்படலையா?'' —கோபமாய் கேட்டான் மது.

''போனேன். ஆனால் பலனில்லை...''

''இந்த விஷயம் ராஜசேகர் சாருக்குத் தெரிந்தால் கோபப்படுவார்...''

"அதான் உனக்குப் போன் பண்ணினேன்!"

"அப்படீன்னால் ஒரு காரியம் பண்ணு - அந்த வேலையை கிரண் பார்த்துப்பான். நீ இந்த நிமிஷமே புறப்படு - நல்ல லொகேஷன்களைத் தேர்ந்தெடு. லொகேஷன் செலக்ஷனைப் பற்றி உனக்குச் சொல்லத் தேவையில்லைன்னு நினைக்கிறேன். உன்னோடு கேமிராவை எடுத்துட்டுப்போ. உனக்குப் பிடிச்ச லொகேஷன்ஸ் போட்டோக்களை எடுத்து அவ்வப்போது அந்த ரீல்களை அனுப்பிடு. நிகாஸ் எஃப் - 3 கேமிராவோடு கூட 75 - 150 எம். எம். ஜூம்லென்ஸைக்கூட எடுத்துட்டுப் போ. கோடக் ஈஸ்ட்மென் கலரைப் பயன்படுத்து. உயிரையும் பொருட்படுத்தாமல் ஒரு பக்கத்தில் ராஜசேகர் சார் பந்தயம் வெச்சிருக்கார் - நம்பளை நம்பிட்டு. நீ இப்படிப் பண்றது சுத்தமாய் நன்றாயில்லை. பைதிபை, கிரணைப்பற்றி விவரம் ஏதாவது தெரியுமா?"

"கிரண் இன்னிக்கு தான் போன் பண்ணினான். கன்யாகுமரிக்கிட்ட யாரோ ஒரு அழகியைப் பார்த்தானாம். விவரங்களை சீக்கிரத்தில் தெரியப்படுத்தறானாம். சரி, நான் இப்போதே கிளம்பறேன்..."

"வெரிகுட் - லொகேஷன்ஸ் அபாரமாய் இருக்கணும். இதற்கு முன்னால் யாருமே பயன்படுத்தியிருக்கக்கூடாது. முக்கியமாய் லொகேஷன்ஸ் யாருக்குமே தெரியக்கூடாது. லொகேஷன்ஸ் நன்றாய் பிடிச்சுட்டால் ரகசியமாய் லோகல் அதாரிடீஸிடமிருந்து பர்மிஷன் வாங்கிக்கோ ஷூட்டிங்கிற்காக... மேற்கொண்டு தாமதிக்க வேண்டாம்... பீ கேர்ஃபுல்..."

"இதற்குள் என்மீது கைலாசன் வலைபின்னத் தொடங்கிவிட்டான். வேட்டை நாயைப் போல என்னை நகரம் முழுவதும் தேடிட்டிருக்கான்..."

"உடனே கிளம்பு... மேற்கொண்டு ஒரு நிமிஷம் கூட நகரத்தில் இருக்க வேண்டாம்"—போனை வைத்து விட்டான்.

சந்திரன் வந்தான் உள்ளே. வந்ததுமே கதவைச் சாத்திவிட்டு, மதுவிடம் நெருங்கி வந்து, "நம்ப ஆபீசில் சித்தரஞ்சனுக்கு ஏஜென்டாய் யாரோ வேலை பண்றாங்க. இன்றில்லா விட்டாலும் நாளைக்காவது தெரிந்து கொண்டுவிடுவேன் அவங்க யாருன்னு. இனிமேல் போனில் நம்ப ப்ராஜெக்டைப் பற்றிப் பேசாதீங்க," என்றான் மெதுவாய். மது வியப்படைந்து விட்டான் சந்திரனின் புத்திசாலித்தனத்திற்கு.

ஒவ்வொரு விஷயத்திலும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். சுவர்ணாவின் ஷூட்டிங் விவரங்கள் முழுவதும் தெரிந்து போய் விட்டன சித்தரஞ்சனுக்கு. தனக்கும் தன் முதலாளி ராஜசேகருக்கும் சுவர்ணாவிற்கும் மட்டுமே தெரிந்திருந்த விவரங்கள் வெளியே போய்விட்டதாய் ராஜசேகர் எச்சரித்ததிலிருந்தே ஜாக்கிரதையாய் இருந் திருக்க வேண்டும். இரண்டு நாட்களில் சித்தரஞ்சனின் டைர்ஸ் சம்பந்தப்பட்ட விளம்பர பிலிம் ரத்து ஆகிவிடும். அது தெரிந்ததுமே சித்தரஞ்சனின் பகைமை இன்னும் அதிகமாகிவிடும். அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டான் அவன், பம்பாயிலிருந்து போன்பண்ணியிருக் கக் கூடாதோ என்று!

ராம்பூலாலைத் தேடக் தொடங்கிவிட்டனானால்-அது சாதாரண விஷயமில்லை. ராம்பூலால் மூலமாய் ராஜ சேகரின் திட்டத்தைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இவ்வளவும் முயற்சிக்கிறானா? தம் ஆபீசில் சித்த ரஞ்சனுக்கு ஏஜென்டாய் வேலை பண்ணிக் கொண்டிருப்ப வர்கள் யார்?

யோசனையிலிருந்து மீண்டு - "சாயந்திரம் ப்ளைட்டில் 25 பிலிம் மேகசின்கள் பம்பாய்க்கு வரும். அதை வாங்கிண்டு,பத்திரமாய் ஒளிச்சுவை. நம்ப ஆபீசில் மட்டும் வைச்சுடாதே, புரிஞ்சுதா?" என்று சந்திரனைப் பார்த் தான் மது.

சந்திரன் தலையாட்டி விட்டு, மதுவுக்கு சைகை காட்டி விட்டு கதவை நோக்கிப் பூனையைப் போல நடந்து போனான். கதவுக்குப் பக்கத்தில் ஒரு விநாடி நின்றுவிட்டு மின்னலாய் கதவை இழுத்தான்.

அவ்விடத்திலேயே நின்றுக் கொண்டிருந்த கிரீஷ் கலக்கத்துடன் மறைந்தான்.

29

ஏர்போர்டிலிருந்து திரும்பவும் லாரென்ட் ஆபீசுக்குப் போனார்கள் ராஜசேகரும் அவளும். உடனே டில்லியிலிருந்த நண்பன் ஜார்ஜுக்குப் போன் பண்ணினான். ஜார்ஜ் லைனுக்கு வந்தான்.

"ஜார்ஜ்... நான்தான் ராஜசேகர்... பாரீசிலிருந்து பேசறேன். உன்னிடமிருந்து ஒரு உதவி வேணும்..."

"சொல்லு ராஜசேகர்... வாட் கேன் ஐ டு ஃபர் யூ?"

திறமையும், பண்பும் கொண்ட தொழிலில் கைதேர்ந்த ஆள் ராஜசேகர். அதனால்தான் ராஜசேகர் என்றால் விளம்பர உலகத்தில் எல்லோருக்குமே மதிப்பு.

"இன்னும் ஒரு மணி நேரத்தில் பாரீஸ் டு டெல்லி—வயா ஃப்ராங்ஃபர்ட், ஜெர்மன் ஏர்லைன்ஸ் லுப்தான்ஸாவில் ஒரு பெண் டில்லியில் வந்து இறங்குவாள். அவளை எப்படியாவது நாளை வரை டில்லியில் நிறுத்தி வைக்கணும். ரொம்ப முக்கியம் இது. அவள் உன் கையை விட்டுப்போய் விட்டால் எனக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் வந்துடும் நான் அவளுக்காகவே ஸ்பெஷலாய் பாரீசுக்கு வந்திருக்கேன்னால் பார்த்துக்கோ, என் தேவை எவ்வளவு முக்கியமானதாய் இருக்கும்னு."

ராஜசேகரின் குரலில் கெஞ்சல், வேண்டுதல், பரபரப்பு தென்பட்டன.

"விவரங்களைச் சொல்லு ராஜசேகர்."—ஜார்ஜ் குரலில் உறுதி தெரிந்தது. அதற்குள் அவன் யோசித்துக் கொண்டு விட்டான்— அவளை சாம, தான, தண்டோபாயத்தின் மூலம் தடுத்து நிறுத்தி வைத்துவிட வேண்டும் என்று.

"பெயர் தரங்கிணி. உயரம் 5.9. ஃபென்டாஸ்டிக் ஸ்ட்ரக்சர்ஸ். 36.24.36. மாடர்னாய் இருப்பாள்.எலிகென்ட் லுக், லேசான உதடுகள், சப்பையான கன்னங்கள். இன்டெலிஜென்ட் இன் மேக்கப் அண்ட் காஸ்ட்யூம்ஸ். நடையிலும் பார்வையிலும் அலட்சியம், பிரெஞ்சு நன்றாய் பேசுவாள்...இதைத் தவிர வேறு விவரம் எதுவும் தெரியாது!"

"அவள் காம்ப்ளெக்ஷன்?"

"தெரியாது— ஏன்னால் நான் அவளைப் பார்த்த தில்லை."

திடுக்கிட்டான் ஜார்ஜ்— ஒருமுறை கூட பார்த்திராத ஒரு பெண்ணைப் பற்றி அத்தனை விவரங்களைச் சொல் கிறான் ராஜசேகர்!

"ஒருக்கால் சாக்லெட் கலர் ஃபேஸாய் இருக்கணும்... மேக்கப் இல்லாமல் அவள் போட்டோவில் விழுந்திருந் தாளானால் கலர் ப்ரொமைட்டைக் கொண்டு கலரைச் சொல்லியிருப்பேன். ஆனால் போட்டோவில் அவள் மேக்கப்பில் இருப்பதுபோல தோணுது... ப்ளீஸ் ஜார்ஜ்... க்விக் கேச் ஹெர்."

ஜார்ஜ் போனை வைத்துவிட்டு நேரத்தைப் பார்த்துக் கொண்டான். ப்ளைட் வந்து இறங்குவதற்கு இன்னும் இருபது நிமிஷங்களே இருந்தன. அடுத்த நிமிஷம் ஜார்ஜின் கார் நாற்பது கிலோ மீட்டர் தூரத்திலிருந்த ஏர் போர்ட்டை நோக்கிப் பறந்தது.

பாரீசில் வேலைகளை முடித்துக் கொண்ட ராஜசேகர் ஏர்போர்ட்டுக்குக் கிளம்பினான் பரபரப்பாய்.

சித்தரஞ்சனோடு இருபத்தைந்து லட்சம் வியாபார உடன்படிக்கை வைத்துக் கொண்டிருந்த விக்கிரமுக்கு, ராஜசேகர் பாரீசிலிருந்து டில்லிக்குப் போன் பண்ணியது தெரிய நியாயமில்லை. தன் திட்டப்பிரகாரமே நாடகம் நடத்த முடிந்தது என்று பெருமையோடு நினைத்துக் கொண்டிருந்தான் சர்வோதயா ஓட்டல் ரூம் நம்பர் 116-ல் உட்கார்ந்துக் கொண்டு.

30

முகேஷின் ஸ்டூடியோவுக்கு மஞ்சுளாவும், காதம்பரியும் போய்ச் சேரும்போது ஸ்டூடியோவிற்குள்ளேயும் வெளியேயும் மிகப் பரபரப்பாயிருந்தது.

முகேஷின் வேலை என்றால் எங்கிங்கிருந்தெல்லாமோ பலர் வருவார்கள். அவன் வேலைப்பாட்டைப் பார்ப்பதற்காக இல்லை. மாடல்களை அவனைப் போல அத்தனை செக்ஸியாய் வேறு யாருமே காட்டமாட்டார்கள் ஆதலால்.

அத்துடன் மாடல் மாயா என்றால் அதிக மோகம். 'ரொமன்டிக் க்வீன்' என்றும், 'செக்ஸ் பாம்' என்றும் செல்லப் பெயர்கள் உண்டு மாயாவுக்கு, விளம்பர உலகத்தில்.

காதம்பரியையும் மஞ்சுளாவையும் பார்த்துவிட்டு எதிரே வந்து கூட்டிக் கொண்டு போய் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள் மாயா.

ஸ்டூடியோ நவீனமாய் டிஸைன் பண்ணப்பட்டிருந்தது. நாலைந்து கேமிராக்கள் பொறுத்தப்பட்டிருந்தன. ஐந்தாறு அலுமினியம் ரிஃப்ளெக்டர்கள் ஸ்டாண்டுடன் பொறுத்தப்பட்டிருந்தன. சுவர்களும், மேற்கூரையிருந்த லைட்டுகளும் சாம்பல் நிறத்திலிருந்தன. ஹாலுக்கு நான்கு பக்கங்களிலும் நான்கு ஏர்கண்டி.

ஷன்கள் வேலை பண்ணிக் கொண்டிருந்தன. ஸ்டூடியோவில் சாதாரண லைட்டுகள் இருக்காது. கார்பன் ஆர்க் லைட்டிங் லாம்ப்ஸ் (ஜூனியர், சீனியர்), மெர்குரி லைட்டிங் லாம்பஸ் அரேஞ்சு பண்ணப்பட்டிருக்கும்.

அட்ஜஸ்ட்டபிள் லைட் பீம் ஒன்று மூலையில் வைக்கப் பட்டிருந்தது.

ஸ்டூடியோவில் ஒரு மூலையில் இன்னோரு மாடல் ப்ரீதி உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்திலேயே அவள் தாய் உட்கார்ந்திருந்தாள்.

லைட் பாய், மேக்கப்மேன், ஹேர் ஸ்டைலிஸ்ட் எல்லோரும் வந்து விட்டார்கள்.

வந்தவர்கள் எல்லோரும் முதலில் சீனியர் மாடல் காதம் பரியை வணங்கி விட்டுப் பிறகு தம் வேலையில் ஆழ்ந் தார்கள்.

சாதாரண ஸ்டூடியோவைத் தவிர வேறெந்த ஸ்டூடி யோவையும் பார்த்திராத மஞ்சுளாவுக்கு வேறு ஏதோ உலகத்தில் இருப்பது போலிருந்தது.

அதற்குள் வேறு அறையிலிருந்த டைரக்டரிடமிருந்து செய்தி வந்தது— ப்ரீதியின் மேக்கப்பையும் காஸ்ட் யூமையும் ஒரு முறை செக் பண்ணச் சொல்லி.

ப்ரீதி வந்து ஒரு ஸ்டூலில் உட்கார்ந்துக் கொண்டாள். அவளுக்கெதிரே ஆளுயர நிலைக்கண்ணாடியை வைத் தார்கள்.

காஸ்ட்யூமர் வந்து அவளை ஒரு முறை பார்த்து விட்டு உதட்டைச் சுழித்தான்.

"ப்ரீதி, நீ காஸ்ட்யூம் உடுத்தியிருக்கிற விதம் நன்றா யில்லை. டிரஸ்ஸிங் ரூமுக்குள் போய் உள்ளேயிருக்கும் பிரா, அண்டர்வேர்களை எடுத்துட்டு வெறும் சுடிதாரை போட்டுட்டு வாங்க" என்றான் அவளைப் பார்த்து மென்று விழுங்கிக் கொண்டு, ப்ரீதி உள்ளே போனாள். அவளைத்

தொடர்ந்து காஸ்ட்யூமர், மேக்கப்மேன், அஸிஸ்டெண்ட் கேமிராமேன் போனார்கள்.

அதைப் பார்த்து விட்டு ப்ரீதியின் தாய் முகத்தை முறுக்கிக் கொண்டாள்.

"அயோக்கியர்கள்... பார்த்தீங்களா மாயா... டிரெஸ்ஸை மாற்றிட்டு வரச் சொன்னாங்க. இவங்க எதுக்கு டிரஸ்ஸிங் ரூமுக்குள் போகணும்?"—பற்களைக் கடித்தாள் காதம்பரி.

"இளப்பம் மேடம்... மாடலுங்க என்றாலே இளப்பம்! வேலை தராங்களோனோ... என்ன பண்ணினாலும் தகும்னு திமிர்... ப்ரீதியாவது அந்த அயோக்கியர்களைக் கழுத்தைப் பிடிச்சுத் தள்ளலாமில்லே?..."

ஐந்து நிமிஷத்தில் ப்ரீதி வெளியே வந்தாள். ப்ரீதியின் தாய் மகளிடம் போய் கண்டித்தாள். அதற்கு அவள் சீரியஸாகி விட்டாள்.

"எதுக்கு மேடம் அவள் அத்தனை சீரியஸாகி விட்டாள்?"

மஞ்சுளா கேட்டாள் காதம்பரியை.

"அவள் ஒரு பூனைத்தாய். பணத்துக்காகவோ, மகள் வழியாய் பெயரையும் புகழையும் விரும்பியோ தம் மகள் களை பதினாறு பதினேழு வயசிலேயே வேணும்னே மாடல் களாகவோ, நடிகைங்களாகவோ தயாராகும்படி பலவந்தப் படுத்துவாங்க. மகள்கள் பிடிக்கலைன்னு சொன்னாலும் சும்மாயிருக்க மாட்டாங்க. படிச்சுட்டே மாடலிங் பண்ணு - இல்லாவிட்டால் பணத்தை வாங்கிண்டு வான்னு பலவந்தப்படுத்துவாங்க. பேர் வரும், பணம் வரும் என்று உற்சாகப்படுத்துவாங்க. ஆரம்பத்தில் தாய் தந்தையரை மதிப்பாய் தான் நடத்துவாங்க. போகப்போக கர்வம் ஓங்கி, பணம் வந்து, கிளாமர் அதிகரித்து, தொழிலில் ஊறிப்போய், அதிலிருக்கிற ஆட்டபாட்டங்களை சுதாரித் துண்டு, அதிலேயே மிதக்கத் தொடங்கிவிடுவாங்க. தாம்

சம்பாதிக்கிறோம் என்ற அகம்பாவம் இடம் பெற்று விடும். தாம் தப்புப் பண்ணினாலும் தாய் தந்தையர் மிரட்டக் கூடாது. மிரட்டினால், 'நீங்கதானே என்னை இந்தத் தொழிலில் இறக்கினீங்க?' என்பாங்க. அதனால் தம் மகளை எவ்வளவு ஹீனமாய் பார்க்க நேர்ந்தாலும் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட வேண்டியதுதான்...''

மஞ்சுளா வியப்படைந்து விட்டாள்.

பின்னே சினிமா பத்திரிகைங்களில் நிறைய பேர் ஹீரோயின்கள் தமக்குத் தம் தாய் தந்தையர் என்றால் ரொம்ப அன்புன்னும், கௌரவம்னும் இண்டர்வ்யூ தராங்களே?...''

அப்பாவியாய் கேட்டாள் மஞ்சுளா, காதம்பரி சொன்னதை ஜீரணித்துக் கொள்ள முடியாதவளாய்.

காதம்பரி அலை அலையாய். சிரித்தாள். அந்தச் சிரிப்பில் மாயாவும் பங்கெடுத்துக் கொண்டாள்.

''மனசாட்சியை வஞ்சிப்பாங்க. மிகக் கொடுமையாய் மனசாட்சிக்கு விரோதமாய் அப்படிப் பேசுவாங்க. வஞ்சனை! வஞ்சனை! ஹீரோயினுங்களானாலும் சரி, மாடலுங்களானாலும் சரி, தாய் தந்தையரை நாயைக் காட்டிலும் கேவலமாய் நடத்துவாங்க. இது சத்தியமாய் நிஜம்! இவங்க வாழ்க்கைக்குள்ளே புகுந்து ஜனங்களால் பார்க்க முடியாது. அதனால் இதெல்லாம் தெரியாது. அப்படிச் சொல்லிக்காவிட்டால் தம் ரசிகர்களின் எண்ணத்தில் தாழ்வாகிவிடமாட்டாங்களா?... தாய் தந்தையர் கீழே ஹாலில் உட்கார்ந்திருக்கும்போதே தம் பாய் பிரெண்டுகளை பயமில்லாமல் நேராய் தம் பெட் ரூமுக்கு கூட்டிட்டுப் போவாங்க. ஆனாலும் மூச்சு விட்டுடக் கூடாது... இன்னொரு விஷயம் சொல்லட்டுமா, சில தாய் தந்தையர்கள் தாமே ப்ரோக்கருங்களாய் மாறிடுவாங்க மகளின் அழகை விற்றுட்டிருப்பாங்க. ப்ளூ பிலிம்களில் ஆக்ட் பண்ண வெப்பாங்க.

இப்படிப்பட்ட மோசம் கூட நடக்கும்னு யாராவது ஊகித்தும் பாக்க முடியுமா? கிளாமர், இமேஜ், என்ற முக்காட்டிற்குள் பரம ரகசியமாய் நடந்துட்டிருக்கும் காரியங்கள் இவை.

இந்த விஷயமெல்லாம் சாதாரணமாய் வெளியே வராது. அதனால்தான் சினிமா ஸ்டாருங்கன்னாலும் மாடலுங்கன்னாலும் ஜனங்களுக்குப் பைத்தியம்...'' -காதம்பரி பாரமாய் பெருமூச்சு விட்டாள்.

அஸிஸ்டென்ட் கேமிராமேன் ப்ரீதியிடம் போய் சுடிதாரின் தோள்பட்டைகளை இழுத்துவிட்டுவிட்டு அவள் மார்பகத்தைப் பாதி தென்படும்படி செய்தான். அங்கிருந்த எல்லாரும் வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கேமிராமேனும் மேக்கப்மேனும் அவள் உடம்பையெல்லாம் வேலையை சாக்கிட்டுக் கொண்டு தடவிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சி அசிங்கமாய் இருந்தது மஞ்சுளாவுக்கு.

அதற்குள் டைரக்டர் சுதீர் வந்தான்.

''ரெடியா?'' என்றான் மாயாவையும ப்ரீதியையும் பார்த்து.

''ரெடி'' என்றார்கள் இருவரும்.

இன்றைக்கு வேலை மதுரைத் துணி கம்பெனியுடையது- பத்திரிக்கைகளில் விளம்பரத்திற்காக எடுத்துக் கொண்டிருந்த போட்டோக்கள்.

அதுவரை துவாலையைச் சுற்றிக் கொண்டிருந்த மாயா அதை எடுத்துவிட்டு ஸ்டூலின் மேல் வந்து உட்கார்ந்தாள்.

மதுரை கம்பெனியைச் சேர்ந்த படுக்கை விரிப்பு ஒன்றை அவள் உடம்பில் சுற்றிக் கொண்டாள். அவள் கட்டிக் கொண்டிருந்த படுக்கை விரிப்பிற்குள் ஆடை

எதுவுமில்லாததால் அவள் உடம்பின் ஏற்ற இறக்கங்கள் தெளிவாய் தெரிந்துக் கொண்டிருந்தன.

மாயாவை அதுவரை எவ்வளவோ மதிப்போடு கருதி வந்த மஞ்சுளா அவள் உடையணிந்திருந்த விதத்தைப் பார்த்து அருவருத்துக் கொண்டாள்.

"மாயா, பிளாங்கெட்டைப் பாதி மடித்துக் கொண்டு, உங்க மார்பு கொஞ்சமும், முழங்காலுக்கு மேலே கொஞ்சமுமாய் தெரியும்படி பண்ணுங்க" என்று சுவாதீனத்துடன் பிளாங்கெட்டை மடித்துத்தர அவளிடம் வந்தான்.

மாயா டக்கென்று திரும்பினாள் கோபமாய்.

"இதப்பார் சுதீர், இந்த மாதிரி வேலைங்க எல்லாம் என்னண்டை நடவாது. தூரத்தில் இருந்துண்டே சொல்லு, இல்லாவிட்டால் விஸுவலைசர் இல்லஸ்ட்ரேஷனைக் காட்டு. அப்படி நான் மாற்றிக்கிறேன். வேலைங்கற சாக்கில் என் உடம்பையெல்லாம் தொடுவது எனக்குப் பிடிக்கலை. பிடிக்காவிட்டால் சொல்லிவிடு, நான் போயிடறேன்"

சுதீர் முகம் தொய்ந்தது. எல்லாருக்கும் முன்னால் மாயா அவ்வாறு சொன்னது அவமானமாய் இருந்தது.

"பார் சுதீர், இந்த வேலையால் விற்பனை பெருக வேண்டியது மதுரை கம்பெனி துணிகளுக்கு. என் அழகு இல்லை. என் அழகைக் காட்டச் சொன்னால் காட்டறேன். ஆனால் அதனால் விற்பனையாளர்கள் என் அழகை மட்டும் எஞ்ஜாய் பண்ணிட்டு, கம்பெனித் துணிங்களைப் பொருட்படுத்த மாட்டார்கள். விற்பனையாளர்களின் ஆஸ்பிரேஷன்களைத் தவறான வழியில் கொண்டு செல்ல வேண்டாம். நாங்க அந்த கம்பெனி துணிகள் நன்றாய் விற்றுப் போவதற்கு மட்டுமே பயன்பட வேண்டும். அதற்குமேல் உன்னிஷ்டம்."

சுதீருக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. ஆனால் சுதாரித்துக் கொண்டான். ஒரு மாடல் தனக்கு ஆலோசனை தந்தது ஆத்திரத்தை வரவழைத்தது.

மாயாவைப் போன்ற சில மாடல்களைப் பார்த்து வேறு பிற மாடல்கள்கூட தம் உடம்பைக் காட்டுவதற்கும் தொடுவதற்கும் ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். அதற்காக அவளைத் தள்ளி விடவும் முடியவில்லை. க்ளைண்ட்ஸ் மாயாதான் வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

போட்டோகிராபர்களிடம் எந்த பலவீனமும் இல்லாமல் நேர்மையாய் இருந்தால்- மாடல்கள் எனக்கு இந்த ஆங்கிள் பிடிக்கவில்லை,... இந்த மேக்கப் நன்றாயில்லை என்றெல்லாம் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. அப்படிச் சொன்னால் உன் அழகுக்குப் பணம் தரவில்லை... மாடலாய் சம்பளம் தரோம், அவ்வளவுதான் என்று வாயை மூடி விடுவார்கள் போட்டோகிராபர்கள்.

''விளம்பர நோக்கமே ரொம்ப மாறிப் போயிடுத்து. விளம்பரத்தைப் பார்த்ததுமே அந்தப் பொருளை வாங்கணுங்கற எண்ணம் வரணும்- பிரொடக்டை விற்பனை பண்றதுக்கு சைகலாஜிகல் ஆதாரம் வேண்டியது. ஒரு கம்பெனியின் புடவையை ஒரு மாடல் கட்டிக் கொண்ட விளம்பரத்தைப் பார்த்தால், அந்த கம்பெனியின் புடவையைக் கட்டிக் கொண்டால் நானும் அவ்வளவு அழகாயும் கவர்ச்சியாயும் இருப்பேன் என்ற சைகலாஜிகல் டெம்ப்டேஷன் வரணும். அதுதான் விளம்பரம் என்பது.

ஆனால் இப்பொழுதோ **Advertising consider women as sex objects.** இந்தத் துணிகளை வாங்குங்கன்னு ரொம்ப செக்ஸிமாய் மாடல்கள் விற்பனையாளர்களை அப்பீல் பண்ணினால்... ஆண் விற்பனையாளர்கள் ப்ரொடக்டை விட்டுட்டு மாடல் அழகை வெறுப்போடு பார்ப்பார்கள். மொத்தத்தில் விஷயமே பாதிக்கப்படும்...'' என்றாள் காதம்பரி.

இப்படிப்பட்ட ஃபீல்டிலா ராஜசேகர் செட்டில் ஆகியி யிருக்கிறான். வருத்தமடைந்தாள் மஞ்சுளா.

ஸ்டுடியோவில் வேலை மளமளவென்று முடிந்து விட்டது; கேமிரா, ஸ்லேவ் யூனிட்ஸ், அம்பரில் எல்லாம் இயங்கிக் கொண்டிருந்தன. ஸ்லேவ் யூனிட்ஸ் என்றால்... ஃப்ளாஷ்ஸ் ரிமோட் அதிக இடங்களை வெளிச்சத்தில் நிரப்புவதற்கு இவற்றைப் பயன்படுத்துவார்கள். கேமிரா க்ளிக் ஆகும் சமயத்தில் எப்படிப்பட்ட கனெக்ஷனும் இல்லாமல் ஆட்டோமேடிக்காய் எரியும். அம்பரில் என்றால்— விளக்கு வெளிச்சம் நேராய் மாடல்களின் மேல் வந்து பட்டால் அவர்கள் முகம் வெளுத்துப் போனாற் போல் விழுந்துவிடும். அதனால் ஃப்ளாஷ் லைட்டுகள் வெள்ளைத்துணியால் ஆன குடைகளின் மேல் பட்டு வெளிச்சம் கொஞ்சம் குறைந்து ரிஃப்ளக்ட் ஆகி பொருளின் மீது தேவையான விளக்கு வெளிச்சம் வந்து விழும்.

''இப்பல்லாம் காட்டன் சாரிகள் பார்த்தயா? அவை களின் விளம்பரம் எவ்வளவு பெருந்தன்மையாய் இருக்கு பார்த்தாயா? கார்டன் புடவைகள் எஞ்சிய பிற கம்பெனிப் புடவைகளின் விற்பனைகளை மிஞ்சிடுத்து, விளம்பரம் என்றால் அதுதான்...'' என்று எழுந்திருந்தாள் காதம்பரி.

மஞ்சுளாவும் எழுந்திருந்தாள்.

மாயாவிடம் போவதாய் சொல்லிவிட்டு வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டார்கள். கார் லாயர் சீதா ராமனின் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது,

''மேடம்..... மாயா அப்படி நடந்துண்டதைப் பார்த்துச் சும்மா இருந்துட்டாங்களே?''

''சாகவேண்டியதுதான்! அவளிடம் எப்போதும் பிஸ்டல் இருக்கும். யாராவது பைத்தியக்கார வேஷம் போட்டாங்கன்னால் அதை வெளியே எடுத்துடுவாள்.

அதோடு ஒரு பாடி கார்டைக் கூடவே கூட்டிட்டு வருவாள்...''

''பாடி கார்டைக் கூட போஷிக்கிறாங்களா?''

''யாருக்காக போஷிப்பாங்க? பிரதாப் சர்மான்னு ஒரு மாடல் இருக்கார். விக்ஸ் ஃபார்முலா-44க்கு மாடலிங் பண்ணுவார். அவர் தன்னோடு தன் நாயைக் கூட கூட்டிட்டு வருவார். அதற்குக்கூட ராஜமரியாதைகள் பண்ணணும். என்ன இருந்தாலும் ஆண் மாடல்கள் அதிர்ஷ்டசாலிகள். பணத்துக்குப் பணமும், பேருக்குப் பேரும், பிடித்த மாடலை அனுபவிப்பதும்— வேலை முடிஞ்சதும் தன் உத்தியோகத்தைப் பண்ணுவதும், வியாபாரத்தைத் தொடருவதும்... அவங்க சுகம் எங்களுக்குக் கிடையாது... பெண் மாடலுங்க எவ்வளவோ பேர் பாழாகிப் போறாங்களோ.....'' என்று வருத்தமாய் பெருமூச்செறிந்தாள்.

கார் லாயர் வீட்டிற்கு முன்னால் நின்றது. மஞ்சுளாவுக்கு ஒன்று மட்டும் புரிபடவேயில்லை. மாடலிங் அருவருப்புத் தொழில் என்கிறாள். மிகக் கொடுமை என்கிறாள். நன்றாய் சம்பாதித்துவிட்டாள். இனிமேலாவது மாடலிங்கை விட்டுடலாமே...

அந்த நேரத்தில் காதம்பரியின் மேல் கூட ஒருவிதமான மாறுபாடான உணர்ச்சி தோன்றிற்று மஞ்சுளாவின் மனதிற்குள்.

31

ராஜசேகர் பாரீசில் டில்லிக்கு வரும் விமானத்தில் ஏறியதும், ஜார்ஜ் டில்லி ஏர் போர்டில் நுழைந்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. ஜார்ஜ் காரை 'பார்க்கிங்' இடத்தில் கூட நிறுத்தாமல் விமான நிலையத்திற்குள் ஓடினான். விசாரணையிடம் போய், ''சர், லுப்தான்ஸா ப்ளைட்

பாரீஸிலிருந்து டில்லிக்கு வந்துச் சேர்ந்துடுத்தா?'' -விசாரணை ஆபீசர் விநோதமாய் பார்த்தார் வேர்க்க விருவிருக்க, மூச்சிரைக்க நின்றுக் கொண்டிருந்த அவனை.

''அதில் உங்களுக்கு வேண்டியவங்க யாராவது இருக் காங்களா?''

''ஆமாம்...''

வருத்தத்தோடு பார்த்துவிட்டு, ''சாரீ சார்...அந்த பளைட் பாரீசிலிருந்து ஃப்ராங்க் ஃபர்ட் வரைக்கும் க்ஷேமமாய்தான் வந்தது. அங்கிருந்து புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் சீக்கிய டெரரிஸ்டுகள் அதை ஹைஜாக் பண்ணிட்டாங்க. ஐ யாம் வெரீ சாரீ...''

ஒரு விநாடி அவர் சொன்னது புரியவில்லை. புரிந்ததுமே விக்கித்து நின்றுவிட்டான். திடீரென்று சோர்வு வந்து சூழ்ந்துக் கொண்டது அவனை. ராஜ சேகருக்கு உதவி பண்ண முடிந்ததற்கு மகிழ்ச்சியடைந்து உயிரையும் பொருட்படுத்தாமல் 40 கிலோமீட்டர் தூரத்தை 24 நிமிஷங்களில் அசுர வேகத்தில் கடந்து வந்திருக்கிறான். அதற்குள் இந்த ஆபத்து வந்துச் சேர்ந்து விட்டது—வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியதுபோல.

ஜார்ஜ் மிக புத்திசாலி. மிகவும் நெஞ்சழுத்தக்காரன். தோல்வியில் மனம் சோர்ந்துவிட மாட்டான். கடந்த ஆண்டு உலக மாடலிங் அசோசியேஷனின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து அமெரிக்கா போன மூவருள் ராஜசேகருடன் ஜார்ஜும் இருந்தான். நியூயார்க்கில் ஆறுமாதங்கள் வரை விளம்பர போட்டோகிராப்பியிலும், இண்டஸ்ட்ரியல் போட்டோகிராப்பியிலும் பயிற்சி பெற்றுத் திரும்பினார்கள்.

அந்த சிநேகத்தால் தான் ராஜசேகருக்கு உதவி பண்ண விரும்பினான் ஜார்ஜ்.

நாலடி எடுத்து வைத்து விட்டு டக்கென்று நின்று விட்டான் ஜார்ஜ். அவன் மூளையில் மின்னலாய் ஒரு யோசனை தோன்றிற்று. திரும்பி வந்தான்.

"அந்த ப்ளைட்டில் இருந்த பயணிகளின் பெயர்களைச் சொல்ல முடியுமா?"

"சாரீ... எனக்குத் தெரியாது. ஜெனரல் மேனேஜரிடம் போனால் கிடைக்கும். ஃபிராங்ஃபர்ட் விமானநிலையத் திலிருந்து விவரங்கள் வந்துவிட்டன. அவை அவரிடந் தான் இருக்கும்..."

பரபரப்போடு மேனேஜர் அறையை நோக்கி நகர்ந் தான். தரங்கிணி ப்ளைட்டில் ஏறியது பாரீசில். உடனே ஹைஜாக் நேர்ந்திருந்தால் அவள் ஆபத்தில் சிக்கிக் கொண்டது போலாகும். ஆனால் ஃபிராங்ஃபர்ட்டில் நின்றிருக்கிறது. அதற்கப்புறம் ஹைஜாக் நேர்ந்திருக்கிறது. ராஜசேகரின் அதிர்ஷ்டம் நன்றாயிருந்தால் அவள் ஃபிராங்ஃபர்ட்டிலேயே இறங்கியிருக்கலாம்.

சுவிஸ் ஏர்ப்ளைட் மிக வேகமாய் டில்லியை நோக்கி வந்துக் கொண்டிருந்தது. அதிலிருந்த ராஜசேகரால் நிம்மதியாய உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து ஓட வேண்டும் போல பரபரத்தது மனம். ஏர்கண்டிஷனர் நன்றாய் வேலை பண்ணிக் கொண்டிருந்த அந்த ப்ளைட்டில் ராஜசேகருக்கு வியர்த்துக் கொட்டிற்று.

ஜார்ஜ் தரங்கிணியை அடையாளம் கண்டு கொள் வானா? கண்டு கொண்டாலும் அவளைத் தான் வரும் வரையிலும் தடுத்து நிறுத்தி வைக்க முடியுமா?

சரியாய் அதே சமயத்தில் ஜெனரல் மேனேஜர் தந்த லிஸ்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஜார்ஜ், பரபரப்போடு. பாரீசில் ஏறியபோது ப்ளைட்டில் 240 பேர் இருந்தார்கள். ஃபிராங்க்பர்ட்டில் ப்ளைட் புறப்பட்ட போது 180 பேர் இருந்தார்கள். அதாவது 60 பேர் ஃபிராங்பர்ட்டில் இறங்கியிருக்கிறார்கள்.

அந்த 60 பேரின் பெயர்களையும் பார்த்துக் கொண்டே வந்தான். பார்த்துக் கொண்டே வந்த அவன் கண்கள் ஓரிடத்தில் டக்கென்று நின்றுவிட்டன. தாங்க முடியாத சந்தோஷத்தால் முகம் மலர்ந்தது.

ஹைஜாக் பண்ணியபோது விமானத்திலிருந்த பயணி களின் பெயர்களில் தரங்கிணியின் பெயர் இல்லை. இறங்கி விட்ட பயணிகளின் பெயர்களில் அவள் பெயர் இருந்த தென்றால் அவள் சேமமாய் இருப்பதாய் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் ஃபிராங்பர்ட்டில் இருந்த தாய் எண்ணிக்கொள்ள வேண்டுமா அல்லது உடனே டில்லிக்குப் புறப்பட்டிருப்பாளா?

மேனேஜருக்கு நன்றி சொல்லிவிட்டு, திரும்பவும் விசாரணையிடம் வந்தான்.

"சர்... ஃபிராங்பர்ட்டிலிருந்து டில்லிக்கு வரும் பிளைட்டின் விவரங்களைச் சொல்ல முடியுமா?"

ஆர்வத்துடன் விசாரித்த ஜார்ஜைப் பார்த்து சட்டென்று புரிந்துக் கொண்ட ஆபீசர் இண்டர் நேஷனல் ஏர் சர்வீஸஸ் சார்ட்டைக் கையிலெடுத்துக் கொண்டார்.

சரியாய் அதே சமயத்தில் தரங்கிணி ஏறிய ப்ளைட் டில்லியை நோக்கி வந்துக் கொண்டிருந்தது.

மதுவும் கிரீஷும் சேர்ந்து போஸ்டில் வந்த இளம் பெண்களின் போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருந்த போது போன் வந்தது.

மது போனை எடுத்தான். "ஹலோ சுவர்ணா பேசுகிறேன். நான் ஆபத்தில் இருக்கேன் மது. உன்னிடம் சித்தரஞ்சன் சம்பந்தப்பட்ட சில முக்கியமான விஷயங் களைச் சொல்லவேண்டும். சித்தரஞ்சன் ஹிட்லிஸ்ட் ஒன்றைத் தயாரித்திருக்கிறான். அதன்படி இந்த மாதத்தில் நிறைய பேர் கொல்லப்படுவார்கள். முக்கியமாய் ராஜ....."- லைன் கட் ஆகிவிட்டது.

சரேலென்று எழுந்திருந்தான் மது சீட்டிலிருந்து.

சுவர்ணாவுக்கு ஆபத்தா? வேண்டுமென்றே சித்த ரஞ்சனின் யூனிட்டில் போய் சேர்ந்துக் கொண்டாள். அதற்குள் ஆபத்து!

'ஹிட்லிஸ்ட்! முக்கியமாய் ராஜ...!' என்றால் ராஜ சேகருக்கா?!

பயத்தால் மதுவின் உடம்பு சிலிர்த்தது. முகம் களை யிழந்தது.

எப்படிக் காப்பாற்றுவது சுவர்ணாவை?... எப்படிப் பட்ட ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாளோ?

''வாட் மது... யாரிடமிருந்து போன்?...'' - கிரீஷ் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளாமல் கீழே ஓடினான்.

அடுத்த நிமிஷம் மதுவின் மோட்டார் சைக்கிள் நூறு கிலோ மீட்டர் வேகத்தில் பறந்தது.

32

''மாடல் உலகத்தைப் போல கொடுமையானது வேறொன்றில்லை. சேஃப்டி இல்லாத வாழ்க்கை எங்க ளுடையது. அரசியல் ஆட்டங்காட்ட முடிந்த வரைக்கும் நிற்போம். வயிறாற சாப்பிடவும் வழியில்லை. நிம்மதி யான தூக்கமும் இல்லை... எப்பொழுதும் ஒல்லியாய் இருந்து தீரணும். கன்னங்களிலும் கண்களுக்குக் கீழேயும் சதை பெருகிவிடக் கூடாது. அதனால் கண்களை அகல மாய் விரிக்க முடியாது. கண்களின் கோடியில் சுருக்கம் விழக்கூடாது. அழகைப் பார்த்து மெய்மறந்துபோய் அலட்சியம் பண்ணினால் தயையின்றி கழுத்தைப் பிடித்துத்

தள்ளிடுவாங்க. இந்தியாவிலேயே அழகான பல் வரிசைகள் உடைய பிராமிஸ் டூத் பேஸ்ட் மாடல் 'மாயா அலக்.' அவளுடைய கஷ்டங்கள் சொல்லி முடியாது... மாயா அலக்கின் பற்கள் முத்துகளைப் போல, வெள்ளையாய், மாதுளை முத்துகளைப் போல கவர்ச்சியாய் இருப்பதால் தான் அவளால் மாடல் ஆக முடிந்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவற்றைக் காப்பாற்றிக்கணும். கால்சியம் அதிகமாயிருக்கும் உணவுகளையே சாப்பிடவேண்டும். ஸ்வீட், சூடான பதார்த்தங்கள், குளிர்ந்த பதார்த்தங்கள் இதெல்லாம் சாப்பிடவே கூடாது. தினமும் ரெண்டு முறை பிரஷ் பண்ணணும்... ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் சாப்பிடணும். போட்டோகிராப்பருங்களைத் திருப்திப்படுத்தாமல் போனால் எங்களுக்கு சான்ஸ் கிடைக்காது. திருப்திப்படுத்தினால் உடல் அழகு கெட்டுவிடும்... செயற்கை விளக்கு வெளிச்சத்தில் மின்னும் எங்கள் அழகுக்குப் பின்னால் வேதனையான இருள் நிழல் உண்டு! எப்போது டி. வியைப் போட்டாலும் சரி, எந்த சினிமாவுக்குப் போனாலும், எந்த பத்திரிகையைத் திருப்பினாலும் கலர்கலரான உடைகளில் ஒய்யாரமாய் தென்படுவோம் நாங்க. உங்களைச் சிரிக்க வைக்க வைப்போம், ஆட்டங் காட்ட வைப்போம், உங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்க உதவுவோம். அழகுக்குப் பின்னால் முடிவில்லாத வேதனை! இருள் உலகத்தில் மின்னுகிற நிழல்கள் நாங்கள். இருட்டில் முன்னும் நிழல். விற்பனையாளர்களின் இதயங்களில் எங்கள் அபார அழகால் சூரியனை உதிக்க வைப்போம்— இன்னொரு பக்கத்தில் எங்கள் இதயங்கள் வேதனையால் பற்றி எரிந்து கொண்டேயிருந்தாலும்... எங்கள் குடும்ப வாழ்க்கைங்க கூட அவ்வளவு சுகமாயிராது. கணவன்மார்களின் சந்தேகம் அவமானம், இம்சைகளால் மானசீகமாய் செத்துட்டிருப்போம். மனம் ஆசைப்பட்டு ஒரு ஏழையை பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கமாட்டோம். கல்யாணமான, குழந்தைகள் உடைய கதாநாயர்களையும் மாடல்களையும் காலிப்பது எங்களுக்கு மோகம்.

அவங்க எங்க சம்பாதனைகளை வாரிச் சுருட்டிண்டு, எங்களைத் தள்ளிட்டுப் போனால் நடிகை சாவித்திரியைப் போல நாய் சாவுதான் எங்களுக்கு!''

இன்றைக்கு ஏனோ தெரியவில்லை காதம்பரி விநோதமாய் பேசுகிறாள்.

''முப்பது வயசு தாண்டினவங்கள்ளாம் கூட ஏன் நிர்வாணமாய் மாடலிங் பண்ணணும்? அதற்குள்ளேதான் பணமும் பேரும் வந்துச் சேர்ந்துடுதே...''— மஞ்சுளா கேட்டாள்.

''முப்பது வயதைத் தாண்டிய மாடலுங்களில் தமக்கு வயசு வளர்வது போலவும், இளமையைவிட்டு தொலைவில் போயிட்டிருக்கோம்னும், தாம் உடலளவில் கவர்ச்சியை இழந்துட்டோம்னும் தாழ்வு மனப்பான்மையுடன் எண்ணத்தொடங்கி தம்முள் உடலளவில் மாறுதல் வந்து டலைன்னு நிரூபிச்சுக்கிறத்துக்குத் தான் போட்டோகிராப் பருங்க கேட்ட விதத்தில் போஸ் கொடுக்கிறாங்க. அது ஒரு விதமான 'காம்ப்ளெக்ஸ்!' சிலர் சோற்றுக்குக் கதியில்லாமல் மாடல் ஆறாங்க. வேறு சிலர் கிளாமருக்காக ஆறாங்க. என்ன துரதிர்ஷ்டம்னால் இன்னிக்குப் பெரிய குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் சிலரும், ஐ. ஏ. எஸ்., ஐ. எஃப். எஸ். அதிகாரிங்களின் மகள்களும் இதில் இறங்கியிருக்காங்க. நல்ல ஹோதாவோடு பெரிய உத்தியோகம் பார்க்கிற பெண் அதிகாரிகள் கூட பார்ட்டைம் மாடலிங் பண்றாங்க... அவங்களே சுயமாய் வந்து விடுவதால் இளப்பமாய் ட்ரீட் பண்ணாமல் வேறு எப்படிப் பண்ணுவாங்க? இந்த காலத்தில் பத்திரிகைகளில் கூட நிர்வாணப் பெண்களின் புகைப்படங்களைப் போடாவிட்டால் விற்பனையாறதில்லையே? பெண்ணின் அழகை கௌரவமாய் பார்க்கும் நாள் வரவேண்டும். நான் ஒரு எழுத்தாளராய் இருந்தால் என் அனுபவங்களை ஒரு நாவல் உருவில் எல்லோருக்கும் முன்னால் கொண்டு வந்து அவங்க கண்களைத் திறக்கச் செய்வேன்... எது எப்படி

யானால் என்ன, நீயும் ராஜசேகரும் மேட் ஃபர் ஈச் அதர் ஆகி சுகமான குடும்ப வாழ்க்கை நடத்தணுங்கிறது தான் என் ஆசை..." என்றாள் விவரமாய். அதற்குள் போன் ஒலித்தது.

போனைக் கையிலெடுத்துப் பிடித்துக் கொண்டிருந்த அவள் உடம்பு நடுங்கத் தொடங்கிற்று. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று.

போனை வைத்து விட்டு, கலவரத்தோடு—

"இந்த ஊரில் உனக்கு உறவினர்கள் இருக்காங்களா மஞ்சுளா?"

திடீரென்று இந்த கேள்வியை ஏன் கேட்டாள் காதம்பரி, என்று புரியவில்லை மஞ்சுளாவுக்கு

இருக்கிறார்கள் என்று தலையாட்டினாள்.

"இப்படிச் சொல்றத்துக்கு ஒன்றும் நினைச்சுக்காதே. அர்ஜென்ட்டாய் அவங்க வீட்டுக்குப் போயிடு" என்றாள்.

மாடலிங் தொழில் மீது மஞ்சுளா வளர்த்துக் கொண்டிருந்த அருவருப்பு, பகைமை, கோபம் அத்தனையும் காதம்பரியின் மேல் திரும்பிற்று.

மஞ்சுளா விருட்டென்று எழுந்து உடைகளை எடுத்துக் கொண்டாள். கண்ணீர் மல்க, போய்க் கொண்டிருந்த மஞ்சுளாவையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் காதம்பரி.

o o o

"இன்னும் அரை மணி நேரத்தில் ஒரு ப்ளைட் ஃப்ராங் பர்ட்டிலிருந்து வருகிறது" என்றார் விசாரணை ஆபீசர்.

நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான் ஜார்ஜ் விமான நிலையத்து லாட்ஜில்.

தரங்கிணி நேராய் வராமல் ஃபிராங்ஃபர்ட்டில் ஏன் இறங்க வேண்டும்! இறங்கியதுமே இன்னொரு ப்ளைட்டில்

டில்லிக்குத் திரும்பி வருவாள் என்ற கியாரண்டி இல்லை. தான் காத்திருப்பதில் லாபம் இல்லையோ? ஒரே கொள் கைக்காக மணிக்கணக்கில் கையில் கேமிராவோடு உட்கார்ந்திருப்பது போட்டோகிராப்பர்களுக்குப் பழக்கப் பட்டது தான்.

யோசனையில் ஆழ்ந்திருந்த போதே ப்ளைட் வந்து கொண்டிருப்பதாய் ஒலிப்பெருக்கியில் அறிவுப்பு கேட்டது.

சட்டென்று எழுந்து அவுட் கேட்டிற்கு முன்னால் வந்தான். பார்த்துக் கொண்டிருந்த போதே ப்ளைட் லாண்ட் ஆயிற்று. இறங்கிக் கொண்டிருந்த பயணிகளில் தரங்கிணியைத் தேடத் தொடங்கின ஜார்ஜின் கண்கள். பத்து நிமிஷங்கள் கழிந்தன. ஒவ்வொருவராக அவுட் கேட்டிலிருந்து வெளியே வந்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுதுதான் ஜார்ஜின் பார்வை அவள் மேல் பட்டது. கச்சிதமாய், அஜந்தா எல்லோரா சிற்பங்களைக் கூட தோற்கடிக்கும் படியான அழகோடு, ஸ்டைலாய் வந்துக் கொண்டிருந்தாள் அவள். கண்களுக்குப் பெரிய பெரிய காகுல்ஸ், தலையில் ஹேட், பட்டுப் போன்ற கேசங்கள் காற்றில் பறக்க, அவுட் கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்தாள். கண்களைப் பறிக்கும் அழகு அவளு டையது.

ராஜசேகர் சொன்ன லட்சணங்கள் அவளிடமிருந்தன

சந்தோஷத்தால் தலைகால் புரியாமல் குதிக்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அவளையே தொடர்ந் தான். அவள் வெளியே வந்து லக்கேஜ் கன்வேயர் பெல்டிடம் போனாள்.

லக்கேஜுக்காகக் காத்திருந்த அவளை தொலைவி லிருந்தே நோட்டமிட்டபடி 'இவளை எப்படி அழைத்துக் கொண்டு போவது' என்று யோசிக்கத் தொடங்கினான்.

அவள் லக்கேஜை எடுத்துக் கொண்டு திரும்பினாள். உடனே அவளிடம் ஓடிவந்து, "லிஃப்ட் வேணுமா மிஸ்...?" என்று மரியாதையாய் கேட்டான்.

அவள் அருவியைப்போல கலகலவென்று சிரித்தாள். ஜார்ஜைப் பார்த்து இல்லை. தொலைவில் தென்பட்ட ஒரு காட்சியைப் பார்த்து. அதற்குள் அவள் ஜார்ஜைத் திரும்பிப் பார்த்து, "எங்க கார் வரவேண்டியது, ஏனோ வரவில்லை. ரேஸ்கோர்ஸ் கிரவுண்டிற்குப் பக்கத்தில் இறக்கி விட்டுட முடியுமா?"- வீணையை மீட்டினாற் போலிருந்தது அவள் குரல்.

"வித் ப்ளெஷர்... உங்க வீடு அங்கே இருக்கா மிஸ்?"

"எங்க வீடில்லை. எங்க அங்கிள் வீடு அது..."

"எங்கேயிருந்து வரீங்க?"

"பாரீஸ்."

கார் புறப்பட்டது.

"எவ்வளவு நாள் இருப்பீங்க இங்கே?"

"ரெண்டு நாள் இருப்பேன்!"

"பாரீசில் என்ன வேலை?"

"உலக பேஷனில் டிப்ளமா படித்தேன்!"

கார் அவள் சொன்ன வீட்டிற்கு முன்னால் நின்றது.

நன்றி சொல்லிவிட்டு அந்த வீட்டிற்குள் போனாள். காரை தொலைவில் ஒரு பக்கமாய் கொண்டு போய் நிறுத்தி வைத்து விட்டு, அவள் வீட்டிற்கு எதிரே, அந்த வீட்டிலிருந்தவர்களின் பார்வையில் படாதவாறு ஓரிடத்தில் உட்கார்ந்துக் கொண்டான், அவளைக் கண் காணித்தவாறு.

நேரம் கழிந்து கொண்டேயிருந்தது. மாலை ஆறு மணியளவில் அவள் காரில் வெளியே வந்தாள். சட்டென்று தன் காரில் அவளைப் பின்தொடர்ந்தான்.

அவள் கார் நேராய் போய் விமான நிலையத்தில் நின்றது.

காரைத் தொடர்ந்து கொண்டே போனவன், அந்த காருக்குப் பக்கத்திலேயே தன் காரைப் பார்க் பண்ணி விட்டு வெளியே பார்த்தபடி நின்றுக் கொண்டிருந்தான்.

ஏதோ ப்ளைட் வந்தாற் போலிருந்தது. விமான நிலையம் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது.

அரைமணி ஆகியிருக்கும்.

அவள் இன்னும் வெளியே வரவில்லை. டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தான். தன் கண்ணை அவள் கார் மீதே நிலைத்தபடி வைத்துக் கொண்டு, வீட்டிற்குப் போன் பண்ணி, "நான் ரேஸ்கோர்ஸ் மைதானத்துக்குப் பக்கத் திலுள்ள ஆறாவது தெருவில் 52வது வீட்டிற்கு முன்னால் இருப்பேன். ராஜசேகர் வந்தால் அங்கே வரச்சொல்" என்றுச் சொன்னான் தம்பியிடம்.

"ஹலோ! நான் காதம்பரி பேசறேன். நீங்க எனக்குத் தர வேண்டிய பாக்கித் தொகையை உடனே அனுப் பிடணும் அர்ஜென்ட்"-போனை வைத்துவிட்டு இன்னொரு போன் டயல் பண்ணினாள்.

"ஒரு ஆயிரத்தை வேணுமானால் குறைச்சுண்டு மீதியை அனுப்பிடுங்க!"

பத்து இடங்களுக்குப் போன் பண்ணி தனக்குப் பல நாட்களாய் வரவேண்டியிருந்த பாக்கிளை வசூல் பண்ணிப் பதில் முனைந்திருந்தாள் காதம்பரி.

எதிரே லாயர் சீதாராமன் உட்கார்ந்திருந்தார். கடைசியாய் சித்தரஞ்சனுக்குப் போன் பண்ணினாள்.

மறுமுனையில் சித்தரஞ்சன் போனை எடுத்ததுமே, மயக்கத்தோடு, கசப்போடு அலை அலையாய் சிரித்தாள். அவளுக்குச் சித்தரஞ்சனின் பலவீனம் நன்றாய் தெரியும்.

காதம்பரியின் மீது சித்தரஞ்சனுக்குப் பைத்தியம். அந்த பலவீனத்தையே ஒரு நல்ல காரியத்திற்காகக் கடைசி முறையாய் பயன்படுத்திக் கொண்டாள்.

அவள் கண் முன்னால் தம் பசிய வாழ்க்கைகளைப் பாழடித்துக் கொண்ட மாடல்கள் தென்பட்டார்கள்— தீனமாய், ஹீனமாய்—பலவீனமாய்—தம் வாழ்க்கைக்கு ஒரு வழிக்காட்டும்படி.

மாடல்கள் என்றாலே லாயர் சீதாராமனுக்கு பல கால மாகவே மனத்துக்குள் ஒரு அருவருப்பு படிந்து போயி ருந்தது.

ஆனால் காதம்பரியைப் போன்றவர்கள் கூட மாடல் பெண்ணாய் இருந்ததைப் பார்த்துத் தான் அவரால் நம்ப முடியவில்லை. ஆனால் காதம்பரி பண்ணிக் கொண்டிருந்த முயற்சிகளைப் பார்த்து அவர் இதயம் கசிந்தது. அதனால் தான் பைசா பீஸ் கூட இல்லாமல் அவள் தொடங்கிய பெரிய காரியத்தை ரகசியமாகப் பண்ணி முடிக்க உடன் பட்டார்.

''சித்தரஞ்சன் சார், எப்படி இருக்கீங்க?''

முதலில் காதம்பரியின் மேல் சந்தேகப்பட்டாலும் அவனிடமிருந்த பலவீனம் சாமர்த்தியமாய் யோசிக்க இடம் கொடுக்கவில்லை.

''நன்றாய்த்தான் இருக்கேன். இவ்வளவு நாள் கழிச்சு என் மேல் தயை பிறந்ததா?''- ஆசையாகக் கேட்டான்.

''உங்க மேல் எனக்கு மதிப்பு— உங்க புத்திசாலித் தனத்தின் மேல் எனக்கு ரொம்ப கௌரவம்...நாளைக்கு ராத்திரி உங்களுக்காக ஓட்டல் சர்வோதயாவில் எதிர் பார்த்துட்டிருப்பேன். பை தி பை, ஒரு சின்ன வேலை உங்களோடு.....என்னை என் கஷ்டத்திலிருந்து விடுவிக்கிற சாமர்த்தியம் உங்கள் ஒருத்தருக்கு தான் உண்டு.''— அவள் கண்களில் நீரும், வாயில் முறுவலும், குரலில் ஆனந்தமும், பிச்சாதாபமும் வழிந்தோடின.

"சொல்லுங்க மேடம், உங்களுக்கு எது வேணும் னாலும் நான் தயாராயிருக்கேன்."

"ஒன்றுமில்லை... எனக்கு வரவேண்டிய பாக்கிகள் ஆறு லட்சம் வரைக்கும் இருக்கு. கைக்கு வரத்துக்கு ஒரு வாரமாகும். நான் ஒருத்தருக்கு ஐந்து லட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர், உடனே தரச் சொல்லி உயிரை வாங்கறார். உங்களால் முடிஞ்சால் கொடுத்தால், பணம் கைக்கு வந்ததுமே....."

காதம்பரி முடிப்பதற்குள்ளாகவே இடைமறித்து, "அதுக்கென்ன வந்தது? எப்போது, எப்படித் தரச் சொல்றீங்க?"

ஐந்து லட்சத்தைக் கூட கையிலேயே தந்து விடக்கூடிய சக்தி தன்னிடம் உண்டு என்பதை நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்ற ஈகோவும், காதம்பரி மூலம் தான் எதிர் பார்த்துக் காத்திருந்த சுகம் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு தனக்குக் கிடைக்கப் போகிறது என்ற பலவீனமும் அவனைத் திணறடித்துக் கொண்டிருந்தன.

"சரியாய் இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் மைலாப்பூரில் ராதா சில்க் சென்டருக்கு முன்னால் நின்னுட் டிருப்பேன். நம்பிக்கையானவங்ககிட்டே கொடுத்தனுப் புங்க. கைலாசத்திடம் மட்டும் வேண்டாம். தாங்க்ஸ், வெச்சுடறேன்," என்று போனை வைத்துவிட்டாள்.

"லாயர் சார், நான் எதிர்பார்த்த 25 லட்சம் இத்துடன் முடிவடைகிறதோனோ?" என்றாள்.

அவள் தரும் கடனை எப்படி வசூல் பண்ணிக் கொள்வது என்றே யோசனை சித்தரஞ்சனின் கிரிமினல் மூளைக்கு எட்டாமலில்லை. அப்பொழுது அவன் மூளையில் பட்டது பத்து லட்சம் பொறுமானமுள்ள காதம்பரியின் வீடு.

"இத்துடன் உன் ஜென்மம் சாபல்யமாயிடும்மா. இனி வரப்போற தலைமுறையினர் உன்னைப் பற்றிப்

பெருமையாய் சொல்லிப்பாங்க. சாதிமதம் என்ற கொடுமையால் பூமியையே மிகடுக்கிற இன்றைய சமூகத்தில் உன்னைப் போன்றவங்க கூட இருக்காங்கன்னால் நம்பத் தான் முடியலை... நீ சொன்னது போலவே எல்லாவற்றையும் எழுதிட்டேன், ஒன்றையும் விடாமல்...''

காதம்பரி திருப்தியோடு பார்த்தாள் லாயர் தந்த காகிதத்தை. வருத்தமா,ஆனந்தமா, பச்சாதாபமா என்றுச் சொல்ல முடியாத அதீத நிலையிலிருந்தாள் காதம்பரி.

கார் சாவிகளைக் கையிலெடுத்துக் கொண்டு எழுந்திருந்தாள். இருவரும் உட்கார்ந்திருந்த கார் ராதா சில்க் சென்டரை நோக்கிப் போகத் தொடங்கிற்று. அந்தக் காரை அன்று மாலையே அதை வாங்கியிருந்த ஆள் எடுத்துச் செல்லவிருந்தான்.

அன்றிரவே காதம்பரியை வீழ்த்தும் முயற்சியில் சுறுசுறுப்பாய் ஆழ்ந்திருந்தான் கைலாசன், சித்தரஞ்சனுக்குத் தெரியாமல். அது காதம்பரிக்குத் தெரியும் தெரிந்ததால்தான் ஐந்து லட்சத்தை வலை வீசியிருந்தாள்.

o o o

மது சுவர்ணாவைத் தேடிக் கொண்டு வீதியெங்கும் அலைந்தான் பைத்தியம் பிடித்தவனைப் போல. எங்கே இருக்கிறாள்? எந்த நிலைமையில்? எப்படிக் காப்பாற்றுவது அவளை? சுற்றிச் சுற்றியலைந்து விட்டுத் திரும்பி ஆபீசுக்கு வந்தான்.

பால் பாரீசிலிருந்து இன்னும் திரும்பவில்லை. தரங்கிணி கிடைத்து விட்டாளா இல்லையா என்று தெரியாது. நாட்கள் கழிந்து கொண்டிருக்கின்றன. அதற்குள் சுவர்ணாவின் நிலைமை குழப்பமாயிருக்கிறது.

சந்திரன் தபால்களைக் கொண்டு வந்து தந்தான். ஒவ்வொரு உறையிலும் ராஜசேகர் இந்த சவாலில் வெற்றி பெற வேண்டும் என்றிருந்தது.

யார் எழுதியிருப்பார்கள் என்றெண்ணி வியப்படைந்து விட்டான் மது. பிரபல இந்தியன் போட்டோகிராபர்கள்- ஜிதேந்திர ஆர்யா, ஜே.பி. சிங்கால், முகேஷ் ஷா, ஹரீஷ், அஜித்பட்டேல், ஜோதிடாகுர், சூரஜ்ராய் ரகுராய், (இந்திராகாந்தியின் குடும்ப போட்டோகிராபர்) கிஷோர் பரேக், இத்தனைப் பேரும் எழுதியிருந்தார்கள்.

மது எல்லையில்லாத ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டான். இந்தியப் போட்டோகிராபி உலகத்தை ஆளும் சக்கர்வர்த்திகள் இவர்கள்.

தன் பாஸின் பந்தய விஷயம் இவர்களுக்குத் தெரிந்ததென்றால் ஏறக்குறைய இத்துறை முழுவதும் இந்த விஷயத்தை அறிந்திருக்கும் என்றுதான் அர்த்தம்.

ஒரு விநாடி பயம் தோன்றிற்று மதுவுக்கு. இந்தப் பந்தயத்தில் வெற்றிப் பெறாவிட்டாலோ?... அவன் உடல் சிலிர்த்தது.

அதற்குள் போன் மணி அடித்தது.

போனில் கேட்ட செய்தி மதுவைப் பெருத்த அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. கையிலிருந்தத போன் நழுவி விழுந்தது.

எதிரிலிருந்த சந்திரனுக்கு நடந்தது ஒன்றும் புரியவில்லை. போனைக் கையிலெடுத்து, ''ஹலோ'' என்றான். போனில் கேட்ட வார்த்தைகளால் சந்திரனின் கைகூட முறுக்கேறிக் கொண்டது.

பயங்கர எரிமலைப் படலம் ஒரு விநாடி அவ்விருவரையும் சுற்றிச் சூழ்ந்துக் கொண்டாற்போலிருந்தது.

சட்டென்று தேறிக் கொண்ட மது, அதிரும் இதயத்துடன் சர்வோதயா ஓட்டல் எல்லையிலிருந்த போலீஸ் ஸ்டேஷனை நோக்கித் தன் மோட்டார் சைக்கிளில் பறந்தான்- மிக வேகமாய்.

33

ராஜசேகர் டில்லி விமான நிலையத்தில் இறங்கியதுமே நேராய் ஜார்ஜின் வீட்டிற்குப் போனான். அப்படிப் போகும்போது என்றும்போல் நாலு பக்கமும் பார்த்துக் கொண்டே போயிருந்தால் அவனுக்கு வேண்டிய பெண் தென்பட்டிருப்பாள்!

பரபரப்பாய் போய்க் கொண்டிருந்த ராஜசேகரை முறுவலுடன் பார்த்தாள் தரங்கிணி. அழகானவன்தான் என்றெண்ணிக் கொண்டாள் மனதிற்குள்.

ராஜசேகர் ஜார்ஜின் வீட்டிற்குப் போனதுமே அவன் தம்பி சொன்ன வார்த்தைகளைக் கேட்டுவிட்டு மகிழ்ந்து போய் விட்டான்.

சட்டென்று வந்த டாக்சியிலேயே ஜார்ஜ் சொன்ன இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான். ஒரு சுவரோரமாய் நின்று கொண்டு ஒரு வீட்டையே பார்த்துக் கொண் டிருந்த ஜார்ஜைப் பார்த்ததுமே அந்த வீட்டில்தான் தரங்கிணி இருக்கிறாள் என்று புரிந்தது

ஜார்ஜ் ராஜசேகரைப் பார்த்து முறுவல் பூத்தான். "யூ ஆர் லக்கி பிரதர். தரங்கிணி இந்த வீட்டில்தான் இருக்கிறாள். காலையிலிருந்தே பழியாய் காத்துக் கிடக் கிறேன்- அவள் என் பார்வையை விட்டுப் போயிடாமல்."

தாங்க முடியாத சந்தோஷத்தால் ராஜசேகருக்குத் தலைகால் புரியவில்லை.

"கமான்..." என்று அந்த வீட்டை நோக்கி வேகமாய் ஓடினான் ராஜசேகர். ஜார்ஜ் அவனைத் தொடர்ந்தான்.

காலிங் பெல்லை அழுத்தினான் ராஜசேகர்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு கதவு திறந்துக் கொண்டது.

திரும்பவும் ஏமாற்றந்தான்! எதிரே ஒரு கிழவர் நின்று கொண்டிருந்தார்.

"சார், நாங்க தரங்கிணிக்காக வந்தோம். ரொம்ப அர்ஜென்ட் வேலை. கொஞ்சம் கூப்பிட முடியுமா?"

கிழவர் அவர்களை விநோதமாய் பார்த்து விட்டு- "இங்கே தரங்கிணின்னு யாரும் இல்லை" என்று வீட்டிற்குள் எட்டிப் பார்த்து விட்டு- "அம்மா தேவி, யார் வந்திருக்காங்க, பார்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

ராஜசேகருக்கு சந்தேகம் வந்தது. நடிக்கிறான் என்று தோன்றிற்று ஒரு விநாடி. அதற்குள் ஒரு இளம்பெண் வந்தாள் ஒய்யாரமாய்.

அவளைப் பார்த்ததுமே ராஜசேகரின் முகம் களையிழந்தது. ஜார்ஜ் ஏமாந்துவிட்டான். கொஞ்சம் லேசாய் தரங்கிணியின் ஜாடை இருந்தது அவளிடம்.

நிராசையோடு திரும்பினான் ராஜசேகர்.

பின்னாலிருந்து அவள், "யார் வேண்டும்?" என்று கேட்டாள்.

"தரங்கிணி" என்றான்.

அதற்குள், "உங்களுக்குத் தரங்கிணியா வேணும்? நீங்க விக்கிரம் தானே?"

சட்டென்று நின்றுவிட்டான் ராஜசேகர். ஏதோ லிங்க் கிடைத்தாற் போலிருந்தது. சட்டென்று திரும்பினான்.

"ஆமாம், என் பேர் விக்கிரம், தரங்கிணிக்காக வந்திருக்கேன்" என்றான், சிறிய பொய் ஒன்றைச் சொல்லி.

"நீங்க மெட்ராசில் இருப்பதாய் சொன்னாளே!"

ஒரு விநாடி கலவரமடைந்தவன், சட்டென்று சமாளித்துக் கொண்டு, "அங்கேயிருந்து தான் வரேன்" என்றான் சிநேக பூர்வமாய்ப் பார்த்து.

"தரங்கிணி அதிர்ஷ்டம் ஏதோ நன்றாயிருந்து பிராங்க் பர்ட்டில் இறங்கிவிட்டாள்—அங்கே இருந்த சிநேகிதியைப் பார்க்கணும்னு. இல்லாவிட்டால் ஹைஜாக் பண்ணிய ப்ளைட்டில் சிக்கியிருப்பாள். வேறு ப்ளைட்டில் ஏறி டில்லிக்கு வந்துட்டாள்..."

"அவள் இங்கே எந்த இடத்தில் இருக்கிறாள்?" -துப்பாக்கிக் குண்டாக வெளிவந்த கேள்விக்கு அவள் முதலில் ஆச்சரியமடைந்தாலும். அதை வேறு விதமாய் புரிந்து கொண்டு,

"கல்கத்தாவுக்குப் போற அவசரத்தில் இருக்கிறாள். தரங்கிணியிடமிருந்து போன் வந்ததால் ஏர் போர்ட்டுக்குப் போயிட்டு இப்பத்தான் வந்தேன்..."

திரும்பியவன் சரேலென்று நின்று—

"கல்கத்தாவுக்குப் போனால் எங்கே இருப்பாள்?" என்று கேட்டான்.

"எஸ்பிளனேட், ஒபராய் ஓட்டல்" என்றாள் அவள்.

விடுவிடென்று நடந்துக் கொண்டே... நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.

நேரம் பத்து நிமிஷங்கள் தான் இருந்தன.

அடுத்த நிமிஷம் கார் மணிக்கு நூறு கிலோ மீட்டர் வேகத்தில் ஏர் போர்ட்டை நோக்கிப் பறந்தது.

நடந்ததையெல்லாம் தெரிந்துக் கொண்ட ஜார்ஜ் தலையிலடித்துக் கொண்டான் நிராசையோடு.

விமான நிலையத்தில் இவளை வழியனுப்புவதற்காக வெளியே வந்த ஒரு பெண்ணைப் பார்த்தான் ஜார்ஜ். வழியனுப்ப வந்த அந்த பெண்தான் தரங்கிணி. ஒரு முறை அவளைக் கூர்ந்து பார்த்திருந்தால் தெரிந்து போயிருக்கும். முட்டாளாய் இருந்து விட்டான். ராஜசேகரின் பரபரப்பைப் பார்த்தபோது வருத்தமாயிருந்தது ஜார்ஜுக்கு.

கார் விமான நிலையத்திற்குள் நுழையும்போது சரியாய் 7-15 ஆயிற்று. ராஜசேகர் ஓட்டமாய் ஓடினான். அதற்குள் ப்ளைட் டோரை மூடிக் கொண்டிருந்தார்கள், ப்ளைட் கேசை இழுத்து விட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்க விரும்பவில்லை.

வேகமாய் எமெர்ஜென்சி அநௌன்ஸ்மென்ட் செல்லிற் கருகில் போய் — "அந்த ப்ளைட்டைத் தடுத்து நிறுத்தணும். அர்ஜென்ட், ப்ளீஸ்" என்றான் கலவரத்தோடு.

"சாரீ, இப்போதே லேட் ஆயிடுத்து..." என்று வேகமாய் எழுந்திருந்தார் அநௌன்ஸர்.

வருத்தம், உத்வேகம், வெறுப்பு எல்லாம் சேர்ந்து அவனைப் பைத்தியம் பிடிக்க வைத்தன.

'சட்' என்றபடி ரன்வேயின் மேல் ஓடிக்கொண்டிருந்த ப்ளைட்டை ஆதரவில்லாமல் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான்.

அதுவும் ஓரிரு விநாடிகள்தான். சட்டென்று சமாளித்துக் கொண்டு கல்கத்தாவுக்குப் போகும் அடுத்த ப்ளைட்டிற்காக விசாரணை கௌண்டரை நோக்கி நடந்தான்.

அடுத்த மூன்று மணி நேரத்தில் ஒரு ப்ளைட் இருப்பதாய் தெரிந்துக் கொண்டு, சோர்வுடன் லாஞ்சில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

அதற்குள் மஞ்சுளாவைப் பற்றி நினைவு வந்தது. இந்தச் சமயத்தில் மஞ்சுளா பக்கத்திலிருந்தால் நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று ராஜசேகருக்கு.

அவள் பட்டுப் போன்ற நீண்ட கேசத்தில் முகத்தைப் பொத்திக் கொண்டால் போதும். எங்குமே கிடைக்காத நிம்மதியும், ஆனந்தமும் கிடைத்து விடுமே!

உடனே போனை நெருங்கி— சென்னைக்கு ஒரு போன் பண்ணினான். போனை மது எடுத்தான். எல்லோரும்

நன்றாயிருக்கிறார்கள் என்றுச் சொல்லி விட்டு— கடைசியாய் சொன்ன அந்த வார்த்தை ராஜசேகரின் நவநாடிகளையும் தளரச் செய்து விட்டன.

எப்படி? எப்படி நடந்தது?

சுவர்ணா எப்படி இறந்தாள்? அது கொலை என்று சொன்ன ராஜசேகரின் வார்த்தைகள் அவன் தேகத்தைச் சிலிர்க்கச் செய்தன.

உடனே கல்கத்தா போவதை விட்டுவிட்டு மெட்றாஸ் ப்ளைட்டில் ஏறிவிட்டான் ராஜசேகர். ஏறும் முன்னால் ஒரு ஆள் அவனைச் சந்தித்து பத்து லட்சம் ரூபாய்க்கான செக் ஒன்றை சித்தரஞ்சனிடம் தருமாறு சொல்லிக் கொடுத்தான் அவனிடம். அதே சமயத்தில் கல்கத்தா போகும் ப்ளைட்டில் இருந்த தரங்கிணி வேதனையால் புழுவாய் நெளிந்து கொண்டிருந்தாள். மிகக் கஷ்டப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இன்னும் ஒரு மணியில் இஞ்ஜக்ஷன் குத்திக் கொள்ளாவிட்டால் தன் நிலைமை மிகக் கொடுமையாகி விடும் என்று அவளுக்குத் தெரியும்.

அவ்வளவு வேதனையிலும் நிர்மலமாயும், நேர்மையாயும் தென்பட்ட ராஜசேகரின் முகம் தரங்கிணியின் கண் முன்னால் லீலையாய் நிழலாடிக் கொண்டிருந்தது. அத்துடன் ராஜசேகர் என்றால் பயமும் ஏற்பட்டது.

தன்னை வேட்டையாடுவதால் அவனுக்கென்ன லாபம்? ஒரு விநாடி விக்கிரம் மீது கூட கோபம் வந்தது.

o o o

சென்னையில் ப்ளைட் நின்றதுமே நேராய் தன் ஆபீசுக்குப் போனான் ராஜசேகர். ராஜசேகர் ஆபீசுக்கு வந்து விட்டதை அறிந்ததுமே எல்லோரும் பரபரப்பாகி விட்டார்கள். சுவர்ணாவின் சாவு விஷயம் எல்லோருக்கும் தெரிந்து போய் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். ராஜ

சேகரின் ஆபீசில் வேலை பண்ணி வந்தால் சித்தரஞ்சன் தம்மையும் கொன்று விடுவான் என்ற பயம் எல்லோரையும் குடிக்கொண்டு விட்டது.

ராஜசேகர் சீட்டில் வந்து உட்கார்ந்ததுமே மதுவுக்குச் செய்தி அனுப்பினான். மது பரபரப்பாய் ஓடி வந்தான்— தரங்கிணியைக் கூட்டிக் கொண்டு வருவான் என்றெண்ணி யிருந்த மதுவுக்கு களைப்போடு சோர்ந்துபோய் தென்பட்ட பாஸின் முகத்தைப் பார்த்ததுமே எல்லாம் புரிந்துவிட்டது.

"என்ன நடந்தது? சுவர்ணா எப்படிச் செத்தாள்? சுவர்ணா வேணுமென்றே சித்தரஞ்சனின் பக்கம் போய் சேர்ந்தாளே...?"— ராஜசேகரின் குரல் தழுதழுத்தது.

சுவர்ணாவின் சாவு அவனை வெகுவாய் பாதித்து விட்டது.தான் பந்தயத்தில் வெல்லவேண்டும் என்றெண்ணி யிருந்தானேயன்றி அதில் வேறொருவர் பகடைக்காயாய் ஆவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

"பறங்கி மலையில் ஆபத்தான மலைச்சரிவுக்கருகில் பிலிம் ஷூட்டிங்குக்கு ஏற்பாடு பண்ணினாங்க. சுவர்ணா ஒருத்திதான் மாடல். ஷூட்டிங்கில் அவளை மெல்ல மெல்ல மலைச்சரிவுக்குப் போகச் சொன்னாங்க. மலையுச்சியி லிருந்த பெரிய பாறாங்கல்லின் மேல் காலை வைத்ததுமே அவள் அதளபாதாளத்தில் விழுந்து செத்துட்டாள்!"

அதைக் கேட்டதுமே பகீரென்றது ராஜசேகருக்கு.

"பின்னே கொலைன்னு எப்படிச் சொல்றீங்க?"

"அதை சித்தரஞ்சன் எதேச்சையாய் நேர்ந்ததுன்னு சொல்லி ஃபைலை மூட வைச்சுட்டான், போலீஸாரை. எனக்கு என்னவோ நம்பிக்கை ஏற்படாததால், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ஃபைலையெல்லாம் பார்த்தேன். நூற்றுக்கணக்கான வருஷங்களாய் உறுதியாய் இருந் திருக்கிற பெரிய பெரிய பாறைகளைக் கொஞ்சம் ஏதாவது புரட்டியிருந்தால் கூட அது அசையும் நிலைக்கு வந்துவிடும். அதனால் சந்தேகம் வந்து, அன்றிரவு நானும் சந்திரனும்

லொகேஷன் ஷூட்டிங் ஸ்பாட்டிற்குப் போய் செக் பண்ணினோம். யாரோ பெரிய பலகையால் அந்த ஸ்பாட்டில் பலமாய் இருந்த பாறைகளின் அடிபாகங்களில் நன்றாய் புரட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அடுத்த நாளே ஷூட்டிங் நடந்திருக்கிறது. மழை பெய்திருந்ததால் யாரோ புரட்டினாற்போல போலீசாருக்கு சந்தேகம் வரவில்லை.

பற்களை நறநறவென்று கடித்தான் ராஜசேகர்.

ரூபவதி சாவிலிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொண்டாலும் சுவர்ணா பலியாகி விட்டாள்.

கொஞ்சநேரம் ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு எழுந்திருக்கப் போனபோது சந்திரன் வந்தான்.

"மஞ்சுளா மேடம் காதம்பரி அவங்க வீட்டிலிருந்து தன் சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிட்டதாய் சொல்லச் சொன்னாங்க, நீங்க வந்ததும்" என்றான்.

ஒரு விநாடி ஒன்றும் புரியவில்லை. மஞ்சுளா காதம்பரி வீட்டிலிருந்து ஏன் போக வேண்டும்?

"சந்திரா! இந்த அட்ரஸுக்குப் போய் நான் வந்துட்டேன்னு சொல்லி மஞ்சுளாவை டாக்சியில் கூட்டிட்டு வா" என்று ஒரு சீட்டைத் தந்தான் சந்திரனிடம்.

கார் கிளம்பிற்று.

மதுவுக்கு எதைக் கேட்க வேண்டுமானாலும் பயமாயிருந்தது.

ராஜசேகரின் முகம் ரத்தத்தை உமிழ்ந்தாற்போல செக்கச் செவேர் என்றிருந்தது. கண்களில் கோபம் கொப்பளித்தது.

"பிலிம் மேகஸின்கள் வந்துடுத்தா?"- ராஜசேகர் கேட்டான்.

"வந்துடுத்து சார்!"

"எக்ஸ்போஸர் வார்னிங், க்ளோசப் லென்ஸ், ஸ்லிப்ட் இமேஜ், லென்ஸ் லைட் இன்டிகேட்டர், ட்ராலி, ட்ராலி பிளாட்பாரம், பென்டாக்ஸ் கேமிரா, எக்ட்ராக்ரோம் 100, ஆஸா, பிளாக் அண்ட் வைட் ஒரு இருபத்தைந்து, கலர் ஒரு இருபத்தைந்து, பிலிம் ரீல்ஸ், ஏரீப்ளக்ஸ், 35 எம்.எம். மூவி கேமரா- இதெல்லாவற்றையும் ஞாபகம் வைச்சுண்டு ரெடி பண்ணு. ஆனால் ரைட்டர் ஸ்க்ரிப்ட், விஸுவலைசர் ஆல்பம் எல்லாவற்றையும் கூட கிட்ட வைத்துக்கோ..."

ராஜசேகரின் முகத்தில் உறுதி தெரிந்தது.

தரங்கிணி கிடைக்கவில்லை. ஒரு பக்கம் சித்தரஞ்சனால் ஏற்படும் தொல்லைகள். ஆனாலும் அதற்கெல்லாம் சோர்ந்து விடாமல் உறுதியாய் ஷுட்டிங்கிற்குக் கிளம்பிக் கொண்டிருந்த ராஜசேகரைப் பார்த்தபோது தான் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருந்ததாய்ப் பட்டது மதுவிற்கு.

காரை விட்டிறங்கி, வீட்டிற்குள் போவதற்குள் மஞ்சுளாவை அழைத்துக் கொண்டு சந்திரன் வந்து விட்டான்.

ராஜசேகரைப் பார்த்த மஞ்சுளாவின் இதயம் கசிந்தது. முகத்தில் உரோமம் பெருகியிருந்தது. இளைத்து விட்டிருந்தான் முகம் கருத்துப் போய் உடம்பிற்கு வந்த வனைப் போலத் தென்பட்டான்.

அவனை சங்கடத்தில் ஆழ்த்தியிருந்த சித்தரஞ்சனின் மேல் கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

அதற்கு முன்பே சந்திரன் சொன்னதால் தெரிந்திருந்தது- சுவர்ணா இறந்துவிட்ட விஷயம். தரங்கிணியும் கிடைத்ததாய் தெரியவில்லை.

"மது! சித்தரஞ்சனிடம் தரச்சொல்வி முகர் ஜிசெக் தந்தான் பத்து லட்சத்துக்கு. உன் புத்திசாலித்தனத்தைப்

பயன்படுத்து...'' என்று செக்கை எடுத்துத் தந்தான் மர்மமாய் பார்த்துக் கொண்டே.

''சந்து, ஏர்போர்ட்டுக்குப் போய் மாலினியைச் சந்தித்து, கல்கத்தாவுக்கு ஒரு டிக்கெட் ரிஸர்வ் பண்ணச் சொல்லு. க்விக். அர்ஜென்டாய் ஆகணும்...''

மதுவும் சந்திரனும் வெளியே போய் விட்டார்கள். எல்லாவற்றையும் இழந்து விட்டவனைப் போல தென் பட்ட ராஜசேகரை கிட்டே இழுத்துக் கொண்டு தேற்ற வேண்டும் போலிருந்தது மஞ்சுளாவுக்கு.

ராஜசேகரின் நிலைமையும் அப்படிதான் இருந்தது.

மஞ்சுளாவின் மடியில் இளைப்பாற வேண்டும் போல துடிப்பாய் இருந்தது.

கொஞ்ச நேரம் இருவரும் மௌனமாய் இருந்தார்கள். புயலுக்கு முன்னால் ஏற்படும் அமைதி அவ்விருவருக்கு மிடையே குடிக் கொண்டிருந்தது.

முதலில் தேறிக் கொண்ட மஞ்சுளா ராஜசேகரிடம் வந்து அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண் டாள். ''ராஜ், இந்தப் பந்தயத்தை உங்களால் விட முடியாதா?''

திடுக்கிட்ட அவன் மஞ்சுளாவை விட்டுவிட்டு வெறித்துப் பார்த்தான் அவளை.

''அது நடவாது மஞ்சுளா'' என்றான் திடமாய்.

அதைக்கேட்டு ஒருவிதத்தில் வருத்தமடைந்த மஞ்சுளா, ''இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை எதிர்த்து நின்று எப்படி ஜெயிப்பீங்க?'' என்று கேட்டாள்.

''ஜெயிப்பேன், பார்த்துட்டிரு.''— உறுதியும், நம்பிக் கையும் தெரிந்தன அவனிடம்.

''இந்த ரகளை எல்லாவற்றையும் விட்டு நீங்கி நாம் மதுரைக்குப்போய் செட்டில் ஆவோம். வேணும்னால் நீங்க அங்கே ஒரு ஸ்டூடியோவை வைச்சுக்கலாம்...''

'பைத்தியம்' என்பது போல அவளைப் பார்த்தான்.

"எவ்வளவு ஈஸியாய் சொல்லிட்டாய்! எத்தனை குறைவாய் எடைப்போட்டுட்டாய் என்னைப் பற்றி! அது என்னைக் காப்பாற்றிக்கணுமேன்னு துடிப்போடு நீ பண்ற தவறா? அல்லது என்னை ஒரு சாதாரணப் போட் டோக்கள் எடுக்கிற அமெச்சூர் போட்டோகிராப்பர் களுடன் சேர்த்து எண்ணிக்கிட்டாயா?"- வருத்தமாய் கேட்டான்.

அன்பாய் கன்னத்தை வருடிவிட்டுப் பளீரென்று ஒன்று கொடுத்தாற் போலிருந்தது மஞ்சுளாவுக்கு. சட்டென்று சமாளித்துக் கொண்டு—

"ரூபவதி மயிரிழையில் சாவிலிருந்து தப்பித்தாள். சுவர்ணா கொடுமையாய் கொல்லப்பட்டாள். இன்னும் எவ்வளவு பேரோ? இந்த ஆபத்தெல்லாம் உங்களையும் சூழ்ந்துக்காதுன்னு எப்படி நம்பறது?"

"இருக்கலாம். இந்தப் பந்தயத்தில் நானும் சாகலாம். ஆனாலும் என்னால் பின்வாங்க முடியாது..."- திட்டமாய் வந்தன அவனது வார்த்தைகள்.

"உங்களுக்கு உங்க உயிர் மேல் அக்கறையில்லா மலிருக்கலாம். ஆனால் உங்களையே நம்பிட்டிருக்கிற எனக்கு..."

ராஜசேகர் பதில் பேசவில்லை.

அதை வேறு விதமாகப் புரிந்துக் கொண்ட மஞ்சுளா வுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"உங்க வரைக்குமே நீங்க பார்த்துக்கிறதாயிருந்தால்- உங்களை நம்பினவங்களை நீங்க பொருட்படுத்தாமல் போனால் உங்களுக்குக் காதல், கல்யாணம், இதெல்லாம் தேவையேயில்லை....."

மஞ்சுளா அப்படிப் பேசுவாள் என்று எதிர்பார்த்தி ராத ராஜசேகர் அடியுண்ட பறவையைப் போல துடி துடித்து விட்டான்.

இதைச் சொல்லி அவன் மனதைப் புண்படுத்தி விட்டேனோ என்று ஒரு விநாடி துணுக்குற்றாள் மஞ்சுளா. ஆனாலும் அலட்சியமாய் எடுத்துக் கொண்டாள்.

"நல்லதோ கெட்டதோ தெரியாது. இந்தப் பந்தயத்தில் கழுத்து வரைக்கும் புதையுண்டு போயிட்டேன். இப்போது நான் பின் வாங்கினாலும் சித்தரஞ்சன் என்னை விட்டுடுவான்னு நம்பிக்கையில்லை எனக்கு. கோழையைப் போல கஷ்டம் வந்துடுத்தேன்னு பயந்து ஓட முடியாது என்னால். வாழ்வா சாவான்னு தெரிஞ்சுடணும். என்னை அவமானப்படுத்தி, என் சக்தி சாமர்த்தியங்களை இளப்பமாய் பழித்த சித்தரஞ்சனை விட்டுட்டாலும், என் உயிருக்குயிரான தங்கையை நாசமாக்க முயன்ற அந்தக் கயவனை மட்டும் என்னால் விடமுடியாது. ராட்சசனாய், அப்பாவியான சுவர்ணாவைக் கொன்ற அவனை விடவே முடியாது. இதையெல்லாம் மறந்துட்டாலும் விளம்பர உலகுக்கே ஒரு கறையானைப் போன்ற அவனை மட்டும் விடவே கூடாது. நான் ஜெயித்து, அவனைத் தோற்கடித்துத் தொழிலுக்கு நல்ல காலம் பிறக்கணும்னு இருக்கு..."- ஆவேசத்தால் நடுங்கினான் அவன்.

"அப்படீன்னால் என் சங்கதி?"

"நீ என்னைப் புரிஞ்சிப்பாய்னு நினைத்தேன். புரிஞ்சுக்காவிட்டாலும் போகட்டும். என்னை சாதாரண மனுஷனாய் நினைச்சுட்டாய் அதான் என் வருத்தம். ஆயிரத்தில் ஒருவனாய் இருக்கணும்னு இல்லை. எனக்கு எல்லோரையும் போல படிச்சுட்டு, வேலை பார்த்துண்டு, கல்யாணம் பண்ணிண்டு, குழந்தைகளைப் பெற்றெடுத்து, அவங்களை வளர்த்து திரும்பவும் அவங்களைப் படிக்க வைச்சு— இப்படிப்பட்ட சர்வ சாதாரணமான வாழ்க்கையை நான் விரும்பினால் - இந்த ரிஸ்க், இவ்வளவு கஷ்டம் இதெல்லாம் படத்தேவையில்லை. எதையோ சாதிக்கணும் - நாலுபேர் செய்ய முடியாததை நான் செய்யணும். என் க்ரியேடிவிடியின் மூலம் விளம்பர உலகத்தில் மிக அற்புதங்களைத்

தோற்றுவிக்கணும்னு எண்ணிட்டிருக்கிற என்னை ஒரு சாதாரண ஆளாய் கணக்கிட்டு உன்னோடு வந்து ஸ்டுடியோவை வெச்சுக்கச் சொல்கிறாய்...''- ராஜசேகருக்கு வருத்தம் ஏற்பட்டது.

''உங்களுக்கு எப்பப் பார்த்தாலும் உங்க தொழில்தான் முக்கியம்னால் நான் எதுக்குப் பின்னே? காதல் எதுக்கு? கல்யாணந்தான் எதுக்கு... குட்பை! நான் வேணும்னு இருந்தால் இந்த நிமிஷமே என்னோடு புறப்படுங்க... இல்லாவிட்டால் இதுதான் நம்ப கடைசி சந்திப்பு...''

விசுக்கென்று எழுந்தாள் மஞ்சுளா.

தன்னைவிட - தன் சொல்லைவிட - தொழில்தானா முக்கியம் என்ற கோபம் பொத்துக் கொண்டு வந்தது அவளிடம்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட ராஜசேகருக்கு மூச்சே நின்றுவிட்டாற் போலிருந்தது. தன் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் அவ்வளவு முட்டாள் தனமாய் நடந்துக் கொள்வாள் என்று எதிர்பார்த்திராத ராஜசேகரின் மனோ நிலை தலைகீழாகி விட்டாற்போலிருந்தது.

''என் நிலைமை உனக்கு நன்றாய்த் தெரியும். நான் பந்தயத்தை விட்டால் கோழை என்ற பெயர் வரும். என் மதிப்பு, மரியாதை எல்லாம் காற்றில் பறந்துவிடும். கடைசியில் என் சொத்தெல்லாமும் போயிடும். இதெல்லாம் போகட்டும்னு விட்டாலும் சித்தரஞ்சனைப் போன்ற வங்களைத் தெரிஞ்சே விட்டுட்டால், அந்த என் பாவத்துக்குப் பரிகாரமே கிடையாது.

மாடல்களை அழவைச்சுட்டிருக்கிற அந்த ராட்சசனை, அவங்களை சூறையாடிட்டிருக்கிற அந்த பாஸ்டர்டை விட்டுவிட்டால், நான் வாழ்நாளெல்லாம் நிம்மதியில்லாமல் தவிக்க நேரும்...''

தன்னைக் காட்டிலும் அந்தப் பந்தயத்தில் வெற்றிப் பெறவேண்டுமென்ற நோக்கந்தான் ராஜசேகருக்கு அதிகமாயிருந்தது என்ற கோபமும், ஆபத்தை விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறானே என்ற வருத்தமும், தன் பேச்சைப் பொருட்படுத்தாமல் போனதற்கு ஆத்திரமும் மஞ்சுளாவை அலைக்கழித்தன.

அவள் வேகமாய் இரண்டடிகள் எடுத்து வைத்தாள்.

அதற்குள் போன் மணியடித்தது.

விருட்டென்று போனை எடுத்த ராஜசேகர் போனிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு படமெடுத்தாடும் பாம்பானான். போனின் மேலிருந்த அவன் கை விரல்கள் முறுக்கேறிக் கொண்டன. ஆவேசத்தால் தடுமாறினான்.

"என் பந்தயத்துக்கு ஒரு முடிவு இல்லை. என் பந்தயம் என்றுமே தீயதில்லை. அந்த வெற்றியால் தொழிலையே களங்கப்படுத்துகிற உனக்கு ஒரு அழிவில்லாத சமாதியை ஏற்படுத்திடறேன்—" என்றுச் சொல்லி விட்டு டொக்கென்று போனை வைத்து விட்டான்.

நிமிர்ந்து பார்த்தபோது மஞ்சுளா கோபமாய் போய்க் கொண்டிருந்தது தென்பட்டது.

இதயததைக் கசக்கிப் பிழிந்தாற் போலிருந்தது.

தனக்கு வேண்டியவர்களைக் கூட ஆகாதவர்களாய்ப் பண்ணுகிற சித்தரஞ்சனை சும்மா விட்டுவிடக் கூடாது.

இப்பொழுது அவனுக்குள் கோபம், வெறுப்பு, பகைமை அத்தனையும் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கின.

o o o

ராஜசேகர் கொடுத்த செக்கை ஒரு விநாடி பார்த்தான் மது. அது கிராஸ் பண்ணிய செக். சித்தரஞ்சன்தான் அதை மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர வேறு யாராலும்

முடியாது. பின்னே எதற்காக அப்படிச் சொன்னான ராஜசேகர்?

அதற்குள் ஒரு ஐடியா மின்னலாய் உதித்தது. ஆர்வத்தோடு விசிலடித்துக் கொண்டே போனை எடுத்தான். மறுமுனையிலிருந்து சித்தரஞ்சனின் குரல் கேட்டது.

"நான் மது பேசறேன்..." என்றான். சித்தரஞ்சனின் பயங்கர சிரிப்பு அலை அலையாய் போன் ரிசீவரையே உடைத்து விடும்போல பயங்கரமாய்க் கேட்டது. சட்டென்று நின்று விட்டது சிரிப்பு. "உன் பாஸை இருபத்தைந்து லட்சம் ரெடி பண்ணிக்கச் சொல்லு. கோரமண்டல் கம்பெனிக்குப் பதினைந்து லட்சங்களும், என்னோடு போட்டிருக்கிற பந்தயத்துக்குப் பத்து லட்சங்களும்! மொத்தம் இருபத்தைந்து..."

தன் பாஸ் சித்தரஞ்சனோடு தனியாய்ப் பத்து லட்சத்திற்குப் பந்தயம் போட்டிருப்பதாய் மதுவுக்கு அதுவரை தெரியாது. ஒரு விநாடி உடம்பு சிலிர்த்தது பயத்தால்.

சட்டென்று தேறிக் கொண்ட மது, "வெற்றி யார் பக்கம்னு உறுதி பண்ணிக்க இன்னும் பதினைந்து நாள் இருக்கு சும்மா சந்தோஷப்பட்டுடாதே! இப்ப ஒரு ஷாக் நியூஸ் சொல்றேன் கேட்டுக்கோ. அப்பாவியான, ஆதரவில்லாத பெண் சுவர்ணாவைக் கொல்றது ஆண்மை இல்லை. உன்னைக் கொடுமையான நஷ்டத்துக்கு ஆளாக்கப்போறேன். சாமர்த்தியம் இருந்தால் உன்னைக் காப்பாற்றிக்கோ. பாவம், உன் டைர்ஸ் விளம்பரப் படத்தை சென்சார் புட்பால் ஆடிட்டாங்க. அதாவது முக்கால்வாசி மூழ்கிப் போயிட்டாய். இரு, இரு, நடுவில் குறுக்கிடாதே! நல்ல சேதி ஒன்றையும் கேள். உன்னிடம் கொடுக்கச் சொல்லி டில்லி முகர்ஜி பத்து லட்சம் செக்கை எங்க பாஸிடம் தந்தார். உங்களிருவரின் தகராறு எதுவும் தெரியாமல் அந்தக் காரியத்தைப் பண்ணிட்டார். இப்ப அந்த செக் என்னிடம் இருக்கு. அதை இப்போது நான் சடுகுடு

ஆடவைக்கப் போறேன் பத்து நாளைக்கு. செக் கிடைக் கலைன்னு டெல்லிக்குப் போன் பண்ணுவாய். ராஜசேக ரிடம் தந்துட்டதாய் சொல்லுவார். அதை அவன் சடுகுடு ஆடவைச்சிட்டிருக்கான்னு நீ சொல்லுவாய். அவரு நம்ப மாட்டார். ஏன்னால் 'உன்னைப் போன்றவனில்லை ராஜ சேகர்' என்பார். நாலு நாள் பொறு என்பார். பொறுப் பாய். திரும்பவும் போன் பண்ணுவாய், அவங்க எங்களுக்குப் போன் பண்ணுவாங்க. 'சாரீ...மிஸ் ப்ளேஸ் ஆயிருக்கும்' என்போம். நம்பிடுவாங்க புது செக் தரச்சொல்லுவாய். பழைய செக்கின் நம்பரையும் தேதியையும் குறிப்பிட்டுட்டு அதன் கலெக்ஷனைத் தடுத்து நிறுத்திடச் சொல்லி பாங்குக்கு எழுதுவார். அவங்க சரின்னு எழுதிப்பாங்க. அதற்குப் பிறகு இன்னொரு செக் தயாராவதற்கு மூன்று நாள். மொத்தம் பத்து நாட்களுக்குக் கேஷ் உன் கைக்கு எட்டாது. பத்து லட்சத்துக்குப் பத்து நாட்களுக்கு வட்டி எவ்வளவுன்னு உனக்கு நன்றாய் தெரியும். உன் டர்ன் ஓவரின் மேல் நல்ல உதை... மாதத்துக்கு நூற்றுக்கு ரெண்டு ரூபாய் வட்டி அந்தக் கணக்குப்படி பத்து லட்சத்துக்குப் பத்து நாட்களுக்கு.....கணக்குத் தெரியுமோனோ? சொல் லட்டுமா? மறந்தே போயிட்டேன். பதினோறாவது நாள் இன்னொரு உதைக்குக்கூட தயாராயிரு—'' என்று போனை வைத்துவிட்டான் மது.

எதுவென்றே புரியாத வெறிப்பிடித்த கோபம் சித்தரஞ்சனை அலைக்கழித்தது. மதுவின் தூண்டுதலால், சாந்தியின் ரகளையால் விளம்பரப்படம் நின்று போய் விட்டது அதற்குள் மறுபடியும் இது ஒன்று. அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. கைலாசத்தைக் கூப்பிட் டான். மூக்குக் கண்ணாடியைக் கழற்றினான். விக்கிரமைக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னான்.

34

ராஜசேகர் காதம்பரியின் வீட்டிற்குப் போனபோது இரவு 7-30மணி ஆகியிருந்தது. கேட்டைத் திறந்து கொண்டுவீட்டிற்குள்ளே போனபோது காதம்பரி தனியாய் புல்வெளியில் உட்கார்ந்திருந்தாள்.

விளக்கைப் போட்டுக் கொள்ளாததால் அவள் உருவம் மசமசவென்று தெரிந்தது. நிசப்தமாய் அவளை நோக்கி நடந்தான்.

விளம்பர உலகத்தில் தன் அழகாலும், நடிப்பாலும், அபிநயத்தாலும் புரட்சியைத் தோற்றுவித்தவளைப் போலில்லை அவளைப் பார்த்தால். சாதாரணப் புடவையில் தலைக்குக் குளித்துவிட்டு உலர்த்திக் கொண்டிருந்த கேசம் நான்கு பக்கங்களும் புரள, ஒரு சாதாரண குடும்பத் தலைவியைப் போலவும், சகலத்தையும் இழந்து விட்ட ஒருவளைப் போலவும் தென்பட்டாள்.

''லைட் போட்டுக்காமல் ஏன் இருட்டில் உட்கார்ந் திருக்கீங்க?''

''வெளிச்சத்தில் வந்து நிற்கக்கூடிய அளவுக்கு உயர்ந்த வாழ்க்கை இல்லை நம்மோடது''— அவள் குரலில் தழு தழுப்பும் சோர்வும் நன்றாய்த் தெரிந்தன.

''நான் என்றுமே அப்படி எண்ணிக்கலை. தொழிலுக்கு நான் என்றுமே துரோகம் பண்ணமாட்டேன். அதை சாக்கிட்டுண்டு அநீதியாய் ஒருநாளும் நடந்துக்கமாட்டேன் நான்''

''ஆஃப்கோர்ஸ்... ஆனால் நீங்க தொழிலுக்குப் பயன் படமாட்டீங்க''— திடமாய் சொன்னாள்.

அதைக் கேட்டு வியப்படைந்தான் ராஜசேகர்.

''எனக்குப் புரியலை... எந்த தப்பும் பண்ணாதபோது பயன்படமாட்டாங்கன்னு ஏன் சொல்லணும்?''

"எந்தத் தப்பும் பண்ணாததால்தான் பயன்படமாட்டீங்க. மாராலிடின்னு பிடிச்சுட்டுத் தொங்கற உங்களைப் போன்றவங்க இந்தத் தொழில்- நாய்களின் உலகத்தில் வாழ லாயக்கில்லை. நம்ப தொழிலில் முக்கியமாய் வேண்டியது க்ரியேட்டிவிட்டி, தற்போதையச் சூழ்நிலையில் அது கூட முக்கியமில்லை. இன்று தொழிலில் ஏமாற்று, மோசடி, வஞ்சனை என்னும் மேகங்கள் மூடி மறைத்து கொண்டிருக்கின்றன. அந்த மேகங்களுக்கிடையே சிறிய தீபத்தைப் போன்றவர் நீங்க. உங்க சிறிய தீபத்தை அணைந்துடாமல் காப்பாற்றிக்கிற சக்தி உங்களுக்கு இன்னும் வரலை. காப்பாற்றுவதற்கு உங்களுக்குத் துணையாய் வேறொருத்தர் இல்லை....."

"இன்றைக்கு என்னவோ நீங்க விநோதமாய்ப் பேசறீங்க"- நிசப்தமாய், வேதாந்தியாய் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் எப்பொழுதும் போல ஜீவனில்லை.

"நீங்க இந்தப் பந்தயத்திலிருந்து மீள முடியாதா?" -தயங்கித் தயங்கிக் கேட்டுவிட்டாள்— கேட்கக்கூடாது என்றெண்ணிக் கொண்டே.

ஒரு விநாடி புரியாமல் பார்த்தான் அவளை.

"நீங்க இந்தக் கேள்வியை மனப்பூர்வமாய் கேட்டிருக்க மாட்டீங்க, இல்லையா?"

அவள் பதில் பேசவில்லை.

கழுத்திலிருந்த ஒற்றைவடச் சங்கிலியை வாயில் வைத்துக் கொண்டு யோசித்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

ராஜசேகர், "கழுத்து வரைக்கும் புதைமணலில் சிக்கிப் போயிட்டேன். இனி பின் வாங்க முடியாது. எனக்கு வேண்டியது நீங்கள்ளாம் எனக்குத் தைரியம் கொடுக்க வேண்டியது. கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, பின் வாங்கச் சொல்லி மட்டும் ஆலோசனை தர வேண்டாம்..."— ரோஷத்தால் முகம் அவனது சிவந்தது.

யார் பந்தயத்தை விடச் சொல்லி வேண்டினாலும் ராஜசேகரிடம் கோபம் பொத்துக் கொண்டு வரத் தொடங்கிற்று.

"என்னைப் புரிஞ்சுக்க முயற்சிப்பண்ணுங்க. மஞ்சுளாவுக்குக் கூட இது பிடிக்கலை. கல்யாணம் பண்ணிண்டு சுகமாய்..."

"நிறுத்துங்க மேடம். பயமுறுத்தி, மிரட்டி, என்னை என் முயற்சியிலிருந்து மீண்டு வரப் பண்ணாதீங்க... இல்லாவிட்டால் சொல்லிடுங்க, போயிடறேன்..." என்று எழுந்திருந்தான்.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

அப்பொழுதுதான் அவள் கண்களைப் பார்த்தான் ராஜசேகர், தீனமாய், சூனியமாய் இருந்த அவள் பார்வையும்— அதைச் சுற்றிலும் பொங்கி வந்து கொண்டிருந்த கண்ணீரையும். மனம் உடைந்து போனான், அவளை அந்த நிலையில் பார்த்து விட்டு. அவளிடம் போய் நின்றான்.—" சாரீ... வெரீசாரீ... என் ஆவேசத்தைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே! அதனால்தான் அந்த மாதிரி... உங்கள் மேல் எனக்கிருக்கும் மதிப்பிற்கும் அன்பிற்கும் வேறு விஷயமாயிருந்தால் உங்க பேச்சைத் தட்டியிருக்க மாட்டேன். ஆனால்..."

"என்மேல் உங்களுக்கு இருப்பது கௌரவமும் அன்புந் தானா?"— கேட்டாள் வருத்தத்தோடு.

அவள் இன்னும் தன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாள் என்று புரியாமல் குழப்பமடைந்தான்.

"உங்களுக்குத் தீங்கிழைக்கப் போகிறான் அந்தக் கயவன். அதான் பயப்படுகிறேன். ஆனால்... கோ அஹெட் - உங்களைப் போன்றவங்களால்தான் இந்தத் தொழிலுக்கே நல்ல பேர் வரணும். என்னுடைய ஒரு ஆசையை நிறைவேற்றி வைப்பீங்களா?" என்றாள் ஆர்வத்தோடு அவனைப் பார்த்தபடி.

விநோதமாய்ப் பார்த்தான் காதம்பரியை. என்றுமே மிகத் துணிச்சலாயும் அழுத்தமாயும் இருக்கும் இவள் இன்று ஏன் இப்படிப் பேசுகிறாள்? ஏன் கோழையாய் இருக்கிறாள்?

"சொல்லுங்க. அது ஒன்றைத்தவிர வேறெதுவாய் இருந்தாலும் நிறைவேற்றுகிறேன்" என்று அவளை மதிப்போடு பார்த்தான்.

"அந்த நம்பிக்கையோடு தான் உங்கள் தலை மேல் பொறுப்பான ஒரு பாரத்தை வைக்கப்போறேன்..."

"சொல்லுங்க, என்ன?"- ஆர்வத்தோடு கேட்டான்.

"இப்போது இல்லை. அப்புறமாய் தெரியும் உங்களுக்கே" என்றாள்.

"நீங்க எதுக்கோ இன்றைக்கு விசாரமாய், அதிருப்தியாய் தென்படறீங்க."- அவளை அந்த நிலைமையில் என்றுமே பார்த்திராத ராஜசேகர் வருத்தத்தோடு சொன்னான்.

"எங்கேயோ பிறந்தேன்... எங்கேயோ வளர்ந்தேன்... எவ்வளவோ சம்பாதித்துட்டேன். பெயர், புகழ்... ஆனால்... ஆனால் "- அவள் தொண்டையை ஏதோ அடைத்தாற் போலிருந்தது.

ராஜசேகர் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"எல்லாவற்றையும் அனுபவிச்சுட்டேன். ஆனால் ஒரே ஒரு அதிருப்தி மட்டும் எஞ்சிநிற்குது. சென்ட்டிமென்ட்... ஒரு தாய் இனத்துக்கே உரிய சென்ட்டிமென்ட். அது சென்ட்டிமென்ட்டா... அல்லது என் வாழ்க்கைக்கு ஒரு தத்துவமா தெரியாது... அது என்ன தெரியுமா? தாயாக வேண்டும் என்ற ஆசை.. பெண்மைக்கே உரிய சின்ன ஆசை... தாயாவதன் மூலம் நான் பண்ணிய பாவத்தையும், பயத்தையும் வருத்தத்தையும் கடைத்தேற்றிக்கலாம்னு இல்லை. கேவலம் பெண் ஜென்மத்திற்கே உரிய சாபல்யத்துக்காகத்தான்..."

"எவ்வளவோ தடவை கேட்கணும்னு நினைச்சேன், கேட்க முடியலை. .....நீங்க எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கலை?"

ஜீவனில்லாமல் சிரித்தாள். வாய் விட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் உள்ளூர அவள் அனுபவித்துக் கொண்டிருந்த வருத்தமெல்லாம் வெளிப்பட்டது.

"ஒருகாலத்தில் வெறிப்பிடிச்சு, பைத்தியமாய் சம்பாதித்தேன் இயந்திர கதியில். அப்போது டைம் இல்லை— காதலிப்பதற்கும் கல்யாணம் பண்ணிப்பதற்கும். அந்த பரபரப்பு எல்லாம் அடங்கிட்ட பிறகு திரும்பிப்பார்த்துக் கொண்டால் வயது ஏறிடுத்து. கவர்ச்சியை இழந்துட்டது, உடம்பு. வேணுங்கிற பணத்தையெல்லாம் வாங்கிண்டு, அதற்கப்புறம் நான் கெட்டவள்னு என்னை ஒதுக்கிட்டாங்க குடும்பத்தார். கொஞ்சம் மீத்துக்கிட்ட பணந்தான் தங்கிற்று. அதற்கப்புறம் என்னைக் காதலிப்பதாய் சொல்லிட்டு வந்த உண்மையான சில காதலர்களைப் பார்த்து— அலுத்துப்போய்- என் வாழ்க்கை எனக்குக் கற்றுக் கொடுத்துட்டப் பாடங்களால் அவங்களைப் பொருட்படுத்தலை. என் தனிமைக்கு ஒரு துணை அவசியங்கிற எண்ணமே வரலை. ஆண்களையே நம்பலை... அவங்கள்ளாம் கயவர்கள்னு... கொஞ்ச நாளில் எனக்கும் ஒரு நல்ல ஆள் தென்பட்டான் ஆனால் அதற்குள் விடிந்து விட்டது. அவன் என்னைப் பொருட்படுத்த முடியாத அளவுக்கு வயசு ஏறிடுத்து. எனக்கு நாற்பது. அவனுக்கு முப்பது கூட இல்லை. என் ஆசைகள் விநோதமாயும் தோணலாம். மதிப்பில்லாமலும் இருக்கலாம். ஆனால் என் அன்பில் மட்டும் உண்மை உண்டு. சின்சியாரிடி உண்டு. மாடலான என்னாலும் காதலிக்க முடியும்னும், காதலித்தேன்னும் நாலு பேருக்குப் பெருமையாய்ச் சொல்லிக்கணுங்கிற வெறிப்பிடித்த ஆசை அது. பலிக்காவிட்டாலும், சொல்லிண்டாவது திருப்தியடையலாமேங்கிற பைத்தியக்கார ஆசை. ஆனால் என் காதலை

அநீதின்னு சொல்லத் தொடங்கிடுவாங்க. காதலுக்கு இரு உள்ளம் ஒன்று கூடுவதுதான் முக்கியம்னு எனக்குத் தெரியும், வயசுன்னு நான் நினைக்கலை. என் வயசுக்கும் அது தெரியலை. எது எப்படியானால் என்ன, என் காதல் தோல்வியடைஞ்சுடுத்து. அவனை விட்டுட்டு இன்னொருத்தனைப் பண்ணிக்க என் மனசு உடன்படலை. வயசைக் கொன்று கொண்டு கல்யாணம் பண்ணிக் கலாம்னுதான் நினைச்சேன்—குறைந்தபட்சம் தாயாக வாவது ஆவோமேங்கிற ஆசையால்... ஆனால் காலம் கடந்துடுத்து. என் வயிறு காய்க்க முடியாத அளவுக்குக் காய்ந்து போயிடுத்தாம். அது தெரிஞ்சப்புறம் இனி கல்யாணம் எதுக்குன்னு தோணிச்சு. கடைசியில் முதிர்ச்சி யடைந்த கன்னியாகவே நின்னுப்போய்ட்டேன். ஆனாலும் தாயாகணுங்கிற பெண்மையின் ஆசை என்னை ஒவ்வொரு நிமிஷமும் வேட்டையாடிட்டே தான் இருக்கு....." என்று பெருமூச்சு விட்டுவிட்டு—" ஆனாலும் நாலு பேர் நடந்த நடுவழியில் பூஞ்செடி எப்படி முளைக்கும்? என் பைத்தியக் காரத்தனந்தானே! அதனால்தான் காதலனாய் எண்ணிய அவனையே இப்பொழுது மகனாய் எண்ணிக்கிறேன். விநோதமாய் இல்லை??" என்று நிறுத்தினாள்.

அவள் மௌனமாய் தேம்பிக் கொண்டிருந்தாள். அங்கு சூழ்ந்திருந்த மயான நிசப்தத்திற்கிடையே அவள் தேம்பல் சப்தம் இதயத்தைக் கசக்கிப் பிழியும்படியாய் இருந்தது.

ராஜசேகர் எழுந்து வந்தான். அவள் கண்ணீரைத் தன் விரலால் சுண்டியெறிந்து விட்டு ஆறுதலாய்த் தலையைக் கோதி விட்டான். காதம்பரி எழுந்து நின்று கண்களை மூடிக் கொண்டு ராஜசேகரின் நெற்றியில் ஒரு முத்தம் கொடுத்து விட்டு திரும்பத் தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள். புரிந்தும் புரியாததுமான குழப்பத்திலிருந்து அவன் வெகு நேரம் வரையிலும் பேசவேயில்லை. கொஞ்ச

நேரத்தில் சுதாரித்துக் கொண்டவள் நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்

மஞ்சுளா போய்விட்ட விஷயத்தைச் சொன்னான். அவன்-அவனுள் மஞ்சுளா போனதால் ஏற்பட்ட துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

காதம்பரி தனக்குள் எண்ணிக் கொண்டாள் — தான் ஒருவருக்காகத் தவித்தால் அந்த ஒருவர் வேறொருவருக் காகத் தவிக்கிறார்—அந்த வேறொருவர் எதற்காகவோ தவிக்கிறார்! என்ன விநோதமானது வாழ்க்கை!

அவ்வளவு வருத்தத்திலும் சட்டென்று தேறிக் கொண் டாள், காதம்பரி.

''நம்ப பெர்சனல் விஷயங்கள் எல்லாம் அப்புறம்..... தரங்கிணி கிடைத்தாளா?'' — கேட்டாள்.

''கிடைக்கிறாப்போல கிடைத்துத் தப்பிப் போயிட் டாள்'' என்று நடந்ததைச் சொன்னான்.

காதம்பரி பெருமூச்சு விட்டாள்.

''நீங்க ஒண்ணும் நம்பிக்கை இழக்கவேண்டாம். கடைசி வரைக்கும் போராடுங்க. உங்க முயற்சியிலும் உறுதியிலும் நேர்மை இருக்கு. கடைசி வெற்றி உங்களுது தான்'' என்றாள்.

அவளை நன்றியோடு பார்த்தான் அவன்.

''முதல்லேயே சுமீதாவை உங்க ப்ரொஜக்டுக்கு மாட லாய் எடுத்துக்கிட்டீங்க. அப்படியிருந்தும் கூட விளம்பரம் ஏன் தந்தீங்க?''

ராஜசேகருக்கு வியப்பாயிருந்தது— அவள் இன்னும் இந்த விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொண்டிருந்ததற்கு. அப்படியானால் தன் ஒவ்வொரு நடவடிக்கையைப் பற்றியும் அத்தனை நுட்பமாய் யோசித்துப் பார்க் கிறாளா?

"சுமீதாவை மாடலாய் எடுத்துக்கிட்டது சித்த ரஞ்சனுக்குத் தெரிஞ்சுடக்கூடாதுங்கற உத்தேசத்தோடு தான் இருபத்தைந்தாயிரம் செலவழித்து விளம்பரம் கொடுத்து அவன் கவனத்தைத் திருப்ப முயன்றேன். ஆனால் போட்டோக்களைத் தாறுமாறாய் மாற்றி பெரிய உதை கொடுத்துட்டான் அந்த அயோக்கியன்"...

"சித்தரஞ்சனின் கவனத்தைத் திருப்புவதற்காகவே இருபத்தைந்தாயிரம் செலவழிச்சது உங்க சொந்த விஷயம் உங்க வியாபார தந்திரம். அதைப் பற்றி நான் கேட்கலை. ஆனால்... அந்த விளம்பரத்தைப் பார்த்துட்டு நிறையப் பெண்கள் ஆசையாய் அப்ளை பண்ணி எதிர்பார்த்திருப்பாங்க. அவங்க மனசில் ஆசையைக் கிளப்பின நீங்க அதுக்கு என்ன பதில் சொல்றீங்க?" —கொஞ்சம் கடுமையாகவே கேட்டாள்.

"நான் கேட்டது ஃபென்டாஸ்டிக் ஸ்டன்னிங் பியூடியை. அப்படிப்பட்டவங்க வெகு அரிது. நிஜமாகவே அப்படிப்பட்டவங்க அப்ளை பண்ணி, என்னை வந்து சந்தித்திருந்தாங்கன்னால் லட்சம் தந்து அவங்களை மாடலாய் எடுத்துக்க நான் தயார்தான்..."

அதைக் கேட்டு திருப்தியடைந்தாள் காதம்பரி.

ராஜசேகர் போகக் கிளம்பினான். இன்னும் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கும்படி சொல்ல விரும்பினாள். ஆனால் அவளால் சொல்ல முடியவில்லை. அவன் போய் விட்டான். அவன் போன திசையையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் அவள்.

சரியாய் அதே சமயத்தில் சித்தரஞ்சனோடு வாதாடிக் கொண்டிருந்தான் விக்கிரம்.

"நீங்க சொன்னபடியே நாடகம் ஆடிட்டிருக்கேன். ஆட வெச்சுட்டிருக்கேன். இருபத்தைந்து லட்சம் தரத் துக்குத் தயாராய் இருக்கேன். ஆனால் என் காரியத்துக்கு நீங்க எந்த முயற்சியும் பண்றதாய் தெரியலை. என்னைத்

தேடிட்டு அதற்குள் இண்டர்போல் போலீசுங்க (அனைத் துலக போலீஸ்) வெகு தீவிரமாய் இந்தியா எல்லையைத் தாண்டி வந்துட்டாங்க. கொஞ்சங் கொஞ்சமாய் பரிசோதிச்சுண்டே நெருங்கி வந்துட்டிருக்காங்க- வேட்டை நாயைப் போல. நான் அதிக நரள் இங்கே இருப்பது நல்லதில்லை. நான் வேறு நாட்டுக்கு ஓடிப் போயிடணும். அதற்குள் பணத்தைத் தயார் பண்ணிக் கணும். உன் பந்தயத்தில் நீ ஜெயிக்கிற நாள் நெருங் கிடுத்து. இது எனக்கு வருத்தமாயிருக்கு. இதுக்கு நீங்க என்ன சால்ஜாப்பு சொல்லிக்கப் போறீங்க?"— சித்த ரஞ்சனையே கூர்ந்து பார்த்துக் கேட்டான்,

இண்டர் நேஷனல் கிரிமினல் விக்கிரம். அப்படிப் பட்டவன் தனக்குப் பயப்படுவான் என்று நம்பவில்லை சித்தரஞ்சன். ஆனால் விக்கிரம் முதல் முதலாய் எதிர்த்து நிற்கிறான். தானே அடங்கிப் போய் விக்கிரமின் ஆவேசத்தைத் தணிக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்பொழுது எதிர்த்து நின்றால் பந்தயத்தில் தான் தோற்றுவிட நேரும். ராஜசேகர் வென்றுவிட நேரும்.

யோசனையிலிருந்து மீண்டு செயற்கையாகப் புன்னகை ஒன்றை வீசினான் விக்கிரமைப் பார்த்து. "ஒரு வாரத்துக் குள்ளேயே உன் காரியத்தை முடிச்சுத் தந்துடறேன். பார்ட்டி எல்லாம் தயாராயிருக்கு. நல்ல ரேட் தர பார்ட்டியோடு பேசி உன் காரியத்தை செட்டில் பண்ணிடறேன். என்னை நம்பு" என்றான் தேற்றுவது போல.

அதற்குள் விக்கிரமைத் தீர்த்துக் கட்டிவிடத் திட்டம் போட்டு விட்டான் சித்தரஞ்சன்.

சித்தரஞ்சனை முற்றிலுமாய் நம்பி விடாத விக்கிரம் கூட சித்தரஞ்சன் இரட்டை வேடம் போட்டால் எதிர்த்து நிற்கத் தயாராய் இருந்தான்.

இண்டர்நேஷனல் க்ரிமினல் சார்லெஸ் சோப் ராஜுக்குச் சற்றும் சளைத்தவனில்லை விக்கிரம். அது சித்தரஞ் சனுக்குத் தெரியாது.

விக்கிரம் வெளியேறியதுமே சித்தரஞ்சனுக்குப் போன் வந்தது. போனில் கேட்ட செய்தியால் சித்தரஞ்சனின் முகத்தில் ஒரு விநாடி புன்னகை நாட்டியமாடிற்று.

உடனே பம்பாய்க்குப் போன் பண்ணினான்.

"ஹலோ! நான்தான் சித்தரஞ்சன் பேசறேன். பில்டிங் எவ்வளவு தூரம் வந்திருக்கு?"

"முழுசும் வந்துடுத்து சார்!"- மறுமுனையிலிருந்து கேட்டது.

"சீக்கிரமாய் முடிஞ்சுடணும். பொண்ணு வந்துட் டாள். பில்டிங் இன்னும் முடியலைன்னு தெரிஞ்சால் வருத்தப்படுவாள்- என் பேபி வருத்தப்பட்டால் என்னால் தாங்க முடியது. அவள் எதைக் கேட்டாலும் நொடியில் கொண்டு வந்து தந்து விடுவது எனக்கு மலையத்தனை திருப்தி. பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. இண்டர்நேஷனல் பேஷன் சென்டர்களுக்குச் சற்றும் சளைத்ததாய் இருக்கக் கூடாது... என் மகள் இந்த நாட்டுக்கே பேஷன் க்வீனாய் ஆகணும்... புரிஞ்சுதா? உன் கன்ஸ்ட்ரக்ஷன் கூட அந்த ஸ்தாயியில் இருக்கணும், சரி, வெச்சுடறேன்" சித்தரஞ்சன் போனை வைத்து விட்டான்.

பெல்லை அடித்ததுமே சித்தரஞ்சனுக்கு மிக நம்பிக் கைக்குப் பாத்திரமான வேலையாள் பூடானி வந்தான். சில விஷயங்களில் சித்தரஞ்சன் கைலாசனைக் கூட நம்ப மாட்டான். சொந்த விஷயங்களில் பூடானியைத் தான் நம்புவான்.

"பூடானி! பொண்ணு வந்துட்டாள். நாளைக் காலையில் இங்கே வந்துடுவாள். ஜாக்கிரதையாய் அழைச் சுட்டு வா. அவள் ஆபீசு பக்கம் வந்துடாமல் பார்த்

துக்கோ நாம்ப ஆடிட்டிருக்கிற ரெட்டை வேஷம் (ராஜசேகருடனும், விக்ரமுடனும்) பேபிக்குத் தெரியக் கூடாது, ஞாபகம் வெச்சுக்கோ. பேபி அவள் தாய் காலமானதிலிருந்தே உன் கையில்தான் வளர்ந்து வந்திருக் கிறாள். உன்மேல் ரொம்ப பக்தி ஜாஸ்தி பேபிக்கு. அந்த சுவாதீனத்தில் அவளை இந்தப் பக்கமாய் வராமல் பார்த்துக்கோ. எப்பப் பார்த்தாலும் அவள் கவனத்தை பேஷன் சென்டர் பில்டிங் மீதே திருப் பிட்டிரு...''

நம்பிக்கையோடு தலையாட்டி விட்டு வெளியே நடந்தான் பூடானி.

டாக்சியில் ஓட்டலை நோக்கிப் போய்க் கொண்டிருந்த விக்கிரம் ரகசியமாய் தன்னைப் பின் தொடர்ந்துக் கொண்டிருந்த சந்திரனை கவனிக்கவில்லை.

35

கல்கத்தா புறப்படுவதற்கு விமான நிலையத்திற்குக் கிளம்பினான் ராஜசேகர். மது வேகமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். பின்சீட்டில் ராஜசேகரும் கிரீஷும் உட்கார்ந்திருந்தார்கள்.

யாருமே பேசவில்லை. கார் விமான நிலையத்தில் நின்றதுமே மது விசாரணையை நோக்கி ஓடினான்.

ராஜசேகரும் கிரீஷும் லாஞ்சிலிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டார்கள்,

கொஞ்ச நேரத்தில் மது திரும்பி வந்தான். ''ப்ளைட் ஒரு மணி நேரம் லேட்டாம் சார்'' என்றான்.

தாமதம் ஏற்பட்டதற்கு ராஜசேகருக்குக் கலக்கமாய், பரபரப்பாய் இருந்தது. தான் போய்ச் சேரும் வரையிலும்

அவள் அவ்விடத்திலேயே இருந்தால் நல்லது என்று நினைத்தான்.

சரியாய் அதே சமயத்தில் டாக்சியை விட்டு இறங்கி ஓட்டலுக்குள் போய் திரும்பவும் பத்து நிமிஷங்களில் வெளியே வந்தான் விக்கிரம். திரும்பவும் டாக்சியில் ஏறிக் கொண்டான்.

சந்திரனின் மோட்டார் சைக்கிள் பின் தொடர்ந்தது.

விக்கிரம் அதற்குள் எங்கே புறப்பட்டு விட்டான் மறு படியும்...? சந்திரன் சுருசுருப்பாய் யோசித்தபடியே அவர் களுக்கு சந்தேகம் வராத வண்ணம் டாக்சியில் பின் தொடர்ந்துக் கொண்டேயிருந்தான்.

விக்கிரம் ஏறிய டாக்சி நேராய் ஏர் போர்ட்டுக்கு வந்தது. விக்கிரம் ஒரு முறை நான்கு பக்கங்களையும் பார்த்து விட்டு டாக்சியை விட்டு இறங்கி ஏர் போர்ட் டுக்குள் போனான். உடனே புக்ஷாப்பிற்குப் பக்கத்தில் போய் நின்று யாருக்கும் சந்தேகம் வராதபடி புத்தகங் களைப் புரட்டிக் கொண்டே நின்றான்.

அடுத்த இரண்டாமது நிமிஷம் சந்திரன் ஏர் போர்ட் டிற்குள் நுழைந்தான்.

நான்கு புக்கங்களையும் பார்த்தபோது கொஞ்சம் தூரத்தில் தனித்தனி சோபாவில் ராஜசேகமும் விக்கிரமும் உட்கார்ந்திருந்திருந்ததைப் பார்த்தான். ஆனாலும் அவர் களை கவனிக்காதவனைப் போல காபி ஸ்டாலை நோக்கி நடந்துச் சென்று அவ்விடத்திலேயே நின்றுக் கொண்டு விக்கிரம் தன் பார்வையிலிருந்து மீண்டு விடாமல் ஒரு கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்.

சந்திரனை மது கவனித்து விட்டான். சந்திரனின் பார்வையிலிருந்த உணர்ச்சியைப் படித்தறிந்துக் கொண் டவன் தானும் கொஞ்ச தூரத்தில் நின்று சந்திரன் கவனித்துக் கொண்டிருந்த ஆளையே பார்த்தபடி இருந் தான்.

"சார்... பனாமா கம்பெனியின் ஆஃபர்ஸ் வந்திருக்கு..." என்றான் கீழே தடுமாறி கொண்டே. யோசனையிலிருந்து மீண்ட ராஜசேகர் திடுக்கிட்டு நிமிர்ந்து கிரீஷைப் பார்த்தான்.

"அந்த ஆஃபர் உனக்குத் தரேன். உன் டேலன்ட்டை நீ ப்ரூஃப் பண்ணிக்கோ."- ஒரு விநாடி நிறுத்தி விட்டுத் திரும்பவும் சொன்னான், "அன்னமிட்டவனின் கையை வெட்டத் துணிவது மகா கொடுமை. தேவை இருக்கும் வரையிலும் பயன்படுத்திண்டு, அது தீர்ந்ததும் அந்த ஆளைப்பற்றியே கேலியாய் பேசிப்பதும், அவங்களுக்கு உலைவைப்பதுவும் கொலையை விட மிகக் கொடுமையான குற்றம். அந்த விதமான அநாகரிகமானவங்க கும்பலில் நீ சேராதே."

கிரீஷ் திடுக்கிட்டு விட்டான் பாஸின் உதாசீனத்திற்கு.

"உன்னிடம் க்ரியேடிவிடி இருக்கு. உறுதி இருக்கு. பாடுபட்டு வேலை பண்ணும் திறமை இருக்கு. நீ ஒரு நல்ல போட்டோகிராப்பர் ஆகணுங்கிற என் நம்பிக்கையைக் கெடுத்துடாதே. சித்தரஞ்சன் என்னை ஒன்றும் பண்ணிட மாட்டான், பயந்தோ அல்லது அவன் பேச்சில் மயங்கியோ அவன் பக்கமாய் சேர்ந்துண்டு உன்னைப் போன்றவங்களாலும் என்னை ஒன்றும் பண்ண முடியாது. ரூபவதி கொலை பண்ணப்பட்டிருந்தால் உன்னை மன்னிச்சிருக்க மாட்டேன். மதுவுக்கும், ரூபவதிக்கும் தெரிந்த ஸ்க்ரிப்டிலுள்ள விவரங்கள் கைலாசனிடம் போய்ச் சேர்ந்திருக்கின்றன. ரூபவதியைக் கொலை பண்ண முயற்சித்த அன்றைக்கு நடந்த ஷூட்டிங்கில் ரூபவதியின் காஸ்ட்யூம்சின் ஒரு பாகமாய் அவள் இடுப்பிலிருந்து தண்ணீருக்குள் மணி மாலை தொங்கிக் கொண்டிருந்த விவரம் தெரிந்திருந்ததால்தான் சாமர்த்தியமாய் பிளான் போட்டிருக்காங்க. மதுவின் மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. அதை அவங்களுக்கு எட்ட வைத்திருப்பது நீதான். ஏன்னால் நாம்ப எழுதற ஸ்கிர்ப்ட் நம்மைத் தவிர வேறு

யாருக்கும் புரியாது. நீ தட்டிக் கழித்தாலும் லாபமில்லை. என் வாதனையை உன்னால் மறுக்க முடியாது.''

ராஜசேகரின் வார்த்தைகள் கூர்மையாய் இருந்தன.

தன் விவகாரம் வெளிப்பட்டு விட்டதால் கிரீஷின் முகம் வெளுத்து விட்டது. வெட்கமும், பண்ணிய துரோகத்திற்கு மனம் புழுங்கியபடியும், அவமானப்பட்டுத் தலை குனிந்த படியும் இருந்த கிரீஷைப் பார்த்து ராஜசேகர் மீண்டும் சொன்னான் :

''அவங்க விவரம் கேட்டது ரூபவதியைக் கொல்வதற்காகத்தான்னு உனக்குத் தெரியாததால்தான் இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கிறாய். ஆனாலும் நீ நம்பிக்கை துரோகிதான்...''

தன்னை பயமுறுத்தி, மிரட்டி இக்காரியத்தை பண்ண வைத்த கைலாசத்தின் மீது கோபம் வந்தது கிரீஷிற்கு. அவ்வளவு துரோகம் பண்ணியும் மன்னித்து விட்டுவிட்ட ராஜசேகரின் பெருந்தன்மைக்கு மனம் கசிந்தது.

''ஏனோ தெரியாது, எந்தச் சின்னத் தப்பாயிருந்தாலும் யாரையுமே மன்னிக்க முடியாத என்னால் உன்னை மன்னிக்க முடிகிறது. அதுக்கு உன் டேலென்ட் காரணமாக இருக்கலாம்.''

பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு இரு கைகளையும் கூப்பி மன்னிப்பு வேண்டினான் கிரீஷ்— சுற்றிலுமிருந்தவர்கள் பார்க்கிறார்களே என்று கூடப் பொருட்படுத்தாமல்.

கிரீஷின் பச்சாதாபத்தில் நேர்மை தெரிந்தது ராஜசேகருக்கு.

''இனிமேலாவது ஜாக்கிரதையாக நேர்மையாக இரு. பனாமா கம்பெனியின் விளம்பரப் படத்தை நீயே தனியாய் பண்ணிக்கோ...'' என்றான் ராஜசேகர் கைக் கடியாரத்தை பார்த்துக் கொண்டே..

கிரீஷ் நன்றியோடு பார்த்தபடி, "என் முதல்முயற்சிக்கு உங்க ஆலோசனையும் உதவியும் வேணும் சார்" என்றான் கெஞ்சினாற் போல.

"மாடலிங் பண்றேன்னு வரவங்களை ஒரேபார்வையில் அவங்களால் உதவ முடியுமா முடியாதான்னு கண்டுப் பிடிச்சுடத் தெரியணும். அது அகம்பாவமாக இருக்கக் கூடாது. டெஸ்ட் ஷாட்ஸ் (போட்டோ ஜெனிக்கா இல்லையா என்று தெரிந்துக் கொள்வதற்காக எடுக்கும் போட்டோக்கள்) செக் பண்ணாமல் யாரையும் அனுமதிக் கக்கூடாது. ஒவ்வொரு தொழிலாளியோடும் போட்டோ கிராப்பர் ஒத்துழைக்கணும். ரோடீனாய் வேலை பண்ணக் கூடாது. வேலை தொடங்கியதிலிருந்து டியர்ஷீட்ஸ் (ஃபைனல் டிஸைன்ஸ்) வரையிலும் ஒவ்வொன்றையும் ஜாக்கிரத்தையாய் கவனித்து வரவேண்டும். எல்லா வற்றையும் விட காம்பிடீடிவ் ஜீல் இருக்கணும். **Woman shouid be the object of Beauty, not sex**. இதை மறந்து விட்டால் சீப்பாகி விடுவோம். அத்துடன் அது சரிந்து விட காரணமாயிடும். பொருளைப் பொறுத்து மாடல்களை செலக்ட் பண்ணிக்கணும். ப்ரொபஷனல் மாடலுக்கு அழகோடு கூட அபிநயமும் வர வேண்டும். கிளாமர் மாடல் அழகாய் இருந்தால் போதுமானது... அந்தப் பொருளை எந்த கிளாஸ் ஜனங்களுக்கு விற்க விரும்பு கிறாங்கன்னு தெரியணும். அந்த ஜனங்களின் டேஸ்ட், பழக்கங்ள், நாகரிகங்கள் இதையெல்லாம் தெரிஞ்சுண்டு அவங்களைக் கவரும் விதத்தில் நம்ப வேலை இருக்கணும். தேவையானால் நம்ப க்ளைண்ட்டுக்கே ஆலோசனை தரக் கூடிய அளவுக்கு தைரியம் இருக்கணும். இதுக்கு ஒரு உதாரணம் சொல்றேன். ஒரு கம்பெனி லிப்ஸ்டிக் தயாரிச்சுது. அதன் பேர் "கிஸ் அண்ட் கில்." நான் அந்த பேர் வேண்டாம்னு சொன்னேன் என்னை வேலையில் இருந்து நீக்கிட்டாங்க. அதற்கப்புறம் அது ரிலீசாகி தோல்வியடைஞ்சுது. ஏன்னு நினைக்கிறாய்?..." - நிறுத்திக் கேட்டான் ராஜசேகர்.

கிரீஷ் புரியாமல் விழித்தான்.

''லிப்ஸ்டிக் பயன்படுத்துவது பெண்கள் - முக்கியமாய் இளம் பெண்கள். அந்த லிப்ஸ்டிக் வேணும்னால் அதன் பேரைச் சொல்லிக் கேட்கணும். எந்தப் பெண்ணாலாவது 'கிஸ் அண்ட் கில்' என்று சொல்ல முடியுமா?' என்னை முத்தமிட்டுட்டுக் கொன்று விடு'ன்னு சொல்ல முடியுமா? சங்கடமாயும் வெட்கமாயும் இராதா? அதனால்தான் தோற்றுவிட்டது. அப்படிப்பட்டவங்களுக்கும் வேலை பண்ணினால் நமக்கும் கெட்டப் பேர் வந்துடும். பணத்துக்காக அப்படிப்பட்டதையெல்லாம் ஒப்புக்கொண்டு விடக் கூடாது. முக்கியமாய் விற்பனையாளர்களின் நம்பிக்கைகளையும், சென்டிமென்ட்களையும் வீழ்த்திவிடக்கூடாது. மாறுபடும் ஜனங்களின் டேஸ்ட்டை கவனிச்சுட்டு வரணும்...''

தான் பூனா இன்ஸ்டிடியூட்டில் படித்த தியோரடிகல் அறிவு ராஜசேகருக்கு முன்னால் கொஞ்சமும் பயன்படாது என்று தோன்றிற்று கிரீஷிற்கு.

அதற்குள் ஏர்போர்ட்டில் சந்தடி தொடங்கி விட்டது.

மது ஓட்டமாய் வந்து, ''ப்ளைட்டுக்கு நேரமாச்சு சார்'' என்றான்.

ராஜசேகர் எழுந்திருந்தான்.

''கிரீஷ்! பனாமா பிளேடால் சவரம் பண்ணிண்டால் பெண்கள் பின் தொடர்ந்து சுற்றத் தொடங்கிடு வாங்கன்னு முட்டாளாய் எடுத்துடாதே... எலிகென்ட்டாய் இருக்கணும்... மைண்ட் இட்'' என்று நகர்ந்தான்

செக்யூரிட்டரி செக்கை நோக்கி நடந்துக் கொண்டிருந்த ராஜசேகரை நன்றியோடு பார்த்தான் கிரீஷ்.

'தரங்கிணியோடு திரும்பி வர வேண்டும் அவன்' என்று மனதிற்குள் வாழ்த்தினான் மது.

அடுத்த பத்தாவது நிமிஷம் ராஜசேகர் ஏறிய ப்ளைட் மேலே ஏறிற்று.

விக்கிரமின் ரகசியத்தை அதற்குள் கண்டுப்பிடித்து விட்ட சந்திரன் அவசரமாய் ஓடிவந்தான். அதற்குள் தாமதமாகி விட்டது.

வருத்தத்தோடு தலையிலடித்துக் கொண்டான் சந்திரன், போய்க் கொண்டிருந்த ப்ளைட்டையே பார்த்து.

ஒரு பத்து நிமிஷம் ராஜசேகர் தாமதித்திருந்தாலோ அல்லது பத்து நிமிஷத்திற்கு முன்னாடியே சந்திரனுக்கு ரகசியம் தெரிந்துப் போயிருந்தாலோ சித்தரஞ்சனின் நாடகம் ராஜசேகருக்குத் தெரிந்து போயிருக்குமே என்றெண்ணி வருந்தினான்.

36

கல்கத்தாவில் ப்ளைட் இறங்கியதுமே ராஜசேகர் நேராய் ஓபராய் ஓட்டலுக்குப் போனான். தரங்கிணி கிடைக்கப் போகிறாள் என்ற பரபரப்பு நிமிடத்திற்கு நிமிடம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது.

பரபரப்புடன் டாக்சியை விட்டிறங்கி, ஓட்டலை நோக்கி நடந்தான். கேட்டிற்கருகில் இருந்த போலீசார் விடுவிடென்று வந்த ராஜசேகரை தாட்சணியம் இல்லாமல் தடுத்து விட்டார்கள். அங்கே போலீசார் ஏன் இருந்தார்கள் என்றோ, தன்னை எதற்காகத் தடுத்துவிட்டார்கள் என்றோ, ஓட்டல் ஆளரவமில்லாமல் ஏன் இருந்தது என்றோ ஒரு விநாடி புரியவில்லை ராஜசேகருக்கு.

"என்னவாச்சு?" என்று கேட்டான் கோபத்தை அடக்கிக் கொண்டு.

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் இந்த ஓட்டலில் ஒரு கொலை நடந்தது. ஒரு பெண்ணைக்

கொடுமையாய் ரேப் பண்ணிக் கொன்னுட்டாங்க. அதனால் உள்ளே லாட்ஜில் இருக்கிறவங்களை விசாரணை பண்ணிட்டிருக்காங்க. அதனால் உள்ளேயிருந்து வெளியேயும், வெளியேயிருந்து உள்ளேயும் யாரும் போகக் கூடாது'' என்றனர் போலீஸார்.

இனம் புரியாத ஆத்திரமும், கோபமும் வந்தன ராஜசேகருக்கு.

செய்வதறியாது தெருவில் இறங்கி நடந்தான். என்ன பண்ணுவதென்று புரியவில்லை. கொலையுண்டது யாரோ தெரியவில்லை. தரங்கிணியா? ஒரு விநாடி திக்கென்றது. அதற்குள் சுதாரித்துக் கொண்டு பரபரப்புடன் யோசிக்கத் தொடங்கினான்.

ஏர்போர்ட்டில் இறங்கியதுமே ஓட்டலுக்குப் போன் பண்ணியபோது எந்த பதிலும் கிடைக்கவில்லை. ஒருக்கால் இதனால்தான் போலிருந்தது. முதலில் இந்த ஓட்டலில் தான் தரங்கிணி இருக்கிறாளா இல்லையா என்றே தெரியவில்லை.

போலீசார் எப்பொழுது உள்ளே அனுமதிப்பார்களோ தெரியவில்லை.

அப்பொழுது இரவு பதினோறு மணி. வேறு வழியில்லாமல் ஓபராய் ஓட்டலுக்கு எதிரிலிருந்து வேறொரு சிறிய ஓட்டலில் அறை எடுத்துக் கொண்டான்.

அவன் அறையில் உட்கார்ந்து ஜன்னல் வழியாய் பார்த்தபோது ஓபராய் நன்றாய்த் தென்பட்டது. இரவெல்லாம் ஒரு விநாடி கூடக் கண்ணயராமல் அப்படியே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். போலீசார் எப்பொழுது போகிறார்களோ அப்பொழுது அங்கு போய்ச் சேர வேண்டும் என்று காத்திருந்தான்.

அதற்குள் அவனுக்கு அசதி வந்து சேர்ந்து விட்டது. சரியான நேரத்திற்கு உணவு இல்லை. டென்ஷன் வேறு.

தரங்கிணி கிடைப்பாளா? கிடைத்தாலும் தன்னிடம் வேலை பண்ண ஒப்புக்கொள்வாளா? அவள் இந்தியாவுக்கு வரவேண்டிய காரணந்தான் என்ன? இந்தியாவில் உறவுக் காரர்கள் யாருமே இல்லை என்றாற்போல ஓட்டலில் ஏன் தங்கினாள்?

o o o

மதுவுக்கு மிக எரிச்சலாயிருந்தது. பக்கத்திலேயே சந்திரனும் இருந்தான். சந்திரன் கண்டுப்பிடித்த ரகசியத் தைத் தம் பாஸிற்குச் சொல்ல முடியாமல் போய் விட்டதே என்ற வருத்தம் இருவரிடமும் குடிக்கொண்டிருந்தன. போனில் தெரியப்படுத்தலாம் என்றாலோ, கல்கத்தாவுக்குப் போவதாய் தெரிந்ததே தவிர கல்கத்தாவில் எங்கே தங்கப் போகிறான் என்று தெரியாது. எப்பொழுது திரும்புவான் என்றும் தெரியாது. எப்படி?... எப்படி?... இப்பொழுது பண்ணக்கூடியது ஒன்றே ஒன்றுதான். விக்கிரமின் நட வடிக்கைகளை முற்றிலும் சோதித்து, அவனால் ஆபத்து மேலும் அதிகமானால் தாக்கச் சித்தமாயிருப்பது ஒன்று தான். மதுவின் ரத்தம் கொதித்தது. பாவபுண்ணியங்களைப் பற்றி யோசிக்கும் நிலைமை எப்பொழுதோ தாண்டி விட்டது.

சந்திரனின் கவனமெல்லாம் விக்கிரமின் கோடவுனின் மீதே இருந்தது. அதை எப்படியாவது சாட்சியோடு கூட போலீசின் கையில் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும்.

எப்படி? எப்படி?

இந்த ப்ராஜெக்ட் தொடங்கப்படுவதற்கு முன்பே ராஜசேகர் அவனிடம் ஒரு ஃபைலைத் தந்து அதை நன்றாய் படித்துப் புரிந்துக் கொள்ளச் சொல்லியிருந்தான். அந்த ஃபைலில் என்ன இருந்ததென்று தெரியாது. திடீரென்று அது நினைவுக்கு வரவே மது எழுந்து பீரோவைத் திறந்து அந்த பைலை எடுத்தான். நீல நிறஃபைல் அது. எடுத்து

வந்து நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டு ஃபைலைத் திறந்தான்.

சரியாய் அதே சமயத்தில் போன் வந்தது. ''ஹலோ! ராஜ். அட். பிலிம்ஸ்'' என்றான் மது.

''நான் ஜார்ஜ் பேசறேன். ராஜசேகர் இல்லையா? ரொம்ப அர்ஜன்ட். எப்படியாவது ராஜசேகரோடு பேசணும்!'' - ஜார்ஜ் குரலில் தெரிந்த பரபரப்பை மது புரிந்து கொண்டான்.

''இல்லை சார்... கல்கத்தா போயிருக்கார். கல்கத்தாவில் எங்கேயிருக்கார்னு தெரியாது.''

ஜார்ஜுக்கு டில்லியில் தரங்கிணி என்று தவறாய் புரிந்துக் கொண்டு விட்ட தேவி சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. எஸ்ப்ளனேட்... ஓபராய் ஓட்டல்..... ஆனால் அந்த விஷயத்தை மதுவுக்குச் சொல்ல வேண்டிய தேவையில்லாததால் போனை வைத்து விட்டான்.

ராஜசேகர் இருந்த இடத்தைப் பற்றிய விவரம் மது வுக்கு வெகு அண்மையில் வந்து விட்டுத் தப்பிப் போய் விட்டது.

ஒருவர் தேவை மற்றொருவருக்குத் தெரியாது அதற்குள் இன்னொரு போன் வந்தது. அது ராம்பூபானிட மிருந்து. ''நான் மூன்று லொகேஷன்களை செலெக்ட் பண்ணிருக்கேன். ரொம்ப நேர்த்தியான இடம்...''

''எங்கெங்கே?''-மது பரபரப்போடு கேட்டான். அந்த போன் ராஜசேகரின் பெர்சனல் போன். மேலும் டைரக்ட் போன். அதனால்தான் போனில் பேசமுடிந்தது மதுவால், அத்துடன் அப்பொழுது ஆபீசில் யாருமே இல்லை. டெலி போன் ஆபரேட்டர் கூட இல்லை.

''ஒன்று நெல்லூருக்கு பத்துமைல் தூரத்திலுள்ள காந்திவனம். இன்னொன்று கன்யாகுமரிக்குப் பக்கத்தில்.

மற்றொன்று திருநெல்வேலிக்குப் பத்துமைல் தூரத்தில் இருக்கு...!''

''வெரிகுட்! உடனே அந்த லொகேஷன்ஸில் ஷுட்டிங் குக்காக பர்மிஷன் வாங்கிக்கோ. நீ நகரத்துக்குள் வர வேண்டாம். அதுவரை ஒரு காரியம் பண்ணு. மதுரையில் அம்மன் சன்னிதி கோவில் வீதியில் இருக்கிற மீனாட்சி ஓட்டலில் தங்கியிரு. வெளியே சுற்றாதே. கிரணை உன்னோடு தொடர்பு கொள்ளும்படி வைச்சுக்கொள். பை தி பை கிரண் விவரம் ஏதாவது தெரிஞ்சுதா?''

''அவன் கண்டுப்பிடித்த பெண்ணின் தாய் தந்தையரிட மிருந்து பர்மிஷன் வாங்கிக்கிட்டானாம். மதுரை கல்லூரியில் இன்னொரு அழகானப் பெண்ணைத் தேர்ந் தெடுத்திருக்கானாம். அந்த விவரம் இன்னும் தெரியலை. அதே போல இன்னும் ரெண்டு கிராமங்களில் வேறு ரெண்டு பெண்களையும் தேடிப் பிடிச்சிருக்கான். எல்லோரையும் விட முதலில் பார்த்த பொண்ணுக்குத்தான் நல்ல உடற்கட்டு இருக்காம். அவள் உயரம் எவ்வளவு தெரியுமா 5-9 ஆம். பெயர் தரங்கிணியாம்.''

திடுக்கிட்டான் மது அதைக் கேட்டு.

தரங்கிணி... அதே உயரம்! பின்னே கல்கத்தாவில் உள்ள தரங்கிணி? ஒருத்திதானா அல்லது இரண்டு ஆளா?

''ஒரு காரியம் பண்ணு. சீக்கிரமாய் அந்த நாலு பெண் களிடமிருந்தும் பர்மிஷன் வாங்கிக்கோ. அவங்களை அவங்க பெற்றோர்களுடன் அழைச்சுட்டு வந்து ஓட்டல் மீனாட்சியில் வெச்சுக்கோ.இப்பவாவது உன் பலவீனத்தை அடக்கி வைச்சுக்கோ. அந்த நால்வருக்கும் நல்ல ட்ரைனிங் கொடு. இவங்க மெயின் மாடல்கள் இல்லையாதலால் பெரிய டிரைனிங்கெல்லாம் தேவையில்லை. கேமிரா பயத்தைப் போக்கடிச்சுட்டால் போதும். ஷுட்டிங்கில் டேக்ஸ் எடுத்துக்காமலிருந்தால் போதும். அவங்க ஷுட்டிங்கில் தொல்லை தந்தால் பாஸுக்குக் கோபம்

வந்துடும். இனி நீ போன் பண்ணாதே. நானே பண்றேன். பாஸ் தேதியை நிர்ணயித்ததுமே நீங்க என்று எங்கே இருக்கணும்னு தெரியப்படுத்தறேன்... ஓ. கே!''- போனை வைத்து விட்டான் மது

லொகேஷன்ஸ் ப்ராப்ளம் முடிவாகிவிட்டது. பின்ணணி மாடல்கள் கிடைத்து விட்டார்கள். இனி கிடைக்க வேண்டியது தரங்கிணிதான். பின்னே அந்த தரங்கிணி யார்? சந்திரன் கண்டு பிடித்த விஷயங்களையும்- பாரீஸ் தரங்கிணியையும் - கிராமத்து தரங்கிணியையும் ஒப்பிட்டு யோசித்துப் பார்த்தால் ஏதாவது கிடைக்கும் என்று தோன்றிற்று. ஆனால் என்ன யோசித்துப் பார்த்தும் கிடைக்கவில்லை.

தலையைச் சிலிர்த்துக் கொண்டு ஃபைலைத் திறந்தான்.

o o o

மைலாப்பூர் ராதாசில்க் எம்போரியத்துக்கருகில் எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்த காதம்பரியிடம் பூடானி வந்தான். ஐந்து லட்சத்தைத் தந்தான். அதை வாங்கிக் கொண்ட காதம்பரி நேராய் லாயர் சீதாராமனின் வீட்டிற்குப் போனாள்.

இருவரும் ஏறக்குறைய நான்குமணி நேரங்கள் நீண்ட விவாதம் பண்ணிக் கொண்டார்கள். அதற்குள் தன் காரை விற்றவரிடம் ஒப்படைத்து விட்டாள்.

சரியாய் அதே சமயத்தில் கைலாசன் காதம்பரியின் வீட்டிற்குள் திருட்டு சாவியைக் கொண்டு திறந்து உள்ளே நுழைந்தான்.

காதம்பரியின் வரவுக்காகக் காத்திருந்தபடி பசித்த புலியாய் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அவனிடம் பிசாசு தாண்டவம் வெறிப்பிடித்து ஆடிக்கொண்டிருந்தது. அவ்வப்பொழுது தன் கையிலிருந்த நீண்ட கத்தியைப் பார்த்துக் கொண்டான்.

காதம்பரிக்கு மிக ஆனந்தமாயிருந்தது. அவள் வாழ்க் கையின் நோக்கம் நிறைவேறப் போகிறது. அவள் ஜென்

மத்திற்கு சாபல்யம் கிடைக்கப் போகிறது. அவள் வாழ்க்கையில் இரண்டே இரண்டு ஆனந்தங்களைத்தான் உணர்ந்திருக்கிறாள்... ஒன்று ராஜசேகர் அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபோது இரண்டாவது யாருமே பண்ணியிராத ஒரு மகத்தான காரியத்தைப் பண்ணி முடித்த இந்த நிமிஷம். சாவு தனக்காகக் காத்துக் கொண்டிருப்பது தெரியும். அதை விட்டு தொலைவிற்குப் போய் விடத் தோன்றவில்லை அவளுக்கு.

லாயர் வீட்டிற்குப் போனாள் வேலையாய்.

காதம்பரி காகிதமும் பேனாவும் எடுத்துக் கொண்டாள். நடுங்கும் கையுடன் எழுதத் தொடங்கினாள்.

37

ஃபைலின் முதல் பக்கத்தில் இந்தியாவின் விளம்பர போட்டோகிராப்பர்களின் எதிர்காலம் என்றிருந்தது. பக்கங்களைத் திருப்பினான். அதில் இவ்வாறு எழுதியிருந்தது. மது படிக்கத் தொடங்கினான்—

இப்பொழுது இந்தியன் விளம்பர பட்ஜெட் 400 கோடிகள். அது கொஞ்ச நாட்களில் 800 கோடியாகி விடும். அதில் 20 சதவீதம்—அதாவது 160 கோடிகள் விளம்பர போட்டோகிராப்பிக்கு ஒதுக்கப்படுகிறது. அதில் விளம்பர பிலிம்களுக்கு 60 சதவீதம் ஒதுக்கினால் 90 கோடிகள் ஆகும். இந்தியாவிலுள்ள பிரபலமான விளம்பர போட்டோகிராப்பர்கள் சுமார் 20 பேர்கள். ஒவ்வொருத்தருக்கும் 48 கோடிகள் பிசினஸ். நான்கு கோடிகள் செலவுக்குப் போனாலும், ஒவ்வொருத்தருக்கும் சுமார் 80 லட்சங்கள் மிஞ்சும் (இது ஊகம் மட்டுமே).

விளம்பரத்தை அரசியல் கட்சிகளுக்குக் கூட பலம் வாய்ந்த ஆயுதமாய் முதல் முறையாய் நாட்டில் பயன்

படுத்தத் துணிந்தார் ராஜீவ் காந்தியும். மேற்சொன்ன 800 கோடிகளுக்கு அரசியல் கட்சிகளின் பிசினஸ் கொஞ்சம். எப்படிப் பார்த்தாலும் விளம்பர போட்டோகிராப்பர்களின் எதிர்காலம் பிரகாசமாய் இருக்கிறது. தற்சமயம் ரூரல் கன்ஸ்யூமர்ஸ் வியாபாரப் பொருட்களின் மீது கூட மோகம் காட்டுகிறார்கள். ஒரு காலத்தில் உல்லாச சாதனங்களாய் எண்ணியிருந்த டி.வி, பிரிட்ஜ், குக்கிங் கியாஸ் எல்லாம்கூட மிக முக்கியமானவைகளாகி விட்டன. வெளி நாட்டு யாத்திரிகர்களின் மூலமாயும், கள்ளக் கடத்தல் வழியாயும், வெளிநாட்டுப் பொருட்கள் இந்திய விற்பனையாளர்களின் கைகளுக்கு வருகின்றன. அவற்றின் திறமை, நாணயம், நேர்த்தி இவற்றால் விற்பனையாளர்களின் மோகம் அதிகரிக்கிறது. ஆனால் பொய்யான ப்ரொடக்டுகளுக்கு போட்டோகிராப்பர்கள் வேலை பண்ணக்கூடாது. வரும் காலத்தில் கடுமையான போட்டியை எதிர்க்கொள்ள வேண்டியிருக்கும். அதனால் விளம்பர போட்டோகிராப்பர்கள் உடனுக்குடன் மார்க்கெட் சர்வேக்களைப் படித்துக் கொண்டேயிருக்க வேண்டும். போட்டிகளையும் மார்க்கெட்டையும் தெரிந்து கொள்ள வேண்டும்.....

இன்னும் நிறைய விஷயங்கள் எழுதியிருந்தன அந்த ஃபைலில். அதையெல்லாம் படித்த பிறகு மதுவுக்குத் தன் பாஸிடமிருந்த அமோகமான புத்திசாதுரியமும், எதிர் காலத்தைப் பற்றி எடை போடக்கூடிய திறனும் தெரிய வந்தது. ராஜசேகரின் நுண்ணிய அறிவிற்கு வியப்படைந்தான். தன்னை அந்த பைலை எதற்காகப் படிக்கச் சொன்னான் என்று புரிந்தது மதுவுக்கு. ராஜசேகர் பால் நன்றி ஏற்பட்டது. தன் மீது அத்தனை அன்பு காட்டுகிற ராஜசேகருக்காக எதையும் பண்ணத் தயாரானான். இன்னும் முடிந்தால் உயிரையே தியாகம் பண்ணியாவது தன் பாஸ் பந்தயத்தில் வெற்றி பெறும்படி செய்துவிட வேண்டும் என்று துணிந்து விட்டான், அந்த நேரத்தில்.

38

விடிந்ததுமே போலீசார் போய் விட்டார்கள். உடனே கிளம்பி ஓபராய் ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தான் ராஜசேகர்.

ரிசப்ஷனில் இருந்தவனைக் கேட்டான்.

''மிஸ். தரங்கிணி ஃப்ரம் டில்லி... ரூம் நம்பர் எவ்வளவு?''- அவள் அதே ஓட்டலில்தான் இருக்கிறாள் என்ற நம்பிக்கை முற்றிலும் இல்லாவிட்டாலும் கேட்டான்.

இரவெல்லாம் தூங்காததால் அவன் கண்கள் செருகிக் கொண்டிருந்தன. கொட்டாவி விட்டுக் கொண்டே அசதியோடு ரிஜிஸ்தரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவ்வளவு தாமதத்தைக் கூட பொறுத்துக் கொள்ள முடியவில்லை ராஜசேகரால்.

ராஜசேகருக்குத் தூக்கக் கலக்கமாயிருந்தது. இரவெல்லாம் தூங்கவில்லை. அந்த டென்ஷனில் சரியாகச் சாப்பிடக் கூடவில்லை.

பணச்செலவு, தாமதம், விளம்பர உலகம் முழுவதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதே என்ற யோசனை, இத்தனையும் ராஜசேகரின் மனநிலையை அல்லோல கல்லோலமாய் செய்துக் கொண்டிருந்தன.

ராஜசேகரின் யோசனையெல்லாம் தன்னைத் தூண்டி விட்டு விட்டு, அவமானப்படுத்தி, பந்தயம் போட வைத்து விட்டு, மஞ்சுளாவைத் தன்னிடமிருந்து பிரித்துவிட்டு, அப்பாவியான சுவர்ணாவைக் கொன்றுவிட்ட சித்த ரஞ்சனின் கழுத்தை நொறுக்க வேண்டும் போலிருந்தது. அந்த யோசனையில் ஆத்திரம், கோபம், பழி வாங்கும் உணர்ச்சி, உறுதி, மேலோங்கியிருந்தன. அவன் இப்பொழுது தோற்றுவிட்டால் எதிரியின் பயத்தைப்

பெருக்கினாற் போலாகிவிடும். இரு மடங்கு தீமையை விளைவிக்கத் தயங்கமாட்டான் எதிரி.

தான் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை குறைந்து கொண்டிருந்தது அவனிடம். ஆனாலும் உறுதியையும் தைரியத்தையும் கூட்டிக்கொண்டு கடைசிவரை போராடத் தீர்மானித்து விட்டான்.

"ரூம் நம்பர் 777 சார்!" என்றான் ரிஸப்ஷனிஸ்ட்.

அப்படியானால்... தரங்கிணி இந்த ஓட்டலில்தான் இருக்கிறாளா?.....

அடுத்த விநாடி விர்ரென்று லிப்டை நோக்கி வேகமாய் ஓடினான். ஆனால் அங்கே ஏமாற்றமே எதிர்ப்பட்டது. மின்சாரம் போய் விட்டதால் லிப்ட் வேலை பண்ண வில்லை. என்ன பண்ணுவதென்று புரியாமல் ஒரு விநாடி பைத்தியம் பிடித்தாற் போலானான் ராஜசேகர்.

படிகளை நோக்கி வேகமாய் நகர்ந்தான். இரண்டிரண்டு படிகளாய் தாவிக் கொண்டே ஏழாம் மாடியிலிருந்த 777 வது நம்பர் ரூமை நோக்கி வேகமாய் போய்க் கொண்டிருந்தான். அந்த டென்ஷனில் மின்சாரம் வந்ததையோ லிப்ட் வேலை பண்ணத் தொடங்கியதையோ அவன் கவனிக்கவில்லை.

லிப்ட் வேலை பண்ணியபோதும் மூச்சிரைக்க அவன் படிகளில் ஏன் தாவி ஏறுகிறான் என்று ஒருவருக்கும் புரிய வில்லை.

ஏழாவது மாடியை வந்து சேருவதற்கு இரண்டரை நிமிஷங்கள் பிடித்தன.

வியர்வை கொட்ட, மூச்சிரைக்க, தொண்டை வரள, தலை சுற்றுவது போலிருந்தது அவனுக்கு. பலத்தைக் கூட்டிக் கொண்டு கால்களை எடுத்து வைத்தபடி 777 வது அறைக்கு முன்னால் வந்து நின்றான்.

ஒரு விநாடி நின்று மூச்சை நன்றாய் இழுத்து விட்டுக் கொண்டு மணியை அழுத்தினான். அவளை எப்படி ஒப்புக்கச் செய்வது மாடலிங்கிற்கு. அவளை எப்படி ஒப்புக்கச் செய்வது என்று வேகமாய் யோசிக்கத் தொடங்கினான்.

கதவைத் திறக்கும் சந்தடியே இல்லை. மேலும் மணியை அடித்தான். தலைசுற்றுவது போலிருந்தது இன்னும்.

போட்டோகிராப்பர்கள் மணிக்கணக்கில் தோளில் கேமிராவைத் தொங்க விட்டபடி இருக்க வேண்டும். நினைத்த எஃபெக்ட்டிற்காக இரவு வெகு நேரம் வரை வேலை பண்ணிக் கொண்டிருக்க வேண்டும். அதனால் மாடல்களை விட போட்டோகிராப்பர்கள் அதிகமாகவே தம் உடல் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி சக்தியில்லாதவர்கள் நடுவிலேயே தளர்ந்து போய் வேலையில் கவனம் செலுத்தமுடியாமல் போய் விடலாம்.

ராஜசேகர் ஆரோக்கியமாய் பலமாய் இருப்பவன் தான். ஆனால் இந்த ப்ராஜெக்ட் தொடங்கியதிலிருந்தே ஓய்வில்லாமல் போனதாலும்,சரியான சாப்பாடு இல்லாமல் பரப்பரப்பிற்கு ஆளானதாலும் ஏழு மாடியை இரண்டரை நிமிஷங்களில் ஏறிய சிரமத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அறைக்குள் விளக்கு எரிந்துக் கொண்டிருந்தது. ஆனால் கதவு திறந்து கொள்ளவில்லை. ஆச்சரியம் ஏற்பட்டது ராஜசேகருக்கு. ஒரு விநாடி என்ன பண்ணுவ தென்று புரியவில்லை. மளமளவென்று யோசித்தான்.

இங்கே நேரத்தை வீணாக்குவதால் லாபமில்லை. ரிஸப்ஷனுக்குப் போய் போன் பண்ணுவது மேல்.அதற்குள் அவள் வெளியே போனால் ரிஸப்ஷனுக்கருகில் நின்று

கொண்டிருக்கும் தன் கண்ணில் படாமல் போகமாட்டாள். யோசித்துக் கொண்டே திரும்பினான்.

லிப்டிற்கருகில் ரூம் பையன் எதிர்ப்பட்டான்.

"777 வது ரூம் கதவைத் திறக்கலையே, ஏன்? நீ தட்டிப் பார்க்கிறாயா?"

"அந்த ரூமா? ஏதோ நாட்டிலிருந்து வந்து இறங்கி யிருக்குதுங்க. அந்தம்மாவுக்கு பிரெஞ்சு, இங்கிலீஷ் ரெண்டுந் தவிர வேறெந்த பாஷையுமே தெரியாதுங்க. அந்த இங்கிலீஷ் கூட ஒண்ணும் புரியாதுங்க. உங்களை அழவைச்சுடுங்க. அதோட... ஏதோ போதைப் பொருளை உண்டுட்டு விழுந்துக் கிடக்குதோ என்னவோங்க!"- என்று சொல்லி விட்டுப் போய் விட்டான், பையன்.

போதைப் பொருள் பழக்கமா? புதிதாய் தெரிந்து கொண்ட இந்த விஷயம் ராஜசேகரை மேலும் கலக்கத் திற்குள்ளாக்கிற்று.

ஆயிரமாயிரம் யோசனைகள் அலைக்கழிக்க லிப் டையே மறந்துப்போய் படிகளில் இறங்கி நடந்தான்.

ரிஸப்ஷனிடம் வந்து— "அவள் கதவைத் திறக்கலை. நீங்க போன் பண்ணினால் படுக்கைக்குப் பக்கத்திலேயே இருக்கும் போன் சப்தத்தில் எழுந்து கொள்வாள். முயற்சி பண்றீங்களா?..."- ரிஸப்ஷனில் உட்கார்ந்திருந்த வனிடம் கேட்டான்.

அவன் ராஜசேகரை விநோதமாய் பார்த்தான்.

"நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியலையே... அவங்க இப்பத்தான் ரூமை காலி பண்ணிட்டுப் போனாங்க!" என்றான்.

அவன் சொன்னது ஒரு விநாடி புரியவில்லை. புரிந்த துமே மின்னல் வேகத்தில் வெளியே பாய்ந்தான். ஒரே நிமிஷத்தில் வீதிக்கு வந்துச் சேர்ந்தான். அப்பொழுதுதான் ஒரு டாக்சி கிளம்பிக் கொண்டிருந்தது. அருகில் வேறெந்த

வாகனமும் இல்லை. அவள் அதில்தான் போய்க் கொண்டிருக்க வேண்டும், கண்டிப்பாய். புயலாய் டாக்சியை நோக்கிப் பாய்ந்தான். அதற்குள் டாக்சி வேகத்தை மேற்கொண்டு விட்டது. நிறுத்தச் சொல்லி கத்த நினைத்தான். முடியவில்லை. ஆதரவில்லாமல் அப்படியே நின்று விட்டான், போய்க் கொண்டிருந்த டாக்சியையே பார்த்தபடி.

அவ்வளவு பரபரப்பிலும் ராஜசேகர் தன் போட்டோ கிராப்பிக் மூளையில் அந்த டாக்சியின் நெம்பரைக் குறித்துக் கொண்டிருந்தான். அதன் நெம்பர்— WBD 7777.

கார் கண்மறைவானதுமே விருட்டென்று திரும்பினான். அப்படியானால் அவன் படியிறங்கிக் கொண்டிருந்த போது அவள் லிப்டில் கீழே வந்திருக்க வேண்டும். அவன் ரூமுக்கு முன்னால் காத்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் அவள் சாவிகளை ஒப்படைத்து விட்டு பில்லைக் கட்டி விட்டுப் போயிருக்க வேண்டும்.

போகும்போது அறையை சாவியால் பூட்டிவிட்டுப் போயிருக்கிறாள். ஆனால் விளக்கை அணைக்கவில்லை. உள்ளே விளக்கு எரிந்ததால் அவள் உள்ளேயிருப்பதாய் எண்ணிவிட்டான் ராஜசேகர். தன் தவற்றிற்குத் தலையிலடித்துக் கொண்டான்.

மயிரிழையில் தப்பிவிட்டது. தன் கண்ணெதிரேயே போய்க் கொண்டிருந்த அவளைத் தன்னால் பிடிக்க முடியவில்லை.

"நீங்க படியேறிட்டிருக்கும்போது அந்தம்மா லிப்டில் கீழே இறங்கி வந்துச்சு சார். பையனைக் கூட கூப்பிடாமல் லக்கேஜைத் தூக்கிட்டு வந்தது. அவசரமாய் சாவியைத் தந்துட்டு ஒரு வார்த்தை சொல்லிச்சு சார்..."

"என்ன சொன்னாள்?" பரபரத்தான் அவன்.

"அகௌண்டை சீக்கிரமாய் க்ளோஸ் பண்ணுங்க. பெங்களூர் ப்ளைட்டுக்குப் போகணும் என்றாள் சார்!"

அதைக் கேட்ட அடுத்த விநாடி டாக்சிக்காகக் காற்றாய் பறந்தான் ராஜசேகர்.

அதற்குள் விடிந்துவிட்டது. டாக்சிகள் தெருக்களில் இன்னும் சுற்றத் தொடங்கவில்லை.

பைத்தியக்காரனைப் போல தெருக்களில் இறங்கி ஓடத் தொடங்கினான் டாக்சிக்காக.

அரைமணி நேரங்கழித்து டாக்சி கிடைத்தது. சட்டென்று ஏறி உட்கார்ந்துக் கொண்டு, "ஏர் போர்ட்" என்றான். கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளைப் பிடித்துக் கொண்டு— அவற்றை டிரைவருக்குக் காட்டிக் கொண்டே.

அதைப் பார்த்த டாக்சி ராக்கெட் வேகத்தில் பறந்தது.

o o o

பன்னிரண்டடிக்கப் பத்து நிமிஷங்கள் இருந்தன.

சீதாராமன் மறுத்த போதிலும் கேட்டுக் கொள்ளாமல் அவர் காரை எடுத்துக் கொண்டு மைலாப்பூரிலிருந்த தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள் காதம்பரி.

மாடல் உலகத்தைச் சேர்ந்த அத்தனை பேரின் துன்பங்களையும் தன் துன்பமாய் அனுபவித்து வந்தாள் அவள். இடையிடையே விரக்தியடைந்தவளைப் போல சிரித்துக் கொள்வாள். அந்தச் சிரிப்பு அப்படிக் காரண மில்லாமல் ஏன் வருகிறதென்றுதான் யாருக்கும் புரியாது. இருபத்தைந்து வயதில் அவளுக்குக் கல்யாணம் பண்ண முடியாமல் அவள் அழகை அத்தனைபேரும் புகழ்ந்ததைப் பார்த்து— வேறு வழியில்லாமல்— பிழைப்புக்கு ஏதோ தொழில் பண்ணித் தீரவேண்டியிருந்த நிலையில் அவளுக்கு விருப்பமில்லாத போதே பலவந்தமாய் மாடலிங்கில் புகுத்தி விட்டார்கள், தாய் தந்தையர்.

முதன் முதலில் பயமாயும், வருத்தமாயும், விஷமாகவும் இருந்தாலும் போகப் போக அதுவே பழக்கப்பட்டுப் போய் விட்டது. மெல்ல அவளிடம் அகம்பாவம் பெருகத் தொடங்கவே, தாய் தந்தையரிடம் முரட்டுத்தனமாய் நடந்துக் கொள்ளத் தொடங்கினாள். அந்த முரட்டுத்தனம் அகம்பாவத்தால் வந்ததில்லை. தனக்கு லட்சணமாய்க் கல்யாணம் பண்ணி வைக்காமல் தன் வாழ்க்கையை வியாபார நாய்களின் உலகத்திற்குப் பலியாக்கியதற்காக! பசிக்கு முன்னால் நீதி, நியமம், பண்பு எல்லாம் பறந்தோடி விடும்.

எல்லாவற்றையும் விட அவளை அதிகமாய் பாதித்தது, அவள் சம்பாதனையின் மீதே ஆதாரப்பட்டுக் கொண்டு- அவளுக்குப் பின்னால் அவளைப் பற்றிக் கெட்டதாய்ப் பேசிக்கொண்ட தன் தம்பி தங்கைகளின் வாயை தாய் தந்தையர் ஏன் மூடவில்லை என்பதுதான்!

காரை ஓட்டிக் கொண்டே தன் உடம்பை ஒரு முறை பார்த்துக் கொண்டாள் காதம்பரி. அவளுக்கு வெறுப்பாய் இருந்தது ஏன் இன்னும் தன் உடம்பு கட்டுக் குலையாமல் இருக்கிறது? அழகும் கவர்ச்சியும் தன் உடம்பை ஏன் இன்னும் விட்டாமல் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக் கின்றன? தன் அழகின் பால் வெறுப்பும், தன் உடம்பின் மீது பகையும், தன் நெளிவு சுளுவுகளின் மேல் கோபமும் பற்றிக் கொண்டு வந்தன அவளுக்கு. காரின் வேகம் அதிகரித்தது.

அதே சமயம் கைலாசன் தன் கையிலிருந்த கத்தியையே பொறுமையின்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குப் பக்கத்தில் இன்னும் இரண்டு பேர் எமகிங்கரர்களைப் போல கழுகுகளாய்க் காத்துக் கொண் டிருந்தார்கள்.

39

ராஜசேகர் விமான நிலையத்திற்குள் நுழைந்தபோது பெங்களூருக்குப் போகும் ப்ளைட்டின் கதவுகளை சாத்திக் கொண்டிருந்தார்கள்.

கை நழுவிப் போய்விட்டது. மயிரிழை நேரத்தில் கைக்குக் கிடைப்பதுபோல் கிடைத்துவிட்டு— கை நழுவிப் போய் விட்டாள் தரங்கிணி.

போய்க்கொண்டிருந்த ப்ளைட்டையே வெறுப்போடு பார்த்தபடி பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டவன் விசாரணை கௌண்டரிடம் வந்தான்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் பெங்களூருக்கு ஒரு ப்ளைட் இருப்பதாய் தெரிந்துக் கொண்டு—வேறுவழி இல்லாமல் பெருமூச்செறிந்து—

அரும்பாடுபட்டு, பெங்களூருக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு, ஓட்டலுக்குத் திரும்பி வந்து லக்கேஜுகளை எடுத்துக் கொண்டு விமான நிலையத்திற்குக் கிளம்பினான் ராஜசேகர்.

டாக்சியில் ஏறிக்கொண்டவன் — அப்பொழுதுதான் ஓபராய் ஓட்டலுக்கு முன்னால் வந்து நின்ற டாக்சியை கவனிக்கவில்லை அந்த டாக்சியின் நெம்பர் W B D 7777.

ஒரு மணி நேரங்கழித்து ராஜசேகர் ஏறிய ப்ளைட் கல்கத்தாவிலிருந்து பெங்களூரை நோக்கி வேகமாய்ப் பறந்தது. பெங்களூர் இன்னொரு மகா நகரம். புரிபடாத அந்த மகாநகரத்தில் தரங்கிணி எங்கேயிருக்கிறாள் என்று தேடுவது?

ப்ளைட்டைக் காட்டிலும். வேகமாயிருந்தன ராஜ சேகரின் யோசனைகள்—

சரியாய் அதே சமயத்தில் டில்லியிலிருந்த ஜார்ஜ் கல்கத்தா ஓபராய் ஓட்டலுக்குப் போன் பண்ணிக் கொண்டிருந்தான் ராஜசேகருக்காக. மிக ரகசியமாய்ப் பண்ணச் சொல்லித் தன்னிடம் ஒப்படைத்திருந்த வேலை முடிவடைந்து விட்டது. அந்த விஷயத்தை ராஜசேகருக்கு எவ்வளவு சீக்கிரத்தில் சொல்லிவிடுவோமோ அவ்வளவு நல்லது என்ற யோசனையுடன் ராஜசேகருக்காக சல்லடைப் போட்டுச் சலித்துக் கொண்டிருந்தான்.

பெங்களூரில் இறங்கியதுமே கபாலி தியேட்டருக்குப் பக்கத்தில் இருந்த ராமகிருஷ்ணா ஓட்டலுக்கு வந்ததுமே — போனை எடுத்தான் ராஜசேகர்.

பொறுமையாய் ஒவ்வொரு ஓட்டலுக்காய் போன் பண்ணத் தொடங்கினான், தரங்கிணியைக் கண்டுப் பிடிப்பதற்காக.

ஆனாலும் ஒரு சந்தேகம்... அவள் ஓட்டலில்தான் தங்குவாள் என்ற உத்தரவாதம் இல்லை. தங்கினாலும் அவள் பெயரிலேயே ரூம் புக் பண்ணுவாள் என்ற நம்பிக்கை இல்லை.

கொஞ்சமும் ஆதாரம் இல்லாமல் அவனால் இந்த வேட்டையில் வெல்ல முடியுமா?

அதற்குள் பத்து நாட்கள் கழிந்து விட்டன. தண்ணீராகப் பணம் செலவழிந்துக் கொண்டிருந்தது... கெடு நெருங்கிக் கொண்டேயிருந்தது. அவன் செலவழிக்கும் பணம் மட்டுமேயில்லை. ராம்பூபால், கிரண், ஜார்ஜ், மது, சந்திரன் செலவழிக்கும் பணச் செலவுகள் வேறு... இதில் மூழ்கிவிடத்தான் போகிறானோ? அல்லது மிதக்கத்தான் போகிறோனோ தெரியவில்லை. ஆவேசப்பட்டுப் பந்தயம் வைத்து விட்டோமோ என்ற உணர்ச்சி ஒரு விநாடி ஏற்பட்டது ராஜசேகரின் மூளையில். அந்த யோசனை இந்தத் தோல்விகளைக் கண்டுதான் ஏற்பட்டதோ அல்லது தன் உயிருக்குயிரான மஞ்சுளாவைப் பிரிந்ததால்

ஏற்பட்டதோ தெரியவில்லை. எந்தக் காரணம் என்றே புரியாமல் அவன் மனம் அல்லோலகல்லோலமாய் இருந்தது.

போனுக்கு மேல் போன் பண்ணி கை வலி எடுத்தது. ஒவ்வொரு இடத்திலிருந்தும் 'சாரீ' என்ற பதிலே வந்தது. ஒரு மணி நேரம் கழிந்து விட்டது. அதற்குள் பெங்களூரி லிருந்த பெரிய ஓட்டல்கள் அத்தனைக்கும் பண்ணியாகி விட்டது. இனி எஞ்சியிருந்தவை சின்னச் சின்ன ஓட்டல் கள் தான்.

அதற்கும் பண்ணிப்பார்த்தான். லாபமில்லை.

பந்தயத்தில் ஒரு நாள் நழுவிப் போய் விட்டது.

அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது ஜார்ஜ் விஷ்யம்.

உடனே ஜார்ஜுக்குப் போன் பண்ணினான்.

போனை எடுத்ததுமே அது ராஜசேகர் பண்ணிய போன் என்றறிந்து நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொண்டான் ஜார்ஜ்.

கொஞ்ச நேரம் தான் முடித்த காரியங்களைப் பற்றிச் சொன்னான் ஜார்ஜ் மிக சந்தோஷமாய். ஆனால் அதொன்றும் சந்தோஷத்தைத் தரவில்லை ராஜசேகருக்கு.

தரங்கிணியே கிடைத்தபாடில்லை. மீதி வேலைகளைப் பண்ணி முடித்து என்ன லாபம்?

"ஜார்ஜ், நீ உடனே அந்த தேவியைச் சந்தித்து, தரங்கிணியைப் பற்றி இன்னும் விவரம் தெரிஞ்சுக்கோ. அவள் பெங்களூருக்குப் போனால் எங்கே தங்குவாள்னு கேட்டு உடனே சொல்... நான் போன் கிட்டேயே காத்துட்டிருக்கேன். க்விக்..." என்று தன் நம்பரைச் சொல்லி விட்டுப் போனை வைத்து விட்டான்.

o o o

"சார்... சித்தரஞ்சன் ஷூட்டிங் தொடங்கப் போகிறான். கோரமண்டலுக்கு நாம்ப பண்ணவேண்டிய

வேலையை அவன் பண்ணப் போறான்... என்றான் சந்திரன்.

அதைக் கேட்டு நாற்காலியில் விறைப்பாய் உட்கார்ந்துக் கொண்டான் மது. "அதாவது நாம்ப அந்தச் சமயத்துக்கு விளம்பர மெடீரியலைத் தரமுடியலைன்னு சொல்லிட்டு அந்த சான்சைத் தான் பயன்படுத்திக்க விரும்புகிறானாம். அந்தச் சந்தர்ப்பத்தில் லொகேஷன் செலக்ஷனுக்காக ராம்பூபாலை வலை பின்னியிருக்கானாம்..."

"அவங்க கம்பெனிக்கு அபாயிண்ட்மென்ட் இல்லாமலேயே எப்படிப் பண்றான்?"

"சாமர்த்தியம்! அந்தச் சமயத்தில் கோரமண்டல் வேறு வழியில்லாமல் தம் வேலையையே ஏற்றுக்கும்னு பிளான் போட்டிருக்காங்க அவங்க..."

"சார், விக்கிரமையும் அவன் கோடவுனையும் போலீசாரிடம் ஒப்படைத்தால்..."— சந்திரனின் ஆவேசம் பெருகிற்று.

"அது சித்தரஞ்சனுடையதுதான்னு நாம்ப நம்ப வைத்துட்டால் வெற்றி நம்ப பக்கந்தான்!"

"தினமும் தவறாமல் காதம்பரி போன் பண்ணுவாங்க. இன்னிக்கு என்னவோ பண்ணவேயில்லை..."— ஆச்சரியமடைந்தான் சந்திரன்.

சரியாய் அதே சமயத்தில் காதம்பரியின் கார் அவள் வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைந்தது.

கார் சப்தத்தைக் கேட்டு விட்டு கைலாசன் விழிப்பானான். அத்தனை நேரமாய் காதம்பரி தென்பட்டதுமே அவளைக் கொன்றுவிட வேண்டும் என்றெண்ணியிருந்தான் கைலாசன். ஆனால் அனுபவித்து விட்டுக் கொன்று விட வேண்டும் என்று கையாள் ஆசைப்பட்டதால் கைலாசன் பச்சைக் கொடி காட்டிவிட்டான்.

காதம்பரி பாரமாய் அடியெடுத்து வைத்துக் கொண்டு ஹாலுக்குள் வந்தாள். அன்போடு அந்த வீட்டை ஒரு விநாடி நான்கு பக்கங்களும் கண்களால் சுற்றி அளந்தாள்.

அதற்குள் கைலாசன் நிசப்தமாய் உட்புறம் தாழிட்டு விட்டான். வெளியே சோவென்று மழை. விட்டுவிட்டு இடியிடித்துக் கொண்டிருந்தது. இயற்கை பயங்கரமாய் இருந்தது.

கைலாசன் தன் ஆட்களுக்குச் சைகை காட்டினான். அவ்வளவுதான்! அவன் குரூர மிருகத்தைப் போல அவள் மீது பாய்ந்தான். அந்த திடீர் தாக்குதலுக்கு நடுநடுங்கி விட்டாள் காதம்பரி. பயில்வான்களைப் போன்ற இரு அரக்கர்களுக்கிடையே அவள் மென்மையான உடல் நலிந்து போய்க் கொண்டிருந்தது,

அவர்கள் பண்ணிக் கொண்டிருந்த... இம்சைகளை அவளால் தாங்கமுடியவில்லை. வலியால் அவள் உடம்பு கோணிக்கொண்டது. புஷ்பத்தைப் போன்ற அவள் உடலில் ரத்தம் கசியத்தொடங்கிற்று. கீறல்கள் ஏற்பட்டன ஆதரவில்லாமல் திமிறிக் கொண்டிருந்தாள்.கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று வழிந்தது. இதயமே வெடித்து விடும்போல கத்திக் கூச்சலிட்டாள்-- 'ஹெல்ப் ஹெல்ப்...' என்று அவள் கத்தலைக் கேட்க யார் இந்த தார்கள் அங்கே? கேட்டாலும் காப்பாற்றக்கூடியவர்கள் யார்?

அவ்வளவு துன்பத்திலும் அவள் வருத்தம் ஒன்றே ஒன்றுதான். பெண்களுக்கு ஏது விமுக்தி? மரிப்பு எப்பொழுது?

சூரியத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள், கடைசி நிமிஷத்தைக் கணக்கிட்டுக் கொண்டே. தன் உடம்பில் விளையாடிக்கொண்டிருந்த கயவர்களைக் கூட பார்த்து இரக்கப்படக்கூடிய நிலைமைக்கு உயர்ந்து விட்டாள்.

ஆப்டர் ஆல் ஃப்ளஷ் அண்ட் ப்ளட்! ஓ முட்டாள்! காமாந்தகனே! எவ்வளவு ஈனமான வாழ்க்கைடா உன்னுது! உடலாலும் உள்ளத்தாலும் விரும்பி பெண் ஒருத்தி தரும் இன்பத்தின் ஆழத்தைப் பற்றித் தெரியாத மூடனே! உங்கள் பாவத்திற்குப் பரிகாரமே இல்லை... மன்னிப்பும் கிடையாது...! இவ்வாறு குமுறிக் கொண்டே மூர்ச்சித்து விழுந்தாள். மூச்சு நின்று விட்டது.

உயிரற்ற அவள் பார்வையில் இன்னும் உலராத இரக்கம்! ஆண் இனத்தின் மீதே இரக்கம்... ஆனால் தயை மட்டும் இல்லை.

o o o

காலையில் வந்த தபால்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் மது.

ஆப்பிரிக்காவின் பஞ்ச நிவாரண நிதிக்காக நவம்பர் 5-ம் தேதி 'பேஷன் எய்ட்' என்ற பெயரில் நடக்கப் போகும் நிகழ்ச்சியில் உலகப் புகழ்ப் பெற்ற மாடல்கள் பலர் கலந்துக் கொள்ளப் போகிறார்கள்.

அந்த ஷோவுக்கு இந்தியன் மாடல்கள் எல்லாரும் [illegible]வித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த அவகாசத்தை ஏற்படுத்தித் தரும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்த கடிதங்கள்தான் நிறைய இருந்தன.

துல்லியமான லைட் அண்ட் ஷேட் அறிவால், இல்லாத அழகைக்கூட நன்றாகப் படம் பிடித்துக்காட்டி விடக் கூடிய ராஜசேகர் சில ஸ்டில்களை எடுத்தால் அதன் மூலம் 'பேஷன் எய்ட்' சான்சைப் பெறலாம் என்பது இவர்களின் தவிப்பு.

தன் பாஸின் கெட்டிக்காரத் தனத்தையும் தன் அறிவின்மையையும் நினைத்து வெட்கமடைந்தான் மது.

அத்துடன் பயமும் ஏற்பட்டது. தரங்கிணி கிடைக்காமல் போய், பந்தயத்தில் தோற்றுவிட்டால் அந்தத்

தோல்வியை அவனால் தாங்கிக் கொள்ள முடியுமா? அத்துடன் ஸென்சிடிவ் வேறு...!

பந்தயத்தில் வென்று விட்டாலும், மஞ்சுளாவின் வற்புறுத்தலால் தொழிலையே விட்டுவிட்டால்—. அதனால் பெரிய இழப்பு. தன்னைப் போன்ற அமெச்சூர் தொழிலாளிகளுக்கு மிக அநியாயம் ஏற்படும்

முடிந்த வரையிலும் பந்தயத்தில் வெற்றி பெறவும், மஞ்சுளாவின் மனத்தை மாற்றுவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்காகப் பதில் எழுதத் தொடங்கினான் மது.

அதற்குள் போன் மணியடித்தது.

போனில் கிரண் பேசினான்.

"நான் இப்போது மீனாட்சி ஓட்டலிலிருந்து பேசறேன். ராம்பூபால் எல்லா விவரங்களையும் சொன்னான். இதற்கு முன்னால் கிடைத்த நான்கு மாடல்களோடு மேலும் நான்கு மாடல்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இந்த எட்டுப் பேரில் ஃபென்டாஸ்டிக் ஃபீச்சர்ஸ், இல்லாத வகைகளைக் கொஞ்சம் நாம்ப பாலிஷ் பண்ணணும். இப்போது நானும் பூபாலும் அதைத்தான் பண்ணிட்டிருக்கோம். நம்ப தொழில் மீது இருக்கிற கெட்ட அபிப்பிராயத்தாலும், சித்தரஞ்சனைப் போன்றவங்க இருப்பதாலும் மாடலிங்மேல் அவ்வளவாய் நல்ல அபிப்பிராயம் இல்லை. அதனால்தான் கேட்டதுமே ஒப்புக்கலை. 'அப்படிப் பட்டவங்க மட்டுமே இல்லை- மாயா, காதம்பரி, ராஜசேகர் போன்றவங்களும் இருக்காங்க- ஒவ்வொரு தொழிலிலும் இருப்பதுபோல நல்லது கெட்டது ரெண்டுமே இந்தத் தொழிலிலும் இருக்குன்'னு சொல்லி நம்ப வைக்கிறதுக்குள் உயிர் போயிடுத்து-" என்றான் கிரண் திருப்தியோடு. போனை வைத்து விட்டான் மது. ராஜசேகர் தன்னிடம் ஒப்படைத்திருந்த வேலைகளை

முடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி அவனைத் தலைகால் புரியாமல் செய்தது.

கிரணுக்கும் ராம்பூபாலுக்கும் புரிபடாதது ஒன்று தான்- வேலையை விட்டுவிட்டு ராஜசேகர் எங்கே சுற்றிக் கொண்டிருக்கிறான்? எதற்காக?...

முதல் நாளே தான் தேர்ந்தெடுத்திருந்த மூன்று லொகேஷன்களில் ஷூட்டிங் பண்ணிப்பதற்கு லோகல் அதாரிடீஸிடமிருந்து சம்மதம் வாங்கி வந்திருந்தான் ராம்பூபால்.

விதம் விதமான மாடர்ன் டிரஸ்களை எப்படி உடுத்திக் கொள்வது? மேக்கப் எப்படி இருக்கவேண்டும்? பார்வை, நடை, ஒவ்வொரு அசைவும், முக்கியமாய் முகபாவம், எப்படி இருக்கவேண்டும்? அதிக விளக்கு வெளிச்சத்தை எப்படித் தாங்கிக் கொள்வது? கண் இமைகளை. எப்படி அதிக நேரம் வைத்துக் கொண்டிருப்பது—இது போன்றவைகளை எட்டு மாடல்களுக்கும் இரவும் பகலுமாய் ஒரு நிமிவும் கூட ஓய்வில்லாமல் கற்றுக் கொடுத்து வருகிறான். சில வேலைகளை ஜாஞ்ஜும், சிலவற்றை மதுவும், கிரணும், ராம்பூபாலும் செய்து வருகிறார்கள்.

ஆனால் முக்கியமான ஆள் எங்கே? அவன் மேலே யாடுகிற தரங்கிணி எங்கே? ஒருவருக்குமே புரிபடவில்லை. ராஜசேகரும் நடக்கும் விஷயங்கள் எதையும் யாருக்குமே சொல்லவில்லை. ரகசியமாய் வைத்துக் கொண்டிருந்தான்.

இன்னொரு பக்கத்தில் சித்தரஞ்சனின் வேலை கூட உருவெடுத்துக் கொண்டிருந்தது.

o o o

ராஜசேகர் போனில் தேவியுடன் தொடர்பு கொள்ள முனைந்தபோது அவள் வெளியூருக்குப் போய் விட்டதாய் பதில் வந்தது. பிறகு வெகுநேரம் யோசித்த ராஜசேகருக்கு

ஒரு க்ளூ கிடைத்தது. WRD7777. ஆம். வேட்டையை அங்கிருந்து தொடங்க வேண்டும்...

உடனே அறையை காலி பண்ணி விட்டான். எதற்கும் நல்லது என்று கல்கத்தா ஏர் போர்ட்டுக்குப் போன் பண்ணினான். "தரங்கிணி என்னும் பெண் இன்று காலையில் பெங்களூர் ப்ளைட்டில் பயணம் செய்தாளா?" என்று. இல்லை என்று பதில் வந்தது.

தன் மந்த புத்திக்கும், அவசரத் தனத்திற்கும் தன்னையே திட்டித் தீர்த்துக் கொண்டு, ஏர் போர்ட்டுக்கு வேகமாய் புறப்பட்டான், திரும்பவும் கல்கத்தாவுக்குப் போவதற்காக.

o o o

ராஜசேகர் கல்கத்தாவில் இறங்கியதுமே, எக்ஸ் பிளனேட் சென்டரிலேயே இருப்பது நல்லதென்றும், அவ் விடத்தில் தரங்கிணியைச் சந்திக்கும் அவகாசம் உண்டு என்றும், தோன்றியதால் ஓபராய் ஓட்டலில் தங்கினான்.

இறங்கிய அரை மணிக்கெல்லாம் வெளியே வந்தான். தரங்கிணி கல்கத்தாவில் தான் இருக்கிறாள். பெங்களூர் என்று கிளம்பியவள் ஏன் கல்கத்தாவிலேயே தங்கி விட்டாள்?

பெங்களூருக்கு டிக்கெட் ரிஸர்வ் கூட பண்ணவில்லை. பின்னே பெங்களூருக்கு எப்படிப் போவதாய் தீர்மானித் திருந்தாள்?

இதில் ஏதோ புரிபடாத திப்பிசம் இருக்கிறது. அந்த திப்பிசம் விடுபட்டுவிட்டால் அவள் கிடைத்துவிடுவாள். அதென்னது?

டில்லியில் தேவி குறிப்பிட்ட விக்கிரம் யார்?

விக்கிரமுக்கும் தரங்கிணிக்கும் என்ன சம்மந்தம்?

பாரீசில் பிறந்து பாரீசிலியே வளர்ந்த தரங்கிணிக்கும் விக்கிரம் என்ற ஆளுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது?

ராஜசேகரின் மூளை குழம்பிற்று. தன் முயற்சிக்கு யாரோ தடங்கல் பண்ணுவதாய்த் தோன்றிற்று.

வேண்டுமென்றே தன்னை யாராவது தவறான வழியே இட்டுச் செல்கிறார்களோ?

தரங்கிணி தன்னிடமிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறாளா அல்லது தப்பித்துப் போகும்படி செய்யப்படுகிறாளா?

முன்பின் தெரியாத தன்னிடமிருந்து தப்பித்துப் போக வேண்டுமென்ற எண்ணம் இருந்திருக்காது.

பின்னே...?

மொத்தத்தில் ஏதோ ரகசியமாய், சாமர்த்தியமாய் தன்னை வீழ்த்திக் கொண்டிருப்பதாய் தோன்றுகிறது.

ஒருக்கால் தன்னிடமிருந்து அவள் தப்பித்துக் கொண்டு வருகிறாள் என்றெண்ணிக் கொண்டால் தான் அவளை இன்னும் கொஞ்ச நேரத்தில் பிடிக்கப் போவதாய் அவளுக்கு எப்படி தெரிந்திருக்கும்? ஒன்றிற்குமே பதில் கிடைக்கவில்லை. பைத்தியக்காரனைப் போல அவளைத் தேடிக் கொண்டு ஓடுவது புத்திசாலித்தனம் இல்லை— சாமர்த்தியமாய் அவளைப் பிடிக்க மாஸ்டர் பிளான் போடவேண்டும்.

யோசித்துக் குழம்பினான்.

திடீரென்று ஓட்டல் பையன் சொன்னது நினைவுக்கு வந்தது, அவள் போதைப் பொருளுக்கு அடிமை என்றது.

அப்படியானால் அவளுக்கு எப்பொழுதும் போதைப் பொருட்கள் கைக்கெட்டிய தூரத்தில் இருக்கவேண்டும். அதற்கு ஒருமுறை பழக்கப்பட்டு விட்டவர்கள் பிறகு அது இல்லாமல் இருக்க முடியாது.

அவள் தன் கையோடு போதைப் பொருட்களை பாரீசிலிருந்து கொண்டு வரக்கூடிய அவகாசமில்லை. விமான நிலையத்தில் சுங்க இலாகாவினர் அவைகளைப்

பறித்துக் கொண்டு விடுவார்கள். முக்கியமாய் போதைப் பொருட்கள் அதிகமாய் இறக்குமதியாகக்கூடிய நாடுகளி லிருந்து வரும் பயணிகளை நன்றாகச் சோதித்து விடு வார்கள்.

அவள் கல்கத்தாவில் தான் போதைப் பொருட்களை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். கல்கத்தாவில் அவை விற்கும் இடங்களில் கண்காணித்தால் அவளைக் கண்டுப் பிடிக்கும் சான்ஸ் கிடைக்கலாம்.

முதலில் WBD 7777ஐப் பிடிக்க வேண்டுமா? அல்லது இந்த காரியத்தைத் தொடங்க வேண்டுமா? முதலில் விக்கிரமைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

திரும்பவும் ஓட்டலை நோக்கி நடந்தான். தன் ஆபீஸ் நம்பரைச் சொல்லி உடனே லைன் போடச் சொல்லிவிட்டு யோசனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்தான்.

அதற்குள் மின்னலாய் இன்னொரு யோசனை வந்தது. பெங்களூருக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணிக் கொள்ளாமல், போகும் உத்தேசமும் இல்லாமல், ஓட்டல் ரிஸப்ஷனில் 'பெங்களூருக்குப் போகணும், சீக்கிரமாய் பில் போடு' என்று ஏன் சொல்ல வேண்டும்?

தன்னைத் தவறான வழியே இழுத்தடிக்க வேண்டு மென்றே சொன்னது போலிருக்கிறதே?...

அவளை அவன் இதுவரையிலும் பார்த்ததில்லை. அவளும் அவனைப் பார்த்ததில்லை... பின் இது எப்படி நிகழ்ந்திருக்கும்? இருக்காது...

அதற்குள் போன் ஒலித்தது. சட்டென்று போனை எடுத்தான்.

போனில் அவன் எதிர்பார்த்த மதுவோ, சந்திரனோ, கிரீஷோ கிடைக்கவில்லை. அவன் ஆபீசில் வேலை பண்ணிக் கொண்டிருக்கும் மீடியா மேனேஜர் கிடைத்தார். அவரிடம் சொல்லக் கூடாத விஷயம்.

உற்சாகமிழந்தான் ராஜசேகர். இறுதியில் மது வந்ததுமே தனக்குப் போன் பண்ணச் சொல்லி விட்டுப் போனை வைத்து விட்டான். அவசரத்தில் தான் இருந்த ஓட்டல் பெயரையோ, போன் நம்பரையோ சொல்ல மறந்து விட்டான்.

அதே சமயத்தில் மது உள்ளே வந்தான். மீடியம் மேனேஜர் மூலம் விஷயம் அறிந்து- ராஜசேகரின் நம்பர் தெரியாததற்குத் தலையைப் பிய்த்துக் கொண்டான். அது டிரங்க் கால் இல்லை. எஸ்.டி.டி.- டைரக்ட் போன். அதனால் எக்ஸ்சேஞ்சுக்குப் போன் பண்ணி எங்கிருந்து போன் வந்தது என்று தெரிந்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது.

மது யோசிக்கத் தொடங்கினான். ராஜசேகர் கல்கத்தா வுக்குப் போயிருக்கிறான். கல்கத்தாவில் இருப்பதுபோல உணர்ந்து போன் பண்ணிப் பார்த்தால் என்ன? எஸ்.டி.டி. பண்ணினான் என்றால் ராஜசேகர் தங்கியிருந்தது ஸ்டார் ஓட்டலாய் தான் இருக்க வேண்டும்.

உடனே கல்கத்தா டைரக்டரியைப் புரட்டி அலசத் தொடங்கி விட்டான்.

o o o

சந்திரன் இப்பொழுது விக்கிரமை வேட்டையாடத் தொடங்கி விட்டான்.

விக்கிரம் இப்பொழுது சர்வோதயா ஓட்டலில் ரூம் நம்பர் 116-ல் இருந்தான். ரிசப்ஷனுக்கு முன்னால் இருந்த சோபாவில் விக்கிரமுக்காகக் காத்துக் கொண்டு உட்கார்ந் திருந்தான்.

விக்கிரம் வெளியே வந்ததுமே அவன்மீது பாய்ந்துவிட வேண்டும் என்று தயாராயிருந்தான்.

நேரம் கழிந்து கொண்டேயிருந்தது. சுவர்க் கடியாரம் நான்கு மணி அடித்து விட்டு ஓய்ந்தது.

அதிக நேரம் உட்கார முடியாமல் எழுந்து ரிஸப்ஷனை நோக்கி மெல்ல நகர்ந்தான்.

அதற்குள் பக்கத்திலிருந்த ஆபரேட்டரின் குரல் கேட்டது.

அவள் போனில் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் சந்திரனை அப்படியே நிற்கச் செய்து விட்டது.

டக்கென்று நின்றவன் சந்தேகம் வராமலிருக்க இரண்டடிகள் அந்தப் பக்கமாய் நகர்ந்தான்.

"ரெண்டு மணியிலேருநது 116வது ரூமிலிருந்து நோ ரெஸ்பான்ஸ். வெளியே போயிருக்கலாம். இப்போ திரும்பி முயற்சி பண்றேன். நீங்க எங்கேயிருந்து?... கல்கத்தாவி லிருந்தா? ஓகே" என்று ரூம் நம்பர் 116க்கு கனெக்ஷன் தரும் முயற்சியில் ஆழ்ந்திருந்தாள் ஆபரேடர்.

சந்திரனுக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை. அந்தப் போனை கிராஸ் பண்ணிக் கேட்டால் ஏதாவது உபயோகமான செய்தி கிடைக்கலாம். ஆனால் எப்படி? அவள் சம்மதிப்பாளா? இந்தக் குறுகிய நேரத்திற்குள் அவளோடு பரிச்சயமில்லாமல் தான் நினைத்த காரியத்தை சாதிக்க முடியாது. பார்த்துக் கொண்டிருந்த போதே அருமையான சந்தர்ப்பம் கைநழுவிப் போய்க் கொண் டிருப்பது போல் தோன்றிற்று சந்திரனுக்கு.

குட்டி போட்ட பூனையைப் போல அவ்விடத்திலேயே சுற்றிக் கொண்டிருந்தான்.

திரும்பிப் போன் வருவதற்குள் இவளைக் கெஞ்சியோ, மிரட்டியோ தான் நினைத்ததை சாதித்துக் கொண்டு விட வேண்டும்.

அவளை ஒரு முறை பார்த்தான். அழகாய் தான் இருந்தாள்.

அந்த நிமிஷத்திலிருந்து விக்கிரமை தற்காலிய மாய் விட்டுவிட்டான்.

அவள் டியூடியை முடித்துக் கொண்டு வீட்டிற்கு எப்பொழுது கிளம்புவாள் என்று வேட்டை நாயாய்க் காத்திருக்கத் தொடங்கினான்

o o o

ராஜசேகர் ஏறிய டாக்சி கல்கத்தா வீதியில் வேகமாய் பறந்துக் கொண்டிருந்தது.

அடுத்த அரைமணியில் அது சௌரங்கி வீதி முனையில் நின்றுவிட்டது.

டாக்சிக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டு ஒரு நிமிஷம் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அதே வீதியில் மூன்றாவது வரிசையில் ஒரு பாழடைந்த எல்லையில் போதைப் பொருட்களை விற்கும் இருட்டுலகம் இருப்பதாகத் தெரிந்து கொண்டு வந்திருந்தான் ராஜசேகர் — அவ்வெல்லையில் எப்படிப்பட்ட ஆபத்து ஏற்பட்டாலும் எதிர்த்து நிற்கத் துணிந்து.

மெல்ல இருட்டுலகத்தை நோக்கிப் புறப்பட்டான். அவ்விடம் நிசப்தமாயிருந்தது. மயானத்தைப் போல பயங்கரமாயிருந்த அவ்விடத்தில் பாழடைந்த பழைய கட்டடங்களும், உடைந்த சுவர்களும், அவற்றுக்கிடையே வளர்ந்திருந்த களைச் செடிகளும் இருட்டுலக வியாபாரத்திற்குத் திரைமறைவுகளாய்ப் பயன்பட்டன.

அவன் வாழ்க்கையில் என்றுமே அப்படிப்பட்ட இடங்களைப் பார்த்ததில்லை. கல்கத்தா போன்ற பெரிய பட்டினத்தில் ஒவ்வொரு விநாடியும் பாரா காக்கும் போலீசாருக்கிடையே சட்டவிரோதமான இவ்வியாபாரம் தான் பாட்டிற்கு நடந்துக் கொண்டிருக்கிறது.

அதற்குள் ஒரு ஆள் வேகமாய் ராஜசேகரிடம் வந்தான். அவன் போதைப் பொருளின் மயக்கத்தில் இருந்த போதிலும் அவனது பார்வை நெருப்புக் கோளங்களாயிருந்தன.

அவன் பயங்கரமாய் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு— "யார் நீ?" என்று கேட்டான் சந்தேகத்தோடு.

தயங்காமல் சட்டென்று சொன்னான் ராஜசேகர். "பழைய ஆள். ஆனால் இப்பல்லாம். இந்தப் பக்கம் வரதில்லை!"

அவன் ஓஹோ என்று தலையாட்டிவிட்டு "வேணுமா?" என்றான்.

'ஆமாம்' என்று தலையாட்டினான் ராஜசேகர், அவன் சட்டென்று காலைத் தூக்கி பூட்சைப் பிரித்து சாக்ஸிற்குள் இருந்த வெள்ளைப் பொட்டலத்தை வெளியே எடுத்தான். அது சிறிய பாக்கெட். அதற்குள் வெள்ளை நிறப்பொடி நிரப்பியிருந்தது.

கொஞ்சம் தயங்கினாலும் சந்தேகம் வந்துவிடும். சட்டென்று ஜேபியிலிருந்து பர்சை வெளியே எடுத்து— அந்த பாக்கெட்டிற்கு எவ்வளவு தரவேண்டும் என்று தெரியா விட்டாலும் நூறு ரூபாய் தாளை எடுத்துத் தந்தான்.

அவன் முகம் மலர்ந்து நூறு ரூபாயை வாங்கிக் கொண்டு பொட்டலத்தைத் தந்தான்.

அவன் போனபோது பூனையைப் போல மெதுவாய் அவனைப் பின்தொடர்ந்தான். ஓரிடத்தில் அவனைச் சேர்ந்தவர்கள் நிறையப் பேர் இருந்தார்கள். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு இடிந்த சுவரின்மேல் சாய்ந்து கொண்டு ஹுக்கா பிடித்துக் கொண்டு வேறு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

தைரியமாய் அடிமேலடி எடுத்து வைத்தபடி அவர் களைத் தாண்டிக் கொண்டு முன்னுக்குப் போய்க் கொண்டேயிருந்தான். உள்ளே சில இளம் பெண்களும் தென்பட்டார்கள். அவர்களை நோக்கி நடந்தான்.

ஒருவர்மீது ஒருவர் விழுந்து புரண்டு கொண்டிருந்ததால்- இருட்டில் அவர்கள் முகங்கள் தெளிவாய் அவனுக்குத் தெரியவில்லை.

அதே சமயத்தில் போலீஸ் விசில் சப்தம் கேட்டது.

ராஜசேகர் ஒரு விநாடி அதிர்ந்து விட்டான்.

அவன் அதற்காக வராவிட்டாலும், அவர்கள் கையில் சிக்கிவிட்டால் பிறகு ஜெயில்தான் கதி. விசாரணை எல்லாம் முடிந்து தான் குற்றமற்றவன் என்று தெரிவ தற்குள் பல நாட்கள் கழிந்து போய்விடும். அதற்குள் தன் திட்டம் அத்தனையும் சிதைந்துவிடும்.

அப்பொழுதுதான் தான் பண்ணிய தப்பிற்கு வருந்தினான் அவன். இருட்டுலகத்திற்குள் வராமலேயே வீதிக்கு வெளியே இருந்தபடியே இதைக் கண்காணித் திருக்க வேண்டும்.

இனி சிந்தித்து லாபமில்லை. போலீஸ் விசில்கள் வெகு அண்மையில் கேட்கத் தொடங்கின. அவர்களின் பூட்ஸ் சப்தங்கள் அந்தப் பாழடைந்த எல்லையில் மிக நன்றாய் எதிரொலித்தன.

ஒரு விநாடி தாமதித்தாலும் அவர்கள் கையில் சிக்கிவிட நேரும்.

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் புயலாய் இன்னொரு திசையை நோக்கி ஓடத் தொடங்கினான்.

வழியில் என்ன இருந்தது என்று பார்க்கக் கூடிய நிலையில் இல்லை.

சின்னச் சின்னச் சுவர்களையும், காட்டுச் செடி கொடிகளையும் தாண்டிக் கொண்டே போனான். இப்பொழுது அவனுக்கு உயிர் பயமோ, போலீஸ் பயமோ கூட இல்லை. தான் பிடிபட்டு விட்டால் தன் திட்ட மெல்லாம் பாழாகி விடுமே என்ற பயந்தான் அதிகமா யிருந்தது.

போலீஸ் விசில் சப்தம் மெல்ல மெல்ல தேய்ந்துக் கொண்டிருந்தது. அதற்குள் அவன் வெகு தூரம் வந்து விட்டிருந்தான்.

ஒரு விநாடி நின்று நான்கு புறங்களையும் பார்த்துக் கொண்டு நிம்மதியாய் மூச்சு விட்டான். மிகக் களைப் பாயிருந்தது. தலைச்சுற்றிக் கொண்டிருந்தது.

இருட்டுலகத்து எல்லையில் போதைப் பொருட்களை உண்டவர்கள் விட்ட புகை உள்ளே போனதால் உடம் பெல்லாம் மிதந்து கொண்டிருந்தாற் போலிருந்தது.

எந்த நிமிஷத்திலும் நினைவுத் தப்பி விடலாம் போலி ருந்தது.

உடனே போய் ஓட்டலில் விழுந்துவிட வேண்டும். மூடிக்கொண்டு போன கண்களை பலவந்தமாய் திறந்துக் கொண்டே தொலைவில் தென்பட்ட மெயின் ரோடை நோக்கி தளர்ந்த நடையோடு நகர்ந்தான்.

40

சித்தரஞ்சனின் ஆபீஸ் பரபரபபாயிருந்தது.

அன்றைக்குதான் ஷூட்டிங் தொடங்கிற்று.

செட் சாதனங்கள், அவுட்டோர் யூனிட், மாடல்கள், மேக்கப் மேன், கேமிரா மேன், கேமிரா சாதனங்கள் எல்லாம் இரண்டு வேன்களில் லொகேஷனுக்கு அனுப்பி வைக்கச் சித்தமாயிருந்தான் கைலாசன்.

அதற்கு முன்னதாகவே மார்கெட்டிங் டைரக்டர் வாசுவை மிரட்டி, கோரமண்டல் தயாரித்திருந்த நான்கு சோப்புகளின் கார்ட்டன்கள், லோகோ, சின்னம், பிராண்ட் பெயர், அத்தனையும் வரவழைத்துக் கொண் டிருந்தான் சித்தரஞ்சன். அத்தனை பரபரப்பிலும் கூட

சித்தரஞ்சன் காதம்பரியைப் பற்றியே தான் யோசித்துக் கொண்டிருந்தான்.

நேற்றிரவு ஓட்டலுக்கு வருவதாகச் சொன்னாள். ஆனால் வரவில்லை. எதிர்பார்த்துப் பார்த்து ஏமாற்றத் தோடு கோபமாய் திரும்பி வந்து விட்டான். அத்துடன் ஐந்து லட்சம் கேஷை வாங்கிக் கொண்டு விட்டாள். வேறு ஏதாவது தப்பு நேர்ந்து விட்டதா? அல்லது ஏமாற்றி விட்டாளா?...

இன்னும் கைலாசன் தான் பண்ணிய அக்கிரமச் செயலைப் பற்றி சித்தரஞ்சனிடம் சொல்லவில்லை.

அதற்குள் பூடானி வந்தான். "சரிதாம்மா பம்பாய்க்குப் போறதாயும் ரெண்டு மூணு நாளில் வரதாயும் சொல்லச் சொன்னாங்க" என்றான் விநயமாய்.

மகள் பேச்சு அடிப்பட்டதுமே அவனிடம் அதுவரை யிலும் இருந்துவந்த குரூரமான யோசனைகள் சட்டென்று ஓடி ஒளிந்தன. உதடுகளில் லேசாய் மந்தகாசம் தவழ்ந்தது.

தன் உயிருக்குயிரான மகள்கோடீஸ்வரி ஆகவேண்டும். நாட்டிலேயே ஃபேஷன் ராணியாக ஆக வேண்டும். எந்தக் குறையுமில்லாமல், எந்த அதிருப்தியும் இல்லாமல் மகாராணியாய் சந்தோஷமாய் வாழவேண்டும்.

அதற்காக எத்தனை கொலைகளைப் பண்ண வேண்டியிருந்தாலும் பண்ணச் செய்து விடுவான்.

சித்தரஞ்சன் எழுந்திருந்தான். மூக்குக் கண்ணாடியைக் கழற்றினான். ஆனால் பூடானி பயப்படவில்லை. காரணம் அப்பொழுது சித்தரஞ்சனின் பார்வையிலிருந்த குரூரத்தனத்தை அவனுடைய உயிருக்குயிரான மகளின் யோசனைகள் விழுங்கி விட்டன.

பூடானியின் தோளைத் தட்டிவிட்டு, "ஜாக்கிரதை யாயிரு" என்று எச்சரித்து விட்டு வெளியே நடந்தான்.

புழுதியைக் கிளப்பிக் கொண்டே இரண்டு வேன்களும், இரண்டு கார்களும், இரண்டு ஜீப்களும் லொகேஷனை நோக்கிப் புறப்பட்டன. அவற்றைப் பார்த்துத் திருப்தியோடு தலையாட்டிக் கொண்டிருந்தான் சித்தரஞ்சன்,

அவ்வளவு சந்தோஷத்திலும், மது பண்ணிய காரியத்தால் நின்றுவிட்ட பத்து லட்சங்களும், காதம்பரிக்குத் தந்த ஐந்து லட்சங்களும், டைர்ஸ் பிலிம் நிறுத்தப்பட்டு விட்டதால் ஏற்பட்ட மூன்று லட்சம் நஷ்டமும் அவனுக்குக் கண்முன் தெரியாத கோபத்தை வரவழைத்துக் கொண்டிருந்தன.

பதினோராவது நாள் மது கொடுக்கப் போகும் உதை என்னவாயிருக்கும் என்று யோசித்தவாறே போனை நோக்கி நடந்தான். இந்த நஷ்டத்திற்கு ஈடு கட்டிக் கொள்ள வேண்டுமானால் விக்கிரமை வீழ்த்திவிட வேண்டும். இந்தத் துறையில் ரெடியாயிருந்த மூன்று பார்ட்டிகளைப் போன மூலமே தொடர்பு கொண்டு ரெடியாக்கி வைத்தான்.

o o o

ராஜசேகரால் இருட்டுலகத்திலிருந்து வெளியே வந்து ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்த இரண்டு மணி நேரங்கழித்து கூட அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியவில்லை.

தம்மை மாடல்களாக்க வேண்டுமென்று பல ஆயிரக் கணக்கான பேர்கள் முயற்சித்ததைப் பார்த்திருக்கிறான். சீனியர் ப்ரொபஷனல் மாடல்களைக் கூட அழைத்துக் கொண்டு தன்னிடம் வரத்தொடங்கியதையும் கண்டிருக்கிறான் அவன். ஆனால் அப்படிப்பட்ட அவனே ஒரு பெண்ணிற்குப் பின்னால் ஓடிக் கொண்டிருப்பது இதுதான் முதல் முறை. இன்னும் நாலு நாட்கள் தான் கெடு இருந்தது. அதற்குள் முயற்சி பண்ணித் தீரவேண்டும்.

எழுந்து நடை பயின்று யோசிக்கத் தொடங்கினான்.

இதுதான் அவன் கடைசி முயற்சி. இந்த முயற்சியில் அவள் மட்டும் தென்படாவிட்டால் அதற்குமேல் ராஜசேகர் விளம்பர உலகத்தில் இருக்க மாட்டான். உறுதியாய் யோசிக்கத் தொடங்கினான்.

மின்னலாய் ஒரு ஐடியா உதித்தது.

இந்தக் கடைசி வேட்டையில் அவள் கண்டிப்பாய் கிடைத்துத் தீர வேண்டும்.

உடனே டெலிபோன் டைரக்டரியை எடுத்தான். நகரத்திலுள்ள ப்யூட்டி பார்லெர் சென்டர்களை நோட் பண்ணத் தொடங்கினான்.

இம்முறை ஜாக்கிரதையாய் வலை பின்னவேண்டும் என்றெண்ணிக் கொண்டே தன் வேலையில் ஆழ்ந்தான்.

பேப்பரில் போன் நம்பர்கள் நிரம்பி வழிந்துக் கொண்டேயிருந்தன.

சரியாய் அதே சமயத்தில் மது கல்கத்தாவிலிருந்த எல்லா ஓட்டல்களுக்கும் போன்பண்ணி முடித்துவிட்டான். இனி எஞ்சியிருந்தவை ஒபராய் ஓட்டலும் வெல்கம் ஓட்டலுந்தான்.

அங்கே ராஜசேகர் முடிவடைந்த லிஸ்டை எடுத்துக் கொண்டு போன் நம்பர்களைச் சுழற்றத் தொடங்கினான்.

அடிக்கடி இண்டர்நேஷனல் ஃபேஷன் ஷோவில் பங்கெடுத்துக் கொள்கிறாள் தரங்கிணி. அப்படியானால் தன் அழகின் மேல் தகுந்த சிரத்தையை அவள் எப்பொழுது காட்டிக் கொண்டேயிருக்க வேண்டும். அதன்படி அவ்வப் பொழுது ஏதாவது பியூட்டி க்ளினிக்குகளுக்குப் போய் புருவங்களை வளைவாக்கிக் கொள்வது பேஷன்றவை களையும், ஸ்டீம் பாத், மசாஜ் போன்றவைகளையும்

பண்ணிக் கொண்டிருக்கவேண்டும். ஏதாவது ஒரு க்ளினிக்கிற்கு அடிக்கடி போக வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு நம்பராய் சுழற்றி தரங்கிணியைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினான்.

அங்கே மதுவும் சந்திரனும் போனுடன் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தெரிந்து கொண்டிருந்த அரிதான விஷயத்தைத் தெரியப்படுத்தினாலேயொழிய ராஜசேகருக்கு தரங்கிணி கிடைக்கமாட்டாள்.

இந்த அரிதான விஷயத்தைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டுமானால் ஒருநாள் பின்னுக்குப் போக வேண்டும்—

சர்வோதயா ஓட்டல் டெலிபோன் ஆபரேட்டர் டியூட்டியை முடித்துக் கொண்டு சீட்டிலிருந்து எழுந்திருந்து வீட்டிற்குப் புறபட்டதுமே சந்திரன் நிழலாய் அவளைப் பின்தொடரத் தொடங்கினான்.

முதலில் அவள் போன ஆட்டோவைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் போனான் சந்திரன்.

விக்கிரமுக்கு வரும் போன்களில் ஏதோ ரகசியம் ஒளிந்திருக்க வேண்டும். அது தெரிந்தால்தான் இதில் முன்னோக்கி அடியெடுத்து வைக்க முடியும். இவளிடமிருந்து தான் தெரிந்துக் கொள்ள வேண்டும் அதை.

ஆட்டோ மைலாப்பூரிலிருந்த ஒரு வீட்டிற்கு முன்னால் நின்றது. அந்த வழியில்தான் காதம்பரியின் வீடு இருந்தது. ஆனால் அவளைப்பற்றி யோசிக்கும் நிலையில் இல்லை சந்திரன்.

அவள் வீட்டிற்குள் போனதுமே தெருவிலேயே மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு தைரியமாய் உள்ளே போனான் அவனும். சந்திரன் கொஞ்சம் தைரியசாலி, என்னவானாலும் ஆகிக் கொள்ளட்டும் என்று எதற்கும் துணிச்சலோடு நடந்துக் கொள்பவன்.

அவளைத் தன் வழிக்கு எப்படி கொண்டு வருவது என்று வழியிலேயே நன்றாய் யோசித்துக் கொண்டு விட்டான்.

முதலில் அவள் பேசும் விஷயத்தையும் நடையுடை பாவனைகளையும் ஆராய்ந்தான். பரவாயில்லை. கவன மாய் நடந்துக் கொண்டால் மாடலிங் சான்சைக் காட்டித் தன் வழிக்கு இழுத்துக் கொள்ள முடியும்.

அப்படிப் பண்ணுவது தவறானாலும் ஆபத்துக்கு தோஷமில்லை.

ஜேபியிலிருந்து தன் விசிட்டிங் கார்டை வெளியே எடுத்தான்,

திருப்தியுடன் கதவைத் தட்டினான். அவள் வந்தாள்.

அவளை முறுவலோடு பார்த்தான்.

அவளுக்கு விளங்கவில்லை. அதனால் சந்திரனை வியப்போடு பார்த்தாள். விசிடிங் கார்டை காட்டினான்.

அவள் அதைப் பார்த்தாள். முதலில் புரியாமல் புருவங் களைத் தூக்கினாள். சட்டென்று முகம் மலரத் தொடங் கிற்று.

விளம்பர போட்டோகிராப்பர்கள் அவ்வப்பொழுது வேலை பார்க்கும் பெண்களையும், கல்லூரிப் பெண்களை யும் இது போல் தான் நெருங்குவார்கள்— மாடலிங் பண்ணுகிறீர்களா என்று கேட்பதற்காக. அது அவளுக்கு இதற்கு முன்பே தெரிந்திருந்ததால் மாடலிங் அதிர்ஷ்டம் தன்னைத் தேடிக்கொண்டு வந்திருப்பதை உணர்ந்து, மகிழ்ச்சியடைந்து போய் சந்திரனை மரியாதையாய் உட்காரச் சொல்லி வரவேற்றாள்.

அது போதும் சந்திரனுக்கு.

அவள் தந்த காபியைக் குடித்து முடிப்பதற்குள் முற்றி லும் தன் பக்கம் அவளைத் திருப்பிக் கொண்டு விட்டான்.

அவள் இப்பொழுது சந்திரன் எதைச் சொன்னாலும் அதைச் செய்யத் தயாராகி விட்டாள்.

தான் பண்ணுவது பாஸுக்குத் தெரிந்தால் தன்னை மன்னிக்கமாட்டார் என்று தெரியும் அவனுக்கு.

காரியத்திற்காகவோ, சுகத்திற்காகவோ பெண்களை வலையில் போட்டுக் கொள்வது ராஜசேகருக்குப் பிடிக்காத விஷயம்.

அதற்கும் உபாயத்தை யோசித்து வைத்து விட்டான் சந்திரன். அவள் நிராசை அடைந்துவிடாமல், தானே அவளுக்கு வாக்களித்து விட்டதாகக் கூறி மாடலிங்கில் ஒரு சான்ஸ் தந்துவிட வேண்டும் என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான்.

அவள் கொஞ்சம் அதிகப்படியாய் சுவாதீனத்தை எடுத்துக் கொண்டது சந்திரனுக்கு சங்கடமாய் இருந்த போதிலும் வேறு வழி தெரியவில்லை.

அவள் உரிமையோடு வந்து சந்திரனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டாள். மெல்ல மெல்ல கிட்டே வரத் தொடங்கினாள்.

அவளிடமிருந்து வந்த மயக்கத்தைத் தரும் ஸ்ப்ரே நாற்றம் சந்திரனுக்குத் தொல்லையாயிருந்தது.

அவளைப் பார்த்தான். மயக்கும் பார்வையால் அவனை வலையில் வீழ்த்த முயன்று கொண்டிருந்தாள் அவள்.

ஏறக்குறைய அவள் உடம்பெல்லாம் சந்திரனின் மேல் வந்து விழுந்துக் கொண்டிருந்தது.

அவள் ஏன் அவ்வாறு பண்ணுகிறாள் என்று புரிந்துக் கொள்ளத் தெரியாதவனில்லை சந்திரன்.

தன் கால்களில் தடவிக் கொண்டிருந்த அவள் கால் களிலிருந்து விலகிக் கொண்டே அதைப் பற்றிக் கேட்டான்.

முதலில் அவள் ஆச்சரியமடைந்து விட்டாள்.

பயந்து விட்டாள்.

"அப்படிப் பண்ணியது தெரிஞ்சால் என் வேலை போயிடும்." என்றாள்.

"யாருக்கும் சந்தேகம் வராமல் பண்ணுங்க. நான் வெளியிலேயே இருக்கேன். இந்தச் சின்ன உதவியைப் பண்ணுங்க, போதும். அதுக்குக் கைம்மாறாய் உங்களை ராஜசேகரிடம் மாடலாய் பண்றேன். அவர் கையில் சேர்ந்துட்டால் நீங்க எப்படி முன்னுக்கு வந்துடுவிங்கன்னு யோசித்துப் பாருங்க." என்று அவளைப் பார்த்தான்.

கொஞ்ச நேரம் யோசித்து விட்டு, "ஓ. கே" என்றாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் இருவரும் மோட்டார் சைக்கிளில் ஒட்டலுக்குக் கிளம்பினார்கள்.

சந்திரன் வெளியிலேயே ஒரு கடைக்கருகில் நின்று கொண்டான். அங்கே அவள் போன் பண்ணும்படி ஏற்பாடு பண்ணினான் சந்திரன்.

ஒரு மணி நேரம் கழிந்து விட்டது. இன்னும் அப்படியே கடைக்கு முன்னால் நின்றான். அவளிடமிருந்து போனே வரவில்லை.

யோசித்துக் கொண்டிருந்த போதே போன் மணி யடித்தது. டக்கென்று போனைக் கையிலெடுத்துக் கொண்டான். கடைக்காரனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

தன் போனைத் தன்னையும் முந்திக்கொண்டு அவன் கையிலெடுத்துக் கொண்டது கோபத்தை வரவழைத்தது.

இதொன்றையும் கவனிக்கும் நிலையில்லை அவன்.

போனில் அவள் பேசினாள்.

"இப்பத்தான் கல்கத்தாவிலிருந்து ஒரு போன் வந்தது. அந்த ஆள் விக்கிரமோடு பேசினான்..."

"என்ன பேசினான்? யார் அது?"— பரப்பாய் வந்தது அவன் வாயிலிருந்து.

"சௌரங்கி ரோடு பக்கமாய் போகிறான்னு—"

"வேறொண்ணும் சொல்லலையா?"— சந்திரன் அலுப்படைந்தான்.

"இல்லை... ஆனால் உடனே விக்ரம் இன்னொரு போன் கால் கல்கத்தா ஓரபாய் ஓட்டலுக்கு புக் பண்ணச் சொன்னான்..."

சந்திரனின் புருவம் ஏறிற்று.

இதில் ஏதேர மர்மம் ஒளிந்துக் கொண்டிருக்கிறது. இரகசியமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஒவ்வொரு அடியையும். அதை இன்றே சிதறடித்துவிட வேண்டும் என்றெண்ணிக் கொண்டான் மனத்திற்குள்.

"அந்தக் காலைக் கூட கிராஸ் பண்ணுங்க, ப்ளீஸ்" என்றான். அவள் போனை வைத்து விட்டாள்

நேரம் கழிந்துக் கொண்டிருந்தது.

சந்திரன் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டு போனையே பார்த்தபடி இருந்தான். அவனுக்கு எல்லாம் குழப்பமாயிருந்தது.

ராஜசேகரன் கல்கத்தாவுக்குப் போயிருக்கிறான். கல்கத்தாவிலிருந்தே விக்கிரமுக்குப் போன் வந்ததும்— இவன் பண்ணியதும்— கடைக்காரன் எழுந்திருந்தான்.

"இனி போயிட்டு வாங்க சார், நான் கடையை மூடணும்!"— மூஞ்சியில் அறைந்தாற்போல சொன்னான்.

சந்திரனுக்கு ஆத்திரமாய் வந்தது. கெஞ்சிப்பார் தான். கேட்கவில்லை. அவனுக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை.

இந்த சான்ஸ் போய்விட்டால் திரும்பி வராது. நேரமும் அதிகம் இல்லை. இந்த ரகசியத்தைக் கண்டுப்பிடித்து ராஜசேகருக்கு உடனே தெரியப்படுத்திவிட வேண்டும்.

சந்திரன் சட்டென்று அரக்கனாகிவிட்டான். ஜேபியி லிருந்து கத்தியை வெளியே எடுத்தான்.

''என் வேலை முடியும் வரைக்கும் கடையை மூடக் கூடாது. நான் ஏற்கனவே கெட்டவன். கத்தியோடு விளை யாடுவது எனக்கு பொழுதுபோக்கு. வேணும்னால் ஷட்டரை இறக்கிக் கொள்வோம்..'' என்றான் கடுமை யாய்.

கடைப்பையன் பயந்து விட்டான்

ஷட்டரை இறக்கி விட்டான்.

அடுத்த அரைமணியில் போன் மணியடித்தது.

சந்திரன் சட்டென்று போனை எடுத்தான்.

''விக்கிரம் மறுமுனையில் யாரோடு போசினான்னு தெரியாது. ஆனால் அது யாரோ பெண். 'அவன் சௌரங்கி ரோடு பக்கமாய் போகிறான். அந்த பக்கமாய் போகாதே'ன்னு சொல்லிட்டுப் போனை வைத்துட்டான்'' என்றாள்.

சந்திரனுக்கு எதுவும் புரியவில்லை.

அடுத்த நிமிஷம் சந்திரன் ஏறிய மோட்டார் சைக்கிள் வேகமாய் பறந்தது ஆபீசை நோக்கி. வேகமாய் ஓட்டிக் கொண்டே போனில் வந்த செய்திகளை நன்றாய் மனப்பாடம் பண்ணிக் கொண்டான், மறந்து போய் விடாமலிருக்க.

சந்திரன் போய்ச் சேர்ந்தபோது நல்ல வேளையாய் மது அங்கேயே இருந்தான்.

இருவரும் மூளையைக் கசக்கிக் கொண்டார்கள் வெகு நேரம்.

அதுவரை மது கல்கத்தா ஓட்டல்களுக்கெல்லாம் போன் பண்ணிப் பார்த்து விட்டான், ராஜசேகருக்காக.

சௌரங்கி ரோடு பக்கமாய் போன அந்த ஆள் யார்? அதற்குப் பிறகு விக்கிரம் பேசியது யாரோடு? மறுமுனைப் பெண் யார்? எவ்வளவு யோசித்துப் பார்த்தும் எதுவும் புரிபடவில்லை.

சேகரித்து வைத்திருக்கும் இந்த சங்கதிகளையெல்லாம் ஒருக்கால் ராஜசேகருக்குச் சேர்ப்பிக்க முடிந்தால் அவனுக்கு ஏதாவது யோசனை வரலாம்

அதற்குள் சந்திரன் சொன்னான், ''சார், விக்கிரம் அன்றைக்கு விமான நிலையத்துக்கு வந்து நம்ப பாஸைப் பார்த்துப் போன் பண்ணினான் யாருக்கோ... அதை வெச்சுட்டுப் பார்த்தால் நம் பாஸின் ஒவ்வொரு நடவடிக்கையையும் மறுமுனையில் யாருக்கோ தெரியப் படுத்திட்டிருக்கான்னு தோணுது. இப்போது நம் பாஸுக்கு ஏற்படுத்தக் கூடிய நஷ்டம் ஒன்றே ஒன்றுதான். தரங்கிணி கிடைக்காமல் பண்றது... அப்படீன்னால்...'' சட்டென்று மதுவுக்கு ஏதோ புரிந்தாற் போலிருந்தது.

'அதாவது... தரங்கிணி நம்ப பாஸுக்குக் கிடைத் துடாமல் பண்ண சுறுசுறுப்பாய் முயற்சி நடந்துட்டிருக்கு. இத்தனையையும் நடத்தி வருவது விக்கிரம். விக்கிரமுக்கும் சித்தரஞ்சனுக்கும் ஏதோ கொடுக்கல் வாங்கல் தொடர்பு இருக்கும். அதனால் சித்தரஞ்சன் இந்த நாடகத்தை யெல்லாம் விக்கிரம் மூலமாய் ஆடிண்டிருக்கான்னு தோணுது... அது சரி, இந்த தரங்கிணி யார்?'— யோசித்த வாறே போனை எடுத்துக் கொண்டான் மது.

''நான் எப்படியாவது ராஜசேகரைப் போனில் தொடர்பு கொண்டு இந்த விஷயத்தைச் சொல்லிடறேன். நீ அதற்குள் விக்கிரமுக்கும் சித்தரஞ்சனுக்கும் உள்ள தொடர்பு, அந்த கோடவுனில் என்ன இருக்கு, தரங் கிணிக்கும் விக்கிரமுக்கும் என்ன சம்பந்தம், விக்கிரம் ஆட்டுவிப்பதுபோல தரங்கிணி ஏன் ஆடணும், என்ற விஷயத்தையெல்லாம் கண்டுப்பிடி. க்விக், டைம் இல்லை,

எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு நல்லது'' என்றான்.

சந்திரன் சட்டென்று எழுந்தான். அதற்குள் ஏதோ யோசனை வரவே, ''நாம்ப விக்கிரமிடமிருந்து கல்கத்தாவுக்கு சங்கதி போக முடியாமல் தடுத்துட்டால், அவள் சட்டென்று நம்ப பாஸுக்குக் கிடைக்க சான்ஸ் இருக்கலாமோ?...''

மது சந்திரனைப் புகழ்ச்சியோடு பார்த்தான். எவ்வளவு பெரிய விஷயத்தை சுறுசுறுப்பாய் யோசிக்க—முடிந்தது இவனால்!

''நிஜந்தான். ஆனால் அவங்க நாடகமாடிண்டிருக்காங்கன்னு திட்டமாய் தெரிஞ்சால்தானே...?''

அதைக் கேட்ட சந்திரன் வேகமாகப் பறந்தான் அங்கிருந்து.

நேரம் ஆறடிக்கவிருந்தது. அந்த சமயத்தில் சித்த ரஞ்சன் எங்கே இருப்பான் என்று சந்திரனுக்குத் தெரியும்.

சந்திரனின் மோட்டார் சைக்கிள் டெலிபோன் எக்ஸ்சேஞ்சை நோக்கிப் புறப்பட்டது.

சரியாய் அதே சமயத்தில் சர்வோதயா ஓட்டல் டெலிபோன் ஆபரேட்டர் டியூட்டி முடிந்து எழுந்திருந்தாள் புது ஆபரேட்டர் சீட்டிற்கு வந்தாள்.

அப்பொழுதுதான் கல்கத்தாவிலிருந்து வந்த போன் ரூம் நம்பர் 116க்கு கனெக்ஷன் தரப்பட்டது.

ராஜசேகர் கல்கத்தாவில் ஓட்டலில் உட்கார்ந்து கொண்டு பியூட்டி பார்லர்களுக்குப் போன் பண்ணிக் கொண்டிருந்தான், தரங்கிணிக்காக.

பதினைந்து நிமிஷத்தில் சந்திரன் ஏறிய மோட்டார் சைக்கிள் டெலிபோன் எக்சேஞ்சுக்கு முன்னால் வந்து நின்றது.

சந்திரனின் நண்பனொருவன் எக்சேஞ்சில் வேலை பண்ணிக் கொண்டிருந்தான். அவன் உதவியோடு சித்தரஞ்சன் கெஸ்ட் ஹவுஸ் போனை க்ராஸ் பண்ணிக் கேட்க வேண்டும் என்பது சந்திரனின் யோசனை.

நண்பனைச் சந்தித்து தான் வந்த விஷயத்தைச் சொன்னான். அவன் கொஞ்ச நேரம் யோசித்துப்பார்த்து தலையாட்டிவிட்டு, ''லாபமில்லை சந்திரா! போனை ஆப்சர்வேஷனில் வைக்கணும். ஆப்சர்வேஷனில் வைக்கணும்னால் கம்பளைண்ட் எழுதித்தரணும். இதை அவரே எழுதித்தரணும்...''

''சரி போகட்டும். வேறு எந்த வழியிலாவது கேட்க முடியாதா? ப்ளீஸ்... ரொம்ப முக்கியம்... எப்படியாவது...'' கெஞ்சினான் சந்திரன்.

''அது ரொம்ப ரிஸ்க் ஆயிடும்!''

''வேறென்ன வழி?''

''ஒரு காரியம் பண்ணு. நான் உன்னிடம் ஒரு லைன் மேனை அனுப்பி வைக்கிறேன். அவனிடம் டெலிபோன் கம்பத்தில் ஏறி லைனை செக் பண்ற ஹேண்ட் போன் இருக்கும். நீ சொல்ற டெலிபோன் இருக்கிற வீட்டிற் கருகில் உள்ள கம்பத்தில் ஏறிட்டால் உன் வேலை ஆகும்...''என்றான்.

''போதும்... அவ்வளவு போதும். அவனை உடனே அனுப்பி வைக்க முடியுமா?''

அடுத்த ஐந்தாவது நிமிஷம் லைன் மேனை ஏற்றிக் கொண்டு சந்திரன் வாயு வேகத்தில் சர்வோதயா ஓட்டல் பக்கம் பறந்தான் இரவு பத்தாகி விட்டது. ஓரிடத்தில் தெருவோரமாய் மோட்டார் சைக்கிளை நிறுத்தினான் சந்திரன். அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் சித்தரஞ்சனின் கெஸ்ட் ஹவுஸ் லேசாய் தென்பட்டது.

கண்ணாடி ஜன்னல்கள் வழியாய் விளக்கு வெளிச்சம் வெளியே தெறித்துக் கொண்டிருந்தது.

லைன் மேனுக்கு அதற்குள் நூறுரூபாய் தந்திருந்தான் சந்திரன். அவன் வெகு உற்சாகமாய் இருந்தான்.

போன் கம்பத்தில் ஏறுவதற்காக இருவரும் இருட்டில் மெல்ல அடியெடுத்து வைத்துக் கொண்டே நூறடி தூரத்தி லிருந்த சித்தரஞ்சனின் கெஸ்ட் ஹவுஸுக்கு எதிரில் இருந்த போன் கம்பத்தை நோக்கி நிசப்தமாய் பதுங்கிக்கொண்டே போய்க் கொண்டிருந்தார்கள். சுற்றிலும் காரிருள். எதுவுமே தென்படவில்லை. கெஸ்ட் ஹவுசிலிருந்து வெளியே வந்த மங்கலான விளக்கு வெளிச்சத்தில் அவ்வெல்லை முழுவதும் மங்கலாய்த் தெரிந்து கொண் டிருந்தது.

மெதுவாய் அடிமேலடி எடுத்து வைத்துக் கொண்டே, பயந்தவாறிருந்த லைன் மேனை ஒரு கையால் பிடித்துக் கொண்டே முன்னோக்கி நடந்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

கம்பத்திற்குக் கீழே வந்ததுமே, "ஏறட்டுமா?" என்றான் லைன் மேன்.

"வேண்டாம்... நானே ஏறுகிறேன். மேலே ஏறியதும் ஒயர்களை எப்படி கனெக்ஷன் பண்றதுன்னு சொல்லு... அது போதும்!"— அந்தப் பேச்சுகள் அவனுக்குத் தெரிவதை விரும்பவில்லை சந்திரன்.

அவன் காதில் குசுகுசுவென்று சொல்லித் தந்தான். பேன்ட்டையும் சட்டையையும் கழற்றி வைத்து விட்டு ஹேண்ட் பீசை அவன் கையிலிருந்து வாங்கிக்கொண்டு கம்பத்தின் மேல் மளமளவென்று ஏறினான்.

வெள்ளை நிறத்தில் இருந்த பேன்ட்டும் ஷர்ட்டும் இருட்டில் நன்றாய் காட்டி கொடுத்துவிடும் என்றெண்ணி

தான் அவற்றைக் கழற்றியிருந்தான் என்று லைன் மேனுக்குத் தெரியாது.

மிகவும் பிராக்டீஸ் இருந்த தன்னாலேயே டெலிபோன் கம்பத்தில் மேல் ஏறுவது சிரமம். அப்படியிருக்கும்போது அவன் எப்படி அவ்விதமாய் விடுவிடென்று ஏறினான் என்று வியப்படைந்தவாறே சந்திரன் ஏறிய கம்பத்தையே அண்ணாந்து பார்த்தபடி நின்றான்.

பழக்கமில்லாததால் கைப்பிடி நழுவிக்கொண்டிருந்தது சந்திரனுக்கு. வாயில் போன் ஹேண்ட் பீசைக் கடித்துப் பிடித்துக் கொண்டே, உச்சியில் ஏறி ஒரு கையால் கம்பத்தின் நுனியில் டெலிபோன் கம்பிகளைத் தாங்கிக் கொண்டிருந்த ராடைப் பிடித்துக் கொண்டே இன்னும் மேலுக்குப் போனான்.

கீழே லைன் மேன் நடுங்கிக் கொண்டிருந்தான், எங்கே சந்திரன் நழுவி கீழே விழுந்து விடுவானோ என்று. அது மட்டும் நடந்துவிட்டால் அவன் உடம்பெல்லாம் சட்டினியாகி விடுவது உறுதி.

சந்திரன் மளமளவென்று ஒயர்களை கம்பத்திலிருந்தி கம்பிகளோடு ஒன்று சேர்த்தான். ஹியரிங் பக்கத்தைக் காதிற்கருகில் வைத்துக் கொண்டான்.

எதுவுமே கேட்கவில்லை.

வேறுவழியில்லை—கொஞ்சம் காத்திருக்க வேண்டியது தான். இரு கைகளாலும் ராடைப் பிடித்துக் கொண்டான். பாரமான உடம்பு பிடி நழுவி விழுந்துவிடும் போலிருந்தது.

அப்படி எவ்வளவு நேரமாகியிருக்குமோ தெரியாது... எந்த நிமிஷத்திலும் கையிற்று விழுந்துவிடும் போலிருந்தது வலியைப் பொறுத்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் தன் பாஸைச் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொண்டிருந்த

சித்தரஞ்சனின் மேல் ஆத்திரமாய் வந்தது. அதற்குள் ஏதோ சப்தம் கேட்டது. சந்திரன் உஷாரானான்.

போனில் பேசிக் கொண்ட வார்த்தைகள் ஹியரிங் ஹெட்டில் தெளிவாய் கேட்டன.

''ஹலோ...நான்தான் விக்கிரம். உங்க போக்கு எதுவும் நன்றாயில்லை. நீங்க சொன்னபடியே தரங்கிணியைச் சுற்றிச்சுற்றி இழுத்தடித்துட்டிருக்கேன். அதன் மூலம் ராஜசேகரை வெறிப் பிடித்த நாயாய் ஊரெல்லாம் சுற்றி யலைய வைக்கணும். இதை ரகசியமாய்பண்ணிட்டிருக்கேன். ஆனால் நீங்க மட்டும் என் காரியத்தில் கொஞ்சமும் சிரத்தை காட்டவேயில்லை. நீங்க ஜெயிக்கிற நாள் ரொம்ப கிட்டத்தில் வந்துடுத்து...''- கோபமாய் வந்தன வார்த்தைகள்.

சந்திரனுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

மிகச் சாமர்த்தியமாய் நாடகமாடிக் கொண்டிருக் கிறான் சித்தரஞ்சன்.

சித்தரஞ்சன் ஆட்டுவித்தாற்போல விக்கிரம்- விக்ரம் ஆட்டுவித்தாற்போல தரங்கிணி எதற்காக ஆடிக்கொண் டிருக்கிறார்கள்?

இவை தேவையற்றவை எனறெண்ணிக் கொண்டான் சந்திரன். உடனே [illegible]ளைப் பிடித்து இழுத்து விட்டான். ஹெ[illegible]னை வாயால் கவ்விக் கொண்டே கீழே இறங்[illegible]தான்.

[illegible]த்தாடையில் சர்ரென்று ஏதோ கீறினாற்போலிருந்தது. ஆனாலும் பொருட்படுத்தவில்லை.

இறங்கியதுமே டெலிபோன் ஹெட் லைனை அந்த ஆளிடம் தந்து விட்டான். பேன்ட் ஷர்ட்டைத் திரும்பவும் போட்டுக் கொண்டான்.

அடுத்த நிமிஷம் லைன் மேனின் கையைப் பிடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளை நோக்கி ஓடினான்.

அதே வேகத்தில் மோட்டார் சைக்கிள் காற்றாய்ப் பறந்தது.

பத்தே நிமிஷத்தில் மோட்டார் சைக்கிள் எக்சேஞ்சுக்கு முன்னால் வந்து நின்றது. லைன் மேன் இறங்கினான்.

"இந்த விஷயம் வெளியே போயிடக்கூடாது. தெரிஞ்சுதா?"

ஜேபியிலிருந்து இன்னொரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துத் தந்தான்.

சந்திரனின் பேன்ட் ரத்தத்தால் நனைந்துக் கொண்டிருந்ததைப் பார்த்து நடுங்கி விட்டான் லைன் மேன்.

அதைப் பொருட்படுத்தாமல் மோட்டார் சைக்கிளை வேகமாய் கிளப்பிக் கொண்டு போய் விட்டான் சந்திரன்.

ரகசியத்தை சோதித்துத் தெரிந்துக் கொண்டதற்கு மகிழ்ச்சியாயிருந்தது சந்திரனுக்கு.

வேகமாய் ஆபீசிற்குள் ஓடிவந்த சந்திரனைப் பார்த்துத் திகைப்படைந்து விட்டான் மது.

சந்திரன் சொன்னதைக் கேட்டு மதுவின் ரத்தம் கொதித்தது.

"பாஸ் கிடைத்தாரா போனில்?"— பரபரப்போடு கேட்டான் சந்திரன்.

இல்லை என்று தலையாட்டினான் மது. சந்திரனை பலவந்தமாய் மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றான். சந்திரன் நேர்மையையும், நம்பிக்கைக்குரிய தன்மையையும் நினைத்து மதுவின் கண்கள் கலங்கின.

அதற்குள் சந்திரன் நினைவுத் தப்பினாற்போலத் துவண்டு விட்டான்.

மருத்துவமனையில் இரவெல்லாம் சந்திரனின் படுக்கைக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான் மது. மறு நாள் காலையில் எட்டு மணியளவிற்கு இருவருமே ஆபீசுக்குத் திரும்பி விட்டார்கள்.

வந்ததிலிருந்தே போனோடு போராடத் தொடங்கி விட்டான் மது.

"இதோடு நாம்ப இன்னொண்ணுகூட பண்ணனும். பாஸிடம் யாரோ நிழலாய் பின் தொடர்ந்துட்டிருப்பதாய் சொல்லணும். அதற்குள் விக்கிரமை உதைத்தோ, மிரட்டியோ போன் இல்லாமல் தடுத்துடணும். முடிந்தால் விக்கிரம் மூலமாய் பொய் சங்கதியை எட்டச் செய்யணும். அதன் மூலம் அவளைப் பிடிப்பது பாஸுக்கு எளிதாகும்..." என்றான் சந்திரன்.

காலம் கடந்து போய்க் கொண்டேயிருந்தது. போனில் "இல்லை" என்ற பதிலே திரும்பத் திரும்ப வந்துக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில் ராஜசேகர் அங்கே எல்லா பியூட்டி பார்லர்களுக்கும் போன் பண்ணி முடித்து விட்டான். இன்னும் இரண்டே இரண்டு பார்லர்கள்தான் பாக்கி யிருந்தன. ராஜசேகர் அவ்விரண்டில் ஒன்றிற்குப் போன் பண்ணினான்.

"நீங்க சொன்ன பொண்ணு இதுவரை ரெண்டு முறை எங்க க்ளினிக்குக்கு வந்திருக்கிறாள். ஆனால் நேற்றோ இன்றோ மட்டும் வரவில்லை..." என்று மறுமுனையில் சொன்னது கேட்டது.

சந்தோஷ அலை ஒன்று ராஜசேகரை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு நின்றது. போதும். அவ்வளவு சங்கதி போதும்... உற்சாகமாய் கடைசி பியூடி க்ளினிக்குக்கும் போன் பண்ணினான்.

கொஞ்ச நேரம் வெயிட் பண்ணச் சொல்லி பதில் வந்தது. போனை அப்படியே கையில் வைத்துக் கொண்டே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

கடைசியாய் மது கல்கத்தா ஓபராய் ஓட்டலுக்குப் போன் பண்ணினான். ஆனால் ராஜசேகர் மறுமுனையில் எங்கேஜடாய் இருந்தது ஆபரேட்டர் மூலம் தெரிந்தது. தம்

பாஸ் ஓபராயில் தான் இருக்கிறார் என்று தெரிந்ததும் ஆனந்தமாய் குதிக்கத் தோன்றிய மதுவுக்கு— அந்தச் சமயத்தில் ராஜசேகர் போனில் யாருடனே பேசிக் கொண்டிருந்தது உற்சாகமிழக்கச் செய்தது.

மது எவ்வளவு கெஞ்சியும் ராஜசேகர் பேசிக் கொண் டிருந்த லைனைக் கட் பண்ணி விட்டு மதுவுக்கு லைன் தர மறுத்து விட்டாள் ஆபரேட்டர். மதுவுக்கு ஆத்திரம் தலைக் கேறிற்று. என்ன பண்ணுவதென்று புரியவில்லை. பாஸ் வெளியே யாருடனோ பேசிக்கொண்டிருந்த போனை விட தம் போன் மிக முக்கியமானது என்று எப்படிச் சொல்வது? அவனுக்குப் பைத்தியமே பிடிப்பது போலிருந்தது.

திரும்பவும் ஓபராய் ஓட்டல் டெலிபோன் ஆபரேட் டரைக் கெஞ்சத் தொடங்கினான் மது.

"சரி..." என்று ராஜசேகர் காத்துக் கொண்டிருந்த லைனுக்கு வந்து, "சர்...அர்ஜென்ட் கால் ஃபர் யூ" என்றாள் மதுவின் போன் காலை வெயிடிங் லிஸ்டில் வைத்துக்கொண்டு.

"நோ அர்ஜென்ட்...நத்திங்...டோன்ட் டிஸ்டர்ப் மை கால்" என்றான் ராஜசேகர் கோபமாய். ராஜசேகருக்குத் தெரியாது தனக்கு மிக விலைமதிப்பான சங்கதி மிக நெருக்கத்தில் காத்து கொண்டிருந்த விஷயம்.

"சாரீ சார்... அவரு ஒப்புக்கவில்லை..." என்று மதுவின் லைனைக் கட் பண்ணிவிட்டாள், தயவு இன்றி.

மதுவுக்குப் பைத்தியமே பிடித்தாற் போலாயிற்று. அவனுக்கு ராஜசேகர் மீது கூட கோபம் வந்தது. தாம் சேகரித்திருக்கும் அரிய விஷயத்தைத் தெரிந்து கொள்ளா விட்டால் தரங்கிணி கிடைக்க மாட்டாள் என்று எப்படிச் சொல்லுவது?

இருவருக்குமே நிலைமை குழப்பமாயிருந்தது.

மறுமுனையிலிருந்து ராஜசேகருக்குப் போனில் பேச்சு கேட்கத் தொடங்கிற்று.

"சார்...அவள் இப்போது எங்கள் க்ளினிக்கில்தான் இருக்கிறாள். ஸ்டீம் பாத் பண்ணிட்டிருக்கிறாள்..."

போனில் அவள் இன்னும் ஏதோ பேசத் தொடங்குவதற்குள் ராஜசேகரின் வாயிலிருந்து அம்பாய் வெளிவந்தன வார்த்தைகள்.

"அவள் அங்கே இன்னும் எவ்வளவு நேரம் இருப்பாள்?"

"இன்னும் அரைமணி நேரம் வரைக்கும்..." என்றாள்.

அவ்வளவுதான்! அதைக் கேட்ட அடுத்த விநாடியே அம்பாய் பறக்கத் தொடங்கினான்.

தரங்கிணி இருந்த பியூட்டி க்ளினிக் பவானிப்பூரில் இருந்தது. அதாவது அங்கிருந்து ஐந்து கிலோமீட்டர் தூரம். எளிதில் போய்விடலாம். லிப்டிலிருந்து இறங்கி ரிஸப்ஷன் கௌண்டரைத் தாண்டிக்கொண்டு வேகமாய் வெளியே ஓடிக்கொண்டிருந்த ராஜசேகரை ஆபரேட்டர் தடுத்துவிட்டு, "அர்ஜென்ட் கால் ஃப்ரம் மெட்றாஸ்" என்றாள்.

"டைமில்லை. அவசரமாய் போயிட்டிருக்கேன்!"

அதே வார்த்தையை ஆபரேட்டர் மதுவிடம் சொன்னாள். மதுவுக்குவந்தஆத்திரத்தில் பற்களை நறநறவென்று கடித்தான். உள்ளங்கையை மடக்கிக் கொண்டு சுவரில் ஓங்கிக் குத்தினான்.

சரியாய் அதே சமயத்தில்—

அதுவரை ஓபராய் ஓட்டல் ஆபரேட்டருக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த ஆள் விக்கிரமுக்குச் செய்தியை வெளிப்படுத்தும் முயற்சியில் இருந்தான்.

வெளியே தெருவில் டாக்சிக்காக ஓடிக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

சென்னையிலிருந்த விக்கிரம் போனை எடுத்தான்... கல்கத்தாவில் பவானிப்பூர் எல்லையிலிருந்த பியூட்டி பார்லருக்கு லைன் கேட்டான்.

அப்பொழுதுதான் சந்திரன் வலைபோட்டு வைத்திருந்த சர்வோதயா ஓட்டல் டெலிபோன் ஆபரேட்டர் டியூட்டி முடிந்து வெளியேறினாள்...

கல்கத்தாவில் ராஜசேகர் ஏறிய கார் பவானிப்பூரை நோக்கிவேகமாய் பறந்து கொண்டிருந்தது. அந்தவேகம் கூட ராஜசேகருக்கு எரிச்சலைத் தந்தது. அடிக்கடி கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டு பொறுமையின்றி நெளிந்து கொண்டிருந்தான், பின் சீட்டில்-

41

இரவு பன்னிரண்டு அடிக்கவிருந்தது. மஞ்சுளா மொட்டை மாடியிலிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து சுமார் மூன்று மணி நேரமாகி விட்டன.

இருட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன அவள் கண்கள். அதற்குள் காதம்பரி எழுதியிருந்த கடிதத்தைப் பல முறை படித்து விட்டாள். திரும்பத் திரும்ப அக்கடிதத்தையே படித்துக் கொண்டு அதிலிருந்தவைகளைப் பற்றி அசைப்போட்டுக் கொண்டிருந்தது அவள் மனம்.

இன்னொரு முறை மடியிலிருந்த கடிதத்தை எடுத்தாள். வெள்ளைவெளேரென்றிருந்த காகிதத்தின் மீது கோணலும் மாணலுமாய்க் கிறுக்கியிருந்த எழுத்துகள் நட்சத்திரங்களைப் போலிருந்தன.

"அன்புள்ள மஞ்சுளாவுக்கு—

நீ நலமா? நான் நலந்தான், அதெல்லாம் நம்மிருவருக்கும் தற்காலியமானதுதான் போலிருக்கிறது...

பெரிய வருத்தத்தில் இருந்துகொண்டு நலத்தைப் பற்றி எழுதுகிறேனே என்று வேடிக்கையாய் தான் தோன்றும். நேராய் விஷயத்திற்கு வருகிறேன்.

என்மேல் உனக்கு அருவருப்பு தோன்றியிருக்கும். எங்கள் தொழிலின் மீதும் அதேபோல் ஏற்பட்டிருக்கும். அருவருப்பை மனதில் வைத்துக் கொண்டே இந்தக் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினால் என் வருத்தம் உனக்குப் புரியாது. அன்பு, பாசம் என்று கேட்கவில்லை நான். குறைந்த பட்சம் இரக்கத்தோடாவது படிக்கத் தொடங்கு என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

நீ அடிக்கடி ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்பாய், நினைவிருக்கிறதா? 'உங்கள் துறையை அவ்வளவு வெறுத்துக் கொண்டே ஏன் இன்னும் அதே துறையில் இருந்துண்டிருக்கீங்க'ன்னு! அப்பொழுது நான் சொல் வேன் அதில் ஒரு உள்ளர்த்தமும் ரகசியமும் ஒளிந்துக் கொண்டிருக்கிறது என்று,

அழகான ரப்பர் பொம்மையைப் போல எப்படிச் சிரிக்கச் சொன்னாலும் அப்படிச் சிரித்து, எப்படி நடிக்கச் சொன்னாலும் அப்படி நடித்து மாடலிங் பண்ணிக்கொண் டிருக்கும் எனக்கு ஏனோ பெண் என்ற பொருள் (இச் சொல்லைப் பயன்படுத்துவது தவறோ?) மீதே ஆராய்ச்சி தொடங்கி விட்டது. அது முதல் எப்பொழுது பார்த்தாலும் யோசனைதான்.

ஒரு பொருள் நல்லதோ கெட்டதோ தெரியாமலேயே நல்லதுதான் என்ற செயற்கை உணர்ச்சியை வெளிக் காட்டிக் கொண்டு நாங்கள் எங்கள் அழகை இரையாய் வைத்து விற்பனையாளர்களை பிரம்மை கொள்ளச் செய்வதால் யாருக்கு லாபம்...! வியாபாரக் கழுகுகளுக்கும், வர்த்தக நாய்களுக்குந்தான். அப்படியானால் எங்களுக்கு என்னதான் லாபம்? நாலு காசு. அதன் மூலம் வருகிற உல்லாச வாழ்க்கை.

'பார்த்தீர்களா நாங்கள் எவ்வளவு அழகிகள் என்று?'- என்று காட்டிக் கொள்கிற பலவீனத்தைத் திருப்தியுறச் செய்வதற்காக. ஆனால் அது அளவுக்கு மீறிப் போய் எங்கள் அழகுகளை மிடுக்காய்க் காட்டிக் கொள்ளும் ஆசை மாறிப்போய், வெறுப்போடு எங்கள் உடலின் நெளிவு சுளுவுகளைக் காட்டிக் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டது எங்கள் துறை.

நாங்கள் கேவலம் அவர்கள் பொருட்களை விற்கும் அழகான மாமிச மொத்தைகள், எங்கள் தனிப்பட்ட விருப்பங்களைப் பற்றியோ, பண்புகளைப் பற்றியோ அக்கறையே இல்லை.

இந்த அவஸ்தையால்தான் என் துன்பம் அதிகரித்து விட்டது.

உலகத்தில் முதல்முதலாய் 1960-ல் லண்டனில் மாடலிங்கில் பெண் ஒருத்தியை நுழைத்தபோது அவள் 'பொருள்' இல்லை இந்த முப்பதாண்டுகளில்தான் அது போல ஒரு பொருளாய் மாறிவிட்டாள்... எவ்வளவு முன்னேற்றம் பார்!

தவறு எங்கே நிகழ்கிறது? புரியவில்லை. தெரிந்துக் கொள்ள வேண்டும்... எப்படி? எப்படி எங்கே தொடங் குவது?...

மாடலிங் தொழிலுக்கு வராதபோது மாடலிங் வாழ்க்கை மிக கிளாமராகவும், உல்லாசமாயும் இருக்கும் என்று கனவு கண்டுக் கொண்டிருந்தேன் நான்... இதில் இறங்கிய பிறகு, இரவும் பகலும் ஷூட்டிங்காலும், ஸ்டுடியோக்களாலும் அந்த உணர்ச்சிகள் எதுவுமே அனுபவத்தில் வரவில்லை. நேரம் கிடைத்தால் தூங்கினால் போதும் என்றுதான் தோன்றும். என் இமைகளின்மேல் தூக்கம் வந்துச் சுற்றிக் கொண்டிருக்கும்.

காதல், உடல் சுகங்கள், இவைகூட அனுபவத்தில் எட்டவில்லை.

ஓய்வில்லாத எங்கள் வாழ்க்கையில் காதலே கிடையாது. பரபரப்போடு உடல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வது, தீர்த்து வைப்பது இவை மட்டுமே...

ஆனால் என்னுள் ஆராய்ச்சி தொடங்கியதிலிருந்தே தூக்கத்திற்கு பதில் புத்தகங்களையும், சுகங்களுக்கு பதில் மகான்களின் வாழ்க்கை சரிதங்களைப் படிப்பதையும் மட்டுமே தொடங்கினேன். மெதுவாய் நான் இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரத் தொடங்கினேன்.

புத்தகங்கள்... புத்தகங்கள்... ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் என் வீட்டில் சேர்ந்து விட்டன. என் மூளையிலிருந்த துருவைப் போக்கத் தொடங்கின.

பெண் சூறையாடப்படுவதற்கு எல்லை இல்லை, ஆழம் காணமுடியாது. இந்தக் கொள்ளையை எதிர்க்கவேண்டும். எப்படி? என் ஒருத்தியால் முடியுமா? ஆனாலும் ஏதோ ஒன்றைப் பண்ண வேண்டும். இந்த யோசனையே ஒரு குறிக்கோளுக்கு வழி கோலிற்று.

அதிலிருந்து சகல சுகங்களையும் மறக்கத் தொடங்கினேன். இரவும் பகலுமாய் மாடலிங்... மாடலிங்... சம்பாதித்தேன்... அளவுக்கு மீறி... இரண்டு கைகளிலும்... வெறுப்போடு... ஏன் சம்பாதித்தேன் தெரியுமா? ஏன் இந்தத் தொழிலில் தொடர்ந்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா? இடுப்பு உடைந்த நாலு பேர் மாடல்களுக்கு கைக் கொடுக்க வேண்டுமென்று தான். தம் வாழ்க்கையை நாசம் பண்ணிக் கொண்டவர்கள் திரும்பி நிலைத்து நிற்பதற்காக சிதைந்துவிட்ட அவர்கள் வாழ்க்கை புனர் வாழ்வு பெறுவதற்காக கொஞ்சம் கைக்கொடுப்போம் என்றுதான்...

சிதைந்து விட்ட என் வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லை. அர்த்தமில்லாத என் வாழ்க்கை சிலருக்காவது அர்த்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்று...இயந்திரமாய் மாறினேன்,

நான் நினைத்ததையே சாதித்துவிட்டேன். மிகக் குறைவுதான். இருபத்தைந்து லட்சங்களும் ஒரு பங்களாவும், பங்களா புகலிடமாகவும், லட்சங்கள் மூலம் வரும் வட்டியை ஆதாரமாய் கொண்டு 'காதம்பரி மாடல்ஸ் ட்ரஸ்ட்' ஒன்றையும் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன் அதற்கு ராஜசேகரை சேர்மனாகவும், மதுவையும் மாயாவையும் மெம்பர்களாய்ப் பண்ணி ரெஜிஸ்தர் பண்ணி விட்டேன். இன்னும் எவ்வளவோ பண்ண வேண்டும் என்று துடித்தாலும், இப்போதைக்கு என்னால் பண்ணக்கூடியது இவ்வளவுதான். எங்கள் துறையினால் கோடிக்கணக்கில் வாரிக்கொள்கிற அரசாங்கம் இப்பொழுதாவது கண்களைத் திறந்துக் கொள்கிறதா என்று பார்ப்போம்.

உன் சந்தேகங்களுக்கு பதில்கள் கிடைத்து விட்டன என்று நம்புகிறேன். இது முடியும் வரையில் எந்தத் தடங்கலும் ஏற்பட்டு விடக்கூடாது என்றுதான் மிக ரகசியமாய் வைத்துக்கொண்டிருந்தேன். என் பாவங்களுக்குத் தண்டனையாய்க் கடவுள் இன்னொரு ஜென்மம் கொடுத்தால் பெண் ஜென்மம் மட்டும் வேண்டாம் என்று வேண்டிக் கொள்வேன்.

நான் பண்ணிய பாவங்களும், தவறுகளும் ஒவ்வொரு விநாடியும் என்னைக் குத்திக் குதறிக் கொண்டே இருக்கின்றன. இந்த நிம்மதியில்லாத நிலையோடு என்னால் அதிக நாள் வாழ முடியாது. அதற்காகத் தற்கொலை பண்ணிக்கொண்டு எஞ்சியுள்ள பெண்களையும் ஏமாற்றும் நிலைக்குத் தள்ளிவிடமாட்டேன். ஆனால் என் அதிர்ஷ்டத்தால் எனக்காக சாவு எந்த நிமிஷமும் விழுங்கத் தயாராய் காத்துக் கொண்டிருக்கிறது.

நானாய் சாகமாட்டேன்— வரப்போகும் சாவையும் என்னால் தடுக்க முடியாது— என் அனுபவங்கள் அப்படிப்பட்டவை.

போகும் முன்னால் நான் கேட்டுக் கொள்வது— மாமிச மொத்தை சிலரின் ஓலங்களுக்காவது என் ட்ரஸ்ட் மூலம்

ராஜசேகர் பதில் கொடுக்க வேண்டும் என்றுதான். என் சவத்திற்கு தகனக் காரியங்களை ராஜசேகர்தான் பண்ண வேண்டும் என்பது என் விருப்பம். ஒருநல்ல மனிதனின் கையால் போக வேண்டும் என்ற பேராசை.

தயை, இரக்கம், நீதி, நேர்மை உள்ள ராஜசேகரைப் போன்ற உன்னதமான ஆட்கள் எவ்வளவு கஷ்டநஷ்டங் களானாலும் எதிர் நீச்சல் நீந்தி என்றாவது இந்தத் துறைக்கு நல்லகாலம் வரும்படியாய் பண்ணவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நான் போனாலும், என் ஆத்மா உங்களைச் சுற்றி வந்தபடியே என் மூன்று விருப்பங்கள் மூலமாய் திருப்தியடைந்துக் கொண்டிருக்கும். இந்த மூன்று விருப்பங்களுக்காக உன்னைக் கையெடுத்துக் கும்பிடு கிறேன்.....

ஒரு சித்தரஞ்சன் போனாலும் நூறு சித்தரஞ்சன்கள் முளைக்கக்கூடிய இந்த துருப்பிடித்த சமூகத்தில்—இருக்கும் ஒரே ஒரு ராஜசேகரையும் நீ இழுத்துக் கொண்டு போய் விட்டால் எஞ்சியிருப்பவர்களுக்கு அந்தகாரம் தான் மிஞ்சும்! அதனால்தான் வேண்டிக்கொள்கிறேன்—கெஞ்சிக் கேட்கிறேன் ராஜசேகரைப்போன்ற அபார புத்திசாலிகளை சாதாரண ஆளாக்கி விடாதே.

ஒவ்வொரு துறையிலும் நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு. கெட்டதைத் திட்டிக் கொண்ட தொலைவிற்குப் போய் விடுவதை விட, சிறிய தீபத்தை ஏற்றிவைத்து ஒளியை உண்டாக்க முயற்சி பண்ண உதவு, ராஜ சேகருக்கு.

அவருக்கு நீ துணையாயிருந்து அவருடைய ஆர்வத்தை பெருக்கு. விவேகமான காதலியாயும் மனைவியாயும் இருந்து அவருக்கு உதவு. மேலுக்குத் தென்படாவிட்டாலும் உன் உதாசீனத்தாலும் பிரிவாலும் மானசீகமாய் மிகவும் தளர்ந்து விட்டார் ராஜசேகர்.

ஆணிடம் பெண்ணின் அன்பு அவன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கவேண்டுமேயன்றி, எப்பொழுதும்

தன்னுடனேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்றும், தான் சொன்னதைக் கேட்க வேண்டுமென்றும், தன் புடவைத் தலைப்பில் கட்டி முடிந்து வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் எண்ணக்கூடாது. ராஜசேகர் இப் பொழுது எங்கே இருக்கிறாரோ, என்ன கஷ்டங்கள் படுகிறாரோ தெரியாது... ஆனாலும் கண்டிப்பாய் வெற்றியடைவார்.

மார்ச் 31-ம் தேதிக்குள் நான் இறந்துவிட்டால் என் மரணச் செய்தியை ராஜசேகருக்குத் தெரிவிக்க வேண்டாம். அதைக் கேட்டு அவரால் தாங்கிக் கொள்ள முடியாது. அதற்கப்புறந்தான் தெரிய வேண்டும். என் சவத்தை சவபரி சோதனைக்குப் பிறகு, அநாதைப் பிணமாய் அவர்கள் உணருவதற்குள் நீ வந்து அவள் அநாதை இல்லை, என்றுச் சொல்லுவாய் என்றும், அதை பத்திரமாய் வைத் திருந்து மார்ச் 31க்குப் பிறகு ராஜசேகர் கையாலேயே தகனக் காரியங்களைப் பண்ணச் சொல்வாய் என்பதும் என் ஆசை. இதைத் தீர்த்து வைப்பாயா?

நான் போகிறேன் மஞ்சுளா போய் விடப் போறேன்... போகும்போது நான் உனக்குத் தந்து விட்டுப் போகிற விலைமதிப்பில்லாத பரிசுகள் என்ன தெரியுமா? புத்த கங்கள். அபார அறிவைப் பெருக்கும் விலைமதிப்பில்லாத புத்தங்கள். பணத்தை விட, எல்லாவற்றையும் விட இவை தான் விலைமதிப்பானவை என்று எனக்குத் தோன்றுகிறது. அவற்றின் அறிவால் உன் யோசனைகளை வளர்த்துக் கொள்... அதற்குப்பிறகு உனக்கு யாரும் எதுவும் சொல்லத் தேவையேயிராது. ஆதரவில்லாத என்னைப் போன்ற பெண் ஒருத்தி கூட மனம் வைத்தால் பழி வாங்கிக் கொள்ள முடியும் சாமர்த்தியமாய்.

சித்தரஞ்சனை மயக்கி, அவன் அகத்தைத் தூண்டி விட்டு, அவனிடமிருந்து எந்த ஆதாரமும் இல்லாமலேயே ஐந்து லட்சங்களைக் கறந்துக் கொண்டு விட்டேன். அதற் காக நான் தரவேண்டிய சுகமோ, கடனோ தரவேண்டிய

அந்த நாளைக்கு நான் இருக்க மாட்டேன். என்னால் முடிந்த இந்தச் சிறிய உதையால் கொஞ்சமாவது பழி தீர்த்துக் கொள்ள முடிந்தது.

இப்பொழுதாவது உன் யோசனைகளை மாற்றிக் கொள். மாற்றிக் கொண்டு அவருக்கு ஒத்துழை. இந்த என் ஒவ்வொரு எழுத்திலும் இவ்வளவு நாளும் நான் பட்ட துன்பமும், வேதனையும் உனக்குப் புரிய வரும் என்ற ஆசையுடன் போகிறேன்.

"குட் பை மை ஃபிரென்ட் குட் பை— இப்படிக்கு துரதிர்ஷ்டசாலி— காதம்பரி."

கடிதத்தைப்படித்து முடித்து விட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கீழே இறங்கினாள் மஞ்சுளா.

42

ராஜசேகர் ஏறிய டாக்சி சரியாய் பதினைந்தாவது நிமிஷம் பியூட்டி பார்லருக்கு முன்னால் வந்து நின்றது.

தரங்கிணி புறப்பட்டுப் போவதற்கு இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருந்தன. ராஜசேகர் அவசரம் அவசரமாய் டாக்சியை விட்டு இறங்கி பியூட்டி பார் லருக்குள் நுழைந்தான். ரிசப்ஷனில் ஒரு நடுத்தர வயது மாது உட்கார்ந்திருந்தாள்.

நேராய் அவளிடம் போனான் ராஜசேகர்.

"மேடம், நான் இதுக்கு முன்னாடியே உங்களுக்குப் போன் பண்ணினேன் தரங்கிணியைப் பற்றி"

"எஸ்... எஸ்... நீங்கதானா அது?"

"அவளையாவது கூப்பிடுங்க, அல்லது ஸ்டீம் பாத் செல்லையாவது காட்டுங்க."— தன் பரபரப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ள முயன்றபடி கேட்டான்.

"சாரீ ஜென்டில் மேன்... அவள் இப்பத்தான் நீங்க வரத்துக்கு ஒரு நிமிஷத்துக்கு முன்னாடி போய்விட்டாள்." —அவள் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே ராஜசேகர் காற்றாய் வெளியே பறந்தான்.

அதற்குள் வெளியே ஒரு டாக்சி வேகமாய்ப் பறந்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான். டாக்சி போன திசையே கொஞ்ச தூரம் வேட்டை நாயாய் துரத்திக் கொண்டே போனான். ஆனால் டாக்சி திடீரென்று அபரிமிதமான வேகத்தை மேற்கொண்டது. திரும்பி அதன் நெம்பரைப் பார்த்த ராஜசேகர் திடுக்கிட்டான்!

அன்றைக்கு ஓபராய் ஓட்டலிலிருந்து ஏர் போர்ட்டிற்குக் கூட்டிச் சென்ற அதே டாக்சி!

இரண்டு முறை அதே டாக்சியில் அவள் தப்பித்துக் கொண்டு போயிருக்கிறாள். அப்படியென்றால் அது கேவலம் எதேச்சையாய் நடந்ததில்லை போலிருக்கிறது. அந்த டாக்சியைக் கொஞ்ச நாளைக்குத் தனக்காக புக் பண்ணிக் கொண்டிருப்பாளோ?...

நம்பிக்கை இழந்தவனாய் திரும்பினான்...

பியூட்டி பார்லருக்குள்.

"அந்த மேடம் இன்னும் அரைமணி இருப்பாங்கன்னு சொன்னீங்களோ...?"—கேட்டான் ஏதாவது 'க்ளூ' கிடைக்குமோ என்ற மயிரிழை ஆசையோடு.

"ஆமாம்... ஸ்டீம்பாத்தை முடிச்சுக்க அரைமணி ஆகும். இதுக்கு முன்னால் அவள் ரெண்டு தடவை வந்திருக்கிறாள். வந்த ஒவ்வொரு தடவையும் அவள் ஸ்டீம்பாத்தில் அரைமணி நேரம் இருந்திருக்கிறாள். இன்னிக்கும் இருந்திருப்பாள். ஆனால்..."

"ஆனால் என்ன?... சொல்லுங்க மேடம்..."—பரபரத்தான் அவன்.

"ஏதோ போன் வந்தது... எங்கேயிருந்துன்னால்..." —அவள் நினைவுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

அவளைத் தொந்தரவு பண்ணாமல் ஆசையாய் என்ன சொல்லப் போகிறாளோ என்றபடி எதிர்பார்த்துக் கொண்டே நின்றான் அவன்.

"ஆம்... மெட்ராசிலிருந்து..." என்றாள் அவள். அதைக் கேட்டு அதிர்ந்து விட்டான். அவளுக்கு தாங்க்ஸ் சொல்லி விட்டு எழுந்திருந்தான். டில்லியிலிருந்த தேவி சொன்னதைக் கொண்டு பார்த்தால் அவளுக்கு மெட்ராசில் விக்கிரமைத் தவிர வேறு யாரையுமே இந்தியாவில் தெரியாது. அதனால்தான். அவள் ஓட்டலில் தங்குகிறாள். இந்த பாயிண்டிற்கருகில் நின்று விட்டான் ராஜசேகர்.

அவள் கல்கத்தாவில் எந்த ஓட்டலில் தங்கியிருக்கிறாள்? கல்கத்தாவிலுள்ள எல்லா ஓட்டலுக்கும் போன் பண்ணிப் பார்க்க வேண்டும்.

WBD 7777ஐப் பிடித்துவிடவேண்டும்.

விக்கிரம் சென்னையில் இருந்ததற்கும் சித்தரஞ்சனுக்கும் ஏதாவது சம்பந்தம் இருந்து தீரவேண்டும்

சித்தரஞ்சனுக்கும் விக்கிரமுக்கும்— விக்கிரமுக்கும் தரங்கிணிக்கும் ஏதாவது சம்பந்தம் இருந்து தீரவேண்டும். தன்னை 20-ம் தேதி வரைக்கும் தப்பு வழியில் போக வைக்க ஏதாவது முயற்சி நடந்து வருகிறதோ? நம்பத்தகுந்த தாய் இல்லையே... உடனே ஓட்டலுக்குப் போனான்.

கல்கத்தாவிலிருந்த எல்லா ஓட்டலுக்கும் போன் பண்ணினான். எங்கேயுமே இல்லை என்று தெரிந்தது. அவளைப் பிடிக்க இருந்த ஒரு ஆதாரம் கைநழுவி விட்டது.

இன்னொன்று இருந்தது— WBD 7777.

இவ்வளவு பெரிய நகரத்தில் அதை எப்படித் தேடிப் பிடிக்க முடியும்? காலண்டரைப் பார்த்தான். பதினெட்டாம் தேதி! அதாவது நாளை மாலைக்குள் அவளைப் பிடிக்க முடிந்தால் அவன் இந்தப் பந்தயத்தில் வெற்றிப் பெற்றது போலதான். இல்லாவிட்டால்—

திடுக்கிட்டான். பயத்தால் அவன் உடம்பு சிலிர்த்தது ஒரு விநாடி. இன்னும் ஒரே நாள்தான் பாக்கி இருக்கிறது —ஒரே ஒரு ஆதாரம் இருக்கிறது.

சோர்வுடன் கட்டிலில் சரிந்தான். 21-ம் தேதி காலையில் ஷூட்டிங்கைத் தொடங்கினால் தான் 31-ம் தேதிக்குள் முடிவடையும்.

20-ம் தேதியன்று இரவே தரங்கிணியோடு லொகேவுனுக்குப் புறப்பட்டுவிட வேண்டும்.

பத்தொன்பதாம் தேதியன்றே தரங்கிணியைப் பிடித்துவிட வேண்டும், அதாவது நாளை மாலைக்குள். ஒரே நாள் போதுமானது, செயின்ட்லாரென்ட் அனுப்பிய காஸ்ட்யூம் ஸிற்குத் தகுந்தாற்போல பிகினி டிரஸ்ஸைத் வைத்துக் கொள்வதற்கு.

எப்படி?...யோசித்துக் கொண்டேயிருந்த ராஜசேகர் சட்டென்று எழுந்திருந்தான்.

கதவைச் சாத்திவிட்டு லிப்டில் புறப்பட்டான். அந்தச் சமயத்தில் தான் ராஜசேகரின் அறையில் போன் ஒலித்தது.

மது அதற்குள் நாலாவது முறையாய் முயன்று கொண்டிருந்தான்.

அறையில் போன் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ராஜசேகர் லிப்டிலிருந்து இறங்கி அறையின் சாவியை கௌண்டரில் கொடுப்பதற்காக அந்தப் பக்கமாய் போய்க் கொண்டிருந்தான். அதற்குள் ஆபரேட்டர் பெரிதாய் கத்திக் கூப்பிட்டாள் ராஜசேகரை.

திடுக்கிட்டு அந்த பக்கமாய் திரும்பி ஆபரேட்டரின் சைகையைப் புரிந்துக் கொண்டு போன் காலை ரிசீவ் பண்ணுவதற்காக வேகமாய் நடந்தான்.

''மிஸ்டர் மது ஃப்ரம் மெட்ராஸ்...மூணு நாளாய் உங்களுக்காக முயற்சி பண்ணிட்டிருக்கார்'' என்றாள் ராஜசேகரிடம் போனைத் தந்துவிட்டு.

ராஜசேகர் போனை எடுத்து ''ஹலோ'' என்றபடியே திரும்பிப் பார்த்தான். அவ்வளவு நேரமாய் அவ்விடத்தி லேயே இருந்த ஒரு புது ஆள் சந்தேகத்திற்கு இடம் தரும் விதத்தில் தொலைவில் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

அவனை அதற்கு முன்னால் எங்கேயோ இரண்டு மூன்று தடவை பார்த்தாற் போன்ற நினைவு...

''சார், உங்களிடம் சொல்ல வேண்டிய விஷயம் நிறைய இருக்கு. அதை அப்புறமாய் சொல்றேன் முதலில் உங்கள் சுற்றுப்பக்கத்தில் சந்தேகத்துக்கிடமான விதத்தில் உங்களையே கவனித்தபடி யாராவது இருக்காங்களா? அதைப் பாருங்க முதலில். உடனே திரும்பிப் பார்க்காதீங்க. என்னோடு பேசிட்டே மெல்ல கவனியுங்க.''

மது சொன்னதைக் கேட்டு ராஜசேகர் திடுக்கிட்டான். தன்னை யாராவது பின் தொடருவதாவது...? அப்படியா னால் மது பரிசோதனையில் ஆழ்ந்திருக்கிறான் என்று தெரிகிறது. தான் இவ்வளவு நாளாய் மதுவுக்குப் போன் பண்ணாதது பெரிய தப்பு. யோசித்தவாறே நான்கு பக்கங்களையும் பார்த்தான். போனை எடுத்தபோது சந்தேகத்திற்கிடமாய் தோன்றிய அந்த ஆள் தொலைவில் நின்றபடி பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தான்

விநாடிகள்... நிமிஷங்கள் கழிந்தன.

மது சொன்னதையெல்லாம் கேட்டதும் ராஜகேகருக்கு ஆத்திரம் தலைக்கேறிற்று

எவ்வளவு பெரிதாய் திட்டம் தீட்டியிருக்கிறான் சித்தரஞ்சன்! அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது ராஜசேகருக்கு— பந்தயம் போட்ட அனறைக்கு 'உன்னை வெறிநாயைப் போல தெருவெல்லாம் அலையவைக்கிறேன் பார்' —என்று சித்தரஞ்சன் சொன்ன வார்த்தைகள்!

புத்திசாலியான எதிரி சட்டென்று அடி கொடுத்துவிட மாட்டான். அழவைத்து விட்டுதான் உதை கொடுப்பான்... அதே உதையைத் தானும் சித்தரஞ்சனுக்குத் தரவேண்டும்— என்றெண்ணிக் கொண்டான் ராஜசேகர். மனதிற்குள் சித்தரஞ்சனை எண்ணி பற்களை நறநறத்துக் கொண்டே...

அந்த ஆளை கவனிக்காதது போலவே வெளியே வந்தான் வேகமாய்...

உடனே டாக்சியில் ஏறிக் கொண்டான். போக வேண்டிய இடத்தைச் சொல்லமலேயே 'விடு' என்றான்.

சந்தேகம் வராதவாறு அவ்வப்பொழுது மெல்ல திரும்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

தொலைவில் அவன் சென்று கொண்டிருந்தடாக்சியைப் பின் தொடர்ந்து இன்னொரு டாக்சி. தனக்குள் சிரித்துக் கொண்டான்.

கார் முனை திரும்பிற்று. அந்தப் பக்கத்தில் இருந்த டாக்சி ஸ்டாண்டில் இரண்டு டாக்சிகள் இருந்தன.

அவ்வளவுதான்! சட்டென்று டாக்சியை நிறுத்தச் சொல்லிப் பணம் தந்து அவனைப் போகச் சொல்லி விட்டான்.

தெருவோரத்தில் இருந்த டீக்கடை வாசலில் நின்று தேநீர் குடித்தபடியே காலத்தைக் கழிக்கத் தொடங் கினான்.

அந்த ஆள் டாக்சியை விட்டு இறங்கி அதை அனுப்பி வைக்கும் வரையிலும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தான்.

தெருவுக்கப்பால் இரண்டு டாக்சிகள் நின்றிருந்தன...

தெருவைக் கடந்து ஒரு டாக்சியை நெருங்கினான் ராஜசேகர். அந்த டாக்சிக்காரனுடன் ஏதோ பேசினான்,

ராஜசேகரின் நடவடிக்கைகளையே தொலைவிலிருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் அந்த ஆள். ராஜசேகரும் அதைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மூன்று நிமிஷங் கழித்து ராஜசேகர் இன்னொரு டாக்சியிடம் போய் அதில் ஏறிக் கொண்டு விலாசத்தைச் சொன்னான்.

ராஜசேகர் ஏறிய டாக்சி புறப்பட்ட அடுத்த நிமிஷம் அந்த ஆள் ராஜசேகர் முதலில் போய் பேசிய டாக்சியில் ஏறிக் கொண்டு, முன்னால் போய்க் கொண் டிருந்த டாக்சியைப் பின் தொடர்ந்து போகச் சொன்னான்.

ராஜசேகர் மெதுவாய் ஓரக்கண்ணால் பார்த்தான். தொலைவில் தன்னைப் பின் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்த அந்த ஆளின் டாக்சியைப் பார்த்துவிட்டு நிசப்தமாய் சிரித்துக் கொண்டான்.

கார்கள் ஒன்றையடுத்து இன்னொன்றாய்ப் பின் தொடர்ந்தன.

பத்து நிமிஷம் கழிந்திருக்கும். திடீரென்று அந்த ஆள் ஏறிய டாக்சி திசைத் திரும்பி விட்டது. அந்த ஆள் கலவரமடைந்தவனாய், "என்ன இது? உன்னை அந்த டாக்சியைப் பின் தொடர்ந்து போன்னு சொன்னால் இப்படித் திருப்பிக் கொண்டு வந்துட்டாயே, ஏன்?" -கேட்டான்.

டாக்சி டிரைவர் மெதுவாய் சிரித்துவிட்டு, "பேசாமல் உட்கார்ந்துட்டிரு. உன்னை ஃப்ரீயாய் நாலு ரோடு சுற்றிக் கொண்டு வந்துட்டு எங்கேயாவது இறக்கி விட்டுடச் சொன்னார் அந்த முன்னால் டாக்சியில் போன ஜென்டில்மேன்" என்றுச் சொல்லிவிட்டு காரின் வேகத்தை அதிகரித்தான்.

நடந்ததை ஜீரணித்துக் கொண்டதும் அந்த ஆளின் முகம் வெளுத்தது.

ராஜசேகர் இப்படி ஒரு உதை கொடுப்பான் என்று அறிந்திருக்கவில்லை அவன்.

ராஜசேகர் முதல் டாக்சியிடம் போய் பேசிவிட்டு, பேரமாகாததால் இரண்டாவது டாக்சியில் ஏறினான் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தானோ தவிர, இப்படி சாமர்த்தியமாய் உதை கொடுப்பான் என்று எண்ணியிருக்கவில்லை.

தன் இஷ்டமாய் வளைந்து வளைந்து போய்க் கொண்டேயிருந்த டாக்சியைப் பார்த்துப் பற்களை நறநறத்தான் அந்த ஆள்.

ராஜசேகர் நடுவில் இன்னும் இரண்டு டாக்சி மாறினான்.

எப்படியாவது இந்த கடைசி முயற்சியில் தரங்கிணியைப் பிடித்துவிட வேண்டும் என்ற விழிப்போடு இருந்தான்.

ராஜசேகர் ஏறிய மூன்றாவது டாக்சி போலீஸ் கமிஷனர் ஆபீசுக்கு முன்னால் வந்து நின்றது.

முன்பு ஒரு முறை அமெரிக்கன் அசோஸியேஷன் ஆப் அட்வர்டைசிங் ஏஜென்சியின் உலக கான்ஃபிரென்ஸ் பொருட்டு அமெரிக்கா போனபோது தமிழ்நாட்டைச் சேர்ந்த அரவிந்தன் என்ற ஐ. பி. எஸ். ஆபீசரோடு சேர்ந்து பயணம் செய்ய நேர்ந்தது. கொஞ்ச நேரத்திலேயே அரவிந்தோடு நல்ல சிநேகம் ஏற்பட்டு விட்டது ராஜசேகருக்கு.

அவர் பேச்சுவாக்கில் தான் கல்கத்தாவில் போலீஸ் டிபுடி கமிஷனராய் வேலை பார்ப்பதாயும். எப்பொழுதாவது கல்கத்தாவுக்கு வரநேர்ந்தால் தன்னோடு வந்து இரண்டு நாள் விருந்தினனாய் தங்கச் சொல்லியும் கேட்டுக் கொண்டிருந்தார்.

தரங்கிணி விஷயத்தில் W B D 7777 ஐ வேட்டையாட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதுமே அரவிந்தனைப் பற்றிய ஞாபகம் வந்தது ராஜசேகருக்கு.

டாக்சியை விட்டிறங்கி பணம் தராமல் நிறுத்திவைத்தான். உள்ளே போனதும் அரவிந்தன் எதிரே வந்து சிரித்துக் கொண்டே வரவேற்றபடி கட்டிக் கொண்டார்.

"உங்களிடம் ஒரு வேலையாய் வந்தேன்" என்றான் ராஜசேகர் அறைக்குள் போய் உட்கார்ந்துக் கொண்டதுமே.

அரவிந்தன் சந்தோஷத்தோடு தோளைக் குலுக்கி— "வித் ப்ளஷர், சொல்லு" என்றார்.

"மொதல்ல இப்ப நான் வந்த டாக்சியை சாயந்திரம் வரைக்கும் இங்கேயே நிறுத்தி வைக்கணும்" என்றான்.

உடனே ஒரு இன்ஸ்பெக்டரை அந்த வேலைக்கு அனுப்பி வைத்தார் அரவிந்தன்.

பிறகு நடந்ததையெல்லாம் விவரமாய் சொன்னான் ராஜசேகர்.

அரவிந்தன் வியப்படைந்தவராய், "நீ போலீஸ் டிபார்ட்மெண்டில் இருந்திருந்தால் நன்றாயிருக்குமே" என்றுச் சொல்லி விட்டு தேநீர் கொண்டு வரச் சொல்லி அடெண்டருக்கு சைகை காட்டிவிட்டு, தொடர்ந்து சொன்னார், "நீ திகிலடைய வேண்டாம். இன்னும் அரைமணிக்குள் இந்த கல்கத்தா நகரத்தையே சல்லடையால் சலித்து விடுவோம். அந்த டாக்சி எங்கேயிருந்தாலும் சரி, எங்க போலீசார் வேட்டை நாயாய் பிடிச்சிக் கொண்டு வந்துடுவாங்க. அது பிடிபடுவது உறுதி. கவலை வேண்டாம்" என்று பெல்லை அடித்தார்.

ஒரு இன்ஸ்பெக்டர் வந்தார்.

அவரிடம் பண்ணவேண்டிய காரியங்களையெல்லாம் ஒப்படைத்தார். அடுத்த நிமிஷமே ஒயர்லெஸ்கள் வேலை

பண்ணத் தொடங்கி விட்டன பெட்ரோல் வேன்களும் ஜீப்புகளும் திசைக் கொன்றாய் பறக்கத் தொடங்கின.

ஒவ்வொரு சென்டரிலும் இருந்த ட்ராஃபிக் போலீசுகள் வாயடைத்துப் போய் நின்றுவிட்டார்கள். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் போன்கள் பறந்தன. ஒவ்வொரு வீதியும், சந்திகளும் தீவிரமாய் தேடப்பட்டன.

அரவிந்தன் அவ்வளவு தூரம் தனக்கு ஒத்துழைப்பார் என்று எண்ணியிராத ராஜசேகர், தன் காரியத்தால் ஆபீசில் எழும்பிய பரபரப்பைப் பார்த்து மகிழ்ந்தான்.

நிமிஷங்களும் மணிகளும் கழிந்து போய்க் கொண்டிருந்தன. ஆனாலும் விடாமல் தொடர்ந்தார்கள். அரவிந்தன் டியூடி முடிந்து வீடுகளுக்குப் போய்விட்ட போலீஸ் ஸ்டாப்ஃகளை திரும்பி டியூட்டிக்கு வரச்சொல்லி உத்தரவிட்டார். அந்த டாக்சியைப் பிடிப்பதற்காக ஏன் உத்தரவிடுகிறார் என்று யாருக்குமே புரியவில்லை.

இரவு மணி இரண்டாயிற்று.

இருவரும் இன்னும் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். அரவிந்தன் வீட்டிற்குப் போன் பண்ணி இரவு வரமுடியாது என்று சொல்லி விட்டார்.

அந்த டாக்சி அவ்வளவு முக்கியமானதாய் இராவிட்டால் டி. ஸி. பி. இன்னும் அப்படியே ஆபீசில் உட்கார்ந்திருக்க மாட்டார்— என்று புரிந்ததால் மேலும் விழிப்போடு வேலை பண்ணினார்கள் எல்லோரும். அதைத் தான் அரவிந்தனும் வேண்டினார். அதற்காகவே ஆபீசில் உட்கார்ந்து விட்டார்.

'கிடைப்பாளோ மாட்டாளோ? வைத்த கெடு முடிந்து கொண்டிருக்கிறது... இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிந்துவிடும். கண் மூடித்திறப்பதற்குள் மாலை வந்துவிடும்... கிடைக்காவிட்டால் மோசமான தோல்வியோடு சென்னைக்குத் திரும்பவேண்டும்.

அதை நினைத்ததுமே ராஜசேகரின் முகம் களையிழந்தது. தன் கேமிராவால் சிருஷ்டிக்கே மறு சிருஷ்டியைப் படைத்து விடக் கூடிய ஒரு அருமையான போட்டோ கிராப்பராய் இருந்தும் தற்சமயம் சகலத்தையும் இழந்து விட்டவனைப் போல திகிலாய் உட்கார்ந்திருந்த ராஜசேகரைப் பார்த்து வருத்தமடைந்தார் அரவிந்தன்.

"யூ ஸீ... ராஜசேகர்... எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். பேர் ரம்யா. பேரைப் போலவே ரம்யமாய் இருப்பான். சினிமாக்களை நிறைய பார்ப்பாள். நாவல்களை விழுந்து விழுந்து படிப்பாள். எந்த நாவல் சினிமாவானால் நன்றாயிருக்கும், அதில் யார் யார் நடித்தால் நன்றாயிருக்கும், டெக்னீஷியன்கள் யார் யார் — என்றெல்லாம் கூட அற்புதமாய் சொல்லிவிடுவாள். முக்கியமாய் உன் விளம்பரப்படம் என்றால் கொள்ளை இஷ்டம், உன் போட்டோகிராப்பை ரொம்ப சிலாக்கியமாய் சொல்லிட்டிருப்பாள், உன்னைக் காட்டச் சொல்லி அடிக்கடி நச்சரிப்பாள், என்னை. ஆனால் முடியலை. நீ வேறிடத்திலும் நான் வேறிடத்திலும் இருந்ததால்... என் தங்கை சொல்ற வரைக்கும் எனக்கே தெரியாது நீ அத்தனை கெட்டிக்காரன்னு..." என்றுச் சொல்லிக் கொண்டே போனார். ஆனால் ராஜசேகரின் கவனமோ வேறெங்கேயோ இருந்தது. டெலிபோன் மணி அடிக்கும் போதெல்லாம் திடுக்கிட்டு விழிப்பாகிக் கொண்டிருந்தான் அவன்.

கண் மூடித் திறப்பதற்குள் விடிந்து விட்டது.

"அந்த டாக்சி இன்னும் கிடைக்காமல் போனதற்குக் காரணம் அது இன்னும் தெருவில் வந்திருக்காது. தெருவுக்கு வந்த மறுவிநாடியே எங்க ஆட்கள் பிடிச்சுடுவாங்க. டோண்ட் வர்ரீ" என்றார் அரவிந்தன்.

ஆனாலும் ராஜசேகர் மனம் ஒரு நிலையில் இல்லை.

நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. அரவிந்தன் எவ்வளவு கெஞ்சிக் கேட்டுக் கொண்ட போதும் அவன் ராஜசேகர் குளிக்கவோ சாப்பிடவோ கூட இல்லை.

மார்ச்சு 19-ம் தேதி ஒரு மணியளவில் ஃபிளாஷாய் வந்துச் சேர்ந்தது ஒயர்லெஸ்ஸில் ஒரு செய்தி.

டாக்சி கிடைத்து விட்டது. தற்சமயம் எஸ்ப்ளனேட் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறது— அவசரமாய் வரச் சொல்லி செய்தி! ஸ்பிரிங்காய் துள்ளி எழுந்தான் ராஜசேகர். அடுத்த நிமிஷம் அரவிந்தனும் ராஜசேகரும் ஏறிய கார் வேகமாய் பறந்தது எஸ்ப்ளனேடை நோக்கி.

ராஜசேகர் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். ஏழு மணிக்கு மெட்ராஸ் ப்ளைட். இன்னும் அரைமணிக்குள் அவள் கிடைக்காவிட்டால் மிக மோசமாய் தோற்றுவிடப் போவது உறுதி.

கார் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் நின்றது. டிரைவர் கிடைத்தாலும் அவளைப் பற்றிய விவரங்களைச் சொல்ல முடியுமா அவனால்? சொல்ல முடிந்தாலும் அவளைத் தேடிப் பிடிக்க எவ்வளவு நேரமாகுமோ? அரவிந்தன் வருகிறானா இல்லையா என்று கூட கவனிக்காமல் ஸ்டேஷனுக்கு வேகமாய் கிளம்பினான் ராஜசேகர். போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் இருந்த ஹாலிலேயே டிரைவர் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தான். தன்னையும் தன் டாக்சியையும் போலீசார் எதற்கு சுவாதீனப் படுத்திக் கொண்டார்கள் என்று புரியவில்லை அவனுக்கு. பயந்தவாறு உட்கார்ந்திருந்தான்.

அரவிந்தன் அதற்குள் இரண்டு ஜீப்புகளையும், நான்கு இன்ஸ்பெக்டர்களையும், பத்து போலீஸ் ஆட்களை சித்தமாக்கி நிறுத்தி வைத்திருந்தார் போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால். டிரைவர் அவள் விவரத்தைச் சொன்ன மறு நிமிஷமே வேட்டை நாய்களாய் தரங்கிணியைப் பிடிப்பதற்குத் தயாராய்.

டிரைவர் கேட்ட கேள்விகளுக்கு வாயைத் திறந்து பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தான்.

ராஜசேகருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சங்கடத்தில் ஆழ்ந்தான். மணியோ 1.45ஐத் தாண்டிக் கொண்டிருந்தது.

அதற்குள் பக்கத்து அறையிலிருந்து ஒரு இன்ஸ்பெக்டர் வந்தார்.

அரவிந்தனுக்கு முன்னால் நின்று சல்யூட் பண்ணி விட்டு, "சார், டாக்சியில் ஒரு பெண் கூட இருந்தாள். அவள் இப்போது என் அறையில் இருக்கிறாள். அவள் தேவையில்லைன்னு சொன்னால் உங்க அனுமதியோடு அனுப்பி வைச்சுடறேன்" என்றார், பயந்தவாறு அரவிந்தனைப் பார்த்து.

ஒரு விநாடி அவர் என்ன சொன்னார் என்று புரியவில்லை. புரிந்ததுமே வேகமாய் ராஜசேகரிடம் வந்து அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு இன்ஸ்பெக்டரின் அறையை நோக்கி நகர்ந்தார் அரவிந்தன்.

அரவிந்தன் ஏன் அவ்வாறு இழுத்துக்கொண்டு போகிறார் என்று ஒரு விநாடி புரியாமல் குழம்பியபடியே அவரைத் தொடர்ந்து அறைக்குள் போன ராஜசேகர் அரவிந்தனை ஏதும் புரியாமல் ஏறிட்டான்.

அரவிந்தன் முறுவலோடு 'ஆமாம்' என்பது போல தலையை அசைத்து விட்டு அங்கிருந்த போலீஸ் வான்களுக்கு சைகைக் காட்டினார். அந்த சைகையைப் புரிந்துக் கொண்ட போலீஸ் ஸ்டாஃப் மௌனமாய் அந்த அறையை விட்டு வெளியேறினார்கள்.

ராஜசேகர் அவளைப் பார்த்தான். அவள் ஒரு முறை நிமிர்ந்து ராஜசேகரைப் பார்த்தாள். அது சந்தோஷமா, துக்கமா, ஆனந்தமா, உத்வேகமா, நிம்மதியா என்று சொல்ல முடியாத ஒரு நிலையில் இருந்தான் ராஜசேகர்.

யாரைத் தேடிக்கொண்டு ஆயிரக்கணக்கில் செலவழித்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தானோ,

யாருக்காக தன் உயிருக்குயிரான காதலியைக் கூட பிரிய நேர்ந்து, இவ்வளவு தவிதவிப்போடு இருந்தானோ, இவ்வளவு சிரமங்களை மேற்கொண்டானோ அவள் அவனுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தாள். அவள் கிடைத்து விட்டாள் என்ற சந்தோஷம் அவனைத் திக்கு முக்காடச் செய்தது. அந்த உணர்ச்சியிலிருந்து மீண்டு வர கொஞ்ச நேரம் பிடித்தது

அவளை ஏறயிறங்கப் பார்த்தான்.

அசாதாரணமான அழகு பிம்பமாய் திகழ்ந்தாள் அவள். அபூர்வமான நளினத்தில் நெளிந்துக் கொண்டிருந்தாள். பட்டுப்போன்ற அவள் கரிய கேசங்கள் அருவி நீரைப்போல மின் விசிறிக் காற்றிற்கு நெளிந்துக் கொண்டிருந்தன.

ஒரே விநாடிக்குள் ராஜசேகரின் கண்கள் அவள் எந்தெந்த மேக்கப்பில் எப்படி இருப்பாள், எந்த காஸ்ட் யூம்ஸில் எவ்வாறு தென்படுவாள் என்பதை எடைப் போட்டு விட்டன.

என்றுமே எந்த மாடலுக்கு முன்னாலும் கொஞ்சமும் மனம் தளர்ந்துவிடாத ராஜசேகருக்கு அவள் சோகக் கண்களின் அசைவு கொஞ்சம் உருக்கத்தை உண்டாக்கிற்று.

''மிஸ். தரங்கிணி, உங்களோடு கொஞ்சம் பேசணும்'' என்றான் ராஜசேகர் மெதுவாய்.

அவள் நிமிர்ந்து கண்கள் படபடக்க என்னவென்பது போல ஏறிட்டாள்.

''நான் உங்களுக்காக இருபது நாட்களாய் பல மைல்கள் சுற்றி அலைந்திருக்கேன்...''

''தெரியும்'' என்றாள்.

''ரொம்ப பணம் செலவழித்தேன்...''

''இருக்கலாம்!''

''நான் ஒரு வலையில் சிக்கிட்டிருக்கேன்...''

''உம்...''

''மொதல்ல நான் யாருன்னு சொல்லிடறேன்...நான் ஒரு விளம்பரப் போட்டோகிராப்பர். எதிர்ப்பாராத சூழ்நிலையால் நான் உங்களை வைத்துண்டு, விளம்பரப் படத்தின் வேலையைத் தொடங்க வேண்டியிருக்கு... அதனால்தான்...'' என்று நிறுத்தினான்.

அவள் பேசவில்லை.

பந்தயத்திற்கு வழி வகுத்த சூழ்நிலையிலிருந்து இப் பொழுது அவளைப் பிடித்தது வரையிலும் ஒன்று விடாமல் சொல்லி முடித்தான்.

''ப்ளீஸ், மாடலாய் எனக்கு ஒத்துழைப்பீங்களா? உங்களுக்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் தரேன்...''

அவள் கொஞ்சம் சீரியஸாகி, ''வாட் டு யூ மீன்.....'' என்றாள்.

கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு, ''ப்ளீஸ்! என் நிலைமையைப்புரிஞ்சுண்டு ஒத்துழைப்பீங்களா? இன்னிக்கு 19-ம் தேதி. நாளன்றைக்கு ஷூட்டிங்கைத் தொடங்க வேண்டியிருக்கு. ஒரே ஒரு நாள் தாமதமாயிட்டாலும் நான் நிர்மூலமாயிடுவேன்...''

அவள் கொஞ்ச நேரம் பேசவில்லை. பிறகு சொன் னாள், ''என்னால் முடியாது.''

எங்கோ குண்டு விழுந்து விட்டாற்போல அதிர்ந்து விட்டான் ராஜசேகர். நவ நாடிகளும் தளர்ந்து விட்டன. சலனம் ஒடுங்கி அப்படியே நின்று விட்டான்.

அவள் அப்படி முகத்திலடித்தாற்போல மறுத்து விடுவாள் என்று எதிர்பார்த்திராத ராஜசேகருக்கு அந்த விநாடி மூளை மரத்து விட்டாற் போலாயிற்று. அதற்குள் தேறிக் கொண்டு அவளைப் பார்த்து கெஞ்சி முறையிடத் தொடங்கினான்

"மொதல்ல எனக்கு இந்தப் பந்தயத்தில் வெற்றி பெற்று என் எதிரியை வீழ்த்தணும்னும், பணமும் புகழும் சம்பாதித்துடணும்னு இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது அதை மாற்றிக் கொண்டு விட்டேன். இந்தத் துறைக்கே ஒரு அரக்கனைப்போல அவதரித்திருக்கும் என் எதிரியை வீழ்த்தி அதன் மூலம் அவன் கையால் பலியாகிக் கொண்டிருக்கும் எத்தனையோ அப்பாவிகளான மாடல்களைக் காப்பாற்ற வேண்டும். இந்தப் பந்தயத்தில் நான் தோற்றுவிட்டால் அவன் இன்னும் துளிர்த்து விடுவான். தயவு செய்து ஒப்புக்குங்க," என்றுமே யார் முன்பும் தலை வணங்கியிராத ராஜசேகர் தீனமாய் வேண்டிக் கொண்டிருந்தான் தரங்கிணியை.

அவள் பதில் பேசவில்லை.

"எனக்கு மாடலிங் பண்றது மூலம் அவங்களை அரவணையுங்க!"

மௌனமே அவள் பதிலாயிருந்தது.

"உங்களை கௌரவமாய் பார்த்துக்கறேன். உங்களுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படாமல் பார்த்துக்கறேன். எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டேன். என் நிலைமையை விவரித்தால் நீங்க ஒப்புக்குவீங்கன்னு நினைச்சேன்... எனக்குப் பணம் வேண்டாம், பேர் வேண்டாம். பந்தயத்தில் ஜெயிக்கணுங்கற வெறியோ, பகையோ கூட இல்லை. ஆனால் எங்க தொழிலுக்கு நல்ல காலம் வரணுங்கற எண்ணந்தான் இப்போது என்னுள் இருக்கு. அவனை வீழ்த்திவிட்டு, தொழிலுக்குப் பிடித்த பீடையை விரட்டிடணும்... ஒத்துழைப்பீங்களா? ஆதரவில்லாத மாடல் பெண்மணிகளை ஆதரிக்கும் என் முயற்சிக்குக் கைக் கொடுக்க மாட்டீங்களா?..."

ராஜசேகர் எவ்வளவு தீனமாய் வேண்டியும் அவள் வாயைத் திறக்கவில்லை.

"உங்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கிறேன்" என்றான். அப்பொழுதுதான் அவள் வாயைத் திறந்தாள். "அது உங்களால் முடியாது" என்றாள். ராஜசேகர் வியப்படைந்தான்.

"நான் இப்போது விக்கிரம் கையில் ஒரு கைதி. விக்கிரம் வேறு யார் கையிலோ கைதி. நான் ஒப்புக்கிட்டால் எனக்கு சாவோ அல்லது ஜெயிலோதான் கிட்டும்!"

கொஞ்சம் துணிச்சல் பிறந்தது ராஜசேகருக்கு.

"என் உயிரைப் பணயமாய் வைத்தாவது சரி, உங்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக்கறேன்." என்று நம்பிக்கையோடு அவளைப் பார்த்தான்.

"நோ... எனக்கு இஷ்டமில்லை... நீங்க எவ்வளவு கெஞ்சினாலும் லாபமில்லை, என்னை விட்டுடுங்க... நான் போயிடறேன்..."

"ஆனால்..."

"என்னை பலவந்தப்படுத்த முயற்சிக்காதீங்க. மாடலுக்குப் பிடித்துப் பண்ணினால்தான் நீங்க எதிர் பார்க்கும் அளவுக்கு எஃபெக்ட் வரும்... ப்ளீஸ் லீவ் மீ..." என்றாள் திட்டவட்டமாய்.

அதற்குள் அவளைக் கெஞ்சத் தொடங்கி மூன்று மணி நேரம் ஆகிவிட்டிருந்தது.

தெரிந்து போய் விட்டது... அவள் இனி சம்மதிக்க மாட்டாள்.

தன் தோல்வி உறுதி என்று புரிந்துவிட்டது அவனுக்கு.

இவ்வளவு நாளாய் பெருமையோடு தலைநிமிர்ந்து சுற்றி வந்த அவன் இனி அவமானத்தோடும், தோல்வி யோடும் தலை குனிந்து... தலை குனிந்து...

கேமிரா தத்துவம் தெரிந்திருந்த அவனுக்குப் பெண் களின் தத்துவம் கொஞ்சங்கூடப் புரிபடாத ஒன்று.

அவன் என்ன தப்பு பண்ணிவிட்டான் என்று மஞ்சுளா அவனை விட்டுப் போய் விட்டாள்?

தன்னிடமிருந்து மதிப்பையும் அன்பையும் தவிர வேறெதை எதிர் பார்க்கிறாள் காதம்பரி?

அதுவரை அவனிடமிருந்து தன்னம்பிக்கை பட்டென்று அறுந்துப் போய் விட்டது. அத்துடன் மனத்தளவில் மட்டுமே இன்றி உடலளவில் கூட மிகவும் தளர்ந்து விட்டான்.

ஜுரத்தில் விழுந்தவனைப் போல் ராஜசேகர் நிசப்த மாய் அவ்வறையை விட்டு வெளியேறினான்.

அரவிந்தனுக்கும், எஞ்சிய போலீஸ் ஊழியர்களுக்கும் நன்றி சொல்லி விட்டு அங்கிருந்து அகன்றான். அப்படியே ஓட்டல் அறைக்குப் போய்ச் சேர்ந்தவன் கட்டிலின் மீது பொத்தென்று சரிந்தான்.

கண்கள் பாரமாய் மூடிக்கொண்டன. அது தூக்கம் இல்லாததால் இல்லை... மயக்கத்தோடு கண்களை மூடிக் கொண்ட ராஜசேகரின் உடம்பு தன்னையறியாமல் கலவரத்தோடு ஒரு முறை குலுங்கிற்று. சடாரென்று எழுந்து உட்கார்ந்துக் கொண்டான். அவன் உடம்பு வெட வெட வென்று நடுங்கிற்று. படுக்கையிலிருந்து எழுந்தான். பந்தயத்தில் தோற்று விட்டாலும் சரி. பண்ண வேண்டிய பாக்கி வேலைகள் நினைவுக்கு வந்தன. கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

அவசரம் அவசரமாய் லக்கேஜை எடுத்துக் கொண் டான். போன் பண்ணி பில்லை ரெடியாய் வைக்கச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்,

லிப்டை நெருங்கும்போது ஓட்டல் பையன் எதிர்ப் பட்டான்.

ராஜசேகரைப் பார்த்த அவன் ஆச்சரியமடைந்து, "உடம்பு சரியாயில்லையா சார், ஏன் அப்படி இருக்கீங்க?" கேட்டான்.

அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது ராஜசேகருக்கு-தான் முதல் முதலாய் தரங்கிணியைத் தேடிக் கொண்டு வந்தபோது அவள் போதைப் பொருளுக்கு அடிமையானவள் என்று தெரிவித்தவன் அவன் தான்.

அவனுக்கு பதில் ஒன்றும் சொல்லாமல் நடக்கத் தொடங்கினான். பையன் சொன்னான்.''உங்க ஃபிரண்டும் நீங்களும் ஒரே மாடியில் ரூம் எடுத்துக்காமல் வேறு வேறு மாடிகளில் ஏன் சார் ரூம் எடுத்துக்கிட்டீங்க?''

அதைக் கேட்டு விசுக்கென்று திரும்பினான் புரியாமல்.

''அதான் சார், உங்க ஃபிரெண்டு... பிரான்ஸ் ஃபிரெண்டு!'' என்றுச் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

அதாவது இவ்வளவு நாளாய் தரங்கிணி இதே ஓட்டலில் இருந்தும் அவன் பைத்தியம் பிடித்தவனைப் போல ஊரெல்லாம் தேடியிருக்கிறான். தன் முட்டாள் தனத்துக்குச் சிரித்துக் கொண்டான். அந்த நிலைமையில் கூட அவள் சாமர்த்தியத்திற்குத் திகைத்துப் போய் விட்டான்!

அடுத்த ஒரு மணி நேரத்தில் ராஜசேகர் சென்னைக்குப் போகும் ப்ளைட்டில் இருந்தான். இப்பொழுது அவன் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கவில்லை கண்களை மூடிக்கொண்டு சீட்டில் உட்கார்ந்திருந்தான்.

இருளைத் துளைத்துக் கொண்டு, குளிர்ந்த காற்றைத் துளைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தது ப்ளைட்.

மின் அதிர்ச்சி தாக்கினாற்போல பத்து நிமிஷங்களுக்கு ஒரு முறை தூக்கிவாரிப் போட விழித்துக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

இன்னும் இரண்டு நாட்களில் அவன் தோற்று விட்டதை விளம்பர உலகமெல்லாம் அறியும்படியாய் சித்தரஞ்சன் பரப்பி விடுவான்.

நாடெல்லாம் பரவிவிடும் இந்த விஷயம்.

அந்த அவமானத்தோடு இந்தத் துறையில் எப்படி நீடித்திருப்பது?

இவ்வளவு நாளாய் கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொண்டிருந்த பேரும், புகழும், பணமும், இமேஜும், கௌரவமும் இழந்து... சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் எதிரிகள் எல்லோரும் அவனைப் பழி வாங்கத் தொடங்கிவிடுவார்கள். மற்றவர்களை மோசம் பண்ணும் உத்தேசமில்லாவிட்டாலும், தன்னையே காப் பற்றிக் கொள்வதற்காகவாவது சில பாலிடிக்ஸ்களை நாடகமாட வேண்டும்.

அதைத்தான் அவன் பண்ணாமல் போய்விட்டான்.

இந்த யோசனைக்கு நடுவில் கூட மஞ்சுளாவின் ஞாபகம் வந்தது அவனுக்கு... பிறகு காதம்பரி... மது... சந்திரன்... சுவர்ணா... ரூபவதி... செயின்ட் லாரென்ட்... ஜார்ஜ்... மாலினி... ராம்பூபேல்... ரகிண்... கிரீஷ்... அரவிந்தன்...

இந்த யாகம் வெற்றி பெறுவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் ஒத்துழைத்தார்கள்.

ஆனால், என்ன லாபம்? மிகக் கொடுமையான தோல்வி... படு தோல்வி, இந்த துறையிலிருந்து அவன் நீங்கி விடத்தான் வேண்டும் போலிருந்தது. அதற்கு முன்னால் அவனால் யாரும் நஷ்டமடைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இரவு பத்தடிக்கவிருந்த போது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான் ராஜசேகர். அரைமணிக்குள் மீதிக் காரியங்களை முடிப்பதில் ஆழ்ந்துவிட்டான்.

முதலில் ஆபீசுக்குப் போன் பண்ணி மதுவையும் சந்திரனையும் அர்ஜெண்டாய் வரச் சொன்னான். ஒரு பக்கத்தில் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டே பேனாவையும் பேப்பரையும் எடுத்துக் கொண்டான். அதில்

தன் சொத்துகளை நினைவுப்படுத்திக் கொண்டு எழுதத் தொடங்கினான்.

எழுதி முடித்து விட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். இப்பொழுது அவனிடம் தோற்றுவிட்டோம் என்ற வருத்தமோ ஆத்திரமோ இல்லை. தலைக்குமேல் போய்விட்ட பிறகு சான் போனாலென்ன முழம் போனால் என்ன என்ற வேதாந்த நிம்மதியும் விரக்தியும் ஏற்பட்டிருந்தன.

உயிருக்குயிரான மஞ்சுளாவையும் விட்டு நீங்கி, தன் கையில் மாடலாய் மாறிய சுவர்ணாவையும் சாகப்பண்ணி விட்டு, லட்சக்கணக்காகப் பணம் செலவு பண்ணி கொண்டு, ஆயிரக்கணக்கான மைல்கள் சுற்றிவிட்டு வந்தும் எதைச் சாதித்து விட்டான்?

அதற்குள் மதுவும் சந்திரனும் வந்துச் சேர்ந்து விட்டார்கள். நடந்ததைப் புரிந்துக் கொண்டார்கள். இருவர் இதயமும் பாரமாகிவிட்டன.

ராஜசேகர் அவர்களைப் பார்த்து கம்பீரமாய் சொன்னான்:

"குருவாய் இருந்து போட்டோகிராபியிலுள்ள நெளிவு சுளுவுகளையெல்லாம் கற்றுத் தருவேன்னு என்னிடம் ஆசையாய் வந்துச் சேர்ந்திருக்கிற உங்களை மோசம் பண்ணிட்டேன். என் சொந்த காரியங்களுக்கு என் தனிப் பட்ட பகைமைக்காக உங்களைப் பகடைக் காய்களாய் பயன்படுத்திக்கிட்டேன். இது எந்த குருவுமே சீடனுக்குப் பண்ணத்தகாத காரியங்கள், மன்னிக்க முடியாதது. இந்தப் பந்தயத்தில் ஜெயித்தால் என்னோடு கூட நீங்களும் முன்னுக்கு வருவீங்கன்னு எதிர்பார்த்துதான் உங்களையும் என்னோடு பந்தயத்தில் இழுத்தேன். நான் தோற்றுவிட் டால் நீங்க என்ன பண்ணுவீங்கன்னு யோசித்துப் பார்க்கலை. எவ்வளவோ பேர் இந்தப் பந்தயத்தில் உயிரை இழந்துடுவாங்கன்னு என் நலனைக் கருதுபவர்கள்,

சொன்னதைக் கூடக் கேட்டுக்காமல் நான் பந்தயத்தில் வெல்வதுதான் முக்கியம்னு இருந்துட்ட அரக்கன்- சுயநலக் காரன் நான்.

என்னைக் காப்பாற்றுவதற்காகவே- சித்தரஞ்சனின் ரகசியங்களை வெளிக்கொணர வேண்டும் என்றே சுவர்ணா என்னோடு பேசி சித்தரஞ்சனின் பக்கமாய் போய்ச் சேர்ந்து கொண்டாள் என்று எனக்குத் தெரியும். அவள் கஷ்டத்தில் இருந்தபோது நான் கைக் கொடுத்தேன் என்ற நன்றியால் தான் அவள் தன் உயிரையும் அபாயத் திற்கு உள்ளாக்கிக் கொண்டாள். ஆனாலும் அவள் மேல் இரக்கப்பட்டா நான் அவளை முன்னுக்குக் கொண்டு வந்தேன்? அவள் டேலென்ட்டைப் பார்த்துதானே? ஆனால் என்னால் யாரும் நஷ்டமடைவதை நான் விரும்ப வில்லை. போன சுவர்ணாவின் உயிரைத் திரும்பிக் கொண்டு வந்துவிட முடியாது— அவள் குடும்பத்திற்குக் கொஞ்சம் பண உதவி பண்ணுவதைத் தவிர.

கிரீஷை சொந்தமாய் வேலை பண்ணிக்கச் சொல்லி பந்தயத்திலிருந்து தொலைவில் வைத்துவிட்டேன். அவன் இந்தப் பந்தயத்தில் பகடைக் காயாகவில்லை. ஆனால் இது நான் பண்ணிய நல்ல காரியமாய் எடுத்துக்கக்கூடாது. அவன் என் ரகசியத்தை எதிரிகளிடம் கொண்டு போய் சமர்ப்பிக்கிறான்னு பயந்துதான் பண்ணினேன். மொத்தத்தில் அவனுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. ரூபவதி மயிரிழையில் சந்திரனால் காப்பாற்றப்பட்டு விட்டதால் அவளும் என்னை அரக்கனாய் உருவகப்படுத்த முடியாமல் தப்பிக்க முடிந்தது. என்னால் சுமீதாவை மாடலிங்கில் பலவந்தமாய் இழுத்தேன் நான்.

அந்தத் தப்புக்காக சுமீதாவின் கல்யாணத்துக்காக ஒரு லட்சம் ரூபாய் நான் தரப்போகிறேன். இனிநீங்கள்...நான் பந்தயத்தில் தோற்றாலும், சகல சொத்துகளையும் இழந்துவிட்டாலும் என்னை கௌரவிக்கிற சக போட்டோ கிராப்பர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம்

உங்களைச் சேர்த்து விடுகிறேன்...''— ராஜசேகரின் குரல் நெகிழ்ந்தது

மதுவிடம் மெல்ல மெல்ல எதிரியின் மேல் ஆத்திரமும் பகையும் ஏற்பட்டன. சந்திரனின் தைரியம் கூட கரைந்து விட்டது— ராஜசேகரின் நிலையைப் பார்த்து.

''இவ்வளவு நாளாய் என்னோடு நம்பிக்கையோடு அன்போடு கூடவே இருந்தீர்கள். என் கஷ்டத்தில் பங்கெடுத்துக்கிட்டீங்க. கடைசியில் ஒரே ஒரு வேண்டு கோள்...குருவாய் இல்லை...நண்பனாய்...சகோதரனாய்...'' என்று இருவரையும் பார்த்தான் ராஜசேகர் அன்போடு.

இருவரும் கண்ணீர் மல்க வருத்தத்தோடு பார்த்தார்கள். அந்த நிமிஷத்தில் ராஜசேகர் உயிரையே தரச் சொல்லியிருந்தாலும் சாதோஷமாய்க் கொடுப்பதற்குத் தயாராயிருந்தார்கள்.

''என் சொத்துகளை யெல்லாம் விவரமாய் எழுதி யிருக்கிறேன் இந்த காகிதத்தில். இன்னும் கொஞ்சநேரத்தில் சேட் கிரிலால் வருவான், ஒவ்வொன்றுக்கும் விலை தீர்மானிப்பான். ரெண்டு நாளில் விலை குதிர்ந்துவிடும். நீங்க பண்ணவேண்டியதெல்லாம் நான் எழுதிய லிஸ்ட் பிரகாரம் பணத்தைக் கிடைக்கச் செய்து என்னை கடன் பாரத்திலிருந்து நீக்குவதுதான். என் தப்புகளைத் திருத் திக்கவும், கடனாளியாய் இல்லாமல் பண்ணுவதற்கும், பந்தயத்தில் தோற்ற மொத்தத் கொகையையும் நஷ்டப் பரிகாரமாய் கட்டுவதற்கும் என்னிடமுள்ள சொத்துகள் போதுமோ இல்லையோ தெரியாது...''— ராஜசேகர் சொல்லிக் கொண்டிருந்தபோதே சேட் கிரிலால் வந்தான். கிரிலாலைப் பார்த்து ராஜசேகர், ''சேட்! எதுக்கு என்று எல்லாம் கேள்வி கேட்காமல் நான் எழுதியிருக்கிற சொத்து களுக்கு ரேட் போடுங்க...'' என்றான்.

கிரிலால் நகரத்தில் புகழ்ப்பெற்ற செகண்ட் ஹேண்ட் சாமான்களை விற்றுத் தரும் வியாபாரி.

ராஜசேகரின் குரலில் தெரிந்த வேதனைக்கு மது, சந்திரனோடு, கிரிலாலின் மனமும் கரைந்துவிட்டது.

கிரிலாலுக்கு முழு விவரங்களும் தெரியாவிட்டாலும் சித்தரஞ்சனுக்கும் ராஜசேகருக்கும் இடையே நடந்த பந்தயத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரியும்.

இப்பொழுது சொத்திற்கு ரேட்போடச் சொன்ன தாலும், இரவோடிரவாய் அவசரமாய் கூப்பிட்டதாலும் விஷயம் புரிந்து விட்டது. ஒரு காலத்தில் நிறைய சொத்து களை ராஜசேகருக்கு வாங்கித்தந்தவன் தான் சேட் கிரிலால். இப்பொழுது நிலைமை தலைகீழாகி விட்டது— வாங்கித் தந்த அவனே விற்றுத் தருவது...

சேட்டின் இரும்பு மனம் கூட கசிந்துவிட்டது...மார்ச் 19-ம் தேதி முடிவடையத் தயாராயிருந்தது.

''என்கையில் மின்னலாய் மின்னிய கேமிரா, எனக்கு வெற்றியை வாங்கித் தந்துக் கொண்டிருந்த கேமிரா என்னைப் பழித்துக் கொண்டே போகிறது'' என்று கீழே பையிலிருந்த கேமிராவை வெளியே எடுத்து அதை மார் போடு சேர்த்துக் கொண்டான் ஒரு நிமிஷம்.

இறுதியாய் இரண்டு கண்ணீர்ச் சொட்டுகள் கேமிராவின் மீதுபட்டுத் தெறித்து விழுந்தன நிசப்தமாய்.

அதற்குள் தன்னைத் தேற்றிக் கொண்டு கேமிராவை ஸ்டூலின் மீது வைத்து விட்டு அதை இரு கைகளையும் கூப்பி பக்தியோடு வணங்கினான் ராஜசேகர்.

அக்காட்சியைக் கண்ட மூவராலும் விம்மாமல் இருக்க முடியவில்லை. தொழிலையே தெய்வமாயும், போட்டோ கிராப்பியையே உயிராகவும் பாவித்து வந்த ராஜசேகருக்கு கடைசி முறையாய் தன் உயிரின் ஒரு பாகமே தன்னை விட்டுப் போவது போலிருக்கவே துடிதுடிக்கத் தொடங்கி னான்.

சட்டென்று தேறியவன், "சரி, ஆகட்டும், உங்க வேலையைப் பாருங்க, நோ சென்ட்டிமென்ட்ஸ்" என்றான் கிரிலாலைப் பார்த்து.

சேட் கிரிலால், ராஜசேகரின் சொத்துகளுக்கு மதிப்பு போடத் தொடங்கினான்.

மார் 20-ம் தேதி பாரமாய் நழுவிக் கொண்டிருந்தது.

ஒரு மணி நேரங்கழித்து சேட் நிமிர்ந்தான்.

"உன் சொத்தை பில்டிங், உன் வீடு. அதிலிருக்கிற துரும்பிலிருந்து சகலத்தையும் கணக்குப் போட்டேன். மொத்தம் 26 லட்சத்து 20 ஆயிரம்..." என்றான் அனுபவத்தால் முதிர்ந்த நெற்றிச் சுருக்கங்களைக் கையால் தடவிக் கொண்டே.

அடியுண்டவன் போல் நிமிர்ந்தான் ராஜசேகர்.

"நோ... கிரிலால்சேட்... எனக்கு வேண்டியது 27 லட்சத்து முப்பத்தைந்தாயிரம்... எனக்கு மேலும் 1 லட்சத்து15 ஆயிரம் வேணும். ஒன்று பாக்கி விடாமல் கணக்குப் போடுங்க..."

"நீங்க கட்டிய துணியோடு வெளியேறினால் எவ்வளவுன்னு கணக்கிட்டாச்சு."

"ஆனால்... மீதி பணம் எப்படிக் கிடைக்கும்? எனக்கு இன்னிக்கு ஐந்து பைசா கடன் கொடுப்பவங்க கூட இல்லை. தயவு செய்து என் நிலைமையைப் புரிஞ்சுண்டு இன்னொரு தடவை மதிப்புப் போடுங்க."

ராஜசேகரின் குரலிருந்த உருக்கத்திற்கு சேட் கிரிலால் நெகிழ்ந்து விட்டான்.

திரும்பவும் மதிப்புப் போடத் தொடங்கினான்.

நடந்து கொண்டிருந்தவைகளைப் பார்த்த மதுவின் கண்களில் பழி வாங்கும் உணர்ச்சியும் பகையும் ஏற்பட்டன.

அதே சமயத்தில் ராஜசேகரின் கண்முன் தன் செல்லத் தங்கை அனு...

எவ்வளவு கம்பீரமாய்ப் பண்ண நினைத்திருந்தான் தங்கை கல்யாணத்தை! இப்பொழுது கல்யாணமாவது பண்ண முடியுமா அவனால்?

அந்த யோசனை வந்ததுமே வேதனையாய் மாறி விட்டது அவன் மனம்.

ஜேபியிலிருந்த பர்சை வெளியே எடுத்தான். திறந்து கண் முன்னால் வைத்துக் கொண்டான். அருவியைப் போல சிரித்துக் கொண்டு, அப்பாவிப் பார்வையோடு விழித்துக் கொண்டிருந்தாள் தங்கை போட்டோவில்.

அவன் அப்படி எதைப் பார்க்கிறான் என்று புரியாமல் ஓரடி முன்னுக்கு வந்து கவனித்த மது—ராஜசேகரின் கையிலிருந்த போட்டோவைப் பார்த்ததும் புரிந்துக் கொண்டான்.

மது சுவாதீனத்தோடு மேஜை மேல் இருந்த காகிதத்தை எடுத்தான். அதில் இவ்வாறு எழுதியிருந்தான் ராஜசேகர்—

பந்தயத்தில் தோற்றதற்கு சித்தரஞ்சனுக்கு	=	10,000,00
கோரமண்டலுக்கு நஷ்ட ஈடு	=	15,000,00
சுவர்ணாவின் குடும்பத்திற்கு	=	1,000,00
ரூபவதியின் தங்கை சுமீதாவின் திருமணத்திற்கு	=	1,000,00
மதுவுக்கு	=	10,000
சந்திரனுக்கு	=	10,000
ஆபீஸ் ஸ்டாஃப்புக்கு ஒரு மாத சம்பளம் இனமாய்	=	15,000
மொத்தம்		27,35,000

எஞ்சியிருக்கும் பொறுப்பு அனுவின் திருமணம்... எப்படி?

அந்தக் காகிதத்தில் அவ்விதமாய் எழுதியிருந்தது... அந்த கடைசி வாக்கியந்தான் மதுவை மிகவும் நெழ்த்தி விட்டது.

சேட் சொத்து மதிப்பைத் திரும்பவும் கணக்கிட்டு முடித்து விட்டு வாயைத் திறக்கப் போனபோது போன் ஒலித்தது. மற்ற யாருக்குமே போனை எடுக்கும் ஆர்வம் கூட இல்லாததால் சோர்வுடன் மது போனை எடுத்தான்.

43

போனில் பேசிக்கொண்டிருந்த மதுவின் முகத்தில் மெதுவாய் மாறுதல் வரத் தொடங்கிற்று. சட்டென்று ஆனந்தத்தால் தலைத்தெறிக்கக் குதித்து விட்டு போனை ராஜசேகரிடம் தந்துவிட்டு, "தரங்கிணி சார்... கல்கத்தா விலிருந்து மெட்றாசுக்கு வந்து விட்டாள். மாடலிங்குக்கு ஒப்புக்கறாப்பல தோணுகிறது" என்றான்.

ராஜசேகர் வியப்போடு போனை வாங்கிக் கொண் டான்.

"ஹலோ! ராஜசேகர் பேசறேன்..."

"மிஸ்டர் ராஜசேகர், நான் தரங்கிணி பேசறேன்."

அவள் குரலை அடையாளம் புரிந்து கொண்டான் ராஜசேகர். ஆனால் அதிர்ச்சியாய் இருந்த அந்த நிலையில் என்ன பேசுவதென்றே தெரியாமல் மௌனமாய் இருந் தான்.

"மாடலிங் பண்ணமுடியாதுன்னு சொல்லி உங்களை அப்செட் பண்ணிட்டேனில்லே?... சாரீ, என்னைச் சுற்றி லும் பின்னப்பட்டிருந்த வலை என்னை அந்த மாதிரி பயப் படச் செய்தது. அதனால்தான் பயந்து மறுத்தேன். ஆனால் உங்களை உங்களுக்கே தெரியாமல் டில்லி விமான நிலை

யத்தில் பார்த்ததிலிருந்தே உங்க மேல் நல்ல அபிப்பிராயம் எற்பட்டது. அதற்கப்புறம் என்னைப் பிடிப்பதற்காக நீங்க பட்ட சிரமத்தைப் பார்த்து ரொம்ப வருந்தினேன். ஃபஸ்ட் இம்ப்ரெஷன் ஈஸ் பெஸ்ட் இம்ப்ரெஷன்! லவ் அட் ஃபர்ஸ் ஸைட் போன்றவைகளையெல்லாம் நான் இவ்வளவு நாளாய் நம்பவில்லை... ஆனால்...'' — அவள் குரலில் ஆனந்தத்தையும் ஒரு இனிய அனுபவத்தையும் அடக்கிக் கொள்ள முயன்றது நன்றாய்த் தெரிந்தது.

ஆனாலும் ராஜசேகருக்கு சந்தேகமாய் தான் இருந்தது— அவள் ஒப்புக் கொள்வாளோ மாட்டாளோ என்று.

"உங்களைப் பற்றி நான் பாரீசில் இருந்த போதே கேள்விப்பட்டிருக்கேன். நீங்கள் எவ்வளவு ஃபென் டாஸ்டிக் விளம்பர போட்டோகிராப்பருன்னு இங்கே வந்ததுமே என் ஃபிரெண்ட் சரிதாதேவியின் மூலமாய் கேள்விப்பட்டேன். உங்களைப் போன்ற நல்ல போட்டோ கிராப்பருக்கு மாடலிங் பண்றது என் அதிர்ஷ்டம். எல்லா வற்றையும் விட பெரிய அதிர்ஷ்டம் என்ன தெரியுமா? எனக்காக நீங்க சுற்றியலைந்தது! ஒரு மாடலுக்காக ஒரு போட்டோகிராப்பர் சுற்றியலைந்ததாய் நான் அதை ஊகிச்சுக்கவில்லை. ஒரு அழகான பொண்ணுக்காக ஒரு அழகான ஆண் சுற்றியலைகிற இனிமையான உணர்ச்சி... இந்த உணர்ச்சிக்கு எவ்வளவு கோடிகளை வாரி வழங் கினாலும் ஈடாகாது. அதனால்தான் நீங்க போலீஸ் ஸ்டேஷனில் 'பணம்' என்று சொன்னபோது கோபம் வந்துடுத்து- நீங்க சுற்றியலைவதில் கவனமாயிருந்ததால் கவனிக்கவில்லை. ஆனால் உங்களை முதன் முதலாய் பார்த்தபோது என் கண்களில் நிழலாடிய இனிய உணர்ச்சி களை நீங்கள் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் நீங்க இப்போது இவ்வளவு அப்செட் ஆயிருக்க மாட்டீங்க. என் நிலையில் வேறு யாராவது ஆண் இருந்திருந்தால் நாலு உதை கொடுத்தாவது மாடலிங்குக்கு சம்மதிக்க வைச்சிருப்

பாங்க. ஆனால் ஒரு பெண்ணிடம் நீங்க அந்த மாதிரி அவமரியாதையாய் நடந்துக்க முடியாத ஆதரவில்லாத உங்க நிலையை கவனித்தேன். நீங்கள் பெண்ணிடத்தில் காட்டுகிற இந்த மதிப்புத்தான் எனக்கு மிகவும் பிடிச் சுடுத்து. என்னை மாடலாய் ஊகிச்சுக்கொண்டிருந்த உங்கள் பார்வையில் காமமோ வேறெந்த உணர்ச்சியோ இல்லை. ஒரு அபூர்வ அழகை ஆராதிக்கும் உணர்ச்சி தான் தெரிந்தது. உங்களை எப்படி கவனித்தேன் என்று சந்தேகம் வரலாம் உங்களுக்கு. என் சப்ஜெக்ட் சைகாலஜி. பிறர் மனத்தத்துவங்களைக் கண்டுப் பிடிப்பது எனக்குப் பொழுதுப் போக்கு. உங்களை முதலில் அழவைக்கணும் என்றும் ரோஷத்தை வரவழைக்கணும்னும் தோணிற்று. ஆனால் நான் இருந்த நிலைமை அதற்கு சம்மதிக்கவில்லை ஐ லைக் யூ... ஐ லவ் யூ... விநோதமாய் இருக்கோனோ?... காதல் என்பது சில நாள் பார்த்த பிறகுதான், கலந்து பழகிய பிறகுதான் பிறக்கணும்னு இல்லை. நீங்கள் அழகாய் இருக்கீங்க என்றும் நல்ல போட்டோ கிராட்பர் என்றும் எண்ணி உங்களைக் காதலிக்கவில்லை. உங்கள் முகத்தில் நான் கண்டு பிடித்த உணர்ச்சிகள்தான் உங்களைக் காதலிக்கச் செய்தன. அதை அப்பொழுதே சொல்ல நினைத்தேன். ஆனால் நான் புதைமணல் போன்ற ஆபத்தில் சிக்கிட்டிருந்தேன். அந்த ஆபத்து என்னை ஏதாவது பண்ணிடுமோன்னு இல்லை, உங்களுக்கு ஒன்றும் நேர்ந்துடக்கூடாதுன்னுதான்...உங்களுக்குப் பக்கத்திலேயே இருந்து உங்களைப் பல முறை பார்த்து ஆசைதீர திருப்திய டைந்தேன். உங்களுக்கு முன்னால் வரணும் என்றும் வந்து ஒரு ஆபூர்வப் பெண்ணின் முதல் முத்தத்தை உங்கள் மீது முத்திரை பதிப்பிக்கணும் என்று ஆசைப்படுவேன். ஒவ்வொரு முறையும் அந்த உணர்ச்சிக்கு மிக நெருக்கத்தில் வந்து விட்டுத் திரும்பும்போதும் பெருத்த அதிருப்திக்கு ஆளாவேன். இந்த ஆட்டத்தில் சிக்கிக்காமல் இருவரும் ஃப்ரீயாய் இருந்திருந்தால் என் குறும்புத்தனமான சேஷ்டைகளால் உங்களை அதிர வைத்திருப்பேன். நீங்கள்

நிஜமாகவே ஒரு அசடு! இல்லாவிட்டால் கல்கத்தாவில் நான் நிஜமாகவே பெங்களூருக்குப் போகிறனா இல்லையான்னு தெரிஞ்சுக்காமலேயே பெங்களூருக்குப் போனீங்க. நான் கல்கத்தாவிலேயே இருந்த விஷயத்தை நீங்க கண்டுப் பிடிச்சுடுவீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனால் அவ்வளவு லேட்டாகவா? கல்கத்தாவில் எல்லா ஓட்டல்களையும் செக் பண்ணின நீங்கள்—நீங்கள் தங்கியிருந்த ஓட்டலை மட்டும் செக் பண்ணாமல் போயிட்டீங்களே! நீங்க அதே ஓட்டலில் இருந்ததால் இங்கேயே ஏன் இருக்கப் போகிறாள் என்று எண்ணிட்டீங்களா? WBD 7777 ஐ முதலிலேயே பிடிச்சிருக்கலாமே! இதையெல்லாம் கொண்டு பார்த்தால் நீங்க தொழிலில்தான் கீர்த்தி வாய்ந்தவரே தவிர மீதி விஷயங்களில் அசடு. நேற்றுவரை இந்த ஆபத்தில் நான் என்னவாவேனோன்னு பயந்துட்டிருந்தேன். ஆனால் இன்று என்னவானாலும் பரவாயில்லைங்கிற வைராக்கியம் வந்துடுத்து. ஆனால் இப்போது எனக்கு என்னைச் சுற்றிலும் போட்டிருக்கும் வலையிலிருந்து தப்பித்து வெளி வந்துடணும்னு இருக்கு. நான் என் காதலன் எப்படி இருக்கவேண்டுமென்று கனவு கண்டு வந்தேனோ அதே போலவே இருக்கிறீர்கள் நீங்கள். அதனால் நான் வெளியேறணும். அந்தக் காரியத்தை நீங்க பண்ணுங்க. நீங்க எதிர்பார்த்ததைவிட மேலாய் நான் உங்கள் மாடலாய் ஒத்துழைக்கிறேன். இத்தனையும் உங்களுக்காகவே பண்றேன்''— பேசி நிறுத்தினாள்.

நரம்புகளை ஜிவ்வென்று சுண்டியிழுக்கும் ஒரு அலையைப் போன்ற இனிமையான ஓசை நின்றது.

அத்தனையையும் கேட்ட ராஜசேகரின் நிலைமை அல்லோலகல்லோலமாகி விட்டது.

''என்ன யோசிக்கிறீங்க? உங்க பந்தயத்தில் நீங்க தோற்கிற கெடு நெருங்கவில்லை. கமான்... உறுதியை இரு மடங்காக்கிக் கொண்டு எழுந்திருங்க... அடிக்கு பதிலடி கொடுங்க— சாமர்த்தியமாய்... இவ்வளவு நடந்த பிறகு

இன்னும் நல்லது கெட்டது பற்றி யோசித்துக் குழம்ப வேண்டாம்...உங்களுக்காக உயிரையுந் தர தயாராயிருக்கேன் கமான்... உங்கள் அஸ்திரங்களை எடுத்து ஏவுங்கள்... தொழிலில் மட்டுமே இல்லை எல்லாவற்றிலுமே கெட்டிக்காரனாவைனைத்தான் எந்தப் பெண்ணுமே விரும்புவாள் கமான்...மூவ்...மூவ்...ஐஸே...அசடு..."—ஜலதரங்கத்தைப் போல ராஜசேகரைத் தூண்டியபடி சிரித்தாள் அலை அலையாய்.

ஒரே விநாடியில் சுதாரித்துக் கொண்டான் ராஜசேகர்...

யுத்தத்திற்குத் தயாராகி விட்ட சேனை வீரனாய் வீர ஆவேசத்துடன் எழுந்திருந்தான்.

"சொல்லுங்கள்... உங்களைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கும் வலை எப்படிப்பட்ட வலை?"

தரங்கிணி சிரித்தாள்.

"எங்கே இருக்கிறாய்?"

"திருவான்மியூரில் ஒரு வீட்டில்... விக்கிரமின் கைதியாய்..."

போனை வைத்து விட்டான்.

கண்களில் தீப்பறந்தது. ஆவேசத்தால் உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டன.

இனி எந்தச் சக்தியுமே தன்னைத் தடுத்து விடாது என்ற ஆவேசத்தில் ஆடிக் கொண்டிருந்தான்.

"சேட் சார், நீங்க இனி தேவையில்லை, போயிட்டு வாங்க" என்றான்.

புரிந்துக் கொண்ட தோரணையில் சேட் போய் விட்டார்.

மதுவையும் சந்திரனையும் பார்த்தான் ஒரு விநாடி.

''சார் நீங்க தோற்றுப் போவதை நாங்க விரும்பலை, தோல்வியை எங்களால் ஜீரணித்துக்க முடியாது. எங்க உயிரே போனாலும் சரி, நீங்க இதில் ஜெயித்துத் தீரணும். இனி இதில் உங்க சுயநலம் எதுவுமில்லை.

பந்தயத்தில் ஜெயிப்பது தொழிலுக்கு வரப்போகிற நல்ல நாட்களுக்கு சுபசூசகம்... சொல்லுங்க, நாங்க என்ன பண்ணணும்னு.''

எதிரியின்மீது பாயத் தயாராயிருக்கும் சிங்கங்களைப் போலிருந்தார்கள் இருவரும்.

இருவரையும் திருப்தியோடு பார்த்தான். அடுத்த கணமே இருவருக்கும் பண்ண வேண்டிய காரியங்களை உத்தரவிட்டான்.

இரவு மணி ஒன்று.

ராஜசேகரின் கார் சர்வோதயா ஓட்டலை நோக்கிப் பறந்துக் கொண்டிருந்தது. என்றுமே சாந்தமாய் இருக்கும் அவன் முகத்தில் இப்பொழுது ராட்சசத்தனம இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

அடுத்த இருபதாவது நிமிஷத்தில் ரூம் நம்பர் 116-க்கு முன்னால் வந்து நின்றான்.

காலிங் பெல் அலறவே அலுப்போடு எழுந்திருந்தான் விக்கிரம்.

அறைக்கு வெளியே நின்றுக் கொண்டிருந்த ராஜசேகர் சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் நிசப்தமாயிருந்தது. மங்கலான விளக்கு வெளிச்சம் லாபிற்குள் பரவிக் கொண் டிருந்தது. அறைக்குள் இருந்த ஏர் கண்டிஷனரின் சப்தம் லேசாய் கேட்டது. யாரும் வர முடியாது. லாட்ஜில் இருந்த எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

கதவைத் திறந்தான் விக்கிரம். எதிரே ஆஜானுபாகு வாய் நின்று கொண்டிருந்த ராஜசேகரைப் பார்த்ததுமே தூக்கக் கலக்கம் விடுபட்டுவிட்டது அவனுக்கு. கலவரத்

தோடு கதவைச் சாத்திக் கொள்ளப் போனான். ஆனால் அதற்குள் ராஜசேகர் காலைக் குறுக்காக வைத்துக் கதவைத் தள்ளிக் கொண்டே உள்ளே நுழைந்து கதவைச் சாத்தி விட்டான்.

சிலையாய் நின்றுவிட்டான் விக்கிரம்.

ஒரு முறை விக்கிரமனைக் கூர்ந்து கவனித்தான் ராஜசேகர்.

பலமாய் உருண்டு திரண்டு இருந்தான்.

"இதப்பார்! நான் நேராய் விஷயத்துக்கு வரேன். உன் விஷயமெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். நீ ஒரு இண்டர்நேஷனல் கள்ளக் கடத்தல்காரன். நீ ரெண்டு கோடி விலை மதிப்புள்ள போதைப் பொருட்களை மிக சாமர்த்தியமாய் இந்தியாவுக்குக் கொண்டு வந்திருக் கிறாய். அவை இப்போது சித்தரஞ்சனின் கோடவுனில் இருக்கிறது. அவற்றை உனக்கு விற்றுத் தருவான்னு ஆசைப் பட்டு சித்தரஞ்சனிடம் போய்ச் சேர்ந்திருக்கிறாய். அதற் காக தரங்கிணியை உன் வலைக்குள் வீழ்த்தியிருக்கிறாய். சித்தரஞ்சனுக்காக நீ ஒரு கொலை பண்ணிட்டு, அந்தக் கொலையைத் தரங்கிணி பண்ணியதுபோல போட்டோக் கள் எடுத்திருக்கிறாய். அவளை மிரட்டி பயமுறுத்தி போதைப் பொருட்களுக்குக் கூட அடிமையாக்கிவிட்டாய் சித்தரஞ்சனுக்கும் உனக்கும் இடையேயுள்ள லேவாதேவி யெல்லாம் எனக்குத் தேவையில்லை. அந்த போட்டோக் களை மரியாதையாய் கொடுத்துவிடு. நான் போயிடறேன். இல்லாவிட்டால்..."

விக்கிரம் ஒரு விநாடி பயந்தாலும் சட்டென்று தேறிக்கொண்டான்.

"இல்லாவிட்டால் என்ன பண்ணிவிடுவாய்? பாதிராத் திரியில் ரூமுக்கு வந்து பயமுறுத்துக்கிறாய்னு கம்ளைண்டு தருவேன்" என்றான் மிடுக்காய்.

"தா... அத்துடன் உன் சரித்திரத்தையே தலைகீழாய் புரட்டிரு வாங்க போலீசார்... கம்ளைண்டு கொடு..." —போனை எடுத்து விக்கிரமிடம் நீட்டினான் ராஜசேகர்.

இக்கட்டில் ஆழ்ந்தான் விக்கிரம்.

எப்படியாவது தற்போதைக்கு ராஜசேகரிடமிருந்து தப்பினால் போதும் என்றிருந்தது அவனுக்கு.

போலீசுக்குப் பண்ணுவதுபோல போஸ் காட்டி விட்டுப் போனைக் கையிலெடுத்துக் கொண்டான் விக்கிரம். ராஜசேகர் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

விக்கிரம் மூன்றாவது நம்பரைச் சுழற்றியபோது அது சித்தரஞ்சனின் நம்பர்தான் என்றறிந்து கொண்டதுமே விக்கிரமின் கழுத்துப் பக்கத்தில் இரும்புப் பிடியைப் போன்ற கையால் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

உடனே தேறிக்கொண்ட விக்கிரம் ராஜசேகரின் மீது பாய்ந்தான். அதற்குத் தயாராகவே வந்திருந்த ராஜசேகர் விக்கிரமைத் தன் வசப்படுத்திக் கொள்வதில் முனைந்தான்.

இருவர் கைகளும் கலந்தன. இருபது நாளாய் சரியான ஆகாரமோ உறக்கமோ இல்லாத ராஜசேகர் விக்கிரமின் உதகளை வாங்கிக் கொண்டதால் சோர்ந்து விட்டான். இன்னும் கொஞ்ச நேரம் இச்சண்டை நீடித்தால் தான் சாவது உறுதி என்றுணர்ந்தான். ஒரு முறை தலையைச் சிலிர்த்துக் கொண்டு, தன் குருவை மனதில் நினைத்துக் கொண்டான். தன் சக்தியையெல்லாம் கூட்டிக்கொண்டு, பாவபுண்ணியம் பற்றிய அச்சத்தையெல்லாம் விட்டுவிட்டு தன்னோடு சண்டையிட்டுக் கொண்டிருந்த விக்கிரமை ஒரு முறை பார்த்தான். அவ்வளவுதான். அடுத்த நிமிஷம் ராஜசேகரின் இரு கைகளும் இரும்புப் பிடிகளாய் மாறி விக்கிரமின் கழுத்தின் மீது வந்து விழுந்தன... வீலென்ற ஓலத்தோடு கீழே சரிந்தான் விக்கிரம். இன்னும் நாலுமணி நேரத்திற்கு எழுந்திருக்கமாட்டான்.

மளமளவென்று எல்லாவற்றையும் தேடத் தொடங்கினான் ராஜசேகர்.

அரைமணிக்குப் பிறகு அவன் முயற்சி பலித்தது. உறையை எடுத்துக் கொண்டு நிம்மதியாய் வெளியே வந்தான்.

சரியாய் அதே சமயத்தில் சேட் கிரிலாலை மிரட்டி விஷயத்தைக் கக்க வைத்த கைலாசன் வெகுண்டு தரங்கிணியின் கெஸ்ட் ஹவுசை நோக்கிக் கிளம்பினான்- எமனாய், தரங்கிணியைக் கொன்றுவிட எண்ணி.

ராஜசேகரின் கார் ஒரு பக்கத்திலிருந்தும், கைலாசனின் கார் இன்னொரு பக்கத்திலிருந்தும் நேராய் தரங்கிணி இருந்த கெஸ்ட் ஹவுசை நெருங்கிக் கொண்டிருந்தன.

இன்னொரு பக்கத்தில் மது சித்தரஞ்சனின் வீட்டை நோக்கியும், சந்திரன் கெஸ்ட் ஹவுசை நோக்கியும் போய்க் கொண்டிருந்தார்கள் கால ருத்திரர்களைப் போல.

ராஜசேகருக்கும் முன்னால் கைலாசனின் கார் தரங்கிணியின் கெஸ்ட் ஹவுசுக்கு முன்னால் வந்து நின்றது.

ஒரு பெரும் ஆபத்தை தடுத்து நிறுத்த வேண்டிய தருணத்தில் ராஜசேகரின் கார் தெருமுனையில் திரும்பிக் கொண்டிருந்தது.

அதற்குள் வீலென்ற ஓலம் அந்த நிசப்தமான சூழ்நிலையில் இதயத்தைக் கசக்கிப் பிழியும் படியாய் கேட்டது

ஆத்திரத்தோடு கையிலிருந்த பிஸ்டலைப் பார்த்துக் கொண்டே கீழே வந்து காரில் ஏறிக் கொண்டான் கைலாசன்.

அந்த கார் அந்தப் பக்கமாய் போய் மறைந்ததுமே, ராஜசேகரின் கார் அங்கு வந்து நின்றது.

கையில் கவரோடு ஆனந்தமாய் வீட்டிற்குள் நுழைந்த ராஜசேகர், அங்கு தென்பட்ட காட்சியைப் பார்த்து செயலடங்கி நின்று விட்டான். நவநாடிகளும் ஸ்தம்பித்து விட்டன... கொஞ்ச நேரம் கைகளும் கால்களும் ஆடவேயில்லை.

44

சித்தரஞ்சனின் சிரிப்பு விகாரமாய் அவன் அறை முழுவதும் எதிரொலித்தது. எதிரே கைலாசனும், இன்னும் நான்கு எமகிங்கரர்களைப் போன்ற கையாட்களும் அந்த ஆனந்தத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

வெகு நாட்களுக்குப் பிறகு சித்தரஞ்சனின் முகத்தில் சிரிப்பு—குரூரமான சிரிப்பு...

"தரங்கிணி க்ளோசா?" கேட்டான் கைலாசனைப் பார்த்து.

"எஸ்... ஸார்... தரங்கிணி செத்ததும், அதைத் தொடர்ந்து ராஜசேகர் அங்கே போய்ச் சேர்ந்ததும், அதைத் தொடர்ந்து போலீசுக்குப் போன் பண்ணுவதும் நிகழ்ந்தது. ராஜசேகர் இந்த நேரத்தில் ஜெயிலில் கம்பி களை எண்ணிட்டு..."

"யூ ஃபூலிஷ் ஃபெலோ...ராஜசேகரின் ஷூட்டிங்குக்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்துடுத்து. தற்சமயம் ராஜசேகர் ஊரிலில்லை. நாளைக் காலையில் வேலூருக்கருகில் வேலை தொடங்கப்போகிறது. ஜார்ஜ் ரகசியமாய் எல்லா ஏற்பாடு களையும் பண்ணிட்டு ராஜசேகருக்காக வேலூருக்கருகில் காத்துட்டிருக்கான். இதுக்கு என்ன சொல்கிறாய்?"

கைலாசனுக்குக் குழப்பமாயிருந்தது.

"ஆனால் தரங்கிணி இல்லாமல் எப்படி...?"

"தரங்கிணியை வெச்சுட்டுதான் எடுக்கிறான்."

"நடக்காத காரியம். அவளை என் கையாலேயே தானே கொன்றேன்! என் கண் முன்னாடியே ரத்த வெள்ளத்தில் கீழே சரிந்தாள் அவள்."

"சரிந்து விழுந்தாள். செத்துவிட்டாள். நம்பறேன்."

"பின்னே எப்படி எடுப்பாங்க?"

"வேறு தரங்கிணியைக் கொண்டு எடுக்கிறான். அதான் உபாயம்! அதே சாயல்களைக் கொண்ட தரங்கிணியைக் கொண்டு. கிரண் கிராமத்தில் அலைந்து தேடிக் கண்டு பிடித்திருக்கும் தரங்கிணியைக் கொண்டு..."

"கம்பெனி ஒப்புக்காது. எடுத்தால் எடுத்துக்கட்டுமே" என்றான் அலட்சியமாய் கைலாசன்.

அதைக் கேட்ட சித்தரஞ்சனின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. ஒரு விநாடி கைலாசன் பயந்துவிட்டான்.

"அந்தக் காரியத்தை நடக்கவிடக்கூடாது. ராஜசேகர் பிலிமே எடுக்கக்கூடாது."

"போய் அட்டாக் பண்ணச் சொல்றீங்களா?"

"அதனால்தான் உனக்கு மூளையில் களிமண் என்கிறேன். போலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்திக்கிட்டிருப்பான்."

"பின்னே என்ன பண்றது?"

சித்தரஞ்சன் என்ன திட்டம் தீட்டியிருக்கிறான் என்று கைலாசனுக்குப் புரியவில்லை.

"ராஜசேகரின் மானசீக நிலையின் மீது ஒரு உதை கொடுத்து வெற்றியை சாதித்துக்கணும்."

"எப்படி?"

சித்தரஞ்சன் மெதுவாய் சொல்லிக் கொண்டே போனான்.

o o o

வேலூருக்கருகில் ஒரு ஏரிக் கரையில் ராஜசேகரின் யூனிட் தங்கியிருந்தது.

விடிய இன்னும் கொஞ்ச நேரந்தான் பாக்கியிருந்தது. ஜார்ஜ் லொகேஷன் இன்சார்ஜாய் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தான் ரிஃப்ளெக்டர்களும், கேமிராக்களும் ரெடியாகி விட்டன.

தரங்கிணிக்கும் எஞ்சிய மாடல்களுக்கும் மேக்கப் முடிவடைந்து விட்டது ராஜசேகர் அங்கேயே ஒரு நாற் காலியில் உட்கார்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டு எடுக்கப்போகும் ஷாட்களைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

இந்த வேலை அவன் தொழிலுக்கே ஒரு சவால். விளம்பர உலகமே ஒரு பெரிய எதிர்பார்ப்புடன், உற்சாகத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பந்த யத்தில் ஜெயித்தாலும் கூட வேலையில் ஜீவன் இல்லா விட்டால் தோற்றது போலாகி விடும்.

தீவிரமாய் மூளையைக் குடைந்து கொண்டான். ஜார்ஜ் ஒரு பக்கத்தில் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந் தான். கிரீஷ் மாடல்களை வைத்துக் கொண்டு ஒத்திகை பார்த்தபடி இருந்தான்.

மது இரவெல்லாம் பெய்த பனியால் கட்டி தட்டிப் போயிருந்த மணலை ஒரு ஹீட்மிஷின் மூலமாய் பொடி பண்ணிக் கொண்டிருந்தான். ஹேர்ஸ்டைலிஸ்ட், மேக்கப் மேன், காஸ்ட்யூமர் எல்லோரும் ரெடியாய் இருந்தார்கள்.

மெதுவாய் கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. அந்த சூரியோதய வேளையில் அவரவர்கள் தம் வேலையில் ஆழ்ந்திருந்தார்கள்.

எல்லா வேலைகளும் முடிவடைந்து விட்டன.

எல்லோரும் ஒருமுறை ராஜசேகரைப் பார்த்தார்கள்— அவன் உத்தரவுக்காக. ராஜசேகர் மெல்ல கண்களைத் திறந்து சுற்றிலும் பார்த்தான். நடந்த ஏற்பாடுகளைப் பார்த்துத் திருப்தியடைந்தான்.

நிமிர்ந்து தொலைவில் தெரிந்த மலையுச்சியைப் பார்த்தான். அங்கே மூன்று பேர் மங்கலாய் தென்பட்டார்கள். கால ருத்திரர்களைப் போலிருந்த அம்மூவரும் கிரண், ராம்பூபால், சந்திரன் அவர்கள் கையிலிருந்த கொலை ஆயுதங்கள் சித்தரஞ்சனின் ஆட்கள் வந்தால் வீழ்த்துவதற்குத் தயாராய் இருந்தன.

ராஜசேகர் திருப்தியோடு தலையசைத்துக் கொண்டே மூடில் ஆழ்ந்து விட்டான்.

உதயசூரியனின் கிரணங்கள் மலைச் சிகரங்களைத் தாண்டிக் கொண்டு அந்த லொகேஷனில் வந்து படியத் தொடங்கின. ராஜசேகர் கேமிராவைத் தொட்டு பக்தியோடு வணங்கினான். அடுத்த நிமிஷம் கேமிராவைத் தோளில் வாங்கிக் கொண்டான்.

உடனே காற்றில் கையசைத்தான்.

அடுத்த வினாடி ரிஃப்ளெக்டர் மாடல்கள் முகங்களின் மீது செலுத்தப்பட்டன. யூனிட் முழுவதும் விழிப்பாகி விட்டது. அந்த நிசப்தமான சூழ்நிலையில் கிரீஷ் ''ஆக்ஷன்'' என்று கத்திய கத்தல் கிருஷ்ணரின் வாயிலிருந்து வந்த சங்கு ஓசையாய் அவ்வெல்லையில் எதிரொலித்தது. அவ்வளவுதான்...ராஜசேகரின் கையிலிருந்த கேமிரா ஆன் ஆயிற்று. முதலில் தரங்கிணி அருவியைப்போல...மந்த மாருதத்தைப் போல...அழகாய் அசைந்தபடி, ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்துக் கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தாள்... இயற்கையையே பழிக்கக் கூடிய அவள் அசாதாரணமான அழகைக் காட்டிக்கொண்டே...அவள் கால்கள் கலையோடு நாட்டியமாடிக் கொண்டிருந்தன...அவள் மென்மையான அதரங்கள் பாட்டை அசைத்துக் கொண்டிருந்தன.

பிறைச் சந்திரனைப் போல வளைந்திருந்த தென்னை மரங்களுக்கிடையே ராஜசேகரின் கையிலிருந்த கேமிரா வேலையில் ஆழ்ந்திருந்தது. சரியாய் அதே சமயத்தில்

ஒருவன் ஆயாசத்தோடு மூச்சிரைக்க பரபரக்க ஓடி வந்தான் ராஜசேகரை நோக்கி. அவனுக்குப் பின்னால் சந்திரன் அவனைத் தடுத்து நிறுத்துவதற்காக ஓடி வந்து கொண்டிருந்தான்.

யூனிட் அங்கத்தினர்கள் எல்லோரும் அந்த திடீர்ச் சூழ்நிலையை ஆச்சரியமடைந்தவர்களாய் பார்க்கத் தொடங்கினார்கள்.

அதொன்றையும் கவனிக்கும் நிலையிலில்லை ராஜ சேகர்.

கண் மூடித் திறப்பதற்குள் அவன் ஓட்டமாய் ஓடி வந்து ராஜசேகரை அடைந்ததும், ராஜசேகர் அவன் சொன்னதைக் கேட்டதும், கேமிராவை அப்படியே விட்டு விட்டு தொப்பென்று தரையில் கீரையாய் சரிந்து விழுந்ததும் நடந்து முடிந்து விட்டன.

அதற்குள் சந்திரனும் அங்கு வந்து சேர்ந்துவிட்டான். யூனிட்டில் அல்லோலகல்லோலம் ஏற்படத் தொடங்கிற்று. எல்லோரும் ராஜசேகர் சட்டென்று எழுந்ததையும், மதுவை அவசரமாய் கூப்பிட்டதையும், உடனே காரில் புறப்பட்ட தையும் பார்த்தார்கள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் ராஜசேகரும் மதுவும் ஏறிய கார் சென்னையை நோக்கிப் புறப்பட்டது.

ராஜசேகரின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் பொங்கி வந்து கொண்டிருந்தது. தான் அவ்வாறு வேலையைப் பாதியில் போட்டுவிட்டு வந்தால் தோற்று விடுவோமே என்ற பயம் இப்பொழுது அவனிடம் இல்லை.

லொகேஷனில் இருந்த ஒருவருக்குமே என்ன நடந்த தென்று புரியவில்லை. எல்லோருமே குழப்பத்தில் ஆழ்ந்து விட்டார்கள். அதற்குள் சந்திரன் செய்தி கொண்டு வந்த அந்த ஆளை நான்கு உதை உதைக்கவே, அவன், "எனக் கொன்னும் தெரியாது...என்னை விட்டுடுங்க...காதம்பரி

சாவுடன் போராடிண்டிருப்பதாய் சித்தரஞ்சன் ராஜ சேகரிடம் சொல்லச் சொன்னதை வந்து சொன்னேன்... அவ்வளவுதான்...'' என்றான் தீனமாய்.

ஒரு விநாடி அங்கிருந்த எல்லோருமே பயந்து நடுங்கி விட்டார்கள்.

உடனே தேறிக் கொண்ட கிரீஷ் எல்லோரையும் ஓரிடத்தில் கூட்டி, அவர்களையும் சாமான்களையும் ஒரு பாதுகாப்பான இடத்தில் கொண்டு போய் சேர்ப்பித்து விட்டு தன் வேலையில் ஆழ்ந்தான்.

o o o

''எப்படியிருக்கு நம்ப மாஸ்டர் பிளான்?'' விகாரமாய் சிரித்துக் கொண்டே கேட்டான் சித்தரஞ்சன்.

அங்கிருந்தவர்கள் எல்லோருமே போட்டால் முளைக்கக் கூடியவர்கள்தான். ஆனாலும் சித்தரஞ்சனின் சாமர்த்தியத் திற்கு அசந்து விட்டார்கள் ஒரு விநாடி.

''நம்ப எதிரியை சரீர வழியாய் வீழ்த்தினால் அவன் எதிர்த்துக் கொண்டு ரெண்டு மடங்கு பலத்தோடு வேலை பண்ணுவான். ஆகவே அவனை மானசீக வழியாய்— சென்ட்டிமென்ட் வழியாய் வீழ்த்தினோமானால்—அதற்கு மேல் அவனால் நிமிரவும் முடியாது...''

கைலாசனும் மற்றவர்களும் மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''என்னிடமிருந்து ஐந்து லட்சத்தை சாமர்த்தியமாய் பறிச்சுக்கிட்ட காதம்பரியை நம்ப கைலாசன் ஐந்து நாளைக்கு முன்பே க்ளோஸ் பண்ணிட்டான். அந்த சவத்தை கோல்ட் ஸ்டோரேஜில் வைத்து ராஜசேகர் மூலமாய் தகன காரியங்களைப் பண்றதுக்கு அவன் காதலி மஞ்சுளா எதிர்பார்த்துண்டிருக்கிறாள். ஏன்னா இதற்குள் தெரிஞ்சுட்டால் ராஜசேகர் அப்செட் ஆயிடுவான்னு பயந்து! போதும். அது போதும் நமக்கு. அதை நாம்ப

தெரியப்படுத்திட்டோம். ஏற்கனவே செத்துட்ட காதம்பரி இன்னும் சாவுடன் போராடிட்டிருக்கிறாள் என்றும், உனக்காகப் புலம்பிண்டிருக்கிறாள் என்றும் நாம்ப சொல்லியனுப்பிய செய்திக்குக் கொஞ்சம் கண் காது மூக்கு வெச்சு பூசி மெழுகி சொல்லியனுப்பினோம் வலையில் வீழ்ந்துட்டான். இப்போது ராஜசேகர் காதம்பரியின் தகன வேலையில் ஆழ்ந்து போயிருக்கிறான். அதிலிருந்து மீண்டு வருவதற்குள் காலம் மிஞ்சிப் போயிடும் அதனால் செம்மை யான தோல்வி. இந்தியன் விளம்பர உலகத்துக்கே முடி சூடா மன்னனாகணும்னு எண்ணிட்டிருக்கிற எனக்கு யார் குறுக்கே வந்தாலும் இதே கதிதான். ராஜசேகர் நாலுஉதை கொடுத்ததால் நாட்டை விட்டே ஓடிப் போயிட்டான் விக்கிரம்.

"அந்தப் பீடையும் ஒழிந்தது... ஜாஸ்தி போனால் ரெண்டு கோடி சரக்கும் அந்த உதவாக்கரை சந்திரனின் கையில் நாசமாயிடப் போறது. ரூபவதியைக்கூட அந்த தடிப்பயல்தான் காப்பாத்தினான்.

"ஆனாலும் ஒண்ணும் நஷ்டமில்லை. நமக்கு வேண்டியது நம்ப வெற்றி!" என்று ஒரு விநாடி நிறுத்தி விட்டு கைலாசனைப் பார்த்து— "சரியாய் மார்ச் 31-ம் தேதியன்றைக்கு ராஜசேகர் தோற்றுப் போனதாய் வெளி யானதுமே நம்ப பிலிம்களை விற்கும் ஏற்பாடுகளைப் பண்ணு —" என்று எழுந்திருந்தான் வெற்றிப் பெருமிதத் தோடு சித்தரஞ்சன்.

அவன் சாமர்த்தியத்திற்கு அசந்து போய் அப்படியே உட்கார்ந்து விட்டார்கள் அத்தனை பேரும்.

45

கர்ம காரியங்களை முடித்த ராஜசேகருக்கு சகலத்தையும் இழந்து விட்டாற் போலாயிற்று. வெளியே வருவதையோ, பேசுவதையோ கூட துறந்தான். மஞ்சுளாவும், மதுவும் எவ்வளவு முயன்றும் காதம்பரியின் சாவு துக்கத்திலிருந்து அவனால் மீண்டு வர முடியவில்லை. ராஜசேகரை அந்த நிலையில் பார்க்க நேர்ந்தது மஞ்சுளாவின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தாற் போலிருந்தது. இன்னும் கொஞ்ச நாள் ராஜசேகரை அதேபோல் விட்டு வைத்தால் தனக்கு தரிக்க மாட்டான் என்று தோன்றிற்று.

''காதம்பரியின் ஆத்மா சாந்தியடையணும்னால் நீங்க இந்தப் பந்தயத்தில் வென்று தீரணும். சித்த ரஞ்சனைத் தோற்கடிக்கணும். அவள் ட்ரஸ்ட்டை உங்க கையில் எடுத்துண்டு நாலு பேர் மாடல்களுக்கு உதவி பண்ணணும்... அதானே தவிர இப்படி துக்கப்பட்டுண்டு உட்கார்ந்திருந்தால் எப்படி?'' என்றாள் மஞ்சுளா, ராஜசேகரின் முகவாயைப் பற்றித் தூக்கி நிறுத்தி—அவன் கண்களையே ஆசையாய்ப் பார்த்தபடி.

மஞ்சுளா, இதற்கு முன்னால் இருந்த மஞ்சுளாவாய் இல்லை இப்பொழுது. காதம்பரி இறக்கு முன்னால் எழுதிய கடிதம் அவள் வாழ்க்கை நிலையையும், எண்ணங்களையும் முற்றிலும் மாற்றி விட்டது. அவளிடம் தோன்றிய இம்மாறுதல் ராஜசேகருக்கும் வியப்பைத் தந்தது.

''எழுந்திருங்க ராஜ்... எழுந்திருங்க. இங்கேயே நம்மைச் சுற்றியேதான் வந்துண்டிருக்கும் காதம்பரியின் ஆத்மா... துக்கத்தை விட்டுட்டு உங்க வேலையைப் பண்ணுங்க.''

ஆனால் இருந்த கெடுவோ போதாது... கெடுவே இல்லை கூட. அதனால் செய்வதறியாது இருந்து கொள்ளத்தான் முடிந்தது அவனால்.

மார்ச் 31-ம் தேதி காலை பத்து மணியளவில் ராஜ சேகர் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு கோரமண்டல் மேனேஜிங் டைரக்டருக்கு லெட்டர் எழுதி மடித்து கவரில் வைத்து மதுவிடம் தந்தான் விரக்தியாய்.

தொடர்ந்து சேட் கிரிலாலுக்குப் போன் பண்ணினான் —உங்கள் தேவை திரும்பவும் வேண்டியிருக்கிறது என்று.

மஞ்சுளாவை எதிர்பார்த்தான். காணோம். இரண்டு நாட்களாய் மஞ்சுளா தென்படாதது அவனை வருத்தத்திற் குள்ளாக்கிற்று. அவன் இந்த நிலையிலிருக்கும்போது, மஞ்சுளா தன்னை விட்டுவிட்டு எங்கே போய்விட்டாள் என்றுதான் வியப்பாயிருந்தது அவனுக்கு.

முதல் முதலாய் தரங்கிணி ஒப்புக்க மறுத்தபோது தோல்வியை ஒப்புக்கொள்ள நேர்ந்த சமயத்தில் அவன் அனுபவித்த விரக்தி மனப்பான்மையே இப்பொழுதும் வந்து சேர்ந்தது அவனிடம்.

அவன் இப்பொழுது தோல்வியைப் பற்றி சிந்திக்க வில்லை. சொத்தை விற்றுவிட்டு, மானத்தைக் காப் பாற்றிக் கொள்ளத்தான் சித்தமாயிருந்தான்.

ஒரு மாத காலத்திற்குள் கனவாய் நடந்து முடிந்து விட்ட நிகழ்ச்சிகளும், சாவுகளும், வெற்றிதோல்விகளும், வெற்றியின் இறுதி வரையிலும் போய்விட்டுத் தோற்க நேர்ந்ததும் விநோதமாய் தோன்றிற்று.

அதற்குள் போன் மணி அடித்தது.

விருப்பமில்லாமலேயே போனை எடுத்தான்.

கோரமண்டல் கம்பெனியிலிருந்து அவசரமாய் வரச் சொல்லி போன் அழைப்பு.

வேண்டா வெறுப்புடனேயே காரில் புறப்பட்டான். காரின் வேகம் முன்போலில்லை. மெதுவாய் போய்க் கொண்டிருந்தது. கோரமண்டலில் நேரப் போகும்

அவமானத்தைத் தாங்கிக் கொள்வதற்கு தைரியத்தைக் கூட்டிக் கொண்டிருந்தான்.

காரை விட்டிறங்கி கோரமண்டல் கான்ஃபெரென் சிற்குள் நுழைந்ததுமே கண்ணில் பட்டான் சித்தரஞ்சன். அவன் கண்களில் உலகத்தையே வென்று விட்ட வெற்றிப் பெருமிதம்!

"மிஸ்டர் ராஜசேகர்! உன் பந்தயம் என்னவாச்சு? உன் டேலென்ட்ஸ் என்னவாச்சு? விளம்பர உலகமே என் உள்ளங்கைக்குள்தான் இருக்குங்கிறதைத் தெரிஞ் சுக்காமல் போயிட்டாய்!" என்றான் உதட்டைக் கோண லாய் சுழித்துக் கொண்டே.

மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

"உன்னை வீதி எல்லாம் சுற்ற வைக்கிறேன்னேன். அதைப் பண்ணிட்டேன். அந்தக் காரியத்துக்கு விக்கிரமை நியமித்திருந்தேன். எனக்குத் திருப்தியாகிறவரைக்கும் அவளைச் சுற்ற வைத்தான். கெடு முடிஞ்சுடுத்து. அவன் ஓடிப் போயிட்டான். உனக்கு வேலை பண்ண ஒப்புக் கொண்டதால் தரங்கிணியைத் தீர்த்துக் கட்டச் செய்தேன். அவன் தரதாய் சொல்லியிருந்த இருபத்தைந்து லட்சந்தான் போயிடுத்து- சரக்கை உன் சிஷ்யன் கொளுத்தி விட்டதால். ஆனாலும் பரவாயில்லை. விளம்பர உலகில் சமான மில்லாத என்னால் அந்த இருபத்தைந்து லட்சத்தைக் கொள்ளையடிச்சுக்க நாலு மாதங்கள் போதுமானவை. ஃபீல்டில் இனி யாராலுமே எனக்கு எதிரே நிற்கமுடியாது. இன்னொரு விஷயம், இப்போது உன் க்ளையண்ட் என் க்ளையண்ட் ஆயிடுவான்- வேறு வழியில்லாமல். அப்போ அந்த பதினைந்து லட்சத்துக்கு என் வேலையை விற்பேன். உன் பத்து லட்சத்தையும் ரெடி பண்ணிக்கோ. உன் மேல் இரக்கப்பட்டு நாளை வரைக்கும் கெடு தரேன். இப்போ உன்னைக் கூப்பிட்டது கம்பெனி இல்லை, நான்தான்... வெறுமேதான்... தோற்றுவிட்ட உன் முகம் எப்படி

இருக்கு, பார்ப்போம்னுதான்... இனி நீ போகலாம்," என்றான் கேலியாய் சிரித்துக் கொண்டே.

ராஜசேகர் நிமிர்ந்தான். சித்தரஞ்சனை கூர்க்கமாய் பார்த்தான்.

"நீ என்ன தடங்கல் பண்ணினாலும் பந்தயத்தில் ஜெயித்திருப்பேன்தான். ஆனால் என் சிநேகிதியின் சாவு என்னை நெகிழ்த்தி விட்டது. அதான் பின் வாங்கினேன். பந்தயத்தில் தோற்றுப் போயிருக்கலாம். ஆனால் மனிதாபிமானமுள்ள ஆளாய் தோற்றுப் போகலை. நீ மயக்கம் போட்டு விழக்கூடிய விஷயம் ஒன்றைச் சொல்றேன், கேட்டுக்கோ. தரங்கிணி நீ நினைப்பது போல சாகவில்லை. இப்போது என் பாது காப்பில் இருந்து வருகிறாள். நீதான் புத்திசாலியாச்சே! நான் கண்டு பிடிச்ச கிராமத்துப் பொண்ணு தரங் கிணியைக் கொண்டு படம் எடுக்கப் போகிறேனா அல்லது நிஜ தரங்கிணியைக் கொண்டான்னுகூட தெரிஞ் சுக்க முடியாத முட்டாளாய் இருக்கிறாய்!" என்றான் தைரியமாய் ராஜசேகர்.

ஒரு வினாடி ராஜசேகர் சொன்னது புரியவில்லை சித்தரஞ்சனுக்கு. அடியுண்டவனைப் போல பார்த்தான் ராஜசேகரை.

"அப்படீன்னால்... அப்படீன்னால்..." அவனுக்கு வார்த்தை குழறிற்று.

"ஆமாம்... ஆமாம்... அது யாருன்னு கண்டு பிடிச்சுக்கோ..." சொல்லிவிட்டு விடுவிடென்று நடந்து வெளியே போய் விட்டான் ராஜசேகர். அவனைத் தொடர்ந்து சித்தரஞ்சனும் கலவரத்தோடு தன் ஆபீசை நோக்கிப் புறப்பட்டான்.

ராஜசேகர் வீடு திரும்பியபோது கிரிலால் வெளியே காத்துக் கொண்டிருந்தான்.

இருவரும் மௌனமாய் உள்ளே வந்தார்கள்.

இதற்கு முன்னால் ஏலம் போடக் கணக்கெடுத்து வைத்திருந்த சீட்டை வெளியே எடுத்தான் கிரிலால் வெட்கத்தோடு.

திரும்பவும் மதிப்பீடு போடத் தொடங்கினான்.

அதே சமயத்தில் மஞ்சுளா சூறாவளியாய் உள்ளே வந்தாள் வேகமாய். இரண்டு நாளாய் எங்கே போயிருந்தாள் என்றோ, இப்பொழுது எங்கிருந்து வருகிறாள் என்றோ புரியவில்லை ராஜசேகருக்கு.

''சேட் சார், இனி உங்க தேவை இல்லை. நீங்க போகலாம்!'' என்றாள் திடமாய். ராஜசேகருக்குப் புரியவில்லை. இவள் என்ன சொல்லுகிறாள்?

''ராஜ்...நீங்க தோற்றுவிடவில்லை. பெரிய அளவில் ஜெயிக்கப் போறீங்க. ஒரு ஜீனியஸ் தோற்றுப்போவதை யாராலுமே ஏற்றுக்க முடியாது!'' என்றாள் முறுவலுடன் மூச்சிரைக்க. ஆனந்தத்தால் திணறிக் கொண்டிருந்தாள் அவள்.

ராஜசேகர் குழப்பமடைந்தான். முன்பு தன்னை இந்தத் துறையிலிருந்தே மீட்டு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்த மஞ்சுளாவா இவள்!

இறுதியில் இந்தத் துறை மீதே அருவருப்படைந்து அவனைக்கூட விட்டுவிட்டுப் போய் விடத் துணிந்த மஞ்சுளாவா இவள்?

''ஆமாம். உங்க தோல்வி தோல்வியே இல்லைன்னு கோரமண்டல் எம்.டி.யை ஒப்புக்கச் செய்துட்டு வந்தேன்...''

நம்ப மாட்டாதவனாய் பார்த்தான் ராஜசேகர்.

''நம்ப முடியலையா? ஆனால் நிஜம். நடந்ததையெல்லாம் எம்.டி யிடம் சொன்னேன். சித்தரஞ்சன் பண்ணிய

மோசடியைக் கூட சொன்னேன். ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் அவங்க மார்கெட்டிங் டைரக்டர் வாசுவை சஸ்பென்ட் பண்ணினாங்க. மேலும் பத்து நாள் டைம் தந்திருக்காங்க—நீங்க வேலையை முடிச்சுத் தருவதற்கு...''

ஆனந்தமாய் மலர்ந்த அவள் முகத்தைப் பார்த்து ராஜசேகரின் இதயம் பொங்கிற்று,

பந்தயத்தில் வெல்வதற்கு அவகாசம் கிடைத்ததற்காக இல்லை. அப்பாவியான தன் காதலி அந்த காரியத்தைப் பண்ணியதற்காக.

ராஜசேகர் சேட்டை நோக்கித் திரும்பினான். புரிந்து கொண்ட அவன் மெதுவாய் வெளியேநடந்தான்-நடந்ததை ஜீரணித்துக் கொள்ள இயலாதவனாய். ராஜசேகரும் மஞ்சுளாவும் மட்டுமே எஞ்சி நின்றார்கள் அவ்வறையில். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள் ஆசை தீர. மஞ்சுளாவால் அதற்கு மேல் தாங்க முடிய வில்லை ஓடி வந்து ராஜசேகரைக் கட்டிக் கொண்டு விட்டாள்.

''நீங்க ஜெயிக்கணும் ராஜ், ஜெயித்துத் தீரணும். காதம்பரியின் ஆசை நிறைவேறணும்னால் நீங்க ஜெயித்துத் தீரணும். சித்தரஞ்சனை ஒரு கை பார்த்துவிட வேண்டும். இந்தத் தொழிலுக்குப் பீடித்திருக்கும் பீடையை ஒழிக்க ஒரு மறுபடைப்பையே படைக்கக்கூடிய உங்களைப்போன்ற ஜீனியஸை என் அன்புத் தளையால் கட்டிப் போட்டுட நினைச்ச என் அற்ப குணத்துக்கு வெட்கமடைகிறேன்!'' என்று ஒரு விநாடி நிறுத்தினாள்.

ராஜசேகர் அன்போடு அவள் தலையைக் கோதிவிட்டு, நெற்றியில் ஒரு முத்தமிட்டான். அப்பொழுது அவன் கண்களில் என்றுமே கண்டிராத ஒரு பிரகாசம் தென் பட்டது மஞ்சுளாவுக்கு.

''நோ சென்ட்டிமென்ட்ஸ். எது எப்படியானாலும்சரி, யார் போனாலும்—யார் இருந்தாலும் சரி, நீங்க ஜெயிக்

கணும். அதுதான் நீங்க எனக்குத் தரக்கூடிய அரிதான காதல் பரிசு!'' என்றாள் அவனைப் பார்த்து கண்ணீர் மல்க.

ராஜசேகரிடம் புதிய உற்சாகம் மெல்ல மெல்ல பெருக் கெடுக்கத் தொடங்கிற்று

அடுத்த ஒரு மணி நேரத்தில் ராஜசேகர் புறப்பட்ட கார் வேலூரை நோக்கி வேகமாய் பறந்து கொண் டிருந்தது.

தோல்வியைத் தழுவிக்கொண்டு ஒரு பாதுகாப்பான இடத்தில் கிரீஷின் கட்டுப்பாட்டிற்குள் தங்கியிருந்த யூனிட் ராஜசேகரின் வரவை தவிப்போடு எதிர்பார்த்துக் கொண் டிருந்தது.

தான் முட்டாள்தனமாய் பண்ணிய தப்பை இவ்வளவு சீக்கிரத்தில் திருத்திக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைக்கு மென்று எண்ணியிருக்கவில்லை மஞ்சுளா. அதற்கு ஒரு அவகாசம் உண்டாக்கித் தந்த காதம்பரியை மனதிற்குள் வாழ்த்தினாள்.

அவள் ராஜசேகருக்குக் காதலி மட்டுமே இல்லை. விவேகமான ஒரு துணைவியாகவும் ஆகவேண்டியவள். அவன் ஒவ்வொரு அடியிலும் அவளுடைய ஆர்வம் தூண்டுதலாய் இருக்க வேண்டும்.

ஒரே ஒரு கடிதம் அவளை அவ்வளவு தூரம் மாற்றி விட்டது அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது.

46

''அன்றிரவு யாரைக் கொன்றாய்?'' கர்ண கடூரமாய் வெளிவந்தன சித்தரஞ்சனின் வார்த்தைகள்.

நடுநடுங்கிப் போய் விட்டான் கைலாசன்.

சித்தரஞ்சனின் முகத்தில் இதுவரை அவ்வளவு கோபத்தைக் கண்டதேயில்லை கைலாசன்.

எப்படி நடந்தது இந்தத் தவறு?... அந்த கெஸ்ட் ஹவுசில் தரங்கிணி மட்டுந்தானே இருந்திருப்பாள்? வேறு யாருமே இருந்திருக்க முடியாது. தரங்கிணிக்கு சென்னையில் ஃபிரெண்ட் யாராவது உண்டா? இருந்தாலும் அவளும் அதே போன்ற சாயலில் எப்படி இருப்பாள்?... அந்தச் சமயத்தில் அங்கே எப்படி வந்துச் சேர்ந்திருப்பாள்

எங்கேயோ பாரிசில் இருக்கும் தரங்கிணிக்கு சென்னையில் ஃபிரெண்ட் இருக்க வாய்ப்புண்டா?

உடனேயே போலீசுக்குப் போன் பண்ணிவிட்டான் அவன்—அதில் ராஜசேகரைச் சிக்க வைப்பதற்காக.

ஆனால் போலீசார் அங்கே போய்ச் சேர்வதற்குள் சவத்தைக் காணோம். தரங்கிணியும் இல்லை.

எல்லாம் மாயமாய் தோன்றிற்று கைலாசனுக்கு.

சித்தரஞ்சனின் யோசனைகள் மெதுவாய் ஒரு உரு வெடுக்கத் தொடங்கின.

தரங்கிணி பாரிசில் ஃபேஷன்களைப் பற்றிய சப்ஜெக்டில் டிப்ளமா பண்ணியிருக்கிறாள். அதே கல்லூரியில் தான் அவனுடைய செல்லப் பெண் சரிதாவும் படித்து டிப்ளமா வாங்கினாள். தரங்கிணியைப் போலவே தன் மகளும் நல்ல உயரம். இருவரும் சிநேகமாவதற்கு அவகாசம் இருக்கிறது. ஏறக்குறைய ஒரே ஜாடையிலிருந்த தன் மகளே தரங்கிணி என்றெண்ணிக் கொண்டு... சித்தரஞ்சனின் குரூரமான கத்தல் அந்த அறைச் சுவரெல்லாம் எதிரொலித்தது—

"பூடானி" என்று.

அவ்வளவு உக்கிரமான நிலையில் தன் பாஸைக் கண்டிராத கைலாசனுக்கு வியர்த்தெடுத்தது. சாவு பயத்தால் அவன் முதுகுத் தண்டு சிலிர்த்தது.

சித்தரஞ்சன் ஒரேயடியாய் தளர்ந்து விட்டான்—அவன் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தால்.

அடுத்த பத்தாவது நிமிஷம் பூடானி சித்தரஞ்சனுக்கு முன்னால் வந்து நின்றான்.

"ஒரு வாரம், பத்து நாளாய் சரிதா அம்மா கண்ணில் படவேயில்லைங்க, ஐயா. உங்களண்டை கூட அந்த விஷயத்தைச் சொன்னேன். நீங்க பம்பாய்க்குப் போயிருக்கும், போகட்டும், ஃப்ரீயாய் சுற்ற விட ணும்னீங்க."

நடுங்கிக் கொண்டே பதிலளித்தான் பூடானி, தலை குனிந்தவாறு.

"விவரமாய் சொல்லு, கடைசி முறையாய் எப்போது பார்த்தாய் நீ?"

சித்தரஞ்சனின் கண்கள் நெருப்பை உமிழ்ந்தன.

"19-ம் தேதி ராத்திரி, ரொம்ப நேரங் கழிச்சு ஒரு ஃப்ரெண்டை சந்திக்கப் போறதாய் சொல்லிட்டுப் போச்சுங்க. அவ்வளவுதான்."

அடுத்த விநாடி சித்தரஞ்சனின் கையிலிருந்த கைத்தடி கைலாசனை அடித்த அடியால் முறிந்து கீழே விழுந்தது.

என்றுமே எதற்குமே அஞ்சியிராத சித்தரஞ்சனின் கண்களில் பயம்... கோபம்... வருத்தம்... செய்வதறியாத தன்மை.

அதற்குள் போன் மணி அடித்தது.

சரேலென்று போனை எடுத்தான்.

"இம்முறை நான் வீழ்த்தாமலேயே உன் ஆட்களே உன்னை வீழ்த்திட்டாங்க. உன் அயோக்கியத்தனமே உன் நாசத்துக்குக் காரணமாயிடுத்து. நீ கெட்டிக்காரன் தான். கைலாசன் தன் கையால் கொன்றது தரங்கிணியின் சாயலில் இருந்த உன் செல்லப் பெண்ணேதான்!!"

சித்தரஞ்சனின் கையிலிருந்த போன் நழுவி விழுந்தது... மது இன்னும் பேசிக் கொண்டேயிருந்தான்.

சித்தரஞ்சனின் கண் முன்னாடி உலகமே தட்டாமாலை சுழன்றாற் போலிருந்தது.

யாருக்காக அவன் இவ்வளவு தூரம் துணிந்து— இத்தனை அயோக்கியத் தனங்களையும் பண்ணி சம்பாதித் துக் கொண்டிருக்கிறானோ...

யார் மீது அவன் உயிரையே வைத்திருந்தானோ...

அந்த அவன் உயிருக்குயிரான செல்லப் பெண்— நாட்டுக்கே பேஷன் ராணியாக வேண்டும் என்றெண்ணி யிருந்த ஆசை மகள்... தன் திட்டத்தின் மூலமே—தன் ஆட்களாலேயே கொடுமையாய் கொல்லப்பட்டு விட்டாள்.

கீரையாய் துவண்டு விழுந்தான் அவன். இப்பொழுது அவன் முகத்தில் குரூரத்தனமோ, கொடுமையோ இல்லை.

தீனமாய், இதயத்தைக் கசக்கிப் பிழியும்படியாய் அழுது கொண்டிருந்தான்.

அதுவும் வெகுநேரம் நீடிக்கவில்லை.

அடியுண்ட புலியாய் எழுந்திருந்தான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் மஞ்சுளா சித்தரஞ்சனின் கெஸ்ட் ஹவுசில் சிறைப்படுத்தப்பட்டாள்.

o o o

ஷூட்டிங் இடைவிடாமல் நடந்து கொண்டேயிருந்தது. கோரமண்டல் சோப்பிற்காக கேமிராவை இயக்கிக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

பக்கத்திலேயே ஈர உடையுடன் தரங்கிணி. யூனிட்டில் இருந்த அத்தனைப் பேரும் தரங்கிணியின் அழகிற்கும், குறும்புத்தனத்திற்கும், ராஜசேகருக்கு அவள் ஒத்துழைத்த விதத்திற்கும் அசந்து விட்டார்கள்.

என்றுமே எந்த மாடலைப் பார்த்தபோதும் தோன்றி யிராத ஒரு அதீதமான உணர்ச்சி தரங்கிணியைப் பார்த்த போதெல்லாம் ராஜசேகருக்கு ஏற்பட்டது.

லொகேஷனுக்கு நான்கு பக்கங்களிலும் நான்கு ஸ்டூரியோக்கள் அமர்த்தப்பட்டன அவற்றின் கனெக்ஷன் கள் சேருமிடத்தில் ரிகார்டு பிளேயரை வைத்துக் கொண்டு சித்தமாயிருந்தான் சந்திரன்.

அன்றைக்கு ஷூட்டிங்கிற்கு சுமார் 24 நாட்டிய மாடும் மாடல்களைக் கூட்டி வந்தான் கிரண்.

ராஜசேகரின் ஆலோசனைப்படி முதலில் தரங்கிணி யையும், பிறகு நான்கு வரிசைகளில் எஞ்சிய மாடல் களையும் மூன்றடி தூரத்தில் நிறுத்தி வைத்தான் கிரீஷ்.

ராஜசேகர் சைகை காட்டியதுமே, சந்திரன் ஒன், டூ, த்ரீ, ஃபோர் என்று மௌத் ஸ்பீக்கரில் சொல்லிவிட்டு ரிகார்டை ஆன் பண்ணினான்.

அந்த வேகமான மியூசிக்கிற்கு ஏற்ப டான்ஸ் பண்ணிக் கொண்டே. ஏரியை நோக்கி வேகமாய் ஓடி வர வேண்டும். இதுதான் அன்றைய சீக்வென்ஸ்.

பிகினி டிரெஸ் அணிந்திருந்த மாடல்களுக்கு உடம்பில் ஆலிவ் எண்ணெய் தடவப்பட்டிருந்ததால் அந்த மாலை வெயிலில் சிருங்கார தேவதைகளைப் போல மின்னிக் கொண்டிருந்தார்கள்.

சூரியாஸ்தமனக் காட்சி— உலகத்தின் இயற்கை அழகையெல்லாம் வாரிக் கொண்டு வந்து அந்த ஏரிக் கரையில் குவித்து விட்டிருந்தது.

எங்கும் நிசப்தம்... ஒத்திகை அதற்கு முன்பே முடிந்து விட்டது. கிரீஷ் ஒளியை சரிபண்ணிக் கொண்டிருந்தான்.

ராம்பூபால் பைனாகுலர்களை வைத்துக் கொண்டு விழிப்பாய் இருந்தான். கைலாசன் கொலை செய்தது தன் மகளையே என்று எந்தநிமிஷத்திலும் சித்தரஞ்சன் தெரிந்து

கொண்டு விடுவான் என்றும், அது தெரிந்த அடுத்த நிமிஷமே அவன் கோபம் ராஜசேகர் மேல் தாவும் என்றும், அதனால் குரூர மிருகத்தைப் போல தம் யூனிட்டின் மீது பாய்வான் என்றும் எதிர்பார்த்திருந்தார்கள், ராஜசேகரும், ராம்பூபாலும்.

ராஜசேகர் கேமிரா ஃபிரேமிற்குள் ஸ்டூரியோக்கள் வராதவாறு சரிபார்த்துக் கொண்டிருந்தான் நிசப்தமாய்.

யூனிட்டைச் சேர்ந்த மற்றவர்கள் எல்லோரும் ஃபீல் டிற்குள் வராமல் ஒரு பக்கத்தில் அடர்த்தியாய் இருந்த தென்னை மரங்களுக்குக் கீழே நிழலில் உட்கார்ந்திருந் தார்கள்.

தரங்கிணி வெகு நேரமாய் ராஜசேகரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிவந்த முகத்தில் அடர்ந்து கருத்த மீசை. அடிக்கடி முகத்தில் வந்து விழும் கேசங்கள். சிவந்த உதடுகள்... உயரத்திற்கேற்ற பருமன்.

தரங்கிணிக்கு ராஜசேகரிடம் பிடித்துப் போனது இவை எதுவுமே இல்லை. வேலையில் கவனம் பிசகாத அவன் நிலை. எவ்வளவு வேலைசெய்தாலும் சிரமமோ அலுப்போ அவனிடம் தென்படாது.

அந்த இருபத்து நான்கு பருவப் பெண்களான மாடல் களின் அழகின் மீதோ, அவர்களை யெல்லாம் மிஞ்சிய கொள்ளை அழகோடு நின்று கொண்டிருந்த தரங்கிணி யின் மீதோ அவன் கவனம் இல்லை.

அதுதான் ஆச்சரியமாயிருந்தது தரங்கிணிக்கு. ராஜ சேகரை அழ வைக்க வேண்டுமென்ற குறும்புத்தனமான யோசனைகள் கூட வந்தன

ராஜசேகர் கேமிராவிலிருந்து நிமிர்ந்து ஃபீல்டைப் பார்த்தான். எல்லோரும் சரியாய் ஒழுங்காய்த்தான் நின்று கொண்டிருந்தார்கள். திருப்தியோடு தலையாட்டிவிட்டு கிரீஷைப் பார்த்தான்.

புரிந்து கொண்ட கிரீஷ், "ஃபைனல் ரிஹர்ஸல் மாண்டேஜ் ஷாட் ரெடி எவ்ரிபடி கேர்ள்ஸ்..." என்று கத்தி விட்டு சந்திரனைப் பார்த்தான்.

ராஜசேகரின் தலை கேமிராவுக்குள் முடங்கிக் கொண்டது. ட்ராலி ஷாட் ஆனதால் அந்த மணலில் வட்டமாய் ரயில் தண்டவாளத்தைப் போல இரும்புத் தண்டவாளங்கள் போடப்பட்டிருந்தன. அதன் மீது நான்கு சக்கர ஃபிளாட்பாரம். அதன் மேல் நின்று கொண்டிருந்தான் ராஜசேகர். தண்டவாளங்களுக்குப் பக்கத்தில் லைட்பாய் ஒருத்தன் அந்த ஃபிளாட்பாரத்தை தண்டவாளத்தின் மீது முன் நோக்கித் தள்ளுவதற்காகத் தயாராயிருந்தான்.

நிசப்தமாயிருந்த அந்தச் சூழ்நிலையில் சந்திரன் பெரிதாய், "ஒன், டூ, த்ரீ, ஃபோர்..." என்றான். மாடல்கள் விழிப்பானார்கள்.

அதற்குள் ரிகார்டு ஆன் ஆகிவிட்டது. ஆப்ரிகன் டிரம்ஸ் சப்தங்களால் லயப்பிரகாரம் நான்கு ஸ்டீரியோக்களின் மூலம் ஒலி பரப்பாகி அந்த பக்கத்து மலை முகட்டுகளில் எல்லாம் சங்கீத அலைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

வேகமாய் நடனமாடிக் கொண்டே முன் நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள் மாடல்கள். பார்த்துக் கொண்டிருந்த ஒவ்வொருவரையும் கைகால்களை அசைத்து தாளம் போட வைத்தது. அவ்வளவு உணர்ச்சி பரபரப்போடிருந்தது அந்த மியூசிக். அதற்குள் அந்த பாட்டைப பாடிய மைக்கேல் ஜாக்சனின் குரல் தாபத்தால் உச்ச நிலையை அடைந்தது — விரக தாபத்தில் தவித்துப் போகும் ஒரு பெண்ணின் குரலைப் போல... மாண்டேஜ் முடியப் போகிறது என்றிருந்த சமயத்தில்— ராஜசேகர் திடீரென்று நிமிர்ந்தான் கேமிராவை விட்டு.

பிரவாகம் நின்றுவிட்டது.

ராஜசேகர் கேமிராவை விட்டு விட்டு பிளாட்பாரத்தின் மீது இறங்கினான்.

யாரோ எங்கேயோ ஏதோ தப்புப் பண்ணி விட்டார்கள் என்று எல்லோருக்குமே புரிந்துவிட்டது.

ராஜசேகர் நேராய் தரங்கிணியிடம் வந்தான்.

அவள் சிரித்துக் கொண்டிருந்தாள் குறும்பாய்.

எத்தனையோ கோபத்துடன் வந்த ராஜசேகர் அவளைப் பார்த்ததும் கோபமெல்லாம் அடங்கி விட்டான் - அதுதான் அவள் தனிச் சிறப்பு.

அவள் சிரிப்பில் குறும்புத்தனமும், உதடுகளில் பழிப்பும் பார்க்க விநோதமாய் இருக்கும். ஒரு விநாடி சும்மா இருக்கவே மாட்டாள். யாரையாவது அழவைத்துக் கொண்டும், சீண்டிக் கொண்டும்தான் இருப்பாள்.

"இதுக்கு முன்னால் நன்றாய்த்தானே பண்ணினீங்க? திரும்பவும் ஏன் ராங் ஸ்டெப் எடுத்து வைக்கிறீங்க?" சாதாரணமாய்த்தான் கேட்டான் ராஜசேகர் தரங்கிணியைக் கொஞ்சம் சீரியஸாய் பார்த்தபடி.

"சே! என்ன கோபமோ?... என்ன சீரியஸோ...? அழகான என்னைப் போன்ற பெண்ணிடம் கூட யாராவது இப்படி இருப்பாங்களா?" முகத்தை முறுக்கிக் கொண்டே சொன்னவள் சன்னமான குரலில் மெதுவாய் சொன்னாள். "அசடு!" என்று.

"என்ன சொன்னாய்?" புரியாமல் கேட்டான்..

சிரிப்பை அடக்கிக் கொண்டே. "சே, ஒன்றுமில்லை. நீங்க எவ்வளவு அழகாயிருக்கீங்கன்னு சொன்னேன்..." என்றாள்.

"ஸ்டெப் சரியாய் வைக்க வரலையா?"

"ஏன் வராது? நீங்க ஒரு தடவை வைச்சுக் காட்டினால்..." என்று பாதியில் நிறுத்திக் கொண்டாள்.

"காட்டித் தீரணுமா?"

"காட்டித்தான் தீரணும். நீங்க என் இடத்தில் நின்னுட்டு காட்டுங்கள். நான் கேமிரா வழியாய் பார்க்கிறேன்!" என்றாள் குழைவோடு.

கிரீஷுக்கு சைகை காட்டியதுமே அவரவர்கள் தம் இடத்திற்குப போய் விட்டார்கள்.

"கமான் கேர்ள்ஸ்... ஒன்... டூ... த்ரீ... ஃபோர்..." என்றான் ராஜசேகர் டான்சிற்குத் தயாரானபடி.

ரிகார்டு திரும்பவும் தொடங்கிற்று.

தரங்கிணி தொலைவில் இருந்தபடி ராஜசேகரையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஆவேசமாய் ஸ்டெப் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான் ராஜசேகர். கால்களும் கைகளும் மின்னல் வேகத்தில் அசைந்து கொண்டிருந்தன. தன்னை மறந்து அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ராஜசேகர் எக்ஸலென்ட் டான்சர் என்று பட்டது.

ஓரடி ஸ்டெப் போட்டுக் காட்டியதுமே நிறுத்திக் கொண்டான் ராஜசேகர்.

தரங்கிணி ஓட்டமாய் ஓடிவந்தாள் ராஜசேகரிடம்.

"கவனிச்சாயா? இப்ப பண்ண முடியுமா?" ராஜ சேகர் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"இப்படிப் பட்டதெல்லாம் நிறையவே பண்ணியிருக் கேன் நான். உங்களை டான்ஸ் ஆடச் சொன்னால் ஆட மாட்டீங்க. எனக்கென்னவோ உங்க டான்சைப் பார்க்கணும் போலிருந்தது. அதான் இந்த மாதிரி ட்ரிக் பண்ணினேன். எப்படி, என் ஐடியா?" என்றாள் மெதுவாய் அவன் கண்களையே குறும்போடு பார்த்து.

ராஜசேகரின் முகம் சிவந்தது. கோபத்தால் இல்லை. "யூ நாட்டீ..." என்று கையை ஓங்கினான் ஒரு உதை கொடுக்க. கொடு பார்ப்போம் என்பது போல தரங் கிணியும் அதே பாவத்தில் குனிந்து காட்டினாள்.

ராஜசேகர் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான்— அவள் குறும்புத்தனத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

முதல் சீக்வென்ஸ் முடிவடைந்தது.

இரண்டாவது சீக்வென்ஸுக்கு ஏற்பாடுகள் ஆகிக் கொண்டிருந்தபோது, ராஜசேகருக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்த தரங்கிணி வலியால் முனகினாள். ராஜசேகர் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

நேரமாகி விட்டது என்று அர்த்தம். ஐந்தாறு மணிகளுக்கொரு முறை எல். எஸ். டி. இஞ்ஜெக்ஷன் இல்லாவிட்டால் அளவுக்கு மீறிய வலியால் அவள் அழகான தேகம் நெளியத் தொடங்கிவிடும்.

அவ்வளவு தூரம் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்தாள் அவள்.

அதுவரை நாலைந்து முறை அவள் படும் பாட்டைக் கவனித்துக் கொண்டேதான் இருந்தான் ராஜசேகர். அவளை அந்த நிலையில் பார்த்த அவன் மனம் வருத்தத்தால் துடிதுடிக்கத் தொடங்கிற்று.

தாய் தந்தையர், வேறெந்த சிநேகிதர்களுக்கு அருகிலும் இல்லாமலும், ஒரு அகில உலக கிரிமினல் குற்றவாளியின் கையில் அகப்பட்டு, பிளாக்மெயில் பண்ணப்பட்டு இந்தியாவுக்கு வந்து இந்தக் கயவர்கள் ஆட்டுவிப்பது போல ஆட வேண்டியிருக்கிறது. இவள் பிளாக்மெயிலுக்குக் காரணமான போட்டோக்கள், நெகடிவ்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு அழித்துவிட முடிந்தாலும் இவளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருக்கும் இந்த போதைப் பொருள் பலவீனத்திலிருந்து மீட்டுவிட முடியுமா? இவளைக் கூடிய சீக்கிரத்தில் மெடிகல் ட்ரீட்மென்ட்டிற்கு டில்லியிலுள்ள ஜெ. பி. பந்த் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்லாவிட்டால் இவள் ஆரோக்கியம் முற்றிலும் பாழடைந்து விடும்.

ட்ரீட்மெண்ட்டிற்குக் குறைந்த பட்சம் பத்து நாட்களாவது ஆகும். பந்தயத்தில் வெல்ல இன்னும் எட்டே நாட்கள்தானே இருக்கிறது.

தன் காரியத்திற்காக அவள் ஆரோக்கியத்தைப் பணயமாய் வைத்துக் கொண்டிருக்கிற தன் குற்ற உணர்ச்சி அவனைத் துன்புறுத்திற்று.

ஒரு முறையாவது காட்டிவிட்டு, தற்காலிகமாய் ஏதாவது மருந்துகளை வாங்கி உபயோகிப்பதற்கு டில்லிக்குப் போவோம் என்றாலும், தரங்கிணி அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அவள்மீது இரக்கமும் தனிப்பட்ட அன்பும் பிறந்தன அவனுக்கு.

எது என்னவானாலும், அவளை அந்த பலவீனத்திலிருந்து மீட்டு, முழு ஆரோக்கியமுடையவளாய் செய்தாலொழிய அவனுக்குத் திருப்தி ஏற்படாது. யோசித்தவாறே அவளை அழுத்தமாய் தன் கைகளில் பிடித்துக் கொண்டு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் சந்திரன் இஞ்ஜெக்ஷனுடன் வேகமாய்ஓடிவந்து ராஜசேகரிடம் அதைத் தந்தான்.

அவளுக்கு மெதுவாய் இஞ்ஜெக்ஷன் தந்தான்.

இன்னும் ஒரு மணி நேரத்திற்கு அவள் மயக்கத்திலிருந்து மீண்டு வர மாட்டாள். ஷூட்டிங் தடைப்பட்டுவிட்டது.

தான் வலியில் துடிக்கும்போது ராஜசேகரைத் தவிர வேறு யாரும் தன்னைத் தொடக்கூடாது என்று கேட்டுக் கொண்டிருந்தாள் தரங்கிணி.

அதனால் யாருக்குமே அவளை நெருங்குவதற்குத் துணிச்சல் வரவில்லை. அவள் மயக்கத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு மணி நேரம் கழிந்திருக்கும்.

ராஜசேகர் தண்ணீரைக் கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்துவிட்டு, துண்டால் - அவள் முகத்தை ஒற்றினான்.

என்றுமே எந்த மாடலுக்கும் பணிவிடைகள் செய்து கண்டிராத ராஜசேகரை, தரங்கிணிக்கு அவ்வளவு சிரத்தையாய் பணிவிடைகள் பண்ணிக் கண்ட அங்கிருந்தவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

தரங்கிணி கண்களைத் திறப்பதற்காக பதற்றத்துடன் காத்திருந்தான் ராஜசேகர்.

எவ்வளவு அழகு...! அழகை மிஞ்சிய குறும்புத்தனம்! அத்துடன் ஆழ்ந்து சிந்திப்பது வேறு...!எப்படிப்பட்டவர்களின் கஷ்டத்தையும், தேவையையும் புரிந்து கொள்ளக் கூடிய மனிதாபிமானம்! ஒரே பெண்ணிடத்தில் இவ்வளவு குணாதிசயங்களா?

இதுவரை அவனை சந்தோஷப்படுத்தியவர்கள் அவன் தங்கையும், மஞ்சுளாவும் மாத்திரமே. இப்பொழுது தரங்கிணியும் சேர்ந்து விட்டாள்.

அதிர்ஷ்டவசமாய்...சித்தரஞ்சனின் மகள் சரிதாதேவி கெஸ்ட் ஹவுசுக்கு வந்த சமயத்தில் தரங்கிணி பாத்ரூமில் இருந்ததால்- விளையாட்டாய் சரிதாதேவி தரங்கிணியின் மாக்ஸியை அணிந்து கொண்டிருந்ததால் — தரங்கிணி பிழைத்தாள். இல்லாவிட்டால் புத்திசாலியும் அபார அழகும் உடைய இவள் தன் பந்தயத்தின் மூலமாய் கொலை பண்ணப் பட்டிருப்பாள்! அந்த யோசனைக்கே அதிர்ந்து விட்டான் ராஜசேகர்.

o o o

சரியாய் அதே சமயத்தில் மது ஆபீசில் உட்கார்ந்து ஃபைல்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான்— மாலைக்குள் வேலூருக்குப் போய்விட வேண்டுமென்ற பரபரப்போடு.

அதற்குள் மஞ்சுளாவைக் காணவில்லை. காதம்பரியின் டிரஸ்ட் விஷயமாய் லாயர் சீதாராமனோடு பேசி முடிக்க வேண்டிய காரியங்களை யெல்லாம் முடித்துவிட எண்ணிப் போயிருப்பாள் என்றெண்ணியிருந்தானே யொழிய, சித்தரஞ்சன் அதற்குள் அவளைச் சிறைப் பிடித்து வைத் திருப்பான் என்றே ஊகித்திருக்கவில்லை அவன்.

எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு, சூட்கேசுடன் கிளம்பத் தயாரான பொழுது போன் ஒலித்தது.

ஒரு வினாடி புரியவில்லை அந்த நேரத்தில் ஆபீசு இன்னும் திறக்கவே இல்லை. யார் போன் பண்ணியிருப் பார்கள்?

போனை எடுத்தான் மது.

"ஹலோ...யார்பேசறது? நான்தான் அனு பேசறேன்."

பாஸின் தங்கை! எங்கிருந்து பேசுகிறாள்?

"ஹலோ...அனு...நான்தான் மது பேசறேன். உங்க பிரதர் நகரத்தில் இல்லை. ரெண்டு நாளாய் லொகேஷனில் இருக்கார், வேலூருக்குப் பக்கத்தில்."

"என்னது? நேற்று சாயந்திரம் வீட்டுக்குப் போன் பேசினபோது அண்ணா எடுத்தாரே?"

"நேற்றுமாலை நீங்க போன் பேசினபோது உங்களுக்கு சென்னையில் அவர் வீட்டில் கிடைத்தாரா?"

"ஆமாமாம்...நான் இன்னிக்கு வைகை எக்ஸ்பிரஸில் வரதாய் சொன்னேன். உடனே வரச் சொன்னாரே. அண்ணாவோட குரல் ஏனோ ஒரு மாதிரியாய் இருந்தது! அதையும் கேட்டேன். ஜலதோஷம் பிடிச்சிருக்குன்னார் உடனே கிளம்பி வரச் சொல்லி... அதற்குள் எப்படி போயிருப்பார்?" வியப்புடன் கேட்டாள் அனு.

மதுவின் உடம்பு சிலிர்த்தது. ராஜசேகர் வீட்டுப் போனை ட்ராப் பண்ணி, ராஜசேகரைப் போலவே பேசி,

அனுவை வரச்சொல்லியிருப்பான்! பெரிய சதிகாரன்தான் சித்தரஞ்சன்... மது பற்களை நறநறத்தான்... பார்த்துடறேன், அனுவை எப்படி ட்ராப் பண்ணிடுவாய்னு! முணுமுணுத்தான் ஆத்திரம் தீர.

"இப்போ எங்கேயிருந்து பேசுகிறாய்?"

"ஸ்டேஷனிலேருந்து. ரயிலை விட்டு இறங்கியதுமே அண்ணாவைத் தேடினேன். காணோம். வேறு யாராவது தென்படறாங்களான்னு கூட பார்த்தேன். நீங்களும் வரலை. அதற்குள் ரெண்டு பேர் என்னை சந்தேகத்தோடு பார்க்கத் தொடங்கவே, பயந்து, ஸ்டேஷன் மாஸ்டர் ரூமில் உட்கார்ந்துட்டு, போன் பண்றேன். எனக்கென்னவோ அவங்களைப்பார்த்தால் பயமாயிருக்கு. நீங்க சீக்கிரமாய் வர முடியுமா?"

ஆவேசத்தால் மதுவின் உள்ளங்கை முறுக்கிக் கொண்டது. "நீங்க எங்கேயும் போகாதீங்க. அங்கேயே இருங்க. இதோ வரேன்," என்று போனை வைத்துவிட்டு அவசரமாய் எழுந்து வாசலை நோக்கி ஓடினான். அடுத்த நிமிஷம் மது ஏறிய மோட்டார் சைக்கிள் ஸ்டேஷனை நோக்கிப் பறந்தது.

அனுவை கிட்நாப் பண்ணி, கடைசி அஸ்திரமாய் பயன்படுத்திக் கொண்டு, ராஜசேகரைத் தோற்கடித்து விட வேண்டும் என்ற முயற்சியில் ஆழ்ந்திருக்கிறான் சித்தரஞ்சன்.

எந்த சூழ்நிலையிலும் அனு அவர்கள் கையில் சிக்கி விடக்கூடாது. கால் மணி நேரத்திற்குள் ஸ்டேஷனுக்கு முன்னால் வந்து நின்றது அவன் மோட்டார் சைக்கிள்.

பதற்றத்தோடு நான்கு பக்கங்களையும் நோட்டமிட்டுக் கொண்டே ஸ்டேஷன் மாஸ்டர் அறையை நோக்கி ஓடினான்.

அறைக்குள் காலடி எடுத்து வைக்கப் போன மது ஓரக் கண்ணால் திரும்பிப் பார்த்தான். அங்கே கைலாசின்

கையாட்கள் இருவர் ஒரு தூண் மறைவில் நின்று கொண்டு ஸ்டேஷன் மாஸ்டரின் அறையையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அவர்களை கவனியாதது போலவே அறைக்குள் போய் அனுவை அழைத்துக் கொண்டு வெளியே நடந்தான் மது.

அடுத்த நிமிஷம் மது— அனு இருவரும் ஏறிய மோட்டார் சைக்கிள் ராஜசேகரின் வீட்டை நோக்கிப் பறந்தது.

காதம்பரியின் சாவே ராஜசேகரை வெகுவாய் பாதித்து விட்டது. இப்பொழுது தன் தங்கைக்கும் ஏதாவது ஆகி விட்டதென்றால் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியாது சாயந்திரமே டாக்சியில் புறப்பட்டு இரவுக்குள் லொகே ஷனுக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் அனுவோடு. இந்தச் சூழ்நிலையில் ராஜசேகருக்கு மிகவும் வேண்டிய அனுவைத் தனியாய் விடக்கூடாது. மஞ்சுளாவைக் கூட...

அப்பொழுதுதான் மதுவுக்கு மஞ்சுளா காணாதது பற்றிய யோசனை வந்தது. ஆனால் அதற்குள் கவனம் அனுவைப் பாதுகாப்போடு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமே என்ற யோசனையில் திரும்பத் தொடங்கி விட்டது.

மோட்டார் சைக்கிள் ஒரு சிறிய சந்திற்குள் திரும் பிற்று. ஆளரவமில்லாமல் இருந்த அந்த சந்தில் நூறடி தூரத்தில் இரண்டு ஆட்கள் தெருவுக்குக் குறுக்காய் இரண்டு மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டு கையில் சைக்கிள் செயினோடு நின்று கொண்டிருந்தார்கள். நொடிப் பொழுதில் நிலைமை புரிந்து விட்டது.

சிறிய சந்து அது. மோட்டார் சைக்கிளைப் பின்னுக்குத் திருப்பிக் கொண்டு போகக்கூட வழியில்லை. சீக்கிரமாய் போக வேண்டும் என்றுதான் அந்த சந்திற்குள் திரும்

பினான் அவன். அது இவ்வளவு பெரிய ஆபத்தை வர வழைத்துவிடும் என்றெண்ணியிருக்கவில்லை.

மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்துக் கொண்டே இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்பிப்பது என்பதைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான். அனு அதற்குள் வெடவெடவென்று நடுங்கத் தொடங்கி விட்டாள் அந்த பயத்தில் மதுவை அழுத்தமாய் கட்டிக் கொண்டு விட்டாள்.

மஞ்சுளா மூலமாய் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொண்டிருந்தாள் அனு. தன் அண்ணன் ஆபத்தான விளையாட்டில் சிக்கிக் கொண்டிருப்பதைக் கூட அறிவாள். ஆனால் மஞ்சுளா சென்னைக்குப் போய் விட்ட பிறகு நடந்த விஷயங்கள் அவ்வளவாய் தெரியாது. கொஞ்ச நாட்களாய் மஞ்சுளா கடிதங்கள் கூட போடாததால் தெரிந்து கொள்ள வழியில்லாமல் போய்விட்டது. அதற்குள் இந்த ஆபத்து.....

மது பின்னால் திரும்பிப் பார்த்தான். வீதி முனையில் மேலும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வந்து காத்துக் கொண்டிருந்தன அதற்குள். எந்த வழியிலும் தப்பித்துப் போக முடியாத நிலைமை.

அந்தப் பக்கமோ அல்லது இந்தப் பக்கமோதான் போக வேண்டும் எந்தப் பக்கமாய் போனாலும் பாய்ந்து வந்து தூக்கி அனுவைத் தூக்கிக் கொண்டு போய் விடுவதற்குத் தயாராய் மோட்டார் சைக்கிளின் மீது உட்கார்ந்து கொண்டு சிகரெட் புகைத்துக் கொண்டிருந் தார்கள்.

"நீங்க கால்களைக் கொஞ்சம் தூக்கி வெச்சுக்குங்க. இப்ப இல்லை. நான் ரெடி என்றதுமே உங்க ரெண்டு கால்களையும் தூக்கி என் இடுப்பைச் சுற்றி வளைத்துப் போட்டுக்குங்க. நான் இப்போது ஒரு முயற்சி பண்ணப் போறேன். அதன்படி நாம்ப இவங்களிடமிருந்து தப்பிச்

சுடலாம். பி கேர் யுவர் செல்ஃப்...'' என்றான்— சன்ன மான குரலில் உதடுகளை அசைக்காமல்.

''சரி'' என்றாள் மெதுவாய், பயந்தபடியே அனு. இருவரும் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கினார்கள். அனு நடந்து கொண்டிருக்க, மது மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டே வரத் தொடங்கினான்.

ஆனாலும் அந்நால்வரில் யாருமே நகரவில்லை. மெதுவாய் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள்— எங்கே போய் விடப் போகிறார்கள், பார்த்து விடுவோம் என்ற மிடுக்குடன்.

கொஞ்ச தூரம் பின்னுக்குப் போய் நின்றான் மது. மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் பண்ணினான். அனுவை ஏறிக் கொள்ளச் சொன்னான். அவன் என்னதான் பண்ணப் போகிறானோ என்ற யோசனையுடனே அனு ஏறி உட்கார்ந்து கொண்டதுமே மோட்டார் சைக்கிள் வேகத்தை மேற்கொண்டது. கண் மூடித் திறக்கும் நேரத்திற்குள் மோட்டார் சைக்கிள் மின்னல் வேகத்தில் பறக்கத் தொடங்கிற்று.

மது என்ன பண்ணுகிறான் என்று கவனிப்பதற்குள் ளாகவே மது ரெடி என்றதும், அனுவின் கால்கள் முன்னோக்கி வளைந்ததும்—மது தன் கால்களைக் காற்றில் தூக்கியதும்- தெருவுக்கு நடுவில் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிள்களுக்கு நடுவில் பிளந்து கொண்டு போனதும்—போய்க் கொண்டிருக்கும்போதே மது தன் இரு கால்களாலும் அவர்களின் மார்பில் ஒரு தள்ளு தள்ளி விட்டதும்— எல்லாம் கண் மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டன.

மதுவின் கால் உதையால் காற்றில் எம்பி தொப் பென்று கீழே விழுந்த அந்த ஆட்கள் சுதாரித்துக் கொள் வதற்குள் மோட்டார் சைக்கிள் மாயமாகி விட்டது.

மதுவின் துணிச்சலுக்கும், புத்தி சாதுரியத்திற்கும் அனு வாயடைத்துப் போய்விட்டாள். மதுவை நன்றியோடு பார்த்தவள் அப்பொழுதுதான் கவனித்தாள்-அவன் இடது கையில் செயின் அடிபட்டு வழிந்து கொண்டிருந்த ரத்தத்தை!

47

தரங்கிணி மயக்கத்திலிருந்து விடுபட்ட அரை மணி நேரத்தில் திரும்பவும் ஷூட்டிங்கிற்கு அரேஞ் பண்ணத் தொடங்கிற்று யூனிட்.

தனக்குப் போதைப் பொருளின் பலவீனம் இருப்பதை இதற்கு முன்னால் பொருட்படுத்தியிராத தரங்கிணிக்கு இப்பொழுது ராஜசேகருக்கு முன்னால் தாழ்வு மனப் பான்மை ஏற்படத் தொடங்கிற்று. அப்பழக்கத்தை விட்டு விடஎவ்வளவு முயற்சி பண்ணியும் அவளால் முடியவில்லை.

அடிக்கடி ராஜசேகரின் கவனத்தைத் தன் பலவீனத் தால் சிதறடித்துக் கொண்டிருந்தது குற்ற உணர்ச்சியை உண்டாக்கிற்று அவளுள்.

அதற்குள் காஸ்ட்யூமர், செயின்ட் லாரென்ட்டின் காஸ்ட்யூம்களைக் கொண்டு வந்து தந்தான். அதை எடுத்துக் கொண்டு மௌனமாய் பெண் மாடல்களின் டிரஸ்ஸிங்கிற்காக ஏற்பாடு செய்திருந்த டென்ட்டிற்குள் போனாள்.

அவரவர்கள் தம் வேலையில் மௌனமாய் ஆழ்ந்திருந் தார்கள். எல்லோருக்குமே தரங்கிணியின் மீது இரக்கம் ஏற்பட்டது. படித்துப் பட்டம் பெற்ற, அசாதாரண அழகுடைய பெண், ஒரு கயவனின் மூலமாய் இவ்வாறு மாறிவிட்டது எல்லோருக்குமே வருத்தத்தைத் தந்தது. இது எல்லாவற்றையும் விட அவர்கள் உள்ளங்களை உருக்கிய இன்னொரு விஷயம்—போதைப் பொருள்

பலவீனத்தால் சாவின் கடைவாயில் இருப்பது தெரிந்தும் கூட அழுத்தமாய் இருந்து கொண்டு ராஜ சேகருக்கு உதவியது. எல்லோருக்கும் ஒரே உணர்ச்சிதான் ஏற்பட்டது. பந்தயத்தில் ஜெயிப்பதோடு அவள் திரும்பவும் ஆரோக்கியமானவளாய் மாற வேண்டும் என்பதே...

ராஜசேகர் கண்களை மூடிக் கொண்டு அடுத்ததாய் எடுக்கப் போகும் ஷாட்டைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோது, தரங்கிணி லாரென்ட்டின் காஸ்ட்யூமில் விண்ணிலிருந்து இறங்கி வந்த தேவ கன்னிகையைப் போல, சூறாவளியாய் ஓடி வந்து ராஜசேகருக்கு முன்னால் நின்றாள்.

இதொன்றையும் கவனிக்கும் நிலையிலில்லை அவன். அடிக்கடி காதம்பரியின் நினைவு வந்து கொண்டிருக்கும் அவனுக்கு. அந்த மாதிரி நிலையில்தான் மனம் துடிதுடித்தபடி உட்கார்ந்திருந்தான்.

தன்னை சாவு நெருங்கிக் கொண்டிருப்பது தெரிந்தும் கூட அத்தனை விரக்தியாய் எப்படி இருக்க முடிந்தது அவளால்?

விளம்பர உலகத்தில் யாருமே உணர்ந்திராத மகத்தான காரியங்களைப் பற்றி எப்படி யோசிக்க முடிந்தது அவளால்? தன் தாய் தந்தையர், அக்கா தங்கைகள், அண்ணன் தம்பிகள் இருந்தும் கூட அவன் கையால்தான் தகன காரியங்கள் பண்ண வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருந்தாள் என்றால்...? காதம்பரி இன்னும் தன் கண் முன்னாடி நிற்பது போலவும், அன்போடு ஆலோசனைகளைச் சொல்வது போலவும், சித்தரஞ்சனைப் போன்ற கயவர்களிடமிருந்து இத்தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மாடல்களைத் தன் ட்ரஸ்ட் மூலமாய் ஆதரிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வது போலவும் இருந்தது.

தரங்கிணி பெரிதாய் கத்தினாள்— தனக்கு எதிரே இருந்தும் ராஜசேகர் கண்களைத் திறவாததற்கு.

அப்பொழுதுதான் கண்களைத் திறந்தான் ராஜசேகர்.

எதிரே தரங்கிணி.

சிருஷ்டியில் இவ்வளவு அழகு கூட உண்டா...! வேலை முடிவடைவதற்குள் இவளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்...?

இந்த யோசனையே அவனை நடுங்கச் செய்தது.

தரங்கிணி ராஜசேகரின் கையைப் பிடித்து லொகேஷனை நோக்கி இழுத்துக் கொண்டு போனாள்.

ஏனோ தெரியவில்லை— எந்த மாடலுமே தன்னை நெருங்குவதை விரும்பாத ராஜசேகர் தரங்கிணியை எதுவும் சொல்ல முடியாமல் போனான். அப்படிச் சொல்ல வேண்டும் என்று கூட தோன்றவில்லை. அது அவள் தனக்கு ஒத்துழைக்கிறாள் என்ற நன்றியால் வந்ததில்லை. உடல் நலமில்லாதபோது கூட ஒத்துழைக்கிறாளே என்ற உணர்ச்சியோ கூட இல்லை. இதை யெல்லாவற்றையும் மீறிய அதீதமான உணர்ச்சி... அது என்னவென்று அவனுக்கே புரியவில்லை.

தன்னை யறியாமல் தரங்கிணியைப் பின் தொடர்ந்தவன் கிரீஷுக்கு சைகை காட்டினான்.

"கிரீஷ்... ராத்திரி பூரா உட்கார்ந்துட்டு எடிட்டிங், டப்பிங், ஜங்கிள் சம்பந்தப்பட்ட இண்டர்கட்ஸில் கோர மண்டல் பிராண்டின் பெயர், லோகோ, எது எதை எங்கெங்கே இன்ஸர்ட் பண்ணணும்னு எழுதியிருக்கேன். அதைப் படிச்சுப் பாரு. எந்த பிலிமும் 90 வினாடிகளைத் தாண்டிவிடக் கூடாது. ஜாக்கிரதையாய் பண்ணணும் லேப் வேலைகளை. ஸ்டில் டிலைன்ஸுக்குத் தேவையான பிளாக் அண்ட் ஒய்ட் கலர் நெகடிவ்ஸ்ஸை ஜாக்கிரதையாய் டெவலப் பண்ணி ஜீவன் ததும்பறாப் போல ப்ரொமைட் பண்ணு. கலர் டரான்ஸ்ஃபரன்ஸிகளையும், கலர் ப்ளேட்ஸ்ஸையும் கூட நீயே பார்த்துக்கோ. வேணு

மானால் கிரண், ராம்பூபாலின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள். உன்னை நம்பி பொறுப்பான காரியத்தை ஒப்படைக்கிறேன். ஷூட்டிங் ஆன அடுத்த நிமிஷமே நான் தரங்கிணியை அழைச்சுட்டு டில்லிக்குப் போகப்போறேன்," என்றான்—தரங்கிணி காதில் படாதவாறு சன்னமான குரலில்.

ராஜசேகரும் கிரீஷும் பேசிக் கொள்ளத் தொடங் கியதைப் பார்த்து, தரங்கிணி அவர்களுக்குக் கொஞ்ச தூரத்தில் போய் விட்டாள். மௌனமாய் தலையாட்டி னான் கிரீஷ். இதற்கு முன்னால் பண்ண நினைத்திருந்த நம்பிக்கை துரோகமே கிரீஷை அபரிமிதமாய் வருத்தப் படுத்திற்று.

எவ்வளவோ நம்பிக்கை இருந்தாலே யொழிய, இவ்வளவு பெரிய பொறுப்புகளை ஒப்படைக்கமாட்டான் ராஜசேகர். தன் சக்திகளையெல்லாம் பயன்படுத்தியாவது இக்காரியங்களை முடித்துவிட வேண்டும் என்று உறுதியாய் எண்ணிக் கொண்டான் மனதிற்குள்.

"ஆனால் ரைட்டரை மாற்றிட்டேன். நம்ப ஆபீசுக் குப் பக்கத்திலேயே ஒரு இளைஞன் இருக்கிறான். சமீபத் தில்தான் கதை, கவிதைகள் எழுதத் தொடங்கியிருக்கிறான். நல்ல எதிர்காலம் இருக்கு. அவன் மூலமாய் காப்பிகளை எழுதிக்கோ. சோப்புகளை இண்டர்நேஷனல் மார்க்கெட் டிங்கில் புகுத்தப் போகிறார்கள் நம் க்ளையண்ட்ஸ். நம்ப விஸுவலைசேஷன்களும், டிஸைன்களும் கூட அந்த விதத்தில் அமையணும். நம்ப டிஸைன்கள் உலகப் புகழ் பெற்ற பேப்பர்களிலெல்லாம் வரும். ஒரு பக்கத்து விளம்பரத்துக்கே ஆயிரம் டாலர்கள் செலவாகிறது நம் வாடிக்கையாளருக்கு. நம்ப விளம்பர சாதனத்தின் மூலம் அவங்களுக்கு விற்பனை கூட அதே விதத்தில் இருக்கணும். இட்ஸ் எ ப்ரிஸ்டேஜியன் வர்க். இதனால் நாம்ப உலகத் துக்கு முன்னால் வரப்போகிறோம். இது எனக்கு மட்டுமே

யில்லை, என்னிடம் வேலை பண்ற உங்களுக்கெல்லாம் கூட பெரிய பிரேக் என்று நினைவு வைச்சுக்கோ...''

கிரீஷ் மௌனமாய் கேட்டுக் கொண்டே ராஜ சேகரையே பார்த்துக் கொண்டிருந்தான். எத்தனை ஆழ்ந்து சிந்திக்கிறான் இவன்!

இப்பொழுதே அத்தனையையும் சொல்லிவிட்டான் என்றால், இனி வேலை முடிவடையும் வரையிலும் பேச மாட்டான் போலும்!

விளம்பர போட்டோகிராப்பர் கற்றுக் கொள்ள வேண்டியது போட்டோகிராப்பியிலுள்ள நெளிவு சுளிவு களை மட்டுமே இல்லை. தான் எடுத்த போட்டோகிராப் லட்சக் கணக்கான விநியோகதாரர்களைச் சிறைப்பிடித்து விடும்படியாய் இருக்க வேண்டும்.

ஒரு டிஸைன் வெளிவந்த தென்றால் அதனால் ஆச்சரியப் படத்தக்க பலன் வர வேண்டும்.

விளம்பரந்தானே என்று அலட்சியமாய் வாசகர்கள் பத்திரிகைகளின் பக்கங்களைப் புரட்டிவிட்டு, தமக்குத் தேவையான கதைகளையும் தொடர்கதைகளையும் படித்து விட்டுப் போய்விட்டால் அது போட்டோகிராப் பரின் தவறுதான். பத்திரிகைகளில் விளம்பரத்தைப் பார்த்தால் அன்று மாலையே அவன் கடைக்குப் போக வேண்டும்! அந்தப் பொருளை வாங்க வேண்டும்.

இன்று அதெல்லாம் எங்கே?

இந்தியன் விளம்பர உலகம் தொழில் ரீதியாய் வளர்ச்சி யடைந்திருந்தாலும் அதில் உயிர் இல்லை... யோசிக்க லானான் கிரீஷ்.

ராஜசேகர் தொடர்ந்தான்—''கேமிரா மூலம் என்னால் முடிஞ்சதை யெல்லாம் பண்றேன். அதற்கப்புறம் வேலையை உன் கையில் ஒப்படைக்கிறேன். திரும்பத் திரும்பச் சொல்றேன்... ஏதாவது சந்தேகங்கள் இருந்தால்

இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் தீர்த்துக்கோ. பி ஆன் தட் ஜாப் ஸின்ஸியர்லி அண்ட் ஸீரியஸ்லி!'' என்று தரங்கிணியை நோக்கி நடந்தான்.

தரங்கிணிக்கு காஸ்ட்யூம்ஸ்ஸைப் பற்றி ஆலோசனை தந்து கொண்டே எஞ்சிய மாடல்களை நோக்கித் திரும்பினான்.

உடனே மேக்கப் ஆர்ட்டிஸ்டைக் கூப்பிட்டான்.

''எல்லோருக்கும் ஒரு முறை மேக்கப் டச்சப் பண்ணுங்க. கிராமத்துத் தரங்கிணியின் முகத்தை கௌண்டர் சேஞ் பண்ணுங்க. குளிப்பதற்கு முன்னால் முகமெல்லாம் எண்ணெய் வழிவது போன்ற எஃபெக்ட் வரணும். கோரமண்டல் சோப்பால் குளிச்சதுமே எல்லோர் முகங்களும் பளிச்சென்று, அழகாய் வருவது போல, அப்படித் தெரிகிறாப் போல உங்க மேக்கப் இருக்கணும். பி ப்ரிபேர்ட்.''

மேக்கப் ஆர்ட்டிஸ்ட் வினயமாய் தலையாட்டி விட்டு கிராமத்துத் தரங்கிணியை நோக்கி நகர்ந்தான்.

ஹேர் ஸ்டைலிஸ்ட்டைக் கூப்பிட்டான்—''குளிக்கப் போறதுக்கு முன்னாடி இந்தப் பெண்கள் தலை முடியை இழுத்து கொண்டையைப் போல முடிஞ்சுப்பாங்க. அட்வான்ஸ்ட் யூரோப்பியன் பெண்ணானால் நைலான் வலையால் தலை முடியைக் கட்டிப்பாங்க. இதைக் கவனத் தில் வெச்சுக்குங்க.''

மௌனமாய் தலையாட்டி விட்டுப் போய் விட்டான் அவன்—ராஜசேகரின் ஆலோசனைகளைக் கேட்டு வியப் படைந்து.

''பாரு தரங்கிணி, நீ இப்போது அதோ அந்த வளைந்த தென்னை மரத்துக் கிட்டேயிருந்து ஓடிவரணும். உங்க பின்னாடியே நாலடி தூரத்தில் கிராமத்துத் தரங்கிணி ஓடி வருவாள். அவளைத் தொடர்ந்து எஞ்சிய வர்கள். ஒவ்வொரு அடியையும் ஜாக்கிரதையாய் எடுத்து வைக்கணும். மணலைக் காலால் மிருதுவாய் தள்ளிக்

கொண்டே வரணும். ஒரு அடி அவசரமாய் எடுத்து வைத்தாலும், ஒரு அடி தாமதமாய் எடுத்து வைத்தாலும், எஞ்சியவர்களின் மூவ்மென்ட்ஸ் பாதிக்கப்பட்டு விடும். பி கேர்ஃபுல். நான் உன் காலடியில் கிளம்பும் மணலை நோக்கிக் கேமிராவை ஓபன் பண்றேன். இப்போது ஸ்லோ மோஷன் உபயோகிக்கப் போகிறேன். உங்க மூவ்மென்ட்டில் வர சின்னத் தப்புகூட கேமிராவில் வந்துடும். அருவியைப் போல, கடல் அலை களைப் போல நீங்க ஓடி வர வேண்டும். அந்தச் சமயத்தில் உங்க முகத்தில் கோரமண்டல் சோப்பால் குளிக்கப் போகிறோம் என்ற ஆனந்தம் தென்படணும். இப்போது ஒரு கேமிரா இல்லை, ரெண்டு கேமிராக்கள் வேலை பண்ணப் போகுது. உங்க அஸோசிட் டைரக்ஷனில் என் கேமிராவும், சைட் டைரக்ஷனில் கிரீஷின் கேமிராவும் வேலை பண்ணப் போகின்றன... கேட்டீங்களா?'' என்று தரங்கிணியைப் பார்த்தான்.

தன் வாக்கு சாதுரியத்தால் மெய் மறக்கச் செய்து கொண்டிருந்த ராஜசேகரையே பார்த்துக் கொண் டிருந்தவள் கேட்டேன் என்று தலையாட்டினாள்.

''உங்க உதடுகளின் அசைவில் உத்வேகம் வருவதற்காக பின்னணியில் மியூசிக் அரேஞ் பண்ணியிருக்கேன். உங்களுக்கு ஐடியாவுக்காகச் சொல்றேன். வோர்ல்ட் ஆஃ டைம் ஃபேவரைட் மாடல் மிஸ் ஜீன் ஷ்ரிம்ப்ஷனைப் போல உங்க மூவ்மென்ட்ஸ் இருக்கணும். ஓ.கே!'' என்றான் ராஜசேகர்.

விளம்பர உலகத்தில் இவனுக்குத் தெரியாத விஷயமோ, தெரியாத மாடல்களோ இல்லை போலிருக் கிறதே என்று வியப்படைந்த தரங்கிணி புரிந்தது என்றாற் போல தலையாட்டினாள்.

உடனே கிரண் ஒரு ஸ்டூலைக் கொண்டு வந்து போட்டான்.

ராஜசேகர் அதன் மேல் ஏறியதுமே ஹேண்ட் மைக்கைக் கையில் தந்தான்.

''மை டியர் மாடல்ஸ்! இன்னும் ஓரிரு நிமிஷங்களில் ஷூட்டிங் தொடங்கப் போறது. எல்லோரும் விழிப்பாய் இருக்கணும். உங்க மூவ்மெண்ட்ஸில் ஃப்ரீ தென்படணும். யாருமே பயப்படுவது போலவோ வேறெந்த உணர்ச்சி யோடோ ஃபீல் ஆக வேண்டாம். தைரியமாய் ஃப்ரீயாய் ஓடிவாங்க. தப்புப் பண்ணிட்டால் டேக் வீணாயிடு மேங்கிற பயம் வேண்டாம் உங்களுக்கு. இது உங்க சொந்த யூனிட். பயந்தால் இன்னும் தப்பு வரும். என்னை உங்க நண்பனாய் பாவியுங்கள். எல்லோரும் தரங்கிணி எப்போது ஓடத் தொடங்குகிறாள்னு கவனிச் சிட்டிருக்கணும்... ஓ. கே. தாங்க்யூ!'' என்று மைக்கை கிரணிடம் தந்துவிட்டு ஸ்டூலை விட்டு இறங்கி விட்டான்.

ராஜசேகர் தந்த உற்சாகமும், தைரியமும் அவர்களைப் பரவசப் படுத்தின. லொகேஷன் முழுவதும் நிசப்தமா யிருந்தது.

ராஜசேகர் கேமிராவை நோக்கி நடந்து கொண் டிருந்தவன் மஞ்சுளாவைப் பற்றி நினைத்தான். மஞ்சுளா ஏன் வரவில்லை? இன்னும் மெட்றாசிலேயே இருந்து கொண்டு என்ன பண்ணுகிறாள்? ஏனோ, அந்த நிமிஷமே மஞ்சுளாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது ராஜ சேகருக்கு. அத்துடன் மதுவும் நினைவுக்கு வந்தான்.

o o o

அனுவை ஒரு பாதுகாப்பான இடத்தில் ரகசியமாய் வைத்து விட்டு, மோட்டார் சைக்கிளில் ராஜசேகரின் வீட்டிற்கும் லாயர் சீதாராமனின் வீட்டிற்குமாய் காலை யிலிருந்து நாலைந்து முறை அலைந்து விட்டான் மது— மஞ்சுளாவைத் தேடிக் கொண்டு.

எங்குமே அவள் ஜாடையைக் காணோம்... எங்கே போய்த் தேடுவது?... பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது அவனுக்கு.

கடைசியாய் மஞ்சுளாவின் சொந்தக்காரர்களின் வீட்டிற்குக் கூட போய் விசாரித்தான். பலனில்லை.

ராஜசேகரை வலையில் வீழ்த்துவதற்காக மஞ்சுளாவைச் சிக்க வைத்திருப்பார்களோ? எந்த சாகஸத்தை மேற்கொண்டாவது மஞ்சுளாவைக் காப்பாற்றி விட வேண்டும். பற்பல விதமாய் யோசித்துக் குழம்பினான் மது.

47

அந்த ஹாலில் பயில்வான்களைப் போன்ற சுமார் பத்துப் பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் சாமானியமாய் இரண்டு மூன்று பேர்களை ஆயுதமில்லாமலேயே கொன்று குவிக்க வல்லவர்கள்.

அவர்கள் இடுப்பைச் சுற்றிலும் செயின்களும், பட்டன் கத்திகளைப் போன்ற கொலை ஆயுதங்களும் எப்பொழுதும் இருக்கும். கொலைத் தொழில் பண்ணும் ப்ரொபஷனல் குண்டர்கள். அவர்கள் நிலைக்குத் தகுந்தாற் போல பணத்தை விட்டெறிந்து விட்டால் போதும், அடுத்த ஆள் எவ்வளவு சாதுவானாலும சரி, எவ்வளவு உயர்ந்த மனிதனானாலும் சரி, அவர்களுக்கு அக்கறையில்லை. அரை மணியாகி விட்டது அவர்களை அங்கே அழைத்து. ஒன்றும் பேசாமல் கண்களை மூடிக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருந்தான் சித்தரஞ்சன் அவர்களுக்கு முன்னால். கைலாசன் ஒரு பக்கமாய் நின்று கொண்டு தன் முதலாளி உத்தரவிடப் போவதை எதிர்பார்த்துக் காத்திருந்தான் கழுகைப் போல. பத்து நிமிஷங் கழித்துக் கண்களைத் திறந்தான் சித்தரஞ்சன்.

அவன் கண்கள் நெருப்புக் கோளங்களாய் இருந்தன.

"நீங்கள்ளாம் இந்த நிமிஷத்தில் வேலூருக்குக கிளம்பப் போறீங்க. அங்கே இருக்கிற நீல நிற ஏரியைக் கண்டு களிப்பதற்காக இல்லை. ரத்தத்தில் உறைந்தாற் போல ஏரியைத் தயார் பண்றதுக்காக. யாருமே இதுக்கு பயப்படத் தேவையில்லை. உங்களுக்குத் துணையாய் உங்க பின்னாடியே நானும் என் பணமும் என் செல்வாக்கும் இருப்போம். ராஜ் விளம்பரப் பட யூனிட்டில் ஒருத்தருமே உயிரோடிருக்கக் கூடாது. மனுஷங்க மாத்திரமில்லை, கேமிராக்களும் செட் ப்ராபர்டீஸ்களும், காஸ்ட்யூம்ஸ் களும் கூட ஏரியில் மூழ்கிடணும். நீங்க போய்ச் சேர்ந்த அரை மணிக்குள் அவ்விடத்தில் மயானம் தென்படணும். புரிஞ்சுதா? உங்களுக்குத் தரதாய் சொன்ன பணத்தோடு ரெண்டு மடங்கு தரேன்— பண்ணச் சொன்னதைத் திறமையாய் பண்ணி முடிச்சால். எப்போது கிளம்பணும், எப்படிங்கற விவரத்தை யெல்லாம் கைலாசன் சொல்லு வான். ஒன்று மட்டும் நினைவு வெச்சுக்குங்க — ஒன்றும் பண்ணாமல் ரத்தக் கைகளோடு திரும்பி வந்தீங்கன்னா நீங்க உயிரோடு இருக்கமாட்டீங்க . !" என்று நாற்காலியை விட்டு எழுந்திருந்தான்.

மகள் போன துக்கம் ஒரு புறம், தொழிலில் தன் செல் வாக்குப் போய் விட்டதோடு கூட, பந்தயப்படி தொழிலை விட்டு தொலைவிற்குப் போய்விட வேண்டிய அவமானமும் ஏற்பட்டு விடுமே என்பதுதான் சித்தரஞ்சனை அதிருப்திக் குள்ளாக்கிக் கொண்டிருந்தது.

"சார்!" கைலாசன் பயந்தவாறே கூப்பிட்டான் உள்ளே போகத் திரும்பிய சித்தரஞ்சனைப் பார்த்து.

சித்தரஞ்சன் திரும்பினான். என்ன என்பது போல ஏறிட்டான்.

"மஞ்சுளாவை என்ன பண்றது...?"

பெரிதாய் சிரித்தான் அந்த ஹாலே எதிரொலிக்கும்படி. சட்டென்று சீரியஸாய் மாறிவிட்டான்.

"முடிச்சுடுங்க. ஆனால் நம்ப கெஸ்ட் ஹவுசில் வேண்டாம். வேறிடத்தில்!" என்று திரும்பப் போனவன் ஒரு வினாடி நின்றான். "உங்களை நம்பி வேலையை ஒப்படைப்பது அவ்வளவு நல்லதில்லை. நானும் வரேன் உங்களோடு. சீக்கிரமாய் ரெடியாய் இருங்கள்!" என்று உள்ளே போய் விட்டான் சித்தரஞ்சன்.

கைலாசன் இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்த இருவரையும் பார்த்து கண் ஜாடை காட்டினான்.

"கெஸ்ட் ஹவுசில் மஞ்சுளா என்கிற பெண் இருக்கிறாள். வேறிடத்துக்குக் கூட்டிட்டுப் போய் வேலையை முடிச்சுடுங்க..." என்று நிசப்தமாய் வெளியே நடந்தான்.

அவ்விருவரும் யம தூதர்களாய் வெளியேறினார்கள்.

o o o

தரங்கிணி கோரமண்டல் சோப்பைக் கையிலெடுத்துக் கொண்டாள். ராஜசேகர் முழங்காலிட்டு அமர்ந்து கொண்டான்- தோளில் கேமிராவுடன். தரங்கிணி முன் நோக்கி வர வர ராஜசேகரின் கேமிரா பின்னுக்குப் போய்க் கொண்டேயிருந்தது மெதுவாய்

சாதாரணமாய் கேமிராவைத் தாங்கிக் கொள்வது பெரிய கஷ்டமாயிராது ராஜசேகருக்கு. ஆனால் இந்த ஒரு மாதத்தில் உடலாலும் மனதாலும் மிகவும் பாதிக்கப் பட்டிருந்ததால் கேமிரா மிக கனமாய் தோன்றிற்று. பற்களைக் கடித்துக் கொண்டு அந்த பாரத்தைத் தாங்கிக் கொண்டிருந்தான். இப்பொழுது முற்றிலும் பின்னுக்குச் சாய்ந்து விட்டான். பின்னுக்கு மடித்துக் கொண்டிருந்த கால்கள் வலி யெடுக்கத் தொடங்கின. ஆனாலும் அப்படியே மணலில் வளைந்து திரும்பிக் கொண்டே யிருந்தான் பாரமாய்.

எல்லோரும் மூச்சு விடவும் மறந்தவர்களாய் ராஜ சேகரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். நினைத்த கோணத்தை வரவழைத்துக் கொள்வதற்காக அவன்

படும் பாட்டைப் பார்த்த அவர்கள் மேனி சிலிர்த்தது. எதிர்பார்த்த எஃபெக்டிற்காக எவ்வளவு மணி நேரமானாலும் சிரமப்படுவான் அவன். பிலிம் எவ்வளவு அடிகள் வீணானாலும் பயப்பட மாட்டான். பணம் வீணாகி விடுமே என்ற எண்ணத்தில் அவசர அவசரமாய் பிலிமைத் திருப்பினால் அது முடிந்து பார்வையாளர்களுக்கு முன்னால் வரும்போது போட்டோகிராபர் தலை குனிய வேண்டியிருக்கும்.

இதை நன்றாய் உணர்ந்து பொறுமையைக் கடைப் பிடிப்பான் ராஜசேகர்.

ஷாட் முடிந்து விட்டது.

கால்கள் மடிந்து கொண்டிருந்ததால் சட்டென்று எழுந்திருக்க முடியவில்லை அவனால். தரங்கிணி ஓட்டமாய் ஓடிவந்து கை கொடுத்தாள்.

அதே சமயத்தில் கிரீஷ் ஓடி வந்து கேமிராவை வாங்கிக் கொண்டான்.

ராஜசேகர் தரங்கிணி கையைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றவன் ஆடையில் ஒட்டிக் கொண்டிருந்த மணலைத் தட்டிக் கொண்டே தரங்கிணியைப் பார்த்து முறுவலுடன் நன்றி சொன்னான்.

அடுத்த ஷாட்டிற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள் யூனிட்டைச் சேர்ந்த எல்லோரும். அவரவர்கள் வேலையை இயந்திரமாய் பண்ணிக் கொண்டே போனார்கள்.

இந்த ஷாட்டுடன் இந்த லொகேஷனில் வேலை முடிவடைகிறது. பிறகு பெங்களூரில் இன்டோர் ஷூட்டிங். ஒரு பக்கத்தில் மேக்கப். இன்னொரு பக்கத்தில் ஹேர் ஸ்டைல் மாற்றிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கத்தில் லைட்டிங் அரேஞ்மென்ட்ஸ் நிகழ்ந்து கொண்டிருந்தன.

எங்கும் நிசப்தமாயிருந்தது. காற்றுகூட ஸ்தம்பித்து நின்றுவிட்டாற் போல... மர இலைகள் சந்தடியில்லாமல்

இருந்தன மௌனமாய் சைகைகள் மூலமாகவே வேலை களைப் பண்ணிக் கொண்டிருந்தார்கள் அங்கிருந்த எல்லோரும்.

பிரளயத்திற்கு முன்னால் தோன்றும் அமைதியும் ஆழ்ந்த நிசப்தமும் அந்த லொகேஷனில் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.

அந்த நிசப்தத்தில் ராம்பூபால் கத்திய கத்தல் யுத்த பேரிகையைப் போல எதிரொலித்தது.

எல்லோரும் திடுக்கிட்டு ராம்பூபாலைத் திரும்பிப் பார்த்தார்கள்.

சந்திரன் சரேலென்று ராம்பூபாலிடம் ஓடிவந்தான்.

அதற்குள் எல்லோருக்கும் லேசாய் புரிந்து விடவே, ஒவ்வொருவரும் யுத்தத்திற்கு ஆயத்தமாகி விட்டவர் போல தலைக்கு ஒரு ஆயுதமாய் கையிலெடுத்துக் கொண்டார்கள் வேகமாய்.

"சித்தரஞ்சனின் ஆட்கள் வந்துட்டிருக்காங்க. எல்லோரும் தயாராயிருங்கள்!" சந்திரன் கத்திய கத்தலால் அந்த லொகேஷன் முழுவதும் ஒரே குழப்பம் வந்து சூழ்ந்து கொண்டது.

ஏரிக் கரைக்குக் கொஞ்ச தூரத்தில் இருந்த பெண் மாடல்கள் பயந்து ஓடி மரத்தடியில் ஒன்றாய் கூடி நின்றார்கள்.

தொலைவில் நான்கு கார்கள் ரேஸ் குதிரைகளைப் போல ஏரியை நோக்கி வேகமாய் வந்து கொண்டிருந்தன.

ஆறடி உயரமும், கடைந்தெடுத்த முறுக்கேறிய உடம்புமாய் எதிரிகளின் இதயங்களில் கலக்கத்தை உண்டாக்கக் கூடிய கால ருத்ரனைப் போல தோற்ற மளித்த ஜார்ஜ் கையில் பெரிய ரிஃப்ளெக்டர் ஸ்டாண்டை கர்லாக் கட்டையைப் போல பிடித்துக் கொண்டு எல்லோருக்கும் முன்னால் வந்து நின்றான். அவனுக்குப்

பின்னால் முதல் வரிசையில் சந்திரன், ராம்பூபால், கிரண், ஆர்ட் டைரக்டர், மேக்கப் மேன் அத்தனை பேரும் வந்து நின்று கொண்டார்கள்.

இன்னும் கொஞ்ச தூரத்தில் கேமிராக்களுக்குப் பாதுகாவலாய் கிரீஷ், லைட் பாய் இருவரும் நின்று கொண்டார்கள்.

மெதுவாய் சித்தரஞ்சனின் கார்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

ஜார்ஜ் எந்த நிமிஷத்தில் 'உம்' என்றாலும், உடனே பாயத் தயாராய் இருந்தார்கள் அத்தனைப் பேரும்.

அதற்குள் நிலைமையை நன்றாய் புரிந்து கொண்டு விட்ட தரங்கிணி படமெடுத்தாடும் பாம்பைப் போல சீறி எழுந்தாள்.

''வாருங்கள்... மரத்தடியில் கோழையாய் ஒளிஞ்சுக்க வேண்டாம். முன்னுக்கு வந்து நேராய் நிமிர்ந்து நில்லுங்கள். இந்த ப்ராஜெக்ட் நாசமானாலும், ராஜ சேகருக்கு ஏதாவது ஆனாலும், நமக்கு பாபவிமோசனமே. கிடையாது... இப்படிப்பட்ட போட்டோகிராபரை நம் கையாலேயே பலி கொடுத்தால் மாடலாய் நம் வாழ்க்கையே அனாவசியமாகி விடும். வந்து நில்லுங்கள். ஒவ்வொருவரும் ஒரு சூலமாய் ஓடி வந்து நில்லுங்கள்!'' என்றாள் தரங்கிணி ஆவேசமாய்.

ஒவ்வொருவரும் மெல்ல மெல்ல தைரியத்தைக் கூட்டிக் கொண்டு வந்து நின்றார்கள் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு- ஆதிசக்தியைப் போல— காளியைப் போல!

சித்தரஞ்சனின் கார் ஏரிக்கருகில் வந்து நின்றது ஒவ்வொருவராய் இறங்கத் தொடங்கினார்கள்.

முதலில் சித்தரஞ்சனும், அவனைத் தொடர்ந்து கைலாசனும், அவர்களுக்குப் பின்னால் பத்துப் பேரும். நிமிர்ந்து ஏரிப் பக்கமாய் பார்த்த சித்தரஞ்சனின் ஆட்கள் கலவரமடைந்து விட்டார்கள்.

வரிசையாய்— கோட்டையைப் போல— மிலிடரி தளத்தைப் போல—கைகளில் ஆயுதங்களோடு—மூன்றடிக்கு ஒருவர் வீதம் நின்று கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஆணுக்கும் நடுவில் ஒரு பெண். அந்த எதிர்பாராத சூழ்நிலைக்கு அதிர்ந்து விட்டாலும் சட்டென தேறிக் கொண்டார்கள்.

சித்தரஞ்சன் மிடுக்கோடு இறங்கி நடந்தான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் நடந்தார்கள். நிலைமை இவ்வளவு சீரியஸாய் இருக்கும் என்பதை எதிர்பார்த் திராததால் சித்தரஞ்சன் தன் திட்டத்தை மாற்றிக் கொள்ள வழி தேடிக் கொண்டிருந்தான் மனதிற்குள்.

"இதோ பாருங்கள். நீங்கள் எல்லாம் கத்துக்குட்டிகள். என் யுத்தம் உங்களோடில்லை, உங்க எஜமானரோடுதான். அவனையே கூப்பிடுங்கள். கோழைப்பயல் ஒளிஞ்சுண்டிருக் கானோ?" சித்தரஞ்சனின் வார்த்தைகள் முடியக்கூட வில்லை—அதற்குள் சந்திரனின் கை வேகமாய் காற்றில் எழும்பியதும், அது சித்தரஞ்சனின் வாயின் மேல் வந்து பட்டதும், அவன் பின்னுக்குத் துள்ளி விழுந்ததும் கண் மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டன.

அதைப் பார்த்து ஆவேசத்தால் பாயப் போன தன் கையாட்களை நோக்கிக் கையமர்த்தி விட்டு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான் சித்தரஞ்சன்.

'உங்க எஜமானனைக் கோழை என்று சொன்னதற்கே இத்தனைக் கோபம் வந்துடுத்தாடா ஆம்பிள்ளைச் சிங்கமே! பிய்ச்சுக் குதறிடுவேன் அடாவடித்தனம் பண்ணினால்--" என்றான் சித்தரஞ்சன் சந்திரனைப் பார்த்து உறுமியபடி.

திரும்பவும் பாயப் போன சந்திரனை கிரண் பிடித்துக் கொண்டு பலவந்தமாய் தடுத்து விட்டான்.

தேவையானால் உயிரையும் தரத் தயாராயிருந் தார்களே தவிர, அனாவசியமாய் அங்கே ரசாபாசத்தைக் கிளப்பிவிடத் தயாராயில்லை அவர்கள்.

சித்தரஞ்சன் என்ன பண்ணப் போகிறான் என்று அங்கிருந்த ஒருவருக்குமே புரிபடவில்லை

கொலையே பண்ண வந்தவன் திடீரென்று தன் இயல்புக்கே விரோதமாய் பேசுகிறான் என்றால் ஏதோ பெரிய நாடகம் போட்டுக் கொண்டிருக்கிறான் என்றுதான் தோன்றிற்று அவர்களுக்கு.

தரங்கிணியைப் பார்த்தான் சித்தரஞ்சன். அவனிடம் பழி, கோபம், வெறுப்பு புஸ்ஸென்று சீறி எழத் தொடங்கின. கொல்லச் சொல்லி அனுப்பியது இவளை. மாண்டதோ தன் மகள். அவன் பார்வை யெல்லாம் காளியைப் போல நின்று கொண்டிருந்த தரங்கிணியின் மீதே இருந்தது.

அப்பொழுதுதான் ராஜசேகர் அங்கே வந்து சேர்ந்தான்.

வரிசையில் நின்று கொண்டிருந்த இருவரை விலக்கி விட்டு முன்னால் வந்து நின்றான் ராஜசேகர்.

ஒருவரை யொருவர் ஒரு வினாடி உறுத்துக் கடுகடு வென்று பார்த்துக் கொண்டார்கள்.

ஆபத்து அவ்வளவு கிட்டே நெருங்கி வந்தும்கூட ராஜசேகர் ஏன் அவ்வளவு பொறுமையாய் இருக்கிறான் என்று ஒருவருக்கும் புரியவில்லை. சித்தரஞ்சனின் கொடூரமான பார்வையைக் காணச் சகிக்காத தரங்கிணி ராஜசேகருக்குப் பின்னால் வந்து நின்று கொண்டாள்.

"இதப் பார் ராஜசேகர்...பந்தயத்தில் ஜெயிக்க உனக்கு இன்னொரு சந்தர்ப்பம் கிடைச்சாலும் நான் ஜெயிக்க விட மாட்டேன். தோல்வி என்பது இந்த சித்த ரஞ்சனின் சரித்திரத்திலேயே கிடையாது."

ராஜசேகர் மௌனமாய் இருந்தான்.

"எனக்குப் பின்னால் இருக்கிறவங்க ப்ரொபஷனல் கொலையாளிங்க. அவங்களை மீறி உன்பாச்சா பலிக்காது.

ஏதோ என் மேல் இருக்கிற அன்பாலும் மதிப்பாலும என்னோடு—உன்னை எதிர்க்கணும்னு—வந்திருக்காங்க ஆர்வத்தோடு.உண்மையில் பத்தே நிமிஷம் போதும் என் ஆட்களால் நீ தரைமட்டமாக.''

ஆனாலும் வாயைத் திறக்கவில்லை ராஜசேகர். அந்த நேரத்தில் ராஜசேகர் என்ன யோசித்துக் கொண்டிருக் கிறான் என்றுதான் ஒருவருக்கும் புரிபடவில்லை. இரு கைகளையும் பேண்ட் ஜேபியில் நுழைத்துக் கொண்டு சித்தரஞ்சன் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

ராஜசேகரின் மௌனமும், அமைதியும் சித்தரஞ்சனின் ஆட்களுக்கு பயமும் சந்தேகமும் உண்டாக்கின.

''என் மகளே போயிட்ட பிறகு இனி இந்த உலகத்தில் யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனக்கென்ன வந்தது? போவதற்கு முன்னால் நீயும் உன் யூனிட்டும்— முக்கியமாய் இந்த தரங்கிணி— நிர்மூலம் ஆகணும்..... அதற்கப்புறம் இந்த நாட்டு போலீசாரிடமிருந்தும், நாட்டி லிருந்தும் எப்படித் தப்பிச்சுப்பதுன்னு எனக்கு நன்றாய் தெரியும். அதுக்குத் தேவை இருந்தால்தான்னு வெச் சுக்கோ—'' சித்தரஞ்சனின் குரலில் கோபமும் கடுகடுப்பும் இரட்டிப்பாயிற்று.

ராஜசேகரின் மௌனம் சித்தரஞ்சனுக்கு கண்மண் தெரியாத ஆத்திரத்தைக் கிளப்பிற்று.

''சுவர்ணாவைக் கொல்லலைன்னு ஸ்விம்மரைக் கிளப்பி விட்டேன். சுவர்ணா சாவு எதேச்சையானதுதான்னு நம்ப வைச்சே ;.. காதம்பரியை யார்கொன்னாங்கன்னு இன்னும் போலீசுக்குப் புரிபடவில்லை. ஆதாரமும் இல்லை.''

காதம்பரியைப் பற்றிய பேச்சு வந்ததுமே ஆவேசத் தால் ஒரு விநாடி நடுங்கி விட்டான் ராஜசேகர். இருந்த இடத்திலிருந்து ஆவேசத்தால் ஓரடி முன்னுக்கு வைத்தானே

யொழிய, உடனே அக்காலைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு விட்டான்.

காதம்பரியைப் பற்றிப் பேசியதுமே அவனிடம் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்த சித்தரஞ்சன் கேலியாய் சிரித்துக் கொண்டான்.

"எனக்கு இப்போது எதுவும் வேண்டாம். நீ ஷூட்டிங்கை நிறுத்தி விட்டு, தரங்கிணியை என்னிடம் ஒப்படைச்சுடு. எந்த நாசமும் பண்ணாமல் போய் விடறேன்."

சித்தரஞ்சன் வாய்க்கு வந்தபடி பேசியும் ராஜசேகர் ஏன் வாயையே திறக்கவில்லை என்று ஆச்சரியமாயிருந்தது எல்லோருக்கும்.

இந்த ஆபத்தை எப்படி தடுத்து நிறுத்துவது என்று குழம்பினான் ஜார்ஜ். ஓரடி முன்னுக்கு வைத்தான். ராஜசேகர் சட்டென்று திரும்பி நில் என்று சைகை காட்டினான்.

"உன் இதயமே பிளந்து போவது போல ஒரு விஷயம் சொல்றேன், கேட்டுக்கோ. உன் மஞ்சுளா... உன் காதலி மஞ்சுளா இனி உனக்கு இல்லை. நேற்றிரவே தீர்த்துட் டேன்..." சித்தரஞ்சன் சொல்லி முடித்ததுமே ராஜசேகரின் கை இரும்புத் தூணாய்ப் போய் சித்தரஞ்சனின் முகத்தில் ஒரு குத்து விட்டது.

பாயப் போன சந்திரனை ஆர்ட் டைரக்டர் தடுத்து நிறுத்தினான்.

ஒரு விநாடி ராஜசேகரின் மனம் கலங்கித் தவித்து விட்டது. மனமெல்லாம் சூனியம். அவளுக்காகவே ஒதுக்கி வைத்திருந்த இதயம் இடிந்து தூள் தூளாகி விட்டாற் போலிருந்தது. தன் உயிருக்குயிரான— சகலமுமான— மஞ்சுளா அவனுக்காகவே தன் உயிரைப் பலி கொடுத்திருக் கிறாள்.

வேதனையைப் பலவந்தமாய் மென்று விழுங்கிக் கொண்டான்.

இதயம் வற்றிப் போயிற்று. கண்ணீர் இன்னும் வற்றிப் போய்விடவில்லை என்றாற் போல ஒரே ஒரு ஜோடி கண்ணீர் முத்துக்கள் பொட்டென்று உதிர்ந்து விழுந்தன ராஜசேகரின் கண்களிலிருந்து— நிசப்தமாய்

மஞ்சுளாவின் குறும்பு சேஷ்டைகள், கோபம், பொறாமை, அப்பாவித்தனம், அவனைத் திருமணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றே இரண்டு வருஷங்களாய் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தது —இவ்வளவும் அவன் கண் முன் நிழலாடின.

உடம்பு குளிர்ந்து விட்டது. ஆஹா...வெற்றியே! என்னை எங்கே கூட்டிச் சென்று விட்டாய்? எதை விட்டு வைத்திருக்கிறாய்? எவ்வளவு நம்பிக்கை தந்தாய்? வெற்றியின் கடைசி தருணத்தில் திடீரென்று பாதாளத்தில் தள்ளி விட்டாயே?

என் வெற்றியை இனி யார் பார்க்க வேண்டும்? யார் மெச்சிக் கொள்ளவேண்டும்? ஒரு அர்த்தம் கற்பித்துக் கொள்ள வேண்டும் என்றிருந்த என் வாழ்க்கையை வீணாக்கி விட்டாயே?

ஆயிரம் அழகிகளுக்கிடையே வளைய வந்தாலும் நான் விரும்புவது ஒரே ஒரு பெண்ணைத்தானே! அவளும் சாதாரண அழகுடைய ஒரு அப்பாவிப் பெண்! அவளே கைக்கு எட்டாமல் போய் விட்டாளே! அதற்குள் இருட்டி விட்டது. வானத்தில் மேகம் திரண்டிருந்தது. லேசாய் இடி வேறு முழங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் சகலத்தையும் இழந்து விட்ட வேதாந்தியைப் போல தோன்றினான் அவன்.

எல்லோர் இதயமும் வருத்தத்தால் நிரம்பிற்று.

தரங்கிணிக்கும் எஞ்சிய மாடல்களுக்கும் மஞ்சுளா யார் என்று தெரியாவிட்டாலும், யாரோ மிக வேண்டியவள் என்று மட்டும் புரிந்தது.

ராஜசேகர் அரைக்கண் மூடியபடி பைத்தியக்காரனைப் போல எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். எல்லோரும் அஞ்சினார்கள்—ராஜசேகரை அந்த நிலையில் பார்த்து.

ராஜசேகர் கண்களை நன்றாய் திறந்தான். சித்த ரஞ்சனை சலனமில்லாமல் பார்த்தான்.

"என் மகள் போன துக்கம் என்னை எவ்வளவு வருத் தத்திற்கு ஆளாக்கிற்றோ அதே வருத்தம் இப்போது உனக்கும் வந்துடுத்து..."

"உன் மகளை உன்னிடம் தந்துட்டால், என் மஞ்சுளாவை எனக்குத் தந்துடுவாயா? அயோக்கியனே! ஒரு அப்பாவிப் பெண்ணைக் கொன்று விட்டாயே!..." என்று ஆவேசத்தோடு சித்தரஞ்சனின் சட்டைக் காலரைப் பிடித்து உலுக்கினான் ராஜசேகர்.

ராஜசேகர் என்ன சொன்னான் என்று ஒரு வினாடி புரியவில்லை சித்தரஞ்சனுக்கு.

"என் மகளை எனக்குத் தருவாயா?" நம்பமாட்டாமல் கேட்டான். தன் ஆவேசத்தை அடக்கிக் கொண்டான். மெதுவாய் இரண்டடிகள் பின்னுக்கு நகர்ந்து கொண் டான். ராஜசேகர் நன்றாய் நிமிர்ந்து சித்தரஞ்சனைப் பார்த்தான்.

"உன் மகள் உயிரோடுதான் இருக்கிறாள்!" என்றான் ராஜசேகர் சலனமில்லாமல்.

இன்னும் நம்ப முடியாதவனாய் பார்த்தான் சித்தரஞ்சன்.

"முட்டாளே... நீயா கெட்டிக்காரன்? மகளைச் சுட்டுத் தள்ளிட்டு அவள் என்னவானாளோ, செத்திருந்தால் அந்த இறந்த உடல் என்னவாச்சோன்னு தெரிஞ்சுக்கத் தோனலை உனக்கு. நம்ப பந்தயத்தில் ஒரு அப்பாவிப் பொண்ணு பலியாகிடக் கூடாதேன்னுதான் நீ சுட்டுத் தள்ளிட்டுப் போனதுமே போய்ப் பார்த்த நான் உடனே அவளை ஆசுபத்திரியில் சேர்ப்பித்தேன்..."

"எங்கே?" சந்தோஷம் தாங்காமல் சித்தரஞ்சன் கத்திய கத்தல் சமுத்திர முழக்கமாய் எதிரொலித்தது.

ராஜசேகர் அதற்குள் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். துணிச்சலைக் கூட்டிக் கொண்டான். இப்பொழுது அவன் கண் முன்னாடி 'எனக்குத் தரக்கூடிய காதல் பரிசு உங்கள் வெற்றிதான் ராஜ்'— என்று மஞ்சுளா அரூபமாய் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாற் போலிருந்தது.

'இவனை நிர்மூலம் பண்ணு' என்று காதம்பரி தீனமாய்...

'கடைசி வரைக்கும் போராடி விட்டு, திரும்பவும் இந்தக் கயவனுக்கு மனம் இரங்குகிறாயா?' என்று பழி வாங்கப்பட்ட மாடல்கள் தீனமாய்...

''எங்கே இருக்கான்னு நான் சொல்ல மாட்டேன். நீயே தேடிக்கோ. தெருத் தெருவாய் அலைந்து ஒவ்வொரு ஆசுபத்திரியையும், க்ளினிக்கையும், டாக்டர் வீட்டையும் சல்லடை போட்டுச் சலித்து — தேடிக்கோ. வெறி பிடித்த நாயாய் தெருவெல்லாம் என்னைச் சுற்ற வைத்தாயே கல்கத்தா வீதியெல்லாம்... அந்த மாதிரி. இன்னொரு விஷயம்— உன் மகள் உனக்காகப் புலம் பிண்டிருக்கிறாள். உன் வயிற்றில் பிறந்த பாவத்துக்காக அவள் தண்டனையை அனுபவிக்கிறாள். அவளுக்கு அவள் வாழ்க்கையில் இருக்கிற ஒரே ஒரு பந்தம் நீ...'' ராஜசேகர் முடிப்பதற்குள் சித்தரஞ்சன் அவன் கால்களில் விழுந்து விட்டான். எல்லோரும் சிலையாய் நின்றபடி ராஜசேகர் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு எதிரியின் மகளைக் காப்பாற்றினானா?

சந்தர்ப்பம் கிடைத்தால் பழி வாங்குவதற்குப் பதில் உயிர் தானம் பண்ணினானா? ராஜசேகரின் உதார குணத்துக்கு அங்கிருந்தவர்களின் கண்கள் கசிந்தன.

''நீ கொல்லப் போன உன் மகளை உனக்கே தந்துட்டேன். என் மஞ்சுளாவை எனக்குத் திருப்பித் தந்துவிடுகிறாயா?'' ராஜசேகரின் வார்த்தைகள் வில்லிலிருந்து தெறித்த பாணமாய் வெளிவந்தன.

தீனமாய், செய்வதறியாது பார்த்தான் சித்தரஞ்சன். ராஜசேகர் தொடர்ந்தான்—

"மானசீகமாய் சாவு உதைக் கொடுப்பது உனக்கு மட்டுந்தானா தெரியும்? நீ எவ்வளவு கெஞ்சினாலும் லாபமில்லை. என்னிடமுள்ள மனுஷத் தன்மையையே சாகடித்துட்டாய் உன் அயோக்கியத்தனத்தால். போய் உன் மகளைத் தேடிக்கொள். தாமதிக்காதே. இன்னும் நாலு நாட்களில் உன் மகளை வைத்தியத்துக்காக அமெரிக்காவுக்குக் கூட்டிப் போகாவிட்டால் உன் மகள் உனக்கு தரிக்கமாட்டாள். ஒரு பக்கத்தில் உன்னைத் தேடிட்டு போலீசார் அலையத் தொடங்கிட்டாங்க. அதைக் கூட தெரிஞ்சுக்க முடியாதபடி பைத்தியமாய் இருக்கிறாய். உன் மகளைத் தேடிட்டு நீ — உன்னைத் தேடிட்டு போலீஸார். அவங்களிடமிருந்து நீ தப்பிச்சுக் கொண்டு உன் மகளின் சாவைத் தப்ப வைக்கணும். போ...இன்னும் எதுக்கு இங்கே நிற்கிறாய்...? எல்லா வற்றையும் விட மோசமான தண்டனை இன்னொன்று இருக்கு உனக்கு. தன்னைக் கொல்லப்போனது தன் தந்தையேதான்னு உன் மகளிடம் இன்னும் சொல்லலை. அவள் முன்போலவே உன்னை அன்போடு பார்ப்பாள். ஆனால் நீ மட்டும் குற்ற உணர்ச்சியோடு கழிக்க வேண்டி யிருக்கும் ஒவ்வொரு வினாடியும்."

ராஜசேகர் எல்லோருக்கும் சைகை காட்டினான்.

ஒவ்வொருவராய் ஏரிக்கரையை விட்டு இறங்கத் தொடங்கினார்கள்— லொகேஷனுக்குள் அடியெடுத்து வைப்பதற்காக.

புனர்ஜென்மம் எடுத்தாற்போலிருந்து அவர்களுக்கு. ஆனால் மஞ்சுளா விஷயந்தான் அவர்களை வெகுவாய் பாதித்தது.

ராஜசேகர் நாலடி எடுத்துவைத்தவன் திரும்பினான்.

"தொழிலை விட்டு உன் பீடை ஒழிஞ்சுது. பந்தயத்தில் தோற்கப்போய் தப்பிச்சுக் கொண்டதற்கில்லை—நொண்டி யாகிவிட்ட உன் மகளின் சேவையிலேயே இனி உன் நேர

மெல்லாம் போயிடும். அவளை நீதான் பார்த்துக் கணும்....."

அதைக் கேட்டு சித்தரஞ்சன் நிமிர்ந்து பார்ப்பதற்குள் ராஜசேகர் மாயமாகி விட்டான்.

48

மார்ச்சு எட்டாம்தேதியன்று பெங்களூரில் ஷூட்டிங்கை முடித்துக் கொண்ட ராஜசேகர் எக்ஸ்போஸ்ட் பிலிம், கேமிரா, செட் சாதனங்கள் எல்லாவற்றையும் சந்திரனிடம் ஒப்படைத்தான்.

நினைவில்லாமலிருந்த தரங்கிணியை அழைத்துக் கொண்டு ஏர்போர்ட்டுக்குக் கிளம்பினான் காரில்.

யூனிட் முழுவதும் கண்ணீர் மல்கிய கண்களோடும், பாரமான இதயங்களோடும் வழியனுப்பின.

ப்ளைட்டிற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது. சாவோடு போராடியபடி சக்தியை இழந்து கிடந்த தரங்கிணி ராஜசேகரின் மடியில் இருந்தாள்.

அவனுக்கு வெற்றியை வாங்கித்தந்துவிட்டு, தான் பலியாகிக்கொண்டிருக்கும் ஒரு தியாகி. ஒரு கண்ணீர்த் துளி பொட்டென்று உதிர்ந்து தரங்கிணியின் நெற்றி மேல் விழுந்தது.

தொலைவில் நின்று கொண்டிருந்த சந்திரன், கிரீஷ், கிரண், ராம்பூபால், ஜார்ஜ்—அத்தனைப் பேரும் மௌன மாய் தேம்பிக் கொண்டிருந்தார்கள். ராஜசேகருக்குத் தான் சாதித்த வெற்றி—மூவர் சாவால் கிடைத்த வெற்றி அவனைப் பரிகசிப்பது போலிருந்தது.

அதற்குள் ராஜசேகர் வெற்றி பெற்றுவிட்ட விஷயம் காட்டுத் தீயைப் போல விளம்பர உலகம் முழுவதும் பரவி விட்டது. களைப்பூண்டைப் பிடுங்கி எறிவதுபோல ராஜ சேகர் சித்தரஞ்சனை விளம்பர உலகத்திலிருந்து அப்புறப் படுத்திவிட்டதுபற்றி விநோதமாய் பேசிக்கொண்டார்கள்.

தம் மகிழ்ச்சியைப் பண்டிகை கொண்டாடவும் துணிந்து விட்டார்கள்.

ஆனால் அந்த வெற்றியைச் சாதித்த ராஜசேகர் மட்டும் உள்ளூர குமுறியபடி தேம்பிக் கொண்டிருந்தான்- தன் உயிரனைய ஒருத்தியை இழந்து இன்னொருத்தியையும் பறி கொடுக்கவிருந்த துக்கத்தில்.

ராஜசேகர் சந்திரன் பக்கமாய் பார்த்து, கிட்டே வரச்சொல்லி சைகை காட்டினான். ஓட்டமாய் ஓடி வந்தான் சந்திரன்.

அன்போடு அவனை மார்போடு சேர்த்துக் கொண் டான் ராஜசேகர். கண்ணீர் மல்கிய கண்களுடன் நன்றியோடு பார்த்தான்.

உடனே எப்பொழுதும் தன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் எக்ஸ்போசரை எடுத்து சந்திரனின் கழுத்தில் போட்டான்.

அதற்கு அர்த்தம் அங்கிருந்த எல்லோருக்குமே தெரியும். சந்திரன் குனிந்து ராஜசேகரின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான் பக்தியோடு.

உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட அந்த குரு - சீடன் தொடர்பிற்கு அவர்கள் இதயங்கள் கசிந்தன

இந்த மேதாவியின் திசை எப்படி மாறப் போகிறதோ?

ராஜசேகர் சவத்தைப் போல கிடந்த தரங்கிணியை இரு கைகளாலும் தூக்கிப் பிடித்துக் கொண்டு எழுந் திருந்தான்- புறப்படுவதற்காக.

o o o

அடுத்த அரை மணியில் ராஜசேகரும் தரங்கிணியும் ஏறிய ப்ளைட் டில்லியை நோக்கிப் போய்க் கொண் டிருந்தது.

தரங்கிணி அப்படியே நினைவில்லாத நிலையில் ராஜசேகரின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கிடந்தாள்.

மஞ்சுளா இனி இல்லை என்ற உணர்ச்சிதான் ராஜசேகரை அணுவணுவாய் பிய்த்துக் குதறிக் கொண் டிருந்தது.

மஞ்சுளா இன்னும் தன் கண் முன்னாடி வளைய வந்து கொண்டிருந்தாற் போலிருந்தது.

அவ்வளவு துன்பத்திலும் தரங்கிணிக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற திகில் தோன்றிக் கொண்டேயிருந்தது.

குனிந்து பார்த்தான். தன் மடியில் சிறு குழந்தையைப் போல கள்ளமில்லாமல் தூங்கிக் கொண்டிருந்த தரங்கிணி- 'உங்கள் தேவைக்காக என்னை மாடலாய் பயன்படுத்திக் கொண்டு விட்டு, இப்பொழுது என்னை என்ன பண்ணப் போறீங்க?' என்று கேட்பது போலிருந்தது. திடுக் கிட்டான்.

தரங்கிணி லேசாய் அசைந்தாள். பரபரக்க அவளைப் பார்த்தான்.

ஒரு முறை அப்படியும் இப்படியும் லேசாய் புரண்டு விட்டு, கண்களைத் திறந்து ராஜசேகரைப் பார்த்தாள்.

ஒரு விநாடி ராஜசேகரைப் பழிப்பது போலச் சிரித்தாள். திரும்பவும் நினைவு தப்பி விட்டாள்.

வருத்தத்தால் துடித்துக் கொண்டிருந்த போதும், மந்தகாசம் ஒன்று ராஜசேகரின் இதழ்க்கடையில் விரிந்தது- அவள் குறும்புத்தனத்திற்கு.

விமானத்தில் தரங்கிணியின் நிலைமையைக் கவனித்த ஏர் ஹோஸ்டஸ் விமானத்திலிருந்தே கிரவுண்ட் கண்ட் ரோலுக்குச் செய்தியை அனுப்பி விட்டு ஜி. பி. பந்த் ஆசுபத்திரியிலிருந்து அவசரமாய் விமான நிலையத்திற்கு ஆம்புலென்ஸ் அனுப்பும்படி செய்தாள்.

விமானம் டில்லியில் இறங்கும்போது, ஆம்புலன்ஸ் ஸ்பெஷல் பர்மிஷனோடு ரன்வேயின்மீது வந்து தயாராய் நின்றிருந்தது.

நொடிப் பொழுதில் தரங்கிணியை ஆம்புலன்ஸிற்குள் சேர்ப்பித்ததும், அது காற்றிலும் வேகமாய் ஆசுபத்திரியை நோக்கிப் புறப்பட்டதும் நிகழ்ந்து முடிந்தது.

அதற்குள் சித்தமாயிருந்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் தரங்கிணியை இன்டென்சிவ் கேர் யூனிட்டில் அட்மிட் செய்தார்கள்.

பெங்களூரிலேயே தங்கிவிட்ட ஜார்ஜ் டில்லிக்குப் போன் பண்ணி, டில்லி டாக்டர் மூலமாய் டாக்டர் ஜிலோஹா தரங்கிணியைக் கவனிப்பது போல ஏற்பாடு பண்ணியிருந்ததால் எல்லா காரியங்களும் மளமளவென்று நிகழ்ந்தன.

போதைப் பொருட்களைக் கையாண்ட நோயாளிகளை குணமாக்குவதில் டாக்டர் ஜிலோஹா நாட்டிலேயே நல்ல பெயர் பெற்றிருந்தார்.

கண்ணாடிக் கதவுகளுக்குள்ளேயிருந்து தரங்கிணியும், அவளைப் பலவாறு பரிசோதித்துக் கொண்டிருந்த டாக்டர் ஜிலோஹாவும், அவருக்கு ஒத்துழைத்துக் கொண்டிருந்த இதர டாக்டர்களும் தெளிவாய் தென்பட்டார்கள் ராஜசேகருக்கு.

நெருங்கியவர்களின் சாவோடு கூட, தரங்கிணிக்கு ஒன்றும் ஆகக் கூடாதே என்ற வருத்தமும் சேர்ந்து ராஜசேகரைப் பைத்தியம் பிடித்தவனைப் போல செய்துக் கொண்டிருந்தது.

ஒரு விநாடி கூட ஏமாந்துவிடாமல் டாக்டர்கள் தரங்கிணியைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள் அன்றிரவெல்லாம்.

நள்ளிரவிற்குக் கொஞ்சம் முன்னாடி ஜார்ஜும், சந்திரனும் பெங்களூரிலிருந்து விமானத்தில் டில்லிக்கு வந்து சேர்ந்தார்கள்— ராஜசேகருக்குத் துணைக்காக.

உள்ளே நுழைந்த அவ்விருவரையும் விரக்தியாய் பார்த்தான் ராஜசேகர். அந்தப் பார்வையில் ஜீவன் இல்லை— கலவரம் மினுக் மினுக்கென்று பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அவர்களும் வருத்தத்தில் சிக்கிக் கொண்டார்கள்.

ஒருவருக்கு மூவராய் அந்த அறையையே பார்த்தபடி அதிரும் இதயங்களோடு நிசப்தமாய் உட்கார்ந்திருந்தார்கள்.

அடுத்த பத்தாவது நிமிஷம் ஜிலோஹா வெளியே வந்தார்.

ராஜசேகர் ஒரே பாய்ச்சலில் அவரிடம் போய் நின்றான்.

"டோன்ட் ஓர்ரி மிஸ்டர் ராஜசேகர். இன்னும் ஒரு வாரத்தில் அவள் முற்றிலும் குணமாயிடுவாள். நல்ல காலம் கடைசி சமயத்தில் கொண்டு வந்து சேர்த்துட்டீங்க. இன்னும் கொஞ்சம் தாமதமாயிருந்தாலும் முடியாமல் போயிருக்கும். யூ ஆர் லக்கீ..." என்று உள்ளே போய் விட்டார் டாக்டர்.

கண்ணீர் மல்க நன்றியோடு பார்த்துக் கொண்டிருந்தான் டாக்டர் போன திசையை-உடனே தரங்கிணி இருந்த அறைக்கு முன்னால் போய், நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்த தரங்கிணியையே பார்த்து விட்டு வந்து, வார்டு வராந்தாவில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து விட்டான். ஜார்ஜும், சந்திரனும் கூட அவன் பக்கத்தில் வந்து உட்கார்த்துக் கொண்டார்கள்.

"உன் மனோதைரியம் எனக்கு ஆச்சரியத்தைத் தரது... இப்பவாவது நீ இந்தத் துறையிலிருந்து விலகியிருப்பது நல்லதுன்னு நினைக்கிறேன். உன் ஒருத்தனால் இந்த ஃபீல்டு திருந்திடப்போகுதா?" என்றான் ஜார்ஜ்.

அதைக் கேட்டு சரேலென்று நிமிர்ந்து ஜார்ஜைப் பார்த்தான் ராஜசேகர்.

"எந்த பிரயத்தனமுமே நூறு பேரால் தொடங்காது. ஒரே ஒருத்தரால்தான் தொடங்கும். மொதல்ல அந்த ஒருத்தர் மூலம் பிறக்கிற வேதனையும், மனப்போராட்டமும் ஆவேசமுந்தான் காலப்போக்கில், சில ஆயிரக் கணக்கான பேர்களுக்கும், லட்சக்கணக்கான பேர்களுக்கும், கோடிக்கணக்கான பேர்களுக்கும் மூச்சாகிறது. அதில் பிரயோஜனம் இருந்தால் இது சரித்திரம் சொல்லும் சத்தியம். என் முயற்சியில் நீதியும், என் லட்சியத்தில் நேர்மையும் இருக்கும்போது எதற்கும் பயப்படமாட்டேன், வருத்தப்படமாட்டேன். இதன் மூலம் காதம்பரியின் சாவுக்கு ஒரு அர்த்தம் கற்பிக்க முடிந்தால்— என் உயிருக்குயிரான மஞ்சுளாவின் ஆத்மாவுக்கு சாந்தியைக் கொடுக்க

முடிஞ்சால் அது போதும்- எதற்கும் பின் வாங்க மாட்டேன்...'' ராஜசேகரின் வாயிலிருந்து ஒவ்வொரு வார்த்தையும் ஆவேசத்தோடும் குமுறலோடும் வெளிவந்தன. எவ்வளவு உயர்ந்து விட்டான் ராஜசேகர்.

ஜார்ஜ் வியப்போடு பார்த்தான் அவனை.

மறுநாள் காலையில் தரங்கிணிக்கு முற்றிலும் நினைவு திரும்பி விட்டது.

கண்களை மூடிக்கொண்டே... ''ராஜசேகர்... ராஜசேகர்... நான் இப்போது கண்களைத் திறக்கப் போறேன். எனக்கு எதிரே நீங்கதான் இருக்கணும். இருக்கீங்களா?'' அதே குறும்புத்தனம்.

அதைக் கேட்டு ராஜசேகரோடு கூட அங்கிருந்த எல்லோருமே மனமார சிரித்தார்கள்.

''ஆங்...நான் தான்...கண்களைத் திறக்கலாம்...'' என்றான் ராஜசேகர் ஏதோ ஒரு விதமான அனுபூதியுடன்.

தரங்கிணி கண்களைத் திறந்தாள்.

கொஞ்சமாய் இளைத்திருந்தாலும் தரங்கிணியிடமிருந்த அழகு குறையவில்லை. கலகலவென்று சிரித்துக் கொண்டே ராஜசேகரைப் பார்த்துக் கண் கொட்டினாள். அவள் கைகளைப் பிடிக்கப் போய் நின்றுவிட்டான் ராஜசேகர்.

மறுநாள் முன் தினத்தைவிட நன்றாய் தேறியிருந்தாள் தரங்கிணி. தன் குறும்புத்தனத்தாலும், வேடிக்கையாலும் அங்கிருந்த எல்லோரையுமே கவர்ந்துவிட்டாள் தரங்கிணி.

தரங்கிணி நன்றாய் குணமடைந்து வருகிறாள் என்ற மகிழ்ச்சி ஒரு புறமும், மஞ்சுளா இல்லாத வருத்தம் இன்னொரு புறமுமாய் அலைக்கழித்துக் கொண்டிருந்தன ராஜசேகரின் மனதை—இருட்டும் ஒளியும் போல மாறிமாறி நடு நடுவே தங்கை அனுவின் நினைவும் வந்தது.

என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாளோ? ஏனோ திடீரென்று தங்கையைப் பார்க்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

சென்னையில் விளம்பர பிலிம் லாபரட்டரியில் இருந்த கிரீஷுக்கு, கிரணும் ராம்பூபாலும் ஒத்துழைத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வப்பொழுது நடந்த முன்னேற்ற வேலைகளைப் பற்றி உடனுக்குடன் கிரண் ராஜசேகருக்குப் போனில் தெரியப்படுத்திக் கொண்டும் அவன் ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டும் இருந்தான்.

தரங்கிணி ஒரு வாரத்தில் நன்றாய் தேறிவிட்டாள். ஆனாலும் அடிக்கடி மஞ்சுளாவை இழந்த துக்கத்தால் இடிந்துபோய் உட்கார்ந்துக் கொண்டிருந்தான் ராஜசேகர்.

போன் மணியடித்துக் கொண்டிருந்தது. அந்த வார்டில் அந்த ஒரு போன்தான். அந்த போன் மணியடித்துக் கொண்டிருந்தது. டியூட்டியிலிருந்த நர்சுகள் யாரும் போனை எடுக்கவில்லை.

எந்த பேஷன்ட்டைப் பற்றியாவது யாராவது ஏதாவது கேட்பார்கள், எதுவும் தெரியாத அவனால் என்ன பதில் சொல்ல முடியும்? மனதில் இதைப்பற்றி ஒன்றுமே தோன்றவில்லை. ஆனாலும் போனை எடுத்தான்.

"ஹலோ..."

"ஹலோ...யாரு?" ராஜசேகரின் குரல் உயர்ந்தது.

மறுமுனையிலிருந்து பதில் இல்லை.

"ஹலோ" திரும்பவும் கேட்டான்.

"ஹலோ" மறுமுனையிலிருந்து பதில் சொன்னது கேட்டது.

"ராஜசேகர்தானே...?"

"ஆமாம். நான் மது பேசறேன். உன் தங்கை அனுவும் உன் மஞ்சுளாவும் கூட என்னோட டெல்லிக்கு வந்திருக்கிறார்கள். இங்கே ஸ்டேஷனிலிருந்து பேசறேன். இதோ அரைமணியில் டாக்சி பிடிச்சு அங்கே வரோம். வந்து விவரமாய் எல்லாம் சொல்றேன்"

"மஞ்சுளாவா? மஞ்சுளாவை அந்த ராஸ்கல் கொன்னுட்டதாய் சொன்னானே?" அளவில்லாத ஆச்சரியமடைந்தான். ராஜசேகர்.

"இல்லை. அந்த கயவன் மஞ்சுளாவை ஒளிச்சு வைச் சிருப்பான்னு சந்தேகப்பட்டு நான். ஊரெல்லாம் சுற்றி யலைந்து அவளைத் தேடிட்டிருந்தபோது ஒரு சந்தில் கைலாசனின் கார் கண்ணில் பட்டது. வேகமாய் போய்க் கொண்டிருந்த காரில் மஞ்சுளாவைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது. சட்டென்று அந்தப் பக்கமாய் வந்த இன்னொரு டாக்சியைப் பிடித்து ஏறிக் கொண்டு அந்த காரைப் பின் தொடர்ந்து போனேன். நல்ல வேளையாய் போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டிக்கொண்டு போக நேர்ந்தது. அப்படிப் போகும்போது அவசரமாய் போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைஞ்சு அங்கிருந்த இன்ஸ்பெக்டரிடம் இந்த கிட்நாப்பைப் பற்றி ஒரே மூச்சில் சொல்லி விட்டு உதவ வேண்டினேன். அவர் சட்டென்று ஆறு போலீஸ் ஆட்களை ஜீப்பில் ஏற்றி மஞ்சுளாவைக் கடத்திக் கொண்டு போன காரைத் துரத்திக் கொண்டு போய் கையும் களவுமாய் கைதாக்கிக் கொண்டு வர உத்தர விட்டார். நாங்கள் தொடர்ந்து துரத்திக் கொண்டு போனபோது, நல்ல காலம் ரயில்வே கேட்டிற்கருகில் ரயில் வருவதற்காக கதவைச் சாத்தி விட்டதால் அந்த கார் நின்றுக் கொண் டிருந்ததைப் பார்த்தோம். போலீசார் கைலாசனை அங்கேயே கையும் களவுமாய் அரெஸ்ட் பண்ணி மஞ்களாவை என்னிடம் ஒப்படைத்தார்கள்—"

ராஜசேகர் அடைந்த மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் அளவில்லை.

"மது. இந்த ஒரு வாரமாய் என் மனசு என் வசத்திலேயே இல்லை. மஞ்சுளா தான் சதா மனசில் புகுந்துண்டு என்னைக் கலங்கடித்துக் கொண்டிருந்தாள். என் உயிருக்குயிரான, என் மனைவியாகவிருக்கும் மஞ்சுளாவைக் காப்பாற்றியதற்கு உனக்கு எதைக் கொடுத்து என்னால் கைம்மாறு பண்ண முடியும்? ஆனாலும் என் திருப்திக்காக நான் உனக்கு ஒரு பரிசு தந்து தீருவேன். உடனே வா. அதுசரி அனு எப்படி வந்தாள் உன்னிடம்?"

மறுமுனையில் மது, அனு வந்த விவரத்தைச் சொன்னான் விரிவாய்.

அரைமணி நேரம் பேசியபின்- போனை வைத்து விட்டுத் திரும்பி தரங்கிணியின் அறைக்குள் வந்தான் ராஜசேகர்.

தரங்கிணியை படுக்கையில் காணோம். இப்பொழுதெல்லாம் நன்றாய் குணமாகி விட்டதால் அங்குமிங்கும் நடமாட ஆரம்பித்திருந்தாள் தரங்கிணி.

அடுத்த அறையிலிருந்த பேஷன்ட்டுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதும் அவள் பொழுது போக்காகி விட்டிருந்தது.

அதனால் பக்கத்து அறைக்குப் போய் பார்த்தான்.

தரங்கிணியை அங்கே காணவில்லை. ராஜசேகருக்குக் கலக்கமாயிருந்தது. எங்கே போயிருப்பாள்? பாத்ரூமில் போய் எட்டிப் பார்த்தான். இல்லை. பரபரப்போடு வார்டிலிருந்த நர்சைக் கேட்டான். நர்சும் சேர்ந்து தேடினாள்.

ராஜசேகருக்கு சந்தேகம் வரவே அவசரமாய் ஓடிப் போய் தரங்கிணியின் அறையில் பரிசோதித்தான்.

அவள் உடைகளும் உடமைகளும் இருந்த சூட்கேசைக் காணோம்.

அத்துடன் அவள் செருப்பையும் காணோம். விஷயம் புரிந்து விட்டது அவனுக்கு. தலையணைக்குக் கீழே நீட்டிக் கொண்டிருந்த ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்தான். அவன் எண்ணியது போலவே அது தரங்கிணி எழுதி வைத்து விட்டுப் போன கடிதத் துண்டுதான். எடுத்து பதற்றத்தோடு படித்தான்.

"அன்புள்ள ராஜசேகர்.

சாகக்கிடந்த என்னைப் பிழைக்கச் செய்ததற்கும், மீண்டும் போதைப் பொருள் வசம் போகாமலிருக்கவும் வழி காட்டிய உங்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது. ஆனாலும் உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல்

போவதற்கு மன்னியுங்கள். பாரீசில் என் திருமணம் அடுத்த மாதம் நடக்கவிருக்கிறது. அதை உங்களிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தேன் ஒரு சஸ்பென்சாக இருக்கட்டும் என்று. இன்றே ப்ளைட்டில் நான் பாரீஸ் போய்விடப் போகிறேன். நான் குறும்புக்காரி தானே! அதேபோல கடைசியாய் இந்தக் குறும்புத்தனத்தை சஸ்பென்சாய் பண்ணி விட்டுப் போகிறேன். என்னைத் தேடிக் கொண்டு ப்ளைட்டிற்கு ஓடிவந்தால் நான் உங்களை மன்னிக்க மாட்டேன். குட்பை-தரங்கிணி.''

அதைப் படித்த ராஜசேகருக்குத் தலையும் புரிய வில்லை, காலும் புரியவில்லை. தரங்கிணி அவ்வாறு சொல்லாமல் போய்விட்டது வருத்தமாயிருந்தது. ஆனாலும் அவள் குறும்புத்தனத்திற்காக் சிரிப்பும் வந்தது. அவள் திருமணம் பண்ணிக் கொள்ளப் போவதாய் எழுதியிருந்ததைப் படித்து விட்டு நிம்மதியாய் மூச்சு விட்டான். இனி தரங்கிணியைப் பற்றிய கவலையும் பொறுப்பும் அவனுக்கு இல்லை. அதைப் பங்கெடுத்துக் கொள்ள வேறொருவன் வரப் போகிறான். அந்த மட்டில் மகிழ்ச்சியாயிருந்தது.

அவனுக்குத் தெரியாததெல்லாம் தரங்கிணி அவன் போனில் மஞ்சுளாவைப் பற்றிப் பேசியதைக் கேட்டுவிட்டு அதிர்ச்சியடைந்ததோ, உடனே பாரீசில் தன்னை மணக்கத் துடித்துக் கொண்டிருந்த இந்தியனான மனோகரைப் பற்றி நினைவுக்கு வந்ததோ, மனோகர் பணமில்லாதவன் என்று அருவறுத்து தான் ஒதுங்கி ஒதுங்கிப் போனதும், இங்கே வந்து ராஜசேகரின் அழகில் மயங்கி அலைந்ததும், பிறகு ராஜசேகர்— மஞ்சுளாவின் மேல் வைத்திருக்கும் உண்மை யான அன்பை அறிந்ததும், மனோகரும் அதுபோல் தன் மீது வைத்திருந்த உண்மையான அன்பு மனதில் திரண்டு வந்ததும், பணம் பெரிதல்ல, தன்னை நேசிக்கும் கணவர் தான் முக்கியம் என்று பட்டதும், இனி ராஜசேகரிடமிருந்து விலகிவிட வேண்டுமென்றும், அந்த நிமிஷமே மனோகரைப் பார்க்க வேண்டும் என்றும், மனம் தவிக்கத் தொடங்கிய

தென்றும், அதற்கு இவ்வாறு சொல்லாமல் போவதுதான் சிறந்ததாய் பட்டதும்.....

o o o

மதுவும் அனுவும் மஞ்சுளாவும் வந்து சேர்ந்தார்கள். ராஜசேகர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

'மது! உனக்குத் தரப்போற பரிசு இதோ என் தங்கச்சி அனுதான்! உங்களிருவருக்கும் மணம் முடித்து வைத்து விட்டு உன்னை என் வியாபாரத்தில் பார்ட்னராய் சேர்த்துக்கப் போகிறேன். அதன் மூலம் என் தங்கச்சியும் நீயும் எப்பொழுதும் என்னைவிட்டுப் பிரியாமல் என் வீட்டிலேயே இருப்பீங்க. மஞ்சுளாவுக்கும் சிநேகிதியைப் பிரிய வேண்டியிராது. சிநேகிதியே நாத்தியாகி விடுவாள் இல்லையா?''என்று தங்கையை மதுவின் கைகளில் பிடித்துத் தந்தான்.

மதுவும் அனுவும் அளவில்லாத மகிழ்ச்சியடைந் தார்கள். ஓரக்கண்ணால் மதுவை ஏறிட்டுப் பார்த்த அனு வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

ராஜசேகர் மஞ்சுளாவிடம் வந்தான்.

இழந்த பொருளை மீண்டும் பெற்றுவிட்ட கரை காணாத மகிழ்ச்சி அவன் முகத்தில்—அனுவும் மதுவும் இருப்பதைக் கூட மறந்துபோய் மஞ்சுளாவை மார்போடு தழுவிக் கொண்டான்.

இப்பொழுது அவன் மனம் மிக லேசாயிருந்தது. பட்ட துன்பமெல்லாம் பஞ்சாய் பறந்து விட்டது.

o o o

ராஜசேகர் கார் ஓட்டிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் மஞ்சுளா, அந்த சமயத்தில் பஞ்சாபி உடை அணிந்து கொண்டிருந்தாள். அவள் மேலே போட்டிருந்த துணி அடிக்கடி காற்றில் ராஜசேகர் மீது வந்து பட்டுக் கொண்டிருந்தது.

"நாம்ப ஆக்ராவுக்குப் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறோம்" என்றாள் அவள், ஒரு முறை வெளியே மைல் கல்லைச் சுட்டிக் காட்டிவிட்டு.

அதையொன்றும் கவனிக்கவில்லை ராஜசேகர்.

மஞ்சுளா ஆக்ரா பார்க்க வேண்டும் என்று விரும்பியதால் ஜார்ஜ் காரைக் கொண்டு வந்தான். அதில் பயணம் பண்ணினார்கள் இருவரும் மதுவும் அனுவும் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தார்கள்.

ஜார்ஜ், சந்திரன் முதலியவர்கள் காலை பஸ்ஸிலேயே சென்னைக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். கடைசி சமயத்தில் மனம் இளகி விட்ட ராஜசேகர் சித்தரஞ்சனுக்கு அவன் மகள் இருந்த ஆஸ்பத்திரி விவரத்தைச் சொல்லிவிடும்படி சந்திரனிடம் சொல்லி அனுப்பியிருந்தான்.

பகைவனுக்குக் கூட இரங்கிய அவன் பண்பிற்கு எல்லோரும் வியந்து விட்டார்கள்.

"எல்லாரும் திருமணம் ஆன கையோடு தேன்நிலவுக்குப் போவாங்க. ஆனால் நமக்குத் தேன்நிலவு ஆன கையோடு திருமணம்" என்றான் ராஜசேகர். அவன் மனம் உல்லாசமாயிருந்தது.

"நம்ப ஒரு ஜோடிக்கு மட்டுமில்லை, ரெண்டு ஜோடிக்குந்தான்....."—சிரித்தான் மது, பின் சீட்டிலிருந்து. பெண்கள் இருவரும் கூட அந்தச் சிரிப்பில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

சிரிப்பும், உல்லாசமுமாய் ஆக்ராவிற்குள் நுழைந்த கார் தாஜ்மகாலை நோக்கிப் பறந்தது—அந்த காதல் ஜோடிகளைச் சுமந்துக் கொண்டு.

*

எண்டமூரி வீரேந்திரநாத்

மின்னல் உலகம்

தமிழில்: சுசீலா கனகதுர்கா